விமலனவனாவிடலின்றிச்செய்தார்சிறப்பைவிரும்புவனே

எ - து நின்மலனுனசிவனதுசுபாவசொரூபத்தையுணர்ந்தஞாதாக்கள்விட யவிதங்களைப்பொருந்தினுரேயாயினுமதனையாராயுமிடத்தவர்கள் தாமரையிலையிற் பொருந்தியநீரதிற்றோய்வின்றிநின்றதுபோல, அந்தவிடையங்களிலழுந்தார்கள், தமது, ஆணவமலமுதலியவற்றையும்போக்குவர்களாதலாலந்தஞானவான்களுக் கேபூசைசெய்யக்கடவரஃதேதுகாரணத்தினுலெனின், மலரகிதனுனசிவனந்தச் சிவஞானிகளைவிட்டு நீங்காதவர்களிடமாகநின்றுசெய்தார்செய்த பூசைகளைத்தா னேவிரும்பியேற்றுக்கொள்ளுதலால் - எ று

அடைந்தாலுமென்னுமும்மையடையாமையைவிளக்கினதாகலின்-எதிர்மறை [௰௨]

பணியறநிற்றலாற்சிவஞானிகளிடத்துவினையேறுமைக்குத்திட்ட ா
சிரமுமவரைப்புகழ்தலிகழ்தல்செய்தாரடையும்பலமுமுணர்த்துகின்றார்

மாருந்தைச்சிறந்தமந்திரத்தைவல்லார்விடத்தைமாந்திடினும்
வருந்தார்தமதுசெயன்மாளவரதன்பொருவில்வலியுணர்ந்தார்
பொருந்தார்பாவபுண்ணியங்கள்புரிந்தேயிவரைப்புகழ்ந்தாரும்
பொன்றேயிகழ்ந்துபேணாருமிவர்தம்வினையைப்பெறுவாரோ

எ - து அவுடதத்தையுமேலானமந்திரத்தையும்வல்லபேர்கள், நஞ்சி
னைச்சித்தாராயினுமதனால்வருத்தமுறாதுபோலவொப்பில் லாதசிவனுடையபு
கழ்தலுணர்ந்தசிவஞானிகளும், எல்லாம், சிவன்செய்லென்று, தம்செயல
ன்றாக்கையினாலேயவர்கள் புண்ணியபாவங்களைச்செய்துமதனால்வருஞ்சுக
துக்கமடையார்களந்தச்சிவஞானிகளைப்புகழ்ந்தபேரும் வேறுபட்டிகழ்ந்தே
ராயினவர்கள்தமக்குரியவினைப்பயன்களைப்பெறுவர் எ-று

ஒத்தப்புறனடைமுதலியவைந்தினுள்முற்கூறியசெய்யுளைக்குறித்து
ச்சூத்திரப்புறனடையுணர்த்துகின்றார்.

பன்னுன்பரமசிவஞானிபாவவிதமும்பயிற்றிடினு
மன்னுன்பலமுமெனப்பனுவலுரைக்குமதனாலொருதலையே
மன்னோர்துயரமெனப்பெரியோர்நவையுமியற்றினசையாலே
மன்னுறவலமாகனையைமாற்றியிடவேவல்லாரார்

எ - து மேலானசிவஞானிபாவபேதங்களைச்செய்யானதுசெய்யினுமந்த
வினைப்பயன்களையனுபவியானென்று திவ்வியாகமங்கள்சொல்லுமாகையினால்
சிவஞானியானவன்பாவவிதஞ்செய்யாமையுஞ்செய்யினஃதுண்ணாமையுஞ்சிவ
ஞானிகளாரேனுர்நாம்துயரத்தைப்பொருந்துவதில்லையேயெனக்கருதி
மனமகிழ்ச்சியினாலேகாமாதிகுற்றங்களைச் செய்யினதனாலேயவர்க்குத்தீவி
னையாராயினும் பூமியின்கணிறையும்பொல்லாதவசைதோன்றுமதனைப் புறங்
கூறுதற்றவல்லார்யாவர் எ - று - ஏகாரம்தேற்றம்.
இத்தனையெனவேயியற்றுமைவிளக்கிற்று

[ய

ஞானசிட்டையையுடையோரதனைவிட்டுக்கிரியைகளையனுட்
டிக்கிலவர்பரதத்துவத்தையறிந்தவரல்லவென்றுணர்த்துகின்றார்.

எய்தற்கரியபரம்பரனையிசைந்தார்கருமத்திசையார்கள்
செய்யிற்கருமஞ்சிறந்தபொருள்செறிந்தாரல்லர்செழுங்கனிதங்
கையிற்புகலுங்களைந்தவலக்காயைக்கவரக்கருதினரார்
வையத்தொளிகொண்மணியகற் றிவழுவாஞ்சிலையார்மகிழ்வாரோ

எ - து யாவராலும்பொருந்துதற்கரியசிவனைக்கூடிநேயத் தழுந்துவோர்கிரியையினைச்செய்யார்களதனை யனுட்டித்தாராயின்மேலானபொருளான சிவத்துடன் கூடிநிட்டையையடைந்தவராகார்ஞானயோகிகள்நேயத்தழுந்திலுமதனோடுகிரியையுநிகழ்த்தாரோவெனின்யாதாமொருவர்தங்கையின்கட்கொழுவியவாழைமுதலியவற்றின்கனிகளைய்திலுலதனைநுகராதுவிடுத்துச் சுவையில்லாதகாயினைக்கைக்கொண்டுநுகரவிரும்பினர்யாவரஃதன்றிவையத் தின்கண்ணொளிபொருந்தியபதுமராகமுதலியரத்னங்கள்வந்தெய்திலவையிற்றினைக்கைக்கொள்ளாதுவிடுத்துப்புல்லியகல்லினைக்கைக்கொண்டுமகிழ்வோர்யாவர் எ - று கனிபெற்றோர்காய்விரும்பாததன்மைபோலவுமணிபெற்றோர் சிலைவிரும்பாததன்மைபோலவு ஞானம்பெற்றோர்கிரியைவிரும்பாரெனக்கொள்க. [ஙரு]

நேயத்தைப்பெறவேண்டினர்க்குக்காமாதிகுற் றங்களணு
கொணாதென்பதுணர்த்துகின்றார்

ஆசைமுதலாமாசனைத்துமறுத்தேயுடலும்வெறுத்தரிய
தேசன்சிவன்பொற்பாதமலர்செறிந்தார்பிறப்பைமறந்தார்கள்
பேசற்கரியபெருமையினைப்பெற்றாரல்லர்கற்றாலும்
மாசுமலிந்தவாசையினான்மயங்கித்துயங்குமானிடரே

எ து காமமுதலியகுற்றமனைத்தினையுங்கெடுத்துயாக் கையும் வெறுத்துப்பிறராலறிதற்கரியஞானப்பிரகாசனானசிவனதுபொன் போன்றதிவருடிமலர்களைப்பற்றினவர்களேசெனனமரணத்தையொழிந்தோர்களங்ஙனஞ்செய் யாதழுக்குமிக்கவிராகத்தினாலேயுள்ளமயங்கிவருந்துநரரானவர்கள்பெருநூல் களைக்கற்றாராயினுஞ்சொல்லுதற்கரியபிறவியறுதலைப்பெறார் எ று

பிறவியறுதலேபெருமைத்துவதாகலினதனைப்பெருமையென்றுபசரித் துக்கூறினார் [ஙகூ]

சருவவியாபியாயிருக்கிறசிவன்பக்குவான்மாக்களுக்கல்லதறிய
ப்படானென்றுணர்த்துகின்றார்

காணார்மலத்தாற்கண்ணிழந்தார்கலந்தேயெங்குநிறைந்தானைச்
சேணாரிரவிதனைக்காணார்சிறந்தவிழியையிழந்தாருங்
கோணாகினையும்புனைவேகொண்டானடியைக்கண்டார்கண்
மாணாமூலமலவலிமையைமாய்த் தாரவன்றன்வலியாலே

எ ௪ கட்புலனைமிழந்துநிற்குமவர்களாகாசத்தின்கணின்றெங்கும் பரம்பு மாத்திரனைக் காணமாட்டாதவாறு போலவாணவமலத்திருளேயறிவாகியகண்ணினைமிழந்தபேர்களெங்குங்கலந்துநிறைந்துநிற்கிறசிவனைக்காணமாட்டாராயினும் பேரொக்காணப்படாதசிவனைக்கண்டவர்யாவரொனிலந்தச்சிவனதுசத்தியிருளேதம்மைமறத்திருக்கும்பொல்லாதமூலமலமாகியவாணவமலசத்தியைக்கெடுத்துஞானக்கண்பெற்றோர்யாவர்சிலரவர்களேவளைந்தநாகத்தையாபரணமாப் பூண்டசிவனதுதிருவடியைக்கண்டவர்கள் எ—று [௩௧]

சுத்தச்சிவஞானிகள் எந்தக்காலமுஞ்சேயத்தைவிட்டுநீங்கார்களென்ப
துணர்த்துகின்றார்

வானமதனைநீங்காதுவாயுவிரைந்துமதனைப்போன்
ஞானமயனைநீங்கார்கண்ணானத்தவருநடுக்கத்துந்
தேனின்மொழியாரினைத்தோளைத்திளைக்கும்பொழுதுஞ்சினஞ்செறிய
மானத்தினைவாயுவர்த்தொறுக்கும்பொழுதும்யாதாமொருபொழுதும்

எ ௪ வாயுவானதெங்குமோடியுந்தனக்காதாரமானவாகாசத்தைவிட்டுநீங்காது. அதுபோலச்சிவஞானிகளுந்தமக்கச்சமுண்டானகாலத்துந்தேன்போலுஞ்சொல்லினையுடையமடவார்திரண்டதோளிணையைக்கலந்தனுபவிக்கும் பொழுதுங்கோபமேலிட்டுத்தமக்குக்குற்றஞ்செய்தோரைவெறுத்துத்தண்டிக்கும்பொழுதுமற்றுமுள்ளகாலத்தும்ஞானசொரூபியாயிருக்கிறசிவனைவிட்டுநீங்கார்கள் எ று [௩௨]

சிவஞானிகண்முதலாயினோர்க்குச்சிவன்றோன்றிநிற்கு
முறையுணர்த்துகின்றார்

துயக்கந்துடைத்தஞானிகட்குத்தோன்றுமெங்குந்துகளில்லான்
மயக்கமறுத்தயோகர்க்குமருவுமிதையமலர்மீதே
பயக்கும்பலத்தைப்பாவகனிற்பார்ப்பார்தமக்குப்பாங்குறவே
பயக்குருவின்மற்றையவர்நாடவுறைவனுடோறும்

எ - து நின்மலனானசிவன்விடையங்களிலேயறிவுவேறுபடுந்தன்மையை யொழித்தஞானவான்களுக்கெவ்விடத்துந்தோன்றிநிற்பன் அஞ்ஞானத்தைக்கெடுத்தயோகநிலையுடையோர்க் கவருடையவிதையகமலத்திற்றோன்றுவனந்தனர்க்குக்காருகபத்தியமாகவணியந்தெக் கணக்கினியமெனக்கூறியமூவிதமாகியவனல்களிற்றோன்றியவர்விரும்பியபலத்தைக்கொடுப்பன்மற்றுமுள்ளவான்மாக்களெந்நாளுந்தெரிசித் தற்குச்சிவலிங்கமுதலிய ாயந்ததிருவுருக்களிலேயெழுந்தருளியிருப்பன் எ று [ய௯]

ஞானநிலையுயர்புங்கன்மநிலையிழிபுமுணர்த்துகின்றார்.

ஒளியபதுமராகங்கையுடையார்க்குவகையலதுண்டோ ❊
தெளியயோகசித்தர்க்குஞ்சிறப்பேபலதுசெலலுண்டோ ❊
புளியசிலையைப்பொறுத்தார்க்குப்பொருளோசிறிதுதுயர்பெரிது ❊
நெளிவுபெரிதுபலஞ்சிறிதுநிரந்தகருமநிலையார்க்கே ❊

எ து ஒளியினையுடையமாணிக்கத்தைக்கைக்கொண்டார்க்குமகிழ்ச்சியன்றித்துயருளதோ, வதுபோலத் தெளிவினையுடைய ஞானயோகஞ்சித் தித்தோர்க்குமின்பமேயன்றித் துன்பமுளதோ,டல் லியநிறத் ைதயுடையவம் மிக் கல்முதலியவற்றைச்சுமந்தோர்க்குவிலையாலெய்தும்பொருளோஅற் பம்அதனைச்சுமக்குந்துயரமோமிகுதியாயிருக்குமதுபோலப்பூசைசெபந்தியான மெனப்பரந்தகன்மநிலையினிற்போர்க்குப்பெறும்பலமற்பம்அடையுந்துயாம்பெரியது எ-று

உண்டோ எ-து இல்லையெனவிளக் கினின் றமையாலெதிர்மறை செல்லலென்பதுடுசலலெனவிகாரமாயிற்று புல்லியவென் பதுபுளியவெனலகாரம் ளகாரமாயிற்று சித்தர் என்றது ஞானவான்களெனக்கொள்க [உ௰]

மேலந்தஞானவான்களெழுந்தருளியிருக்குமெல்லையின்விசிட்டமுணர்த்துகின்றார்

சிறந்தபரமசிவனுருவந்தெருண்டபரமசிவஞானி ❊
யுறைந்தவெல்லைவிற்கோடியளவும்பாவமொழிந்துவிடு ❊
நிறைந்தகங்கைநிகழிடத்துணீங்குமபுதமாறளவு ❊
மறைந்தவளவினருத்தத்துளகலும்பாவமரன்புரிக்கே ❊

எ - து சிறப்பினையுடையபரமசிவனதுசொரூபத்தை யுணர்ந்த மேலானசிவ ஞானியானவனெழுந் தருளியிருக்குமெல் லைக்குட்கோடிவிற்கிடையளவும்நீரால், சுற்றுக்கரைகளிலிருக்குமெல்லைக்கறுபதினாயிரம் விற்கிடையளவுஞ்சிவாலயத் தெல்லைக்குமுப்பதினாயிரம்விற்கிடையளவும்பாவமெய்தாதகலும் எ-று [உக

சிவஞானிகள்விசிட்டமுணர்த்துகின்றார்.

நிலைபொருளொன்றுண்டெனவேநெஞ்சமதனுணிச்சயித்தார்
அலைபுதகமாதீர்த்தமவனிதலத்திலனைவர்க்குங்
கலைமெல்லைசிவபூமிகொடியவினைகள்கெடநினைவார்
தெடியவனையருச்சிக்கசிந்தைசெய்கசிறப்புறவே

எ - து நிலைபெற்றுநிற்கும் பதியென்னும்பொருளொன்றுண்டென்றேயுளத் தினைணிச்சயித்தபெரியோர் களாடும்புனல்பூமியிலுள்ளோர்யாவர்க்குங்கங்கைமு தலியபெரியதீர்த் தங்களாமன்னோர்பொருந்துமெல்லையேசிவத்தலமாம், கொடுமை யாகியபாவங்கணிங் கவெண்ணுவோரந் தஞானவான்களைத் தேடிநன்றாகப்பூசிக்க வுமவர்கள்திருவுருக்களைத்தியானம்பண்ணவுங்கடவர் எ-று

ஞானந்நிலைலோக்கியதுல்லபமென்பதாற்றேடியவனையருச்சிக்கதெனச்சிற ப்பித்தார் [உஙஉ]

அகத்திற்புரிவாரருச்சனையையரியபலத்தையடைந்திடுவர்
சகத்திற்புரிவார்சங்கரனைச்சார்வரதனிற்றணியபல
மகத்துளைவல்புரிவார்க்குமதிகபலமேயனையன்பாற்
சகத்தினைவல்புரிவார்க்குமதனிற்சிறுமைசார்ந்திடுமே

எ - து வேர்த்தனதுமனையகத்தின்கண்ணே வல்செய்யுமவர்களுக்கவ்வேர்த் தடத்திலேநின்றுமதிகமானபலன்களெய்துமதற்குப்புறத்திலேயேவல்செய்வோர் சகத்துக்குக்கிழாயபயனெய்துமதுபோலச்சிவனைத்தம்மிதையத்தினுள்ளேயருச்சனை செய்வோர்மேலாயபலத் தினை ப்பெறுவர்கள்புறம்பேயருச்சனைசெய்யுமவரதிற்றா ழ்ந்தபலத்தையடைவர்கள் ஏ று [உ-ங]

பாரியாரும்பயிலாதபக்கமனையுட்பத்தாவைச்
சேரவவனுமவடனக்குச்சித்தக்களிப்புஞ்செய்திடுவ
னேரிலானைநின்மலனைநெஞ்சுணினைக்கிலவர்க்கவனும்

பூரித்திடுவன்போகவிதம்பொல்லாமலமும்போக்குவனே ❊

எ - து பாரியானவளொருவருஞ்செல்லாதவெல்லையினெடுத்தபள்ளியறையின்கட்டனதுகணவனையணுகஅந்தக்கணவனுமவளுக்குமனமகிழ்ச்சியையுஞ்செய்வனதுபோலத்தனக்கொப்பில்லாதமலரகிதனானசிவனையிதையகமலத்தின்கட்டியானிக்கிலவர்களுக்கிந்தச்சரீராந்தத்திலேசிவனுந்திவ்வியபோகபேதங்களைநிறைத்ததுபொசித்துத்தொலைந்தவாறே தீமையானவாணவமலத் தினையுநீக்கிமுத்திகொடுப்பன் - எ று

சித்தக்களிப்புமென்னுமும்மையாடைபூண்முதலியவற்றையுமளித்தல்கருதிற்று, மலமுமென்றவும்மைமாயைகன்மங்களையுமெனக்கொள்க, பக்கமென்பதுவுடமொழித்திரிவாயிடமென்னும்பொருள்படநின்றது. [உச]

இன்னுமோருபாயநிட்டையுணர்த்துகின்றார்.

ஈரைந்தாயதிகைநடுவேயியமமாதிமலர்கொண்டே ❊
பார்வங்கூரப்பூசனையையமலர்க்கியற்றுமவர்தாமும் ❊
பேரன்புடையபெருமானருளகிற்போகம்பெரிதருந் திச் ❊
சாரும்பிறப்பிற்சிவஞானஞ்சார்ந்துசிவன்றாள்சார்வாரே ❊

எ - து தேகத்திலுள்ளபத்துத்திக்குநடுவாகியவிதையத்திலுள்ளேயயிங்கிதைமுதலியமலர்கொண்டுநின்மலனானசிவனுக்குப்பூசையினையுள்ளன்புபெருகும்வண்ணஞ்செய்யுமவருமான்மாக் களிடத்திலேபெருங்கருணையையுடையசிவனானுமுலகத்திற்சென்றுமிகுந்தபோகங்களைப்பொசித்துத்தொலை ந் தவாறேபூமியின்கண்வந்தெடுத்தசெனனத்திலேதானே சிவஞானத்தைப்பெற்றுச் சிவனதுதிருவடியையுடைவர் - எ று - அயிங்கிதை - கொல்லாமை [உரு]

சிவஞானத்தைப்பெறல்வேண்டுமென்றுவிரும்புவோ
ரெய்தும்பலமுணர்த்துகின்றார்.

நச்சிலைவருஞ்சிவஞானநம்பனமரும்புரிநண்ணித் ❊
துய்ச்சேபோகவிதந்தொலைவிற்றோன்றிப்புவியிற்றுரிசழியக் ❊
நச்சேபுளியகாயத்தைக்களைகண்டமதுகணிற்கண்டு ❊
விச்சைதனக்கும்விச்சாயவிமலன்கமலம்விரவுவரே ❊

எ - து யாவராகிலுஞ்சிவஞானத்தைப்பெறல்வேண்டுமென்றுவிரும்பினவ ர்கள், சிவலோகத்திற்சென்றங்குள்ளபோகபேதங்களைப் பொசித்துமுடிந்தவாறே மறுபிறப்பெய்தாதுசெனித்துத்துன்பங்கள்கெடும்படிபுல்லியயாக்கையினைவெறுத் துக்கண்டிகையுடுத்துசிவனைத்தமதுஞானக்கண்ணாலேதெரிசித்துஞானத் துக்கும்வித்தா கிய சிவனதுதிருவடித்தாமரையைவேறறக்கலந்திருப்பர் — எ று

விச்சை - எ-து - ஞானம் விச்சு - எ-து - வித்து [௨௬]

அந்தஞானவேட்கைமூவிதமென்றுமவற்றாற்பெறும்பயனி
ஃதென்றுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

ஆசைதானுமூன்றுவிதமறிபிலவையுங்கனிட்டாந்தம்
பேசுங்கனிட்டவாதரவுபெற்றார்மூன்றுபிறப்படைந்து
சேசார்ஞானயோகத்தைச்செறிவர்பரமதேசிகனாற்
பாசம்பிரியப்பரமானவின்பவெள்ளம்பருகுவரே

எ - து அந்தவாசையாராயுமிடத்துஉத்தமம்மத்திமங்கனிட்டமென மூ வகைப்படும். அதிற்பிற்கனிட்டவாதரவுபெற்றோர்மூன்றுசெனனம்பிறந்துமூன் றுசெனனத்திலேபரமகுருவினருளினாலேயாணவமுதலியபாசங்கணீங்கவொ ன்றாகிய ஞானயோகத்தைப்பெற்றுமேலானவானந்தவெள்ளத்தினையனுபவிப்ப ர் - ஆசை - தான் - எது - ஆசை

[௨௭]

உடையாரிடைவேணுளத்தமலனுலகமதனைவுகப்புறவே
மடையாரவனிதலத்திரண்டுபிறப்புமவலவுடலாசை
விடையார்பரமசிவஞானவிளைத்தகருணைவெள்ளத்திற்
படையாப்பரமசிவன்பாதம்பரிப்பார்பசுநோயரிப்பாரே

எ - து சிவஞானத்திலேமத்திமமானவாதரவு உள்ளத்தின்கணுடையோர் மேன்மையுண்டாக ச்சிவலோகத்தின்கணடைந்து பின்பு பூமியின்கணிரண்டுசெ னனம்பிறந்திரண்டாவதுசெனனத்திலேதுக்கமான தேகவிருப்பினைவிட்டுப்பரம சிவஞானமானவாசாரியன்வைத்தகிருபைக்கடலிலேபடிந்து மேலான சிவனதுதி ருவடித்தாமரையுள்ளத்தின்கட்டரித்தாணவநோயை நீக்கி முத்தியடைவர் எ று

மேன் வருப்பு

[௨௮]

பெற்றாரிபெரியவாதரவு பெருமானுலகமதுபெற்றே

மற்றோருடலமண்ணுலகிலவாய்க்கமனத்தின்மயக்கினையு *
மற்றேயபலவொளிவெளியையறிந்தேபிறிந்தேயவ்வுடலம் *
பெற்றேபிரியாப்பெரும்பொருளைப் பிரியாரழியாப்பேரின்பம் *

எ து சிவஞானத்திலே யுத்தமமான வாதரவுபெற்றோர் சிவலோகத்தையடைந்துமீண்டுபூமியின்கட்பிறிதொருசரீரமெடுத்தங்ஙன மெடுத்தவச்சரீரத்திலே தானேயுள்ளத்தில்விருப்புவெறுப்பினையுமொழித்துநின்மலமானஞானவெளியினையுணர்ந்துபின்னரந்தச்சரீரத்தையுநீங்கித்தன்னைநீங்காது நிறைந்துநிற்கும்பரமசிவத்தினைப்பெற்றழியாதபேரானந்தத்தைநீங்காதனுபவிப்பர் எ று [உகூ]

வேறு

என்றுகருமாதியமகத்திறமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெப்பவினைகெய *
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே *

எ து வெளி [ஙஅ]

வேறு

காமுறுவாரையுங்கண்ணினனே காமனைக்காய்தழற்கண்ணினனே *
நாமமுமாயிரம்பெற்றவனே நான்முகன்றன்னையும்பெற்றவனே *
யேமமுமென்றனக்கானவனேயேனமுமெய்சிலைக்கானவனே *
தேமொழியாளொருபாலினனேசிறுவனுக்கன்றருள்பாலினனே *

எ - து .தன்னைவிரும்புமவரையுமடிமைக்கொண்டருளுதற்குக் கருதினோனே,காமனையெரித்தநெருப்புக்கண்ணையுடையோனே,ஆயிரந்திருநாமத்தைப்பொருந்தினோனே, நாலுமுகத்தையுடையபிரமாவையுஞ்சிருட்டித்தவனே, யெனக்கின்பமுமாயிருப்போனே, பன்றியையுமெய்யாநின்றவில்லையுடையவேடனாயினோனே தேன்போலுமொழியினையுடையவுமையாளையொருபாகத் திலுடையோனே, சிறியகுழந்தையானவுபமன்னியபகவானுக்குமுன் னாட்கொடுத்ததிருப்பாற்கடலையுடையோனே எ-று -

காமுறுவாரையுமென்றவு ம்மை: யுள்ளபடியுணர்வோரையேயன்றி யென்பது, அவாய்நிற்றலினெச்சவும்மை, நாமமுமென் னுமும்மைமுற்றுமமை,நான்முகன்றன்னையுமென் னுமும்மை நாரணனையுமெனவெதிரதுதழீஇயது, ஏமமுமென்

[illegible], மேனாட் குமிரானபச்ரூபியாயிருத்தலேயன்றியென, எச்சந்தமிறவியிற் [illegible]மேன் றுமும்மையிழிவுசிறப்பு.

[௩௬]

[illegible]வேள்வியுடைத்தவனேயுற்றதுணுடையுடைத்தவனே ❊
[illegible]க்காதலனேகாமுறுவாரையுங்காதலனே ❊
[illegible]பொறுத்தவனேபுன்மையவென்பொய்பொறுத்தவனே ❊
[illegible]புன்மையிலாதவனேயானெனும்புன்மையிலாதவனே ❊

[illegible] தன்னைநினையாததக் கனியாகத்தையழித்தோனே, பலதுணியாலுந் [illegible]யாகத்தரிக் குந்தபோதனனே, மதுராபுரியின்கண்வளரிய [illegible]க்குக் கணவனுயுள்ளோனே, தன்னைவிரும்புமடியாளை [illegible], ஈனிட்களனுயிருந் தம்அடியவர்பொருட்டாகப்பொன்போன்ற [illegible]த்தரித்தவனே, பொல்லாதவெனதுவஞ் சனையைப்பொறுத்தருளி [illegible], பொறாதென்றும்புறப்பற்றில்லாதோனே, யானென்னுமகப்பற்றில்லையா [illegible]த்தவனே - எறு -

[௩௭]

வேறு.

[illegible]ச்சுதனாறுருத்திரனமுகனட்டதிண்புயவீரன் ❊
[illegible]மடனக்குளம்பரிவுபட்டுடம்பருள்பாகன் ❊
[illegible]பொறுத்தவன்சிரமறுத்தவனலரோனைப் ❊
[illegible]புதல்வனற்பதம்புணர்விருப்பொடும்புகழ்வாமே ❊

[illegible]லாதவனுமாயழிவில்லாதவனுமாய்ச்சங்காரகருத்தாவுமாயான் [illegible]ப்போக்குவோனுமாய்ச்சவுந்தரியனுமாய்த்தின் னியவெட்டுத் [illegible]யோனுமாயிமவானுக் குநல்லமகளாகியபார்வதியாரச் [illegible]மேனியிலேபாதியருளினேனுமாய்முன்னுட்டக்கனியாகத்தி [illegible]ல்லையுதிர்த் தோனுமாய்ப்பதுமாசனத்திலிருக்கும்பிரமாவினை [illegible]மாப்பித்தியசுத் தனுமாயதிசயமுள்ளோனுமாயிருக்கிற சிவனு [illegible]முருகனதுசல் லதிருவடிகளைக் கூடுமாசையோடுந்துதிசெய்வாம்

[௩௮]

[illegible]ரவேயருந்தவருமாதவன்முதலோரும் ❊
[illegible]சரண்விடலைகாவெனுந்துதியாளும் ❊
[illegible]சரன்பணிந்தகிலநீதியுமறிவான்வண் ❊

மூன்றாவது ஐவகையாகவியல்

கமலனாண் முகன்மதலைமாதவன்கருணையான்மலங்களைவாமே

எ து ஒருவராலுஞ் செயற்கரிய தவத்தினையுடைய விருடிகளுமாதித்த
முதலிய முப்பத்துமுக்கோடிதேவர்களுந் தம்முடைய வாணவமலத்தால்வ
யாமைமுதவியநீங்கும்வண்ணநின்றுமலமில்லாதவனே யந்தமலசத்தியைக்
கும்வலியையுடையவனே யாறுமுகத்தையுடையவனே குகனே குமரகளை
செய்துகானகத்திருப்பவனேநீயே புகலிடமெம்மைக்காப்பாயாகவென்று
ந்தோத்திரத்தைக்கைக்கொள்ளு மமலனுமாய் எவற்றிற்குமுதல்வனுமாயி
சண்முகனுடையதிருவடிமலரைப்பணிந்தெல்லா ப்பொருளையுமறிந்தோ
யதாமரைத்தவிசினையுடையநான்முகனுக்குப்புத்திரனுமாயிருக்கிற வகத்தியம
னிவனதருளினாலேமலமாயாகன்மங் களைப்போக்குவாம் எ று

மலமோகமுமென் றவும்மையால் மதமுதலியஆணவகாரியம் ஆறு
மெனவறிக

மூன்றாவது ஐவகையாகவியலுரைமுற்றும்

நான்காவதுபலவிசிட்டகாரணவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றாவெனின்முற்கூறிய கன்மயாகாதிபலன்களதிக
தற்குக்காரணமானதேசகாலமுதலியவற்றையுணர்த்திற்றாகலாற் பலவிசிட்டகா
ணவியலென்னும்பெயர்த்து இத்தலைச்செய்யுளென்னுதலிற்றாவெனின்பொது
யானவறத்தினைச்சொல்வான்றுடங்கியகத்தியனை க்கந்தன்விளித்தனுதலிற்று

பிறப்பிலிபேதமில்லிபேணுவார்தம்மைமையென்று
மறப்பிலிமலர்த்தாண் மன்னுமனத்துறவுறவேவைத்துச்
சிறப்புறுதேசமாதிசெப்புவமுனிவதோக
வறத்தினைப்புரிந்தார்க்காகவரும்பயனதிகமாங்கும்

எ து வாராய்முனிவரனே தனக்குற்பத்தியில்லாறுயெவற்றினுமன்னியபடி
றியிருப்பானாய்த்தன்னைவிரும்புமடியவரை யெக்காலுமறப்பில்லாறுயிருக்கிறசி
னதுதாமரைமலர்போன் றதிருவடிகளைமனத்தின்கணிலைபெறவிருத் தியுத்தம
னதேசமுதலியவற்றை யுனக்குச்சொல்லாநின்றோம், அதனையறிவாயாகவ,
ழியறஞ்செய்வோர்க்குண்டாம்பயனிவ்வுலகத்தின் கணன்றிச்சுவர்க்கத்தின்

ணுமதிகமாகப்பலிக்கும் எ று [க]

மேனிறுத்தமுறையானேதொகுத்தவற்றைத்தலைதடுமாற்றமென்று ந்தந்திரவுந்தியாலுணர்த்துகின்றார்

சிறந்தநற்றேசந்தன்னிற்றேடருங் காலங்கூட *
மறந்திடாவிதியினாலேவாய்த்தவாதரவுகூர *
வறந்தனையறிந்தவாய்மைப்பாத்திரமாவானங்கைச் *
செறிந்திடச்செய்தவற்பமுலகிலும்பெருகுந்திண்ணம் *

எ து உத்தமமாகியகாசிமுதலாகிய புண்ணியதலங்களிலேதேடுதற்கரிதாகி யகிராணமுதலியபுண்ணியகாலங்கள்பொருந்தவழுவாதவிதியினாலே பொருந்தின வாதரவுபெருக அறமுதலியவற்றையுணர்ந்தசற்பாத்திரமான வள்ளலிற்பொருந் தும்வண்ணமுபகரித்தபொருள் சிறிதேயாயினுமஃதுலகிலும்பெரிதாமிதுசத்தியம் எ று ஆலுருபை ஓடுவாகக்கொள்க [உ]

முன்னைச்செய்யுளிற்றொகுத்துக்கூறினாரிச்செய்யுளிதன்பயன்சிற ப்பித்துணர்த்துகின்றார்

ஓங்கியவதனைச்செய்தவுத்தமர்சிவலோகத்துட் *
டாங்கியேபோகபேதம்பிரளையசமையந்தன்னி *
னீங்கரும்பொருளைக்கண்டுநிறையுறவொருமைகூரத் *
தூங்குவரின்பந்தோன்றத்துகண்மலஞ்சோருமன்றே *

எ து பயனாலுயர்ந்தஅந்தஅற்பமாயின நன்மையை நாளைவரவுள்ளபாற்செ ய்தபெரியோர்கள்சிவலோகத்திற்சென்றாங்குள்ள போகவிதங்களைபெயர்ப்பின் னர்ச்சங்காரகாலத்திற் பொல்லாதமலத்தை நீங்கித்தம்மையிட்டு நின்றதனியத் னைத்தெரிசித்துக்கடல் அலையற்றடங்கினாற் போலவுள்ளத்தின்கண்ணமையுறக் க ஐக்கியபாவத்துடனானந்தானுபவமுண்டாகநிலைபெற்றிருப்பர்கள் எ று [க]

ஐவகையாகத்தோர்க்குதவும்பலத்துக்குக்காலவரையறையுணர்த்து கின்றார்

கருமிகட்கீகைநிற்குங்கலந்தொருபிறப்பிற்கற்ற *
பெரியராந்தவத்தோர்க்கீகைபிறப்பொருநூறுநிற்கும் *
மரியமந்திரத்தார்க்கீகையாயிரம்பிறப்புநிற்கு *

முரியயோகிக்குஞானிக்கூழிபேருழிநிற்கும் *

எ - து கன்மயாகமுத்லியஐவகையாகத்தோர்க்குங்கொடுத்தது, அடைவே ஒருசெனனம், நூறுசெனனம், ஆயிரஞ்செனனம், பிரமகற்பம், மகாசங்கார மானகாலமளவும், நின்றுபோகவிதங்களைக்கொடுக்குமென்றவாறு - யோகிக்கூழியெனவும், ஞானிக்குப்பேருழியெனவும், பதமாற்றுக, போகவிதமென்பது, எஞ்சிற்று [ச]

தேசமுதலியவற்றிற்றானமுதலியகன்மங்கள்செய்யினதிகபலந் தருமென்பதுணர்த்துகின்றார்.

திருவெலையெழுவாயானகாரணஞ்சிறக்கவீகை *
யெரியினையோம்பலீசற்காலையமியற்றலென்றும் *
பரிவுறப்பூசைபண்ணலெனுமிவைநான்கும்பாங்கார் *
தருமமேயிவற்றால்வேண்டும்பலமெலாந்தழைத்துச்சாரும் *

எ - து புண்ணியதேசமுதலாகக் காலமுஞ்சிரத்தையும், பாத்திரமு மான பலவிசிட்டகாரணங்கள்சிறப்போடுபொருந்தவவ்விடங்களிற் றானஞ்செய்தலும், அக்கினிகாரியஞ்செய்தலுஞ்,சிவனுக்காலையமுண் டாக்கலு,மெக்காலமுமன்புபொருந்தவருச்சனைசெய்தலுமென்னுமித்தொழில்கணான்குஞ்;சிவபுண்ணியங்களுட்டலைமையாம், இதனாற்றும்வேண்டியபோகங்களெல்லாமிகவுண்டாம் - எ று [ரு]

சற்பாத்திரவிசிட்டமுணர்த்துகின்றார்.

பாத்திரமாவான்பாவப்படுகடற்பட்டார்தம்மைத் *
தீர்த்தமலேசன்வாழும்புரமெனுந்தீரஞ்சேர்ப்பான் *
கூர்த்தமெய்ஞ்ஞானமென்னுங்கரத்தினைக்கொடுத்தேமற்றார் *
தீர்த்திடவல்லார்கைதானில்லவர்க்குண்டோசெய்கை *

எ - து சற்பாத்திரமானவன், பாவமாகியஒலிபடுகடலினழுந்துவோர்க்குச்சத்தியஞானமாகிறகையினைக்கொடுத்துப்பாவப்படுகடலினையொழித்து மலரகிதனானசிவன்வாழுஞ்சிவலோகமென்னுங்கரையையடைவிப்பன், ஞானக்கையுடையோனன்றிப்பாவப்படுகடலையொழித்தெடுத்தற்குமற்றையோர்யார்தான்வல்லார், பிறருமெடுக்கவல்லர்காணுமென்னிற்கையிலாதார்க்குத்தொழிலுளதோ, அதுபோலச்சற்பாத்திரமல்லாதவன், பாவப்படுகடலினின்றுமெடுக்கமாட்டான் எ று - தமக்கு - எ து - தம்மையெனவுருபுமயங்கிற்று. [சா]

ஆன்மாக்களைஞானவான்களைக்கரைபெற்றவரெனவிரித்துக்கூறு
னிகள்கரையேற்றமாட்டாரென்றவாறுமுற்றுதல்

அலைபுனலதனுளாழ்ந்தநிலைமரான்றிலையாலன்றி
சிலையினுற்றீரந்தன்னைச்சேர்வதுரூபமில்லைத்தெரிற்
றொலைவிலாப்பாவப்பௌவச்சுழியிடைக்கரைவாரற்றாமை
நிலைமையாரன்றித்தீயார்நீக்கிவான்கரையேறிட்டார்

எ - து அலையெறியாநின்றபெருநீரினுள்ளிருந்தநிலைத்திலைமரமல்லாதவரெல்லாம்கரையேற்றவிசாரிக்கின் மரத்தாற்கட்டியதெப்பத்தினாலன்றிக்கல்லினாலாகிய தெப்பத்தினாலாகாதவாறுபோலத்தொலையாதபாவக்கடலிற்கரையேறுவதெனவரைவரல்லாதசுழலுமான்மாக்களைச் சற்பாத்திரமாகியஞானவான்களினன்றி, கரைபெற்றவரல்லாதசற்பாத்திரமானோர் அக்கடலினின்றுஞ்சுவர்க்கமாகியகரையேற்றமாட்டார் எ - று

முற்கூறியஞானக்கையென்பதற்கேற்கநீட்டற்றொழில்கொடுத்தாரென்க [௩]

பாத்திரமென்னுஞ்சொல்லுக்குப்பொருளுணர்த்துகின்றார்.

பாவெனும்பதத்தினர்த்தம்பாவமென்கடற்பட்டார்
தேவனற்பதமென்றீரத்திருத்துவான்றிரத்தினர்த்தம்
பாவமென்கடற்பட்டாரைப்பரமர்தம்பதமென்பாரத்
தேவியேபிருத்துவானேபாத்திரமென்னப்பட்டான்.

எ - து பாவென்னும்பதத்தின்பொருள், பாவமாகியகடலினின்றுந்திருவென்றும், திரமென்னும்பதத்தின்பொருள், சிவனதுநல்லதிருவடிமலராகிறகரையிற்பொருந்துவிருத்துவனென்றும், ஆகையாலேபாவமாகியகடலின்கண்விழுந்தேவனாகிய சிவனதுநல்லதிருவடிமலராகிறகரையிற்பொருந்தும்வண்ணம்செய்துவிடுத்துமவனேபாத்திரமென்றுசொல்லப்பட்டான் - எ று - [௪]

அந்தச்சற்பாத்திரமாயுள்ளோர்க்குப்பெரியவிடத்தாரறும்பயனுணர்த்துகின்றார்.

அருமறையாய்ந்தகோடியந்தணர்க்கருந்தவாய்ந்த
தருமமுஞ்சிறிதேயென்னத்தழைந்திடுந்தம்மையோர்ந்து
வொருமையயோகர்தங்கைபுதவியபிச்சையுண்டான்

நான்காவதுபலவிசிட்டகாரணவியல்

பிரியவேபெறுவரின்பம்பிச்சையைப்பெறுவித்தாரே

எ - து நாலுவேதங்களையுமாராய்ந்தகோடிபிராமணர்க்கறுசுவையோடுபொ சிப்பித்தபுண்ணியமுமற்பமென்னும்வண்ணமான்மசொரூபத்தைத்தெரிசித்தவொ ருப்பாட்டினையுடையசிவயோகிகளு க்கிட்டவொருபிடிபிச்சையானது, பெருத் ததிகமாம், ஆதலாலவர்க்குப்பிச்சையைப்பெறும்வண்ணமிட்டோருட் குற்றமாகி யவாணவாதிகளீங்கிப்பேரின்பத்தைப்பெறுவர் - எ று [க]

சிவயோகிகளையமுதுசெய்வித்ததுசிவனுக்காமென்பதுணர்த்துகின்றார்

அருத்துகவமலன்றன்னையகத்துணர்ந்தவரையன்னங்
கருத்திருந்தவர்க்குச்செய்தபூசனைகடவுள்கொள்வ
னொருத்தனுக்குபசாரங்களுடலிடையுலகர்செய்வர்
பிரித்துடலுயிரைப்பேணும்பெற்றியையாரேபெற்றார்

எ து நின்மலனாகிய சிவனையுள்ளுயிராக த்தம்முள்ளத்தின்கணுணர்ந்த சிவ யோகிகளுக்கன்னத்தையருத்துவிக்கக்கடவன ங்ஙனமவர்க்குச்செய்த பூசையை ச்சிவன்அவர்களுள்ளத்தின் கணிருந்துகொண்டருளுவன் அஃதெங்ஙன மென்னி லுலகத்தினுள்ளோர் யாதாமொருவனுக்குச்சந்தனமலர்முதலியவுபசாரங்களைய வனதுசரீரத்தின்கட் செய்யவேயவனுயிர்க்குச்செய்ததாம் அதுபோலச்சிவயோ கிகளுக்குச்செய்ததுசிவனுக்காம் உடலின்கட்செய்வதொழிந்துயிரின்கட்செய்யா ரோவென்னிலுலகத்திலேயெவர்தாமுடம்பினைநீக்கியுயிரைக்கண்டுபகரிக்குமுறை மைபெற்றவர் எ று [ங]

மேலவர்களுக்குப்பிதிர்திவசங்களிலேயருத்துவித்தோரடையும் பலமுணர்த்துகின்றார்

விடுத்துலகமலன்றன்னைவிரும்பியவிதுலர்க்கன்னங்
கொடுத்தவரன்புகூரப்பிதிர்க்களைக்குறித்தநாளி
லெடுத்தெழுமூன்றுசுற்றங்கீழ்க்கிடந்திளையாதென்று
நடத்தொழினம்பணுட்டிவிருத்தியேயிருப்பர்நம்பால்

எ து பிதிர்க்களைநோக்கிய திவசங்களிலேயுலகவாஞ்சையை யொழித்துநி ன்மலனாகியசிவனைவிரும்பிய வொப்பில்லாததபோதனர்க்கன்புபெருகவமுதுசெ

ய்வித்தோர்தம்முடைய விருபத்தொருசுற்றத்தையுநரகத்தின்கட்கிடந்தவருர்தா மலெடுத்தெக்காலமுந்திருநடத்தொழிலினையுடைய சிவன் வாழுஞ்சிவலொகத்தி ன்கணிருத்தித்தாமும்விருப்பத்தினுலேசிவசமீபத்திலே யிருப்பரென்றவாறு விதுலம். ஒப்பின்மை நம்பு விருப்பு

[ய௧]

அவர்களுக்கிட்டபிச்சையினதுவிசிட்டமுணர்த்துகின்றார்

தம்மனையடைந்தயோகர்தமதடி பணிந்துதாமு
மெம்மையேயாளுமீசனிவரொனவிட்டபிச்சை
வெம்மையநரகந்தன்னில்வீழ்ந்ததங்குலத்தைமீட்டு
மெய்ம்மையேசிவலோகத்துளிருத்திடும்வியப் பென்வேறே

எ - து யாதாமொருவர்தம்முடைய மனையின்கணெழுந்தருளிய சிவயோகிக ளதுதிருவடிமலர்களை த்தாமுமெதிர்சென்று வணங்கி யெம்மையடிமைகொண்ட ருளுஞ்சிவனிவரேயென்றிட்டபிச்சை யானது கொடியநரகத்திலேவீழ்ந்த தம்மு டையகுலத்துள்ளோரையெல்லாமதனினின்று மீளச்செய்துசிவலோகத்தின்கண் வைக்கும் இதுசத்தியம் வேறுவியந்து கூறுவதென்னையென்றவாறு, தாமுமென்ற வும்மையாற்றம்மைந்தர்மனைவியருமெனவறிக

[ய௨]

இல்வாழ்வோர்க்குத்தொழிலிலுற்பாவங்கள்வருமுறைமையுமவை தீருமுறைமையுமுணர்த்துகின்றார்

உலகினிற்பாவபேத முண்டுழவாதியைந்தா
லலகிடன்முதலைந்தாலுமவ்வினையறுமெம்மாதிக்
கிலகியவெரிக்குநூலையிசைத்தருள்குரவர்க்கென்று
நிலைமையதவர்க்குப்பூசைநித்தலுநிகழ்த்துவார்க்கே

எ - து புறம்பேசெய்யுழவுமுதலியதொழிலைந்தினுலுமனையகத்திற் செய்யு மலகிடன்முதலியதொழிலைந்தினுலும் பாவபேதங்கள்பூமியின்கணுளதாம் சிவனு க்கும்விளங்காநின்ற வக்கினிக்குஞ்சிவனூலையுபதேசித்தருளு மாசாரியர்க்குமெக் காலமுநிலைபெற்றதபோதனர்க்கும்பூசையை நித்தியமுஞ்செய்வோர்க்குமுற்கூறி யபாவங்களேறுதுகெடும் எ று

[ய௩]

உண்டியால்வருமுயர்பு மிழிபுமுணர்த்துகின்றார்

அட்டவைதன்னைச்சொன்ன நால்வருமருந்தவன்பா

லிட்டுமிக்கதனையுண்கைமிர்தமீயாதேயுண்கை
கட்டமுங்கடிவுமாயிகழிந்தவூன்காயந்தானு
மொட்டியேயுடலிற்றோன்றும்புழுவுமென்றொழிகவோர்ந்தே

எ து யாதாமொருவர்தமக்குச்சமைத்த வன்னத்தைமுற்கூறிய சிவன்முதலு ல்வருமமுதுசெய்யும்படியன்பினாலே கொடுத்தந்தச்சேடத்தைப்பொசிக்கைஅமிர் தம்பொசித்தலோடொக்கும்இந்நால்வர்க்குமுதவாதுண்கை,மலமும்,விடமுமுயிர் நீங்கியகாயமானபிணமுமுடலின்கட்பொருந்தி த்தோன்றும்புழுவுமுண்டலொக் குமென்றவையிற்றை யுணர்ந்து அவர்களுக்கிடாமலுண்கையையொழிய க்கடவர் எ று

[ய௪]

முன்னைச்செய்யுளிலுழவாதியைந்தென்றுமலகிடன்முதலைந்தென்று
ந்தொகுத்தாரதனைவகுத்துணர்த்துகின்றார்

தலத்துபுல்கூலிவேலைசந்தையிற்கொண்டுவிற்கை
குலைத்தசொற்கூட்டுங்கோபஞ்சத்தியங்கூறலுள்ளு
மலக்கிடன்மெழுகலங்கியாக்கனீரரிசியென்றே
யிலக்கியத்தியம்பும்பத்துந்தமக்கெனிற்பாவமீட்டும்

எ து புறம்பேசென்றுநிலத்தின்கணுழுதலுங்கூலிகொண்டுவேலைசெய்தலுஞ் சந்தையிற்கொண்டுவிற்கையு நாய்குலைத்தாற்போன்றசொல்லையுண்டாக்குங்கோப மும்பொய்யுரைத்தலு மில்லத்தின் கணிருந்தலகிடலு மெழுகலு நெருப்புமூட்டலு ந்தண்ணீரொடுத்தலு; மரிசிகுற்றலுமென்றுநூல்களிற்கூறுந்தொழில்கள்பத்துந்தம க்கென்றுகருதிச்செய்யிற்பாவங்கள்வரும் எ று

இத்தொழில்களால்வரும் பாவம்யாதெனிற், புருடாரேறுழவுதொழில்செ ய்யுங்காற்செந்துக்கண்மரிக் கையுமுழுமெருதுக்கு வருத்தமுதலியகுற்றமுளதா ம், கூவிவேலைசெய்யுங்காலவ் வேலைத்தொழிறிருந்தச்செய்யாமையும்வேலைக்கழப் பும்வெட்டல்கொத்தலிற் கொலையுமற்றுமுள்ளகுற்றமுளதாம், கொண்டுவிற்கு மிடத்துப்பிறர்பொருளேறக் கோடலுந்தம்பொருள்குறையக்கொடுத்தலும், பொ ய்யுரைத்தலு, முதலியகுற் றமுளவாம்; கோபம்வருமிடத்துப்பிறர்க்கின்னுமை யுந் தமக்குணர்வுகேடும், வன்சொல்லுமுதலியகுற் றமுளவாம், அசத்தியங்கூ றுமிடத்துப்பிறர்க் கிடுக்கணும்பகையு, மச்சமும், பழியுமுதலியகுற்றமுளவாம், மகளிரலகிடன்முதலியவைந் தொழிற்கண்ணுஞ்செந்துக்கள்மரிக்குங்குற்றமுளதா

மென வறிக.

[ஙரு]

அக்குற்றங்கெடுதற்கோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்.

தேசுறுசிவாதிபூசைக்கெனவிவைதன்னைச்செய்பி
ஞசமாம்பாவபேதந் தம்மையோடிச்செய்யிற்
பாசமாய்நரகபேதப்படுகு ழிப்படுத்தியென்று
மூசல்போலுழல்வித் தாக்குந்துயரினுக்களவுமுண்டோ

எ - து இந்தப்பத்துத்தொழிலினையும்புகழான்மிக்கசிவன்முதலியநால்வருடையபூசையின்பொருட்டாகச்செய்வராயின்அத்தொழிலினால்வரும்பாவவிதங்கள்கெடும்அவற்றைத் தம்மையேகுறித்துச்செய்வாராயினவைகள்கன்மபாசமுமாய்நரகவிதங்களானபடுகுழியிலே விழுவித் தங்கோடிங்கோடுழலுமூசலைப்போலவெக்காலமுஞ்சென்னமரணங் களிலேசுழன்றுதிரியும்படிசெய்தவற்றினாலுண்டாக்குந்துயரினுக்கோரொல்லையுளதோ - எ - று

ஓகாரம், எதிர்மறைக்கண்ணாய்இல்லையெனவிளக்கிநின்றது

[ஙசு]

மேன்முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத் தியாலுணர்த்துகின்றார்

இந்தவினைந்தினாலுமேறியபாவமாறச்
சிந்தனைசெய்தார்மற்றுஞ்செறிந்ததீவினையுந்தீர்க்கப்
புந்திசெய்தார்கடாமுஞ்சிவாதியைப்புரிகபூசை
நைந்தறும்பாவம்வாய்க்குநலங்களுநவிற்றுவாமே

எ - து இந்தப்பத்துத்தொழிலினாலுமுண்டாயபாவங்கணீங்கும்வண்ணங்கருதினோர்களுமிவற்றாலன்றிபபிறவாற்றானும்பொருந் தியபாவங்களொழிச்சும்வண்ணங்கருதினோர்களுஞ் சிவன்முதலாயநால்வரையும்பூசைபண்ணக்கடவர்கள் அங்ஙனமவர்களைப்பூசைபண்ணிற்பாவங்களெல்லாந்தேய்ந்துகெடுமேலதனாலுண்டாம்பயன்களுஞ்சொல்வாம் - எ - று

(ஙஎ]

சிவன்முதலாயினோர்க்கன்னதிகொடுத்தோர்சிவலோகத்திலெய்தி
யிருக்குங்காலவரையறையுணர்த்துகின்றார்

அருத்தியவவிழினேகமமலனை முதலோர்க் கன்பா
லிருத்திடுஞ்சிவலோகத்தின்வருடமாயிரமுமேயப்

பொருத்தியவன்பர்தம்மைப்பொருந்திடிற்பருப்புநெய்யு
முரைத்தவவ்வருடந்தன்னிற்றசகுணமோங்குமாங்கே

எ - து சிவன்முதலியநால்வரையுமன்பினாலேயமுதுசெய்வித்த, அவிழ்களி லோரவிழ், ஆயிரம்வருடஞ்சிவலோகத்திலிருக்கும்படிவைக்கும், அந்தஅவிழுட னேபருப்பு, நெய்யும், பொருந்துமாயினங்ஙனமருத் துவித்தவன்பர்தம்மைமுற் கூறியவருடத்திற்பதின்மடங்காகியபதினாயிரம்வருடஞ் சிவலோகத்திலேயதிகமா கவிருத்துமென்றவாறு அவிழ் அன்னம். [௰அ]

இதுவுமது.

பொரித்தநற்கறியும்புல்நிற்றசதசகுணிதம்போனந்
தரித்தசாட்டியமேயென்னிற்சததசகுணமுஞ்சாரும்
பரித்தநற்கந்தபத்தஞ்சதசதகுணமும்பற்று
மிரத்தநற்சாலியன்னநியுதமேயெண்ணிலேன்றும்

எ - து முற்கூறியபருப்புநெய்களுடனேநல் லபொரிக்கறியுங்கூடுமாயின்மு ன்னோரவிழுக்குக்கூறியவருடத்தினூறுமடங்கான நூறாயிரம்வருடஞ்சிவலோகத்தி லிருத்தும்அவர்களுக்குநிவேதிக்குமன்னமறுபதுநாளிலேவிளைந்தநெல் லினதன்ன மாயின், முன்னோரவிழுக்குக்கூறியவருடத்திலாயிரமடங்கானபத் துநூறாயிரம்வ ருடஞ்சிவலோகத்திலேபொருந்தவைக்கும், நன்மைபொருந்திய புழுகுசம்பாநெ ல்லினதன்னமாயின், முன்னோரவிழுக்குக்கூறியவருடத் திற்பதினாயிரமடங்கான கோடிவருடஞ்சிவலோகத்திற்பொருந் தும்வண்ணமிருத்தும், நல்லசெஞ்சாலிநெ ல்லினதன்னமாயின், முன்னோரவிழுக் குக்கூறியவருடத்தினூறாயிரமடங்கானபத் துக்கோடிவருடஞ்சிவலோகத்திலிருத்தும் - எ - று

ஏகாரம, தேற்றம், உரைத்தவ வ்வருடமென் டதுஞ்சிவலோகமென் பதும் அதிகாரம்பாரித்தமையால், யாண்டும்வருவித்துக்கொள் க,சாட்டியம், அறுபதா ங்குறுவை, கந்தபத்தம், புழுகுசம்பாநெல் [௰௧]

இதுவுமது

சாலியின்விசிட்டராசசாலியாற்சமைத்தவன்ன
மேலையபலத்தின்மிக்கதசகுணம்விளைக்குமீண்டுங்
கோலியபலங்களேறுங்கொழுவியநெய்யுங்கூடி
லேலவேகறியுங்கூடிலேற்றமுன்னிசைத்தவாற்றும்

எ - ௪ செஞ்சாலிநெல்லினுமதிகமானவிராசசாலிநெல்லிறுற்சமைத்தவமு தாயின் முற்கூறியபலத் தினுமிகுந்தபதின்மடங்குபலத்தினைவிளைக் கும்எனவேமு ற்கூறிய பத்துக்கோடியிற்பதின்மடங் கான நூறுகோடிவருடஞ் சிவலோகத்திலே யிருத்தலென்றும் அந்தஅன்னங்களிலே நல்லநெய் யுங் கூடுமாயின்மீளவுமந்தந் தன்னங்களுக்கு ச்சொன்ன பலனளவிரட்டிக் கும்அவையிற் றினோடுபொருந் தக் கறியக்கூடுமாயின் அந்தந்தக்கறிக்குமந்தந்தவன் னங்களுக்குமுற்கூறியபலத்தினை தலைபறையின்படியே யிரட்டிக்கும் எ று [உய]

சிவவிரதரானதபோதனரையருத்துவித்தோர்க்கெய்தும்பலமுணர்த்துகின்றார்

பழுதறுபாயதாதிபலவிதவிரதபாகங்
கொழுவியகனியின்பேதங்குளகிருதாதிகூடு
முழுமனமோதகாதிமுன்னையினதிகபுற்றும்
விழுமியபலத்தைவேண்டிவிரதனைமிசைவித்தார்க்கே

எ - ௫ விசிட்டமானபலன்களைவிரும்பி க்குற்றமற்றபாயசமுதலான குளான் னத்திலான்னம்பருப்புப்போனமிவைகளையுநாறுவிதமானவிராசசாலியன்னமுதலி யவிரதபாகங்களையுங்கொழுவியவாழைக் கனிபலாக்கனிமாங்கனி முதலியகனியின் பிரதங்களையுஞ்சருக்கரைநெய்முதலாயின கூட்டிச்சமைக்கு நிறைமனத்தையுடை யசிவன் முதலானபணியார்வகைகளையுங் கூட்டி ச்சிவவிரதங்களை ச்செய்யுந்த போதனர்களைபமுதுசெய்வித்தோர்க்கவைகளே முற்கூறியபலத்தினு மதிகமான பலன்களைவிளைக்கும் எ று

௬ செப்பப்பிபொருளைச்செய்ததுபோல த்தொழிற்படக்கிளத்தலும்வழக்கினு ளுரித்தே என்பதனுற்கருமப்பொருளை க்கருத்தாவாகக்கூறிற்று [உக]

சிவபோகிகளையருத்துவித்தோரெய்தும்பலமுணர்த்துகின்றார்

உலைத்தவிப்பாகபேதமுயிர்க்குயிருணர்ந்தார்தம்மை
யுருத்திரர்சிராத்தத்தன்பாலழுங்கியமூவேழுற்ற
முருத்திரர்சிவலோகத்தினெண்ணியபடியேதாங்கள்
கருத்திலுட்களிப்பும்பொங்கப்புதல்வனைப்பெற்றேகாண்பர்

எ - ௭ முற்கூறியவிரதப் பாகபேதங்களை யுயிர்க்குயிராகியசிவனைத்தெரிசித்த சிவபோகிகளுச்சிராத் தகாலங்களிலே யன்பினோடுமமுதுசெய்வித்தோர்தாம்

பூமியின்கணிருக்கவுநரகத்தின்கட் டுருயருநின்றவிருபத் தொருசுற்றத்தையுமெடுத்துச்சிவலோகத்தில்வைத்தோராவரஃதேயன்றி த்தங்களுள்ளத்தின் கணினைந்தபடியேசற்புத்திரனையும்பெற்றுமனமகிழ்ச்சியும்பெருக க்கண்டிருப்பதொன்றவாறு [உஉ]

இதுவுமது

உயிர்க்குயிராகிநின்றவொருவனையுணர்ந்தயோகி ❊
பயிக்கமுங்கொளவென்றெண்ணிப்பரிந்தவர்மனைமுன்பற்ற ❊
வுயப்பெறுவோமென்றெண்ணியவர்குலத்துள்ளாராங்கே ❊
பெயர்த்தடிநடமுஞ்செய்வர்பாடுவர்களிப்பும்பெற்றே ❊

எ து உயிர்க்குயிராகிநிற்குஞ்சிவனைத்தெரிசித்தசிவயோகியானவன் பிச்சைகொள்ளக்கடவோமென்றெண்ணிப்பத்தசனங்களுடைய வில்லின்முன்பொருந்தவக்கணத்திலேதானேயவர்குலத்திலுள்ளோரான விருபத்தொருவர்க்கமும் யாமினிநரகத்தினின்றுங்கரையேறுவோமென நினைந்தவ்விடத்திலேதானே மனமகிழ்ச்சியையும்பெற்றுக்கால்பெயர்த்துக்கூத்துமாடி யதற்கேற்கப்பாடாநிற்பர் எறுநடமுமென்றவும்மையாற்கையாற்றட்டமுமிட்டென்றறிக [உங]

அந்தச்சிவயோகிக்குச்செய்யும்பூசையைச்சிவனுமற்றுமுள்ளதேவர்
கள்பிதிர்க்களுந்தமக்கெனக்கொள்வரொன்றுணர்த்துகின்றார்

ஒழிவறவுறைந்துநின்றவொருவனையுணர்ந்தயோகிக் ❊
கழகுறச்செய்தபூசையமலனுமயனுமாலு ❊
மெழில்மிகுதேவர்தாமுமெமக்கெனக்கொள்வரொன்றும் ❊
பிழைகெடப்பிதிர்க்கடாமுமெமக்கெனக் கொள்வர்பெற்றே ❊

எ து வெள் [உச]

சிவயோகிபூசைக்குவினியோகப்படும்பொருள்கள்பெறும்பயனு மேவல்செய்வோர்நினைப்போர்பெறும்பயனு முணர்த்துகின்றார்

பூசனைக்குபயோகங்கள்பொருவிலிபுரத்தைப்புல்கு ❊
மீசனையுணர்ந்தயோகர்க்கிறைஞ்சியேயேவல்செய்தார் ❊
நேசமுநிறையநெஞ்சினினைத்தவர்தாமுநீக்கி ❊
யாசினைச்சிவலோகத்தினாரும்பயனாருந்துவாரே ❊

எ - து சிவனைத்தெரிசித்தசிவயோகிகளைப் பூசைசெய்தற் குபயோகப்படுஞ்சந்தனமரமுதலியஎண்வகைக்கந்தமுங்கோட் டுப்பூமுதலியநால்வகைப்பூக்களுநெல்லுமுதலானவைகளுமொப் பில்லாதசிவனது புரத்தைச்சென்றடையுமவர்களைவணங்கி யவரேவியபணிவிடைசெய்தோருமுள்ளத்திலேயன்புநிறையும் படியவரைத்தியானஞ்செய்தோருந்தம்மைத்துயர்செயுந்தீவினைக்குற்றங்களையொழித்துச்சிவலோகத்திலேசென்றுபெற ற்கரியபோகங்களைப்பெற்றனுபவிப்பர் எ - று [உரு]

தபோதனரையுமதிதிகளையுஞ்சிவனெனக்கண்டுவணங்கு
முறைமையுணர்த்துகின்றார்.

அவனியின்மனிதர்செய்கையறிவுமென்றமலன் றானே
தவமொனுமுருவந்தன்னைத்தரித்துவந்தானென்றெண்ணி
யவர்களுக்கககத்தின்வந்தவதிதியர்க்கன்புகூரச்
சுவைமொழிசொல்லிப்பூசைதுடங்கியேமுடிக்கசூழ்ந்தே

எ - து பூமியின்கண்மானிடரதுவழிபாட்டினையறியக்கடவோமென்றுநின்மலனாகியசிவன், றானேதபோதனனொன்னுந்திருமேனியைத்தரித்துக்கொண்டெய்துனென்றுகருதியந்தத்தபோதனர்க்கு,மற்றுந்தம்மில்லின்கண்வந்தவதிதிகளுக்குமன்பானதுபெருகும்வண்ணமின்சொற்கூறியவர்களுக்குப்பாத்தியாசம்றுற்கியமலர்முதலியவற்றுற்பூசையைத்துடங்கிமற்றுமுள்ளவுபசாரங்களும்விதிப்படிசெய்தமுடிக்கக்கடவன் - எ - று

[உசு]

இதுவுமது.

மனிதராய்வந்தாரேனும்வடிவொடுவந் தாரேனு
நிலைமையினிங்காரேனுநிங் கியநிலையரேனு
மலைவறுமன்பர்க்காதிக்கவர்களுக்கமைக்கபூசை
புலைபுடற்பொறையைப்போக்கப்பொருந்தியதிருந்தியாரே

எ - து ஈனவுடலாகியசுமையையொழித்தற்குவிரும்பியதிருத்தத்தையுடையோரானவர், தம்மில்லின்கணழுக்குமெய்யோடுகூடி. யிழிகுலத்தினராய்வந்தாராயினும், பரிசுத்தராய்வேடப்பலிப்பொடுநற்குலத்தினராய்வந்தாராயினுந், தாம்-ந்தங்குநிலைமையினின்றும்வழுவாதோராய்வந்தாராயினு, மந்தநிலைமையினீங்கியவிரதபங்கராய்வந்தாராயினும். அவர்கள்-ஆதியாகியசிவனுக் குநிலைபெற்றஅன்பராயின்அவர்களுக்குப்பூசைசெய்யக்கடவர் எ -று

[உஎ]

சிவஞானிகளுக்குக்குற்றஞ்சொல்லுமவர்முதலியோர்க்குவருந்தி
மையுணர்த்துகின்றார்.

காட்டுமுள்ளொளியைக்கண்டகண்ணனைக் கயந்துசொல்லக்
கேட்டவர்கேட்பித்தார்கள்கெழுமினருடன்பட்டார்முன்
மூட்டினரொன்றவைந்துமூடருங் கூடிமூழ்கி
மீட்டிடுவாருமின்றியெரிநிரையத்துள் * வேவார்

எ - து ஆன்மாக்களுக்கெல்லாம் அந்தரியாமியாய்நின்றெப்பொருளையுந்தெரிவிக்குந்தீபமாகியசிவனைத்தெரிசித்தஞானக்கண்ணுடையோனை, யாதொருவனிந்தித்துச்சொல்லுங்காலதனைக்கேட்டிருந்தோரும், பிறரைக்கேட்பித்தோரு, நிந்தைசொன்னவரு, மதற்குடன்பட்டவரு, நிந்திக்கும்படிமுதற்கணைவிலேரு, மானவைந்துமூடரு, மொக்கவேயெரிவாய்நரகத்தின்கண் அமிழ்ந்தியெடுப்பாருமின்றிவேவுவர் எ று

[௨௮]

இதுவுமது

மனத்தினுல்வடிவுதன்னுல்வழுக்கியசழக்கர்தாமு
மினத்தொடுமிணங்கிவேவொரிநிரையத்தையெய்தி
யெனைத்துளகாலந்தானுமென்றுளத்தேங்கியெய்ப்பர்
தனக்கயலுறவிலானைத்தவறுவரொன்றேதாமே

எ - து மனத்தினுலுங் காயத்தினுலுஞ்சிவஞானிக் குந்தவறுசெய்தநீதிகெடருந், தம்மினமாயுள்ளாரோடுங்கூடியெரிவாய்நரகத் தையடைந்துவேவுவர்கள் இங்ஙனமனுபவித்துத்தொலையுங்காலமெவ்வளவுளவோவென்றுமனமேங்கிவருந்துவராதலாற்றனக்குறவும் பகையுமில்லாதசிவஞானிகளையேன்றான் தவறுணைப்பர்கள். எ-று

[௨௯]

இதுவுமது.

மற்றையநரகபேதமனைத்தினுமயங்கிமூவேழ்
சுற்றமுஞ்சுழலத் தாமுங்கூடியேதுயங்கிவீழ்வ

---

* வேவார்என்னும்பொதுவிளையீண்டுடன்பாட்டின்வந்தது

சொற்றவரியமதாதரொமக்குறவாருமில்லை
வற்றமித்துயரந்தன்னையொழிக்கவென்றழிவருள்ளம்

ச - து அந்தத்தீயோர்முற்கூறியவெரிவாய்நரகமேயன்றிமற்றுள்ள நரகங்களெல்லாவற்றினுந்தங்குலத்திலுள்ளோரானவிருபத்தொருசுற்றமுங்கூடி யிரண்டுலகமரக்கலங்கியுணர்வுகெட்டுவீழாநிற்பர், அங்ஙனம்வீழுந் தந்தத்துடையம் பொருமனரகத்தின்றுங்கரையேறுந்தோறுமியமதூதர்கணின்றடித்தடித்து மீளவுந்துவர்கள், அதனாலேபித்துயரத்தையொழிப்பதற்குறவாயுள்ளோரொருவருமிலைமிதற்கென்செய்வோமென்றுமனமுஞ்சலிப்பர் எ-று [கூ0]

சிவஞானிக்கிடர்செய்யினரகவேதனையெய்துமாதலாலவரைவழிபட்டுய்கவென்றுணர்த்துகின்றார்.

ஆதலான்முனிவர்தம்மையவமதிசெய்யாதஞ்சிப்
பூதலத்தோர்கள்பூவாற்புனலினாற்பரிவுபொங்கப்
பாதபுசனையும்பண்ணிப்பணிந்தவர்பணியுஞ்செய்து
சாதனையிவர்களென்றுநாடுகவுளத்தெந்நாளும்

ச - து பொறிபுலன்களைமுனிந்தசிவஞானிகளுக்கிடர்செய்யின்நிரையத்துன்பமேதருமாதலாலுலகிலுள்ளோர்கள் அம்முனிவோரைநிந்தியாதுபயந்துபணிவிடைபுரியுமாறுமன்றி, பூவினாலுமவர்திருவடிகளைப் பூசைசெய்தவர்வியபணிவிடைஞ்செய்தெக்காலமுந்தம்முள்ளத்தின் கட்சிவனேயிவர்களென்றுசிந்திக்கக்கடவர் எ-று [கூ0]

சுசத்பாத்திரமாவாரின்றொன்பதுணர்த்துகின்றார்.

பகர்கின்றமுனிவமெய்ம்மைப்பாத்திரவிசிட்டந்தன்னைச்
சகலவிரன்னக்கோலஞ்சமைந்துதற்பரனைச்சாரா
ரகலவித்திப்பிறப்புமஞ்சாரவரபாத்திரங்களென்றே
மிகுதிமிகுதுவுங்கேணியினியுனக்கியம்பயாமே

ச - து வாராடகத்திபமுனிவனே முன்னஞ்சத்பாத்திரவிசிட்டத்தைச்சொன்னோமேல்அசத்பாத்திரமாவதியாதெனி லுலகத்திலுள்ளோரிவர்பெரியதபோதனரென்றுசொல்லும்வண்ணம்வேடத்தைத்தரித்துச்சுட்டுணர்வுக்கெட்டாதசிவனையடையாதவுமாபுள்ளத்தின்கட்சென்னமரணத்துக்குப்பயப்படாதவருமானவர்

யாவர்சிலர் அவர்களையசத்பாத்திரங்களென்று வேதாகமங்களி கழாநிற்குமிந்த அசத்பாத்திரத்திலேசெய்ததானம்விளைக்குந் தீமையுமேலுனக்கியாஞ்சொல்லாநி ன்றோமதனைநீகேட்பாயாக எ று [௩௨]

அவர்களுக்குக்கொடுத்ததானம்பலன்கொடாமலழியுமென்பதுணர்த்துகின்றார்

மெய்யனைவிழைந்துபாசப்பகையினைவென்றுயாமு
ழுய்யவேவேணுமென்னு முள்ளமிழந்துநின்ற
பொய்யனைப்புரிந்தபூசைபலத்தினைப்பொருத்துமோதான்
செய்ததுமவர்க்குப்பச்சைமட்கலநீரேதேரில்

எ து சத்தியசொரூபனான சிவனைவிரும்பியாணவமுதலிய பாசப்பகையினைச்செயித்துமுத்தராயாமுங்களையேறவேணுமென்று கருதுங்கருத்தைவிட்டுநின்ற வசத்தியற்குச்செய்தபூசை நல்விளைப்பயனைக்கொடுக்கமாட்டாது அதனையாராயின் அந்தவசத்பாத்திரத்துக் குச்செய்ததானம்பசுமட்கலத் தில்விட்டநீர்போலநில்லாதுடனேயழியும் எ று

தான் எ து அசைநிலை [௩௩]

இதுவுமது

பழுதறுவித்தேயேனு முவரிடைப்பயிரேயாகா
வழலிடையன்றிநீற்றினு குதிபலத்தையாக்கா
விழைவிலாவலியையேவுமெல்லியலின்பமேவாள்
வழுவுறுமவர்க்கேயீகைவரத்தினைச்செயுமோமாட்டா

எ து குற்றமற்றநல்லவித்தேயாயினு முவர்நிலத்தின்கண்விதைத்தாலதுபயிராகமாட்டாதவாறுபோலவும்அக்கினியின்கண்ணேயன்றி ச்சாம்பலின்கட்செய்தவாகுதிபலத்தைக்கொடுக்கமாட்டாத வாறுபோலவும்விரும்புதற்குரிமையில்லாத அலியினைப்புணரும்பெண்ணானவள் புணர்ச்சியின்பத்தைப்பெறாதவாறுபோலவுங் குற்றம்பொருந்திய அசத்பாத்திரமாயுள்ளார்க்கு க்கொடுத்ததானமும் பலத்தினைக்கொடுக்குமோகொடுக்கமாட்டாது எ று [௩௪]

சத்பாத்திரங்களையேற்றுமென்றும சத்பாத்திரங்களையேற்றுதென்றுமுவமைமுகத்தாலுணர்த்துகின்றார்

பாத்திரமாக்கிக்கட்டியிரும்பினைப்பண்டமேற்றி

[illegible]டியக்கவென்னுமடைவினையடையுமாங்கே
[illegible]தொடுத்த சிவபுரப்பாரம்பற்றும்
[illegible]வன்கட்டியிரும்பெனப்பாரம்பற்றான்

[illegible]மொருவரிருப்புக் கட்டியைத்தோணியாகப்பண்ணியதிலைப[illegible]
[illegible]யாற்றின்கண்விடும் போதுதாமெண்ணியகரையினைச்சேரும், [illegible]
[illegible]பாத்திரமானதும், தன்பாற்றானஞ் செய்தோணியுங்கொண்டு சிவபுரம[illegible]
[illegible]ச்சேரும், கட்டியாயுள்ளவிரும் புடன்பண்டத்தையுங்கட்டியாற்றி[illegible]
[illegible]வெல்லையிலேயழிந்திக் கரையடையமாட்டாதவாறுபோல, [illegible]
[illegible]மானவறுந், தன்பாற்றானஞ்செய்தோணிக்கரையடைவிக்கமாட்டா, [illegible]
[illegible]ச் சிவபுரமாகியகரையடையமாட்டான் எ-று

[illegible] - கரை

[illegible]

பாத்திரம்அபாத்திரமானவிருவரும்நரராயிருக்கவதிலொருவர்க்
[illegible]யுமாய்நன்மைதீமையைத்தருமாறென்
[illegible]னவினவ, அதற்கோர்விடையுணர்த்துகின்றார்.

[illegible]ச்சனமிற்காய்ச்சிக்கம்மியனலமுமாக்க
[illegible]மேற்றப்புனன்மிசையியங்குமெற்றே
[illegible]தொருபொருளுணர்ந்தாரற்றே
[illegible]ங்கடவுளையுணராக்கையர்

[illegible]வுளவனிருப்புக்கட்டியையக்கினியிலேகாய்ச்சித்தோணியா[illegible]
[illegible]ல்லபண்டங்களையுந்தரித்துக்கொண்டு நீரின்மேலே[illegible]
[illegible]ச்சிவனேடேயேகிபாவம்பொருந்திய வாசாரியன்தீக்ஷை[illegible]
[illegible]வொப்பிலாதசிவத்தை யுணர்ந்தஞானவான்கள், தமக்கிக்[illegible]
[illegible]ன்றுங் கரையையடைவிப்பதத்தன்மைத்தாம், ஆசாரிய[illegible]
[illegible]ஞ்சிவனையுணராத, அஞ்ஞானிகள், பணிப்படாத[illegible]
[illegible]யோப்பர் எ-று

[illegible]

[illegible]யாற்பாத்திரமென்பாரையுணர்த்துகின்றார்.

[illegible]பாத்திரத்தைப்பகாது ருகுதலேபற்றிக்
[illegible]லேகோடிப்பவர்க்கவர்கடாமும்
[illegible]ருடைப்பங்குபாலகர்மிடியர்நோயர்

மூத்தவர்கிருபணுதியிவர்களுமிரக்கமுற்றில் ❊

எ - து இவர்பாத்திரம், இவர், அபாத்திரம், என்றிரட்டுறக்கருதாதுள்ள நெகிழ்ச்சிபொருந்திமிகுந்தவாதரவுண்டாகவனையாதுகொடுப்போர்க்கியாவரிடத்திலுமிரக்கமேலிடின், முற்கூறியவசத்பாத்திரங்களுங் குருடர், முடவர் சிறுகுழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிகர், பேராசையுடையோர், முதலானவின்னோர்களும்பாத்திரமேயாம் எ று [௩௭]

இதுவுமது

உச்சியிலணைவாரெல்லாமுத்தமரென்றேயெண்ணி ❊
யர்ச்சனைபுரிகவன்பாலவலவூனுக்கைதன்னைக் ❊
கைச்சமலேசன்வாழுங்கடிநகரடைவாமென்று ❊
மிச்சையினியைந்தாரெல்லாமெண்ணியயாவுமேயும் ❊

எ து துக்கத்தைவிளைக்கும்பொல்லாதவுடம்பினைவெறுத்து நின்மலனாகியசிவனைமுந் தருளியிருக்குஞ் சிறப்பினையுடைய சிவலோகத்தை யடைவோமென்றுகருதுமாசையினோடேபொருந்தினோரெல்லோரும் உச்சிக்காலத்திலேபசித்துவந்தோரியாவரையும் பாத்திரங்களென்றேகருதி யவர்களையன்பினாலே யருச்சனைசெய்தன்னமுதலியகொடுக்கக்கடவர்அங்ஙனஞ்செய்யிற்றம்மனத்தின்கணினைத்தபலன்களெல்லாங்கைகூடும் எ று [௩௮]

தாதாவினதிலக்கணமுணர்த்துகின்றார்

பாத்திரமல்லார்செய்கையதனையும்பகர்ந்தாம்பண்பு ❊
வாய்த்ததாதாக்களாவார்தகைமையும்வகுத்துச்சொல்வா ❊
மோர்த்துணருதாரந்தாழ்ச்சியுறவனுகம்பங்கோபந் ❊
தீர்த்திடலென்னுமைந்துமுடையரேசிறந்தார்தேரில் ❊

எ து வாராய் முனிவரனே யசத்பாத்திரமானோரிலக்கணத்தையுஞ் சொன்னோம்மேல்நற்குணம்பொருந்தியதாதாக்கள்மேன்மையும்பிறித்துச்சொல்லாநின்றோமதனையாராய்ந்தறியக்கடவை யங்ஙனமவர்கள்முறைமையை யாராயிற்கொடைவணக்கமுறவுகிருபைபொறையென்றுசொல்லுமிந்த ஐந்துகுணமுமுடையார்களேதாதாக்களாவர் எ று [௩௯]

சிவஞானிக்கியுந்தன்மையுணர்த்துகிறார்

[illegible]லெருக்கிக்கை, இன்றல்லவோவெனதுகிரகஞ், சுத்தமாயிற்றென்றவரையுயர் [illegible]ப்புகழ்தல், அவர்களெழுந்தருளும்பொழுதுபதினாறடிகுறையாமற்சென்றுவ [illegible]கை, பெனக்கூறுமிவைகளேழுமுத்தியடைதற்குக்காரணமாம் எ-று

[illegible] - ஒழிபிசைக்கண்வந்தது, போந்தாலென்னும் வினைக்கு எழுவாய்வி [illegible]. [சச]

தாதாவுமவன்கையிலேற்றானுமடையும்பலமுணர்த்துகின்றார்.

[illegible]க்கமாதரவுகூரவிபவன்கையிலேற்று *
[illegible]ப்பனேயிந்தாறேடுசிசனதுலகமெய்தி *
[illegible]க்கமாதரவிலான் கையேற்றவனிந்தாறேடு *
[illegible]ப்பனேநினையந்தன்னுளெண்ணிமுன்வினையையெய்த்தே *

எ-து அருளுமாதரவும்பெருகக்கொடுக்குந் தாதாவின்கையிலேயேற்றவன் [illegible]த்தாதாவிறேடுஞ் சிவலோகத்திலேசென்றிருபபன்அருளுமாதரவுமில்லாத [illegible]தாவின்கையிலேயேற்றவன், அந்தத்தாதாவிறேடுநினையத்தின்கட்சென்று மு [illegible]செய்தபாவத்தைவிசாரித்துவாடியிருப்பன் - எ-று [சரு]

பெற்புண்ணியதலங்களையெடுத்தேழுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு.

[illegible]ருஞ்செய்கையர்தம்மையுங்கூறினம் *
[illegible]ருஞ்செய்கையர்தம்மையும்வெண்ணிற *
[illegible]ப்பாகன்விமலன்விரும்பிய *
[illegible]யுமிசைப்பாமினியாமரோ *

எ-து தாதாக்கள்முறைமையும் அதாதாக்கள்முறைமையும் வகுத்துச்சொன் [illegible]வெள்ளைநிறத்தையுடைய விடபத்தைச்செலுத்துவோனுமாய் நின்மல [illegible]னைவிரும்பியெழுந்தருளியிருக்கும் புண்ணியதலங்களையுந் தொகுத்து [illegible] எ று

[illegible]ப்பாகனென்பதனைவிடைக்கும் பாகனெனல்மெலிக்கும் [illegible]மெலித்தல் அரோ

அசை [ச'சா]

வேறு

[illegible]சிவகாசிகிழக்குருக்

கேத்திரம்பிரயாகைகிளரலர்
பூத்தபுட்கரணுதிபுனிதர்க
ளார்த்தகங்கையலைகடலாதியும்

எ து வெளி [சஎ]

கரப்பில்லாநைமிசாரணியங்கவின்
பருப்பதம்வேதபர்ப்பதங்கோகன்னம்
அரத்தமேனியரியரமம்பையும்
விருத்தவேதியர்வெண்ணையும்பெண்ணையும்

எ து வெளி [சஅ]

ஒற்றியூர்திருவோத்தூர்விளைவய
லுற்றவூறலுயர்புகழ்வான்மியூர்
வெற்றியூர்திருப்பாசூர்விரிஞ்சையுங்
கற்றுபுற்றினர்காரிவனையுமே

எ து வெளி [சகு]

கனகமார்முகலிக்கரைகாஞ்சிநல்
லனகராமுதுகுன்றருணாசலம்
முனிவர்சேர்குடமூக்கிடைமாமரு
துனருமுத்தனுரூர்புலியூருமே

எ - து வெளி [ருஎ]

காழிமூவலையாறுதென்கண்டியூர்
வீழிவேதவனந்திருவிற்குடி
வாழைமல்குவலஞ்சுழிவாஞ்சியந்
தாழைநீடுவெண்காடுசாய்க்காடுமே

எ - து வெளி [ருக]

எழிலுமார்பரங்குன்றிராமீச்சுரம்
பொழிலுமார்மதுராபுரிபூவணம்
அழகுமாருநெல்வேலியஞ்சைக்களங்
குழகன்புக்கொளியூர்கொலிக்குன்றமே

எ து வெளி (ரு உ)

கோதனங்கள்குவிந்தவிடங்களு
மாதபோதனர்வாழுமடங்களு
மிதில்வேட்கையர்க்கேய்விடமின்னுமுண்
டோதுவாங்காலபேதமுமோர்கவே

எ து இங்ஙனங்கூறியபுண்ணியதலங்களும்-பசுக்கள்திரண்டவெல்லைகளும் தபோதனர்களெழுந்தருளியிருக்குந்திருமடங்களு-மிதுபோலத்தானஞ்செய்கிறதிலேவிருப்பத்தையுடையோர்க்குப் பலனதிகமாதற்குப் பொருந்தியதலங்களின்னமுமுளதாம்.முறைமையானேயினிக்காலபேதங்களையுஞ்சொல்லாநின்றோமனவுகளையறிவாயாக எ று (ரு௩.)

காலவிசிட்டமுணர்த்துகின்றார்.

அரவமாதித்தன்றன்னையடர்ந்திட
விரவும்வேலையும்வெண்மதிதன்னையு
மிருமையானவயனமுமிப்பவர்க்
குரியவேலைகண்மற்றுமுண்டோர்கவே

எ - து வெளி—இருமையானவயனம் - தைமாதப்பிறப்பு-ஆடிமாதப்பிறப்புமற்றுமுண்டென்பதனால் - சித்திரைவிசு -- ஐப்பசிவிசு - அமாவாசி - பூரணை - திருவாதிரை -விதிபாதயோகமுதலாயினவென்க (ரு௪)

ஆதரவின்விசிட்டமுணர்த்துகிறார்.

உரைத்தனங்காலபேதமுமோர்கவுட்
சிரத்தைதன்னையுஞ்செப்புவஞ்சிந்தையுட்
பரித்தமெய்மைப்பரமப்பிரீதியே
குருத்தபத்தியுமற்றதன்கூற்றரோ

எ - து இங்ஙனங்காலவிதங்களுஞ்சொன்னோமேலுள்ளத்தின்கணுளவான வாதரவையும் - அதன்பரியாயத்தையுஞ் - சொல்லாநின்றோமதனையறிவாயாக ஆதரவானது - தம்முள்ளத்தின்கணுண்டமையோடுகூடினமேலானமகிழ்ச்சியெனவும் - பெருத்தவன்பு - எனவுமற்றமுள்ளபரியாயப்பெயரினையும்பெறும்- எ று

மற்றென்பதுசுட்டியதற்கினமென்பதனாலதற்கினமாகியசிவதன்மம்பாவமாதியென்னுமூன்றுமந்தவாதரவுக்குப்பரியாயப்பெயரெனவறிக அரோ - அசை - [௫௫]

மேன்முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

சிறந்ததேசமுங்காலமுஞ்சிந்தையுட் ❊
பிறந்தகாதலும்பெற்றவர்நற்றவர்க் ❊
கறைந்தநூல்விதியர்ச்சனையாக்குக ❊
நிறைந்துவானெனவேபலநீடுமே ❊

எ - து உத்தமமாகியகாசிமுதலியதேசமுங்-கிரகணங்கண்முதலியபுண்ணியகாலமு - முள்ளத் தின்கட்பொருந் தியமகிழ்ச் சிமுதலானவாதரவும் - எய்தப் பெற்றோர்நல்லதவத்தினையுடையசத்பாத்திரங்களுக்குவேதாகமங்களிற்சொன்ன விதிப்படியேயர்ச்சனைசெய்துதானஞ்செய்யக்கடவர் - அங்ஙனமவர்களுக்குச் செய்ததானபலன்களாகாசம்போலவிசாலமாய்ப்பெருகியழியாமனிலைபெறும் எ - று [௫௬]

வேறு.

என்றுபயன்மேன்மைதருகாரணமிசைத்தான் ❊
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ❊
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைநைய ❊
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே ❊

எ - து வெளி [௫௭]

சிவத்துதியுணர்த்துகின்றார்.

வானவர்நாடறுமாதவனேமானவிருட்டறுமாதவனே ❊
கானமர்வேடனுமானவனேகடிதெனவேசெலுமானவனே ❊
யேனமுமானவனெண்ணலனேயெம்முளத்தாக்கிடுமெண்ணலனே ❊
யூனமர்வெண்டலையுண்டவனேயுத்தமர்நெஞ்சகத்துண்டவனே ❊

எ - து மாலயன்முதலாயுள்ளதேவர்கள் - அறிதற்கரியபெரியதபோதனனே, ஆன்மாக்களுக்கியானெனதென்னுமபிமானமாகியவந்தகாரத்தையொழித்தற்குக்காரணமானஞானாதித்தியனே, அருச்சுனனுக்கனுக்கிரகஞ்செய்தற்பொருட்டுக்காட்டின்கணுறையும்வேடுவனாய்வந்தோனே, விரைந்துசெல்லுமிடபத்தையுடையோனே, வராகரூபியுமானதிருமாலறியப்படாதோனே, யெம்முடையவுள்ளத்தின்கணுண்டாக்குமுழுதுணர்வுமுதலாகிய வெண்குணத்தையுமுடையோனே, குற்றம்பொருந்தியபிரமகபாலத்திற்பிச்சையேற்றுண்டோனேயுத்தமரானசிவஞானிகளுள்ளத்திலனவரதமும்விளங்காநின்றவனே - எ-று [ருஅ]

இதுவுமது

புலிமுனிபூசைபுரிந்தவனேபுகழ்நடமன்றுபுரிந்தவனே ❋
பலிதருவார்க்கிதபாடணனேபாங்கிலர்வாய்க்கிதபாடணனே ❋
யலைறப்போதகவாரியனேயவிர்சடைத்தாங்கியவாரியனே ❋
மலைசிலையாக்கியவன்மையனேவந்துமரிப்பனவன்மையனே ❋

எ - து வியாக்கிரபாதமகாவிருஷிசெய்தபூசையைவிரும்பினோனே, யாவருமும்புகழாநின்றதிருநடத்தைஞானாகாசத்தின்கட்செய்தோனே, தாருகாவனத்திற்பிச்சைகொண்டுவந்திடுமாதர்க்கின்சொலைச்சொல்லுவோனே, உரிமையில்லாதபக்குவரிடத்துச்சாருவாகமுதலியகொடுஞ்சொல்லைச்சொல்லுவோனே, பக்குவான்மாக்களுக்குப்பிறவித்துன்பங்கள்கெடவேதாகமங்களைப்போதிக்குஞானாசாரியனே, யொளிவிடாநின்றசடாமகுடத்தின்கட்டரித்தபுனலையுடையோனே, மகமேருவைவில்லாக்கியவலியையுடையோனே, ஆன்மாக்களைப்போலுலகின்கட்பிறந்திறக்குந்தன்மையில்லாதோனே எ - று
சிதபாடணம் - தியசொல் - இதுவடமொழி [ருக]

வேறு - குமரன்றுதியுணர்த்துகின்றார்.

நினைவார்வினைநனிபோயறுநிலநீள்கதிரவன்முற் ❋
பனிபோவதுமெனவேபசுபதியோதியபனுவன் ❋
முனிதான்வினவியநாணனிமொழிவாய்மையன்முனியா ❋
தெனையாளுடையறுமாமுகனெழிலாரடியிணையே ❋

எ - து பசுபதியாகியசிவனருளிச்செய்தவேதாகமங்களையகத்தியமுனிவன்வினவியகாலைத் தபிகவுமுத்தரஞ்சொல் லுந்திருவாக்கினையுடையனாய், அபாரதி

யானவென்னைக்கோபியாது-அடிமையாகவாளுந்தன்மையையுடையவழகியவாறு முகத்தினையுடையோனது அழகுநிறைந்தத்திருவடியினையைத்தியானம்பண்ணுவோருடையகன்மமானது, பூமியின்கணுயர்ந்த ஆதித்தியன் முன்னுனபனிகெடுமாறுபோலமிகவுநீங்கி மீளவுமுண்டாகாது - அழியுமென்றவாறு. [௬௰]

அகத்தியன்றுதியுணர்த்துகின்றார்

விழைவாமிருவினையாயினவிடவுமிருள்கெடவும்
வழுவாகியமலிமாகடன்மரவேர்வலியறவு
முழையார்கரமுடையான்மழுவுடையானடிபுறவும்
புழையார்கரமதமாமலிபொதிமாமுனிபுகழே

எ - து உட்டுளைபொருந்தியதுதிக்கையையுடையமதயானைகணிறைந்தபொதியமாமலையின்கணிருக்குமகத்தியமாமுனிவனுடையதோத்திரத்தை - யிருவினைகள்விட்டுநீங்கவும் ஆணவவிருளினதுசத்திகெடவும் - ஈனமாகிய - அழுக்குமிக்கவுடம்பாகியவிருளுக்குத்துக்குவேராகியமாயாசத்திகெடவும் - மானுமழுவும்பொருந்தியகைகளையுடையோனுனசிவனதுதிருவடிகளைபபொருந்தவும் - விரும்புவாம் எ - று புகழ் - விழைவாமெனக்கூட்டுக [௬௧]

நான்காவதுபலவிசிட்டகாரணவியலுரைமுற்றும்



ஐந்தாவதுசிவதருமவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின் - ஒத்துநுதலியதூஉமோத்தினதுபெயருரைப்பவேவிளங்கும் - ஆயினிவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற் - புண்ணியத்துட்டலைமையாகியசிவதருமவியலென்னும்பெயர்த்து - இதனுளித்தலைச்செய்யுளென்னுதலிற்றோவெனின் - முன்மொழிந்துகோடலையுணர்த்துதனுதலிற்று

இனிமுனிவரனையீசனியம்பியதருமமெல்லாந்
துனிநனிதொலையச்சொல்வாந்துணிபிணியுடலைத்தொட்டே
முனிவினையின்றிநின்றமூடருமீடுகூடி
யெளையுடையீசனுரும்புரத்தினிதிருக்கவேய்ந்தே

எ - து வாராய்முனிவரின்மிக்கோ[illegible]
ன்றவியாதியான துசரீரத்தின்கட்பொருந்தி [illegible]
ல்லாதோருந், தவவலிபொருந்தியெனவையடிமை[illegible]
கத்திற்சென்றுமகிழ்ச்சியோடிருக்கும் [illegible]
மெல்லாவற்றையு, மிகவுமையந்திரிவுறமேற்கொள்ளாதின்றும், [illegible]
யாக - எ - று முனிவு - முயற்சி - யீடு - வலி

முற்கூறியசிவதருமம்நிலைதின்றுபகரிக்குமுறையுணர்த்துகின்றார்.

அற்புதனமலன்கூறுமறம்பலவாங்கிதாதி
கற்பொடுங்கலந்துநாறுபலத்தினைக்கருதுவார்க்குத்
தற்பரனருளினாலேதருவனவவைந்தகால
நிற்பனதொன்றுதொட்டேயன்பனாகிங்காப்பாங்கால்

எ - து கண்டோர்க்குஅதிசயத்தைவிளைப்பானாய்-தின்மலனாகிய - சிவ
னருளிச்செய்தவறங்கள்பலவுமுள அவற்றுட்கொள்ளாமைமுதலியவிதன்மங்கள்
பத்தும் - எல்லாத்தன்மத்துக்குமேலாய்ச்செய்தோனைப்பற்றிநின்றுகொண்டு
மையோடும்பொருந்திச்சிவனருளினாலேகாலுவிதமானபலத்தை[illegible]
விரும்பினபடியேகொடுக்கும் - அஃதுமன்றித்தம்மையியற்றுமன்பலர்க்கு[illegible]
ரிமையினாலேபிரவாகரூபியாகத்தொன்றுதொட்டெனவந்தகாலத்து[illegible]
நிலைபெற்றுநிற்பனவாம் எ - று

அந்தஅயிங்கிதாதியைவகுத்துணர்த்துகின்றார்.

அயிங்கிதைபொறையேமெய்ம்மையறுதலையாரியரேவ
யுபர்ந்தவாதரவேயுள்ளமொடுக்கலேகொடுக்கைதானே
வியந்தவர்ச்சனையேமெய்யுன்னெறுத்துறுதலைமேவேனி
நயந்தபாவனையேயென்னத்தசமிவைநன்றெங்காலும்

எ - து கொல்லாமையும்பொறையுஞ் - சத்தியவாக்கும் - [illegible]
மாகியபழிபாவத்துக்கஞ்சுதலும் - புண்ணியங்களிலே[illegible]
ளமுதலியவற்றையொடுக்குமடக்கமுடைமையும் - [illegible]
சொல்லுஞ்சிவார்ச்சனையும் - ஊனாகிறைத்தசரீரத்தைவிலைகொடுத்துச்செய்[illegible]
சதாசிவாதிவிக்கிரகங்களைவிரும்பினதியானமும் - [illegible] - [illegible]
த்தருமங்கள் - எக்காலமுந்நன்மையைத்தருவனவாம் - எ - று

முற்கூறியவற்றுள் - தமக்கியன்றமரியாதிசெய்தொருமம்அவைமுழு
தஞ்செய்தோருமம்பெறும்பயனுணர்த்துகின்றார்.

இயன்றனவியற்றினருமனைத்தையுமியற்றினருமம்
பயன்பலசிவலோகத்திற்பற்றுவர்தத்தம்பாங்கா
னயந்தவர்போகமங்குநண்ணுவர்திண்ணமண்ணைக்
கயந்தவர்போகங்காட்டுங்கடவுளையடைவர்கண்டே

எ - து — வெளி

[௪]

முதற்றொகுத்தவற்றைச்சிறப்பித்துணர்த்துகின்றார்.

இன்பமேயங்குத்தங்கியிருப்பவர்தமக்குமெள்ளுந்
துன்பமேதொடர்வதில்லைத்துளங்கிளம்பிறையுஞ்சூடு
மின்பொலிசடையன்வேந்தன்விளைத்தல்வினையாற்சேர்ந்த
வன்பர்கடலைவரல்லார்தம்பலமருந்துவாரோ

எ து அந்தச்சிவலோகத்தின் கட்போசத்தைப்பொசித்திருப்போர்க்கு மின்பமேயொழியவிடமுந்துன்பமானது தொடர்வதில்லை விளங்காநின்ற விளம்பிறையுமணியுமின்பொலிந்த சடாமகுடத்தையுடையகருத்தாவைத்தாம்செய்தநல்வினையினாலேயடைந்தமுத்தான்மாக்கள்கிருத்தியகருத்தாக்களாகார்கள்தமதுசிற்சத்தியின்பத்தையேதிளைத்திருப்பர்கள் எ று

பிறையுமென்றவும்மையாற்கங்கையினையுமெனவறிக

[௫]

சிவபூசைக்குவிசேடவிதியுணர்த்துகின்றார்

முனிவரதருமபேதமொழிந்தனம்பலமுமுன்னி
யினிவரமில்லாதாருமியற்றிடும்பூசையாவு
முனையுணைசெய்வாமோர்நீயொளிர்சடைமுடியிலூருந்
பனகமுமதியும்வைத்தபரனடிநினைந்துபாங்கால்

எ து வாராய்முனிவரனே கொல்லாமைமுதலியகருமங்களும்அவைபயிற்றின்பலத்தையுஞ்சொன்னோமேற்சிறப்பில்லாதாருஞ்செய்யும்பூசையுங்காலமுந் தேவயோனியட்டகத்திற்பெறும்பயனு மிவையெல்லாமுனக்குவாயறைசெய்துசொல்லாநின்றோமவற்றைநீவிளங்காநின்றசடாமகுடத்திலே யூருந்தொழிலைச்செய்யும்பாம்பையுமிளம்பிறையையுங்கூடத்தரித்த சிவனதுதிருவடிமலரைநினைந்தொரு

ப்பாட்டினேடேயறிவாயாக எ று

உனையென்னுமையுருபுகுவ்வுருபாய்மயங்கிற்று [சு]

குற்றத்தோடுகூடியொருநாண்முதலொன்பதுநாளீருகச்சிவபூசை
செய்தோரதற்கதற்குரித்தாகப்பெறும் பயனை யொன்பது செய்யு
ளாலுணர்த்துகின்றார்

அழுக்கினையறுக்கவல்லரல்லராயாகந்தன்னி ❊
லிழுக்குடையவருமீசனினையடிக்கொருநாளிட்ட ❊
பழுப்பிலைப்பாங்கினாலேபற்றியேபைசாசத்தை ❊
யுழுக்குமுன்விதத்தையுண்டுகளிப்புறவுறைவருள்ளே ❊

எ து சரீரத்தினசுசியை நீராடன்முதலியவற்றாற் போக்கமாட்டாதவருமாயழுக்காடையுடுக்கு மவரானமலினர்களும் ஒருநாட்சிவனது திருவடியினை யின்கட்கொம்பினுமுதிர்ந்த பழுப்பிலை கொண்டருச்சித்த நன்மையினாலே பேயினது தன்மையை யடைந் தூசினமாங்கிசங்களை பொசித்துள்ள மகிழ்ச்சி மேலிடப்பைசாசபுவனத்தின்கணிருப்பரொன்றவாறு

ஈண்டுக்கூறியபைசாசம்புத்திதத்துவத்திற்பைசாசயோனியெனவறிகஉழுக்குமூன் கழியுமூனென்றுசொல்வாருமுளர் உள் எ து இடம் [எ]

சினத்தினாற்சிவந்தகண்ணார்சிறப்புறுவினையுந்தீர்ந்த ❊
மனத்தினாரிரண்டுவாரமலர்சிவனடியின்வைக்கிற் ❊
றனக்கினையில்லாதாருமவர்தமைச்சாரச்செய்வன் ❊
றுனைத்தெழுமரக்கர்தொக்கபுரத்தினுட்டுளக்கந்தோயார் ❊

எ - து கோபத்தினாலே சிவந்தவிழியினையுடையோராய்விசிட்டமானநல்வினையையுஞ்செய்யாதமனத்தையுடையோருமானவர்கள் - இரண்டுநாட்சிவனதுதிருவடியின்கண்மலர்களைக்கொண்டுபூசைசெய்யிற்றனக்குநிகரில்லாதசிவனும் - அவர்களைவினைவினெழுந்துசஞ்சரிக்குமிராக்கதர்திரண்டிருந்தவுலகத்தின்கணிருக்கும்படிவைப்பன் - அவர்களொன்றுக்கும்பயப்படார்கள் — எ - று [அ]

கயக்கவேதக்கவூனுங்கலந்துணுங்கடியர்தாமும் ❊
வியக்கவேதக்கவீசன்விணாமலரடியின்மீது ❊
பயக்கவேபலமுமுன்றுபகலருச்சனையைப்பண்ணி ❊

லியக்கர்தபுலகந்தன்னிலிருத்துவனவரையெல்லாம்

எ - து வெறுக்கத்தக்கபுலாலையுமடிசிலோடுகூட்டி நுகருந்தியோர்களை
கண்டோராலதிசயிக்கத்தக்கசிவனதுநறுநாற்றத்தையுடையதாமரைமலர்போன்
சீபாதத்தின்கண்மேன்மைதரும்படிமாங்கனிமுதலிய கனிகளைக்கொண்டுமூன்று
நாட்பூசைசெய்யிலச்சிவனவர்களையெல்லாமியக்கருலகத்தின்கணிருக்கும்படிசெ
ய்வன் — எ - று

உம்மையிழிபின்கண்வந்தது, ஏகாரங்கள் - அசைநிலை [கூ

காமரங்கற்றாரல்லர்பரதமுங்களிப்புக்கூரத்
தாமரன்முன்னேநின்றுதட்டமுமிட்டுக்கையாற்
பாமரபறியாரேனும்பாட்டொருநான்குபாடி
லேமமுமிசையவாழ்வர்காந்திருவத்தையேய்ந்தே

எ - து கானவித்தையும்பரதநூல்விதியாற்செய்யுங்கூத்தும்பயின்றறி
யாதவர்களு, நாலுநாட்பூசைசெய்துசிவசன்னிதியிலே நின்றுள்ளக்களிப்புமிகக்
கூத்துமாடிக்கையாற்கொட்டுதலுஞ்செய்துகீதத்தையும்பாடிவணங்கில், அவர்க
ள்காந்திருவபுவனத்தையடைந்தின்பமுண்டாகவாழ்வார்கள் — எ - று

நாள் - நான்கென்றது - எண்ணதிகாரப்பட்டமையால்வருவித்தது [ய

இவர்சிவபூசைபண்ணுமியல்பினொன்றுதம்மைப்
புவிதலம்புகழவேண்டிப்பூசனைபுரிந்தார்தாரும்
அவனரனடியிலஞ்சுதினமளவலரினாலுந்
✠ திவிதலபோகம்பதந்தனைப்பரிந்திரனைச்சேர்ந்தே

எ - து இவர்சிவபூசைசெய்யும்பெருமையையுடையோரொன்றுதம்மை
பூதலத்துள்ளோர்கொண்டாடவேண்டியந்தச்சிவனதுதிருவடிகளிலே யஞ்சுநாட்
பூமுதலியவற்றினாலேபூசைசெய்தோர்களும், ✠அயிந்திரபுவனத்தைச்சேர்ந்து சுவ
ர்க்கத்திலுள்ளபோகவிதங்களையனுபவிப்பர் — - எ - று

உம்மையிழிவுசிறப்பு [ய௪

✠ திவி - சுவர்க்கலோகம் ✠ அயிந்திரம் - இந்திரசம்பந்தம்

எ து கோடிசூரியருதையஞ்செய்த பிரகாசம்போலவிளங்காநி
களிப்வளவென்றளவிடுமளவைக்கடந்தழகு பொருந்தவெங்குநெருங்
வபுரமானது அவ்விடத்திருப்போர்தங்கண்மனநினைவின் கண்விரும்ட
ங்களையும் வாய்க்கும்வண்ண முண்டாக்கு மாகையினாலே தனக்குங்க
ளெழுந்தருளியிருக்குஞ்சிவபுரத்தின்வளப்பத்தையொருவராலு மள
ல்லப்படாது எ று ஏகாரம் எதிர்மறை

சிவனெழுந்தருளியிருக்குந்திருப்பதியின் மரித்தவான்மவர்க்
ள்சிவலோகமடையுமென்றாற் சிவனையன்போடுகூடி ப்பூசை
தோர்சிவலோகமடைவது சொல்லவேண்டாமே யென்பது
துகின்றார்

தெரிப்பருந்தேவதேவன் றிருப்பதிவட்டந்தன்னின்
மரித்திடுஞ்சராசரங்கள் சிவபுரமதனுள்வாழு
மநுச்சனைபுரிந்தமற்றை யன்பர்களடைந்துவாழ்கை
தெரித்திடவேண்டுமேயோ தெருண்டநற்சிந்தையார்க்கே

எ து வெளி

கண்டுபாவித்துப்பூசைசெய்தோர்பெறும்பயனுணர்த்துகின்

உண்டொரொண்பொருளென்றுள்ள த்தோர்கிலார்தாமுமே
பண்டிதர்பணியக்கண்டு பணிந்திடிற்பரமவென்னிற்
றண்டரளங்கள்போலுந் தாரகாதேசந்தன்னில்
எண்டிகழ்நாலேழ்கோடி யிரதபேதத்துளேய்வார்

எ து சடசித்துக்களெல்லாவற்றினையு மாளுமொரு ஒள்ளிய கட
ன்றுதம்முள்ளத்தின்கண்ணறியாதமூடரும் அந்தப்பொருளை யுண்டெ
தஞாதாக்கள்வணங்கக்கண்டுதாமும்வணங்கினும் பரமவென்று துதிப்
கள்குளிர்மையுடைய முத்துக்கள் போலுமொளியினையுடைய நக்ஷத்
லே எண்டொகைவிளங்காநின்றவிருபத்தெட்டுக்கோடி விமானங்கள்
வேபொருந்திவாழ்வர் எ று

சிவதன்மங்களைத்தமக்கியன்றமரியாதிசெய்தோர்பெறும்பயனு
ர்த்துகின்றார்

இயன்றன வியற்றினரு மற்றையபுரத்திலேய்ந்து
பயன்றனைப்பயின்றுமீண்டு பாரிடைப்பிறந்துபாங்கான்
முயன்றருந்தவத்தைமூவா முதல்வனையகத்துண்முன்னி
யயன்றனைப்பயந்தவாறி யரன்புரியடைவரன்றே

எ து தமக்கியன்றமரியாதிசிவதன்மங்களை ச்செய்தோர்களும் வைகுண்டம் முதலியகீழுள்ளபதங்களிற் போகத்தைக்கிரமத்திலே பொருந்தி யங்கங்குள்ளது பொசித்துத்தொலைந்தவாறே மீளவும்பூமியின்கண்வந்துபிறந்து முதிராமலென்று மொருதன்மையாயிருக்குஞ் சிவனையுள்ளத்துட் கருதிச்செயற்கரியதவத்தையொருமைப்பாடுடனேசெய்து பின்பு நான்முகனைப்படைத்தமுதல்வனாகியசிவனதுசிவலோகத்தையடைவர் எ று அன்றே எ து அசை (உ௰

இங்ஙனங்கூறியசிவலோகத்தின் மேலுமூன்றுபுவனமுண்டென்று
தொகுத்துணர்த்துகின்றார்

உலைந்தவிப்புரத்தின்மீதும் புரமொருமூன்றுண்டோர்க
தரித்தமேவற்குமரன்றங்குந் தானமொன்றதற்குமீது
பரித்தபைங்கிள்ளைச்செங்கை ப்பாவைதன்பதியொன்றப்பாற்
றெரிப்பருந்தேசாரீசன் சிவபுரஞ்செப்பாமொப்பே

எ து முற்கூறியவிந்தச்சிவலோகத்தின் மேலுமூன்றுலோகமுளதாம் இதனையறிவாயாக அஃதியாதெனிற் கையின்கண்வேலையேந்துங் குமரக்கடவுளெழுந்தருளியிருக்கும் புவனமொன்று, அதற்குமேலே பச்சைக்கிளியைச் சிவந்தகையிலேதாங்குமுமையினது புவனமொன்று அதற்குமேலே யளவிறந்த பிரகாசத்துடனேகூடியிருக்குஞ்சிவனதுமகாசிவலோகம், அதற்கிணையொன்றுமில்லாமையால் வேறொன்றையொப்புச்சொல்லோம் எ று (உ௧)

அவற்றுண்முற்கூறிய கந்தபுவனஞ் சத்திபுவன மிரண்டினையுமடை
வாரின்னொனவிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

சத்தியைத்திரிசூலத்தை த்தரித்தபொற்கரத்தினனை
வித்தகன்றன்னைப்பொன்னை யொத்தொளிர்மேனியானை

முத்தனை முளைத்தவாறு முகத்தனை முதல்வன்றன்னை ❊
மொய்த்தகண்மயிலின்மேலை முருகனை முன்னுவாரோ ❊

எது வெளி (உஉ)

இருப்பர்கள் குமரன்வாழு மெல்லையிலெல்லையில்லா ❊
விருப்புறப்போகபேத மேவிடவிதற்குமீதே ❊
யிருப்பர்களுமையைத்தங்கள் கருத்தினுளிருத்தினார்கள் ❊
பொருப்பெழுமருக்கர் கோடிநிறமெனப்புந்திசெய்தே ❊

எது முற்கூறியசிறப்பினையுடைய குமரக்கடவுளைத்தியானஞ்செய்வோர் அந்தக்குமரன்வாழும் புவனத்திலே சென்று தாங்கள்விரும்பிய படியே யளவிறந்த போகங்களெல்லாம்பொருந்த விருப்பார்கள் உமாபரமேசுவரியையுதையகிரியின் கண்ணுதிக்குங்கோடிசூரியப்பிரகாசம்போலத்தியானஞ்செய்து தம்முள்ளத்தின் கண்வைத்தோர்கள் அந்தக்கந்தலோகத்துக்கு மேலானஉமாபுவனத்தின்கணிருந்துவாழ்வர்கள எ று (உக)

மேனிறுத்தமுறையானே மகாசிவலோகத்தின் கணுறை வாரின்ன
ரெனவுணர்த்துகின்றார்

தெளிபளிங்கனையமேனி திரிநயனங்கைத்தங்கு ❊
மொளிவளர்சூலமாலை யுதாரகையபையவங்கை ❊
நளிசடையுடையநாதனடியினை யகத்துணச்சி ❊
யுளினருமவனையொப்பச்சிவபுரத்துறைவருய்ந்தே ❊

எது அழுக்கற்றுநின்மலமான படிகம்போன்ற திருமேனியையு மூன்றுதிருநயனங்களையுமொளிவளராநின்றசூலமுஞ் செபமாலையும் பொருந்துமேலிற்கைகளிரண்டினையும் வரதமும்அபையமும்பொருந்தியகீழிற்கைகளிரண்டினையு மொருங்கியசடாமகுடத்தினையு முடையசிவனதுதிருவடியிணையை யுள்ளத்தின்கண்விரும்பித்தியானிப்போரு மந்தச்சிவனுக்குநிகராக ச்சாரூபம்பெற்றுமகிழ்ச்சியடைந்து மகாசிவலோகத்தின்கணிருப்பர் எ - று

உளினருமென்றவும்மையால்வணங்குவோருமெனவறிக (உஙு)

மகாசிவலோகத்தையடைந்தோர் மீளப்பூமியின்கட் பிறவாமன் முத்தியை யடைவரென்றுணர்த்துகின்றார்

மேலையசிவலோகத்துள் விரவினொருமைமேவி
நூலையுமடையார்நூலவிறுதியை நாசமாக்குங்
காலையுமணையவுள்ளக் கறுப்பினையறுத்துக்காட்டு
மூலபண்டாரந்தன்னை முகந்துகந்திருப்பர்முத்தர்

எ று மேலாயவிந்தச்சிவலோகத்தின்கண் அடைந்தோரவ்விடத்திலேதானே ஞானயோகத்திலொருமைப்பாட்டைப்பொருந்திமீண்டு பூமியின்கண்ணும்பிறவாராய்ச் சிவாதிபிருதுவியந்தமானவெவற்றினையுநசிப்பிக்குஞ்சங்காரகாலம்வரும்பொழுதுதம்முள்ளத்தின்கட்கரியவிருளான வாணவபாசங்களை யொழித்துச்சிவமாலைகாண்பிக்குமூலபண்டாரமாகிய ஞானானந்தசுவானுபவத்தைப் பொருந்தித் தலைமைபெற்றுமுத்தராயிருப்பர் எ று

மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே என்பதனாலறிக [உரு]

மேல் மாட்டெறிந்தொழுகலென்னுந் தந்திரவுத்தியாற் பைசாசமுதலாயினோர்க்குச்சித்திபேதங்களை யுணர்த்துகின்றார்

அந்தியவியலினுக்குமயலயலியலின்யோக
பந்தியைப்பகர்வாமெட்டுச்சித்தியும்பரிவுகூர
விந்தநல்லியலினுள்ளு மெட்டெனப்பட்டசித்தி
முந்தியேபைசாசாதி க்குறுமுறைமொழிவாமோர்ந்தே

எ று ஈற்றினின்ற கோபுர வியலுக்கு மதற்கயலாகிய பரிகாரவியலுக்குமயலானசிவஞானயோகவியலிலேயட்டாங்கயோகவொழுங்கினையு மதனாலுண்டாம

✠ பூதம் ௫ புலன் ௫ ஞானேந்திரியம் ௫ கருமேந்திரியம் ௫ அந்தக்கரணம் ௪ ஆக ஆத்மதத்துவம் உ௰௪ காலம் நியதிகலை வித்தை இராகம் புருஷன் மாயை ஆக வித்தியாதத்துவம் ௭ சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்திசிவம் ஆகச்சிவதத்துவம் ௫

திருவாசகம் திருப்பாண்டிப்பதிகம்

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டாமெனுநான்முகன்வானவர்ஈண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே

[illegible]

[illegible] (௧ ௩)

[illegible]

[illegible]

[illegible]

க்குபாதானமானபிரகிருதியுமெனக்கூறுமிந்தவொன்பதுதத்துவங்களுஞ்சேந்தா மரைக்கண்ணையுடைய நாரணனைப்பொருந்தி யவனிதையத்தினுள்ளேமிகவுஞ்செறிந்துநின்றறிவைவிளக்காநிற்குங், குணநீங்கலாகநின்றவெட்டுத்தத்துவங்களை யழகியதாமரைமலரின்கணிருப்போனானான்முகனுடையவிதையத்தினுள் ளே பொருந்தி நின்றறிவைவிளக்கும் எ - று

அன்று - எ - து - அசை [உஅ]

புந்தியையல்லாவெல்லாம் பொருந்தியபிரசவேந்தன் ❊
சிந்தையைத்தெருட்டுமிந்த த்திறத்தினிற்கீழுந்தோர்க ❊
முந்தியேயிருந்தார்பேற்றை முற்றியவினையினாலே ❊
பிந்தியேசெறிந்தார்தாமு மகிழ்வுறப்பெறுவரன்றே ❊

எ து புத்திதத்துவமல்லாத கீழ்நின்றவேழுந் தம்மைப்புணர்ந்தபிராஜேசனது சித்தத்தைப்பொருந்திநின்றறிவைவிளக்கு,மிந்தப்படியேகீழுள்ளபுவனத்தோர்க்குமடைவிலொவ்வொருதத்துவங்குறைந்துநின்றறிவை விளக்குமென்றாராயக்கடவையிப்பதங்களிலேமுற்காலத்திலேசென்றிருப்போர்பெறும்பயன்களைப்பூமியின்கண்செய்தநல்வினையினாலேபின்புசென்றடைவோருமுள்ளமகிழ்ச்சியுண்டாகப் பெறுவர் - எ - று - [உகூ]

சிவனைக்குறித்துச்செய்ததுபழுதுபோகாதுபலத்தைவிளைக்குமென்றும்பலத்தைக்கொடுப்பன்சிவனென்றுமுவமைமுகத்தாலுணர்த்துகின்றார்.

தனையினையிலக்கதாகவெறிந்தகற்றவறுதற்றே ❊
யரனையுங்குறித்துச்செய்தவினைபழுதாகாதற்றே ❊
பரமனுஞ்செய்தார்செய்திப்பலத்தினைக்கொடுப்பன்பாங்காற் ❊
குருலகுவென்னும்பேதம்வினைதொறுங்குறித்துக்கொண்டே ❊

எ - து வெளி - இதனுள் - குரு - எ - து - அதிகம் - லகு - எ - து அற்பம் [௨௫]

மேன்முடிந்தநுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

[௨௬]

எ - து எந்நாளுமேகக்கணிறைந்துவானமெங்கும்பொருந்திய பொதியமலைக்கண்வாழும் அகத்தியமுனிவனது கீர்த்திவையகமெங்கும்பரவி அதிற்பிறந்தோரனைவரும் பொன்றவிரன்றிகண்ணிலையுடையமடவாரமுமுலையிலைகளைப்புணர்த்தலைமேகமுமாகிழார், அஃதன்றியவர்கமக்கன்னியரிவர்கமக்கன்னியரல்லரென்றுகூறுமனைத்தையுமிகவுமாகிப்பார், அஃதன்றிவிளாவலம்பொருந்தியமல்லைநகரிக்கண்வாழுநின்மலனனைவனது மலைம்பொருந்திய [illegible] மலையாகிய [illegible]கன்வையமுடையோரானவர் எ - று

விளாவுதலுடையோரானவர் - [illegible]

விலையாகக்கொள்க - [illegible] - [illegible]

ஐந்தாவது சிவகுருமணியமாலை முற்றும்

ஆறாவது பாலவியல்

மேலிவ்வொத்தென்னுதலிற்றாலெனின்றொத்துதுதலியதாகமேல்
த்தினதுபெயருணர்ப்பலெனின்றும் - ஆயினிவ்வொத்தென்னு
பெயர்த்தோவெனினிளையமெய்துவோரியற்றும் பாலுபெறுதல்
னைக்கூறிற்றாதலாற்பாலவியலென்றும்பெயர்த்து. இதனானிற்
லைச்செய்யுளென்னுதலிற்றாலெனின்னு [illegible]
மொழிந்துகோடலையுணர்த்துதலுதலிற்று.

முனிவரதுருமபேதமொழிந்தனம்பலங்கண்முற்று
மினிவிளையத்தைதியம்வாரியற்றிடும்பாலபேத
முனையுணர்செய்வாரோர்கியடனிறுவாயினைந்தும்
துனிவிளைத்துவிசுகங்கக்கேட்டுமிந்நூற்செயம்பக்கும்

எ - து வாசகநுகுகளின்பக்கேளாகவே, முன்னிலையுட் சிவகுரு
லையமலற்றி அறுவகைப்பாலன்கெனவற்றிலையுந்செய்தான். மேலிவ்
யும்யுதிற்றுக்கேட்டுங்குருத்திலையுடையோர்க்கு, மாணவர்க்குக்கூ

ண்டாகும்பொல்லாததீவினைத்துயரநீங்கும்வண்ணநரகமெய்துவோர்செய்யும்பாவபேதங்களைபுனக்குச்சொல்லாநின்றோ, மதனைநீகேட்பாயாக எ - று உன்னையென்னுமிரண்டாமுருபு நான்காவதாய்மயங்கிற்று [க]

பாவஞ்செய்வோரின்னரென்பதூஉமப்பாவபேதமித்துணைத்தென்
பதூஉமுணர்த்துகின்றார்

புரிந்துளார்பாவமுன்னும் புக்குமாநிரையமீண்டு ❊
மிருந்தவர்தனையிறுலே யியற்றுவர்பாவம்பின்னும் ❊
விரிந்திடுமனேககோடி விதமுறப்பாவமெல்லாந் ❊
தெரிந்திடிற்றூலமாதி திரிவிதமாகிச்சேரும் ❊

எ து முற்சொன்னதிறும் பாவத்தைச்செய்தோர்கள் நரகத்தின்கட்புகுந்தனுபவித்துத்திரும்பவுமந்தவாசனுபலத்திறுலேபூமியின்கட்சென்றுப்பின்னும்பாவத்தையேசெய்வர்கள் அந்தப்பாவவிதங்களைவிரிக்கினனேககோடிவிதமாக விரியுமதனைத்தொகுத்தறியிற்றூலமுதன் மூவிதமாகிப்பொருந்தும் எ று [உ]

தூலமாதியிவையென்பதூ உமவற்று ட்டூலகன்மமேயீண்டு க்கூறு வதூஉ
மென்பதுணர்த்துகின்றார்

தூலமேசூக்கந்தானே சூக்குமதரமேயென்றிங் ❊
கேலவேமூன்றுகூறு மிவற்றினுட்டூலந்தன்னைக் ❊
கோலியேதொகுத்திந்நூலிற் கூறுவமஃதுங்கூறின் ❊
மாலுறுமனமேவாக்கே வாடுவமேயெனவுமூன்றும் ❊

எ து முற்கூறியபாவவிதந்தூலமென்றுஞ்சூக்குமமென்றுஞ் சூக்குமதரமென்று மிவ்விடத்து மூன்றுபேதமாய்ப்பொருந்துமிந் தமூன்றினுள ளுந்தூலபேதத்தையேயமைத்துத்தொகுத்திந்தநூலின்கட் சொல்லாநின்றோம் அதனையறியுமிடத்துமயக்கம்பொருந்தியமனத்தாலும் வாக்காலுங் காயத்தாலும்வருவனவென மூவிதமாம் எ று

ஏகாரங்கள் எண்ணின்கண்ணும்அசைநிலைக்கண்ணும்வந்தன [௩]

மூதற்கட்டொகுத்துப்போந்தமரதிகண்மூன்றுமொவ்வொன்றுநந்
நான்குபேதமாமென்பதூஉமவை கொடுக்கும்பயனிஃதென்பதூஉ
முணர்த்துகின்றார்

பேசியதூலபேதந் தனித்தனிநான்குபேத
மூசமுந்நான்குபேத முற்றுமம்மூன்றுமின்னு
மாசிலோரறியும்வேலை விரிந்திடுமனேகமாக
நாசமாநரகபேதத்துயரினை க்கொடுக்குநாளின்

எ து முன்னர்க்கூறியதூலபேதமென்னு மரேவாச்சு[illegible]
ன்றுநாலுவிதமாம் அவையிற்றைத் தொகைகாண ப்பன்னிர[illegible]
மந்தமதிகண்மூன்றுங்குற்றமற்றபெறியோர்களராயுங் கா[illegible]
மாகவிரியு மங்ஙனம்விரியும்பாவபலம் நரகவிதங்களிலே பா[illegible]
கத்தைவிளைத்தனுபவித்துத்தொலைந்தவாறேதாம்நசிக்கும் [illegible]

நிறுத்தமுறையானே மனத்திலுண்டாம் பாவவிதங்[illegible]
வையென்பதுணர்த்துகின்றார்.

அன்னியன்மனையாடன்னை யணையுமாதரவுகூ[illegible]
வுன்னுதலபலார்தங்களுடைமையுங் கொள்ளவுன்னல்
பின்னையுமவர்தம்பண்டம் பிறையுறுவிக்கப்பேணை
லென்னுமிம்மூன்றுங்கொல்ல வெண்ணலுமனத்தினீட்[illegible]

எ து பிறனொருவனுடையமனைவியை க்கூடவேணுமென்[illegible]
ற்கேற்றசெயல்களைநினைத்தலும் பிறருடையவுடைமையை [illegible]
ளுதற்குவிசாரித்தலும் அவர்களுடையவுடைமையை ச்சே[illegible]
பிறிதொருயிரைக்கொல்லநினைத்தலும் ஆகநான்குமனத்தினு[illegible]
ங்களாம் எ று

வாக்காலியற்றும் பாவங்களுன்குங்காயத்தினாலியற்[illegible]
ன்குமிவையென்பதூஉம் பின்னருமமுதிகளாலதிபா[illegible]
னவிரியுமென்பதூஉமிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்[illegible]

அழுகையுங்கோளும்பொய்யு மயலபவாதந்தானும்
வழுவியவாக்கின்பேத மற்றையன்மனையாடோளைத்
தழுவுதறமித்துக்கோறல் சராசரபேதந்தன்னைப்
பழிபடுபண்டமுண்கை பரர்பொருளதனைப்பற்றல்

எ து அகாரணத்தா லழுகையுங் கோட்சொல்லும் பொய்யுரைத்தலும் பிறன்பழிகூறலுமான விந்நான்கும் வாக்கினால்வரும்பாவ விதமாம் பிறனொருவன்மனைவியைப்புணர்தலு நடப்பனவுநிற்பனவுமானவுபிரின்விதங்களையடித்துக்கொல்லுதலும்நல்லோரானிந்திக்கப்படுமுணவுகளையுண்டலும் பிறர்பொருளைக்கவர்தலும் எ று

[௬]

என்னுமிந்நான்குங்காய த்தீட்டியபாவபேதம்
பன்னிருபேதமாக மனுதியைப்பகர்ந்தாமின்னு
மன்னியமனுதிமூன்று மலினதிபாதகாதி
யென்னவேவிரியுநொய்தி னவற்றையுமியம்புவாமே

எ து இப்படிமுற்கூறியகன்மநான்குங் காயத்தினால்வரும்பாவவிதமாமிப்படியேமனவாக்குக்காயங்களால் வருந்தூலபாவவிதங்களைப்பன்னிரண்டுவிதமாகச்சொன்னோம், அஃதன்றியின்னமு நிலைபெற்றமனுதிகள் மூவிதத்தாலுமமுக்கினையுடையவதிபாதகமுதலிய பாவங்களுண்டாகும்வண்ணம்விரிவனவாமவற்றையுஞ் சுருக்கமாகச்சொல்லாநின்றோம் எ று

ஆதியென்பதனால் மகாபாதகமு முபபாதகங்களுமவையிற்றினது துல்லியங்களுமெனக்கொள்க

[எ]

முதற்கட்டொகுத்தவற்றுளதிபாதகமீதென்பதுணர்த்துகின்றார்

தாரகன்றன்னைச்சாத த்தடங்கடற்றளர்வார்தம்மைப்
பாரகன்றனையும்பாரும் படைத்தவன்றனையும்பாங்காற்
கரரகன்றன்னைவாங்குங் கடவுளைக்கயந்தநெஞ்சர்
நாரகர்மீளுநாளும் பிறிதியனவிற்றுவாமே

எ து பிறவியாகியபெரியகடலின்கணமிழ்ந்தி வருந்துமவரை யக்கடலினின்றுங்கடப்பிக்குமவனாயுலகத்தைத்தாங்குமவனான மாயனையும் யோனிபேதங்களையுமன்றிப்பிருதிவிமுதலிய பஞ்சபூததூலகாரியங்களையுஞ் சிருட்டிக்குமவனானான்முகனையு முறைவழுவாமலுண்டாக்குங் காரணசொரூப னாயவர்களிருவரையுமீளத்தன்னிடத்திலொடுக்குஞ் சங்காரகருத்தாவாயிருக்கிற சிவனைத்தூஷணஞ்செய்திகழ்ந்தமனத்தினையுடையவதிபாதகர் நரகத்தின்கண்ணெடுங்காலங் கிடப்பர்க

ள், அதினின்றுமவர்கள் திரும்புங்காலத்தை வலையறுத்திந்தவியலுக்கயல்
வர்க்கநரகவியலின்கட்சொல்லாநின்றோம் எ று

தாரகன் கடப்பிப்போன், பாரகன் தாங்குமவன், காரகன பண்ணு
நாரகர் நரகத்திற்கிடக்குமவர்கள்

இதுவுமது

ஒப்பிலியனாதிமுத்த னோதியவேதமாதிக்
கொப்புயர்புனைப்பார்நிந்தையுனைப்பவருன்னுவாரும்
வெப்பரிநிரையந்தன்னுள்வீழ்ந்துவெந்துருகிவீயா
ரெப்பொழுதேறுவாமென்றிளைத்திளைத்தேங்குவாரே

எ - து தனக்குநிகரில்லானாயனாதிமலமுத்தனானசிவன்றானிச்செய்த
கமங்களுக்கொப்பாகவுமதற்கதிகமாகவும் பிறிதொருநூலைச் சொல்லுமவ
ந்தவேதாகமங்களை நிந்தைசொல்லுமவரு, நிந்தையைமனத்திலேநினைச்
ம், வெம்மையையுடையவெரிவாய்நரகத்தின்சண்வீழ்ந்துடம்பெல்லாம்
னெலாமுருகியிங்ஙனந்துயருறவுமந்தயாதனாசரீரத்தினின்றுநீங்காராயிந்
தினின்றுமெக்காலங்களையேறுவோமென்றுவாடிவாடியேக்கமுமடைவர்

வீயாமை - யுயிர்விடாமை

இதுவுமது.

ஒப்பிலியனாதிமுத்தனோதியபனுவலோர்ந்து
தப்பறச்சாற்றுமாசான்றன்னையுமிகழ்ந்துசாற்றில்
வெப்பெரிநிரையந்தன்னில்வீந்துவெந்துருகிவீயா
ரெப்பொழுதேறுவாமென்றிளைத்திளைத்தேங்குவாரே

எ து தனக்குநிகரில்லாதவனாதிமலமுத்தனாகிய சிவனருளிச்செய்த
மங்களையாராய்ந்தையந்திரிவறவுபதேசிக்குமாசாரியனையுமவமதித்துநிந்
ல்லுவாராயினவர்களும் வெம்மையுடைய வெரிவாய் நிரையத்தின் கண்
முன்னர்க்கூறியதுயரினையுறுவர்கள் எ று

ஆசான்றன்னையுமென்னுமும்மை, சாதகரையும்விளக்கிநின்றது

இதுவுமது

அரன்றிரவியத்தையாசா னருளும்பொருளதனையார்க்கும்
பரம்பரன்பகர்ந்தவாக்கைப்பரிந்துபுத்தகத்தைப் பற்றிக்
கரந்தவர்முன்னர்ச்சொன்ன கரிசர்களொருமூவர்க்கும்
வருமபலமுடையர்பாவ மனைத்தையுமருளினரோ

எ - து சிவத்திரவியத்தையுங் குருத்திரவியத்தையும் யாவருக்குமே லானசிவனருளிச்செய்ததிருவாக்கினை யெழுதினமுறையையும் விரும்பிக்களவு செய்தோர்முற்கூறியசிவநிந்தகர் வேதநிந்தகர் குருநிந்தகரானமூவர்க்கும் வருந்தீவினைப்பயன்களையுடையராவரஃதன்றி யெல்லாப்பாவத்தையுஞ் செய்தோருமாவர் எ - று (௰௧)

அதிபாதகஞ்சொல்லிமுடித்து அதிபாதகதுல்லியபேதஞ்சொல்லத் துடங்குகின்றார்

வேறு

அறைந்தவிவர்களனைவர்களு மதிபாதகரோயெனவுரிக
சிறந்தவினையேதீவினையு ளதிபாதகந்தானெனத்தெளிக
நிறைந்ததுயரோடெடுநாளை யிதனிற்பலமுமெனநினைக
பிறிந்தவதிபாதகபேதந் தனையுமினியாம்பேசுவமே

எ - து இங்ஙனங் கூறிப்போந்த சிவநிந்தகர் முதலானவிவர்களெல்லாருமதிபாதகரொன்றறிவாயாக இதுதீவினைப்பாவங்களுள் அதிகோரபாவமென்றறியக் கடவை யிதனுண்மிகுந்ததுயரமு மனுபவிக்குங்காலமுமெடுங்காலமென்றறியக்கடவை யிதன்கூறான அதிபாதகபேதத்தையுமேற்சொல்லாகின்றோம் எ - று அதிபாதகரோசிறந்தவினையேயென்றுமேகாரமிரண்டுந் தேற்றம்நிறைந்ததுயரோடெடுநாளையென்றுமேகாரமிரண்டுமெண்ணின்கண்வந்தன (௰௨)

அதிபாதகதுல்லியபேதத்தைப்படத்துச்செய்யுளாலுணர்த்துகின்றார்

அரிகரிசமுந்திவுதனைக்கை யபகாரகனையாரிதிதே
லரிவித்திடுகவிருந்திய மளித்துமவலியாரவராலே
யரிதேலஃதுமப்புரிவிட் டகல்கவகலாதுறைவாரோ
லுரியாரதிபாதகத்தவனுக் கொப்பார்நினையத்தெய்ப்பாரோ

எ து சிவத்திரவியத்தையபகரித்தவனை த்தலையைச்சேதிக்கக்கடவர்அவனைத் தன்னாற்செய்யவலியில்லையா.பின்வெகுதனங் கொடுத்தாயினும் பலவான்களாலே சேதிப்பிக்கக்கடவர் அதுவுங்கூடாதாயி னந்தத்தலத்தைவிட்டு வேறொருதேசத்தி ன்கட்செல்லக்கடவர் அங்ஙனமறுதேசத்திற் செல்லாமலவ்வூரிலதற்கனுமதித்திரு ப்பார்களாயின்அவர்களையிந்த வதிபாதகஞ்செய்தோனு க்கொத்தற்குரியராய்நர கத்தின்கணமிழ்ந்தியிளைப்பார் எ று

சிரமுமென்றவும்மையாற்கரமுதலியவுறுப்புக்களுமெனவறிக (௰௩)

சிவனையிகழுஞ்சிறியாரை யனையார்சிவனைப்பூசனையை ❋
யுவகைபுறவேகண்களிக்க வுருகிப்பரவாதுழல்வாரும் ❋
அவனைச்சிவன்றாளருச்சகனை யன்புசெய்யாதகல்வாரும் ❋
புவனத்தறிபன்பவனத்துணியமத்தலதுபுகுவாரும் ❋

எ து சிவனையும் அவனது அருச்சனையையுமுள்ள மகிழ்ச்சிபொருந்தும்வண் ணங்கண்களிப்பக்கண்டதனான் மனநெகிழ்ந்து துதிசெய்யாதிருப்போரும் அந்தச் சிவனையுமவனையருச்சிக்கும் பூசகனையும் பத்திபண்ணாதுவிட்டுநீங்குவோரும் இரு நூற்றிருபத்துநாலுபுவனத்துக்கு மதிபனானசிவனெழுந்தருளியிருக்குந்திருக்கோ யிலினாசாரநியமங்களோடுசெல்லுமதன்றி யனாசாரங்களோடே புகுவோருஞ் சிவ னைநிந்திக்குமற்பரானவதிபாதகரையொப்பர் எ று (௰௪)

பரமன்றிருமுன்னமுன்முன்னும் பரமகுரவன்றிருமுன்னும் ❋
ஒருமைபுறவேவறுமையினு முதவாதவருஞ்சிறிதேதும் ❋
அரிதுபொருடான்பச்சிலையு மரிதோவஃதுமரிதாகிற் ❋
றிரணமதனைத்திருமுன்னெ மாற்றலரிதோசெயலாலே ❋

எ து சிவசன்னிதியிலுஞ் சிவாக்கினியின்முன்னு மேலானாசாரியனது சன்னிதியினுந்தமக்குவறுமையெய்தின காலத்தினுமேதேனுஞ் சிறிதுதமக்கியன்ற மரியாதியொருப்பாடுபொருந்த க்கொடாதோரும் அங்ஙனங்கொடுத்தற்குப்பொ ருளரிதாகிற் பச்சிலையுங்கிடையாததோ வதுவுங்கூடாதாயிலவர்கள்சன்னிதியிற்கி டக்குஞ்செற்றையைக்கருத்துடனேதிருவலகுமுதலியவற்றாற்போக்குதலுமரிதோ வரிதன்றேயாதலா லிதனுளொன்றை ச்செய்யாதோருஞ் சிவநிந்தகருக்கொ ப்பர் எ று

ஓகாரம் எதிர்மறை (௰௫)

பொருவில்பொருளைப்புணர்ந்தானை யல்லாரொல்லாம்புரணையி ❋

ஸிரவியுடனேயிளமதிய மிசையும்பொழுதுமிணையிலியு
மெரியுமியலுங் குருபரனு மிருக்குமிடத்தையலகிட்டு
விரையின்விதத்தான்மெழுகிட்டு விதியாற்பூசைபுரியாரும்

எ து தனக்குநிகரில்லாதசிவத்தை க்கூடிநிட்டைபுரியுஞ் சிவஞானிகளல்லா தோரெல்லாரும் பூரணையிலுமாதித்தியனோடு கலைதேய்ந்த விளம்பிறைபொருந்துங்காலமான அமாவாசையினுமொப்பிலாதசிவனுஞ் சிவாக்கினியுஞ் சிவாகமமுமேலானவாசாரியனுமெழுந்தருளியிருக்குந் தலங்களைத் திருவலகிட்டுமெழுகி ச்சந்தனமுதலியசுகந்தவர்க்கங்களினாலே விதிப்படியருச்சனை செய்யாதோருஞ் சிவநிந்தகருக்கொப்பர் எ று (௩௬)

இந்தமுறையிலியற்றாரு மியற்றியதிபிழந்தாரும்
பந்தமானபசுபாசப் பகையைக்கெடுக்கும்பரம்பரனைச்
சிந்தைக்கரியசிவமுதலை த்துயக்கமறவேதெருண்டாரை
நிந்தைநிகழ்த்துநிறையில்லா க்கல்லாப்பொல்லாநீசருமே

எ து இங்ஙனங்கூறிப்போந்த திறத்தோரன்றி யாசாரியராலே சங்கற்பித்த ஒட்டித்துவரும்விரதங்களைவிட்டோரும் ஆன்மாக்களிடத்தனாதிசம்பந்தமானவாணவபாசமானபகையைப்போக்கும் பரம்பரனாயவர்க்கு மனத்துக்கெட்டாதசிவமாகியமுதலைத் தம்முடையவஞ்ஞான நீங்கும்படியுணர்ந்த ஞானவான்களை நிந்தைசொல்லுநிறையில்லாத அறநூல்கல்லாத பொல்லாதஅற்பருஞ் சிவநிந்தகருக்கொப்பர் எ று

சிவனையிகழுஞ்சிறியாரையனையாரொன்பதனையெவ்விடத்தும்வருவிக்க [௩௭)

நிந்தைநிகரின்ஞானத்தை நிகழ்த்துமவரை நிகர்ப்பார்தஞ்
சிந்தைநிகழவருச்சனையை ச்செய்யாதறநூறிளைப்பாரு
மிந்தவியலையெழுதினரு மிதனைப்பிறருக்கிசைப்பாரும்
வந்துபொருவில்வாய்மொழியை மதிப்பாரவருமனத்தாலே

எ து தம்முடையஅறிவு விளங்கும்வண்ணம் ஒப்பில்லாத சிவவாக்கியமான அறநூல்களைமலர்முதலியவற்றாற் பூசைசெய்யாது படிப்போரும் எழுதுவோரும் பிறருக்குப்பாடஞ்சொல்லுவோரும் மனத்தாற்சிந்தனைபண்ணுவோருஞ்சிவஞானநிந்தகருக்கொப்பர் எ று

அருச்சனைசெய்யாதென்பதனைமுற்றுங்கூட்டுக [௩௮].

சென்றெதிர்செம்பொனைக்கொண்டான் றிளைத்தான்குரவன்றேரிதனை ❊
நின்றுனிவரோடெனவைவர் மாபாதகரோநினையத் துட் ❊
சென்றார்விரையச்செல்லலுற மீளுநாளுஞ்சிலவலவே ❊

எ - து பிராமணனைவதைத்தோனும், மதுபானம்பண்ணியபிராமணனும் பிறருடையதிரவியத்தைக்களவிலுற்சென்றெடுத்துக்கொண்டோனும், ஆசாரியன்மனைவியைப்புணர்ந்தோனும், இங்ஙனங்கூறினநால்வரோடிணங்கித்திரிவோனுமாகவிவர்கள், ஐவருமகாபாதகர்களாம், அவர்களைவருத்தமுறும்படிசடுதியிலோரகத்தின்கட்சென்றடைந்தோராவர்களதினின்றுகரையேறுநாளுஞ்சிறிதுநாளுமல்லநெடுங்காலஞ்செல்லும் எ - று [உச]

மேன்மகாபாதகதுல்லியரையுணர்த்துகின்றார்

அறைந்தாமகபாதகமதனுக்கணியதணியபாதகமுஞ் ❊
சிறந்தபொதியிற்சிவமுனிவதெரிப்பாம்விரையத்தெளிந்திடுக ❊
மறந்துபுரிந்தவல்வினையுமறவாதியன்றவல்வினையு ❊
மிறந்துபிறக்கவினியவினையிதனையுணரவிசைந்தார்க்கே ❊

எ - து மேலானபொதியமாமலையிலிருக்கு நன்மைபொருந்தியமுனிவனே மகாபாதகரைச்சொன்றோ,மேலிதற்கடுத்ததுல்லியபாவவிதங்களையுஞ்சொல்லாநின்றோ, மிதனையறியவிரும்பினோர்க்கறிந்துசெய்ததீவினையுமறியாதுசெய்ததீவினையுங்கெட்டுநல்வினையுண்டாம்படிக்குநீயிதனைச்சடுதியிலேகேட்டுத்தெளியக்கடவை எ - று [உ௫]

மகாபாதகத்துல்லியருட்பிரமகத்திபண்ணினோர்க்
கொத்தாரைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வெறுப்பான்மிகுத்தகோபத்தால்வேட்கைமிகையால்வெருட்டியினால் ❊
ஒறுப்பாமுனையந்தணர்க்குரைப்பானொப்பான்பிரமக்கொலையார்க்கே ❊
யறப்பேரறிவேயுளமெனவேதன்னை மதிக்குமறிவிலியுஞ் ❊
சிறப்பாங்குரவனெதிர்விருத்தஞ்செய்யுமறியாச்சிறுவனுமே

எ - து வேண்டாமையாலாதல், அதிகோபத்தாலாதல், திரவியமுதலிய வாசைமிகுதியாலாதல், அச்சத்தாலாதல்- பிராமணரைப்பொறுத்தற்கரியகொடுஞ்சொற்களைச்சொல்லுவோனும் மிகவும்பேரறிவுடையோம்யாமென்றுதன்னை

யுயர்வாகவெண்ணுமறிவில்லாதவனும்- மேலானவாசாரியரோடுவிரோதம்பண்ணிக்கொள்ளுமறிவில்லாத- அற்பனும்-பிரமகத்திபண்ணினோனுக்குநிகராவர் எ - று

[உசு]

உண்ணவறன்மேற்செலுமாக்கவினையுந்தடுத்தேயொறுப்பானு
நண்ணியிரப்பத்தருவலெனநயந்துகூறியவர்வரவி
லெண்ணமிழந்துதரும்பொருளுமிலமேயெனவுமிசைப்பானுந்
தண்மையுரையைத்தகுதியரைச்சாற்றுமவனுஞ்சபைநடுவே

எ - து தண்ணீருள்ளவிடத்திற்குடிக்கச்செல்லும்பசுக்களையுமறித்துத்தண்ணீருகுடியாவண்ணம்வாதைபண்ணுவோனும்- தம்பால்வந்தொருபொருளையிரந்தபோதுதருகின்றேனென்றுநேர்ந்துமுற்கூறிப்பின்பவர்தம்மில்லின்கண்வந்தபோதக்கருத்தைவிட்டுமக்குத்தரும்பொருளும்யாமுடையோமல்லவென்றுசொல்வோனும்- அறிவான்மிக்கோனைச்சபைநடுவேயிழிபானவசனங்களைச்சொல்வோனும்பிரமகத்திபண்ணினோனுக்குநிகராவர் — எ - று

ஆக்களினையுமென்னுமும்மைமற்றுள்ளவிலங்குபுட்களையுமென- எச்சத்தின்கண்வந்தது- மேல்வருஞ்செய்யுளிற்பிரமக்கொலையர்க்கினையென்பதையிச்செய்யுளோடுங்கூட்டியுரைக்க

[உஎ]

அரசன்செவியிற்பிறர்குறையையறிவிப்பவனுமந்தணர்க்கும்
பரசுபாணிமுதலோர்க்கும்பாங்காநிலனைப்பறிப்பானு
மொருவும்வகையையுரைப்பானுமதனுள்விளைவையுண்பானும்
பிரமகொலையர்க்கினைமதுவைப்பீதற்கினையும்பேசுவமே

எ - து பிறர்குற்றங்களையிராசாவின்செவியிற்சொல்லியறிவிப்போனும்- பிராமணர்க்கும்- மழுவைக்கையிலேந்துஞ்சிவன்முதலாயுள்ளகடவுளர்க்கு- முரிமையானபூமியைக்கட்டிக்கொள்வோனு- மந்தநிலமவர்களுக்காகாமற்போம்வண்ணஞ்சூட்சிசொல்லுவோனு- மந்தநிலத்திற்போகங்களையெடுத்துக்கொண்டுண்போனும்- பிரமகத்திபண்ணினோர்க்கொப்பாவர்கள்- மதுபானம்பண்ணினோர்க்கொப்பாரையுமேற்சொல்லாநின்றோம் - எ - று

[உஅ]

மகாபாதகத்துல்லியருண்மதுபானம்பண்ணினோர்
க்கொப்பாரையும்பொன்றிருடினோர்க்கொப்ப
ாரையுநான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்

[illegible]

[illegible]

[illegible]

கதளியெழுவாய்கரும்பிறுவாய் கந்தமலிசந்தனமுயர்ந்த
பொதியிலகில்குங்குமமாதி புனையவினிபதுகிலாதி
பதமேபாணிபயில்வனவும் பற்றினனும்பழுதுறவே
பிதமாங்கனகந்தனைச்சோர்விற் பெற்றாற்கிணையேபேசுங்கால்

எ து வாழைமுதல்கரும்பீறாயுள்ள வுண்டிப்பொருள்களு மணமிக்க சந்தனமும்பொதியத்தின்கலோ ங்கிவளர்ந்தஅகில்குங்குமமுதலிய சுகந்தப்பொருள்களு முடுத்தற்கினியவாடைமுதலிய னவுங்காலினுங்கையினுமணியப்பட்டவாபரணமாயுதங்களுமான விவையிற்றையுடையோர் வருந்தும்வண்ணம் அபகரித்தோனுஞ் சொல்லுமிடத்துச்சிவந்தநிறத்தையுடையபொன் னைக்களவினாலேயெடுத்தோனுக் குநிகராவன் எ று

பீதம் பிதமெனக்குறுகிற்று (௩௨)

மகாபாதகதுல்லியருட் குருதேவியைப் புணர்ந்தோர்க்கொப்பாரை யிரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்

பெறுதற்கரியபாத்திரத்தை ப்பெற்றும்பெற்ற கன்னிகையைச்
செறிவித்திடுதல்செய்யானுஞ் சிறந்தபுதல்வன்மனைவியொடு
மறிவிற்பரிந்தானகத்திறெடும் பகினியுடனுமணைந்தானும்
பொறையிற்பயந்தபுதல்வியொடும் புலைச்சியுடனும்புணர்ந்தானும்

எ து வெளி

அறிவிற்பரிந்தான், தோழன் பகினி, உடன்பிறந்தாள் (௩௩)

அறிந்துமனையாளவலத்தை யவளைத்துறவாதனைவானுஞ்
சிறந்தகுரவன்மனைவியொடுஞ் செறிந்தார்க்கிணையேசெப்பியவித்
திறந்தான்மகபாதகமதனிற் சிறுமைத்ததனாற்பாதகமென்
றறைந்தாமிதனுக்கணித்தான வுபபாதகமுமினியறைவாம்

எ து தன்மனவியானவள்பிறர்முகம்பார்க்குங்குற்றத்தை க்கண்டு மவளைத்தள்ளிவையாதுகூடுவோனு மிவர்களெல்லாருமேலானகுருவினதுபாரியோடுகூடினவர்களுக்குநிகராவர்கள், இங்ஙனஞ்சொல்லிய கூறுபாடுகளெல்லாமகாபாதகத்துக்குத்துல்லியமாயிருக்கும்ஆகையினாலேயிவற்றிற்கு ப்பாதகமென்று பேர்கொடுத்

துச்சொன்னோம், மேலிதற்கடுத்தவுபபாதகத்தையுஞ்சொல்லாநின்றோம் எ-று.

முற்கூறியவுபபாதகத்தைவிரித்துணர்த்துகின்றார்

இச்செய்யுண்முதல்னனவே யிசைத்தவென்னுஞ் செய்யுளீறாக விருபத்தொரு
செய்யுளுமொருதொடர்க்குளகம்

மறையோர்க்கெனவேவைத்தபொருண் மதியாததனைவெளவினறு ❋
நிறையாற்பெரியோர்நிதியதனை நிரந்துகவர்ந்தநிலையிலியும் ❋
பிறராலதனுக்கிடையூறு பேணுமவனும்பெருங்குலமு ❋
மறிவுமருளுமுடையமெனு மகந்தையுடையவவலனுமே ❋

எ-து பிராமணர்க்கென்றுநியமித்துவைத்த பொருளை யவனையவமதித்தெடுத்துக்கொண்டவனும் வேதாகமங்களின் வழியேற்றச் குறைச்சலின்றி நின்றநிலைமையான்மிக்கோரான நல்லோர்கள்திரவியத்தைக்கலந்துபகரித்த நிலையில்லாதேனும், பிறராலேயவருடைய திரவியத்துக்கிடையூறுவிளைபபோனு மெல்லாரினும்பற்றப்பெரியசாதியுமறிவுமிரக்கமும்யாமே யுடையோமென்னு மாங்காரத்தையுடையபொல்லாதவனும் எ-று (௩௬)

விடைத்துத்தவனைவெகுள்வானும் விடம்பபுளத்துள்விரவினறு ❋
மிடுக்கண்கெடுத்தவினியானை யெண்ணுவவலத்தினையியனுங் ❋
தடுக்கத்தரியாவாசையுடன் போகவிதத்தைத்தரிப்பானுங் ❋
கொடுக்கச்சிறிதுங்குறியாது கொள்ளுங்கருத்தேயுள்ளானும் ❋

எ-து தபோதனரைக்கடுகிக்கோபிக்குமவனுமுள்ளம்பிறிதொன்றாயிருக்கப்பிறர்மதிக்கவிரதமுதலியவற்றை ச்செய்யவிரும்பினோனுந்தனக்கு வந்தவிடையூறுகளைநீக்கினநல்லோரை யவமதித்தபொல்லாத கன்னெஞ்சனுந்தடைபடாத வாசைமிகுதியாலேபோகவிதங்களையனுபவிப்போனு மற்பமுமொருவர்க்குக்கொடுக்கக்கருதாதுபிறர்கையிலுள்ளவற்றைவாங்குங்கருத்தேயுடையோனும் எ-று

விடம்பம் உள்ளொன்று புறம்பொன்று (௩௬௪)

மானவுளத்தவஞ்சகனும் வயிரமுடையமனத்தினனும் ❋
பூணார்முலையைபமணஞ்செய்து புணர்ந்தானிருக்கப்புலனிறந்த ❋
பாணர்மொழியைப்பைங்கிளியை ப்பணைத்தோளிணையைப்பயின்றதனா ❋
லேணணென்னுமிரண்டினையுங் கண்ணாவெண்ணாவெளியபுவிமே ❋

எ து உள்ளத்தின்கணமைவுபடாதவஞ்சனையையுடையோனு மொரு வலெ ருகுற்றஞ்செய்யி லதனையக்கணமேமறவாம லெந்நாளு நினைத்திருக்குமாச்சரியத் தையுடையவுள்ளத்தையுடையோனு மொருத்தியைக் கலியாணஞ்செய்தவளுடை யவாபரணமணிந்தமுலைகளைக்கூடிய கணவனிருக்கவுமந்தவிசைபொருந்திய மொ ழியினையுடையாளான பசுங்கிளிக்கொப்பாளதுவேய்போன்றதோளினையின்கண றிவின்றிப்புணர்ந்து பெருமைநாணென்னுமிரண்டினையுந்தன க்குக்கண்ணுகவிசாரி த்தறியாதவேழையும் எ று [௩௭]

கொழுநன்றனையேதெய்வமெனக் குறித்துத்தருமநெறிகோணு ❊
தொழுகும்விரதவுத்தமியை நொய்யளெனவேயுளத்துன்னு ❊
மிழுதைதானுமிவளெளியளென்றே யவடனினைத்தோளைத் ❊
தழுவக்கருதுந்தண்ணியனுங் கண்ணுற்புணர்ச்சிதரிப்பானும் ❊

எ து வெளி [௩௮]

கரிசுசிறிதுங்கருதாத கவிஞர்மரபிற்கன்னிகையைத் ❊
துரிசுமுடையளிவளென்று சொல்லுமவலத்துர்ச்சனனு ❊
மொருவன்சிவனுண்டென்றுணர்ந்த பனவன்றனைத்தேர்ந்துதவாதே ❊
பரிவுமறிவுமுடையளை மற்றொருவற்குதவும்பழியினனும் ❊

எ து வெளி பனவன் பிரமசாரி (௩௯)

கருமமணமேபிரமாதிநான்குந் தலைமையிடைமணந்தா ❊
லொருவனொருத்தியெனுமிவர்த மொப்பிற்பரிவுற்றுறும்புணர்ச்சி ❊
கருதிற்கடைமூன்றுசுரமுன் கடையென்றவற்றைக்கழியாதே ❊
விரைபவிழைந்துபுணர்ந்தறத்தை விதித்தமொழியைவிடுத்தாரும் ❊

எ - து பிரமம், பிராசாபத்தியம், ஆரிடந், தைவமாகிய, இல்லறத்திற்கு ரியமணநான்குமுத்தமம், காந்தனுங்கன்னிகையுமானவிருவருந்தம்மனப்பொரு த்ததத்தாலன்புற்றுப்புணருங்காந்தருவப்புணர்ச்சியிடையாயமணமாம், ஆசுரம் இராக்கதம் பைசாசம்,ஆகியமூன்றுமாராயிற்கடையாயமணமாம்,இவற்றுட்கடை யென்றுகூறிய, ஆசுரமணமுதலியவற் றைநீக்காமலாசைமிகுதியா லேவிரும் பிச்சடுதியிலேவேட்டுப்புணர்ந்தில்லறநெறியைவிதித்துக்கூறியவேதாகமவசனத் தைவிட்டோரும் எ - று

[illegible]
முளார், சூ-பிரமம்பிராசாபத்தியமாகிய [illegible]
சமெனவேதத்தெண்ணெண்மகளாகிய [illegible]
ர்மசாரியாயிருப்பாலெனுமுறைமை, [illegible]
சாபத்தியமகட்கோடலும், [illegible]
ணைப் தேயீதல், ஈயுமாறி [illegible]
குதலை, வழங்குதெய்வம் [illegible]
றையே, முறைமையாறினொடுகூறுதல், [illegible]
கூடுந்தகுதியதாகும், [illegible]
றவெய்து, மின்னனையிறவும்பன்னியசெய்தல், [illegible]
ப, தன்னுடைமாக்கதருகாலிருமுற்பேறுகளையும், [illegible]
வலிதிற்கோடன்மரபுகாட்டுமிடம், [illegible]
புணருமபுணர்ச்சியின்மாண்பே, [illegible]
மிகொள்க [illegible]

உலகவியல்லைபொழிந்தானையுதவியொருவன் [illegible]
நிலைமைதளரிற்றுங்காதேநீங்குமாங்கிலையாலுந் [illegible]
சலமில்சகிணையத்தணப்பாலுந்தாம்நிப்ப [illegible]
கொலைலையப்புரியுங்கொடியாலுங் [illegible]

எ - து உலகவியாபாரத்தைவிட்டு [illegible]
க்குக்காசுந்தூசுந்தரக்கடவீரென்று [illegible]
தவிடத்துநின்றுபாதுகாவாமல்விட்டுப் [illegible]
மைபிழைபடவுந்தவிடத்துவன்மமில்லாதே [illegible]
டையோனையுங்கோபத்தினாலேகுற்றமுஞ்சொல்லல் [illegible]
ச்செய்யுந்தியோனும், எ - று

நிலைமைதளரினென்பதனைச்சலமில்சகிணை [illegible]
தார்த்தமையுமென்னுமும்மைசிறப்பு [illegible]

சுற்றத்தவர்த்துணைப்பாலுந்தாம்பெற்றதவர்த்தமையுந் [illegible]
பற்றிப்பசுவைப்படிப்பாலுமம்படிணையக்கொள்ளுமாறு [illegible]
மற்றைவசியர்வடிவினையுமாயோடுவையுமவர்தமக்கு [illegible]
செற்றத்துழவர்தங்கலையுந்தெரிதலுக்கிசைத்துக் [illegible]

எ - து உறவின்முறையாரையும் - புண்ணியவான்களையும் - பசுக்களையும் நார்க்கெல்லாமிறைவனான - அரசனையும் அவர்க்கடுத்தசெட்டிகளையும் - வேளாளர்களையு-மடவாரையு - மதத்துக்கோபித்துவதைப்போனும் எ - று (சஉ)

தருக்கடனையுந்தனக்குன்னித்தறிக்குமவனுந்தருக்காலே
யொருத்தனுயிர்கட்குயிராயவொப்பில்பரமனுறைபுமெலே
விருக்கவிடபமவைதனையும்விடைத்தேயொடிக்கும்வினையினனு
மருக்கொண்மலரைத்தனக்கெனவேபறிக்குமவலவலியனுமே

எ - து மரங்களைத்தனக்கென்றுகுறித்துமதத் திருலேவெட்டுவோனும் - ஏகனுயுயிர்க்குயிரானநிகரில்லாதசிவனெழுந்தருளியிருக்குந்திருக்கோயிலினிற்கு மரங்களிற்கொம்புகளையுஞ்சினத்தொடிக்குந்தீவினையோனும்- திருநந்தவனத்தின் கணுண்டாயமணம்பொருந்தியபூக்களைத்தனக்கெனக்குறித்துப்பறிக்கும்பொல்லாதவிடும்பனும் எ - று (சக

பரமர்திருவாலயமதனிற்பணிசெய்பவரைப்பசுவதனை
யரியபெசுந்நெலைவைமுதலுமபகாரசனுமவமதியாற்
றருகவென்றுபொருளல்லார்தங்கைப்பொருளைத்தரிப்பானு
மரனையருச்சித்ததன்பலத்தைப்பிறர்க்குப்பொருளுக்களிப்பானும்

எ - து சிவாலயங்களிற்பணிவிடைசெய்வோரையும்பசுக்களையும்பெறற்கரியசெஞ்சாலிநெல்லினையுமுழுந்துபயறுமுதலானதானியங்களையுந்திருடிக்கொள்வோனும்- பயனற்றோரான- அதாதாக்களதுகையிற்பொருளைப்புத்திக்கேட்டிலுலேயெனக்குத்தரக்கடவீரென்றுகேட்டேற்போனுஞ்- சிவனைப்பூசித்ததனுலுள்ளபலத்தைத்திரவியத்துக்காகப்பிறர்க்குதகம்பண்ணிக்கொடுப்போனும் எ-று சச)

துக்கம்பிரியச்சுகமடையத்துணிவருலகரவருள்ளுந்
துக்கம்பிரியச்சுகமதனைத்துய்ப்பார்சிலரேசிலர்தாமே
துக்கம்பிரியார்சுகம்பிரிவர்துணிந்தவிரண்டுதிறத்தார்க்கும்
புக்கவினைபுண்ணியபாவமெனவேதுணியாப்பூசுரரும்

எ து உலகத்திலுள்ளோரெல்லாருந்தமக்கு த்துக்கங்களீங்கவுஞ்சுகங்களுண்டாகவுங்கருதாநிற்பர்கள், அவருட்சிறிதுபேர்கள் துக்கங்களீங்கச்சுகங்களையனுபவிப்பர்கள், சிறிதுபேர்கள்சுகத்தைநீங்கி த்துக்கத்தையனுபவிப்பர்கள், ஆதலாலிந்தவிருவிதத்தோர்க்குஞ் சுகதுக்கமனுபவிக்குங் காரணமுற்செய்தபுண்ணியபா

[illegible]

தன்னுற்சணமத்துடனுக்கொத்துத்தமுக்கொடுத்துக்கொண்டு
பொன்னோயனையபுத்திரனைப்பெறுவிருப்புடனுக்கொண்டு
நன்னோன்புடையோர்தனக்குனையுதவுக்கொண்டு
உன்னைப்பரிப்பவிலைனப்பாரி யுடையைநினைக்கொண்டு [illegible]

எது தன்னுலுண்டாக்கினமுளைக்கொட்டி, [illegible]
ம்பொன்போன்ற தன்மைக்குர்களையும் [illegible]
ராயுள்ளோர்கள் சிரமியத்தைவிரும்பியபடியினுக்கு [illegible]
ல்கும்வண்ணம்பெருக்கி யுன்னைக்காப்பிப்பெனன்று [illegible]
கைப்பொருள்களை வாங்கிக்கொண்டு [illegible] [illegible]

தேறலருந்துந்தெரிமொழியினையுத்தியோக்கு [illegible]
வேறுசிலர்கைப்பொருடன்னை விரும்பித்தருவெனவைவைக்கிப்
பேறுமவர்க்குப்பிணைப்பாலும் பேறுமுத்தெரிவுக்கொண்டு [illegible]
கூறிக்கொடுத்துவிருத்தியினைக்கொண்டேயுத்துக்கொண்டு [illegible]

எது மதுபானம்பண்ணுந் தேன்போலு மொருதிவிலை [illegible]
ரிவில்லாதவற்பனும் பிறிதுசிலர்கைப்பொருளை [illegible]
ப்பொருளையுங்கொடாமற் பிறைசெய்வோரும் [illegible]
சாலிமுதலியநெல்லினைப்பிறரிடத்துவட்டுக்குக்கொடுத்து [illegible]
பொசிக்குந்தீயோரும் எறு [illegible]

குற்றமுடையான்வினைதணிக்கக் கொடுக்கும்பொருளையோரு [illegible]
விற்கத்தகுதியல்லாத வன்னுதிகளைவிற்போரும்
கற்பால்வசியமுதற்செய்து கனகங்கொள்ளுங்கொள்ளை [illegible]
நிற்பார்நியமத்திவரொனவே நிகழ்த்துந்துடக்குமுடையோரும்

எது - யாதாமொருகுற்றங்களை யுடையோர்க்கு [illegible]
ககொடுக்குந்தானத்தையேற்போரும் [illegible]
வற்றைவிற்போரு மந்திரதூல் [illegible] ✠ [illegible]

✠ வசியம் ஆகரிஷிணம் மோகனம் தம்பனம் [illegible]

கையினைச்செய்துபிறர்பொருள்களை வாங்கும்பொல்லாதவனும் சீதிவழிநடப்பொரிவரொன்றுபிறர்புகழும்வண்ணம்பாவித்து த்தொடுத்துநடத்து நியமானுட்டானங்களையுடையோனும் எ று [௪௮]

கொடுத்துத்தனத்தைவேதமுதல்கொள்ளுமவனும்பொருள்கொண்டு ❊
படிப்பிப்பவனும்படிமத்தைப்பரித்தேயொழிக்கும்பாங்கிலியும் ❊
நிடத்தைபிழந்துதெரிசனங்களனைத்துமதித்துத்திரிவானும் ❊
அடுத்தசமையத்தயற்பசுநூல் வழியென்றதுகற்றறிவானும் ❊

எ து திரவியங்கொடுத்து வேதம்வேதாங்கமுதலியநூல்களைப் படிப்பொனும்பொருள்வாங்கிப்படிப்பிப்போனும் யாதாமொருவிரதத்தை யனுட்டித்ததனையிடையிலேவிடுந் திடமில்லாதோனுஞ் சைவசித்தாந்தநிலையே மேலானநிலையென்னுமுறுதியைவிட்டுமற்றுள்ள சமையதெரிசனங்களெல்லாவற்றையுமேலாகமதித்துநடப்போனுந் தானின்றசமையத்துக்கன்னியமானபசுநூலினைமுத்திநெறியென்றுகருதிப்படித்தாராய்வோனும் எ று [௪௯]

அறிவையளிக்குமதுவன்றி யவலத்தருக்கமறைவானு ❊
மறுவில்வடிவவானவனை வன்னியதனைமந்திரத்தைப் ❊
பெறுவித்தருளும்பெரியோனை ப்பேணுதொழிந்துபிழைப்பானு ❊
மறையோர்தமையும்பசுவினையு மாமாத்தெனவெண்மனிதனையும் ❊

எ து ஞானத்தையுண்டாக்குந் தருக்கத்தைப்பேசுவதன்றிக் குதர்க்கத்தைப் பேசுவோனுங் குற்றமற்ற வடிவினையுடைய தேவர்களக்கினிமந்திரங்களினைவயிற்றையாராதனைசெய்யக்கற்பித்தருளுமாசாரியனையும் பிராமணனையும்பசுக்களையுமிகவுமகத்துக்களென்னப்பட்ட பெரியோர்களையும்பத்திபண்ணுதுவிட்டு அவர்களுக்குத்தீமைசெய்வோனும் எ று

மகாமகத்தென்னும்வடமொழி மாமாத்தெனத்திரிந்தது [௫௦]

அரசன்றனையுமபவாத மறையுமவனுமவன் முன்னு ❊
முரியவினையைப்பிதிர்தேவர்க் குதவாதவனுமொழுங்கிலியும் ❊
பரமசிவனுமறநெறியும் பாவவிதமும்பரபதமு ❊
நரகவிதமுமிலையென்றே நவிற்றுமவனுமாடோறும் ❊

எ து இராசாவையுமவன்முன்னே பழிச்சொல்சொல்வோனும் பிதிர்க்களுக்

குந்தேவர்களுக்குந் தான்செய்தற்குரிய கன்மமானசிராத்தந் தர்ப்பண முதலியவற்றைச்செய்யாதோனு மொழுக்கமில்லாதோனு மேலானசிவனுநன்னெறியாகியபுண்ணியமும்பாவபேதமு மேலான சுவர்க்க நரக விதமுமில்லையென்று நித்தலுஞ் சொல்லுநாத்திகனும் எ று

அரசன்றனையு மென்னுமும்மை, மற்றுமுள்ளோரையுமெனவறிக, அவன்முன்னுமென்றவும்மைஅவனைக்காணுவிடத்துமெனவறிக [ரு௧]

பூணார்முலையைப்பகற்பொழுதிற் புணருமவனும்பூரணை யி *
ணாணுதறலின்மைதுனத்தை ப்பசுவின்பகத்தினயப்பானு *
மாணுனவர்தமாசியத்து மயர்த்தும்பெரியோர்கருத்தாலும் *
பேணுவிருதுமதிபகத்து ப்பேட்பாற்புணரும்பேதையுமே *

எ து ஆபரணம்பூண்டமுலையினையுடையாளை ப்பகற்காலத்தினும் பூரணைமுதலியவற்றினு ந்தண்ணீரினுள்ளுங் கூசாமற் புணர்வோனும் பசுக்களினதுயோனியிலும் ஆணுகப்பிறந்தோரதுவாயினும்மைதுனத்தைவிரும் புவோனு மறந்தும் பெரியோர்கண்மனத்தினுலும் விரும்பாததூரமானவளையாசையாற்புணரு மறிவில்லாதோனும எ று [ரு௨]

உடைப்பானவனு முவகைபுடன் பிறியாதுறைபு முறவினையுங் *
கெடுப்பானவனுங்கிளர்சமையங் கிளப்பானவனுங்கொடுங்கிளவி *
புடைப்பானவனும்புனற்கரையை க்கூபதடமும்புலனிழந்து *
துடைப்பானவனுந்துணையான தேவர்விமானந்துயக்குறவே *

எ து மகிழ்ச்சியோடும் பிரிவின்றி யிருக்குநட்புடையோனை விரோதத்தால் வேறுக்குவோனுமோங்கியசமணன்முதலியபுறச்சமையத்தானைநிலைகேடுசெய்யுமவனும் பொல்லாதவார்த்தைகளைச்சொல்வோனுங் குளங்கரையையுங் கிணற்றங்கரையையும்வெட்டியிடித்து ப்போடுவோனும் அறிவுகெட்டுஅஞ்ஞானமேலிடும்படி தமக்குத்துணையானதேவர்களிருக்குங்கோயில்களை ப்பிடுங்குவோனும் எ று ரு௩

இறவாதிருக்கச்செயுமருந்தே யெனினுமதனையில்லகத்துத் *
துறவாதிருந்தாரனைவரொடுந் துய்த்தல்கடனேதுயக்குற்றுப் *
பிறர்சொல்பழியும்பேணுதே பெரியோர்தமக்குநாணுதே *
சிறிதுமிரக்கஞ்செய்யாதே தானேயருந்துஞ்சிதடனுமே *

எ து சாவாமூவாமருந்தேயாயினுமதனைத்தம்மில்லின்கண்விடப்படாதிருந்தா

[illegible] ரும்பகுந் துண்பதேமுறைமை யங்ஙனஞ்செய்யாமலாசை [illegible]
[illegible] பங்கிப்பிறராற்சொல்லும் பழிச்சொல்லையும்பாதகமாகாமற் [illegible]
[illegible] மருத்துவியாமற்பொசிக் கிறோமேயென்றுகூசாமற்சற் [illegible]
[illegible] ருவனாயேயிருந்துபொசிக்குங் குணக்கேடனும் [illegible]

[illegible] னைவேபிசைத்தவித்தொகையிலென்னுமிவர்களெல்லோரு
[illegible] மேமொழிந்தபாதகத்திற் றணியவுபபாதகமுற்றும்
[illegible] ரிணைவேல்விழியாருமிவற்றைப்புரியில்வேறல்லா
[illegible] முனிவவிதற்கிளையபாவவிதமுமியம்புவமே

[illegible] என்றுகூறியவித்தொகையிலெண்ணாநிற்கு மிவர்களெல்லோருமிவற்றி
[illegible] கச்சொன்ன பாதகத்துக்குத்தண்ணிதான பாதகத்தைச்செய்தவ
[illegible] வுபபாதகராம், வேல்போன்ற விரண்டுவிழியினையுடைய மடவார்களு
[illegible] தகங்களைச்செய்யினவர்களும் வேறுகாரணபாதகமுதலிய பெயரிடை
[illegible] யவர்கள், வாராயகத்திய முனிவனே மேலிந்தவுபபாதகத்துக்குத்தண்ணிதா
[illegible] பாதகத்தையு முனக்கியம்பிச்சொல்லாநின்றோமதனைக்கேட்பா
[illegible]

[illegible] கூறியவுபபாதகத்துக்குத்தண்ணிதான பாவபேதங்களைவிரித்துணர்த்துகின்றார்

[illegible] செய்யுள் முதல் என்னுமித்தொகையாவருமென்னுஞ் செய்யுளிறுதிகாறும்
[illegible] தாருசெய்யுளுமொருதொடர்க்குளகம் (வேறு)

[illegible] விதுக்கு மருமறையாறங்க
[illegible] ர்க்குந் தன்னையகனுக்குமெய்த்
[illegible] ந்துக்குஞ் சகிக்குந்தகைமைய
[illegible] ர்விழிக்கன்னிகையார்க்குமே (இசு)

[illegible] காரியத்தூறுகடன்னையு
[illegible] னைமுகிழ்த்தமகிழ்ச்சியைத்
[illegible] ர்தமை க்கண்டுதுயக்குறும்
[illegible] னையும் பாருருப்பற்றியும்

[illegible] "பசுவுக்கும்நாலுவேதமு மாறங்கமும் பயிலுநாவினையடை [illegible]

ர்க்குந்தன்னுடைய ஆண்டவனுக்கும் வேடங்கட்டி நடிப்பதன்றி யுண்மை யானத போதனர்க்குந்தனதுதோழனுக்கு மழகினையுடைய நீலோற்பலமலர் போன்றகண்ணையுடையகன்னிகைகளுக் குமுற்றகாரியங்க ளிலேயிடையூறுகளையுஞ் செய்வோனுநல்வினையாலுண்டாகியசெல்வத் தையனுபவிப்போரையும்பிறருடையருபலாவண்ணியத்தையுங்கண்டுபொறாமலறிவுவருந்துமன்பில்லாதோனும் எ று [ருஎ]

ஈட்டினார்தனந் தன்னையிறைக்குறக்
காட்டினானுங் கருதியகையனும்
பாட்டினானுநற் பாவையர்தூடனை
நாட்டினானு நரர்க்குநவையுமே

எ து நன்முயற்சியாலார்ச்சித்தோரது அடக்கப்பொருளையரசனுக்குக்காட்டினவனு மப்பொருளை யிவ்வளவோவென்று நினைத்துமனம்புழுங்கியகையனு நற்குணநற்செய்கைகளையுடையமாதர்களிடத்துத் தூஷிக்கத்தக்கபாட்டுக்களை ப்பாடுகிறவனுங்குணவான்களிடத்துக்குற்றத்தை க்கற்பிப்போனும் எ று

இதனுள் ஈட்டினார் ஆர்ச்சித்தோர்கையன் ஈனன் (ருஅ)

இச்செய்யுள் முதலாகநீக்குவானு மலசலநித்தலுமென்னுஞ் செய்யுளீறுகநாலுசெய்யுளுமொருதொடர்

ஆக்கள்சேரிடத் தாகுதிச்சாலையுட்
டேக்குநீர்த்தடந் தேர்திகழ்வீதியுள்
வேர்க்கணுந்தரு ச்சாயையில்வெற்பினிற்
பூக்கிளர்ந்தபொழிலின் புடையுமே (ருகூ)

சிலையினீரிற் சிகதையிற்றேவர்த
மெலையின்மார்ககத்தி லில்லத்திலீமத்திற்
றொலைவிலாததூர் வாதியிற்றும்பையி
னிலைமைமாதவர்நீடு நிலத்துமே

சிகதை மணற்குன்று (சுய)

உன்னத்தக்கதலத்தி லுவர்தனிற்
செந்நெலாதிய செய்யிற்சிறப்புறு
வன்மிகாதியிற் குண்டுவனத்தினுட்

உனைத்தானிகர் கோமயந்தன்னினும் (சுக)

நீக்குவானுமலசல நித்தலு
நாக்கினுன்மதுபான நயந்துணு
மூர்க்கனுமுழவாதி விநோதமு
மார்க்கும்வீணனு மாடிடுமற்பனும்

என்பன, முன்னைச்செய்யுட்களிற்கூறியவந்தந்தவெல்லைகளிலேமல செலங்களை விடுவோனும் நாடோறு மதுபானத்தை நாவினால் விரும்பிப்பொசிக்கு மறிவில்லாதோனும் துந்துமிமுதலியவாத்தியங்கள்கீதங்கள்கூத்துக்களிவையிற்றை விரும்புமவத்தனும் கூத்துக்களையாடாநிற்குஞ்சிறியோனும் எ று (சுஉ)

தேக்குநீர்விளையாடுஞ் சிறியனு
மார்க்குநெஞ்சத்தவர் தமக்கந்தரம்
பார்க்கும்பாங்கிலி தானும்பலர்செலு
மார்க்கந்தன்னை த்தடுக்கும்வலியனும்

எ து நிறைநீரிலேநீந்திவிளையாடுமற்பனும் புலன்வழிபோகாமன்மனத்தைநிறுத்தும்பெரியோர்களுக்கு க்குற்றத்தைத்தேடு நீதியில்லாதோனும்யாவருநடக்கும்வழியைமுள்முதலானவற் றாலடைத்துவிலக் குமிரக்கமற்றோனும் எ று (சுங)

ஈடிலார்மனையாதிய வெல்லையைப்
பாடிலாரொன ப்பற்றும்படிறனுங்
கூடமான கருமமுங்கூறிடு
மூடனும்மதனைச்செயு மூர்க்கனும்

எ து பெலமின்றியிளைத்தோர்கள் மனைமுதலாகிய பூமியை யவர்களதற்குரிமையல்லரொன்று கைக்கொள்ளும் வஞ்சகனு மொருவருஞ்சொல்லாது மறைக்கத்தக்ககாரியங்களை ச்சொல்லு மஞ்ஞானியான வனும்அந்தக்காரியங்களை ப்பிறர்காணச்செய்யுமறிவில்லாதோனும் எ று (சுச)

ஒளித்துநின்றுப கைவனையூறுசெய்
வெளிற்றனுங்கன்ன க்கோறொடுமிண்டனுந்
தெளித்தசொல்லை வளக்கிடைச்செப்பிடா
னெளித்தசொல்லை நிகழ்த்திடுநீசனும்

எ து தன்சத்துருவானவனையொளித் துநின்று கொல்லுஞ்சேவகப் பாடில்லாதோனுங் கன்னக்கோலெடுத்துப்பயிற்றிடுமிடும்பனுமிருவர்தம்முண்மாறுகொள்ளுவழக்கின்வந்தேறியவிடத்து மனுநூன்முறையே யாராய்ந்தறுதியிட்டசொல்லைவழக்கின்கட்சொல்லாது வாரம்பற்றி யோரமாகச்சொல்லும் புலையனும் [சுரு]
எ று

கொடுமராதியைப்பண்ணிடுங்கோணனுங்
கொடுமராதியைக்கொள்ளுங்கொடியனு
மடியர்பாலிரங்காதவவலனு
மடியர்தம்மையொறுத்திடுமற்பனும்

எ து வில்லுமுதலியவாயுதங்களைப்பண்ணுநீதிகேடனும் வில்லுமுதலியவாயுதங்களைவிலைகொடுத்துக்கொள்ளுந் தீயோனுந்தன்னடியாரிடத் திரக்கமில்லாதபொல்லாதவனுமவ்வடியாரைக்கடிந்து கோபிக்குஞ்சிறியோனும் எ று [சுசு

ஆவினைத்தமிப்பானுமலலுற
நாவினாற்பொய்நவிற்றுநரகனுங்
கூவவந்ததுகேட்குங்கொடியனுங்
காவலர்க்கபராதக்கருத்தனும்

எ து பசுக்களைவருத்தமுறும்படி யடிப்போனும் நாவினாலேயசத்தியஞ்சொல்லுநரகத்துக்குரியோனு மதனைச்சொல்லுமிடத்துச்சென்றுகேட்கும் பொல்லாதவனுந் தமதுகருத்தனுக்குக்குற்றஞ்செய்யுமனத்தை யுடையோனும் எ று (சுஎ)

உறவினுக்கப ராதியுமூனுடற்
பிறவிவேரினை ப்பீழும்பெருவலி
யறிவனுக்கு நல்லாரிய னுக்கலற்
புறனுரைக்குமவல ப்புலையனும்

எ து சுற்றத்தார்க்குத்தீங்குசெய்வோனுந் தசைபொருந்தியவுடம்பினையெடுப்பதற்கு மூலமாகியவாணவத்தை க்களைந் துபிடுங்குமிகுந்ததிடமான வறிவினையுடையற்குநல்லவாசாரி யனுக்குப் பொல்லாப் புச்சொல்லுந் தீமையை யுடையகன்மசண்டாளனும் எ று (சுஅ)

சொக்கிடுந்தொழில்வல்லதுரிசனு

முக்குநோயறவோட்டுமருந்தெனப்
பொக்கம்பேசிக்கொடுக்கும்புலையனுந்
தக்கதாய்தந்தைவாட்டந்தணித்திடான்
தனித்திருந்துணுந்தண்ணியகண்ணனு
முனித்தபோதனர்தன்னைமுன்னூட்டிடான்
றுனித்தவாதுலர்துக்கந்துடத்திடான்
பனித்ததாதாபசியும்பறித்திடான் (௪௪)

இவையிரண்டுமொருதொடர், பொருண்முதலியவற்றைக்கவரும்விருப்பினாலேபிறர்பாற்சொக்குப்போடுந் தொழிலைவல்லதுர்ச்சனனும்பிணியானதுகெடும்படிநீக்குமருந்துதுவென்றுபொய்சொல்லிமருந்தல்லாதமருந்தைக்கொடுக்கும்பொல்லாதவனுந்தகுதியினையுடையமாதாபிதாக் கள்பசியினைப்போக்காதுஇந்திரியங்களைமுனியுந்தன்மையையுடையதபோதனர்களை முந்தப் பொசிப்பியாதுஇல்லாமையால்வருந்துந்தரித் திரர்களதுபசித்துயரத்தைப்போக்காதுபசியாலுந்ததன்னடியார்கள்பசியுநீக்காதுதானேதனித் திருந்துபொசிக்குமற்பவறிவினையுடையோனும் எ - று (எ௰)

நித்துமுன்னையவேகநெறியினைப்
பேர்த்துநின்றபிராவிரச்சியனுந்
தீர்த்தனுவரணுதிசிதைந்திடப்
பார்த்தபண்பிலவலப்படிறனும்

எ-து ஆதிகாலத்துளவாயவேதாகமங்களிற்கூறியசன்னியாசிமார்க்கத்தின்வழியனுட்டியாமற்றானேயொருமார்க்கங்களைக்கற்பித்துநடக்குஞ்சன்னியாசியுஞ் சுத்தனாகியசிவனுடையதிருமதிண்முதலானவற்றை யிடியவிட்டிரக்கமின்றிப்பார்த்திருக்கும்நன்மையில்லாததீமையையுடையவஞ்சகனும் - எ - று . (எக)

ஆக்கடன்னையருந்பிணிவந்துறி
னேக்கியேயதனேவுதன்னேவெனக்
காக்கிலானுங்கனந்தைபிளைத்தமெய்ச்
சேக்கண்மீதுசெறிக்குஞ்சிறியனும்

எ - து பசுக்களைப்பொறுத்தற்கரியவியாதிகள்பொருந்தினவையிற்றைப்பார்த்ததன்பிணியைத்தனக்குவந்தபிணிபோலநினைத்துப்பரிகாரஞ்செய்யாதவனு,

முடலினைத்துநிற்குமெருதுகள்மேலேபொதிமூதலியமிகுந்தபாரங்களையெடுத்து மற்பனும் எ - று

(எஉ)

விடையின்பீசத்தைவெய்யவினைஞரா
லுடையச்செய்விக்குமூனனும்வந்தையி
னிடையிற்பாரமெடுத்துமிழுதையு
மிடபந்தன்னிலெடுத்துமிழுக்கனும்

எ - து சேக்களினுடையபீசத்தைக்கொடியதொழிலினையுடையசேமாறி களாலுடையும்படிசெய்விக்கும்பொல்லாதவனுமலட்டுப்பசுவின்முதுகிற்பொதிக ளையெடுத்தும்- அறிவில்லாதவனுமிடபங்களிலேபொதிகளையெடுத்துமீனனும் எ - று

(எங)

வருந்துமேபதம்வைப்பின்மரிக்குமே
பொருந்துமண்ணிற்புழுக்களுமென்றுளம்
வருந்தியேபதமெல்லெனவைத்திடா
தருந்தவத்தைப்பிரிந்தவாக்கனும்

எ - து யாவர்க்குமிடமாகப்பொருந்தும்பூமியிலடிவைக்குங்கால்புழுக்க ளு- மெறும்புமுதலியனவும் - வருந்திநோமென்றுஞ்சாமென்றுநினைந்துமனநொ ந்தடியைமெத்தெனவையாதவரியகொல்லாதவிரதத்தைவிட்டவிராக்கதனுக்கொ ப்பானும் எ -று

(எச)

உண்ணவூனை விரும்பியுயிர்க்கொலை
பெண்ணுவான்கொலைகண்டிரங்கான்கொலை
பண்ணுவாரைத்தடுத்துப்பகர்கிலா
னண்ணுவானிவரோடெனுநால்வரும்

எ - து வெளி

(எரு)

மிக்கசாதியுட்டோன்றியும்வேதியர்
துக்கந்துய்த்திடச்செய்யுந்துரிசனுந்
தக்கதென்றுமதுமணஞ்சார்தருந்
திக்கினுசிசெலுத்துஞ்சிறியனும்

எ - து உத்தமமானகற்குலத்திற்பிறந்துமற்குலத்துக்கேற்பப்பாதுகாவாமற்

பிராமணரைத்துன்பமனுபவிக் கும்படிசெய்யும்பொல் லாதவனுங்- கள்முதலிய நாற்றம்வந்துவீசாநிற்குந்திசையிலதனைநல்லதென்றுநாசியினாலுகந்துகொள் ளுமீனனும்- எ - று (எசு)

பாவஞ்செய்யப்பயமில்படிறனும்
எவஞ்செய்யவிளைப்பிலிழுதையும்
தேவர்தம்மைக்குறித்துத்திகழ்விதி
மேவயாகஞ்செய்யாத்தனவேந்தனும்

எ - து பாவஞ்செய்தற்குப்பயப்படாதவஞ்சகனும்- பிறர்க்குஅனவரதமும் பொல்லாப்புச்செய்தற்கிளையாதமூடனுந்- தேவர்களைநோக்கிய சுவமேதமுதலிய யாகங்களைவிளங்காநின்றவிதிமுறைபொருந்தச்செய்யாதமிகுந்ததிரவியத்தையுடைய- இராசாவும் எ - று

எவ்வம்- ஏவமெனத்திரிந்தது (எஎ)

ஆலையத்தையமலனுக்காதிக்குக்
கோலினேமிலைக்கூவிளந்தண்ணறு
மாலைசூட்டவும்வல்லமுமல்லமுக்
காலமும்மெனநோவுறுங்கல்லனும்

எ து யாம்நின்மலனாகியசிவனுக் குத்திருக்கோயிலைத் தான்கட்டினேமில்லை,யல்லதுகுளிர்மையுடைத்தாயமணம்பொருந்தியவில் லமாலைமுதலியவற்றைமுக்காலமுஞ்சிவனுடையதிருமுடியிலேசாத்தவுஞ்சமத் துடையமுமல்லமென்றுமனத்தின்கண்ணேவில்லாதகன்னெஞ்சனும் எ று [எஅ]

கூர்த்ததீபனங்கூடக்குறுகினர்க்
கார்த்தெதிர்ந்தழையாதவவலனு
மூக்துளார்பிணிமுற்றினர்பற்றிலர்
பார்த்தபோதுபரிவில்படிறனும்

எ து மிகுந்தபசிபொருந்திவந்தணுகினோர்க்கெதிரேசென்றுநல்வார்த்தை சொல்லியழைத்து அன்னமிடாதபொல்லாதவனும், வயோதிகர்-வியாதியாளர்-மிடியரிவர்கள்தன்னைவந் துகண்டபோதாயினும்அவர்கண்மேலிரக்கமில் லாதபொல்லாதவனும் எ று [எகூ)

தன்னிற்றண்ணியனேவலைத்தக்கதென்
றுன்னிச்செய்யுமறிவிலவூனனு
மென்னெனுதசங்காக்குமெளியனுந்
துன்னுமாயிடங்காக்குந்தொழிலனும்

எ து தனக்குக்கீழானேனேவலைநல்லதென்றுகருதிசெய்யுமறிவில்லாதகு
ற்றமுடையோனும் ஆடு-எருமை-யிவைகளைக்காத்ததினால்வரும்பயனியாதென்றெ
ண்ணுமல்மேய்க்குநொய்யவனும் எ று [அய]

அச்சமின்றியருவினைக்காடகத்
திச்சையால்வருந்துன்பமுமெண்ணிடான்
முச்சியேமரக்கோவைமுயற்சியாற்
கச்சிடாதுகடற்செலுங்கல்லனும்

எ து தனவாசையினாலேபொறுத் தற்கரியபாவத்துக் கஞ்சாதுஆழ்கடலின
டுவேகாற்றுமுதலியபொருந்திற்கப்பல்கவிழ்ந்தமரிபபோமென்னுந்துக்கமுமெண்
ணாதுமுயற்சிமிகுதியாலேகப்பலைப்பண்ணியதன்கணைறுதலைவெறுத் திடாமற்கட
லோடுங்கன்னெஞ்சனும் எ று

மரத்தாற்கோத்தலினாலே மரக்கோவையெனக்கப்பற்கோர்காரணப் பெயரா
யிற்று [அக]

அகத்திற்பண்பறுத்தாடகத்தாசையான்
முகத்திற்பண்பைமுகிழ்த்தவிதத்துடன்
சகத்திற்காளையர்தம்மைமயக்குவார்க்
குகப்புச்செய்தவடோள்புணருனனும்

எ து உள்ளத்தின்கணன்பினையொழித்துப்பொருளாசையினான்முகத்திற்க
ண்மலர்ச்சியைத்தோற்றுவித்துஇராகவிதத்தினாலேபூமியின்கணிளைஞராயுள்ளோ
ரைமோகிப்பிக்கும்வேசைகளுக்குச்சந்தோஷத்தைச்செய்தவர்கள் தோளிணையை
க்கூடுந்திமையுடையோனும் எ று [அஉ]

தபதிகாருகன்கொல்லன்றனமனர்க்
குபகரிப்பனென்றொட்டினனூன்வலி
யபகரிக்கும்பிணியறுப்பானெனு

மிவருங்கூலியருங்கபடெய்நிடின் ❊

எ - து சிற்பாசாரியு, மீரங்கொல்லியுங், கொல்லனு, மிராசாக்களுக்கு த்திரவியங்களையாதாயமாக்கிக்கொடுப்பனென்றிராசகாரியம்விசாரிக்கப்பொருந்திணேனுஞ், சரீரபலத்தைக்கெடுக்கும்வியாதியைத்தீர்க்குமருத்துவனுங், கூலியாளருமாகவிவர்களறுவருந், தந்தஞ்செய்தொழில்களிலேவஞ்சகஞ்செய்வாராயினவர்களும் எ - று (அங)

வேலைதோறும்வினைசெயவேண்டியே ❊
கூலியென்றிரைமெய்க்குக்கொடுத்திடான் ❊
சாலவுண்ணுஞ்சழக்கனுந்தாமத ❊
வேலைமூளவந்திற்பின்னுணும்வீணனும் ❊

எ - து காலந்தோறும் அதற்கேற்றசற்கன்மஞ் செய்யும்பொருட்டுத்தன் சரீரத்துக்குக்கூலியென்றுண்டியைக்கொடாமலுண்டிச்சுவைவிருப்பினாலே புருஷாகாரத்துக்குமேல், மிகவுமுண்ணும்பொல்லாமனத்தையுடையோனு, மிராத்திரிகாலம்பதினைந்துநாளிகைக்குமேற்பொசிக்குமில்வாழ்வாருசியவவத்தனும் எ - று மூளவைந்தென்று, அர்த்தயாமத்தைக்கருதுகையால், அர்த்தயாமம் பதினொன்றேகாலுக்குமேலெனச்சொல்லவும்படும், எனவே, ஒருசாமத்துக்குள்ளேபொசித்தல்சிறப்பெனவறிக (அச')

ஆறிலொன்றுகடமைகொள்ளாதநி ❊
னேறவேகொளுமீடிலிறைவனு ❊
மூறுசெய்திடுவானுமுலகினை ❊
வேறுவேறுதன்னேவல்விதத்தினும் ❊

எ - து ஆறிலொன்றுகடமைகொள்ளாமலதனிலதிகமாகக்கொள்ளுநன்மையில்லாதவரசனும், தன்னேவல்விதங்களினாலேசேனைகளாயுள்ளோரையும், அதிகாரிகளையுங்கள்வரையுங்கொண்டுதேசத்துக்குநாலுவிதமாகத்தீங்குசெய்விக்குங்கொடுங்கோன்மன்னனும் எ - று (அஙு)

இத்தகைத்தவிறைவனிருநிதி ❊

வைத்திடாதுகவரக்கருதிய
சித்தமேவிடச்சென்றிரந்தேகொளும்
பொய்த்தவம்புரிபூசுரன்றானுமே

எ - து முற்கூறியவிந்தக்கொடுமைகளோடுகூடியகொடுங்கோன்மன்னனை துதிரவியத்தையாகாதென்றுவெறுமலத்தனைவாங்கக்கருதுமாசைமிகுதியாலவன் பாற்சென்றிரப்புரைகூறிவாங்கும்பொய்த்தவத்தைச்செய்யாநின்றபிராமணனும் எ - து (அசு)

சோரன்றன்னைத்துயக்கமனத்தினாற்
சோரனன்றெனநீக்குந்துரிசனுஞ்
சோரனல்லனைச்சூட்சியிழப்பினாற்
சோரனென்றுதுணித்திடுந்துட்டனும்

எ - து யூகமற்றமனத்தினாலேகள்ளனைக்கள்ளனல்லனென்றுவிடும்பொல்லாதவேந்தனு, மாராய்ந்துவிசாரியாத அறிவின் மையாற்கள்ளனல்லாதவனைக்கள்ளனென்றுக்கினைபண்ணுங்கொடுங்கோன்மன்னனும் எ - று (அஎ)

சோரனுக்குத்துணைச்செலுந்துட்டனுஞ்
சோரவித்தைகள்சொல்லுந்துரிசனுஞ்
சோரனைச்சோரனென்றறிந்துந்துணுஞ்
சோரனுமவனைச்சூரியானுமே

எ - து கள்ளன்றிருடுமிடத்தவனுக்குத்துணைப்போனதீயோனு, மவனுக்குக்களவுநூல்களையுபதேசிக்கும்பொல்லாதவனுங், கள்ளனைக்கள்ளனென்றறிந்துமவனோடுசட்டுச்செய்யுங்கள்ளனும், அவனைக்கண்டாலித்தொழில் நீசெய்யாதேயென்றுகோபியாதவனும் எ - று

சோரவித்தைகளாவன, மந்திரந்தெய்வமருந்தேநிமித்தந் தந்திரமிடனேகாலங் கருவியெனஎண் விதமாயிருக்கும்இதனைச் சிலப்பதிகாரமுதலிய நூல்களிற்காண்க (அஅ)

ஏக்கிளந்தடங்கொங்கையைபின்புறங்
காந்தனிங்கவக்காரிகைதோளிணை

தோய்ந்தசோரனைத்தொட்டுத்துயர்செயா *
வேந்தனும்மனைச்சோரனில்வேறலன் *

எ து ஆபரணங்கள் தாங்குமிளமைத்தன்மையுடையபெரியமுலையினையுடையாளைக்கூடிமனமகிழ்ச்சிபொருந்துங்கணவன்பிரிந்தகாலத்தந்தமனையாளுடையதோளிணையைப்புணர்ந்தகள்ளனைப்பிடித்துத்தண்டஞ்செய்யாதஅரசனும் பிறர்மனைச்செல்லுங்கள்ளனில்வேறுகாணுதலாலந்தவிராசாவும் எ - று (அகு)

பாலைநெய்யைப்பலத்தைத்திலத்தினைச் *
சாலியாதியன்னாதியைத்தண்புனன் *
மூலமாதிமுதிரையிறுதியைச் *
சேலையோடுபட்டாடைதிருடனும் *

எ - து வெளி - மூலம் - கிழங்கு - முதிரை - துவரை (கூ௰)

பரியகம்பளந்தன்னையும்பாசமும் *
வரியவூனுமதுவுந்தயிலமுங் *
திரணமீறுசெறிந்தசில்பண்டமுங் *
கரமுறப்பற்றிக்கொண்டிடுங்கள்வனும் *

எ - து வெளி - பாசம்-கயிறு-வரியவூன்-ஆகாதெனவைகுந்தவூன் (கூக)

சத்திரந்தனைப்பாதுகைதன்னையும் *
வித்தரித்திடும்பாயின்விதத்தையுங் *
கொத்துலாமலர்க்கூடையும்பேழையு *
மத்தமுட்டியெடுக்குமவலனும் *

எ - து வெளி - கொத்துலாமலர்க்கூடை - திருப்பூக்கூடை - அத்தம் - கை (கூஉ)

சங்கமாதிசலத்திற்சனித்தவும் *
வங்கமாதிமரத்தின்வருத்தவு *
மங்கலத்தமழலைமுழவமு *
மங்கையாற்பற்றிக்கொள்ளுமவலனும் *

எ - து சங்குமுதலாகநீரின்கட்பிறந்துள்ளனவுங், கப்பன்முதலாகமரத்திற்றண்ணியுள்ளனவு, மங்கலவாத்தியமானமழலைச்சொல்லையுடையமத்தளமுமானவிவைகளையுந், திருடுமவத்தனும் எ - று (௧௩)

சங்தன்னையிரும்பினைச்செம்பினைத்
தேயனுந்திரபுத்தனைச்செங்கலை
மாயவாழ்க்கையர்தங்கண்மனையினு
மேயுமேதுமெடுக்குமிழுதையும்

எ - து — வெளி — தேயன் எ - து திருடன் - திரபு - எ - து - பித்தளை - இவைகள்வடமொழி (௧௪)

பிறர்பொருட்கடுகிற்பிளவாயினு
மறையநின்றதனைக்கொளும்வஞ்சனு
நிறையறக்கொளவெண்ணிடுநெஞ்சனு
மறையுமாதனுமன்னியர்க்காகவே

எ - து பிறர்க்குரியபொருள்களைக்கடுகிற்பாதியாயினுமவர்காணுவன்னணஞ் சென்றுதிருடுங்கள்ளனு, முத்தமமானநிறையென்னுங்குணநீங்கப்பிறர்பொருளைக்கைக்கொள்ளும்படிவிசாரிக்குமனத்தையுடையோனு, மொருவன்பொருளைப்பிறர்க்காம்வண்ணஞ்சொல்லுமறிவில்லாதோனும் எ - று (௧௫)

என்னுமித்தொகையாவருமீங்கியற்
பன்னுபாவக்கடலிடைப்பட்டுளா
ரின்னபேதத்துரிசுமியற்றிடிற்
பின்னுவார்குழற்பேதையர்தாமுமே

எ - து இங்ஙனஞ்சொல்லப்பட்டவிந்தப்பாவவிதத்தொகையிலுள்ளோரொல்லோருமிவ்விடத்திந்தவியலின்கண்விதித்தவுபபாதகத்திற்றண்ணியபாவமாகியகடலின்கணமிழ்ந்தும்பாவிகளாவோர், பின்னற்றொழில்பொருந்தியநீண்டவளகத்தினையுடையமடவார்களுமுற்கூறியவிந்தப்பாவபேதங்களான தீமைகளைச்செய்வாராயினத்தன்மையுடையபாவிகளாவோர் எ - று

பாவக்கடலிடைப்பட்டுளார் எ து நடுநிலைத்திபகம் (௧௬)

மேலதுபாதகமுதலிய கன்மங்களைச்செய்தோர்பெறும்
பயனுணர்த்துகின்றார்.

ஈட்டுமிந்தவினைத்தொகையாவையு
பீட்டிடும்படிவெய்யநமன்றமர்
காட்டிடுந்துயரார்க்கைகலந்துபோய்
வாட்டுமாநிரையத்துள்வதிவரே

எ - து அதிபாதகர்முதலாயினோரிவ்வண்ணஞ்செய்யுமிந்தவதிபாதகமுதலிய கன்மபலங்களெல்லாவற்றையுமொழிக்கும்படிகொடியயம தூதர்களுண்டாக்குந் துன்பவுடலாகியயாதனாசரீரத்தையடைந்துசென்றுதுக்கத்தைக்கொடுக்குநரகத் தின்கணிருப்பர் எ று (கூஎ)

மானிடரேயன்றித்தீமைசெய்தவிலங்குபறவைகளு
நரகமடையுமென்பதுணர்த்துகின்றார்

மைந்தர்மாதருமற்றையலியுமோ
பந்தபாசவிலங்கும்பறவையு
மூந்தவாக்கையிதுவென்முன்னுறு
மந்தவாக்கையடைந்தகன்றாமே

எ - து ஆணச்சாயுள்ளோர்பெண்ணச்சாயுள்ளோரலியச்சாயுள்ளோர்மா த்திரமோநரகத்தின்கணழுந்துவது, அவர்களையல்லாதபாசபந்தத்தையுடைய மி ருகங்களும்பறவைகளுமூந்தவுண்டானவுடம்புபோலெதிர்வருமந்தயாதனாசரீரங் களைப்பொருந்திப்பூமியின்கணெடுத்தவச்சினின்றுநீங்கிநரகத்தின்கணழுந்தும் எ - று (கூஅ)

முற்கூறியஅதிபாதகமுதலியபாவபலங்களைக்கொ
டுப்பவன்யமனென்றுஞ்சிவபத்தர்கள்செய்தபாவ
பலங்களையாசாரியன்பிராயச்சித்தத்தாற்போக்கு
வனென்றுமுணர்த்துகின்றார்

விண்ணுளார்நரர்மற்றைவிலங்குமே
பண்ணுபாவபலத்தைக்கொடுப்பவன்
றிண்ணமேயமன்றேசிகன்றீர்த்திடும்
பண்ணிற்பாவவிதஞ்சிவபத்தரும்

எ - து தேவர்களு, மானிடரு, மிவர்களல்லாதமிருகங்களுஞ், செய்யுந்தீ

வினைப்பயனைபவைகளுக்குக்கொடுப்பவன் யமராசன், சிவபத்திகளையுள்ளோர்பாவபேதங்களைச்செய்வாராயின் அந்தப்பாவபலங்களையாசாரியன் பிராயச்சித்தசாந்தங்களாலேபோக்குவனிதுநிச்சயம் எ - று

நன்னமென்பதனையிருபாலுங்கூட்டுக (கூகூ)

வெளியாகப்பாவஞ்செய்தஆன்மாக்களையிராசாத்
தண்டிப்பனவனுற்றண்டிக்கப்படாதோரையமனே
தண்டிக்கப்படுவனென்றுணர்த்துகின்றார்

பிணக்கந்தன்னையும்பெற்றவர்தம்மிடைக் ❊
கணக்கிலாணையுங்கள்வர்கடம்மையும் ❊
வணக்குவான்மன்னன்மற்றைபார்தங்களை ❊
யிணக்குவானரகத்துளியமனே ❊

எ - து ஒருவர்க்கொருவர்வழக்கின்கண்மாறுபாட்டைப்பெற்றுவந்தவிடத்தழிவழக்குடையோரையுஞ்சோரர்முதலாயினோரையுந்தண்டித்துநிறுத்துமவனரசனே, யவனுற்றண்டப்படாதோரையுமாசாரியராற்பிராயச்சித்தப்படாதோரையுநரகத்தின்கட்செலுத்தித்தண்டிப்போனியமதருமராசன் எ - று (ஈ)

இந்தபாவங்கள்தீர்த்துக்கோடற்குப்பரிகாரஞ்செய்துகொள்ளுமாறுணர்த்துகின்றார்

ஆதலாற்செய்ததீங்கையறுத்திட ❊
வேதமாதிவிதியும்விளங்கிய ❊
போதகன்பதம்போற்றவவன்செயும் ❊
வாதியாதபிரத்தியவாயமே ❊

எ - து தீவினைசெய்தோர்க்குநரகமும்அந்தநரகத்தின்கட்செலுத்துமொருஇயமதருமராசனுமுண்டாகையினாலே, யான்மாக்கள்தாந்தாஞ்செய்தபாவங்களைபொழிப்பதுபொருட்டாகவேதமுதலியநூல்களிற்சொன்னவிதிகளையுமறிந்தவாசாரியனதுதிருவடியைவணங்குவாராயிலாசாரியனுமந்தவான்மாக்களைத்தீவினைகள்வருத்தாமைக்குக்காரணமானபரிகாரத்தைச்செய்துதீர்ப்பன் எ - று (ஈக

மேன்முடிந்ததுமுடித்துணர்த்துகின்றார்

அதிபாதகமுமதிற்பிரிவுமவலமகபாதகமைந்துங்
கதிதமகபாதகந்தன்னிற்கனிட்டமானபாதகமு
மதனிற்றணியவதற்கணியவுபபாதகமுமதற்கணிய
வதனிற்றணியபலபாவவிதமுந்தொகைசெய்தறைந்தாமே

எ - து அதிபாதகமுமந்த அதிபாதகபேதமுந்துன்பத்தைவிளைக்கும்பஞ்ச மாபாதகமுஞ்சொல்லப்பட்டவந்தப்பஞ்சமகாபாதகத்திற்றண்ணிமையானபாதகமுமந்தப்பாதகத்திற்றண்ணிமைபுடையவாயதற்கடுத்தவுபபாதகமுமந்தவுபபாதகத்துக்கடுத்திருப்பனவாயதனிலுந்தண்ணிதானநாலுவிதமானபாவபேதங்களையுமிவ்வியலின்கட்டொகுத்துச்சொன்னோமிதனைமுனிவனேயறிவாயாக எ-று கதிதம், வடமொழி

(௩௨)

வேறு

என்றுசிவநிந்தையெழுவாய்வினைபிசைத்தான்
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான்
வென்றுபுலனைந்தினைபுறம்வெப்பவினைநய
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே

எ - து வெளி

(௩௩)

சிவத்துதியுணர்த்துகின்றார். வேறு

கன்றியகாலனைக்காய்ந்தவனேகருசினைப்போக்கிருக்காய்ந்தவனே
வென்றிவில்வேடனைவீட்டினனேவிரும்படியார்க்கருள்வீட்டினனே
யன்றிருவர்க்கரிதாயவனேயண்டமுமாக்கியதாயவனே
யொன்றியவெங்கணுமுற்றவனேபுணர்ந்தனனுன்னையுமுற்றவனே

எ - து மார்க்கண்டனைக்கோபித்து வந்தஇயமனைச் சங்கரித்தோனே; ஆன்மாக்களுடையஅஞ்ஞானத்தைநீக்கும்வேதத்தை முனிவரறியும்வண்ணஞ்சொன்னோனே; வெற்றிபொருந்தியகருப்புவில்லினைபுடையவேளானகாமனைக்கொன்றோனே தன்னைவிரும்புமடியார்களுக்குக்கொடுக்கு முத்தியையுடையோனே. படியுமுடியுந் தேடியகாலத்தரிபிரமரிருவர்க்குங் காணுதற்கரிதாய் நின்றோனே; யண்டங்களையுண்டாக்கியவுலகமாதாவானோனே. யெப்பொருளுந்தானொருவனென்றுசொல்லும் வண்ணமெவ்விடத்தும் வியாத்தியினாலே வேறறப்பொருந்தி நின்றோனே, யெவரொவரிருவினைசெய்யக்கருதின நினைவையு முரிர்க்குயிராயிருந்தவரவர் நினைக்குமுன்

னையறிந்தோனைதவத்தோனே எ று

அண்டமுமென்னுமும்மை பிண்டமுமெனவெச்சத்தின்கண்வந்தது [ஈசு]

இதுவுமது

இடுபலிகொண்டுணியென்பவனேயிருவினைதீர்த்திடுமென்பவனே ❊
நடநவிலுந்தொழினல்லவனேநாசமுமாமயனல்லவனே ❊
மடலவிழ்கொன்றையமாலையனேவந்தனையாஞ்செயுமாலையனே ❊
படிதனிற்காசிப்பதியவனேபல்லுயிர்க்கெல்லாம்பதியவனே ❊

எ - து இருடிகள்மாதரில்லந்தோறுமிடாநின்றபலியினைப்பெற்றுண்போனென்றியாவருஞ்சொல்லப்படுவோனே, நல்வினைதீவினையிரண்டினையுநீக்குமென்றுடையவிறைவனே, பஞ்சகிருத்தியமாகியநிருத்தம்பயிலுநற்றொழிலையுடையோனே, பிறப்பிறப்பினையடையும்பிரமாவல்லாதோனே; யிதழ்விரியநின்றகொன்றைமாலையையுடையோனே, யாம்ஆராதனைசெய்யுந்திருக்கோயிலின்கணுள்ளோனே, பூமியின்கட்பொருந்தியகாசிப்பதியையுடையோனே, பலவாகியவான்மாக்களுக்கெல்லாங்கருத்தாவாயுள்ளோனே எ - று (ஈரு

குமரத்துதியுணர்த்துகின்றார்

வேறு

பூதிபூடணன்வேதபாடணன்பூளைசூடினன்காளியூடினன் ❊
வுதிநாயகன்பேதைநாயகனுமைபூணினன்வாய்மைபேணினன் ❊
போதன்மாதவனூர்டினேடவும்பூணவேணயங்காணுறுவரன் ❊
காதன்மாமகனாறுமாமுகன்காசில்வாசகம்பேசுவாமரோ ❊

எ - து திருநீற்றையேயாபரணமாகத்தரிப்போனுமாய்வேதத்தையருளிச்செய்வோனுமாய்ப்,பூளைமலரைத்திருச்சடையிலேசூடுவோனுமாய்க்;காளியுடனேவாதுசெய்வோனுமா, யாதிகருத்தாவுமா, யுமைக்குக்கணவனுமா; யாமையோட்டையாபரணமாகவணிந்தோனுமாய், வேதாகமங்களைப்பாதுகாப்போனுமாய்த், தாமரைமலரின்கணுறையும்பிரமாவுந், திருமாலுந், தம்முண்மாறுகொண்டுதேடவுமவர்கள், கண்ணிற்பொருந்தும்வண்ணநிலைமைபொருந்தியதன்மையைக்காணவொண்ணாதவனுமாயிருக்கிறசிவனுடையகுமரனைஆறுமுகக்கடவுளினதுகுற்றமற்றதிருவாக்கைப்புகழாநின்றேரும், எ - று (ஈகூ)

மேலகத்தியதுதியுணர்த்துகின்றார்

ஆறுசூடினனிறுமாடினனலங்பூலன்மூலநூபூல
னேறதேறினன்கீறுகூறைய னீறிலாதவன்றேறிலாதவன்
மாறிலாவரன்வேறிலாவரன் வாய்மைபேசினன்றீமைகூசினன்
கூறுமாகமங்தேறுமாதவன் கோயிலாவதென்கோவுபாவுமே

எ து கெங்கையைத்தரித்தோனுமாய் த்திருநீற்றைத்திருமேனியெங்கும்பூசு
வோனுமாய் வடவாலின்கீழிருப்போனுமாய் மாரிங்கூரிற்ஞாழல்முதலினடியிலே
யிருப்போனுமாயிடபத்தின்கணேறுவோனுமாய் க்கிழிக்கப்பட்டகோவணவாடை
யையுடையோனுமாய் நாசமில்லாதவனுமாயா ராயிலெவற்றையும் விளக்கும் ஞா
னுதித்தியனுமாய் வணங்கினோர்க்குமாமுதவரத்தைக்கொடுப்போனுமா யெவற்றி
ற் தமன்னியமாகாமற்கலந்து நிற்குஞ்சங்காரகருத்தாவுமா யுண்மைப் பொருளையு
பதேசிக்குமாசாரியனுமாய்த்தன்னையடைந்த வான்மாக்களுக்கு த்திமைசெய்யநா
னுவோனுமாயிருக்கிறசிவனருளிச்செய்த திவ்வியாகமத்தையுள்ளபடியறிந்தபெரி
யதபோதனனாகியஅகத்தியமுனிவனுக்கு என்கண்ணுநாவுமே யெழுந்தருளியிருக்
குந்திருக்கோயில் எ - று கோ எ து கண் (ாஎ)

ஆறுமுக நாவலர் பாவியலுரை முற்றும்

ஏழாவதுசுவர்க்கநரகவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றோவெனின் ஓத்துநுதலியதூஉமோத்தினது பெ
யருரைப்பவேவிளங்கும். ஆயினிவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் முன்னையி
யல்களிற்கூறியபுண்ணியபாவங்கள் செய்தோரடையுஞ் சுவர்க்கநரகங்களினது
திறத்தையுணர்த்தற்றாகலாற்சுவர்க்கநரகவியலென்னும்பெயர்த்து. இதனுளித்தலை
ச்செய்யுளிரண்டுமென்னுதலிற்றோவெனினிவ்வியலிற் கூறுந்திறத்தைத்தொகுத்து
ணர்த்துதனுதலிற்று

அறைந்தவதிபாதகமாதி யடைந்தாரியமனுலகதனைச் ❊
செறிந்துசிவந்தவிழிகண்டு சித்தங்கலங்கிச்செயலழிந்து ❊
பிறிந்துபுணர்ந்துபிலவழியை ப்பிடித்துத்தூதரடித்தெறிய ❊
மறிந்துநிரையக்குழிவீழ்ந்து வருந்தும்விதத்தைவகுப்பதன்முன் (௧)

அறிகமுனிவவறம்புரிந்தா ரவருமியமனுலகதனை ❊
நெறியிற்றருமபலநிகழ நீடுமகிழ்ச்சிகூடியிடச் ❊
செறிபுமுறையுமவர்க்கவனுஞ் செய்யுஞ்சிறப்புந்துறக்கத்தி ❊
னுறையுமுறையுந்தொகைசெய்தே யுரைப்பாமுலகமுவப்புறவே ❊

இவைபிரண்டுமொருதொடர், முன்னையியலிற்கூறிய அதிபாதகமுதலியபாவபேதங்களைச்செய்தோர் யமலோகத்திற் சென்றியமதன்மராசனது கோபத்தினாலேசிவந்தகண்ணினைக்கண்டுமனங்கலங்கிச்செயலற்றுச்சுவர்க்கத்துக்குப்போம்வழியைவிட்டு நரகத்துக்குப்போம்பெலத்துவாரத்தையடைந்து தம்மைப்பிடித்துக்கொண்டுசெல்லும் யமதூதர்களடித்தெடுத்தெறிய த்தலைகீழாய் நரகக்குழியின் கண்விழுந்துவருந்தும்விதங்களை வகுத்துச்சொல்வதுக்கு முன்னேபுண்ணியங்களைச்செய்தோர்களை யியமலோகத்தின் கண் முறையானே புண்ணியபலன்கள்வந்துபொருந்துகையினாலேநிலைபெற்றமனமகிழ்ச்சியுண்டாகச்சென்றடையுமுறையையுமவர்களுக்கந்த யமதன்மராசன் செய்யுஞ்சற்காரத்தையு மவர்கள் சுவர்க்கத்தின்கண்ணிருக்குமுறைமையையுந்தொகுத்துலகத்துக்கு மேன்மைபுண்டாகச்சொல்லாநின்றோம் அதனைமலையமுனிவனேயறியக்கடவை எ று (௨)

ஆக்கைநிலையில்லாமையுணர்த்துகின்றார்

முளைத்தகருவுமழவுருவு முதிராவுருவுமுதிர்ந்தமையா ❊
விளைத்தவடிவுமெனுமிவற்றி னிருந்தவுயிர்கள்வினையிறலும் ❊
வளைத்ததூதர்வதைசெய்ய மற்றோருடலம்பற்றிமுனம் ❊
விளைத்தசெய்திப்பலம்விளைய வியமபுரியைவிரவிடுமே ❊

எ து தெற்பகோளகையின் கட்பதிந்த கெற்பமும்பாலகவடிவமு முதிராததருணவடிவமுமூப்படைந்த தன்மையினாலேமெலிந்த விருத்தவடிவமுமானவிந்தச்சரீரங்களிற்பொருந்திய வான்மாக்களுழ்வினை தொலைந்தவளவில் வந்துசூழ்ந்தியமதூதர்கள்வதைக்கவிந்தப்பூதனுசரீரத்தைவிட்டு யாதனுசரீரத்தையடைந்து அவ்விடத்தின்முன்னாட்செய்த கன்மபலம்பொருந்தா நிற்பவதுவனுபவித்த ற்பொருட்டியமலோகத்தையடைவர்கள் எ று (௩)

மேனிறுத்தமுறையானேயறம்புரிந்தோர் யமலோகத்தையடையுமுறைமையுணர்த்துவான்றொடங்கியதனுட்பாதுகை யுதவினோரடையுமுறைமையுணர்த்துகின்றார் வேறு

பாதுகையுதவினர் பனவருமுறவே
வாதமுமனபரி வரவழியுகையா
வேதரியதுவென வெளிதுறவெவைவும்
போதகரிவரொன யமபுரிபுகுவார்

எது அந்தணர்பெறும்படிசெருப்பு மரவடியிவைகளைக்கொடுத்தோர், வேகத்தினால்வாயுவையொத்தகுதிரை, வழியின்கண்வந்து பொருந்த வதன்கணேறிநடத்தியிவர்க்கரியபொருள்யாதென்றுசொல்லும் வண்ணமெப்பொருளுங்கைவந்து பொருந்தி யறிவுடையோரிவரொன்று சொல்லும்வண்ணம் யமலோகத்தை யடைவர் எறு (௪)

குடைதானம்பண்ணினோரடையும்பலமுணர்த்துகின்றார்

சத்திரமுதவினர் தகைமையர்பெறவே
மொய்த்தெழுமுகிலினிழல் வழியுறமுறையா
லெத்தொகையினியன வவையெளிதுறவே
சித்தமுமகிழ்வுற யமபுரிசெறிவார்

எது வெளி இதனுள் சத்திரம் குடை (ரு)

வத்திரதானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பட்டினையுதவினர் பனவருமுறவே
தொட்டிடவினியன துகில்புனைவடிவுட
னிட்டமதுறுபயன் வழியெளிதுறவே
சிட்டருமிவரொன யமபுரிசெறிவார்

எது வெளி இதனுள் சிட்டர் பெரியோர் [௧௬]

மெத்தைதானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

தவிசினையுதவினர் தகைமையர்பெறவே
புவிதனிலரியது பொருவினையொரியது

சிவிகையுமுறவதன் மிசைவழி திகழ்வா
ரிவர்மிகுதவமொன யமபுரியிசைவார்

எ து வெளி இதனுள் தவிசு மெத்தை சிவிகை பல்லக்கு [எ]
அசுவதானம்பண்ணிலோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

தத்துறுபரியினை யுதவியதகைமைய
ரத்தகுபரிமிசை யழகுறவழியே
யெத்தொகைபினியன வவையெளிதுறவே
சித்தருமிவரொன யமபுரிசெறிவார்

எ து வெளி இதனுள் சித்தர், சித்தியையுடையோர் (அ)
கட்டில்தானம்பண்ணிலோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

கட்டிலைவையதனையு முதவினர்கவினு
ரிட்டமதுறுமஃதென வழியிடையே
கிட்டியவதனெடு கெழுமியவழகாற்
சிட்டருமிவரொன யமபுரிசெறிவார்

எ து வெளி இதனுள் கட்டிலை, கட்டில் (கூ)
சாலைதோப்புவைத்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பொழிலினைநிறுவிய பொருவருபுகழினர்
நிழலுறபொழில்வழி நிறைமலருறவே
விழைவினரினியன வெவையவைமிகவே
யுழகியரிவரொன யமபுரியடைவார்

எ து வெளி இதனுள் பொருவரு ஒப்பில்லாதது விழைவு விருப்பு [ய]
திருநந்தவனம் வைத்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பூமலிபொழிலினை நிறுவியபுகழினர்
தேமலிரதமு முறவணிசெறிவா
ரேமமுமிசைவர்கள் வழியிடையெளிதே
காமலிபுகழொடு நடுவனையடைவார்

எ து வெளி இதனுள் அணி அலங்காரம் ஏமம் இன்பம்நடுவன் எ து ஆன்மாக்கள் செய்யும்புண்ணியபாவங்களை யேற்றக்குறைச்ச லின்றியறிந் துதீவினைக்கீடாக நரகவேதனைசெய்தலால் நடுவனென.யமனுககோர்காரணப்பெயரா யிற்று [௰௯]

தேவர்கண்முதலியோர்க்குப்பணிவிடை செய்வோரடையு முறைமையுணர்த் துகின்றார்

தேவர்கண்முதலியர் பணிமுறைசெயுமவர் ❊
ஓவியமனமட வரலியருழையே ❊
மேவிடவழியிடை மிருகளியுறவே ❊
நாவணிபுகழொடு நடுவனையடைவார் ❊

எ து வெளி இதனுள் ஓவியம் சித்திரப்பாவை உழை பக்கம் (௰௨)

முற்கூறியதேவர்கண்முதலியோர் சன்னிதியிற்றிருவிளக்கிட்டோரடையுமு றைமையுணர்த்துகின்றார்

ஒளியினையவருறு வுதவியவவருந் ❊
தெளிதருநிருவுரு வடைவர்கடிசைசேர் ❊
மளினமுமறவழி மருவுவர்மதியோ ❊
ரளியுளரிவரென நடுவனையடைவார் ❊

எ து முற்கூறிய வந்த த்தேவர்முதலியோர் சன்னிதியிற்பொருந்த த்திபத்தி னையிட்டோர்களது மனத்துக்கெப்பொருளையுந் தெளிவித்தற்கு க்காரணமாயிருக்கி றவழகியவடிவைப்பெற்றநதவடிவிலொளியினாலே திக்குக்களிலேயுண்டானவிரு ளுமோட நல்லவழிக்கட் சென்றிவர் சிவனருளை யுள்ளோரென்று தம்மையறிவு டையோர்புகழடமதன்மராசனை யடைவோர் எ று

மளினம் மளினமென லகார ளகாரமயக்கமாயிற்று (௰௩)

அதிதிகளுக்கில்லங்கொடுத்தோரடையுமுறைமை யுணர்த்துகின்றார்

இல்லமுமுதவின ரிரவலர்வரவே ❊
நல்லகமருவிய வழியிடைநடவா ❊
வெல்லையில்வளமுற மகிழ்வுறவெளிதே ❊
வில்லியமிவரென யமனுரைவிழைவார் ❊

எ து வெளி இதனுள் வில்லி, காமராசன் உழை, இடம் (௰௪)

கோதானம்பண்ணினோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

கோவினையுதவினர் குலமறையவர்கைப் ❊
பூவணியிரதமுமுறவது புகுவார் ❊
ஓவியமனமட வரலியருடனே ❊
தேவருமிவரென யமபுரிசெறிவார் ❊

எ து வெளி இதனுள் அணி அழகு (௰௫)

அன்னதானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

அன்னமுமுதவின ரருமறையவர்பாற் ❊
றன்னிகரில்லன முறவழிதனினும் ❊
பன்னியவவைதனை யுணுமுறைபபிலா ❊
நன்னயரிவரென நடுவனையடைவார் ❊

எ து வெளி அன்னத்தை யனமென இடைக்குறை யாக்கினார் பன்னியது சொல்லியது நன்னயர் நல்லறிவினையுடையோர் (௰௬)

வியாதியாளர்க்கவுடததானஞ்செய்தோ ரடையுமுறைமை புணர்த்துகின்றார்

உதவினரவுடத முறுபிணி பினர்கைத் ❊
திதமுறுமுருவமு முறவழிசெறிவார். ❊
இதவிதமெவையவை யெளிமையினுறவே ❊
மதனனுமிவரென யமனுழைமகிழ்வார் ❊

எ து வெளி திதம் நிலை (௰௭)

குருபணிவிடைசெய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

குரவனபணிபுரி குணமுடையவர்முன் ❊
மருமலரிரதமும் வரவழியெதிரே ❊
திரமுறவதனமர் தெரிவையருடனே ❊
பொருவிலரிவரென யமபுரிபுகுவார் ❊

எ து வெளி திரமுற நிலைபெற [௰௮]

அந்தணர்க்குப்பாதம்விளக்கிஞ ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

அருமறையவர் திருவடியினையதனிற்
பரிவொடுகுளிர்புனல் பயில்வினையவருந்
தருவமர்குளிர்நிழல் வழிபெறுதகையே
பொருவிலரிவரொன யமபுரிபுகுவார்

எ து வெளி (௰௯)

அந்தணரிடத்துச்சொன்னரத்னுதிகளைத்தானஞ்செய்தோரடையுமுறைமையுணர்த்துகின்றார்

ஒளிமணியுதவினர் கனகமுமொருமைத்
தெளிதிகழ்மறையவர் திகழ்கரமதனிற்
றுளையிலகனகநல் வரைவழிதுதையா
வளியுளரிவரொன நடுவனையடைவார்

எ து வெளி துலை ஒட்பு துளையென லகார ளகாரமயக்கமாயிற்று துதைதல் நெருங்குதல் (௨௦)

பெரியோர்களுக்குப்பாதம்வருடஞே ரடையுமுறைமை யுணர்த்துகின்றார்

உத்தமமொருமைய வுணர்வினரடியொடு
கைத்தலமுறமுறைவருடிய கருணையர்
தத்துறுபரிமிசை யழகதுதகவே
சித்தசனிவரொன யமபுரிசெறிவார்

எ து வெளி சித்தசன் காமன் [௨௧]

அந்தணர்க்குத்தேரினைத்தானம்பண்ணிஞே ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

அருமறையவருற விரதமுமருளினர்
மருமலரிரதமுன் வரவழியிடையே
திரமுறவதனமர் தெரிவையருடனே
பொருவிலரிவரொன யமபுரிபுகுவார்

எ து வெளி (௨௨)

பூமிதானம்பண்ணிஞே ரடையுமுறைமையுணர்த்துகின்றார்

பூமினையுதவிய பொருவருபுகழினர்
[illegible]னியன வழிபெறுதகையே
[illegible]னியவொடு களியுறவளவா
[illegible]புகழொடு நடுவினையடைவார்

எ கூ வெளி காமினி தந்தமனத்துக்கொத்ததேவமகளிர் (உ-ரு)

முக்கூறியவந்தணர்க்கேயன்றியாவர்க்கு மன்னபானீயமுதவினோரடை
யுமுறைமையுணர்த்துகின்றார்

பானமுதவினர் பரிவொடுபலவித
போனமுதவினர் புரிதருமுறையே
தானினிதுறவவை தனையனுபவியா
மேனையரினொன யமனுழைவிழைவார்

எ கூ வெளி மேனயர் மேலானவறிவினையுடையோர் [உ-ரு]

சண்டேக்கூறியதேயன்றி மற்றுமுள்ளதானங்கள் பண்ணினோரடையுமு
றைமைக்குமோர்பொதுவிதியுணர்த்துகின்றார்

மற்றுளவினைகல மருவினரவரும்
மற்றவர்வதிதனின் முறைபெறுபலமுக்
கற்றவர்துயரிலர் துரிசறுநெற்சேர்
கற்றவரினொன கடுவினையடைவார்

எ கூ வெளி துரிசு குற்றம் குற்றுதல் அனுபவித்தல் (உ-ரு)

முக்கூறியதானங்களெல்லாவற்றினுள்ளு மன்னதானமேயதிகதானமெ
னவதற்கோர்சிறப்புவிதியுணர்த்துகின்றார்

வேறு

அன்னதானமறைந்தவற்று ளதிகபலமேயருந்தினனுக்
கென்னவெனிக்குமப்பொழுதே யின்பந்தனையுமிசைவிக்கு
மன்னவுடனுள்வலியதனுன் மாறில்பொருளேயமைந்ததனு
லென்னவிதுவமைமிதற்கில்லை மண்ணின்கண்ணோவெவ்விடத்தும்

எ கூ முக்கூறியதானபேத மெல்லாவற்றினுள்ளு மன்னதானமேயதிகமான

பலன்களைக்கொடுக்கும், அந்தவன்னத்தைப்பொசித்தோனுக்கக்கணத்திலேதானே பசித்துயரத்தைப்போக்கும்ஃதன்றிச்சுகத்தையுஞ்விளைக்குஞ்சரீரத்துண்டாயபெலமுநிலைபெறுமாதலாலந்தவன்னமேயொப்பிலாதபொருளுமாமாகையினாலேயிதற்குவமையைவிசாரிக்கிற்பூமியின்கண்மாத்திரமோவெவ்வுலகத்தினுமில்லை-று (உ௬

அன்னமேசரீரமெடுத்தற்குக்காரணமாமென்பதூஉ மன்னமேபடைத்தளித்தழிக்குமென்பதூஉமுணர்த்துகின்றார்

அன்னமதனிலாமுதிர மதனாற்றசையாமதனாலே
மன்னுமலினசுக்கிலமு மலினமதனாற்கருவாகு
மன்னமின்றேலுயிர்வாழு மாக்கைவினையவழிந்தகலு
மன்னமதுவேயுடறன்னை யாக்குநிறுத்துமழித்திடுமே

எ - து அன்னத்திலேநின்றுமிரத்தமுண்டா, மந்தவிரத்தத்தினாலேதசையுண்டா மந்தத்தசையினாலேயழுக்காகிய சுக்கிலநிலைபெறு, மந்தச்சுக்கிலத்தினாலேகெற்பந்தரித்துச்சரீரமுண்டா, முன்னர்க்கூறியவற்றிற்கெல்லாம்பரம்பரையினாலேகாரணமாயிருக்கு, மன்னமில்லையாயினுயிரிருந்துவாழுமுடம்புசுருதியிலேயழிந்துபோ, மாகையினாலேயந்தவன்னமே யுடலினையுண்டாக்கு, மஃதன்றித்தானேயுணவாய்நின்றந்தவுடலினைக்காக்குந் தானில்லையாயினந்தவுடலினையழிக்கும். எ று (உ௭

பசிநோயுற்றோர்க்கர்நோயன்னத்தினாலன்றி ப்பிறிதொன்றினாலுந்தீராதென்பதூஉம் யாவர்க்குமன்னமே யாதாரமென்பதூஉமுணர்த்துகின்றார்

உற்றுன்பசியைக்கனகத்தா லொளிசேர்மணியாலொண்டொடியான்
மற்றுபுளநல்வளனாலு மாற்றவலனேவலன்வயினாட்
கெற்பந்தனக்கும்பாலனுக்குங் கிளர்ந்ததருணன்றனக்குபுட
லொற்கபுடையவிருத்தனுக்கு புண்டோநிலையோதனமொழித்தே

எ - து - வெளி - ஒற்கம் - மெலிவு - (உ௮)

முற்கூறியமானிடநோயன்றித் தேவர் முதலியோர்விரும்பவுதமன்னமே யென்பதூஉமதுவேபசிநோய்க்குமருந்தென்பதூஉமுணர்த்துகின்றார்.

தேவர்முனிவர்தானவருந் திளைப்பருணவைத்திதிவிரும்பி
யாவருணவைவிரும்பாதா ரிடர்சேருடலுண்முந்நூற்றெட்
டோவாநோயுண்டவற்றுள்ளும்பசிநோய் கொடியதுறினதனுக்
காவாவென்றேயருளாளனருத்து மருந்தோதனமன்றே

எ - து தேவர்களு மிருடிகளு மசுரர்களுந் தங்கள் தங்கள் சரீரமழியாமல்நிற்றலைவேண்டியன்னமாதியவுணவினையருந்துவர்கள், ஆகையினாலேயுலகத்தின்கண்ணெவர்தாமன்னத்தைவிரும்பாமல்விட்டோ, ரஃதுமன்றித்தக்கத்துக்குக்காரணமாய்ப்பொருந்தியவுடம்பின்கட்டொடர்ச்சிவிடாத முந்நூற்றெட்டு வியாதியுளதாம்அதனுள்ளும்பசிநோயேமிகவும்பொல்லாதது, அப்பசிநோயையாதொருவர் பொருந்தின்அருளினையுடையோரந்தோவந்தோவென்றிரங்கி யதற்குக்கொடுக்கு மருந்தாவதுமந்தவன்னமே. எ - று அன்றென்கிளவியாமென்றுகூறும் (உகூ)

மேலன்னதானஞ் செய்வோரோபிராணதானஞ்செய்வோராயுமன்றுணர்த்துகின்றார்

உற்றபசிநோய்க்கனமருந்தை யுதவுவாருமிலராகி
லற்றதுயிருமவ்வுடலு க்கன்னமளிப்பாரவருண்டேற்
பெற்றதுயிருமவ்வுடலம் பெறுமவ்வுயிருந்தருமாதி
சொற்றையீவானுயிரீவான் றருமமுதலுந்துயக்கறவே

எ - து யாதாமொருவர்கொண்டபசிநோய்க்கன்னமாகிய மருந்தினைக்கொடுக்குந்தாதாக்களுமில்லையாயில் அந்தவுடலுக்குயிருமில்லையாய்விடும், அன்னதானஞ் செய்வோருளராயிற் பசிநோய்நீங்கியந்தவுடம்புஉயிரைப்பெற்று வாழு, மந்தவுயிருமறமுதலியநான்கையுஞ் செய்யப்பெறுமாகையினாலே யன்னதானஞ்செய்வோன்பிராணதானஞ் செய்வோனும், அதுவேயன்றிவிபரீதமறவறம்பெருள்ளன்டம்வீடென்னுநான்கினையுந்தானஞ்செய்தோனுமாம். எ - து

சோறு - சொற்றையெனக்குறுகிற்று, ஈவானென்பதனைத்தருமமுதலுமென்பதனோடுங்கூட்டுக. (௩௦)

அன்னதானஞ்செய்வோரிம்மைமறுமைப்பயன்களை யடைவரென்பதூஉந்தபோதனர்க்கன்னதானஞ்செய்வோர் தவப்பயன்பேர்பாதியாகநிற்பதென்பதூஉமுணர்த்துகின்றார்

பொன்னைமணியைப்புனையிழையை மற்றும்விரும்பும்பொருளினையு
மன்னமளிப்பாரிங்கடைவ ரங்குந்தாம்வேண்டியவடைவ
ரன்னமதனையருந்தவரை யருத்திஞர்களவர்பலத்திற்
றுன்னுவார்களொருபாதி யவர்தாமொருபாற்றுன்னுவரே

எ - து அன்னதானஞ்செய்வோரிவ்வுலகத்தின் கண்ணேதானே பொன்னையும் ரத்னங்களையுமணியாநிற்குமாபரணங்களையுடைய மாதரையுமற்றுந்தாம்வேண்டியபதார்த்தங்களையும்பெறுவர், அந்தத்தேவலோகத்தின்கண்ணுந் தாம்வேண்டிய போகங்களைப்பெறுவர் அரியதபோதனர்களை யன்னத்தைப்பொசிப்பித்தோர்கள் அவர்செய்ததபோபலத்திலொருபாதிபெறுவர்கள், அந்தத்தபோதனர்கள்மற்றவொருபாதியேபெறுவர்கள். எ - று

(௩௧

சரீரத்துக்குமதனுற்செய்யுமறமுதலியவற்றிற்கு மன்னமேமேலானகாரணமென்றுணர்த்துகின்றார்

அன்னமாக்கைதனையாக்கு மதனுலறமுன்னுளவாகு
மன்னமதனுலனைத்தினுக்கு மதிககரணமதனுலே
யன்னமதனுக்கொப்பான கரணமில்லையாயுங்கா
லன்னையானகாரணமும் புதல்வர்க்குளதோவகலிடத்தே

எ - து அன்னஞ்சரீரத்தையுண்டாக்கு மந்தச்சரீரத்தினுலே யறமுதலியநான்குமுண்டாமதனுலெவற்றிற்கு மந் தவன்னந்தானே மேலானகாரண மாகையினுலேவிசாரிக்குமிட த்தன்னத்துக்கு நிகரானகாரணமொன்றுமில்லை, யஃதெங்ஙனமென்னிற்பூமியின்கட்பிள்ளைகளுக்கு மாதாவுக்குநிகரானகாரணமுமுளதோவாதலாற்சரீரமுண்டாவதற்கன்னமுமாதாவுமே முதற்காரணம். எ - று

காரணங் - கரணமெனக்குறுகிற்று

(௩௨)

அன்னமேசிருட்டிமுதலியகாரியகருத்தாக்கண் மூவருமாமெனவுணர்த்துகின்றார்

அன்னமதனையுலகனைத்து மாக்குமயனென்றறையுமறை
மன்னுமுலகந்தனைக்காக்கு மாயனெனவுமதித்துடைக்குஞ்
சொன்னவுலகமனைத்தினையுந் துடைக்குமரனுமெனச்சொல்லு
மின்னமுறையாலெவற்றினுக்கு மிஃதேமுதலென்றெண்ணுகவே

எ - து - வெளி - இதனுள் - முதல் - காரணம் (௩௩

உதகத்துக்கெய்தியதோர்சிறப்புவிதியு மன்றோதகமிரண்டையுந்தானஞ்
செய்தலேயதிகபலன்களைத்தருமென்பதுமுணர்த்துகின்றார்

உதகமதனையுபிரொல்லா முண்ணவிரும்புமதனாலே ❋
யுதகந்தனக்குமொப்பானபொருள் வேறில்லைபுலகத்து ❋
ளுதகமன்னமெனுமிரண் டுமுயிரையோம்புமதனாலே ❋
யுதகமன்னமெனுமிரண் டுமுதவிற்பரமபலமுளதே ❋

எ - து — வெளி ஓம்புதல் - காத்தல் (௩௪)

இங்ஙனஞ்சிறப்பித் தவன்னதானமுத லாகியவிசிட்ட
தானங்களைட்டுமற்றுமுள்ளதானமுஞ்செய்தோர்,
யமலோகத்தினையடைந்துபின்னர்ச்சுவர்க்கத்தையட
டைவரென்பதுணர்த்துகின்றார்

அன்னமுதகமாவசுவமாடைகுடைகட்டிலைவபசின ❋
மென்னுமிவைகளிருநான்கு மீயிற்பிரேதபதியிரங்குஞ் ❋
சொன்னபடியேமற் றுமுளதானம்புரிவார் துயரகலத் ❋
துன்னுவார்களியமபுரியதன்பின் னடைவர் துறக்கமுமே ❋

எ - து அன்னமுந்-தண்ணீரும்-யானையுங்-குதிரையும்துகிலுங், குடையும்-படுக்கைக்கட்டிலும்- புலித்தோன்முதலியவாதனமு- மென்னுமிந்தவெட்டுவிசிட்டதானங்களையுஞ்செய்வார் யமதன்மராசன், அனுக்கிரகத்தைப்பண்ணும்படிசெல்வர்கள், ஈண்டுரைத்தபடிமற்றுமுள்ளதானங்களையுஞ்செய்வோர்தமதுதுக்கமெல்லாம்விட்டுநீங்கயமலோகத்தையடைவர்கள், அதற்குப்பின்பங்ஙனங்கூறியவிருவிததானஞ்செய்தோருமவனேவலினாற்சுவர்க்கலோகத்தையுமடைவர்கள் எ-று (௩௫)

மேனிறுத்தமுறையானேயறம்புரிந்தோர்க்கியமதன்ம
ராசன்செய்யுஞ்சிறப்பைமூன்றுசெய்யுளாற்குளகமா
கவுணர்த்துகின்றார்

வேறு

தருமநீதியர்கடருமராசபுரியடையவேதருமராசனும் ❋
விரையவேயவனையெதிர்கொளாவரவுவினவியேகருணைவிழைவினு ❋
லரியவாதனமுமருளியேயுதகவிதியுமாதிநடுவந்தமு ❋
மொருமையோடவர்தமுளமுமோகையுறவுதவியேமதுரவுரையுமே ❋

எ - து வெளி

அரியவாதனம் - சிங்காதனம் - உதகவிதி, பாத்தியாசமலர்க்கியம் - ஆதிநடு வந்தம் - பாதமுகஞ்சிரசு

(௩௫)

வேதமாதிதனிலோதுநீதிபலமேவினீரொருமைமேதையா
லாதலானுமையலாதுதேடினருமாருயிர்க்குறுதியாவரோ
நாதகீதநவின்மாதர்சூழநடமாடவேறுசிலர்நாண்மலர்ப்
போதுசேரிரதமேறியேகடிதுபோமினீரமரர்போகமே

எ - து வெளி — மேதை-யறிவு - போகந்தருமிடத்தைப்போகமெனக் கூறியதுபொருளாகுபெயராயிற்று

(௩௬)

எண்ணியாதொருபலத்தைநீரறமியற்றினீர்தவறுமின்றியே
நண்ணியேயதனைவிண்ணின்மீதனுபவித்துநாளுமதுமாளமுன்
பண்ணியேயுடையபாவலேசமதுபாறவேயெமதுபாலனைந்
துண்மினீர்நரகயாதனைப்பலமுமென்றவர்க்கருளுநாளப்பனே

எ - து — வெளி — லேசம் - சிறிது

(௩௭)

மேலவர்கள்சுவர்க்கத்தையடையுமுறைமையுணர்த்துகின்றார்

ஏவல்பெற்றுநமனைத்தணந்திரதமேறியேயறிவுதேறியே
தேவர்பெற்றநிலைதேசமுற்றதுலபோகமுற்றுமுறைசேரவே
மேவியிட்டமுறவேயிருப்பரிடர்மேவுதற்கரியர்மெய்ம்மையே
பாவமுற்றினர்கள்பாதளக்குழியிலேதமேயினிமைபற்றுமே

எ - து இங்ஙனம்யமதன்மராசனேவலைப் பெற்றுப்பின்னரவனை நீங்கிப்புட்பகவிமானத்தேறியறிவுதெளிந்துதேவர்கள்பெற்றுவாழுஞ்சுவர்க்கலோகத்தின்கணடைந்துநிகரில்லாதபோகங்களைமுழுதும்புண்ணியங்களையாச்சித்தமுறையே வந்துபொருந்தவவையிற்றினைப்பெற்றுத்தாந்தாமிச்சித்தபொருள்களும்வந்துகைகூடவிருந்துவாழ்வர்கள், அஃதேயன்றித்துன்பங்களொன்றும்பொருந்தார்கள். இதுசத்தியமேதேவலோகத்தின்கட்டுன்பமெய்தாதோவெனிற்பாவஞ்செய்தோர்களைய்துநரகக்குழியிற்றுன்பம்புண்ணியஞ்செய்தோர்களைய்துஞ்சுவர்க்கவின்பத்தின்கட்பொருந்துமோபொருந்தாது எ- று சுவர்க்கபூமியின்கட்டுன்பமெ

ய்திருலைதுவுநரகபூமியாய்விடுமென்பதுபற் றியேதமேயினிமைபற்றுமே யெனவி ளைப்படுத்தினார் (ஈக)

இங்ஙனம்புண்ணியஞ்செய்தோர்களடையும்பயனைக்கூறிமேற்பா வஞ்செய்தோர்களடையும்பயனுணர்த்துகின்றார்

வேறு

புண்ணியபலங்கடன்னைப்புகன்றனம்புவியிற்பாவம்
பண்ணினர்பலமுஞ்சொல்வாம்பருப்பதமுனிவகேணி
திண்ணியர்பாவபேதந்தீர்ந்தவர்சிவனுமுண்டென்
றெண்ணியரச்சமெய்தக்கேட்டிடும்போதோவென்றும்

எ - து வாராய்பொதியமாமலையின் கணிருக்கு முனிவனே யிங்ஙனம்புண்ணி யஞ்செய்தோர்களெய்தும் பலன்களைச்சொன்னோ,மேலிந்தப்பூமியின்கட்பாவஞ் செய்தோர்களெய்தும்பயனையும் திடசித்தராய்ப்பாவபேதங்களையுநீங்கிச்சிவனையு முண்டென்று கருதினோர்கேட்குங் காலமேயன்றி யெக்காலமுமச்சமெய்தும்வ ண்ணஞ்சொல்லாநின்றோமதனைநீகேட்பாயாக எ - று

ஓகாரம் பிரிநிலைக்கண்வந்தது (சூ0)

பாவான்மாக்களெல்லாம் யமலோகத்தையடையுமுறைமைக்கோர்பொ துவிதியுணர்த்துகின்றார்

கருவினுளுயிருமற்றைக்காயபேதங்கடன்னின்
மருவியவுயிருந்தொல்லை வல்வினைமாயவச்சம்
பெருகிடமோகந்துன்பம் பிரிந்துடற்பிரியும்போதிற்
றருமுடற்றாங்கித்தூதர் செலுத்திடயமனிசாரும்

எ - து நெற்பத்தின்கண்ணிருக்குமுயிரும் அதல்லாமன்னிருகபேதங்கண்முத லியயோனிபேதங்களிலிருக்குமான்மாக்களு முன்னுள்ளபிராரத்தகன்மந்தொலைந் தவாறேபயமுமோகமுந்துயரமு மேலிடாநிற்ப வெடுத்தவுடலினின்றுநீங்கியங்ங னநீங்குங்காலத்திலேயுண்டாம் யாதனுசரீரத்தையெடுத்துயமதூதர்கள்செலுத்த யமலோக த்தையடையும் எ - று - அச்சம் - யமனு தாலெய்துநடுக்கம் மோகம் - புத்திரமித்திராதிகளைவிட்டுப்போகிறோமேயென்றெண்ணுமாசை - து ன்பம் - மரணவேதனை (சக)

மகமேருவின்றென் பாலானவை வச்சுதமென்னும் யமலோகம் பூமிக்கு மேலித்தனையோசனை தூரத்திலிருக்குமென்னு மெல்லையு நல்வினைதிவினையோர்க்கஃதுஅணிமைதூரமுமாமாறுமுணர்த்துகின்றார்

மண்டனின்மேருவென்னு மலைதனிற்றென்பால் வார்ந்த
வெண்டிகழெண்பத்தாறு யிரமெனும்யோசனைந்தந்
தண்டமுந்தரித்தகையன் றங்கியயமனிசாருந்
துண்டர்கடமக்குத்தூர மணித்தறந்துன்னினார்க்கே

எ - து எண்விளங்காநின்றவெண்பத்தாறுயிரம் யோசனையளவுபூமிக்குமேல் நீண்டுமகமேருவென்னுமலைக்கு த்தென்புறத்திசையின்கட்டண்டாயுதத்தைத்தரிக்கும்யமதன்மராசனிருந்துவாழும் யமனியென்னும் படைவீடுபொருந்தும்,அதுபாவிகளுக்கதிதூரமாயும் புண்ணியவான்களுக்குச் சமீபமாயுந்தோன்றும் - எ - று

இல்லுருபு - குவ்வுருபாய்மயங்கிற்று (௪௨)

நிறுத்தமுறையானே திவினையோர் யமலோகத்தை யடையுமுறைமையுணர்த்துவான்றொடங்குகின்றார்

சித்திரகுத்தன்சீவன் செய்தியின்றிறங்களெல்லாம்
புத்தியினொருமைசெய்து புகன்றிடச்சமனும்போக்க
வொத்துயிர்கவருந்தூதர் வழியினுமொறுக்கவொல்லாச்
சித்தமுங்கலுழ்ந்துதீயார் செல்லைகமுன்செப்புவாமே

எ - து சித்திரகுத்தனென்னுங் கணக்கன் - ஆன்மாக்கள்செய்தகன்மபேதங்களெல்லாவற்றினையுந்தன்னுடைய வறிவினாலேநிச்சயித்திவரிவர்செய்தகன்மமிதுவென்றுசொல்லவதனைக்கேட்டிடமறுமேவுகையினாலே சென்றுபொருந்தியுயிரைவாங்காநின்ற யமதூதர்கள்பூமியின்கணின்று கொண்டுவரும்வழியினுறுதுயர்செய்யவுள்ளமுமெலிந்தழுதுதீவினையோர்சொல்லுமுறைமையை முதற்கட்சொல்லாநின்றார்ரும் எ - று

கலுழ்ந்து - என்பதற்கு - கலங்கியெனவுமமையும் (௪௩)

மேற்றீவினையோரை யமலோகமடைவிப்பிக்கும் யமதூதர்களதுஇயல்பினைநாலுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

மைத்திகழ்தருவரையினைநிகர் வடிவுடையவர்வலியார்
மெய்த்திகழ்தருமரணமுமுளர் விடவரவனவினையார்
குத்திரவினைபலவுடையவர் குணமிலவலகொடியார்
இத்தகைமையரியமன துரைவழிவிலகுதலிலரே

எ - து யமதூதர்களானோர், கருமைவிளங்காநின்றவஞ்சனைபருவந்தரையொத்தசரீரத்தையுமிகுந் தபெலங்களையுஞ் சரீரத்தில்விளங்காநின்ற வச்சிரவாங்கினையும்விடத்தையுமிழாநின்றபாம்பினையொத்ததீமைத்தொழிலினையும்வஞ்சனைத்தொழில்பலவற்றையும்பாவிகளிடத்து நன்மையில்லாதுதீமைகளையேவல்லவொருமையினையுமுடையர்களாயிருப்பர்க,ளித்தன்மையையுடையதூதர்கள்யமனுடையசொல்லின்வழியைத்தப்பார்கள். எ - று

குத்திரவினை தாமாகமுன்னில்லாதுவேறொன்றையேதுவாக்கிக்கோறல் முமு

வீரமுமுளர்வெகுளியுமுளர் விரைதலுமுளருடலத்
தீரமுமுளர்சினமுதலிய செறுநெறியினர்திருமுன்
னீரமுமுளரொரியுமிழ்விழியிருமையுமுளரிகலிற்
கூரமுமுளர்கொடுபடையினுமுயிருணவலகொடியார்

எ - து வீரத்தினையுந்தீவினையோர்மேல்வைத்தகோபத்தினையும்மடமுன்மரர்சனைவியகருமங்களில்மனம்மடியாதுசெல்லும்வினைவினையு, மழியாதவச்சிரயாக்கையினையுஞ்சினமுதலியவற்றைக்கெடுக்குநன்னெறியையுடைய தீபோதுனர்கள்சன்னிதியிலிரக்கத்தினையுநெருப்பினைச்சொரியாநிற்கு மிரண்டுவிழியின்றன்மையினையும்பகைத்தோரிடத்துக்கொடுமையேசெய்யுந்தொழிலினையுந் தமக்கேமாயுதங்களைப்பற்றவு முயிரினை யுண்ணவல்ல தீமையினையு முடையர்களாயிருப்பர்கள். எ - று (அரு)

காலமுமிதுவெனவறியுமூர் கருமமுமிவையெனவுந்
சூலமுமொருகரமருவினர் சுழல்வலையமுமொருகைப்
பாலகனரனெனுமறிவறு பதர்மனிதர்கள்பயமுற்
றோலமுமிடவுடலினைவிட வுயிர்கவர்வினையுடையார்

எ - து முற்கூறியவந்தத்தூதர்கள் அவரவர்க்கமைத்தகாலமிதுவென்றும்

அவரவர்செய்தகன்மங்களிவையென்று மறியவல்லோருமாய்ஒருகையிலேசூலமு மொருகையிலேசுழலாநின்றபாசக்கயிறும்பொருந்திஒருமாய்ச்சங்காரகருத்தா வாகியஅரனேயுலகபரிபாலகனென் றுணருமறிவில்லாத பதரினையொத்தமானி டர்கள்பயப்பட்டலறவுயிரானது டலினைவிட்டுநீங்க வவ்வுயிரினைவாங்குங்கொலைத் தொழிலையுடையோர்களுமாயிருப்பர்கள் - எ - று

பாலகன் - காப்போன் - (௪௬)

நிட்டுரதரர்நினைவழியவு நிலையிலசிலருடலைக்
கட்டிவர்முதுகுறவலிமலி கயிறுறவிருகரமும்
பிட்டுதிரமுமொழுகிடவிடர் பெருகிடவலறிடவும்
வெட்டுவருயர்விணில லமரவிசிறுவரறவெடியார்

எ . து - நிட்டூரத்தையுமிகவும்வெடித்தசொல்லினையுமுடையோரான யமதூத ர்கள்தம்மைக்கண்டவுடன் அறிவழிந்துபோகாநிற்பவும் விடாமலொரு நிலையுமில் லாதசிலபாவிகளுடலைத் திருப்பி மடக்கிவளைத்து முதுகின்கட்பொருந்த விரண்டு கையையுமுரமிகுந்த கயிற்றாற்சேர்த்துக்கட்டியுடம்பெல்லாம்பிண்டிரத்தத்தாரை யொழுகவுந் துக்கம்பெருகவும் வாய்கிடந்தலறவும்வெட்டியுயர்ந்த ஆகாசத்தின் கட்சுழலவெடுத்துவீசாநிற்பர் - எ - று (௪௭)

இங்ஙனங்கூறியயமதூதர்களாலே பாவஞ்செய்தோர்கள்யமலோகத்து க்குப்போம்பொல்லாவழியையடைவரென்றுணர்த்துகின்றார்

இத்தகைமையவியமன படரிடைவிடலிலவலியாற்
றுத்திரர்குணமறுசிறுமையர் கொடியனவினையுடையார்
வைத்துளமுடனடலையுமுற நயவியதுணையறவே
சித்திரமிகுதுயருறுவழி செறிவர்கள்பிறிவறவே

எ - து - இந்தக்குணங்களோடுபொருந்தியவியமதூதர்கள துநீங்காதவலிம யினாலேவஞ்சகருமாய்நற்குணமில்லாத வற்பப்புத்தியையுடையோருமாய் க்கொ டுமையையுடையனவானதீவினைகளையுடையபாவிகள்,உளளமெலிந்துதுன்பமுமே லிடநலம்பொருந்தியதுணையுமற்றுநாலுவிதமாக மிகுந்ததுயரம்பொருந்தியவழிக் கணீங்காதடைவர்கள் - எ - று (௪௮)

அவ்வழியின்கணுளதாந் துயரத்தினைப்பதினாலுசெய்யுளா லுணர்த்துகின்றார்

வேறு

கண்டகமுறுநெறி செறிசிலகரிசர்கள்கதறு
விண்டிடவிரைவினர் விடுமுறையறிகிலர்விழுவார்
திண்டிகழ்சிலைநுதி செறிநெறிகுறுகியசிறியார்
பிண்டிடவிணையடி பிழையுறவிழுவர்கள்பிழையார்

எ - து - தாந்தாஞ்செய்த பாவத்தினாலே பெருமுள்ளுக்களடர்ந்த வழியின்கண்யமபுரிக்குச்செல்லாநிற்குஞ்சிலபாவிகள் அந்தமுள்ளுக்கள் காலின்கட்டைப்பவலறிச்செல்லுவர், செல்லும்போதந்த முட்களைப்பிடுங்கிப்போட்டுச்செல்லு முறைமையையறியாமல்வீழ்ந்துகிடப்பர்கள், பிழைபொருந்திய சிலசிறியார் திண்ணிமையானகூரியகல்லுக்கள்பரந்தவழியின் கணணுகியந்த க்கல்லுக்களி ரண்டு காலிலுஞ்சிதையத்தைக்கையினாலே நிலத்தில்வீழ்வர்கள் - எ - று (சக)

அளறுறுநெறியிடையடியுறவிடுமுறையறியா
ருளமறுகிடவுடனடலையுமுறவலியொழிவார்
பளமுறுநெறிசிலர்படர்வர்களிடர்பலபடவே
பிளவுறவுடன்முழுதரிகுசைநுதிவழிபிரியார்

எ - து சிலபாவிகள், சேறுபரந்தவழியின்கண் அடிவைப்பவந்தச்சேறுகாலினின்றும்விடுமுறையைக்காணாது மனஞ்சுழலச்சரீரந்துக்கத்தையடையத்தங்கள் பெலமுங்கெடாநிற்பர்கள், சிலர் ஆழ்ந்தபள்ளங்கள்பொருந்தியவழியின்கண் துக்கங்கள்பலவுமுண்டாகச்செல்லாநிற்பர்கள், சிலருடம்பெல்லாம்பிளக்கவரியாநிற்குங்கூரியவாயினையுடையநாணற்புல்லுகள்பொருந்தியவழியைநீங்காது செல்லுவர் எ - று . நடலை - துன்பம் (ருய)

விடமமுமுறுதடம்விரவியகலர்சிலர்மெலிவார்
தடவரையிடைநடைதளர்வுறவுறவறுதமியார்
பொடியறுதழல்வழிபுகுதுவர்நிலையிலர்புலியார்
படுகுழிவிடமமுமடைவர்கள்சிலரிடர்படவே

எ - து சிலபாவிகள், செவ்வைவழியின்றிவஞ்சனைமிகுந்தவழியின்கட்சென்றதனாற்றுக்கத்தையுறுவர்கள், சிலர்-பெரியமலைவழியின்கட்சென்றேற்றமிறக்கங்களிலேநடைகூடாமற்கால்தளரவங்ஙனந்தமக்கோருறவுமில்லாததனியராய்நிற்பர்கள், சிலர்தமக்கொருநிலையுமில்லாராய்ப்பொடிமூடாதெரியுநெருப்பினூடு

பொருந்தியவழியின்கட்புகுதாநிற்பர்கள், சிலர்படுகுழிமுதலியவஞ்சனைகள்பொருந்தியவழியின்கட்சென்றுதுக்கத்தையுறுநிற்பர்கள். எ - று விஷமம்விடமாயிற்று - தமி - தனி - புல்லியாரைப்புலியார் - என்றார் (௫௧)

சரநிகர்சகலமுமுறுநெறிசெறிசிலதமியார்
வெருவுவரழனிகர்வியன்மணலிடைவழிவிழுவார்
நிரைமுளைநிறுவியநெறியிடையடிதளர்நிலையார்
பருவரலுறுவர்கண்முளைமுளுமுறுநெறிபடர்வார்

எ - து சிலரம்புபோலறுக்குமோடுஞ்சல்லியும்பரந்தவழியின்கட்சென்றுதமக்கோர்துணையுமற்றுஅந்தவழிதொலையாமையான்நடுங்காநிற்பர்கள், சிலர்நெருப்பினைபொத்தசுடுமணல்பரந்தவழியின்கட்சென்றச்சூடுபொறுமல்விழாநிற்பர்கள், சிலரொழுங்குபடவசிகளைநிறுத்தியவழியின்கட்சென்றந்தவசிகள்காலின்கட்டைப்பவதனாற்செல்லமாட்டாதடிதளருநிலையினையுடையோர்சிலர்மூங்கின்முட்கள்பரந்தவழியின்கட்சென்றவற்றினாற்றுன்பமுறுநிற்பர்கள் எ - று
நெறி — வழி-வசி-வாள் (௫௨)

கூரிருணெறிசெறிகொடுங்கையர்சிலர்நிலைகுலைவார்
காரயவளிதொடர்கனலனல்வழியிடைகலுழ்வார்
ஈரழல்வனநெறியடையுநர்சிலர்நினைவழிவார்
திரவுமறிகிலரழனிகர்சிலைசெறிசிறியார்

எ - து சிலர்மிகுந்தவிருள்பரந்தவழியின்கட்சென்றுவெளிகாணாமனிலையழிவார், சிலர்தியொழுகக்காய்ச்சியகரியவிருப்புச்சங்கிலிபின்னிக்கிடக்கும்வழியின்கட்சென்று அடியிடமாட்டாமலழாநிற்பர்கள்-சிலர்-திக்காட்டினையுடையவழியின்கட்சென்றந்தக்காட்டுத்தியிற்பட்டறிவழிடாநிற்பர்கள் - சிலர், நெருப்புப்போலச்சுடாநிற்குங்கல்லுகள்பொருந்தியவழியின்கட்சென்றதலைநீங்கும்வகையுந்தெரியாமன்மயங்காநிற்பர்கள் எ - று (௫௩)

உடைவர்கள்பனிநனி யுறுநெறியதுதனையுறுவார்
மிடறளவுறுமணல் விரவியகலர்சிலர்மெலிவார்
சுடரனதுளிமழை சொரிவழிதனினிலைதொலைவார்
வடிவறமயலுறவறனிறினழல் வசமறுவார்

எ - து - சிலர், பனிமிகவும்பொருந்திய வழியின்கணடைந்த ப்பனியினாலே
ச்சாமுடைடயவர்கள், சிலர், கழுத்தளவமிழ்த்து மணல்பரந்தவழியின்கட் சென்
ருந்தாநிற்பர்கள், சிலர்நெருப்புப்போன்ற துளியினையுடைய மழைபெய்யும்வழி
ச்சென்றதனால் நிலையழிவர்கள், சிலர், வறளிநெருப்புப் பொருந்திய வழியின்
சென்றதம்மேனிகெடக்கலக்கமுண்டாக த்தமதுயாக்கையின் வலிகெடு
- எ - று (ரு

சிங்கமுமுறுகெறி செறிவினரறிவிலர்செயலுந்
தங்கியபுலிவனமடையுநர் நிலையிலர்தளர்வார்
வெங்கொலைமிருகமு முடலடவொருவழிவிழுவார்
எங்கிடமசகமு முடலினைநினைவினைவிடுவார்

எ - து - சிலர், சிங்கங்கள்பொருந்தியவழியின்கட்சென்றவைகள் பாய்தலி
லேசெயலுமறிவுமில்லாமன்மயங்குவர்கள், சிலர், புலிகள்பொருந்தியகாட்டி ன்
றிகளிற்சென்றதனாலேதஞ்செயல்கெட்டு வருந்தாநிற்பர்கள், சிலர், மற்றுமுள்
வெவ்வியகொலையினைச்செய்ய மிருகங்களுந் தம்முடம்பினை யழியாநிற்ப ப்பி,ரி
தொருவழியின்கட்சென்று கலங்கிவிழுவர்கள், சிலர், பிறிதொருவழி யின்கட்
ன்றுபெருங்கொசுக்களுடம்பினைத்துளைக்க வருந்தி த்தம்மறிவினை யொழிவர் க
- எ - று (ரு

உளைவர்களுடல்குடை கிருமிகளுறுநெறியுறுவார்
செருகைபுமுடலட வொருவழியறிவிலர்செறிவார்
தளையுறவுடலடு சிறுபறவைகளொடுசுழல்வார்
விளைவறவிடவர வடர்வழியயருறவிழுவார்

எ - து - சிலர், உடம்பினைக்குடையாநின்றபுழுக்கள்பொருந்திய வழியின்க
சென்றுவருந்துவர், சிலர், பிறிதொரு வழியிற்சென்றட்டைகள் வந்துடலின்கட்
டுக்கவதனாலேயறிவும்போய்மயங்குவர்கள், சிலர், பிறிதொரு வழியிற் சென்று
ம்பினைத்துளைக்குஞ்சிறியபறவைகள்பலவற்றினாலுங்கொத்துணடுங் கடியுண்டு
லாநிற்பர்கள்; சிலர் பிறிதொருவழியின்கட்சென்றுநல்வினைவினைவில்லாமையா
லேதஞ்சினைபுமிதாநிற்கும்பெரும்பாம்புகள்வந்து தீண்டவதனாலேசோர்வு பொ
திவிழாநிற்பர்கள் - எ - று - (ரு

கடகரிதொடர்வழியழுதழுதயர்வொடுகலுழ்வார்
உடலடவுளியமுமொருவழிநினைவினையொழிவார்
இடபமுமடர்வழியிடர்பலபடுவர்களெளியார்
திடமுடைமயிடமுமடர்வழியழிவர்கள்செயலோ

எ - து சிலர் - மதம்பட்டயானைகள்பாயும்வழியின்கட்சென்றந்தயானைகள்பாய் தலிருலேயழுதழுது சோர்ச்சியிற்கலங்காநிற்பர்கள், சிலர் - பிறிதொருவழியின்கட்சென்றுகரடிகள்வந்துடம்பினைக்கவ்வாநிற்பவதனாலறிவினை நீங்குவர்கள், சிலரிடபங்கணைருங்கியவழியின்கட்சென்றுஅவற்றினாற்றுன்பங்கள்பலவும்பட்டவற்றினைத்தடுக்கமாட்டாமலேளியராய்நிற்பர்கள், சிலர்-வலியினையுடையகாட்டெருமைகள்பாயும்வழியின்கட்சென்றுசெயலோவழிவதுமனமுமழிவர்கள் - எ - று ஓகாரம் - ஒழி பிசைக்கண்வந்தது (௫எ)

ஒட்டகமுறுகெறியுடல்வினைகெடநினைவொழிவார்
நிட்டுரமகளிருமடர்வழியழிவதுநினைவோ
வெட்டியநிசிசரர்மிடைவழியுடல்வினைவிடுவார்
தொட்டிடவிறலுறுபிணிபலவயர்வொடுசுழல்வார்

எ - து சிலர்-ஒட்டகங்கள்-மிகுந்தவழியின்கட்சென்றுடம்பின்செயல்கெடவறிவழிவர்கள், சிலர்கொடுமையைச்செய்யுமிடாகினிகளாகியசூரரமகளிர்கணைருங்கியவழியின்கட்சென்றவர்கள்செய்யுந்துயராலறிவோவழிவதுசெயலுமழிவர்கள், சிலர்வெட்டிமையுடையவிராக்கதர்நெருங்கியவழியின் கட்சென்றுடம்பின்செயலழிவர்கள், சிலர்-பிறிதொருவழியின்கண்வலிபொருந்தியவியாதிகள்பலவும்வந்துபிடிக்கச்சோர்ச்சியிருலேயுழலாநிற்பர்கள் எ - று
வெட்டிமை - கொடுமை (௫அ)

ஊறுறவுடலிடையுணர்விலர்சரமழையுறவே
கூறுறவுடல்பலருவிசமதுறுமழைகொளவே
நீறுறவுடல்கெடவொருவழியழிவதுநினைவோ
தேறியவழன்மழைபலபலமுறையொடுதெறவே

எ - து சிலர்-பிறிதொருவழியின்கட்சென்றுடலின்கணூறுபொருந்தவம்புமாரிசொரியாநிற்கவறிவுகெடுவர்கள், சிலர்-பிறிதொருவழியின்கட்சென்றுடம்புபலவாகத்துணிக்கும்வச்சிராயுதங்களாகியபெருமழைசொரியவதனாலறிவழிவ

[illegible] ஒருவழியின்கட்சேன்றுவிளங்கியநெருப்புமழைகள்பலபல வி[illegible]கையினாலேபுடம்புவெந்துநீறாகவறிவுமாத்திரமோவழிவதுசெ[illegible] எ - று (ரு௯)

[illegible]லனுமுறுநெறிதுகளொடுகலுழ்வார்
[illegible]பொழிவழிநிலையறவலலொடுபுகுவார்
[illegible]வொருவழிமழைபொழிசிலையுறவுளைவா
[illegible]டுறநிலவுதலிலரோ

எ - று சிலர்-தூட்களோடேபொருந்திவிரைந்துவாராநிற்கும்பெருங்காற்ற[illegible]ன்கட்சென்றுகலங்குவர்கள், சிலர்தூளிமழைசொரியாநிற்கும்வழியி[illegible]ட்சென்றுநிலைபற்றுத்துயரொடுசெல்லாநிற்பர்கள், சிலர்பிறிதொருவழியி[illegible]ன்கட்சென்றுபோம்படிகல்மழைபொழியவதனால் வருந்தாநிற்பர்கள், [illegible]தொருவழியின்கட்சென்றிடியுமின்னும்விழவவற்றினாலேதுயருற் றுத்தா[illegible]ல்போய்நிலையழிவர் எ - று (சுய)

[illegible]தவருடனுமொருவழியுடலினையரியக்
[illegible]கொடுவறல்சுடவுடல்கலுழ்வார்
[illegible]ளிர்பனியனிலனுமுறுவழியுளைவார்
[illegible]னையனவிடர்பலவழியுறுமெளியார்

எ - று . சிலர், பிறிதொருவழியின்கட்சென்று யுதமாரியாகவிழுந்துடம்பினைத் [illegible]மேலிடாநிற்கும் நெருப்புக்கொத்த நச்சுநீர்மழைவிழுந்துடம்பினைச்சு[illegible]ட்சென்றுநிலைபற்றுத்துயரொடுசெல்லாநிற்பர்கள், சிலர், குளிர்ந்தபனியும்பனிக்காற்று[illegible]ன்கட்சென்றவையிற்றினால், மிகவும்வருந்துவர்கள், இங்ஙன[illegible]ன்கட்செல்லுநல்வினைவலியில்லாதோரித்தன்மையையுடையனவா[illegible]ன்பவற்றையுமனுபவிப்பர்கள் . எ . று . (சுக)

[illegible]யபசியுறவொருவழியறிவிலர்கலுழ்வார்
[illegible]றையறிகிலர் விரவியகொடுமையவினையார்
[illegible]னைவினையெனவுளமதிலெணுவார்
[illegible]டையபடர்வலிசெயவழியொடுசெறிவார்

எ - று . சிலர், பிறிதொருவழியின்கட்சென்றுமிகுந்தபசிமேலிடவதனாலறிவின்

றியந்தப்பசிதீருமுறைமையை யறியாராய் க்கலங்குவர்கள், இங்ஙனம் பொருந்தி யதிமையையுடையபாவிகள், யாமிந்தத்துயரப்படுவதுமுன்செய்த பாவமென்றுத ம்முள்ளத்தின்கண்விசாரியாநிற்பர்கள், அந்தப்பாவிகளெல்லா மிகுந்தபெலத்தி னையுடையயமதூதர்கள்வன்மைசெய்ய த்துயருற்று யமலோகத்துக்குப்போம்வ ழியின்கட்செல்லுவர்கள். எ- று

(௬௨)

அந்தத்தீவினையோரை யமதூதர்கள் கொண்டுபோம் முறைமையைப் பதினாறுசெய்யுளா லுணர்த்துகின்றார்

வேறு

சிலனைத்தொடரிற் செறிவித்தடியிற்
றலையைத்தரையிற் றகவைத்துயர்வா
னெலைபிற்சரணத் தினைவைத்திகவா
வலலுற்றலறக் கொடுபோயடைவார்

எ . து . யமதூதர்கள், சிலதீவினையோரை க்காலின்கணிருப்புச் சங்கிலிபூட்டி த்தலையைநிலத்தின்கண்ணுகவைத்து ச்சங்கிலியினோடு பொருந்தியகாலிரண்டினை யுமுயர்ந்த வாகாசத்தின் கண்ணுக்கி யுள்ளதுதிரக்கமு மொழித்தவர்கள்துயரத் தையுற்றுக் கிடந்தலறும்படி யிழுத்துக்கொண்டு சென்றியமலோகத்தின்கணடை வர் . எ . று . யமதூதரொன்னுமெழுவாய்வருவிக்க

(௬௩)

உரையிற்கொடியா ருரமிக்குடையார்
நிரையத்துறுவார் தமைநிட்டுரரோ
தரையிற்கவிழ த்தடமார்முகமு
மரையக்கொடுபோ யடைவித்திடுவார்

எ . து . கொடியசொல்லினையுமிகுந்த வலியினையுந்தறுகண்மையையுமுடையர் களாயிருக்கிறயமதூதர்கள் நரகத்தின்கட்செல்லுமவரான சிலதீவினையோரைநில த்தின்கட்பெரியமார்புமுகமுங்கவிழத்தள்ளியவ்வுறுப்புகள் நிலத்தினோடுதேய்ப்பு ண்ணவிழுத்துக்கொண்டுசென்றியமலோகத்தின்கணடைவர் . எ . று . (௬௪)

நேசற்றவரோ நிலையற்றவரைத்
தேசற்றவரை ச்சிலரைச்செறியப்
பாசத்துடலம் பறியப்பதறிக்
கோசத்தமுறக் கொடுபோயடைவார்

எ. து. சற்றுமான்மாக்களிடத்திரக்கமில்லாத வியமதூதர்கள் அறநெறியினில்லாதோருமாய் மறுமைப்புகழில்லாதோருமான சிலதீவினையோரை ப்பாசக்கயிற்றினாலிறுக்கிக்கட்டியுடம்புவருந்துகையினாலேபதறித்துடித்துக்கோவென்றலறுஞ் சத்தந்திசைகளெங்குமெழக்கொண்டுசென்றியமலோகத்தின்கணடைவர். எ. று

செறிதல் - கட்டமுந்துதல். பரிதல் - வருந்துதல். (சுரு)

சித்தத்துருகாதவரைத் திறலார்
மத்தக்களிறே யனையார்வலியா
ரத்தத்தமரங்குச முள்ளதனாற்
கொத்திக்குளமுங் கொடுபோயடைவார்

எ. து. தன்மத்தின்கண்மனமுருகாத சிலதீவினையோரை, வெற்றிநிறைந்தமதயானைக்கொப்பாராயதிபெலத்தினையுமுடைய யமதூதர்களானோர் தமதுகையிலிருக்குங்குடாரியினுனியினாலேநெற்றியையுங்கொத்தியிழுத்துக்கொண்டுசென்றியமலோகத்தின்கணடைவர். எ - று.

குளம் - நெற்றி. குளமுமென்னுமும்மை மற்றுளவுறுப்புகளுமெனக்கொள்க (சுசு)

களைகண்ணிலரைக் களவுள்ளவரைத்
தளரும்படிவெஞ் சமனார்தமரே
யுளைவுள்ளுறவு முடல்பிள்ளுறவு
முளைமுள்வனமே கொடுபோய்முனிவார்

எ. து. கொடியயமதூதரானோர்ஆன்மாக்களிடத்திரக்கமில்லாதோரையுங்கள்வரையும்வருத்தும்வண்ணம் அவர்களுள்ளத்திற்றுயரமுண்டாகவு முடம்புபிண்டுபிண்டுபோகவு மூங்கின்முட்காட்டினுள்ளே யீர்த்துக்கொண்டுசென்றுகோவிப்பர்கள். எ - று. (சுஎ)

பழுதேபகர்வார் பயில்பாவியரைக்
குழையாதவரைக் குளிர்வாய்மொழியே
விழையாதவரைக்கடிதேவியனா
ரழல்சேர்வழியேகொடுபோயடைவார்

எ - து இயமதூதரானோர், கோட்சொல்லுந்தன்முதலியபாவஞ்செய்தோரையுந்தன்மத்தின்கண்மனநெகிழ்ச்சியில்லாதோரையும்பெரியோர்களதுகுளிர்ந்ததிரு

வாக்கைவிரும்பாதோரையுஞ்சடுதியிலேநிறைந்துமிகவுந்திபரந்தவழியின்கட்கொண்டுசென்றியமலோகத்தினையடைவர் எ - று

(சுஅ)

அத்தத்தினையுமடரக்கடிதே
பொத்திப்புறமேகயிறும்புகவே
துத்தத்தலறத் துவளத்துவளக்
குத்திச்சிலரைக்கொடுபோயடைவார்

எ - து இயமதூதரானோர், சிலபாவிகளையிரண்டுகையினையுமுதுகுப்புறதுவாங்கித்தோளொடுதோள்சந்திக்கக்கூட்டிப்பாசக்கயிற்றினாலேயழுந்தக்கட்டியவர்களலறவயிற்றின்கண்குலுங்கக்குலுங்கக்குத்திக்கொண்டுசென்றியமலோகத்தினையடைவர் எ - று துத்தம்வயிறு

(சுக)

சிலரைக்காமுஞ்செறிவித்ததனைத்
தளையத்தொடருந்தழலைப்புரையு
முளையைச்செறிவித்ததிராமுனியா
வுளையக்கடிதேசமனூருறுவார்

எ - து யமதூதர்கள், சிலதீவினையோரையிரண்டுகையையுங்கூட்டியந்தக்கையினிற்சங்கிலியுந்தூணவிட்டுள்ளங்கைகளினுருவெருப்புப்போன்றமுளையையுங்கடாவியதட்டியவர்களைவருந்தும்வண்ணங்கோபித்துச்சடுதியிலேயமலோகத்திற்கொண்டுசெல்லுவர் எ - று

(எ௰)

கண்டத்துறவேகயிறுஞ்சிலரைக்
கொண்டெய்த்தலறப்புகுவார்கொடியார்
துண்டப்பிறைபோற்சுழல்வாள்பிடரிற்
புண்டைத்தலறச்சமனூர்புகுவார்

எ - து கொடியயமதூதர்கள், சிலபாவிகளைப்பாசக்கயிறுகழுத்திலிறுகும்வண்ணம்பூட்டியவர்களைவருந்தியலறும்வண்ணமிழுத்துக்கொண்டுபோவர்கள், சிலரையிளம்பிறைபோல்வளைந்தகொடுவாளாற்பிடரியிலேபுண்படத்தைத்தலறும்வண்ணம்வெட்டியமபுரியிற், கொண்டுசெல்லுவர்கள் எ - று

ஈண்டுச்சுழல்-வளைவின்கண்வந்தது

(எக)

நாவிற் றுளையாகடுவே முளையு
மேவக்கயி றும்விரவப்பணியே
நோவித்தலறச்சிலநொய்யவனைப்
பாவப்பலமுற்றெலையேபடர்வார்

எ - து யமதூதரானோர்-சிலபாவிகளைநாவினைத்துளைத்ததனடுவேமுளையுங்கடா வியதலைனுடுபொருந்தக் கயிறுங்கோத்து வருந்தச்செய்தவர்களை லறத்திவினைப்பயன்பலிக்குமெல்லையான யமலோகத்திற் கொண்டுசெல்லுவர் . எ . று .
பண்ணி-யென்னுஞ்சொல் . பணியெனவிகாரமாயிற்று (எஉ)

குய்யத்திடையேக யிறுங்கொளுவா
நையத்துயரம்பலவு நவிலா
மையற்படவே மனமுஞ்சிலரைத்
தெய்வச்சமனார்புரியைச்செறிவார்

எ . து . இயமதூதர்கள் . சிலபாவிகளைக்கோசத்தின்கட் கயிறுகொளுவியுடல் வருந்தவுமனமயங்கவுந்துயரங்கள்பலவுஞ்செய்து தங்கள்தேவனை யமதன்மராசனதுபுரியின்கணடைவர் . எ . று . (எங)

துண்டப்புடையிற் றுளைசெய்ததனிற்
கண்டிக்கயிறுங்கடிதேயடைவார்
புண்டைத்துறவேகவுளும்புகுவார்
கொண்டக்கணமேசிலரைக்கொடியார்

எ - து கொடுமையையுடையயமதூதர் - சிலபாவிகளை மூக்கின்புறத்திற்றுளைத்ததிலேபாசக்கயிற்றையுங் கோத்துக்கட்டிச் சடுதியிலேகொண்டுசெல்லுவர்கள், சிலபாவிகளைக்கதுப்புக்களிலேபுண்பொருந்தும்வண்ணந்துளைத்துக்கயிறுபூட்டியிழுத்துக்கொண்டந்தக்கணத்திலே யமலோகத்திற்புகுவர் எ -று
கட்டி - கண்டியெனவிகாரமாயிற்று (எச)

முத்தத்துறவேதுளையுமுளையுங்
கொத்திச்சிலரைக்கொடுபோயடைவார்
சித்தத்தயர்வுஞ்செறியச்சிலரைத்
தத்தத்தொடரிற்சமனார்தொடர்வார்

எ - து இயமதூதர் - சிலபாவிகளை யுதடுகளிற்றுளையுறும்வண்ணமுளையையும் அடித்திழுத்துக்கொண்டுசெல்லுவர்கள் - சிலபாவிகளைமனத்தின்கட் சோர்வுபொருந்தம்படிவயிற்றிற்கட்டிணகயிற்றினோடேயிழுத்துக்கொண்டியமலோகத்திற்செல்லுவர்கள் எ - று (எரு)

கன்னத்துளையிற்கயிறுஞ்செறியா ❊
வென்னித்துயர்தானெனநொந்தழவே ❊
துன்னப்படுநற்றுணையுமறவே ❊
தென்னற்றிசையிற்புரியைச்செறிவார் ❊

எ - து சிலபாவிகளை பிரண்டுசெவித்துவாரங்களிலு முருவக்கயிற்றைக்கோத்திந்தத்துயர மெந்தப்பாவத்தால்வந்ததோவென்று வருந்தியழவு மதனை நீக்குதற்கோர்நற்றுணையுமற்றொழியவுங்கொண்டுசென்றுதென்றிசைக்கணுண்டாயநல்லயமலோகத்திலடைவர் எ - று (எசு)

முகவாயுறவேகயிறும்முனியத் ❊
தகவோவெனநொந்தழுவார்தமையே ❊
யகமும்புறமுமழியக்கொடுபோ ❊
யிகமுமறிவானுழையேயிசைவார் ❊

எ - து .யமதூதர்கள் கீழ்வாய்ப்புறத்துக்கயிறுபொருந்தக்கோத்து வருத்தம்பொழுதிதுமுறைமையோவென்றுவருந்தியழுஞ்சிலபாவிகளையுள்ளமு முடலு மழியக்கொண்டுசென்றிம்மைமறுமையிரண்டினுமான்மாக்கள்செயதபுண்ணியபாவங்களையீதெனப்பிறித்தறியுந் தன்மையையுடையனான யமதன்மராசனருகேயடைவர் எ - று (எஎ)

அங்கத்தெவையுமழியச்சிலரைப் ❊
பங்கித்தடைவார்பயிலத்துயரும் ❊
பொங்கப்புலைநீர்புகர்வாண்முதல்கொண் ❊
டொங்கித்தடிவார்சமனூருறுவார் ❊

எ - து இயமதூதர்கள், சிலபாவிகளைச்சரீரத்திலுள்ளவுறுப்பெல்லாஞ்சிதையும்படியறுத்தறுத்துக்கொண்டுசெல்லுவர்கள், சிலபாவிகளைத்துன்பமானதுமேன்மேலுமுண்டாகவிரத்தமானதுபெருகப்புகரினையுடையவர்கள்

[illegible]ளைக்கொண்டுஓங்கிவெட்டுவர்கள, இங்ஙனம்வழியின்கட்பெரு[illegible]செய்தியமபுரியிற்கொண்டடைவர்கள் எ - று

[illegible] - இரத்தம் - புகர் - நோயல்வாய்ப் பாலெழுந்ததோர்நிறம் - ஓங்கி - ஓங்[illegible]கிற்று. (எஅ)

இங்ஙனம்யமதூதர்கள்கொண்டுசெல்லப்பாவஞ்செய்
தோர்யமபுரத்தையடைவரென்றுணர்த்துகின்றார்.

[illegible]க்கார்வரவிற்றவறேபுரிவார் ❊
[illegible]க்கார்வமிலார்நிலையேதுமிலா ❊
[illegible]கேவலதிற்றுயர்வந்துறவே ❊
[illegible]க்கார்விளையத்தருமன்புரியே ❊

எ - து தம்பாற்பெரியோர்கள்வருங்காலத்தெதிர்கொளல், பணிதல், முத[illegible]செய்பாதிகழ்ச்சிசெய்வோர்களும்யாவரிடத்துமனநெகிழ்ந்தன்புசெய்[illegible]தோர்களுமாவதனுற்றமக்கொருநிலையில்லாதோர்களுமானபாவிகள்செல்லும்[illegible]கண்யமதூதரால்இங்ஙனந்துயரங்கண்மேன்மேலும்வந்துபொருந்துகையி[illegible]லைப்பிரிந்துசந்திலிலையமலோகத்திற்புகுவார்கள் எ - று (எக)

இங்ஙனந்திவினையோரைக்கொண்டுசென்றயமதூதர்கள்
யமதன்மராசன்முன்சென்றறிவிக்குமுறைமையுமினி
மேலிவர்களைச்செய்யுந்திறம்யாதென்றுவினவுமுறை
மையுமிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு.

[illegible]தவான்மையினரகலாதவாய்மையினரதிபாதகாதியறிவார் ❊
[illegible]தகுசலாமலிமாசுமேவினரைமறவாதமாணறிவினர் ❊
[illegible]பாதலுசனைவழுவல்வார்கள்பூதலமுமொழியாதவாவியுடையார் ❊
[illegible]தபான்மையரைவழுவாததூதுவர்கள்பதிபாதமீதுபணியா ❊

எ - து ஒருகாலுங்கெடாதவாண்மையையும்யமதன்மராசன்சொல்லியவா[illegible]ச்செய்யுந்தகைமைப்பாட்டினையுமதிபாதகமுதலியபாவபேதங்க[illegible]ச்செய்வோரையுள்ளபடியறியுந்தன்மையையுமதற்கதற்குச்சொன்னநெறியி[illegible]கள்பாதனைபன்னுந்தெள்ளிமையினையும்பாவங்கள்செய்தோரைமறவா

தமாட்சிமைப்பட்டவறிவினையுமனவாதமும் ஆட்டொழியாதலுசல்போலப் பூமியி ன்கட்பாயான்மாக்களைக்கொண்டுவருந்தன்மை வினையுமுடம்பின்கணிறவாதவுயி ரையுடையநித்தியத்தினையுஞ்சிவன்முதலாயினாரையிகழாதநல்வினைப்பகுதியோ ரைவருத்தாதுவிட்டுநீங்குமறிவினையுமுடையவியமதூதர்கள்தம்மிறைவனாயம தன்மராசனதுபாதங்களிலவணங்கி. எ - று. யாதனை-மிகுந்தவருத்தம் பூதலமுமென்றவும்மையால்யமலோகமுமெனவறிக. (அய)

பாவஞ்செய்பாவியர்கள்பாலெம்மையேவவுனபாசங்கைமேவவெளிதே
யேவஞ்செய்தார்வினையரேவவந்துளாவழியிலேயுண்டுளார்பெரிதுமே
நோவங்குளார்பரமநோலெங்குளாரிவர்களுறாறங்குவாய்மைநுவலார்
தேவென்செய்வாமினியெனேவென்றுகூறுவர்கள்சேடஞ்செய்வாலுமெனியெ.

எ - து வாரீர்சுவாமிபாவஞ்செய்ததீவினையோர்களிடத்துநீரெங்களையேவுகை யினாலுமும்முடையதான பாசமெங்கள்கையிலேபொருந்துகையினாலுங் குற்றங்க ளைச்செய்தோரெளிதாகவே சடுதியிலேவந்தார்கள் இவர்கள்மிகவும் வழியிலேவா ரைப்பட்டார்கள், அதனாலேயவ்விடத்திலேமிகவும்வருத்தத்தையுடையராவார்கள் இவர்கள்வேதாகமங்களிற்சொன்னவழிநடவாதவர்களாதலினாலேசாலபாசத்தினின் றுந்தப்புதற்கெங்கே மேலானவலியுள்ளாராவரினியிவர்களை யாதுதெண்டஞ்செய் வோமென்றுவிண்ணப்பஞ்செய்யாநிற்பர்கள். எ - று எவ்வம் - ஏவமெனவிகா ரமாயிற்று - நோல் - வலி - தூதுவர்களென்னுமெழுவாய்கூறுவர்களென்னும்ப யனிலையோடுமுடிந்தது (அக)

முற்கூறியதீவினையோர்வந்தயமதன்மராசனைக் கண்டவளவினுண்டாவ
தோர்நடுக்கமுணர்த்துகின்றார்

வேறு

விண்டவர்கள்வேதநெறிவெய்யவினைதன்னைக்
கொண்டவர்கள்வஞ்சனையநெஞ்சினர்கொதிக்குந்
தண்டதரனைச்சமனைநச்சரவுதன்னைக்
கண்டனனொனக்கலுற்றவர்கண்டிடுகணத்தே

எ - து வேதாகமவழியினடவாம லெதனையிகழ்ந்தோர்களுமாய்க்கொடியதீவி னைச்செயல்களைப்பொருளென்றுட்கொண்டோர்களுமானவஞ்சகம்பொருந்தியசி ந்தையையுடையபாவான்மாக்கள் தண்டத்தைத்தரித்திருப்பானாய்க்கோபாக்கினி

டபோக்காற்பானுபிருக்கிறயமதன்மராசனைக்கண்டவளவிலே நஞ்சினையுமிழா
ச்சுத்தப் பெரும்பாம்பினைக் கண்டவர்போலக்கலங்காநிற்பர் எ - று - கலுழ்தல்
கலக்கம் (அ௨)

உமதன்மராசனுதன்மையையும் அவனைக்கண்டோர்மனம் வேறுபடுந்
தன்மையையு மையனையமேனியனென்னுஞ் செய்யுள். முதல். ஏவலரு
னெக்கள்பெருமானென்னுஞ்செய்யுளீறாக வொருதொடராகவுணர்த்துகின்றார்

மையனையமேனியனைவாய்ந்தவறுமூன்று ❊
கையுடையனைக்கடியனைக்கடியருள்ள ❊
கையவுமிழ்வெய்யவழனுட்டமுடையானைத் ❊
துய்யபிறைபோலெயிறுறச்சுளிமுகத்தே ❊

எ - து அஞ்சனபருப்பதம்போன்றதிருமேனியையும் வலிபொருந்தியபதினெ
ட்டுக்கைகளையு மதிகோரத்தையுந்தூய்மைபொருந்திய விளம்பிறையைப்போன்ற
வெயிறுகள்தோன்றச்சீறுகின்றமுகத்தின்கட்டீவினையோருள்ளமழியச்சொரியா
கின்றவெவ்விபவக்கினிநேத்திரங்களையுமுடையனாய். எ - று (அ௩)

எற்றுபுருவத்தினனையிடுடையமேனி ❊
பற்றுமுகமிதுபெறுபங்கியுடையானை ❊
முற்றுமயிர்பெற்றமுகமுற்றதரவோட்ட ❊
நிற்றலறவுற்றபுரணத்தினனைநேரே ❊

எ - து நெற்றிமீதேறுகின்றபுருவங்களையும், வலியையுடையவுடம்பின்கட்
டோன்றிமேனோக்கியமுகங்களாய்நிற்குமுரோமபங்கிகளையு, நிறைந்த மீசை
பொருந்திமுகத்தோடுகூடிக்கீழுதடுமேலுதடுநேரேநிற்குந்தன்மையின்றித்துடிக்
குந்தன்மையையுமுற்றிருப்போனாய். எ - று (அ௪)

மேருகிருன்னதனைவீறுடையதண்டந் ❊
தாரகனைமற்றையதழற்படையனைத்துங் ❊
காரனையமேதிமிசைகாணவருவானை ❊
பேருடையசெய்யவுடையாடையனையென்றும் ❊

எ - து மகமேருவோடொத்தவுயரத்தினையும்,வெற்றியையுடையதண்டாயு
தமுமத்தமுள்ளசெருப்புப்போன்றவாயுதங்கள்முழுவதுந்தரித்திருக்குந்தன்மையி

னையும், யாவருங்காணக்காளமேகம்போன்றகடாவின்மேலேவருஞ்சிறப்பினையு, மெந்நாளுமழகுபொருந்தியசிவந்தபரிவட்டத்தையேதரித்திருக்குமியல்பினையுமுடையனாய். எ - று (அரு)

செம்மைபெறுமாலையதுசேர்முடியினானை ❊
வெம்மைமிடியன்னகுரல்வீறுமுடையானை ❊
விம்முகடலோடுலகனைத்தையும்விழுங்கச் ❊
சம்மதனெனத்தகுவனைத்தடைதடுத்தே ❊

எ - து சிவப்புநிறம்பொருந்தியமாலைகளைச்சூடியதிருமுடியையும், வெவ்வியவிடிபோன்றகுரலின்மேம்பாட்டினையுமுழங்காநின்றகடலினோடுலகங்களெல்லாவற்றையுங்காவல்கொடுத்துவிழுங்குதற்குவிருப்பமுடையவன்போன்றிருக்குந்தன்மையையுமுடையனாய். எ - று (அசு)

விரித்தமுகின்மேனியமிருத்தியுமிருக்கக் ❊
கருக்கியநிறத்தினொடுகாலனுமிருக்க ❊
நெரித்தபுருவத்தினுடனந்தகனுநீடப் ❊
பரித்தகொடுமைத்தொழில்செய்மாரியுமோர்பாலே ❊

எ - து பரந்தகாளமேகம்போன்றவடிவினையுடையமிருத்தியுமொருபக்கத்திலிருக்கக், கரியநிறத்தினோடுகூடியகாலனுமொருபக்கத்திலிருக்க- ஏறிட்டபுருவத்தினோடுகூடியவந்தகனுமொருபக்கத்தினிலேபெறக், கொடுமைபொருந்தியதொழிலைச்செய்யாநின்றமாரியுமொருபக்கத்திலிருக்க, அதனடுவேவீற்றிருக்குந்தேவனாய். எ - று விரிந்த - என்பதனை - விரித்த - எனவலித்தது - நீட - என்பதனைமாரிக்குங்கூட்டுக - ஓர்பாலென்பது-கடைநிலைத்திபகம் - வீற்றிருப்பானாயென்னுமெச்சம்-வருவித்துரைக்க. (அஎ)

கருக்கியநிறத்தினர்கள்கண்டவர்களஞ்ச ❊
நெரித்தவுருநெற்றியர்கணிட்டுரரரட்டர் ❊
நரித்திடுகரத்தினர்கள்சத்திதிரிசூலம் ❊
விரித்துடையபாசமழலங்குசமும்வேறே ❊

எ - து கண்டோர்நடுங்கும்வண்ணங்கரியநிறத்தினையுஞ்சுளித்தவுருவினையுடையநெற்றியினையுங்கொடுமையினையுமெவர்களையுஞ்சஞ்சலப்படுத்துந்தன்மையி

[illegible]

ள்ளனவும் எ - று.

தண்டுமிலிர்வாளொளிகொள்ளக்கார்முகிக்க
வெண்டிகளும்வாளியினைதூணியெழிலார்கை
தண்டமிவைமற்றையதழற்படையனைத்து
மண்டுதொழில்வீரதரதூதரவர்வந்தே

எ - து தண்டாயுதமும்விளங்காநின்றவாளுமொளிபொருந்திக்கொள்ளக்கார்முகிலும் பேரளவுவிளங்காநின்ற, அம்புகளும்அவையிருதலைக்கொள்ளப்பட்டஅம்பறாத்தூணியும்அழகுநிறைந்தவில்லுமானவிவைகளு, மற்றுமுள்ளனவெல்லாம்[illegible]ங்களெல்லாவற்றையுந்தாங்குங்கையினையுடையர்களாயத்தூதர்களாயுள்ளவீரர்[illegible]ற்றுந்தொழிலின்மேம்பட்டவீரமிக்கோரானதூதர்வந்தனர். எ - று.

ஏவலருளெங்கள்பெருமானெனவிருக்குந்
தேவனைவிதித்திறமதித்தொருமைசெப்பு
நாவனைநமன்றனைநடுக்கமொடுகண்டார்
மேவலர்களென்னமனம்வேறுபடுவாரோ

எ - து முன்னர்க்கூறியதிறத்தினையுடையவியமதூதர்கள்வந்தெய்தினவிடத்து[illegible] சுவாமி,யாங்கள்செய்யுங்குற்றேவலருள்வாயாகவென்றுவிண்ணப்பஞ்செய்து[illegible] றிருக்குங்கடவுளாய்ச்சிவனருளிச்செய்தவிதித்திறத்தை. [illegible] யந்தவிதிப்படியேதண்டங்கள்செய் யச்சொல்லு நாவினையுடைய [illegible] தன்மராசனையச்சத்தோடுங்கண்டபாவிகள், அந்தயமதன்மராசனுக்குச்சத்துரு க்கள்போல, அவன்மனத்துக்குவேறுபடுவார்கள். எ - று.

இயமதன்மராசனந்தப்பாவிகளைக்கோபிக்குந்திற
முணர்த்துகின்றார்.

வெறுத்தவனைநல்வினையைவெய்யவினைதன்னைச்
செறித்தவனைநோக்கியழல்சிந்தவிழிசிந்தங்
கறுத்தியமனச்சரவெனக்கடுவெனத்தா
னுறுக்குவனறத்தளர்வுறக்கடிதொறுத்தே

எ - து இயமதன்மராசனல்லபுன்னெறியவர்களைச்செய்யவுஞ்சிட்டிக்கவுமாய

[illegible]

பாவங்களைச்செய்யவிரும்பினபாதகரைத், தனதுகண்களிலேநின்றுநெருப்புப்பு றப்படப்பார்த்துள்ளம்வெகுண்டுநஞ்சினையுமிழாநிற்கும்பாம்புகள்போலவும் ஆல காலவிடம்போலவுஞ்சீறியவர்கள்தளர்வுறும்வண்ணமிகவுங்கோபித்தடர்தற்க றியாநிற்பன். எ - து [கூக]

பாவிகளாரேரந்தயமனையேயன்றிச்சித்திரகுத்தனையுங்கண்டால்
நடுங்குவரென்பதுணர்த்துகின்றார்

வெய்யவினைதன்னையும்விதிப்படிவிளைந்த
துய்யவினைதன்னையுமநித்தொருமைசொல்லு
மெய்யுடையசித்திரநல்குத்தனையும்வீரூக்
கையரவரஞ்சுவரவன்விழிகள்கண்டே

எ து அந்தப்பாவிகளாரேர், சிவனருளிச்செய்த வேதாகமங்களிற் கற்பித்த முறையேயவரவர்க்குண்டானகொடியபாவத்தையுந்தூய்மையையுடையபுண்ணிய த்தையுமறிந்துள்ளபடியே சொல்லுஞ் சத்தியவாக்கினையுடையநல்லசித்திரகுத்த னையும்வேறுபட்டவனுடையவிழிகளைக்கண்டு நடுங்காநிற்பர். எ று

வீற்று - எ து வீறு-என விகாரமாயிற்று. சு வீற்றும்பேதமும் விள்ள லுந்திரிபும் வேற்றுமையுங்கொள்பவேறுபடற்பொருட்டே-என்பதனாலறிக. [கூஉ]

சித்திரகுத்தன் அவரவர் செய்தபாவங்களையெடுத்துக்கூறி யந்தத்
தீவினையோர் நரகத்தினெய்துதற் கொருப்படுமாறு அறிவித்தலை
யுமேலந்தயமதன்மராசனுமெடுத் துக்கூறுமுறையையும்இச் செய்
யுள்முதல்கன் றவெமதூதரொன் னுஞ் செய் யுள்வரையொருதொ
டராகவுணர்த்துகின்றார்

சித்திரநல்குத்தனெதிருற்றவனைநோக்கிப்
பொய்த்திறமதித்தவர்கள்போதுகமுனாரீர்
மத்தகளிறன்னவலியாலுளியார்தம்
வித்தமுதல்கொண்டவர்தமக்கிடர்விளைத்தீர்

எ து நல்லசித்திரகுத் தனானவன், தனக்கெதிரேநின் றபாவிகளைப்பார்த்துப் பாவவிதத்தைப்பொருளென்று கருதினவர்களே-வருவீராகநீங்கள்முன்னுண் மத

[illegible]பெலத்தினாலேயெளியராயுள்ளோருடைய திரவியமுதலானவை [illegible]த்துக்கொண்டவர்க்குத்துக்கத்தையுண்டாக்கினீர் எ று (கரு)

[illegible]மேன்மையழகாலுமயலார்த *
[illegible]டோன்புணருமாதரவுவைத்தீ *
[illegible]ம்மையனையாதகல்வதெங்ஙன் *
[illegible]மின்னிளையமுற்றுடறளர்ந்தே *

[illegible] அக்கனம் பிறர்பொருள்கொண்டதன்றி, யுமதுசரீரத்திற் பொருந்திய [illegible]த்தினாலேபிறருடையமனைவியர்கள்தோளினையனையும் வாஞ்சையு [illegible]ச் இங்வனங்கூறியதீவினைகளுங்களுடன்கூடிநில்லாமலெங்கே [illegible] மாசையாலந்தப்பாவங்கள்தீரும்வண்ணம்நரகத்திலேசென்றதனாலு [illegible]த்தக்கத்தையனுபவிக்கக்கடவீர். எ - று

[illegible]மென்றவும்மையாற்றனமிகுதியாலுமெனவறிக- சங்கை. (கச)

[illegible]றவர்கள்வெய்யநிரையத்துயரையோரி *
[illegible]வர்கடையவினையல்லதறுமாறென் *
[illegible]தனைக்குணமெனப்பெரிதுகொண்டீர் *
[illegible]ஞசிலெங்ஙனீங்கும்விளைசொல்லீர் *

எ - து [illegible]ராயிற்கொடியநரகத்தின்கட்டுன்பத்தையனுபவித்தவர்களே பொல் [illegible] பொழிந்தோராவர், அங்ஙனம் நரகத்தையனுபவியாமற் பாவங்க [illegible]மாறெப்படிதீமைகளையேநன்மையென்று மிகவுமுட்கொண்டவர்களே நீ [illegible]கமனுபவித்தற்கிவ்விடத்திலேபயப்படுவீராயிற் செய்தபாவமெப்படிநீங் [illegible]தனைச்சொல்லக்கடவீர். எ - று துற்றல்- அனுபவித்தல் (கரு)

[illegible]னையவாசகமவர்க்குறவிசைப்பன் *
[illegible]மனுஞ்சியனைக்கடிதுநோக்கி *
[illegible]முறையாவையுமயர்த்தீ *
[illegible]யத்துறவிளைப்பதெனிசைப்பீர் *

எ - து [illegible]ன்றித்தன்மையையுடையநீதிவசனங்களைச்சித்திரகுத்தன் அந்தத்திவி [illegible]ப்பொருந்தச்சொல்லாநிற்பன் பின்பு. இயமதன்மராசனும்வெகுண்ட [illegible]ளைச்சொன்மையாகப்பார்த்து முன்னாணீங்கண் மனுநெறிமுறைமையெ

ல்லாமறந்துபாவங்களையேசெய்தீர்இப்போதுநரகத்தின்கட் செல்லுதற்குமனமடி.
ப்பதென்னதனைச்சொல்லக்கடவீர் எ - று (௧௬)

வந்திடுகமண்ணுலகமாண்டதிறன்மன்னர் ❊
வெந்துயரமேபுரிர்களுக்குறவிளைத்தீ ❊
ரெந்தமுறையாலுமிங்னேதுமதுபாலே ❊
வந்துதவியானதுசொலீர்பொருண்மதித்தீர் ❊

எ - து பூலோகத்தினையாண்டவெற்றிப்பாட்டினையுடைய விராசாக்களே, வருவீராக- நீங்கள்திரவியத்தைவிரும்பியான்மாக்களுக்குத் துன்பங்களுறும்படி கொடுமையேசெய்தீர், அங்ஙனஞ்செய்தவும்மிடத்திலெந்தவகையிலேயாயினுமீண்டு வந்துதவியானதெதுதானதனைச்சொல்லக்கடவீர் எ - று (௧௭)

மங்கையர்களெங்குளர்கள் மற்றையவர்தாமு ❊
மெங்குளர்சொலீர்புரவியானைநரயானை ❊
மிங்குவரயாம்றியமேபகையையெற்றும் ❊
பொங்குபடையெங்கொழியவிங்கெரிதுபோந்தீர் ❊

எ - து உங்களுடையவந்தப்புறத்திலே நீங்கடுணையாகக்கருதிவைத்திருந்த மடவார்களெங்கேயிருக்கிறார்கள், மற்றுமுள்ளசுற்றத்தாருமெங்கேயிருக்கிறார்கள், அதனைச்சொல்லக்கடவீர் நீங்களாண்டகுதிரையும்யானையுமேறினசிவிகையுமிவ்விடத்துங்களுடனெக்கவரயாம், கண்டோமில்லையேசத்துருக்களைச்சங்கரிக்குநிறைந்தசேனையெங்ஙனேவிட்டுப்போகத்தனித்துநீங்களிங்கேயெளிதாகவந்தீர் எ - று ஏகாரம் - இகழ்ச்சி (௧௮)

கன்றவெமதூதர்கசிவுற்றுமதுகாவ ❊
லொன்றுமமநீர்தனிமையோடிநனுமுற்றீ ❊
ரின்றுநினையத்தினுளிருத்தவுமிருந்தீ ❊
ரென்றவர்களச்சமுறவேபலவிசைப்பன் ❊

எ - து நீங்கணம்முடையதூதர்கள்கோபிக்கையினாலேவருத்தமுற்றும்முடையவாசற்காவலாயுள்ளதொன்றுந்தாங்காமற்போகத்தனிமையோடிவிவ்விடத்தில்வந்தீர், இப்போதுநரகத்திலிருத்தவுமிராநின்றீரென்றுஅவர்கள்அச்சமுறும்படிபலவசனங்களையுஞ்சொல்லாநிற்பன் எ - று [௧௯]

இப்படியேயவர்கள்சொல்லவந்தப்பாவிகள்நிற்குந்திறமீளவும்யமதன்மராசன்கண்டுசண்டன்மகாசண்டனுக்குச்சொல்லுந்திறமுணர்த்துகின்றார்.

மற்றவருமுன்னமுளவெல்வினைகளெல்லா
மற்றுனர்வினிற்பருனையற்றுளநடுங்கா
வற்றியுமற்றிவரகத்திறமனைத்து
மெற்றிகசண்டமகசண்டகாதென்றே

எ - து இங்ஙனஞ்சித்திரகுத்தனும்யமதன்மராசனுமொப்பச்சொல்லவந்த விடுத்தசொன்மன்னருந்தாமுன்னாட்செய்தகொடுவினைகளெல்லாந்தம்மறிவின்கண்ணேநின்றுச்சொல்லுதற்கோருத் தரமுமற்றுமனநடுங்கிநிற்பர்கள், மீளவும்யமதன்மராசன்வாரீர்சண்டமகசண்டரோயிவர்கள்செய்தபாவபேதமெல்லாமனுபவித்துத்தொலையும்படிசமிதியிலிடுக்கக்கடவீரென்றுசொல்லுவன் எ - று

கசம் - பாவம் [ஈ]

யமதன்மராசன்கூறமகசண்டன்முதலாயினோரந்தக்கொடுங்கோல்மன்னரைத்தெண்டிக்குந்திறமுணர்த்துகின்றார்.

ஓதகமனுற்றமகசண்டனெழுவாயர்
காதியவர்பாதமிருகைகொடுபிடித்தே
பேதமுறவேசுழல்பெறுத்திடுவர்விண்ணின்
றேதவர்பற்றிவெற்றிடவிரைந்தே

எ - து இங்ஙனம்யமதன்மராசனருளிச்செய்யவவ்விடத்தினிற்குமகசண்டன்முதலாயுள்ளோரந்தக்கொடுங்கோன்மன்னருடையகால்களையிரண்டுகையினாலும்வாரிப்பிடித்தெடுத்தவர்கள்மனங்கலக்கமுறும்வண்ணஞ்சுழற்றியாகாயத்தின்கண்ணுமெறியாநிற்பர்கள், மீளவுமவர்களையெரிதழற்கல்லின்கணடித்தற்பொருட்டாகச்சமிதியிலேயேற்றுக்கொள்ளாநிற்பர்கள் எ - று [ஈக]

மேலவர்படுந்திறமுணர்த்துகின்றார்.

வெந்தழலையன்னசிலைமீதுகடிதெற்றிச்
சிந்தவுடல்செங்குருதிசேறுபெறவூற
வெந்தமரவேகொலறுவர்கொய்யவினைசெய்தார்
மந்தமரமெந்தவிதமெற்றவனையுற்றே

எ - து பொல்லாதவினையைச்செய்தவேந்தர்களைவெவ்வியவெரிதழற்கல்லிலடித்துக்கொலைத்துக்காலத்தவர்களுடம்புசிதறவுஞ்சேறுபதியும்படிசிவந்தவிர

த்தம்புறப்படவுமிகவுநொந் துதமதுவலிகெடுவர், அஃதெப்படியென்னில், இளந் தளிரையுடையவிளமரத்தைக் கல்லின்மேலடித்தாலெப்படிசிதறிப்போமப்படிச்சி தறவருத்துவர்கள் எ - று நோல் - வலி - [௧௨]

அவர்களைநரகத்திலிடுந்திறத்தையிரண்டுசெய்யு
ளாலுணர்த்துகின்றார்.

அற்றவர்கள்சிந்தனையையாகமதுதன்னி ❊
லுற்றுலவமாருதமுமுண்ணினைவுதன்னைப் ❊
பெற்றிடலுமற்றவர்கடவினையபேத ❊
மற்றகலவுய்த்திடுகதாழ்தலைவழற்கே ❊

விலக்கரும்விதனமுற்றுமுயலகன்வியாதிமேவிக்
கலக்கியவுளத்தராகிக்கதறியேகழிவர்தாமே

எ-து மலத்துட்புழுவாய்ச்செனித்துச்செனித்திறந்திறந்தொழியாததுக்கத்தையுற்றுக்கிடப்பர்கள்-சிவனையுங்குருவையுங்குருபுத்திரரையுநிந்தைசொன்னவர்கண்முயலகனென்னும்வியாதியைப்பொருந்தியொருவராலுந் தடுக்கப்படாததுக்கத்தையுற்றுக்கலங்கியமனத்தையுடையராகக்கதறிக்கொண்டுதிரிவர்கள் எ-று (அ)

கருத்துடனேவல்செய்யாக்கரிசர்கள்குரவன்காதை
திருத்தினுந்திருந்தாவுள்ளத்திமிரரோயாவரோவல்
கருத்துறச்செய்வார்தம்மைக்கலைத்தவன்கோம்பிபாவன்
சிரத்துநோயடைவன்றானுஞ்சினப்பனேற்சினத்தபோதில்

எ - து ஆசாரியரோவலைச்செய்யப்பெற்றோமென்றுமனத்துடன்செய்யாதபொல்லாதவர்கள்-ஆசாரியர்இதிகாசமுதலியபுராணத்தைச்சொல்லிக்காட்டிப்புத்திசொல்லினுங்கேளாதமனக்கோணலையுடையராய்ப்பிறப்பர்.அவரோவலைச்செய்யுமாணாக்கனைக்கலைத்தவன்; ஓந்தியாய்ப்பிறப்பன்- ஆசாரியரும்பிராமணருங்கோபித்தபோதுதானுமவரைக்கோபித்தானாகில் அவன்மண்டைவியாதியையுடையனாகிப்பன் எ - று காதை - எ - து - இரண்டாம்வேற்றுமைத்தொகை [க]

அந்தணன்றன்னைக்கொன்றுன ருங்கயரோகியாவன்
றந்தமும்பழுதேயாகுந்தணியலையருந்திறுர்க்குச்
சிந்தியகுருகியாவன்செம்பொனைத்திருடினுனுங்
கொந்தியகுட்டநோயன்குருமனைகுழுவினுனே

எ- து பிராமணனைக்கொன்றவன்-சயரோகமென்னும் வியாதியைப்பொருந்துவன், மதுபானம் பண்ணினவன்- சொத்தைப்பல்லை யுடையனுய்ப் பிறப்பன், பொன்னைத்திருடினவன்பலகாலும் அறுக்கப்பட்டசொத்தைநகத்தையுடையனுய்ப்பிறப்பன், குருதாரகெமனம்பண்ணினவன் குடாரியாற் கொத்தப்பட்டகுட்டவியாதியையுடையனுய்ப்பிறப்பன். எ- று

(ய)

பாம்பெனுமுருவந்தன்னைப்பரித்திடும்பகைக்குமஞ்சித்
தேம்பியேதிரிவன்றெய்வத்திரவியங்கவர்ந்ததீம்பன்
பாம்பணைப்பள்ளியானைப்பழிமொழிபகர்ந்தபாவி
கோம்பியாயுதரவங்கிகூர்ந்திடக்குலையுமன்றே

எ. து சிவத்திரவியங்களை யபகரித்த பொல்லாதவன்- பாம்பாகப்பிறந்ததன்னைபடித்துக்கொல்லும்பகையாகிய கெருடன் முதலியவற்றிற்கு மானிடர்க்கும்பயப்பட்டுக்காட்டிலேகிடந்து தேம்பித்தேம்பித்திரிவன் அந்தநாகந்தனைப்பாயாகத்துயிலுமாயனை நிந்தைசொன்ன பாவியானவன். ஓந்தியாய்ப்பிறந்து. உதராக்கினி மேலிட்டு, அதிஞலேநடுங்காநிற்பன். எ- று

(ய௧)

பறைந்தவனுயிரேனும்பழுதுறுபதிதனேடும்
புறம்புறுபுலையனேடும்புறம்புறுபுலையனுவன்
அறந்தனைமறந்தபாவியவனெடுமிருதுவாகி
உறைந்திடுமவளைக்காமுற்றுவகையோடுனைத்தான்ருனும்

எ- து நாயுடனுங் குற்றத்தையுடையவிரதபங்கனுடனும் நீசனுடனும்அதற்கதற்கேற்றகன்மத்தைச்செய் யாதொழிந்தபாவியுடனும், இருதுவானவளுடனும்வாஞ்சித்துமகிழ்ச்சியுடன்வார்த்தைசொல்லுமவனும், நீசனுய்ப்பிறப்பன். எ- று

(ய௨)

கருவினுளழிவன்முற்றிக்கழிந்துடனழிவன்காளைப்
பருவமுற்றழிவனீகைபகர்ந்துபின்னுதவாப்பாவி

பெருவலைக்கண்ணியாலும்பிடித்துயிர்வதைத்தபேதை *
கருதியபொருளைத்தக்கோர்க்குதவிடான்றிளைத்தகையன் *

எ- து யாதாமொருவர்க்கொருபொருளைக்கொடுத்தற்கிசைந்து பின்னைக்கொடாதவன் மாதாவினதுகருப்பத்தின்கண்ணேநாசத்தையடைவன். பெரிதாயிருக்கிறவலையினாலுங்கண்ணிகளினாலுமிருக பட்சிமுதலியவைகளைப்பிடித்துக்கொன்றறிவில்லாதவன் கெற்பமுற்றிப் பூமியின்கட்பிறந்தவுடனே நாசத்தையடைவன், தபோதனர்க்கென்றுநியமித்த பதார்த்தங்களையவர்களுக்குக்கொடாமற்றானேயபகரித்தவஞ்சகன்பொசம்துகரும்பருவத்திலேயிறப்பன். எ- று (௰௩)

அவையவமனைத்துங்குன்றியழிந்திடுமாக்கையாலுன் *
சுவையினைவிரும்பிபுண்டதுட்டர்கள்சோலைதன்னைத் *
திவலையதினைநீர்தேங்குந்திண்ணியதீரந்தன்னை *
யவமதியாலேசாலவழித்திடுமற்பர்தாமும் *

எ- து முற்சென்னங்களில்மாங்கிசங்களை விரும்பிப்பொசிக்கும் பொல்லாதவருந், தோப்பினையுநிறைந்தநீர்தேங்கித்திவலைதெறிக்கஅலையெறியா நின்றதிண்ணியதாகியவரிகுளமுதலியவற்றிற்கரைகளையும், அபோதபுத்தியினாலேவெட்டியழிக்குமற்பருங், குட்டவியாதியைப் பொருந்தி யுறுப்புக்களெல்லாங்குறைந்து நாசத்தையடையுமாக்கையையுடையராய் ப்பிறப்பார்கள். எ- று (௰௪)

ஐவகையாகத்தொன்றுமாக்கிடாதருந்தினானும் *
தெய்வமேகொழுநனென்றுதெளிந்தவச்சிந்தையற்ற *
தையலைக்காமுற்றானுந்தணந்துகற்புடையாடன்னைப் *
பொய்முயக்கியரைப்புல்சும்புலையனும்பன்றியாவான் *

எ- து தெய்வயாகம் பிதிர்யாகம் பசுயாகம் மானுடயாகம் பிரமயாகம் எனக் கூறியஓமம்வளர்த்தல்முதலிய வைவகையாகங்களிற்றனக்கியன்றதொன்றைச்செய்யாமற்பொசித்தோனுந்தன்கணவனேதெய்வமென்று கொண்டுவேறுவிகாரபுத்தியையொழித்தவுத்தமியை யாசைப்பட்டவனும் பதிவிரதையாகியபாரியைவிட்டுப் பொய்யைமெய்யாகவே சொல்லிப்பசப்பும் பொதுமடவாரைக் கூடும் பாவியான பொல்லாதவனுமூட்பன்றியாய்ப்பிறப்பன். எ- று (௰௫)

ஒருகுடிப்பிறந்தாள்போகமுகந்தவனூர்நாயாவான் *
றருமமேயெமக்குமொக்குந்தனந்தருவானேடென்று *

கருணையாலன்னசாலைகாப்பதுகற்பலாது
பொருளினைமதித்துச்செய்தான்புலையனும்நாயுமாவன்

எ- து அன்னியகோத்திரத்திலுண்டான கன்னிகையை விவாகஞ்செய்யாமற்றன்னுடையகோத்திரத்திலுண்டானகன்னிகையை விவாகஞ்செய்தவனூர்நாயாய்ப்பிறப்பன். தனங்கொடுத்துத் தருமஞ்செய்யுங் கருத்தாவுக்கும் அவர் கையிற்றனத்தைவாங்கித்தன்மத்தைக்குறைவறநடத்துகிறசமக்கும்புண்ணியமொக்குமென்றுகருதியன்னசத்திரமுதலியவற்றைக்கிருபையுடன்விசாரிக்குமதே முறைமையல்லாமற்றனக்கொருபிரயோசனத்தைக்கருதி விசாரிக்கிறவன் சண்டாளனாகப்பிறந்துபின்புநாயாகவும்பிறப்பன். எ- று (௩௬)

வேறு

இம்மைப்பயனைக்குறியாதேயிறைவன்றிருவாலயமதனுட்
செம்மைசிறக்கமாபூசைசெய்விப்பவரேசிறப்புடையார்
இம்மைப்பயனைக்குறித்தியற்றுமதிகாரியர்நாயுடலெடுப்பர்
புன்மைப்புலையனெனுமுடலும்பொருந்திவிடுவர்புகழினையே

எ- து இம்மைப்பயனாகியதிரவியமுதலியவற்றைக்கருதாமற்சிவனதுஆலயத்தில்வைபோகமாகமகாபூசைகளைச்செய்விக்கிறவர்களேமறுமைப்பயனையடைகிறவர்கள். இம்மைப்பயனைக்குறித்துச்சிவனதுகாரியங்களைவிசாரிக்குமவர்தமதுகீர்த்தியையுமொழித்துநாயாய்ப்பிறந்துபின்புசண்டாளராகவும்பிறப்பர். எ- று (௩௭)

எங்கள்குரவன்பெரியனெனவெண்ணுமதுகற்பதுவல்லா
லுங்கள்குரவனையொப்பனெனநுவலும்பரிவாதவர்தாமும்
பங்குபதத்தர்விழியிழந்துபார்வைதனையுமிழந்தார்கள்
அங்கணவற்றைக்கேட்டார்கள்கேள்விப்புலனற்றவர்தாமே

எ - து யாதாமொருவர் தம்முடைய குருவைப்பெரியனெனக்கருதி யிருப்பதேமுறைமை யஃதல்லாமற் பிறகாநோக்கி யும்முடைய குரவனொன்றுமறியானெனச்சொல்லுமகாபாதகரானவரு முடவருமா யுருவமுதலியவற்றைப் பார்க்கக்கண்ணில்லாத குருடருமாயும்பிறப்பர். அவ்விடத்திலேயந்தக் குருவுடனத்தைமனங்களிக்கக்கேட்டிருந்தவர்கள் செவிடராய்ப் பிறப்பர். எ று.

பரிவாதம்- குற்றஞ்சொல்லுதல் வடமொழி (௩௮)

கண்ணிலாக்கிருமியாவன்கருத்திலுண்ணெய்யனென்றே *
பெண்ணினன்குரவன்றன்னையிடர்ப்படக்குய்யந்தன்னிற் *
புண்ணையுமுறுவன்பின்புகன்றவனபவாதத்தைக் *
கண்ணுளத்திலனேயாகிக்கரத்தினைக்காப்பனன்றே *

எ - து ஞாஞசாரியனையற்பரொனமனத்தின் கண்விசாரித்தவன் கண்ணில்லாதபுழுவாகப்பிறப்பன் மற்றைச்சொனனத்திலே மாறுடனாய்ப்பிறந்து குய்யத்திலே வியாதியைப்பொருந்துவன் அந்தவாசரியர் செய்யாத கருமத்தைசெய்தாரொன்று பொய்மொழிசொன்னவன் அறிவற்றமனத்தை யுடையனாய்ப் பிறந்து கழுதை மேய்த்துக்கொண்டுதிரிவன் எ று (உ௯)

பரமனுங்கருத்தாவேவற்பற்றியகருத்தாத்தேவர்க் *
குரிமையிற்பூசைமற்றுமுனாற்றிடாவூனத்தாலே *
வரமறுமலியனுவன்வாய்த்தநற்சுற்றத்தார்க்கு *
முருகிடாதொழிந்தான்கண்டுமிடியனுமுறுவன்கண்ணோய் *

எ - து முதன்மையானவிராசாவினது ஏவற்கண்ணிற் குமவனவ்வரையன் கற்பித்தபடி சிவன்முதலிய தேவர்களுக்குப்பூசைதிருநாள் நடப்பி வியாதகுற்றத்தாலே சிறுமையுடைய அலியாய்ப்பிறப்பன் அச்சிவனடியார்க்கு மனமுருகாது கண்டொழிந்தவன் வறியனுமாய்க்கண்ணோவுமுறுவன் எ று (உ௰)

விருந்தினையருத்தாதுள்ளேவீற்றிருந்தடிசிறுனே *
யருந்தினன்கபோலநோயனருந்தவர்க்கருத்தாமுன்று *
னருந்தியேயவரைப்பின்னையருத்தியவவனேநெஞ்சின் *
வருந்தவேமருவுநோயன்மாறுமோமருந்தினாலும் *

எ - து தன்மனையிடத்துப்புதிதாய்வந்தவதிதிகளைப்பொசிப்பியாமற்றானொருவனுமாயுள்ளேயிருந்து அன்னதிகளைப்பொசித்தவன், கன்னத்திலேவியாதியைப்பொருந்தித்துயருறுவன். அரியதபோதனர்களைப்பொசிப்பிக்குமுன்னேதான்பொசித்து பின்பவர்களைப்பொசிப்பித்தவன் நெஞ்சிலே களோகமென்னும் வியாதியைப்பொருந்தித்துக்கத்தையுறுவன் அந்தவியாதி மருந்துகளினாலும் போமோபோவதல்ல எ று [உக]

ஓதனமொளித்துக்கொண்டானுதரமந்தாங்கியாவன் *
வாய்தனிற்புண்ணுமாவன்வழக்கிடைக்கூடமாக *

வீதிவன்செய்தானென்றேவியம்பியவிழுதைதானும்
வாய்தனிற்புண்ணையாவன்வாக்கினால்வழுக்கலாலே

எ - து பரிவுடனவ்வன்னத்தைத்திருடிப்பொசித்தவன்மூலாக்கினிசொலி யாதவனாய்ப்பசியின்றியிருப்பன். அஃதன்றி - வாயின் கட்புண்ணையும் பொருந்து வன்வழக்குச்சொல்லுமிடத்து ஒருபாலுள்ளாசைகொண்டு ஒருவர்செய்த குற்றத்தையின்னதிவர்செய்தாரென்று விளங்கச்சொல்லாதுமறைவினாற்சொன்ன வறிவில்லாதவனும்வாயினால்வழுப்படக்கூறலாலேயவ் வாயின்கட் புண்ணையடை வன் எ று (௨௨)

கண்டனிலேயுமாவன்காறனிற்புண்ணுமாவன்
கொண்டநோய்கண்டுதன்னைக்குறுகியபெரியோர்தம்மை
விண்டவன்பிதாவைத்தாயைவிரும்பியசுற்றத்தாரைப்
பண்டையோர்தமையும்நெஞ்சிலிரக்கமும்பாங்குமற்றே

எ - து யாதாமொருவனொருவியாதியைக்கொண்டிதனைப் போக்குவார் யாவரெனத்தேடித்தன்பால்வந்தபெரியோரையுந்தனதுமாதாபிதாக்களையுந்தன்னி டத்தன்பினையுடைய சுற்றத்தாரையுஞ்சினேகித் தபோர்களையுமிரட்சியாமல்மன திற்கட்கிருபையையுமுரிமையையுமொழித்துத்தள் ளிவிட்டவன்கண்ணைக் காட் டினையுங்காலிலே புண்ணையுமுடையனாய்த்துக்கத்தையுறுவன் எ - று (௨௩)

சொற்றவிப்பலன்கடன்னைத்துன்னுவன்சோரன்சோரற்
குற்றுடன்பட்டான்றானுமுனைத்தவுனுபாயிதானும்
பத்தினிபலருட்பக்கபாதத்தையொருத்திபாலே
முற்றினனலியனென்னுமுடையுடலெடுக்குமூடன்

எ - து பிறர்சொத்தைக்கவருங்கள்ளனாயுள்ளானும் அந்தக்கள்ளனுக்குத் துணைச்சென்றானுமதற்குபாயஞ்சொல்லிக்கொடுத்தவனு முன்னர்ச்சொன்ன கண்ணைக்காட்டினையுங்காலிலேவியாதியையும்பொருந்தியதனாற்றுக்கத்தை யுறு வன். தனக்குப்பாரிகள் பலவுண்டாயிருக்கில் எல்லாரையுஞ்சமமாக நடத்தாது ஒருத்தியிடத்திற், றானேமிகுந்தபக்ஷபாதத்தையுடையனாயிருக்கிற அறிவில்லாத வனாற்றத்தையுடைய தேகத்தையெடுத்தலியனாய்ப்பிறப்பன் எ-று (௨௪)

வெள்ளிபட்டாடைதன்னைவிரும்பியேயெடுத்தகையன்
கொள்ளுமேகுட்டநோய்நீர்க்கோவையென்னுதரநோயா

லுள்ளமுமொல்கிவாடுமுதகநீர்ப்பந்தர்தன்னை *
நள்ளசத்திரத்தைநல்லார்நடுக்குறநாசஞ்செயதான் *

எ - து வெள்ளியையும்பட்டுப்புடைவைமுதலியதுகிலினையுமாசைப்பட்டுத் திருடினபொல்லாதவன், வெள்ளைக்குட்டமென்னும் வியாதியைப்பொருந்துவன், தண்ணீர்ப்பந்தரையும்நல்ல அன்னசத்திரங்களையும் பெரியோர்கள் துயருற அழித்தவன் - நீர்க்கோவையென்னுமுதரவியாதியைப்பொருந்தியதனாலுள்ள மெலிந்துதுக்கத்தையுறுவன் எ - று (உரு)

புலையனேயாவன்கோவிபூதிநாசிகனேகோளன் *
கலகமேவிளைத்தான்கண்ணைக்காட்டியுங்கையினாலும் *
வலமறுமழுகல்வாயன்வனத்துமாசுணமேயாவன் *
விலைசெய்வானியந்தன்னைப்பித்தளைகவரிவேறும் *

எ - து மிகுந்தகோபத்தையுடையவன், சண்டாளனாகப்பிறப்பன், கோட்சொல்லுமவன், சீயினாலுற்றத்தையுடையநாசியையுடையனாவன், நயனபாஷை இறைபாஷைமுதலியவற்றால், ஒருவனுக்குச்சண்டையைமூட்டினவன், நன்மையில்லாததுர்க்கெந்தத்தையுடையவாயையுடையனாவன். ஈயம்பித்தளைசாமரைமற்றுமுள்ளபதார்த்தங்களையுந் தத்தமக்கேற்றதொழிலில்லாதோன்விற்கில், அவன் மலைப்பாம்பாய்ப்பிறந்துதுயருறுவன். எ - று (உசு)

செலலுறுமென்றுமாலவட்டமுந்திருடுந்தீம்பன் *
வலமிலனேனுந்தன்னைமதித்துவாமனனேயாவன் *
கொலைவிடையூர்திபுண்ணுமனையுறக்குலைந்துநோவ *
னலலுறும்பிறவியந்தனாவினைவதைத்தவற்பன *

எ - து ஆலவட்டமும்விசிறியுந்திருடினபொல்லாதவன், எந்நாளுந்துயரத்துக்கிருப்பிடமாய்த் துயரினையேயுறுவன், தானொன்றிலும்வளமில்லாதவனாயிருந்தும்யானதுக்குவல்லேனிதுக்குவல்லேனென்றுதன்னைப்பெருமைபண்ணிக்கொள்ளுமவன்மிகவுங்குள்ளனாய்ப்பிறப்பன், இடபத்திலேறித்திரியுமவன், கடித்தலத்திற்புண்ணைப்பொருந்தியதனால்நடுங்கிவருத்தத்தையுறுவன்பசுவைவதைத்தவற்பனானவன், பிறவிக்குருடனாய்ப்பிறந்ததனாற்றுக்கத்தையுறுவன் எ-று (உஎ)

கோவினைத்துக்கஞ்செய்தான்கோணியநாசியாவன் *
கோவினுக்கிரக்கமில்லான்கூறிடிற்சிபுடனா *

காவியங்கண்ணிநீங்காக்கற்பினளவள்பாற்காத *
லோவினன்களத்தினீங்காக்கழலையையுடையனன்றே *

எ - து பசுவைத்துயருறுவித்தவன் - கோணன்மூக்கினையுடையனாய்ப்பிறப்பன், சகலதேவருக்குமிருப்பிடம் பசுவாதலாற் பசுவினிடத்திலேயிரக்கமில்லாதவன், உள்ளேகொப்புளத்தையுடைய நாசியையுடையனாய்ப்பிறப்பன் கழுநீர்மலர் போன்றகண்ணையுடைய பதிவிரதாபாவத்தை விடாதவளிடத்தன்பில்லாதகணவனானவன் கண்டத்திலேயொழியாதபுரைக்கழலையையுடையனாவன். எ - று [உஅ]

விற்றவன்சோமந்தன்னைவேட்டைவார்வேடனாவன் *
றுற்றினன்கடத்திற்கூலிவேலைசெய்துரிசனாவன் *
கற்புறுமானைதன்னைக்காப்பவன்றாயிலந்தன்னை *
விற்பவன்றானுங்கூலிவிரும்பியிற்கொடுத்தவீணன் *

எ - து யாகாதிகள்மநிமித்தமாக ஆட்டாங்கோடியைவிற்றவன் வலைமுதலியவற்றால் வேட்டையாடும்வேடனாய்ப்பிறப்பன்; சட்டியானைமுதலியவற்றிற்பொசித்தவன் கூலிவேலைசெய்யும் பாவியாய்ப்பிறப்பன் - வாணியனல்லாமலென்னைவிற்றவனுங்கூலிக்காசைப்பட்டிருக்கும் வீடுகொடுக்கும்வீணனும் யானைப்பாகனாய்ப்பிறப்பன். எ - று [உக]

களத்தினிற்கண்டமாலிகழித்தவூன்முதலுண்கல்ல *
னுளத்திலன்பொழித்துநூலையோதினன்மூகனாவன் *
றளத்தியல்கோசந்தன்னைத்தற்கரன்சாத்தியந்தன் *
பளக்குமூக்குடையான்பாங்கார்தருமநூல்பழித்தபாவி *

எ - து சாத்திரத்திலேமன்னர்முதலாயினார்க்காகாதெனநீக்கியமாங்கிசத்தையும் உள்ளிமுதலானபதார்த்தத்தையும்பொசிக்கும் பொல்லாதவன்-கழுத்திலேகண்டமாலையென்னும் வியாதியைப்பொருந்துவன் ஆகமபுராணங்களையுள்ளத்தின்கட்சிரத்தையின்றியாசாரியர்கட்டாயத்தினாலேயாதினவன்ஊமையாய்ப்பிறப்பன், ஆகமசாத்திரங்களை யெழுதிய திருமுறையைத்திருடினவன் - பிறவிக்குருடனாய்ப்பிறப்பன் - சிவாகமமுதலியவுரிமையான நூல்களைப்பழித்தபாவியானவன் - கொப்புளத்தையுடைய மூக்கையுடையனாவன் எ - று (௩௪)

கற்புளார்செயலைநொய்துகழறினன்கர்க்கைக்கண்ண *
னற்றவர்தேவர்ஞானயோகர்நல்லறஞ்செய்வார்கண் *

உ ஈ ஏ உ

மற்றுமுத்தமர்பாலன்புவைத்திலன்கோணல்வாயன்
பற்புழுப்பயிலுநோயன்பழுதுணாப்பவனிவார்பால்

எ - து பெரியவர்களனுட்டித்தவாசாரத்தைநொய்மைபண்ணி நிந்தித்தவன் - மாறுகண்ணனுவன் - நல்லதபோதனர்கள் - தேவர்கள் - ஞானயோகிகள் நிந்தப்பண்ணியத்தைச்செய்வோர்கள் மற்றுமுள்ளபார்ப்பார்முதலியவுத்தமர்களிடத்தக்கிருபையில்லாதவன் - கோணல்வாயையுடையனுவன் - யாதொருவர்க்கொன்றைக்கொடுப்போர்களிடத்துக்கொடாதபடிவிகாதம்பண்ணினவன் - பல்லிலேபுழுவுடைத்தாகியநோயையுடையனுவன் எ - று (ஈக

சலமெனும்வாதியாவன்றகைபெறுசமையந்தன்னை
நிலைகுலைசெய்தான்கள்ளநீசனைநேசஞ்செய்து
கொலைவிலக்கிடுவான்றானுங்கோணியவழக்குக்கூறும்
புலையனும்பொருந்திமன்றிற்புந்தியிற்புன்மையாலே

எ - து தகைமைப்பாட்டையுடையசிவசமயத்தைப்பேதித்தவனுஞ்-சேரராகியவினைபிராசாவனவன்ஆக்கினைபண்ணுகையில்பட்சபாதத்தினாலேயவனை விடுவிக்கிறவனும் - அம்பலத்திலேயிருந்து செவ்வைவழக்கைச்சொல்லாதுதன புத்தியினுட்பொல் லாங்கினாலே வழக்கல்லாவழக்கைச்சொல் லுமீனனுஞ்சலவாதியாவன் எ - று (ஈஉ

எளியனைவதைத்தவந்தவினைகளாலுமில்லான்
களவிலாவடியார்தம்மைக்கறுத்தொறுத்தவன்கைகாலுந்
தளர்வுறக்குட்டநோயுந்தாங்கியவுடலனுவன்
விளிபவன்கொண்டநோன்புவீடிழந்துழல்வன்வேறே

எ - து. ஏழையாயுள்ளபெயரையவரிடத்தபராதமின்றிவதைத்தபொல்லாதவன் - கைகால்முதலியவுறுப்புகள் குறைந்தவனுவன் - களவில்லாதவடியாரைக்கள்வனெனக்கருதிக்கோபித்தடிக்குமவன் - கைகாலுந் - தளர்ந்துகுட்டவியாதியையுமுடையனுவன்-தான்சங்கற்பித்தனுட்டித்துவந்தவிரதங்களையிடையிதுகாரங்களில்விட்டவன் - தானிருந்தவீட்டையிழந்துவேறுயுள்ள விடங்களிலேபோய்த்திரிந்துழல்வன். எ - று (ஈ

நீடியமனைவியல்லான்மற்றைநேரிழையாரோடு
கூடியேசதுரங்காதியாடியகொள்கையாளன்

கேடுறுபுடலினற்பகேசியேயாவன்கேளி
ரீடிளைத்திடக்கைவிட்டான்பரிபவப்படுவனெங்கும்

எ-து தன்னுடையபாரியல்லாமன்மற்றுள்ளோர்பாரிகளுடனேகூடியிருந்துசதுரங்கஞ்சொச்சுட்டான்முதலியவற்றையாடிப்பொருந்தொழிலையுடையவன்-நர்சத்தையடையின்றசரீரத்தின்கண், அற்பராமத்தையுடையவனுவன் சுற்றத்தாரரனோர்தமதுசெல்வம்போய்மிடியரானவிடத்துஅவர்களுக்கியன்றதுஅன்புட்னுதவாமற்கைவிட்டவன்போனவிடத்தெங்கெங்கும்அலூச்சியனாய்நிந்திக்கப்படுவன் எ-று (௩௪)

பொருதவன்சதுரங்காதிபொதுமடவரலாரோடு
திருவறவுருவுமின்றித்தீம்பரும்புடையேசேரத்
தருபவரொவரோயென்றுதளர்ந்துடற்றூட்சிபேசித்
திரிவனேயிரந்துதின்றுதீர்த்திடாச்செல்லலோடே

எ-து வேசியர்முதலியபொதுமடவாருடனேசதுரங்கமுதலியவற்றைப்பொருதவன், செல்வமுமின்றிச்சவுந்தரியமும்போய்ப்பொல்லாதவர்களும், பக்கத்திலேசூழக்காசுபணமுதலியவற்றைத்தருவாரொவரோவென்றுகருதித்தாழ்ச்சிகளைசொல்லிச்சரீரம்வாட்டத்தையுற்றொருக்காலுந்திராததுக்கத்துடனேயிரந்தருந்தித்திரிவன். எ-று (௩௫)

அருக்கனத்தமனந்தன்னிலடைந்தவர்க்கிடங்கொடாதான்
பரித்திடும்பாரிதன்னையிழந்துளம்பதைப்பன்பாங்கால்
விரைத்தெழுந்தெதிர்கொளாதான்விரும்பியபொருளைவீழ்ப்பன்
றரித்தனல்வேதத்தாரைத்தபோதனர்தமையுந்தாழ்ந்தே

எ-து ஆதித்தியனத்தமனகாலத்திலேதனது மனையிடத்தேவந்துசேர்ந்தவர்களுக்கில்லங்கொடாதவன் - அக்கினிசாட்சியாகக்கைப்பிடித்தபாரியையிழந்து - உள்ளத்தின்கண்ணேதுக்கத்தையுற்றுத்திரிவன் - நால்வேதத்தையுமோதியவேதியருந்தபோதனர்களுந் தன்னிடத்துவந்தகாலத்துச்சடுதியிலெழுந்திருந்துதேவரீரொழுந்தருளப்பெற்றதேயென்று - இனியவசனங்களைச்சொல்லிப்பணிந்துரிமையுடனேயெதிர்கொள்ளாதவன் - தான்ஆசைப்பட்டுஆர்ச்சித்திருக்கிறபொருள்களைப்போக்கடிப்பன். எ-று (௩௬)

வேதநிந்தகனேபுன்மைவிடக்குணும்புலையனுவன்
வேதநல்லந்தநிந்தன்வெவ்வினைவேடனுவேன்
வேதகனுனிநிந்தைவிளம்பினன்பித்தனுவன்
வேதியர்பொருளைக்கொண்டான்விளக்குறுவிட்டிலாமே

எ - து வேதாகமங்களைத்தூஷித்தவன்பொல்லாதவிடக்கைப்பொசிக்கும் புலையனுய்ப்பிறப்பன் வேதாந்தமுதலியசாத்திரங்களைத் தூஷித்தவன் - வெவ்வியகொலைத்தொழிலைச்செய்யும்வேடனுய்ப் பிறப்பன் - வேதாகமங்களையோதியுணர்ந்தஞானவான்களைத்தூஷணஞ் சொன்னவன்-பயித்தியங்கொண்டு போவன் வேதியர்பொருளையபகரித்துக்கொண்டவன் விளக்கின்கண்விழுகிறவிட்டிற்பூச்சியாய்ப்பிறப்பன் எ - று (௩௭)

விட்டிடாவியனேயாளனயிட்டிகவிரதம்விட்டா
னெட்டகமாதியின்மைதுனிபிரமேகரோகி
யிட்டமிக்கிணங்கினுனுரியரினைத்தோஷிக்கப்
பட்டவைம்பருவந்தன்னிற்பாங்கலாமற்றைப்பாலும்

எ - து நயிட்டிகப் பிரமசரியத்தைமரணந்தம்வரையு மனுட்டிக்கவென்று சங்கற்பித்துக்கொண்டதனைமுடிவுபோகவனுட்டியாமலிடையிதுகாலத்திலே விட்டவன்சரீரத்திலேஅனவரதகாலமுமோழியாதவியாதியைப்பொருந்துவன்மாதருடன்கூடுமதற்காகாதெனவிதித்தவிதிபாதமுதலியபஞ்சபருவங்களிலுமுரித்தல்லாதமற்றத்திதிநட்சேத்திரங்களிலுமாசைமிகுதியாலேதனது பாரியைக்கூடினவனும் - ஒட்டகமுதலியவற்றின்யோனிகளிலேமைதுனஞ்செய்தோனுஞ்சுக்கிலப்பிரமேகமென்னும்வியாதியையுடையவனுவன். எ - று
ஒட்டகமாதியென்றதனுற் - கழுதை-குதிரையெனவறிக - பிரமேகம்-மேகவியாதி. [௩௮]

தந்தைபாற்றாய்பாலன்புதவிர்ந்தவன்றனமுமின்றி
னைந்துளநடுக்கமுற்றுநாடியபலத்துளொன்றும்
வந்துகைகூடிடாதுவாடுவன்மனத்தின்கண்ணு
மந்தரமடைவனென்றும்பிறர்பழியறைந்தவற்பன்

எ - து மாதாபிதாவினிடத்திலே - அன்புவையாது விட்டவன் - தரித்திரனுமாயுள்ளத்தின்கண்நடுக்கத்தையுற்றுவருந்தித்தனக்குவருமென்றிருந்தபதார்த்தங்களிலேயொன்றும் வந்துகைகூடாமலதிலேமனத்தன் கட்டுக்கத்தையுறுவன்

பிறரைபடாப்பழிசொன்ன அற்பனானவன் - அழகுகெட்டகண்ணை யுமினைத்த நெஞ்சினையுமுடையனாயெந்நாளுந்துக்கத்தையேயுறுவன். எ - று [௩௧]

கூட்டியேயவலர்தம்மைக்கூறினான்பெரியோர்குற்றம்
நாட்டமும்பிதுங்கநீங்காநடலையையுறுவன்மாலை
சூட்டியகணவன்றோளைத்துறந்தகத்தூய்மையற்ற
வாட்டடங்கண்ணிதோளைமருவினான்வாதநோர்கி

எ - து பொல்லாதவர்களைக்கூட்டியச் சபையிலேபெரியோர்கள்செய்திருக்கிறகுற்றத்தைச்சொன்னவன் - கண்ணிலேயூனும்புறப்பட்டு அதினாலே யாருகாலுமொழியாததுக்கத்தையுறுவன் - தன்னையக்கினிசாட்சியாகமாலையைச்சூட்டிக்கைப்பிடித்தகணவனிருக்கவும்--அவனைவிட்டுப்பதிவிரதாபாவகத்தையுங்குலைந்துசோரபத்தாவுடனேகூடக்கருதும்வாள்போன்றகண்ணினையுடைய மாதரைக்கூடினவன் - வாதவியாதியைப்பொருந்துவன் எ - று (௪௰)

மிருதியின்வழியின்விட்டுவேண்டியதெல்லாஞ்செய்தா
னுருவினுமனத்துந்துன்பமொருவிலனென்றுமற்றைக்
கரிசருங்கலப்பர்தத்தங்கடுவினைக்கிசைந்தகட்டம்
விரியுநூல்துயரபேதந்தனித்தனிவிளம்பும்வேலை

எ - து மனுமுதலியமிருதியின் வழிநடவாதுதன்மனதுக்கேற்றபடிவேண்டியதனையெல்லாஞ்செய்தவன் - சரீரத்தினு - மனத்தினும் - எக்காலமுமொழியாததுக்கத்தையனுபவிப்பன் ஈண்டுக்கூறியதன்றிமற்றைப்பாவபேதங்களைச்செய்து - அதனானரகசேடத்தைப்பொருந்தியபாவிகளுந் - தாந்தாஞ்செய்துள்ளபொல்லாவினைக்குத்தக்கதுயரங்களையுறுவர்கள் - அவைகளையும்விளங்கக்கூறினாலாகாதோவென்னிலந்தத்துயரபேதங்களைத்தனித்தனியே விரித்துச்சொல்லுமிடத்திந்தநூல்விரியுமாதலாற்கூறிற்றிலர் - அதனைக்கண்மபரிபாகநூலில்வந்துழிக்காண்க. எ - று (௪௧)

அதிபாதகமுதலியபாவஞ்செய்தோரடையும்பயனை
யும்அவர்பின்னர்ச்செய்யுஞ்செயலையுமெனுமோர்
வகையாற்றொகுத்துமூன்று திருவிருத்தத்தா
லுணர்த்துகின்றார்,

சிவதருமோத்தரவுரை

வேறு

பன் முறையாம நிபாதகரோபன்னெடுநாண்மலபாதகரோ
பன்மயவாமகபாதகரோபற்பலபன்றிமெய்பற்றுவரோ
பன்மயமற்றையபாதகரோபற்பலநாயுடல்பற்றுவரோ
பன்மயவாமுபபாதகரும்பற்பலபரமரசாதியரோ

எ - து பலகாலுமநிபாதகத்தைச்செய்தவர்கள் - நெடுநாணரகத்திற்கிடந்தநுபவித்துப்பூமியின்கண்ணேவந்துமலத்தினுட்கிருமியாகியனுபவிப்பர்கள் - பலகாலுமகாபாதகத்தைசெய்தவர்கள் - ஊர்ப்பன்றிமுதலியபன்றியுடலையெடுப்பர்கள் - பலகாலுமகாபாதகவுபபாதகத்தைச்செய்தவர்கள் - பலபலநாயுடலையெடுப்பர்கள் - பலகாலுமுப்பாதகத்தைச்செய்தவர்கள் - பலபலவண்டுச்சாதியாய்ப்பிறப்பர்கள். எ - று (சஉ)

பண்ணினர் முன்னநிபாதகமேபண்ணுவரோயநிபாதகமே
பண்ணினர் முன்மகபாதகமேபண்ணுவர்பின்மகபாதகமே
பண்ணினர்மற்றையபாதகமுன்பண்ணுவர்மற்றையபாதகமே
பண்ணினர் முன்னுபபாதகமேபண்ணுவர்பின்னுபபாதகமே

எ - து முற்செனனத்திலநிபாதக - மகபாதக - முபபாதகம் - இவைகட்குத்தல்லியபாதகங்களிவைகளைச்செய்தவர்கள் - இச்செனனத்துமவ்வண்ணமேயந்தப்பாவவிதங்களை-முன்னரியற்றியவாதனைப்படியேசெய்வர்கள் எ-று சகூ

பண்ணினர்மற்றையபாவவிதம்பண்ணுவரோபலபாவவிதம்
பண்ணினரோற்பரிகாரவிதம்பற்றிலர்முற்றியபாவவிதம்
பண்ணிலரோற்பரிகாரவிதம்பற்றியவாழ்குழிபற்றுவரோ
பண்ணியபாதகசேடமுறப்பாரிழியோனியும்பற்றுவரோ

எ - து முற்செனனத்திற்பாவத்தைச்செய்தவர்கள் - இச்செனனத்திலுமந்தப்பாவத்தையேவிரும்பிச்செய்வர்கள் - ஒருசெனனத்திற்செய்தபாவமற்றோர் — செனனத்துந் - தொடருகையாற்குற்றம்போம்படிக்குப் பரிகாரஞ்செய்வாராயிந்தப்பாவபலத்தையுறார் - வைதிகத்துஞ் - சைவத்துங்-கூறியபடியாசாரியராற் பரிகாரஞ்செய்துகொள்ளாதிருப்பாராயின் - அக்குற்றம்போகாது-ஆதலாலந்தப்பாவபலம் - போம்படிக்குரரகக்குழியிலே கிடந்தழுந்துவர்கள் - அங்ஙனமந்தரகபுவனத்திற்போகமனுபவித்துத்தொலைந்தவாறே யந்தப்பாவசேடமனுபவிக்கைபின்பொருட்டுப்பூமியின்கண்வந்தினசாதியாயும்பிறப்பர்கள். எ-று (சச)

மேன்முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியா
லுணர்த்துகின்றார்.

என்றுவினையொன்றுபலசேடமுமிசைத்தான் ❊
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் ❊
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைகெய ❊
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே ❊

[சரு]

எ - து வெளி

மேற்சிவத்துதியிரண்டுசெய்யுளாலுணர்த்துகினறார்
வேறு.

அன்றறமாநியறைந்தவனேயருக்கனுப்பலறைந்தவனே ❊
குன்றவிலங்கையிற்கொண்டவனேகோலவிலங்கையிற்கொண்டவனே ❊
வென்றிநினைந்துவிலங்கலுமேமிண்டியெடுக்கவிலங்கலுமே ❊
யன்றவனுகமரக்கினனேயவனிசைக்கங்கியரக்கினனே ❊

எ - து. சிருட்டியாரம் பத்திலேயகத்தியர்முதலாயினோர்க்கறமுதலியநா
கினையுமுபதேசித்தவனே - யாதித்தியனுக்குரமாயிருந்தபல்லையுடைத்துப்போக்
கினவனே - மகமேருவைவில்லாகவுள்ளங்கையிற்பிடித்தவனே - யழகுபொருந்
தியஇலங்காபுரியையிருப்பிடமாகவுடையவிராவணன்தனதுவெற்றிப்பாட்டைக்க
ருதித்திக்குவிசையம்பண்ணப்புறப்பட்டவவதரத்திற்கயிலாயபருப்பதத்தைக்கண்
டதனைமிடுக்கிலுலேயெடுக்க-அவனதுசரீரத்தைப்பெருவிரலாலூன்றிநெருக்கினவ
னே - பின்பந்தஇராவணன்றனதுமுன்கைநரம்பைவாங்கியாழாகப்பண்ணிச்சாம
வேதத்தைக்கானம்பண்ண-அந்தவிசையிலுலே சந்தோஷித்து அக்கினியின்மெழு
குபோலயுருகினவனே - எ - று ஏகாரங்கள் - ஈற்றசை [சரு]

வாக்கிறைநோயினைமாற்றினனேமனமயலாதிக்குமாற்றினனே ❊
தூக்கியற்சுந்தரன்றூதுவனேதொண்டர்முகந்துணுந்தூதுவனே ❊
பாக்கவிப்பாண்டியன்மந்திரியேபாசமறப்பகர்மந்திரியே ❊
நோக்கரிதாகியநுண்ணியனேநொடிபலியூன்கலனுண்ணியனே ❊

எ - து வாகீசராகிய அப்பருடைய சூலைவியாதியைப்போக்கினவனே,யெ
ன்மனத்துண்டாயமயக்கமாகிய தீமைக்குப் பகைவனுயுள்ளோனே, தமிழ்நடை

உரைஅ

ச்செய்யுளாகிய திருப்பாட்டையருளிச்செய்யுஞ் சுந்தரப்பெருமாணையனார்க்குத் தூதுசென்றவனே, பரமானந்தமான அமிர்தத்தையடியார்முகந் துபருகுதற்குப் பாத்திரமாயுள்ளவனே, பாக்கவியினுலேபுலவர்கள் துதிக்கப்படாநின்ற பாண்டியனுக்கு மந்திரியாகிய தென்னவன் பிரமராயருடைய மலமாயாகன்மம் போம்படிக்குச்குருந்தின்கீழ் ஆசாரியமூர்த்தமாயெழுந்தருளியிருந்துபதேசித்த இரகசியப்பொருளையுடையவனே, ஊனக்கண்ணினுலேகாண்பதற்கரிதாகிய சூக்குமமாயிருப்போனே, தாருகாவனத்திலிருடிபத்தினிகளழைத்திடாநின்ற பிச்சையையுனையுடைத்தாகியபிரமகபாலத்திலேற்றுண்பவனே எ று. (சஎ)

குமரன்றுதியுணர்த்துகின்றார்

வேறு

மாலயன்மயலுறவுமாலெரிவடிவுடைய
காலனைவெருவுறவுங்காதியகழலடிய
ஞலதனிமுல்மருவுமாரணனவனருளும்
வேலனதிருபதமும்வேணினரோணினரோ

எ - து மாலும்பிரமனுந்தாங்கள்செகத்துக்கு க்கருத்தாவென்று மயக்கத்தையுறஅக்கு திரும்படிக்குத்தோன்றிய பெரிய அக்கினிச்சுவாலையை யுடையனுமாய் - மார்க்கண்டர் நிமித்தமாகவந்த இயமனைக்கலங்கத்தக்கதாகவுதைத்த வீரக்கழலையணிந்த சீபாதத்தையுடையனுமாய்வடதருவினீழலிலேயிருந்து வேதாகமங்களையருளிச்செய்தோனுமாயிருக்கிறசிவன், றரப்படாநின்ற சுப்பிரமணியனுடைய இரண்டுசீபாதத்தையும் விரும்பினவர்களே, பெருமையையுடையவர்கள் எ று (சஅ)

அகத்தியர்துதியுணர்த்துகின்றார்

நீதுகநினைபவருஞ்சிவகதிதருவதுதா
னேதெனவெனுமவருமெனதுரையினிதறிமி
னேதுகவொருமைபுடனுலகுயவுமையுதவும்
போதகனருள்புணரும்பொதிமலைமுனிபுகழே

எ - து குற்றந்தீரக்கருதுமவரும், சிவபதத்தையடையும்நெறியாதெனநினைக்குமவரும், வருவீராக யான்சொல்லுமொழியினை நன்றாகவுணருமின், வையகமெல்லாமுய்யும் பொருட்டு உமையாளருளிச்செய்த ஞானாசாரியனாகிய குமர

னது திருவருளைப்பெற்ற பொதியின்மாமலையிற்றமிழ்முனிவனது கீர்த்தியை ஒரு மைப்பாட்டுடனேவந்தனைசெய்தோதுக எ று (சகூ)

ஒன்பதாவதுசுவர்க்கரகசேடவியலுரை

முற்றும்.



பத்தாவதுசிவஞானயோகவியல்

மேலிவ்வோத்தென்னுதலிற்றுவெனின்-ஒத்துநுத
லியதூஉமோத்தினதுபெயருரைப்பவேவிளங்கும்,
ஆயினிவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற்சிவஞா
னயோகவியலென்னும்பெயர்த்து - மேலையோத்தி
லோடிதற்கியைபென்னையோவெனின்முன்னையிய லு
ட்புண்ணியபாவங்களுக்கீடாகச்சரீரமெடுத்தவ ர
து - அடையாளங்கூறியவதனுட்டுண்ணியபலத்தா
ற்சரீரமெடுத்தவர்கள்ஞானாசாரியனையடைந்து சி
வஞானயோகததையடையுமுறைமைகூறினாராதலி
னதனோடியைபுடைத்தென்க-இத்தலைச்செய்யுளெ
ன்னுதலிற்றுவேனிற்கிரியாபாதத்துமுறைமை
யைக்கூறிமேல்ஞானயோகத்தின்பகுதிகூறுதலா
ல்விநாயகத் துதியுணர்த்துதனுதலிற்று.

ஒருவனிரண்டறவெங்கணுமொழிவறவொன்றியுணின்றவ ❊
னிருவரகம்பரமென்றவர்க்கிகலறவன்றெரியொன்றின ❊
னருளியவைங்கரனன்பர்களகவினைநைந்தறவன்புசெய் ❊
கரிமுகனம்பவளம்புரைகணபதியெங்களிகண்களே ❊

எ - து ஒப்பில்லாதவனாகியெவ்வுலகின்சண்ணும் - நீக்கமின்றிப்பேதம றக்கலந்து நிற்பானாகிநாமேபிரமமென்றமாலையனாகிய இருவரதுமாறுபாடுநீங்க -

உ. ரா அ.

அக்காலத்தழலினதுவடிவாகியவிறைவன்றரப்படாநின்ற ஐந்துகரத்தினையுடைய
ருசித்தனதடிக்கன்பர்கள்வினைதேய்ந்து போகக்கருணைசெய்யும்யானைமுகத்தினை
யும். அழகியபவளம்போன்ற நிறத்தினையுமுடையனாயட்டாதச கணங்களுக்கத்ப
தியென்னும் பெயரினையுடையவனை மக்குமகிழ்ச்சியை வழங்கும் புறப்பொருள்
யாவையுங்காட்டுங் கண்கள் போல வகப்பொருள் யாவையு முணர்த்துங்
கண்கள். எ- று (ஈ)

இறைவனதுவணக்கங்கூறுகின்றார்

உருவருவென்றவுடம்புடனொருவவிரண்டனுபந்தமு *
மிருண்மலபந்தமுமந்தமுமினையுமினின்புறநம்புட *
னிருமலனின்பநிரந்தவனிலன்றுடிவெங்குநிறைந்தவ *
னருளியசந்தமதன்பொருளவனுவளென்றுவணங்குவம் *

எ- து தூலசூக்குமமாகிய விரண்டு சரீரத்துடனே மாயையுங் கருமமு மிருள்
போன்றவாணவமலத்தினதுமயக்கமும், எமக்குவிட்டுநீங்கவும் முடிவும்புரைவுமி
ல்லாதபேரின்பம்யெம்மைவந்தடையவும்யாம்இன்பவடிவனுமாய் ஈாதமுதல்மண்
ணீறுகலைவ்விடத்துநீக்கமற நிற்பானாகி. அநாதிமல முத்தனுமாகிய சிவனருளிச்
செய்த திவ்வியாகமங்களிற்சொல்லையுமதனுட்பொருளையுஞ் சிவனுஞ்சத்தியுமாகக்
கருதிஆதரவோடுங்கூடவணங்குகிறோம் எ- று (உ)

ஞானயோகத்தின்பகுதியுணர்த்துகின்றார்

வேறு

அலற்பிறப்பவலமாவிக்கறவுறவறிவானந்தஞ் *
சொலத்துடங்குவங்கேண்ஞானயோகமுந்துகடீர்சத்தி *
மலத்தினுமனாதிமுத்தன்மயமுணர்ந்துணர்த்தல்ஞான *
முலப்பிலாவவனுள்வேறற்றுறைதலையுணர்தல்யோகம் *

எ- து ஆன்மாக்களுக்குச்சென்னமரணதுயரத்தை யுண்டாக்கும்பிறப்பானது
விட்டுநீங்கவும், ஞானானந்தம் வந்துபொருந்தவும் யாம் ஞானயோக த்தையுஞ்
சொல்லப்புகுகின்றோம் அதனைநீகேட்பாயாக, அஃதெவ்வண்ணமென்னிற்குற்றம
ற்றசிற்சத்தியையுடையனாயநாதியேமலத் தைநீங்கியகடவுளினது சொரூபத்தை
யாசாரியன்முன்னராராய்ந்தறிந்துமாணாக்கருக்கறிவித்தல்.ஞானம். நாசோற்பத்
திவில்லாதவக்கடவுளுடன் பேதமின்றிக்கலந்திருத்தலை யறிதலே யோகம் எ- று

உம்மை- இறந்ததுதழீஇயவெச்சம் (௧)

ஞானயோகியின்முறைமையுணர்த்துகின்றார்

தன்னதுசத்திகாட்டுந்தத்துவத்தொடார்ச்சிநீங்க *
வன்னியனலனைத்தன்னோடனாதியவமலன்றன்னைக் *
கன்மமுமலனைத்தாமுன்கண்டுகண்டிடாதுகாட்டப் *
பின்னதனாலவ்வுண்மைபெற்றவன்ஞானயோகி *

எ- து ஆன்மாக்களுக்குக்கலையாதி தத்துவங்களின் பந்தமானதுவிட்டுநீங்கினவாறேதனக்கன்னியனல்லனாகியனாதியேமலமில்லாதவனுமாகிச் சுட்டுணர்வாலறியப்படாதசிவனை ஆன்மசிற்சத்தியானதுபிரகாசிப்பிக்கும், அக்கடவுளைஞானாசாரியரானவர், தாமுதற்கண்டனுபவித்ததனை மாணாக்கற்குக்காட்சியாற் காட்டாமலுபதேசத்தினாலேயறிவிக்க, ப்பின்னர்அவ்வறிவினாலேயந்த மெய்ப்பொருளையடைந்தவன்யாவனொருவன், அவனேஞானயோகியாவன். எ- று (௪)

அந்தஞானயோகியானவன்கேவலசகலத்துறுமற்சுத்தாவத்தையைப்பொருந்துவனென்பதுணர்த்துகின்றார்

உலகுளார்பெறாதுதுஞ்சுமொருபொருள்விழித்தயோகி *
யுலகுளார்விழித்தபண்டத்துறங்குவனுருவமாக
வுலகெலாமொன்றிவேறற்றொளிருமொப்பிலிதனைண்டா *
ளலர்தலைக்கணிந்தயோகிக்கவனலான்றேயம்யாதே *

எ- து உலகின்கணுள்ளார் மலமறைப்பினாலே சிவதெரிசனப் படாமற்றுயில்கொள்ளுமிடத்துஅந்தப்பொருளின்கண்ணே தனதுஞானக்கண்ணைவிழித்துப்பார்த்திருக்குஞ்சிவயோகியானவன், அவ்வுலகின்கண்ணுள்ளார்ஊனக்கண்ணாற்கண்டிருக்கப்பட்டவிஷையபதார்த்தங்களிடத்துத்தான்றுயில்கொள்ளாநிற்குமாதலாற்றற்சொரூபமெனவவ்வுலகமுங்கலந்துதானேயாகிப்பேதமறநின்றுவிளங்குமொப்பில்லாதபரமசிவனுடைய ஒள்ளியபாததாமரையைத் தனதுதலைக்கலங்காரமாகப்பூணைந்தவந்த ஞானயோகிக்கு அப்பரமசிவனல்லது வெறறியும்பொருள்யாதோ எ- று (௫)

இந்தஞானயோகமுதலியவற்றை யிறைவனதுமுதனூலாகியதிவ்வியாகமங்களுரைக்கின்றமை கூறுகின்றார்

ஒப்பிலியநாதிமுத்தனேதியகாமிகாதி
யிப்பரஞானயோகம்விரியவேபியம்புமென்றுந்
தப்பிலாச்கருமயோகந்தருமமுன்கருமஞ்சாரும்
அப்பலபேதமென்றவனைத்தையுமறையுமன்றே

எ- து தனக்கொப்பொருவருமில்லாதவனுமாய். அநாதியேமலமுத்தனுமாகிய சிவன், அருளிச்செய்யப்பட்டகாமிகமுதல்வாதுளமீருகவிருபத்தெட்டுத்திவ்வியாகமங்களும், இந்தமேலான ஞானயோகத்தை விளங்க விரித்துக்கூறும், அஃதன்றியெக்காலுந்தவறின்மையிற்காணுங் கருமயோகமென்றும்புண்ணியபாவங்களென்றுமுன்னரீட்டப்பட்டவினையினதுபலன்களென்றுசொல்லப்பட்டயாவையும். விரித்துரைக்கும். எ- று

அன்றும். எயும்- அசைநிலை (சு)

அநாதிமலமுத்தன்றன்மையுணர்த்துகின்றார்

காட்சியிற்பொருளுமந்தக்காட்சியான்முன்னங்கண்டே
யாட்சியாமனுமானத்தினருத்தமுமணுகொணாத
சேட்சியிற்பொருளுமையங்திரிவறச்செப்பிச்சீவ
னாட்சியவறிவுமாக்குமவன்மலத்தனாதிமுத்தன்

எ- து காண்டலளவையினாலளக்கும்பொருளையுமக்காண்டலினாலேதான்முன்னர்க்கண்டனுபவித்தறிந்துபின்னொருகாலத்தினிருமித்தறியும்பொருளையுமிவ்விரண்டினாலுமளத்தற்கரிதாகிச்சொல்லளவையினாலளக்குமாகமப்பொருளையும் ஐயம்விபரீதமறக்கூறியவவளவைகளாலுயிர்கண்மாட்டனுபவசித்தமாகியவறிவுகளையுமுண்டாக்குமவனேயனாதிமலத்தினின்றும்விடப்பட்டவன். எ- று (எ)

பரசமையத்தினின்றோர்களிந்தச்சைவ சமையத்துக்கதிகாரியாகி
வருமுறைமையுணர்த்துகின்றார்

இருவினையுணர்ந்தபுத்தரவர்முதலிகலும்வாதத்
தெரிசனமனைத்துஞ்சேர்ந்தார்சிவசமையத்துச்சேர்வார்
பொருவிலிபுகன்றவாக்கிற்கருமநன்னெறியும்புக்கே
விரவுவர்ஞானயோகம்விடுவர்மெய்யடைவர்மெய்யே

எ- து புண்ணியபாவங்களை யுண்டென்றறிந்த புத்தர்முதலொன்று க்கொன்று

மாறுபடச்சொல்லுகின்றசமயிகளின் துநிலைமையாவையுமறிந்தடைந்தார், முன்னராரர்ச்சித்தநல்வினைப்பகுதியாலேசைவசமையத்தை யடைவார், பின்னர். அங்ஙனமடைந்தவர். ஒப்பில்லாத விறைவனாற் கூறப்பட்டவாகமங்களிற்சொல்லுகின்ற சரியை, கிரியைகளையனுட்டித்துப்பின்பு ஞானயோகத்தையடைவர், அடைந்தவாறேசரீரபந்தத்தைவிட்டுஉண்மைநிலைமையையுமடைவர். எ-று

கருமநன்னெறியுமென்றவும்மையால்யோகபாதமுமெனவறிக (அ)

சைவத்திற்சிறப்புமேனையவற்றிற்சிறப்பின்மையுமுணர்த்துகின்றார்

எடுத்ததோராக்கைதன்னிலிருண்மலசத்திதன்னைத் *
தடுத்தருள்சைவநூலின்சாதனமதனைத்தள்ளி *
விடுத்துவீறற்றநூலின்சாதனம்விரும்புவார்முன் *
னடுத்தவாரமிர்தம்விட்டுப்புற்கையாதரிப்பாரன்றே *

எ-து இங்ஙனமெடுத்தவுடம்பின்கண்ணேதானே யந்தகாரமாகியவானவத்தினதுசத்தியைநீக்கிப்பேரின்பத்தைவழங்குவதாய்சைவசாத்திரத்திற்சொல்லப்பட்டமார்க்கங்களையாய்ந்துணராதொழித்துமலபந்தராற்சொல்லப்படுதலின்மேன்மையற்றபுன்சமயங்களிற்சொல்லு மார்க்கங்களைப்பொருளெனமதித்துவிரும்புமவர், தமக்கெதிராகவணுகியிருக்கிற நிறைந்தஅமிர்தத்தைவிட்டுப்புற்கையையுண்ணவிரும்புவாரோடொப்பர் எ-று புற்கை - கூழ் (கூ

மேலயல்நூல்களின்பகுதியுமுணர்த்துகின்றார்.

ஒப்பிலியனாதிபுத்தனுரைக்கயனூலொவ்வொன்று *
தப்பறுஞ்சிருட்டியாதித்தலைமையொவ்வொருவர்தம்மை *
யப்பரமென்னுமற்றையனைவரும்பரமேயென்னுந் *
தப்பறத்துணியும்புத்திதன்னையும்பரமேயென்னும் *

எ-து தனக்கோரொப்பில்லாதவனாகியவனாதிமலமுத்தனாற் சொல்லப்பட்டதிவ்வியாகமங்களுக்கயலாகியசமையநூல்களிலொவ்வொரு நூல்களுற்றமற்றபடைப்பாதித்தொழிலாற்றலைமை பூண்டபிரமவிட்டுணுக்களிலொருவனொருவனாயந்தந்தநூற்கதுவேபரப்பிரமமென்று சொல்லுமற்றைவேதாந்தநூல்சீவகோடிகளெல்லாவற்றையும் பரமேயென்று சொல்லுமற்றைப்பவுத்தனால் தவத்தைநிறுவிக்கும்புத்திதத்துவத்தையும்பரமேயென்றுசொல்லும், எ று

உரை அச

எல்லாமுணர்ந்தவராற் சொல்லப்பட்டதல்ல - ஆகையாற்சிற்றறிவர்செய்த
துமொருவழிப்படாதுதங்களின்மாறுபடக்கூறிமயங்குமென்க. (ய

முன்னர்க்கூறியசமையவாதிகளைநோக்கிமறுத்துணர்த்துகின்றார்

அசேதனவாக்கையாளரவர்பரப்பிரமமல்ல
வசேதனத்தனுதிமுத்தன்சிவன்பரப்பிரமமாகு
மசேதனவாக்கையின்றேலறிவுமஞ்சனத்தார்க்கில்லை
யசேதனத்தனுதிமுத்தனதிபனாயாக்குவானும்

எ - து கலாதிதத்துவங்களாகியசரீரத்தாற்கட்டப்பட்டவர்களாதலானும்
ச்சரீரப்புணர்ச்சியில்லாதவிடத்துமலமறைப்பாலறியுந்தொழிலுந்தடைபடுமானை
யானு மான்மாக்கள்பலரும்பிரமமல்ல வாதலான்மும்மலங்களினின்றுமனுதிமு
டிப்பட்டசிவனே பரப்பிரமமாவன் படைப்பாதித்தொழில்தூண்டகாரணக்கு
தாக்களையுண்டாக்குமவனும், அவ்வனுதிமலமுத்தனே. எ - று

உம்மையாலவர்களை யுண்டாக்கிறவனும் அவர்கள்செய்யும்விசிட்டவினையகளுக்
த்தன்சத்திகொண்டு செய்விப்பானுந் தனுகரணபுவன போகங்களெல்லாவற்ற
யுமுண்டாக்குவானுமவனேயெனக்கூறியதெனவறிக. (ம

அந்தச்சிவன்விகாரியல்லனென்பதனையுவமைமுகத்
தாலுணர்த்துகின்றார்.

உருக்குதனவநீதாதியுலர்த்துதலீரமண்ணும்
விரிக்குதல்கமலமாதிவெறிகமழ்குவளைமற்றுஞ்
சுருக்குதலென்றவிந்தத்தொழில்விதமில்லானேனு
மருக்கனேயவற்றிற்கேதுசடச்செயற்கனுதிமுத்தன்

எ - து வெண்ணெமுதலியபொருள்களையுருக்குதல்ஈரமண்ணையுலர்த்துதல்
தாமரைப்பூமுதலியவற்றையலர்த்திடுதல்மணம்வீசுகின்றநெய்தல்முதலாயுள்ளம
ர்களைச்சுருக்குதலென்றுசொல்லும்வினையினதுவேறுபாட்டையில்லாதவனாயினு
த்தொழில்களதுமுடிவிற்குஆதித்தியனேகாரணமானாற்போல ச்சரீராதிகளையுண
டாக்கிக்காரியப்படுத்துமதற்குமனுதிமலமுத்தனேகாரணன். எ - று ஆதி
ன்றதனால்-மெழுகு-வெல்லமுதலியவெனவறிக. (ய

பதிமுதலியமுப்பொருள்களுமனுதியென்பதூஉம்

அவற்றுட்பாசம்நீங்குமுறைமையீதென்பதூஉமு
ணர்த்துகின்றார்.

அறுதியேயமலன்சச்சிதானந்தன்பதியான்மாக்கள் *
அறுதியேபெத்தர்பந்தமகவிருளறுதிமூன்றும் *
அறுதியபசுபாசத்திற்பக்குவத்ததுலறுன *
அறுதியேயமலறுலேயவர்தமையவைகணீங்கும் *

எ - து அறுதியேமலத்தினின்றும்விடப்பட்டநித்தியஞானாநந்த சொரூபத்தையுடையவனே யிறைவன், அறுதியேமலாதிகளாற்றடுக்கப்பட்டஞானக்கிரிகைகளையுடையவரே யான்மாக்கள், இருளாகியவாணவமாயைகன்மமாகிய மூன்றுமறுதியேகட்டுகளாயுள்ளன-ஆகையான்மலமாயாகன்மங்கள்பரிபக்குவமாய விடத்து ஒப்பில்லாத சிவனாகிய வறுதிமுத்தனாலே யறுதிபெத்தராகிய வான்மாக்களை யறுதியேபந்தங்களாகிய பாசங்கண்மூன்றும் விட்டுநீங்கும் எ று (௨௬)

அந்தவாணவதோடத்தைப்போக்கு வித்தற்குத்திட்டா
ந்தமுணர்த்துகின்றார்

செம்பினிற்களிம்புதானேசெம்பினைத்தீராதென்றுஞ் *
செம்பினுக்கதனைத்தீர்க்குஞ்சித்தியுமில்லைத்தேரிற் *
செம்பினிற்களிம்புதீர்க்குஞ்சித்தனுமுண்டுதேடிற் *
செம்பினிற்களிம்புதீர்க்குமருந்துமற்றவனாற்சேரும் *

எ- து அதனையாராயுமிடத்துச்செம்புடன்சகசமாயிருக்கிறகாளிதமானது- தானேசெம்பினைவிட்டுநீங்காது, அந்தச்செம்பினுக்கு மக்காளிதத்தைத்தானேநீக்கிக்கொள்ளும்வலியுமில்லை. யக்காளிதத்தைநீக்கும்பொருட்டுநாட்டமுற்று விசாரிக்கிற்களிம்பினையகற்றவல்லசித்தியை யுடையனு முளன், அவனாலக்களிம்பினைப்போக்குதல்வலலமருந்தும்வந்தடையும். எ- று (௨௭)

மாயாகாரியமாகிய சரீரத்தையான்மாக்களுக்கிறைவனே கூட்டுவ
னென்பதற்குவமித்துணர்த்துகின்றார்

விளக்கினுக்கில்லைத்தன்னையாக்கிடும்வினைதானென்றும் *
விளக்கினையாக்கவல்லவினைவிழிதனக்குமில்லை *
விளக்கினையாக்கிப்போக்கிவிழிக்கிருளருத்தபேதம் *
விளக்குவான்போலுமீசன்விழியுயிர்விளக்கொப்பாக்கை *

எ- து விளகினுக்குத்தன்னைத்தானேயுண்டாக்கிக்கொள்ளவல்லதொழில்தன்னிடத்தில்லை, யவ்விளக்குக்குக்காட்டாகியகண்ணினுக்குந்தானேயுண்டாக்கிக்கொள்ளுந்தொழில்தன்னிடத்தில்லை, யாதலால்விளக்கென்னுஞ்சுடரினையுண்டாக்கிக்கண்களினதுசோதியைத்தடுத்தவிருளைநீக்கிப்பொருள்களினதுவிகற்பங்களையறிவிக்குமவனோடொப்பானிறைவன், கண்களோடொப்பனவுயிர்கள், விளக்கினோடொக்குங்கலாதிதத்துவரூபமாகியசரீரம். எ - று ((ய௫)

அந்தச்சரீரமிருவிதமென்றுமதற்குக்காரணமீதென்றுங்கூறுகின்றார்.

ஆக்கையுந்தூலசூக்கமெனவிரண்டவற்றுட்டூல *
வாக்கைதான்பஞ்சபூதபரிணமத்தாகுமற்றை *
யாக்கையாறைந்திற்காலமாதியினாகுமந்த *
வாக்கையுமாயைதன்னினமலனின்னருளாலாமே *

எ - து முன்சொல்லப்பட்டவுடலானதுதூலவுடலெனவுஞ்சூக்குமவுடலெனவுமிருவிதமாம், அவற்றுட்டூலவுடலென்பது மண்முதல்வானீறாகியவைந்துபூதங்களினதுபரிணாமகாரியத்தாலுண்டாகும்மற்றைச்சூக்குமவுடலென்பது காலதத்துவமுதல் நிலமுடிவாகியமுப்பத்தொருதத்துவத்தானுமுண்டாகும், அந்தச்சூக்குமவுடற்காரணமாகிய முப்பத்துதத்துவங்களுஞ்சிவனுடைய வினிதாகியதிருவருளினதுபிரோகத்தினாலேமாயையின்கண்ணேநின்றுமுண்டாம் எ - று

தன்மாத்திரைமுதலியவெட்டினையும் புரியட்டகமென்றோதியிருக்க, இவ்வாசாரியர்முப்பதென்றோதியதென்னெனில், அந்த - எட்டும் - எட்டுவர்க்கமாம், அவையாவன, பூதம் - ரு - தன்மாத்திரை - ரு - ஞானேந்திரியம் - ரு - கன்மேந்திரியம் - ரு - குணம் - ௩ - பிரகிருதி - க - கலாதி - ரு - மாயை - க - ஆக - எட்டுவர்க்கத்துக்கு முப்பத்துதத்துவமும்வந்தவாறுகாண்க. (ய௬)

மேலிவ்வகையினையான்மாக்கள்புணர்ந்துபோகந்துய்க்குமுறையையுவமித்துக்கூறுகின்றார்.

பாங்குளான்கொடுத்தகோலைப்பற்றியே குருடனூன்றி *
யீங்கெமக்கியங்குமாற்கமிஃதென்வெண்ணிச்செல்வ *
னுங்கரனளித்தவித்தையாதியினற்பவானந் *
தேங்கியபோகந்தேற்றத்திளைத்துடலியக்குஞ்சீவன் *

எ - து கண்ணில்லாதவன் தனக்கியல்புடையாரொருவனுதவிய தண்டினைப்பிடித்துக்கொண்டேன்றி யிவ்வடத்தியாஞ்செல்லும்வழியிதுவெனக்கருதிச் செல்லா நிற்பன், அதுபோலமூலமலத்தாற்றடைபட்ட ஞானக்கிரியைகளையுடையவான்மாக்களுஞ்சங்காரகாரணனாகியவிறைவனருளியவித்தைமுதலியதத்துவங்களாலுண்டானவற்பவறிவானதுமாயாபோகங்களை நிச்சயத்துக்கொடுக்கவவைகளை துகர்ந்துயாக்கையினதுபோக்குவரத்தைச்செய்யும். எ - று (ய௪)

மேலுலோகாயுதன்முதலியசமையிகளான்மாவின
துண்மையுணராமற்றந்தங்கோட்பாடேயுணர்த்தவ
தனைமறுத்துணர்த்துகின்றார்
வேறு

ஆக்கையினைச்சிலரான்மாவெனவறைவரறிவிலர்மெய்
வாக்குமனமெனுமிவையேயெனமதிப்பர்மதித்தவற்றின்
நீக்கமிலாக்குணமென்பர்நிரந்தவற்றின்மேனின்ற
நோக்கினையுநோவினையுமுடைத்தான்மாநுவலுங்கால்

எ - து உண்மையறிவில்லானமயாலுலோகாயுதன்தூலவுடலினையே, ஆன்மாவெனக்கூறுவன், புத்தன்மதத்தை விசாரிக்குமிடத்து அகங்காரமாகிய அந்தக்கரணங்களையே ஆன்மாவெனக்கூறுவன், அருகன்மதத்தை விசாரிக்குமிடத்துச் சருவான்மாக்களிடத்தும் வியாபித்துநிற்கிறமுக்குணங்களேயான்மாவெனக்கூறுவன், அவையன்று - அதனுண்மையைவிசாரித்துச்சொல்லுமிடத்து - இங்ஙனஞ் சொல்லப்பட்டவைகளுக்கெல்லாமேலாகநிலைபெற்றஞானக்கிரியைகளையுடைத்தே யான்மா. எ - று (ய௮)

இதுவுமது.

ஆக்கைசடந்தனித்தியங்காதறிவனையுமின்றியகத்
தாக்கைவிளக்கெனவறியப்படுங்கரணமான்மாவுக்
காக்கைவிதம்பேதமெனவத்தியக்கமறிவிக்கு
மாக்கைவிதத்ததிபதியேயமலனுயிர்க்கதிபதியே

எ - து இச்சரீரஞ்சடமாதலாலறிவுடையனாகியவான்மாவையுமன்றித்தான் போக்குவரத்துச்செய்யமாட்டாதாகையாலுஞ் சூக்குமசரீரமாகியகலாதிகளந்தத்தூலசரீரமாகியகிரகத்துக்கு விளக்குப்போலவறிவைப்பிரகாசிப்பிக்குங் கரண

ங்களாகையானுமிந்தச்சரீரங்களான்மாவுக்கு வேறாயிருப்பதொன்றென்பதனை நீ பிரத்தியக்ஷவாதியாதலாலுனக்கந்தக்காண்டலென்னுமளவைதானேயறிவிப்பிக்கு மாதலாலுஞ்சொல்லப்பட்டசரீரபேதங்களுக்கெல்லாமான்மாவேயிறைவன்அந்த வான்மாவுமீசுரப்பிரேரகனுதலாலவனுக்குச்சிவனே யிறைவனாவன். எ - று

அறிவனையுமெனறவும்மையாலறிவிப்பானுனசிவனையுமன்றி யிலென்றதாம் - அத்தி யக்கம்பிரத்தியக்கத்தலைக்குறை. (௩௯)

இதுவுமது.

அறிவென்பர்சிலர்சடமேமனமொன்றினறிவென்ப *
ரறியுநிருமலனறிவையளிக்கிலெனவறைந்திடுவ *
ரறிவில்லாரவர்மூலமலத்தான்மாச்சாதித்த *
வறிவுடைத்தேமாயையெனுந்துணையினையுமஃதுடைத்தே *

எ- து மாயாவாதிகள்உயிரைவிளங்கிய வறிவென்றுகூறுவர்கள், வைசேடிக ர்மனமுதலியதத்துவங்கள்வந்துகூடினகாலத்துஅறிவுண்டாமென்பர்கள், பரிணாம வாதிகள்ஆன்மாவுக்குச்சுதந்திரமாகவறிவில்லையெல்லாமறியுமிறைவனுணர்த்தி லு ணருமென்பர், இவர்களெல்லாருமெய்யுணர்வற்றவர்கள், அறுதியேமூலமலத்தினு லேதடுக்கப்பட்டவுணர்வையுடையதாகியததனைநீக்குதிறமாயையெனுந் துணைக்கா ரணத்தையுமொத்தாசையுமுடையதான்மா. எ- று (உ௰)

இதுவுமது

ஆக்கைதனிலோரிடமென்றறைவரலவனுவென்பர் *
நீக்கமறவுடன்முழுதுநிற்குமெனநிகழ்த்திடுவர் *
போக்குவரவில்லாதபூரணமேயெனப்புகல்வர் *
மேக்கிலர்நுண்டனுமூலவியாபகிக்கும்வியாபகமே *

எ- து மேலாய. அறிவில்லாதகன்மயோகிகள்- ஆன்மாவை யுடலினோரிடத்தி ருக்குமென்பர்கள், அஃதன்றிநையாயிகனும்பஞ்சராத்திரியு மான்மாப்பரமாணுரூ டமாயிருக்குமென்பர்கள், சமணருடன்முழுவதிலேயும் வியாபித்துநிற்குமென்பர் கள், மாயாவாதிகள்போக்கும்வரவுமில்லாமலெவ்விடத்தும் பூரணமாய்நிற்குமெ ன்பர்கள், இவர்களெல்லாருமுண்மையானதெரிசனப்படாதவர்கள்ஆறுலுமதுசித் தாந்தம். யாதெனில்நுண்ணிதாயிருக்கப்பட்ட தத்துவங்களாகிறகூக்குமதேகங்க ளுக்குக்காரணமாகிவியாபகியாயிருக்கும், அசுத்தமாயைதனக்குமதுக்குமேலான

சுத்தமாயைதனக்கும்அப்பாற்பட்டவியாபகமே. முத்தித்திசையில். எ- று

மேக்கிலர் என்பதனை முற்றுங்கூட்டுக (உ௪)

வியாபகமுறைமையைத்தெரிசிப்பிக்கின்றார்

அமலைக்குவியாபகனேயரனவற்குவியாப்பியமே *
விமலைவியாபகியுயிர்கட்குயிரவட்குவியாப்பியமே *
சமலைக்குவியாபகியேசமலையுயிர்வியாப்பியமே *
சமலைசகவியாபகியேசகஞ்சமலைவியாப்பியமே *

எ- து நிருமலையாயிருக்கிற சிவசத்திக்குச் சிவன்- வியாபகன், அவனுக்கந்தநி ன்மலையாகியசத்திவியாப்பியம், அந்தச்சிவசத்தியான்மாக்களுக்குவியாபகி. அந்த வான்மாக்கள்அவளுக்குவியாப்பியம்- அந்தவான்மாக்களதமதுமலத்தோடுகூடிய வான்மசத்திக்குவியாபகர், அவர்க்கவர்சத்திகள்வியாப்பியம்- அந்தச்செகத்துக்கு ஆன்மசத்திவியாபகம். அந்த.ஆன்மசத்திக்குச்செகம்வியாப்பியம். எ- று

அதிகவிருத்தியையுடையதுவியாபகம், நூனவிருத்தியை யுடையது வியாப்பியம், இப்படி நூனவிருத்தி யதிகவிருத்தியின் முறைமையைத் தெரிசிப்பித்ததென வறிக (உ௨)

இங்ஙன நூனவிருத்தியதிகவிருத்தியையுணர்த்திமேற்றுல்லியவியா த்தியையுணர்த்துகின்றார்

உயிரொளியுமிருண்மலமுமொன்றுதறுல்லியவியாத்தி *
யயர்வுறலாலறிவதனுலதற்குவியாபகமல்ல *
வயர்வுறுத்துமகவிருளுமதற்குவியாப்பியமல்ல *
நயனவொளியிருளிவற்றின்கலப்பொப்பேநாடுங்கால் *

எ- து. ஆன்மப்பிரகாசமும். அந்தப்பிரகாசத்தைமறைத்து யிருளேவடிவாயிரு க்கிறவாணவமலமுங் கூடிநிற்கிறது ஒன்றுக்கொன்றேற்றக் குறைவின்றி யிரண்டு மொத்தவியாபகமாயிருக்கும் அந்தவான்மாவினுடைய ஞானக்கிரிகைகள்மலத்தா ற்றடைபடலால். அதிகவிருத்தியை யுடையதல்ல- வதனைத்தடுக்கும் வலியினையு டையவாணவமலமும் நூனவிருத்தியையுடையதல்லவாதலாலான்மசத்திக்குவியா ப்பியமாகாததனுலா ராயுமிடத்து ஆன்மசத்திக்கு மாணவத்துக்குஞ் சமவியாத்தி

பெப்பதுபென்னிற்கண்ணிடத்துண்டாகிய சோதியுமிருளினது பிரகாசமுந்துல்லி யமிரத்தியாயிருக்கும். எ- று

இதன்கருத்து,கண்ணொளியானது,இருள்மேலிட்டகாலத்துஒளிமாந்திநிற்குமொளி மேலிட்டகாலத்துமிருண்மாந்திநிற்கு மிதுபோலச்சிவன்மாயாகாரியமானதனுவா தினைபான்மாவுக்குக்கூட்டியகாலத்து ஆணவசத்தி மாந்தினவிடத்து ஆன்மசத்தி சத்தேபிரகாசமாயிருக்கும். மலமேலிட்டகாலத்துஆன்மசத்திமாந்தியிருக்குமெனவறிக, ✠ ஒளிக்குமிருளுக்கு மொன்றேயிடமொன்றுமேலிடவொன்றொளிக்கும் என்றுந்திருவாக்கிலுணர்க. (உங)

மேலிறைவன்ஆன்மாக்களுடன்சருவவியாபியாயிருக்கினும்பாசந்த னதுபரிபாகத்தாலல்லதுநீங்காதென்பதுகூறுகின்றார்

பரமசிவன்பராசத்திபல்லுயிர்க்கும்பயின்றிருக்க ✻
விரவுவதென்னிருளெனிற்கேள்வெய்யவழற்பசுமரத்தின் ✻
விரவிபதேபசுமரமும்வெந்தவலவெந்துவிழும் ✻
பருவமுறக்கரணமுறப்பதியுமுறப்பழுதறவே ✻

எ- து. மேலாயசிவனும வனதுமேலாகியஞானசத்தியு மெல்லாவுயிர்கண்மாட் டெல்லாந்திருக்கவும், இருளாகியஆணவம்பொருந்துவதென்னெனிலிவ்விரு விற்குவி டைகட்பாயாக, வெம்மையையுடைய நெருப்பானது- பசுமையையுடையமரத்தி ன்கண்ணதொடித்துமுடியளவாக வியாபித்திருக்கினுமப்பசுமரங்கள்வெந்தனவ ல்ல முதிர்ந்து தமது பருவம்வந்தவிடத்து தம்மிடத்துண்டா யதழலையுதிப்பிக்கும் ✠ நெலிகோலாகியகருவியுமது கொடுகடையுங்கருத்தாவு முதலாயினபழுதறவ ந்துபொருந்தஅவ்விடத்தழலுண்டாய்அம்மரங்கள்வெந்துவிழுதலைச்செய்யும், அது போலாணவமுந்தனக்குப்பருவம்வந்தவிடத்துச்சிவனுடைய திருவருளாலேதனது பெலங்கெட்டுநிற்கும். எ- று

இதன்கருத்துபரமசிவனுடையபராசத்தியானது மலபரிபாகம்வாராதவான்மாக் களிட்த்துப்பசுமரத்திலக்கினிபோலவப்பிரகாசமாகவேயிருக்கும். மலபரி பாகம்வ

கொடிக்கவி. கட்டளைக்கலித்துறை

✠ ஒளிக்குமிருளுக்குமொன்றேயிடமொன்றுமேலிடிலொன், றொளிக்குமெ னினுமிருளடராதுள்ளுயிர்க்குயிராய்த், தெளிக்குமறிவுதிகழ்ந்துளதேனுந்திரிமலத் தே,துளிக்குமுயிரருள்கூடும்படிகொடிக்கட்டினனே, (க)

✠ நெலிகோல் - தீக்கடைகோல்

ந்த வான்மாக்களிடத்துப்பிரகாசித்துமலங்களைக்கெடுத்துஆன்மப்பிரகாசத்தையுண்டாக்கியிரட்சிக்குமென்க. (உச)

இதுவுமது.

உக்கொழியாதொளிக்குமிருளுதையகதிரொளிமுன்னே *
பக்குவத்திற்பசுபாசவலியடங்கும்பரமசிவ *
னக்கனுபிர்க்கருள்புரியநசித்ததலவசித்ததல *
நெய்க்கனநீங்குதலென்னமாயேயநிலைதொலையும் *

எ - து உதையகாலத் தாதித்தியப்பிரகாசத்தின்முன்னே யிருளானதுதாஞசத்தையடையாமல் மறைந்துநின்றதுபோலச்சிவனுடைய அனுக்கிரகத்தினாலேயான்மாக்கள்பசுத்துவமாகிய வாணவமலம் - அதனுக்குப்பருவம்வந்தவாறே தாஞசமடையாதுஉயிரினதுஞானக்கிரியையைத்தடுக்கும்வலிகெடும்,மாயாகாரியங்களுநாசமடைந்தனவுமல்லாமல் நிலைபெற்றுநின்றனவுமல்லாம லுறைந்திருந்த நெய்யானது உருக்கினபோதுகனங்குறைந்து நெய்கெட்டுப்போகாமலிருக்கின்றதெப்படியதுபோல முத்திநிலையிலுமிந்தமலங்களுங்கெடாமலான்மாக்களைப்பெந்தியாமலும் நிற்கும் எ - று [உரு]

மேலுமோருபாயத்தாலிறைவனைத்தொட்டு மூலமலமீருகச்சூக்குமதூலமாகிநிற்கும்பகுதியைத் தெரிசிப்பிக்கின்றார்

நுண்ணியனேசிவன்றூலஞ்சத்தியவணையார்க்கு *
நுண்ணியனேநொய்யார்களதிதூலர்நுதன்மதிக்கு *
நுண்ணியனேநொய்யார்தஞ்சத்திகளுக்கவர்தாமும் *
நுண்ணியனேநோய்க்கவர்க்குமதிதூலதரநோயே *

எ - து சிவன் - சிவசத்திக்குச்சூக்குமமாயிருப்பன் அந்தச்சிவனுக்குச்சத்திதூலமாயிருக்கும் அந்தச்சிவசத்தியான்மாக்களுக்குச்சூக்குமமாயிருக்கும்அந்தச்சத்திக்கு ஆன்மாக்களதிதூலமாயிருக்கும் அந்த ஆன்மாக்கள்தமதுசத்திக்குச்சூக்குமமாயிருக்கும் அந்த ஆன்மசத்தி ஆன்மாவுக்குத்தூலமாயிருக்கும் - அந்த ஆன்மசத்திமும்மலங்களுக்குஞ் சூக்குமமாயிருக்குமந்த மும்மலங்களுமான்மசத்திக்குத்தூலமாயிருக்கும். எ - று (உசு)

அந்தஆணவமாகியபிணிகையறீக்குவான் அறுதிமுத்

சீவதருமோத்தரவுரை

தருகியமருத்துவனென்றிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

பெருநோயேமூலமலம்பிணிமருந்துமுடன்மூலந்
தருமமலன்மருத்துவனேமருந்தறிந்துசாராது
பெருநோயர்மருந்தறியாரொனல்பேசிப்பெறுவதல
லொருமலனைமருத்துவனென்றறிகபிணிநீங்கிடுமே

எ - ரு ஆணவமலமென்பது - ஆன்மாக்களுக்குப்பெரிதாகியபிணி, அப்பிணிக்குமருந்தாகிமாயாகாரியமாகியதனுகரணாதிகளு மதனோடன்றேயுள்ளது, அம்மருந்தினைபுதவிப் பிணிதீர்ப்பவனின்மலனாகியசிவனே - மருந்துதானேயறிந்துவந்தடையாதுஎனவும் - பெரிதாகியவாணவநோயையுடையராகிய வான்மாக்கள்தாமேதம் பெருநோயைப்போக்கிக்கொள்ளும் அதற்குமருந்தறிந்தவரலலரெனவுஞ் - சொல்லுதலைச்சொல்லியிருந்ததனாலப்பிணிநீக்கம்வந்தடைவதல்ல - அனாதிமலமுத்தனாகிய சிவனேபிணியைநீக்கும் பண்டிதனானவனென்றறிந்தவன்மாட்டன்புசெய்யப்பிணிநீங்கும். எ - று ஈண்டன்பென்றது, சமாதிசெய்தலெனவதிக. [உஎ]

இதுவுமது.

மருத்துவனும் பிணியாளியெனிற்பிணியுமாறாது
மருத்துவன்முன்பிணியாளியெனிற்பிணியைமாற்றியதொர்
மருத்துவனுண்டும் முறையின்மாற்றமனவத்தைவரு
மருத்துவனையனாதிமலமுத்தனெனமதிக்கவரோ

எ - து பண்டிதனும் நோயுடையனெனிற்பிணிநீங்குவதல்லப் பண்டிதன்முன்னர்நோயுடையனெனிலந்நோயை நீக்கினானொருபண்டிதனுளனாம், இம்முறையானேயொருவன்பிணியை மாற்றுவானொருவனுளனாகத் தொன்றுதொட்டுஅனாதியென்னுங்குற்றம் வருமாதலாலனாதியேமலத்தினின்றும்விடப்பட்டவனேபுரிசனெய்திய வாணவமென்னும்பிணியைநீக்கும் பண்டிதனாவான். எ - று அரோ - அசை - இவ்விரண்டுசெய்யுளிடத்துப்பிணியெனவு மருந்தெனவுமருத்துவனெனவும்வருவன - ஆகுபெயர். (உஅ)

மேற்சரீரியல்லாதசிவனேயுலகம்யாவையுமாக்கிச்சிறந்தியழிக்குமுறைமையைக்கூறுகின்றார்.

ஆக்கைபினையியக்குதற்குமாக்கைபிலையான்மாவுக்
காக்கைபிலானவனமலனுக்குவிப்பனனைத்துலகு
மாக்கியொருமூவரைமுன்முக்குணத்தினளிப்பிப்பன்
போக்குவிப்பனவர்பாற்றன்சத்திவிதத்தினைப்புணர்த்தே

எ - து ஆன்மாவானவன் அசரீரியாயிருந்துஎப்படியுடலைப்போக்குவரத்தைச்செய்விக்கும் அதுபோலநின்மலனுமாய் அசரீரியுமாயிருக்கிறசிவன்தனது சன்னிதிமாத்திரத்திலே சருவலோகங்களையுமுண்டாக்குவன் அஃதெவ்வாறென்னிற்றுமதமுதலியமுக்குணத்தையுமுடைய மூவரையுமுண்டாக்கியவர்கண்ணே தனது சத்திபேதமாகியகிரியாசத்தியைப்பிரமாவினிடத்து ✻ அதிட்டித்துச்சிருட்டிசிருத்தியத்தையும் - ஞானசத்தியைமாயனிடத்ததிட்டித்துத்திதிசிருத்தியத்தையும் இச்சாசத்தியைச்சிகண்டபரமேசுரனிடத்ததிட்டித்துச்சங்காரசிருத்தியத்தையும் புரிவன். எ - று போக்குவிப்பனென்பதனாற்சிருட்டியுந்திதியுங்கூறியது (உகூ]

இதுவுமது.

வேறு

உள்ளுறச்சத்துவந்தானுருத்திரனுருவந்தோன்று
முள்ளுறவிராசதந்தானுதிக்குமாலுருமுன்மெய்யி
னுள்ளுறத்தமோகுணந்தானயனுருத்தானுமுற்ற
வொள்ளியவொருமூவர்க்குமொழிப்பிறுவாய்வேறொன்றும்

எ - து சிருட்டிபேதங்களனேகமாயிருக்கும் - அதிற்பவுராணிகப்பிரக்கிரியையிற்றோற்றமானபிரகிருதிமாயையிலேதானே மூன்றுகுணத்திலு மூன்றுகருத்தாக்களைப் பரமசிவன்தோற்றுவித்த - அந்தச்சிருட்டியின்மூவருள் - உருத்திரமூர்த்தியாகிற சிகண்டபரமேசுரன்திருமேனி சாத்துவிதகுணமதிகமாயேனையவிரண்டுங்குறைந்துதோன்றும் மாயன்றிருமேனியிராசதகுணம் அதிகமாயேனையவிரண்டுங்குறைந்துதோன்றும் - பிரமாவினுடையதிருமேனிதாமதகுணமதிகமாயேனை யவிரண்டுங்குறைந்துதோன்று - மிப்படிமூவிதமான திருமேனியையுடையகருத்தாக்கள்பிரகிருதிக்குக்கீழுள்ளசிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவர்கள். எ - று [கூ௰]

மேலிம்மூவருட்சங்காரகருத்தாவோடேயேனையவி
ருவரையுமொப்புக் கூறுவாரெய்துங்குற்றங்கூறு
கின்றார்.

அதிட்டித்தல் - நிலைப்படுத்தல்

காரகன்றனையுங்காயங்காசினிகாறுங்காக்கும்
பாரகன்றனையும்பாரும் படைத்திடப்பட்டயாவும்
ஆரகனதிகனென்னுதவர்தமக்கொப்பென்பார்கள்
நாரகர்பரிகாரத்தைநவிற்றுநூலறியாநாமே

எ - து சரீரத்தையுநிலனீருகியபுவனங்களையும்படைக்கும்விதியினையும் அவையிற்றைப்புரக்கும்பாரகனுகியவிண்டுவினையும் - அவனுற்புரக்கப்படும்வையகத்தினையுஞ்சராசரமாகியபொருள்களையுமழிக்குமவனுகியஉருத்திரனை - யிவரின் முதன்மையுண்டானென்னுதுஇவரோடொப்பனென்பாரோல் நரகசம்பந்தராவர் கண்டுற்றதிரும்பரிகாரத்தினைச்சொல்லுநூலும்யாமாராய்ந்தநூல் களிலில்லை எ - று காரகன் - பண்ணுகிறவன் பாரகன் - இரக்ஷிக்கிறவன் - ஆரகன் - சங்கரிக்கிறவன் - நாரகர் - நரகத்திலேவிழுகிறவர்கள். (௩௧)

அச்சிவனேயதிகமென்பதனைப்பவுராணிகர்மதத்தினு
லுணர்த்துகின்றார்

எண்ணுகபிரதானத்தைபிருபத்துநாலாம்வேறொன்
றெண்ணுகபுருடன்றன்னையிருபத்தைந்தாவானென்றே
யெண்ணுகவிருபத்தாறும்பொருளெனவீசன்றன்னை
யெண்ணுகவினையிலீசனிருபத்தேழாவானென்றே

எ - து பிரகிருதிமாயையானது அதிற்றோற்றப்பட்டஇருபத்துநாலுதத்துவத்துக்கும்வேராதலாலதற்குக்காரணமென்றறிக, ஆன்மாவையந்தமாயைக்குமேலாயிருபத்தஞ்சாகவெண்ணப்பட்டவனென்றறிக, அதுக்குமேலாக இருபத்தாறும்பொருளென்றெண்ணப்பட்டவர், ஈசுரனென்றறிக, அதற்குமேலாகியிருபத்தேழாம்பொருளாகவெண்ணப்பட்டிருக்கிறவனையொப்பற்றபரமேசுரனேயென்றறிவுக்கள். எ - று பிரகிருதியைச்சொல்லவேயசுத்தமாயையுமதிலடங்கியதாயிறது, ✠ ஐயைஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே யெனவிக்கருத்தைப்

திருவாரூர் - பண் காந்தாரம்

✠பையஞ்சுடாவிடுநாகப்பள்ளிகொள்வானுளத்தானுங்
கையஞ்சான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே

பற்றித்திருநாவுக்கரசுநாயனாரருளிச்செய்தார். (௩௨)

அந்தப்பரமசிவனைத்தியானம்பண்ணினவர்பெறும்
பேறுகூறுகின்றார்.

பார்த்தவரிருபத்தேழாம்பொருடனைப்பகவன்றன்னைப் ✻
பேர்ததுடலெடுப்பரல்லர்பெறற்கரும்போகபேத ✻
மூர்த்துவபுவனத்துண்டேபுலகெலாமொடுங்கும்போது ✻
தீர்த்திடமூலநோயுஞ்சிவனவனுவர்திண்ணம் ✻

எ - து இங்ஙனஞ்சொல்லப்பட்ட விருபத்தேழாமெண்ணின்கணின் றபொருளாகியபரமசிவனைத்தம்முடைய வறிவின்கணன்னியமாகக் கண்டவர்மீண்டொருகாலுங் கருப்பையுட்புக்குச்சரீரமெடுப்பாரல்லர்தெவராலும் பெறுதற்கரிதாகியபோக பேதங்களையெல்லாமேலாகியசுத்தவித்தியாபுவனத்தின்கண்ணுகர்ந்துபின்னர்ப் பிரபஞ்சகாரியமெல்லாந்தத்தற்காரணத்திலேயொடுங்குஞ்சமுவசங்காரம்வந்தவிடத்துச்சிவனவர்க்கனுதிசம் பந்தமாகிய வாணவமலத்தினையுநீக்கிடுதலினாலேயந்தச் சிவனோடபேதமானமுத்தியினையடைவர், இதற்கையமில்லை எ-று

உம்மையால். மாயைகருமங்களையு மெனக்கொள்க. ஊர்த்துவபுவனமென்றார் அசுத்தமாயாபுவனங்கட்குமேலாயவாகலின்

(௩௩)

சிவன்திதிகாலத்திலாசாரியனையதிட்டித்துக்கொண்டுஏனையகாலங்
களினிராதாரமாகவனுக்கிரகிக்கிறமுறைமை யிரண்டுதிருவிருத்தத்
தாலுணர்த்துகின்றார்

திதியினுதாரஞ்சேர்ந்துசிவனுயிர்ப்பாசந்திர்க்கப் ✻
புதியனபோகமுண்டுசிலர்சிவம்பொருந்துவார்மேற் ✻
றிதிநிலைத்தொலைவினந்தக்கணத்தினிற்சிவமேயாவர் ✻
பதியருள்விழியினாலேநள்ளிருட்பார்க்கப்பட்டார் ✻

எ- து திதிகாலமானவர்த்தமானகாலத்திற்பரமசிவனானவர். அவ்வாசாரியனையதிட்டித்துக்கொண்டுமலபரிபாகத்துக்கிடாகவவர்களவர்கள் பாசத்தைப் போக்கவேஅபரமுத்தித்தானமாகியபஞ்சகுய்யாட்டகாதானமாகியஉருத்திரர்பதத்திலுமந்திராமந்திரேசர்பதத்திலுமீசானமுதலிய பதங்களினுமிருந்துஆண்டுள்ளபோகங்களைப்பொசித்திருந்துசங்கார காலத்தினிராதாரமாகச்சிவனாலேயனுக்கிரகிக்கப்பட்டவர்களப்போதேதானேமோக்ஷத்தையடைவர்கள். எ- று

ஏகாரம், தேற்றம்

(௩௪)

உற்பவவேலைதன்னிலுலகினையாக்கவல்ல
கற்புளர்சிலருமாவர்கழலடைவாருமுண்டு
கற்பரன்விழியிற்பட்டார்சங்காரவாரம்பத்திற்
கற்புடன்படைப்புமூலக்கருத்தரும்வருகாலத்தின்

எ- து சிவன்படைத்தற்றொழில் துடங்குங்காலத்துச் சுத்தாத்துவாமுதலியமூன்றத்துவாவிலுந்தங்கள்தங்களுக்குமுதன்மையான அதிகாரங்களைப்பண்ணியிருந்துஅதிகாரத்தில்வயிராக்கியம்பிறந்ததனால் மோக்ஷத்தையடைவர்கள்சங்கரிப்புண்கிறவவதரத்திலேமலபரிபாகமுள்ளவர்கள். பரமசிவனாலனுக் கிரகிக்கப்படுவர்கள் மலபரிபாகமாந்தியத்தையுடையவர்கள் சங்காரகாலத்தொலைவில்மேல்வருகிற சிருட்டிகாலத்துச்சிருட்டிமுதலியபஞ்சகிருத்தியங்களை ப்பண்ணுதற்கு. அதிகாரகர்த்தர்களாகச்சிவனாலேவரப்பட்டிருப்பர்கள். எ- று

உம்மையெதிரதுதழுவியவெச்சம் (௩௫)

முற்கூறியஞானயோகமடைதற்பொருட்டுக்கருமயோகத்தினதியல்பு
கூறுவான்றொடங்குகின்றார்

பரமமெய்ஞ்ஞானயோகப்பாங்கிலார்தமக்கும்பாங்காங்
கருமயோகினையுங்காணக்கழறுவங்கருதுவானே
கருதிடும்பொருளேயந்தக்கருத்ததன்பயனேயென்ன
வருமொருநான்குமுன்னேமதிக்கவேயோகம்வாய்க்கும்

எ- து மேலாயவுண்மையாகியஞானயோகமடையாதார்க்கு நன்மையைத்தருவதாயிருக்கிறகருமயோகத்தினதியல்பினையுங்கூறுகின்றோமறிதலைச்செய்க. ஒருபொருளைக்கருதுமவனுமவனாற்கருதப்படும்பொருளும்அப்பொருளைக்கருதுங்கருத்துமக்கருத்தாலவந்தடையும்பயனுமென்று சொல்லுதற்குவரும் நான்கினையுமுன்னரேயாய்ந்தறியினவர்களுக்குப்பின்னர்அக்கருமயோகநெறிகூடும். எ- று

நான்குமென்னுமும்மை. முற்றும்மை-மதிக்க வென்றதனாலாய்ந்தறிதல்வேண்டுமென்பதாயிற்று (௩௬)

இதுவுமது

மலத்தினுமனாதிமுத்தன்வாக்கினுளேகதேசம்
பலிப்பதுமுந்திப்பார்க்கவிம்மையிற்பயனுட்பார்த்தான்

மலத்தினு நீங்கியீசன்மலரடிநீழல்வாழ்க்கை
விலக்கிலையென்றேயெண்ணி விரும்புவன்யோகம்வேறும்

எ- து அநாதிமலமுத்தனாலுரைக்கப்பட்ட வேதாகமங்களுள் ஒருசாரிம்மைப்பயனுட்பலிக்கப்பட்ட கருமயோகத்தை விதிவழுவாதியற்றி முன்னர்ப்பார்த்தறிதலைச்செய்க, அங்ஙனம்பார்த்தால்மூலநோயினின்றுநீங்கியிறைவனுடையபாதாமரைமலர்போன்றதிருவடிநீழலையடைந்து வாழ்தற்குவிபரீதமில்லையெனக்கருதியிம்மைப்பயனுட்பலிக்குங்கருமயோகத்துக்குவேறாய் வீடுபேற்றுக்குரித்தாகியஞானயோகத்தையும்விரும்புதலைச்செய்வன். எ- று (௩எ)

இந்தக்கருமயோகத்துக்குப்புண்ணியதலமுதலானவையுபாங்கமெனக்கூறுகின்றார்

எல்லையையெழுவாயெல்லாமெண்ணுகவுபாங்கமென்றே
யல்லலிவ்வாக்கைகண்டவருவருப்பெனவறிந்து
புல்லியபுலன்கள்வென்றுபொருவிலிபுரியும்புக்குச்
செல்லலெல்லாமுந்திரச்சிவனடியடையுஞ்சித்தர்

எ- து இந்தநிலைநில்லாத சரீரந்துன்பத்தைவிளைக்கும தெனவுங்காட்சிப்பிரமாணத்தாற்பழிக்கப்பட்டமலமூத்திரப்போர்வை யெனவுமதனையறிந்து. அற்பவறிவினைத்தருவதாய விடையபோகங்களினது வழிபோகாமற் றம்வழிக்கொண்டு தனக்கோரொப்பில்லாதவிறைவனைஅனுசந்தானமாகவடைந்து வீற்றிருந்துதுன்பத்துடர்ச்சியெல்லாம்விட்டுநீங்கிச்சிவனுடைய திருவடியையடைதலைவிரும்புவார். இடம் பொருளேவற்செய்வோரென்னு மூன்றினையு மிக்கருமயோகத்திற்குபாங்கமென்றறிக. எ- று

யோகத்திற்குப்பிரதானமாகிய அங்கம்இயமமுதலியவெண்வகையந்தவங்கத்துக்குத்தானமுதலானவைகள்உபயோகமாதலாலுபாங்கமெனச்சிறப்பித்தார்.இதுவடமொழி. இப்பயன்பலித்தலியல்பாதலிற்சித்தரெனச்சிறப்பித்தார் (௩அ)

இதுவுமது

அரவினுன்மற்றுமச்சமறவருவருப்புமின்றி
மரநிழைமலருமல்கமனிதர்கள்பலரும்வந்து

விரவிடாவெல்லைதன்னில்விரும்பியேகுகைபுஞ்செய்து ❊
திருவினைக்குடனேதூபஞ்சிறக்கவேகுகைபுட்செய்க ❊

எ - து வெளி - இதனால்யோகசாதனைக்குத்தலங்கள்கூறியதாயிற்று (௩௧)

யோகசாதனைக்குரித்தல்லாதாரி லக்கணத்தை யிரண்டுசெய்யுளா
லுணர்த்துகின்றார்

ஆக்கையிற்பிணியையுற்றாலுதரவகத்திலற்றான் ❊
காக்கவேபாக்கைதன்னைக்கருத்தினுளருத்திவைத்தா
னிக்கிடாக்கருமத்தோடேவலியுறநிரந்துநின்றா ❊
லூக்கமேயுடையானானமிலிபணிக்கொருமையுற்றே ❊

எ - து- வெளி- ஊக்கம்- உச்சாகம் (௪௰)

ஆரியனேவல்செய்வானதிகதீபனமுமுள்ளான் ❊
பாரியதபனந்தன்னைப்பற்றினன்மற்றுங்குற்றம்
சேரியனென்றுசெப்புமிவரொலாஞ்சிறந்தயோகத் ❊
தூரியர்சொல்லப்பட்டவிவரலார்துடங்கலாமே ❊

எ- து- வெளி- யோகத்தூரியர்- யோகஞ்சாதித்தற் குரிமையல்லாதார்-ஆரியன்
ஞ்சாரியன் (௪௧)

இக்கருமயோகத்தினதுபயனைவழுவாதெய்துவாரித்தகைமையரொ
னவவரிலக்கணங்களைநாலுசெய்யுளாற்கூறுகின்றார்

பதவிதாய்ச்சிறியசூடும்பற்றியபரிமிதான ❊
முதரதிபனமுங்கூரவுச்சிப்பின்னொருபோதுண்பா
லுதகமுகொய்திலுண்பானுதரபந்தனமுமுள்ளான் ❊
மிதமிதமென்றேயெண்ணிவேணவாத்துடைத்துவிட்டான் ❊

எ- து மேன்மையையுடையதாய்ச் சிறியசூட்டுடனுங்கூடிய அற்பமாகியவன்னத்தைவயிற்றின்கட்பசியுமிகவுமுண்டாக உச்சிக்குப்பின் ஒருநேரமாகவுண்டலைச்செய்வான், தண்ணீரினையுஞ் சிறிதேபருகுதலைச்செய்வான் வயிற்றின்கண் ✠ ஒட்டியாணக் கட்டினையு முடையான் யாதாமொருபொருளை நுகர்தற் பொருட்டா

✠ ஒட்டியாணம் - யோகப்பட்டை.

சைவந்தவிடத்துச்சிறிதினைக்கருதி மிகவுதுகர்தலைச்செய்யாது நீக்குவான். எ- று

வேணவா. எ- து. வேட்கைப்பெருக்கம் [௪௨]

நீக்குவான்றிரண்டபானெய்நிகழ்த்தநிதனையுநெய்யி
ஞக்கியவபூபமாதியனைத்தையுமவலமென்றே
தூக்கினுட்சொல்லுமுண்டைச்சுரையுளிமுருங்கைதொண்டை
பீர்க்கினுட்பெரியதத்தியெனுமிவையாதிபேணான்

எ- து- வெளி- இதனுள். தூக்கு. நூல். தொண்டை. கொவ்வை (௪௩)

அஞ்சுவானுசைதோன்றிலருவருப்பான்றன்னுகம்
பஞ்சின்மெல்லடியார்வந்துபரிந்துமெய்பற்றினுலு
நஞ்சுளநடுங்கியன்னையெனவவர்தம்மைநாடி
வஞ்சிநுண்ணிடையார்போகமறுத்தறவெறுக்கவல்லான்

எ- து- வெளி (௪௪)

தொழிலினைச்சுருக்கியுள்ளான்சுளிப்பவன்றுயிலுந்தோன்றில்
விழைவினைஞானயோகபலத்தநிவிரைவின்வைத்தான்
உழையுறைபுலன்களெல்லாமொடுக்கியேயுள்ளானென்று
கழறியவிவரோயோகபலத்தினைக்கைக்கொண்டாரே

எ- து கிரியாபாதத்திற்சொல்லுநித்தியநைமித்தியகாமிகசடங்கிற்கிரியைவிரியாமற்சுருக்கிச்செய்துள்ளான் நித்திரைவந்தவிடத்து த்தடுத்ததனை வெறுப்பான் யோகத்தின்பலமாகிபமுத்தியினைபடைவதில் மிகவும் விரும்புதலைச் செய்வான் தன்னிடத்திற்பொருந்தியிருக்கிற விடையங்களிற்பற்றுதலெல்லாமொழித்துள்ளானென்றிப்படிச்சொல்லி வரப்பட்டவித்தன்மையரோயிவ்வியோகசாதனையெய்தும்பயனைப்பெறுவர். எ- று

எதிர்காலத்தாற்கிளப்பதனைபிறந்தகாலத்தாற்கிளந்தார். விரைவுபற்றி (௪௫)

மேலாதனமுதலிபவற்றைபிரண்டிசெய்புளாற்
றொகுத்துணர்த்துகின்றார்

ஆதனம்பதுமமாதியல்லதுமிசைந்ததொன்று
லேதமக்கியற்றித்தேவனிணையடியிறைஞ்சிபாதம்

போதகவுருவன் பொற்றாள்புந்தியுணினைந்துபோற்றிச்
சாதகப்புரிகயோகந்தவறறுமுபயோகத்தால்

எ-து சாதகனானவன் பதுமமுதலிய அறுபத்திநாலு ஆதனத்துளொன்றைப் பொருந்தியல்லதுதனக்கியன்றதொரு ஆதனத்திலேயிருந்து சிவன் உமையாள். தெய்வமுமுத்தி யிவருளொருவர் பாதமாதல் புத்தியினாலே தியானித்தொழிந்தவாறே தொத்தாஞ்செய்துயோகத்துக்குத்தவறுவாராமற்புரிக. எ-று (சஉ)

வரக்கிரியக்கேயாகக்கவான்மிசைக்கலக்கத்தென்பாற்
கரந்தனிற்பிருட்டசாய்கைகலக்கமற்றங்கைக்கண்ணே
பிரிந்தபன்னடிவேகாவினந்தமும்டெய்துநிற்க
வரந்தனமுன்னேபின்னும்நிமிர்ந்திடக்களமுமோங்க

எ-து கையுங்காலுங் குறுக்கேவைக்க. அஃதெங்ஙனமென்னில் வலதுகாலையிடதுதுடைத்தன்னேவைத்து அதன்மேலே மடியிலேயிடதுகையைமுதல்வைத்ததன்பினதன்மேலேவலதுபுறங்கை பொருந்தவைத்துப் பல்லொன்றோடொன்றுகிட்டாமனடிவேகாக்குநிற்கப்பண்ணிமார்புமுன்னேதள்ளிப்பின்னே நிமிர்ந்துசரீரஞ் செவ்வையாகவிருக்க. எ-று சஎ

முச்சுறியவாதனத்தையும் பிராணயாமத்தையும் பிரத்தியாகாரத்தையுந்தொகுத்துணர்த்துகின்றார்

நாசியினந்தஞ்சேர்த்திநாட்டநான்கைந்தொன்றென்றே
தேசுறுநினைகடன்னிற்செலுத்திடாநிருந்துவாயு
சேசகபூரகங்களெனுமிவையிரண்டுமின்றிப்
பேசுதறானுமில்லாச்சிலையெனவிருக்கைபெற்றே

எ-து கண்கள்நாசியினுனியைப்பொருந்திப் பிரகாசத்தையுடைய பத்துத்திக்கிலு மனதைச்செல்லாதபடி நிறுத்தியிருந்து இரேசகபூரகமாகிய விரண்டையும் விட்கேக்கும்பகத்தோடே மவுனியாயிருந்து சிலையானதெப்படி சேட்டையற்றிருக்குமதுபோலவசைவறவிருக்க எ று (சஅ)

மேற்றாரணைதியானஞ் சமாதிமூன்றினையுந்தொகுத்துணர்த்துகின்றார்

மனசிலையொடிங்கவீசன்வடிவிலோயகத்துள்வைத்துப்
பினைவடிவறுதிபேசுந்தேசிகனருளாற்பெற்று

மனநிலையொடுங்கவாய்த்தவாய்மையினறிவைவைக்கக்
கலிவொடுகாண்பான்காட்சிகாட்சியிற்படலுங்கைத்தே

எ - து மனத்தைவேறொன்றிலுஞ் செல்லவொட்டாமல் மூலாதாரமுதலிய ஆதாரங்களிலே நிறுத்துவது தாரணை, ஞானாசாரியனுடையவருளினாலே நிட்களத்தையுபதேசிக்கப் பெற்றுச்சிவனைமூலாதார முதலியதானங்களிற்கடப்பம் பூவானதெப்படியடியிலேதொடுத்துமேலேசெல்லுமதுபோலப்பாவிப்பது தியானங்,காண்பானுங் காட்சியுங்காணப்படும் பொருளுமின்றிச் சித்தமனாலையம்பிறப்பித்துச்சித்தாயிருக்கிற வியாபகத்திலே யறிவானதை நேயத்துடன் வைத்திருப்பது சமாதியெனப்படும். எ று

[சக]

இப்படி யுண்மைநிலைகைவரா தோர்க்கு மேலோரு
பாயநிட்டையுணர்த்துகின்றார்

நீங்கினரிந்தவுண்மைநிலையினைநெஞ்சந்தன்னிற்
றாங்குகசகளந்தன்னைச்சங்கரன்றன்னையுன்னி
நீங்குகசகளந்தன்னைமுன்னையினிலையினீடித்
தாங்குகநிரியிற்பின்னுஞ்சகளமாதரிக்கச்சூழ்ந்தே

எ - து இங்ஙனங்கூறியவுண்மைநிலையாகிய சமாதியைவிட்டுநீங்கினவர்கள் சகளமூர்த்தியாகியசிவனையிதையத்தின்கட்டியானஞ்செய்க, அந்தத்தியானத்தைவிட்டு நீங்கினவிடத்துமுன்போலச்சமாதியைப்புரிக, அதனைவிட்டுநீங்கினவிடத்துப்பின்புஞ்சகளமூர்த்தியையேதியானஞ்செய்க. எ - று (௩௰)

மேலுமோர்வகையாலகப்பூசையுமுணர்த்துகின்றார்.

அகத்தினுட்பூசைசெய்வார்க்கருவருப்பில்லைக்கொல்லும்
பகைத்தொழிலில்லையல்லற்படுதலுமுடலுக்கில்லை
யுகப்புறுபலமுமேலாமுறும்பலமுனையினற்பஞ்
சகத்தினுட்பூசைசெய்வார்தமக்கெலாம்வருத்தஞ்சார்ந்தும்

எ - து யாதாமொருவர்அகப்பூசைசெய்யுமிடத்தவர்களுக்கு அருசிமுதலியகுற்றமுமில்லைபுட்பமுதலியவற்றைப் பறிக்கிறவாறையாகியகுற்றமுமில்லை மிகவுமிதனாற்சரீரவருத்தமுமில்லை யிவன்பெறும்பலமுமதிகமாயிருக்கும் புறப்பூசைசெய்யிற் சரீரவருத்தஞ்சாரினுமதனாற்பெறும்பலமுமற்பம் எ - று (௩௧)

மேலகப்பூசைசெய்தற்குத்திருமேனியீதென்றுணர்ந்துகின்றார்.

மங்கலவங்குலத்தும்வளர்திருவுருவந்தன்னைத்
தங்கருத்தினுக்கேதக்கநிறத்துனிச்சலசந்தன்னு
ளெங்கருக்கிறைவாவிட்டசித்திதாவென்றேயேத்தச்
சங்கரனவர்க்கேயிட்டசித்தியைச்சமைப்பன்றானே

எ - து எட்டங்குலமுயரமாக வொருசிவலிங்கத்தை நினைந்துதமதுகரு
தக்குவேண்டினதொருநிறமாகவதனைக் கருதியிதையகமலத்தின்கணிருத்தி சி
ன்னிமோபசாரத்துடன் பூசைசெய்து எமது சுவாமியாமியாதொன்றடையவே
மென்றுகருதின இட்டசித்திகளெல்லாவற்றையுந்தருவாயாகவென்று பிரார்த்
ச்சத்தோத்திரஞ்செய்யச்சிவனுந்திருவுளமகிழ்ந்துஅவர்களவர்கள்வேண்டினஇ
டசித்திகளையிம்மைக்கட்கொடுப்பன். எ - று (ரு

சராசரமாகிய ஆன்மாக்களிடத்துச்சிவன்வியாபி
த்துநிற்குமுறைமையையுணர்ந்தார்
பெறும்பலமுணர்த்துகின்றார்.

சராசரத்தமலனீங்காத்தன்மையனாதலாலே
சராசரமவன்றன்மேனியெனவுணர்தக்கோர்தா முஞ்
சராசரவுயிர்க்குத்தாயாஞ்சங்கரனுலகஞ்சார்ந்து
சராசரமொடுங்கும்போதுதற்பரன்றானுஞ்சார்வார்

எ - து வெளி-சரம் - நரர்மிருகாதி - அசரம் - தாபராதி (ரு

முன்னர்த்தொகுத்துப்போந்தயோகத்தைமேல்வ
குத்துணர்த்துகின்றார்.

போகத்தைபிங்குமங்கும்புண்டரமுன்பொருந்திநின்ற
மோகத்தைமுனியயோகமூவிரண்டங்கத்தாலே
பூகித்தேயுணைப்பர்ஞ்சொல்லற்கொருபொருள்ளல்லாவூத்தை
யாகத்தையயலென்றாய்ந்தவறிவுடையார்கடாமே

எ - து ஈதென்றறுதிபிட்டுச்சொல்லுதற்கேதுவல்லாதவழுக்குமிக்கசரீ
த்தைநமக்கன்னியமென்றாராய்ந்த வறிவுடையோர்கள், அபரபோகம்பரபோகத்
த்தைப்பொருந்தவுமுன்னே செனனந்தோறுந்தொடராநின்ற வஞ்ஞானங்களை

ழியவும் ஆறங்கமாகியயோகத்தையாம்விசாரித்துஇந்நூலிற்சொல்லாநின்றோம்
எ - று [௫௪]

ஆறங்கமாகியயோகத்துட்டலைமையாகியபிராணயா
மத்தையுவமித்துணர்த்துகின்றார்.

அட்டாங்கயோகமென்றிருக்கவீண்டாறங்கமென்றதென்னெனில்.இயமநியம
மிரண்டுமித்னுளடங்குதலால்வேறாகக்கூறிற்றிலர்

முந்தியபிராணயாமமுத்திசாதனசமாதி ❊
யந்தமாறங்கயோகமவற்றுளும்பிராணயாமந் ❊
தந்தியைப்பாகனெற்றேதடுத்தடர்த்திடுகையற்றே ❊
பந்தமாம்பிராணன்றன்னைப்பயிற்றுதலுரைக்கும்பாங்கால் ❊

எ - து பிராணயாமமுதற்சமாதியந்தமாகியவாறங்கயோகமுமோக்ஷமடை
தற்குப்பாங்கென்றுசொல்லலாம், அவற்றுட்டலைமையாகிய பிராணயாமத்தின்
பகுதியைவிசாரிக்குமிடத்துப்பாகனானவன்யானையானதைத்தன்வழிசெல்லவொ
ட்டாமற்றோட்டியாற்றலையிற்கொத்திமறித்துத்தன்வசமாக்கிக்கொள்ளுமாறுபோ
லவான்மாவைவிட்டுநீங்காதிருக்கிறபிராணவாயுவை சிவயோகியானவனிரேசக
பூரகங்களினாலேமறித்துத்தன்வசமாக்கிக்கொள்ளுவன். எ - று [௫௫]

அந்தப்பிராணயாமத்தின்பகுதியையுணர்த்துகின்றார்.

ஊன்றியேவலப்பாகுசிப்புடைவிரலுதரவாயுக் ❊
கான்றிடவிடையினாலேகளைகபிங்கலையினாலே ❊
யூன்றியேபிடப்பாகுசியுதரத்துள்ளுறவேபூரித் ❊
தூன்றியேயிரண்டுங்கும்பித்திடுகபின்னுதரத்துள்ளே ❊

எ - து வெளி (௫௬)

மேற்பிராணயாமமென்னுஞ்சொற்குப்பதப்பொருளு
ணர்த்துகின்றார்.

பெற்றமையாலேநீங்காப்பெற்றியைப்பிராணனேடே ❊
பெற்றிடும்பிராணனென்னும்பெயரினையனிலந்தானு ❊
மற்றதன்வருத்தந்தன்னைமதித்துளாயாமமென்றே ❊
பற்றுகபிராணயாமப்பதப்புணர்ச்சியினைப்பாங்கால் ❊

எ - து ஆன்மாவினோடேபிராணவாயுவானதுவிட்டு நீங்காதிருக்குந்தன்மையைப்பெற்றமையாலேயதற்குப் பிராணனெனப்பெயராயிற்று - அதனைநோய கூறுகளினாலேபோக்குவரத்துச்செய்து துக்கிப்பிக்கையால் ஆயாமமெனப் பெயராயிற்று, இப்படிபிராணவாயுவை ப்போக்குவரத்துச்செய்விப்பிக்கையாற் பிராணாயாமமெனச்சொற்பொருளாயிற்று. எ - று (௫௭)

அந்தப்பிராணாயாமத்தால்வருநன்மைதீமையுணர்த்துகின்றார்

அந்தரம்பெரிதேயாகுமவகநியாயாமத்தான்
வந்துறுமேன்மைநன்குவாய்க்கினாயாமம்பாச
பந்தமும்பயிற்றியச்சப்படுத்தியங்குசத்தாற்பற்றுந்
தந்திவாகனனுஞ்சாலத்தளர்வனேதவறேசாரில்

எ - து மேலந்தப்பிராணாயாமத்தை யாதாமொருவன் விதிவழிசெய்யாது ஏற்றக்குறைவாகச்செய்யின் அவனுக்குமிகவுந்துக்கத்தையே கொடாநிற்குமதனை யுள்ளபடியறிந்துசெய்துஅதுவாய்த்தவிடத்துஅதனாலுள்ளசித்திகள்நன்மைகளெல்லாம்வந்து பொருந்தும்,காலிலே சங்கிலியும் பூட்டப்பட்டுப்பாகன்றோட்டியினாலேவாதைப்படுத்த வதனாற்பயங்கரத்தை யுமுடையயானையின் மந்தகத்திலேயிருக்குந்தேவேந்திரனேயானாலும் அந்தப்பிராணாயாமம்வாயாதவிடத்து மிகவுந்துக்கத்தையுறுவன் எ- று- உம்மை- உயர்வு சிறப்பு (௫௮)

பிராணாயாமந்தவறினவிடத்துண்டாகியகுற்றம்போம்படிக்குபாயமைந்துசெய்யுளாலுணர்த்துகின்றார்

வாயுவாயாமந்தானுந்தவறுறின்வருத்தமாக்கு
நோயுறுமுற்றநோய்கணுங்குதனுவலக்கேண்மோ
தேயுவைத்தியானஞ்செய்யச்செறிந்தநோயங்கந்தன்னின்
மாயுமேவாதரோகமனத்தகத்தொருமைவாய்த்தே

எ- து யாதாமொருவர் பிராணாயாமஞ் செய்யுமிடத்து க்குற்றம்வரிற்சரீரத்திலேவாயுவினாலேவருத்தத்தையுண்டாக்கும் அஃதன்றிவியாதியையு முண்டாக்கும் அக்குற்றங்கள்போம்படிக்குஒருஉபாயஞ்சொல்வாமதனை க்கேட்பாயாகமனதிலே பொருமைப்பாட்டையுடையவனாயதற்கு விருத்தமானவக்கினியைத்தியானஞ்செய்யிலதனாற்சரீரத்தின்கட்பொருந்தியவாதமுதலியவியாதிகளுநீங்கும். எ- று (௫௯)

அங்கியான்வருத்தமுற்றவவையவமதனிலாழ்ந்த
பொங்குதண்புனலைச்சிந்தைபுரிந்திடிற்பிரிந்துபோகும்
பொங்குதண்புனலாற்றுன்பம்பொருந்தியவுறுப்புத்தன்னி
னங்கியைத்தியானம்பண்ணவல்லவர்க்கழியுமந்நோய்

எ- து அக்கினியைத்தியானஞ்செய்ததினாலேயிவனுடைய சரீரத்தின்கண் அதனால்வாதைவரில்! அதற்குவிருத்தமாகிய தாழ்ந்தமடுவின்கண்ணிறைந்திருக்கப்படாநின்றசீதசலத்தைத்தியானம்பண்ணினால்வாதைவிட்டுநீங்கும்அந்தச்சீதசலத்தினாலேசரீரத்தின்கண்வாதைவரில்அதற்குவிருத்தபூதமாகியதேயுவை த்தியானிக்கவல்லவர்க்குஅந்தவாதையானதுநீங்கிப்போகாநிற்கும். எ- று

வல்லவர்க்கென்னுஞ்சொல்முற்றுங்கூட்டுக (௬௫)

உற்றிடினுதரந்தன்னினுதாசனனுற்றபோதே
பற்றுகவமிர்தவெள்ளப்பாவனையதனாற்பாறு
மற்றையவுதகவேட்கைவரினுமிவ்வாறுசெய்க
வற்றிடுமறவின்வேட்கையாகமுங்குளிருமன்றே

எ- து முன்னர்க்கூறியவந்தவக்கினியானது உதராக்கினியுடன்பொருந்திமிகவும் வாதைபண்ணினவிடத்து விந்துத்தானத்தினிற் கிறவமிர்தமானது புறப்பட்டு எங்கும் நனைந்ததாகப்பாவிக்கிலந்தவக்கினிவாதை சமிக்கும். அஃதன்றி மிகவுந்தண்ணீர்த்தாகமுண்டான விடத்து முன்புபோலே யமுதபாவனைபண்ணினந்தத்தாகமுஞ்சமித்துச்சரீரமுங்குளிர்ந்திருக்கும். எ - று (௬௬)

உற்றநோயுடலினுடியுணர்ந்தபின்விபரீதத்தைப்
பற்றுகபாவகத்தாற்பற்றியவுறுப்பினோய்கள்
அற்றிடுமைவர்வீரமடக்கியேயவாவுமாய்த்த
நற்றவர்புரிகவிந்தமுறையினைப்பலிக்குநாளும்

எ - து பஞ்சேந்திரியங்களையுமடக்கி யாசையினையுமொழித்த நல்ல சிவயோகியானவன் நாடி சோதனையைப்பண்ணினபின்பு சரீரத்தின்கட்பொருந்தியவியாதியானது போம்படிக்குப்பாவனாசாமர்த்தியத்தினாலே பின்பு விபரீதமாகநாடிசோதனையைப்பண்ணிலச்சரீரத்திற் பொருந்திய தலைவலி - கண்ணோய் முதலி

பலியாதிகளெல்லாம்போமாகையாலே நாடோறுமிந்தப்படியேசெய்யில்யோகசி
த்திவரும் எ று (௧௨)

கடுவெயிற்றரவமெய்யிற்கடித்திடிற்கனலுமந்த *
வுடலெல்லாமமிர்ததானையொழுக்கியேநனைக்கவுள்ளத் *
திடமுளான்றனக்கப்போதேதீர்ந்திடும்விடமுமற்றை *
விடமுறும்போதுமிந்தநினைவுறின்விளைந்துமீளும் *

எ - து வெளி.

காளி - காளாத்திரி - நீலி - நீலாத்திரியென்னும் பல்லையுடைத் தாதலாற் கடு வெயிற்றரவமெனச்சிறப்பித்தார், மற்றுமென்பதனால் தேள் முதலாயின வெனவறிக (௧௩)

யோகஞ்சித்தியானதுக்கடையாளங்களுணர்த்துகின்றார்

வாயுவைச்செயித்தசெய்கைவாய்த்ததற்கடையாளங்கள் *
ஆயுராரோக்கியாதியவற்றையவ்வுடலங்காட்டு *
மாயமுமனத்தினில்லைவசமுறும்புலன்களெல்லாங் *
காயத்தின்மலசீர்மற்றும்நொய்தெனக்கழியுமன்றே *

எ- து- வெளி. (௧௪)

அந்தப்பிராணயாமமிருவிதமாமென்று இரண்டுசெய்யுளாலுணர்த்
துகின்றார்

வாயுவினாயாமந்தானிருவிதமாகவாய்க்கு *
மாயினொன்றகற்பமற்றையதுமகாசகற்பமாகும் *
வாயின்மந்திரத்தைச்சொல்லிப்பயிற்றலுமனத்தினாலே *
தேயனைச்சிந்தைசெய்தேபயிற்றலுஞ்சகற்பந்தேரில் *

எ- து. பிராணயாமம்சகற்பப்பிராணயாமமெனவும் அகற்பப்பிராணயாமமெனவுமிருவிதமாம்அவற்றுட்சகற்பமாவது வாக்கினாலே மந்திரத்தையுச்சரித்துமனத்தினாலேசிவனைத்தியானஞ்செய்துபிராணயாமஞ்செய்வது. எ- று (௧௫)

அகற்பமவ்விரண்டுமின்றியாக்கிடுமாயாமந்தான் *
மகத்பலவாஞ்சையாலேபயிற்றுமாதவர்க்குவாய்த்த *

சகற்பமேயகற்பத்தன்னிற்றரும்பலமதிகத்தாழ்ந்த
வகற்பமுமலசினார்க்குப்பலத்தினைநொய்திறக்கும்

எ- து முற்கூறியசெபமுந் தியானமு மின்றிப்பிராணயாமஞ்சொன்னமாத்திரைகளினாலேசெய்வதுஅகற்பப்பிராணயாமமென்பெறுமிகுந்த பலத்தையடையக்கருதும்வாஞ்சையையுடைய மகாதபோதனர்க்கு அகற்பப்பிராணயாமத்தைப் பற்றச்சகற்பப் பிராணயாமமே யதிகபலத்தைக்கொடுக்கு மந்தச்செபத்தியானத்தோடுகூடியசகற்பப்பிராணயாமஞ்செய்ய மாட்டாமற்சோம்பினபேர்க்கு அகற்பப்பிராணயாமமானதுமுற்கூறியவற்றிற்றாழ்ந்ததைக்கொடுக்கும். எ- று. (சுசு)

பிராணயாமத்தின்விசிட்டமும்அஃதில்லாதார் சமாதியடையமாட்டாரென்பதுமுணர்த்துகின்றார்

இந்தியவிருத்தியெல்லாம்பிராணனேயியக்கவேயு
மிந்தியஞ்செயிக்கவெண்ணிற்பிராணனைச்செயிக்கப்பஞ்ச
விந்தியஞ்செயித்தார்தாமேயெய்துவர்சமாதிதன்னை
யிந்தியஞ்செயிக்கமாட்டாரெய்துவதேதுமின்றே

எ- து. இந்திரியங்களெல்லாம்பிராணவாயுவியக்கவே யியங்குமாதலாலிந்திரியஞ்செயிக்கக்கருதுமவர்பிராணவாயுவைத் தமதுவசவிருத்திபண்ணுக, இந்திரியஞ்செயித்தாற்பிரயோசனம் யாதென்னிலிந்திரியஞ் செயிக்கமாட்டாதோர்சமாதியுமடையப்பெறார்கள், தியானாதிகளுங்கைவரமாட்டாது, ஆதலாற் பஞ்சேந்திரியங்களைச்செயித்தவர்களேசமாதியையடையுமவர்கள். எ- று. (சுஎ)

அந்தச்சமாதியடையுமிடத்துபஞ்சேந்திரியங்கடாமாகச்செய்யவற்றாலென்னிலான்மாவேநடத்துமென்பதற்குருவகம்பண்ணியுணர்த்துகின்றார்

விசையுறுபரிகளாகவிரவுமிந்திரியபேதங்
கசையதுவாகவாயுக்கற்புற்றாயாமத்தாலே
தசையுடலிரதந்தன்னைச்சாரதியாகித்தானே
யசைவதுமின்றியூருங்கொளவிருபயனுமான்மா

எ- து. சோத்திராதிபஞ்சேந்திரியங்களானதுவிரைவுடைத்தான குதிரைகளைப்பொற்சேன்றுவிடையங்களைப்பொருந்துமிப்படிச்செல்லு மிந்திரியங்களானதுகா

[illegible]ச்செல்லுமதன்றித் தாணுகச்செல்லமாட்டாஅந்தவாயுவானதும் பிரா
[illegible]த்தை விதப்படி நாடோறும்பண்ணினவிடத்துத் தானினைத்து இந்திரியங்
[illegible]ச்செலுத்தமாட்டாவாதலால்ஆன்மாவுக்குவசவிருத்தியாம்அப்போதான்மாவா
[illegible]ன் மேலாகிப்போகமோக்ஷமாகியவிருபயனையுமடைதற்பொருட்டு மாங்கிச
[illegible]டத்தாகிடதுலகுக்கும மானசரீரத்தைத்தேராகப்பண்ணி யிந்திரியமாகிய ப
[illegible]வைச்சம்மட்டியாகப்பிடித்துக்கொண்டுதான் தேர்ப்பாகனு ய
[illegible]விகாரியாயிருந்துதன்சன்னிதிமாத்திரத்திலே யந்தத்தேராகிய சரீரத்
[illegible]ச்செலுத்தா நிற்பன். எ- று (சுஅ)

அந்தஆன்மாவுந்தாணுகச்செலுத்தவற்றேவென்னி
ச்சிவன்றன்சன்னிதிமாத்திரத்திலேநடத் துவனெ
ன்பதனைபுத்தரபூருவமாகவுணர்த்துகின்றார்.

வேறு

[illegible]யக்கிடுஉயிர்விதற்கியெனிற்பூணிக்கியந்திரத்தின்
[illegible]க்குவிக்குமிறையமலனெனிற்றேழிலுண்டிறைவனுக்கு
[illegible]மிருவிலைமெய்துமிரவிக்கேவுதலில்லை
[illegible]ம்பெய்திடுங்காந்தத்துமிலைத்தொழிலே

[illegible] - து ஆன்மாவானவன் அவிகாரியாயிருந்துசரீரத்தையியக்குவிப்பனென்
[illegible]ம் பூணியானதையியக்குவிப்பானொருவன்போல விசுவத்
[illegible]ன் நின்மலனாகியசிவனே யென்னி லந்தக்கர்த்தாவுக்குத் தொழிலு
[illegible]மென்னிலஃதப்படியன்று பெரியநிலத்துள்ளார்தொழில்செய்கிற
[illegible]னேவலல்லவேயஃதன்றிக் காந்தக்கல்லின்முன்னிரும்புசேட்டி
[illegible]க் காந்தக்கல்லினது தொழிலல்லவேயாதலாற்கர்த்தாவுக்குத் தொ
[illegible], துச்சியன்காந்தக்கல் இவற்றின் சன்னிதிமாத்திரத்திலேயவை
[illegible]போலவிசுவமுஞ்சிவனதுசன்னிதிமாத்திரத்திலேகாரியப்
[illegible] எ - து (சுக)

சிவன்செகத்தையசரீரியாயிருந்துநடத்துவனென்
றற்குதாரணபூருவமாகவுணர்த்துகின்றார்.

[illegible]யவத்துங்காரியமெய்யாகியதற்கமலனிறை
[illegible]த்தகாரியமுண்டாக்கினர்மெய்

யவையவ முமாக்கு மமிவதற் குமுதற்காரணத்தின்
றவையவத்தாற்பற்றிக்கப்படுமவர்க்குமவர்வினைக்கும்

எ - து சரீரமானது மெய் வாய் கண் - மூக்குச் செவி - முதலியவவையவங்களுடனேகூடிக் காரியப்பட்டிருக்கையினாலேயதனை யுண்டாக்குகைக்குச் சரீரமில்லாதசிவனேகர்த்தனச்சரீரமில்லாதவனே தனுவாதிகளை யுண்டாக்கவேணுமென்னில் அச்சுபார்தட்டுக்கண்முதலி பவவையவங்களைப் பொருந்தியிருக்கப்பட்டதேர்முதலியவற்றை யுண்டாக்கினவர்களுடையசரீரமுமவையவங்களுடன்கூடியிருக்கக்கண்டோமேயாதலாற் சரீரத்தையுடைத்தானவர்கள்தானே தனுவாதிகளையுண்டாக்குவர்களென்னிற்றேர்முதலியவற்றை யுண்டாக்குமந்த விசுவகன்மாவுக்குமதனையுண்டாக்குஞ் சாமர்த்தியத்தையுடையபேரறிவினையுமவனது விசிட்டகிரியைகளையு முண்டாக்கத்தக்க சரீரங்களையுண்டாக்குமதற்க சரீரியாகியசிவனேகர்த்தன். எ - று எனவே - நிமித்தகாரணன் - ஈசுவரனென்பதாயிற்று. (எ௰)

ஆசாரியனைமாணாக்கனானவன்சங்கைபண்ணிவினாவுமதனையுணர்த்துகின்றார்.

அமல னிறைசடச்செயல்களனைத்தினுக் குமெனிலணுக்கள்
சமலரவர்சபக்கத்திற்றலைவனொனச்சாற்றினையென்
விமலவவரதிபாலனொளிற்காட்சிவிருத்தமுமுண்
டெமலமறவிருந்தவனேபரிக்காரமிவற்றியம்பாய்

எ - து ஆன்மாக்கள்செய்யுங் கிரியைகளெல்லாவற்றுக்கும்நின்மலனாகிய சிவனே கர்த்தனென்று நீர்சொல்லிற்சபக்கத்திலிரதமிட்டாந்தமிட்டுக் கூறியது, ஆன்மாக்கள்மலத்தான் மறைக்கப்பட்டவர்களாகையாலவர்களைக் கர்த்தனென்று கூறியதெப்படி யஃதன்றியவர்கள் விசேஷித்தமலத்துடனே கூடினவர்களாதலாலவர்கள் கர்த்தாக்களாகார்கள், என்னில் - இரதமுதலியவற்றைப்பண்ணும் அவர்களைப்பிரத்திக்ஷமாகக்காண்கையால் - எல்லாவற்றுக்குஞ்சிவனே கர்த்தனென்றுசொல்லுவது பிரத்திக்ஷவிருத்தமாதலாற்கூடாது, எம்முடையமலத்தைப்போக்குதற்குத்திருமேனிக்கொண்டு, எழுந்தருளியிருந்தவரோயிந்தச்சந்தேகந்தீரும்படிக்குவகைசொல்லுவீர். எ - று (எ௧)

அதற்குவிடைமேலான்மாக்கள்தனுவாதிகளைப்பண்ணமாட்டாரென்பதுவும்பரமசிவன்சுத்தாத்து

வாமுதலியவற்றைச்சிருட்டித்து அதிலிருக்கும்வி
ஞ்ஞானகலர்முதலாயினாரையுண்டாக்கியவர்க
ளாற்சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவிப்ப
னென்பதுமுணர்த்துகின்றார்.

ஆக்கையுமாக்குதற் குவலரலரணுக்கடமக்கமலன்
ஆக்கையுமாக்குவனவருட்சிலர்க்கவருட்சிலர்சிலருக்
காக்கையுமாக்குவரவருட்சிலர்சிலருக்கவருள்ளு
மாக்கையும்பிந்தினரிரதமாதியுநின்மலனருளால்

எ - து ஆன்மாக்கள்தமது சரீரமுதலியவற்றைத் தாமாகவுண்டாக்கமாட்டார்கள், அந்தப்பரமசிவன் சுத்தமாயையையதிட்டித்துக்கொண்டு அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடி மகாமந்திரங்களையுமுண்டாக்குவன், அந்தவிஞ்ஞானகலருள்பரமசிவன் அனந்தாதிகளையதிட்டித்துக்கொண்டு அசுத்தமாயையில்சிருட்டியாதி கிருத்தியங்களைப்பண்ணுவிப்பன், அனந்ததேவநாயனார்சிகண்டபரமேசுரனையதிட்டித்து அவராலேபிரகிருதியிலுண்டான சிருட்டியாதிகிருத்தியங்களைப்பண்ணுவிப்பர், அந்தச்சிகண்டபரமேசுரன் பிரமாவையதிட்டித்துபஞ்சகூசுக்கின் தூலகாரியசிருட்டியைப்பண்ணுவித்து அதில்மிதுனசிருட்டியால்சகலவான்மாக்களையுமுண்டாச்கித் தச்சன்முதலாயினாரைக்கொண்டு தேர்முதலானவற்றைசெய்விப்பன் பரமசிவன்அருளினால். எ - று

மேலிதன் விரிவை விரித்தரியுமிடத்து முதலே சுத்தமாயையாகிய முதற்காரணமானதினின்றும் பரமசிவன் அதிகாரகர்த்தாக்களையுண்டாக்கியவர்களாலே கீழிரண்டுமாயையில்சிருட்டிகளுமதிற்றோன்று மதிகாரகத்தாக்களை யுண்டாக்கப்படுமென்று மதிகாரகத்தாக்கள்பரம கத்தரல்லர். என்று மருளிச்செய்தற்கு விளங்கவருளிச்செய்கிறார், பரமசிவனந்தவதிகாரகத்தாக்களான தாங்கள்தானுந்தங்கள் சரீரங்கள்தன்னையும் தாங்களிருந்துசஞ்சரிக்கும்புவனங்கள் போகங்கள் அந்தந்துதாரமாகிய அண்டங்கள் அதற்காதாரமாகிய சாதாரணமாகியதத்துவங்களையுந்தாங்களாகவுண்டாக்கிக்கொள்ளுகைக்குவல்லரல்லர்கள்அந்தச்சுத்தமாயையிற்றோன்றப்பட்ட அதிகாரகத்தாக்களான அணுசதாசிவர்அட்டவித்தியேசுரர்சத்தகோடி மகாமந்திரேசுரரில் அதிகாரகிருத்தியம் வேண்டாமென்று வெறுத்தமூன்றரைக்கோடிபேர்நீங்கலான மூன்றரைக்கோடிமந்திரேசுரர்க்கு மவர்க்கேற்றதிருமேனிகளைப்பரமசிவனேயுண்டாக்குவன், அவர்களிற்பிரணவர்முதலாகியஅணுசதாசிவர்பத்துப்பேரும்பரமசிவனே தன்சன்னிதிமாத்திரத்திலேயுண்டாக்கப்பட்

உதிவ்வியாகமங்களை யதிகரித்துக்கொண்டு கீழுண்டான அனந்ததேவராயனார்மு
தலானவெட்டுப்பேர்களுமதற்குக்கீழான மூன்றரைக்கோடிமந்திரேசுராமந்தமு
ண்டானவிஞ்ஞானகேவலர்களுக்கும் அனுக்கிரகத்தாக்களாகவிருப்பர்கள், இ
னிமற்றுமுள்ள அட்டவித்தியேசுரர் மூன்றரைக்கோடிமந்திரேசுரரில் அனந்த
தேவராயனாரானமகேசுரரானவர் நின்மலனாகிய பரமசிவனனுக்கிரகத்தினாலே
யசுத்தமாயையிலுண்டாக்கப்பட்ட அண்டபுவனபோகம் தன்மாக்கள் எல்லா
வற்றுக்கும் ஆதாரமாகிய சாதாரணதத்துவங்களையு மண்டலங்கர்முதலிய பிரிவு
யாகலராயுள்ளசருவான்மாக்களுக்கு மவரவர்க்கேதனித்தனியே தோன்றப்பட்ட
அசாதாரணமாகியசூக்குமதேகங்களையுமுண்டாக்காநிற்பர், இனிமூன்றரைக்கோ
டிமந்திரேசுரர்களும்அந்தமாயையிலுண்டான தூலமானஅண்டங்கள்புவனங்கள்
போகங்கள்பிரளையாகலராயுள்ளார் தூலசரீரங்களெல்லாவற்றையும் நின்மலனா
கியபரமசிவனனுக்கிரகத்தினாலேயுண்டாக்காநிற்பர்கள், அவர்களாலே தோற்றுவி
க்கப்பட்டபிரளையாகலருட் பரமசிவன் அனுக்கிரகத்தைப் பெற்றுள்ளாரானதுற
ரெருபத்தெட்டு ருத்திரர்களில் சேகண்டபரமேசுவரரான உருத்திரமூர்த்திபிரம்ம
விட்டுணுக்களுக்குமற்றுமுள்ளசகலருக்குந்தனுவாதிகளை யுண்டாக்கிப்பிரகிருதி
ற்றோன்றப்பட்டசாதாரண அசாதாரணமாயுள்ளதத்துவங்கள், அண்டபுவனங்
களையெல்லாமுண்டாக்காநிற்பர், சேகண்டராலேயுண்டாக்கப்பட்ட பிரம்மாவானவ
ர்பிருதுவிமுதலாசாசமீருசப்பவுதிகமாகிய பஞ்சபூதங்களிலுண்டாகியதூலபரி
மமாகிய அண்டங்கள் புவனங்கள் சகலராயுள்ளாரானார். தூலசரீரங்களெல்லாநி
ன்மலனருளினாலே யுண்டாக்குவர் அந்தப்பிரமாவாலே யுண்டாக்கின பஞ்சபூதம
ட்டும்விட்டுணுவானவர் நின்மலனருளினாலே யிரக்ஷிப்பர், அப்படியவர் களாலேயு
ண்டாக்கப்பட்டாரில் தேவேந்திர பகவான் விசுவகன்மா ரவக்கிரகாதியான அதி
காரகத்தாக்கள் நின்மலனருளினாலேதங்கள்தங்களுக்குக்கட்டளையிட்ட அதிகார
ங்களைப்பண்ணி யிருப்பர்கள், அவர்களுள்ளும் பிந்தினரான புவலோகவிராசாக்க
ளானமனுமுதலாகிய விராசாக்களும் விசுவகன்மாவி னங்கிசம்பற்றிவருஞ்சிற்பா
சாரியர்முதலானவர்களுந்தேராதியவாகனங்கள்மூர்த்திகளான விக்கிரகபேதங்க
ளையெல்லாம் நின்மலனருளினாலேயுண்டாக்கியும் போக்குவரவுகளைப்புரிவித்துச்
செய்யாநிற்பர்களெனவறிக, இதனாற்சொல்லியது சரீரங்களான அதிகாரகத்தாக்
களெல்லாம் அவனருளாலேஅபரகத்தாக்களாக இருட்பதொழிந்து பரமகத்தாக

ல்லவென்றதாம். [எஉ]

இன்னுமவர்கள்பரமகர்த்தாவல்லர்என்பதனைவிள
ங்கவருளிச்செய்கிறார்

உற்பவத்துமுடலாதியுண்மையினுமொடுக்கத்தும் *
அற்பறிவின்றிரோதானமனுக்கிரகமெனுமிவற்றுந் *
தற்பரனல்விளைவுளதாந்தலைவரலர்தமோவினைக்குஞ் *
சிற்கனனனாதியமலன்சிவன்சாதகன்றேசால் *

எ- து ஆன்மாக்கள்சங்கரிப்புண்டுகிடந்தகாலந்தொலைந்து பரமசிவன்தனுகரணபுவனபோகங்களைத்தோற்றுவிக்குமவதரத்திலும் சங்கரிப்புண்டுகீழ்க்கிடக்கிற காலத்திலுந்திதிகாலந்தொலைந்து சருவசங்காரகாலமாகிற வந்தவவதரத்திலுந்திதிகாலந்தன்னிலுமாகஇந்தநாலுகாலத்தில்திதிகால நீங்கலானமூன்றுகாலத்துமல பரிபாகம் வந்தவான்மாக்களையெல்லாம் பரமசிவனே யனுக்கிரகம்பண்ணுவர், அந்தப்பேர்களிலதிகபக்குவராகிய சிலரைத்திருவடியிலே சேர்த்துக்கொள்ளுஞ்சிலரையதிகாரகத்தாக்களாக்கியவர்களைக்கொண்டு சுத்தமாயை நீங்கலானவிரண்டு மாயையிலுண்டாக்கப்பட்ட அதிகார கத்தாக்களுக்கெல்லாம் பரமசிவனாலேயனுக்கிரகப்பட்ட அனந்தாதிகளைக்கொண்டே அனுக்கிரகமுதலான வஞ்சகிருத்தியங்களையும்பண்ணுவிக்கும் அந்தவேளையிலு மந்தப்பரமசிவனாலே மலக்ஷயம்பண்ணிக்கொண்டார்களொழிந்துந்தங்களாலேயனுக்கிரகாதி விளைவையுண்டாக்கிக்கொள்ளமாட்டார்கள் அந்தவதிகாரகத்தாக்கள்தாங்கள் பரமகத்தாக்களல்லரினிதிதிகாலத்திலதிகாரகத்தாக்களல்லாதமற்றுண்டானசிவான்மாக்களாயுள்ளார்களில்மல பரிபாகம்வந்தவான்மாக்களுக்குமலமென்பது போக்கியுஞ் சிலஅறிவுடைத்தா யிருக்கிறவான்மாக்களைத்திரோதானசத்தியவர்களுடைய மலசத்தியை ச்செலுத்தாமல்கைவிட்டுஅனுக்கிரகித்தவிடத்துங்குருமுதலானஅதிகாரகத்தாக்கள்மலக்ஷயம் பண்ணுவார்களென்றஅவ்விடத்துத்தொழிலுக்கும்ஞானசொரூபனாயனாதியேநின் மலனாய்ஞானத்தைச்சாதிக்கவல்லவனானசிவனுடையபராசத்தியவர்களிடத்திலே யிருந்துண்டாக்குமாதலாலவர்கள்பரமகத்தாவல்லரவர்களுக்கும்பரமசிவனனுக்கிரகத்தாலேஅபரகத்தாக்களாகவிருந்துகத்தத்துவம்பண்ணுவர்கள். எ- று (எந)

இன்னும்பரமகத்தாவேமாயாகாரியமா னவையெல்லாவற்றுக்குங்கத்தனெ ன்றுமவனுடையசாமர்த்தியத்தையும்விளங்கமூன்றுஅனுமானப்பிரயோகங் களினாலுமேதுவாலுமிரண்டுசெய்யுளாலருளிச்செய்கிறார்

உண்மையினான்முதற்பக்கத்துறுத்லினாற்சபக்கத்தும் *
நண்ணுமுருநான்கிறையைஞாபகக்காரியம்பணுவா *
னண்ணுமுருவைந்தினையுமிருளிநான்குருவினைமெய் *
பண்ணினனுமவனறிவுமுடலிலியும்பலமாமே *

எ- து. முற்பக்கமாகியஇந்தமண்ணிலே கடாதிகள் தோன்றுதற்குயோக்கிய முண்டாயிருக்கை யுண்மையாகையாலது சடமாகையால் தானாகத்தோன்றமாட் டாதே, ஒருசேதனனானகுலாலனாலே அவையவியவையவங்களாகத்தோன்றப்பட் டதுகாண்கையினாலேசபக்கமென்ற மேலானமாயைகளினுந்தனுகரணாதிகள்நாலு ந்தோன்றுகைக்கு யோக்கியமுண்டாயிருக்கவு மதுகளைத்தோற்றுவிக்கைக்குஅந்த மாயைகள் செடமாகையாலவற்றைத்தோற்று விக்கமாட்டாதாகையா லந்தத்தனு கரணாதிகளை யவையவியவையவம் பொருந்தக் காரியபபடுத்தி த்தோற்றுவித்தா னொரு கத்தாவுண்டென்றறியப் படுங் குலாலனைப்போல் வின்னுமவனுடையசத்தி சாமர்த்தியத்தையு மறிவின்பெருமையையு மறிவிப்போனாகச்சிவனுடையவிக்கிரக மென்றுசொல்லப்பட்டவுருவம் நாலுமுபயமொன்றுமாகியவஞ்சு விக்கிரகங்களை யுமிருளற்றுஞானசொரூபமாகியிருக்கப்பட்டசிவஞ்-சத்தி-நாதம்-விந்து - என்னும ருவமாகிய விக்கிரகங்கள் நாலையும், ஆக. ஒன்பதுவிக்கிரகங்களையுங் கா ரி ய ரூபமாகப்பண்ணினானுமந்தச் சரீரியல்லாத பரமசிவனே யெனவறிக, அப்படியா கில்சரீரமில்லாதபரமசிவனே யெல்லாவற்றையுஞ்செய்வானாகிற்சரீரிகளான அதி காரகத்தாக்களிருக்கவேண்டு வானேன் அவர்களாற் பயனில்லையேவென்னில் உ டலிலியுமென்றவும்மையாற் சரீரமில்லாத பரமகத்தாவாலுமவன்னுக்கிரகத்தைக் கொண்டசரீரமுள்ள அதிகாரகத்தாக்களாலும் விசுவம்பலம்படும். எ- று

இந்தநூலில் வாராதபொருள்களெல்லாம் விரித்துக்கூறியது மற்றும்விரிந்ததமி

ந்த்சாத்திரங்களிலுமாகமங்களிலுங் கண்டுவிரித்துக்கூறிய தெனக்கொள்க, சித்தி டார்சபக்ஷத்தில் வித்தைகள்வித்தை யீசர்சதாசிவனொன்றிவர்க்கு, வைத்துறும்பத ந்தகள்வன்னம்புவனங்கண் மந்திரங்க, டத்துவஞ் சரீரம்போகங் கரணங்கடாமெ லாமு, முய்த்திடும்வயிந்தவந்தானுபாதானமாகின்றே. எனவும்-பரபக்ஷத்திற்புத் தன்மாத்தமிகன்மதத்தில். அவையவம்பொருளாய்த்தோன்றும்அவையவமழிந்தா ற்பின்னை, யிவை பொருளென்ன வேறொன்றிலாமையாற் பொருள்களின்றும், அ வைபொருளிலாமையாலே யறிவு மின்றாகுமென்று, நவைதருமொழியினாலேநவி லு மாத்தமிகன்றானே- எனவும். கருவிதனித்தனியேகாணுயிர்கட்கெல்லாம்புரமுட லார்தங்கும்பொழுது- எனப்பதி- பசுபாசவியலில்திருவுளம்பற்றியதுங்கண்டுகொ ள்க, இன்னுங்காட்டின்விரியும். (எச)

ஆயாமமறைபொழுதிலறைந்தவனுபாடணத்தாற் ❊
றேயாருமனுமானவிதமூன்றினுறத்தெருளத் ❊
தாயானையனைத்துயிர்க்குந்தற்பரனைச்சிற்கனனை ❊
சேயாருநெஞ்சினர்க்குநிறையுறவேநிகழ்த்தினமே ❊

எ- து பிராணயாமவிதிசொல்லுகையிலேபிரசங்காப் பிரசங்கமாகிய அனுபா டணமானதுசொல்லத்தக்க சத்திபொருந்துகையாலே விளக்கம்பொருந்தினஅனு மானவிதமூன்றினாலும்பொருந்தியறியச் சருவான்மாக்களுக்கு மாதரவாகவிருக் கப்பட்ட மேலான பரமசிவனை ஞானசோரூபனை நேசம்பொருந்தின புத்தியையு டையவர்களுக்கு ஏற்றக்குறைவு வராமனிறை பொருந்தவே சொல்லாநின்றோம். எ- று. [எரு]

பிராணயாமஞ்செய்தற்குமாத்திரையுத்தமாதிபே
தத்தால்மூவிதமென்றுணர்த்துகின்றார்.
வேறு

கைத்தலத்தாலேசானுப்புரிவலங்கணிக்கவீரெட் ❊
டத்தொகையனைத்துமொன்றேயாகுமாத்திரையாயாமத் ❊
துத்தமநாற்பத்தெட்டாமொருபதுமிரண்டுநீச ❊
மத்திமமெண்மூன்றுங்கைநொடியுமாத்திரைமாட்டார்க்கே ❊

எ - து இடதுகையினாலே யிடதுமுழந்தாளைப்பதினாறுதரஞ் சுற்றியெண்

ணில் ஒருமாத்திரையெனப்பெறும், அந்தமாத்திரைகொண்டு நாற்பத்தெட்டுப்ப
ண்ணுவது உத்தமப்பிராணாயாமம், இருபத்துநாலுபண்ணுவது மத்திமம், பன்னி
ரண்டுபண்ணுவது கனிட்டம், இவ்வாறுசெய்யமாட்டாதார் முற்கூறியவெண்ணிக்
கையிலேகைநொடிமாத்திரையாலுத்தமமாதிபேதத்தாற்செய்க. எ-று (எகூ)

குசைநுனித்தீர்த்தபானத்தாலுண்டாயவிசிட்டமு
ம்பிராணாயாமவிசேடமுமுணர்த்துகின்றார்.

குசைநுநிநீரைநாளுங் குடித்திடவிடைவிடாதே *
தசதசவருடங்கூடத்தங்கியபலத்தைச்சார்வார் *
இசைவுடன்பிராணாயாமமியற்றினொருகால்விண்ணில் *
அசைவறவிருக்கயாகமனைத்தையுமியற்றினாரே *

எ - து யாதாமொருவரனுட்டானஞ்செய்தமுடிவிலே யொருமாதநாடோ
றுங்குசைநுனியின்விழுகிற செலத்தைவலதுகையினாலேபானம்பண்ணினவர் நூ
றுவருஷம்பிராணாயாமம்பண்ணினபலத்தைப்பொருந்துவர், சொன்னபடியே பி
ராணாயாமம்பண்ணினபலத்தை யாதொருவரொருக்காற்பண்ணிலவர்கள் தபசு
யாகந் தானம் விரதஞ் சிவதீர்த்தம் இவைகளாலுண்டாகும்பலங்களையும் பெற்
றுச்சுவர்க்கத்திற்பொருந்தியிருப்பர்கள். எ - று (எஎ)

பிரத்தியாகாரத்தையுமதனாற்பெறும்பலத்தையுமு
ணர்த்துகின்றார்.

மனத்தையும்விடையந்தன்னின்மறித்துளேயடக்கிவைத்துப் *
பினைச்சவியாமைசெய்கைபிரத்தியாகாரம்வேதத் *
தெனைத்துளயாகபேதமனைத்தையுமியற்றினார்கள் *
மனத்தையுமறித்தமைந்தரவர்சிவபுரத்துள்வாழ்வார் *

எ - து மனதும்விடையங்களும் போகங்களைப்பொசிக்கவந்தவிடத்தும்மி
ருந்தபசிவந்தவிடத்துமதனிடத்துச்செலுத்தாமலாமையானதெப்படிதனதங்கங்
களைபுள்ளேயடக்கிக்கொள்ளுமதுபோலத்தானுஞ்சலியாமல்மனத்தைநிறுத்துவ
துபிரத்தியாகாரம், யாதாமொருவரிதனைநாடோறுமியற்றுகிறாரவர் வேதத்திலே
கூறுகிறயாகபலமெத்தனையுண்டத்தனையுஞ் செய்தார்கள். அடைந்தபலத்தைச்சி
வலோகத்திலிருந்துபொசிப்பர்கள் எ - று (எஅ)

தாரணையுமதனாற்பெறும்பலமுமுணர்த்துகின்றார்.

நசையுடனிதையப்போதினாட்டியபொருளிற்சித்த *
மசைவறநிறுத்தருனேதாரணமதனைச்செய்தார் *
கசிவுறுமூவேழ்சுற்றங்கடுநரகதனின்மீட்டு *
மிசையுறுசிவலோகத்துளிருப்பரோவிருப்பமிக்கே *

எ - து ஆசையுடனே மூலாதாரமுதலியதானங்களிலங்கங்கேபார்க்கக்கடவியபொருள்களைக்குறித்துமேலேமேலேபோய்த்தான் வேண்டியபொருளில் நிறுத்துதல் தாரணையெனப்பெறும், இப்படியாதாமொருவர் நாடோறுமிதனைச்செயினிரங்குகின்றதனது குலத்திலிருபத்தொருதலைமுறைமையுள்ளாராகியவெவ்விய நரகத்தின்கட்கிடந்தாரையெடுத்து மேலாகியசிவலோகத்தின்கணுண்டான போகங்களைமிகுந்த வாசையுடன்பொசித்துஅவர்களுடனிருப்பர். எ - று (௭௧)

தியானஞ்செய்யுமுறைமையும்பலமுமுணர்த்துகின்றார்

ஆற்றிடைப்புனருனெற்றேயவிச்சினமாகவோடன் *
மாற்றறவற்றேயீசன்மலர்ப்பதத்தறிவைவைத்துக் *
கேற்றுறநிற்கைதானேதியானமித்தியானஞ்செய்தார் *
மாற்றியேநரகிற்சுற்றமவர்களைப்போலவாழ்வார் *

எ - து ஆற்றின்கணிடைவிடாமற்செலமானதெப்படியோடுகிறதப்படியேதான் கருதினபொருளையிடைவிடாமற் றியானஞ்செய்திருத்தலே தியானயோகம், இந்தத்தியானயோகத்தையாதொருவர்செய்யின்அவருடையசுற்றத்தாரெல்லாரையும் நரகத்தின்கண்ணெடுத்துச் சிவலோகத்திருத்தித்தனதுதேகத்தைவிட்டவராப் போன்றிருப்பர் எ - று

[அ௰]

இனிமந்திரஞ்செபிக்குமுறையுணர்த்துகின்றார்

மானதமந்தமற்றைப்பாடிதவசனமென்றாத் *
தானொருமூன்றுஞ்சாற்றுமந்திரந்தகைமைசார்ந்த *
மானதமனத்தினாலேமந்திரிப்பதுவேவாய்க்க *
வேனையமந்தஞ்சற்றேபிதமுறாபியம்பருனே *

எ - து வெளி. பாடிதம் - எ - து சொல்லல்

(அ௧)

இதுவுமது

அருகிருந்தவர்தாங்கேட்கவறைதல்பாடணமேயாதி *
திருவுருக்கருதிச்செப்பிற்சிறப்புடைத்தெல்லாந்தூல *
வுரைதனிற்சிறப்பேமந்தவுரையதுதன்னிற்சாலப் *
பெருமையையுடைத்தேநெஞ்சிற்பேசிடாப்பேச்சுத்தானே *

எ - து வெளி ஆதிதிருவுருக்கருதிச்செப்பவென்பதனை முற்றுங்கூட்டுக (அஉ)

மந்திரங்களையுச்சரிக்குமிடத்துஉச்சாரணபேதமு
ணர்த்துகின்றார்

உற்றிடுமுயிரொவ்வொன்றேயுயர்ந்துயர்ந்தொருமூன்றாகு *
மற்றையவுன்னதாதிகூடலுமொன்பான்வாய்க்கும் *
பற்றிடநாசிநீங்கப்பத்துடனெட்டாமீரா *
றுற்றிடுமுயிருமோர்ந்துச்சரிக்கவேபலிக்குமோதில் *

எ - து அகாராதியாயிருக்கிற உயிரொழுத்துத்தனித்தனி யுச்சரிக்குமிடத்து ஒவ்வொன்று மும்மூன்று பேதப்படும், அஃதாவது உயரவுச்சரிக்கிறது உதாத்தமென்றுந், தாழவுச்சரிக்கிறது அனுதாத்தமென்றுஞ், சமமாயுச்சரிக்கிறது- சொரிதமென்று, மிப்படிமூவிதமாம். இந்த மூவிதமும் ஒவ்வொன்று மும்மூன்றாக ஒன்பது பேதமாம், அஃதாவது ஒருமாத்திரைகொண்டது இலகுவென்றும், இரண்டு மாத்திரை கொண்டதுகுருவென்று,மூன்று மாத்திரைகொண்டது புலுதமென்றும் இப்படி யுதாத்தமூன்று மனுதாத்தமூன்றுஞ் சொரிதமூன்றுமாக ஒன்பதாம்,இந்தவொன்பதையும் நாசியைக்கூட்டி யுச்சரிக்குமிடத்து சானு நாசிகமெனப்பெயர் பெறும், நாசி கைகூடாமலுச்சரிக்கும்போது நிரனுநாசிகமெனப்பேர்பெற்றிப்படிப்பதினெட்டுப்பேதமாம்அகரமுதலிய வுயிரொழுத்துப் பதினாறுள் அலியெழுத்து நாலு நீக்கி நினறபன்னிரண்டுயிரொழுத்துஞ் செபகாலத்திலே யந்தந்த மந்திரத்துப்பிரயோகத்துக்கேடாகவறிந்துச் சரிக்கில் மந்திர சித்திவரும். எ று [அங]

இப்படிமந்திரத்தின் விதியறிந்துச்சரிக்குமவர்களை
துமகிமையையுணர்த்துகின்றார்

கூ.ரு.அ

அந்தரத்தியங்கவல்லவசுரருமணுகமாட்டார் ❋
சித்தியசித்தக்கொத்தைப்பேய்களுந்தீண்டமாட்டா ❋
செந்தழலென்னவஞ்சித்தியவாயரவுந்தீண்டா ❋
மந்திரநவிற்றுவானைமறலியுமஞ்சுமன்றே ❋

எ - து முற்கூறிய விதியையறிந்துமந்திரமுச் சரிக்குமவர்களை யாகாசத்தி லேசஞ்சரிக்குமிராக்ஷதர்களுங் கிட்டமாட்டார்கள், நாலுவிதமாகிய சித்தத்தை யுடையவறிவில்லாதபேயகளுந்தீண்டமாட்டா, பொல்லாதவிடம் பொருந்தியவா வினையுடையபாம்புகளுஞ்சிவந்த அக்கினியெனப்பயந்து தீண்டமாட்டா, இஃதன்றியெல்லாரையும் வாதைபண்ணுமியமராசனுமணுகமாட்டான் பயப்படுவன். (அச)

எ - று

இதுவுமது.

வினைகளுமஞ்சும்வெய்யவினைஞருமஞ்சுவார்க ❋
ளினைவினிலிட்டமெல்லாமவர்க்கொருகணத்தினேருந் ❋
துனையவேசுழன்றுபோகுந்துட்டசார்த்தூலமற்று ❋
மனிதருணல்லாரேயோவமரரும்வாஞ்சிப்பாரே ❋

எ - து வெளி - துனைவு - விரைவு - சார்த்தூலம் - புலி [அரு]
சகற்பசெபஞ்செய்யுமவர்கள்பெறும்பயனுணர்த்துகின்றார்.

பரமனையொருமைகூரப்பாவனைபண்ணியுள்ளே ❋
யுரைதனிலதிகநூனமொழியவேவிதியினேர்நிப் ❋
பரவிடும்பத்தர்முன்னைப்பாவமும்பறிப்பன்வேண்டும் ❋
வரமெலாங்கொடுப்பன்வள்ளன்முத்தியுமவர்க்கேவாய்க்கும் ❋

எ - து கேலானசிவனை மிகுந்தவொருமைப்பாட்டுடனே மனதின்கட்டியா னம்பண்ணியம்மந்திரத்தையேற்றக்குறைவின்றியேவிதிப்படியுச்சரித்துத்தோத்தி ரம்பண்ணும்பத்தர்களது முற்செனனத்திலார்ச்சித்தபாவத்தையுந்தீர்ப்பன், அவ ர்கள்வேண்டும்வரத்தினையுமிம்மையிற்கொடுப்பன், மோக்ஷமுமவர்களுக்கேசித் தியாம். எ - று முன்னைப்பாவமுமென்றவும்மை எதிரதுதழீ இயவெச்சம் பத் தர்கள்வேண்டும் வரங்களைக்கொடுத்தலால் வள்ளலெனச்சிறப்பித்தார். வள்ளல் எ- து எழுவாய். கொடுப்பன் எ - து பயனிலை (அசு)

சமாதியினிலக்கணங்கூறுகின்றார்.

பொருளெனுமாத்திரத்தாய்ப்புலனிறந்திரவிகண்ணுக் *
கிருளறுத்திலங்கலென்னவெண்ணகத்திலங்கியெங்குந் *
நிரையறவுததியெல்லாந்தேங்கல்போல்விம்மிச்சித்தங் *
கருதுருவல்லாமூலங்கண்டிரண்டறல்சமாதி *

எ - து உண்மைப்பொருண்மாத்திரத்தாய்க் கருவிகரணாதிகளுடன் கூடாமலாதித்தியப்பிரகாசங்கண்ணினிடத்திருளைப்போக்கிப்பிரகாசித்தல்போலவிவன் கருதப்பட்டநினைவுள்ளேபிரகாசித்து ஆரவாரிக்கும் அலைகளற்றசமுத்திரமெல்லாவிடங்களினுநிறைதல்போல நிறைந்துபொலிந்துசித்தத்தாற் கருதமுருவமல்லாதவெல்லாவற்றுக்குங்காரணமானசிவத்தைத்தெரிசித்திரண்டற்றிருப்பதே சமாதி எ - று (அஎ)

சமாதிசித்தியாதார்க்குபாயமுணர்த்துகின்றார்

இடையினுமியங்கிடாதேபிங்கலைதனினும்வாயு *
நடுவுளைநாடிதன்னிடைக்குமேற்சமாதிவாய்க்குந் *
திடமுடைச்சிலையேயென்னச்சித்திரமெனவிருப்பர் *
விடையமுமுணராரந்தக்கரணமும்வேறுபட்டே *

எ- து யாதாமொருவர்சமாதியைப்புரியுமிடத்து ப்பிராணவாயுவானதுஇடையினும்பிங்கலையினுமோடாமற் சுழிமுனைநாடியின்கணடக்குமிடத்து விடையத்தின்கட்சித்தத்தைவையாமலந்தக் கரணங்களும் பசுகரணத்தைப் பொருந்தாமற்சிவகரணங்களாய்க்கடினத்தையுடைய கல்லெனவுஞ்சித்திரமெனவுமிருந்து சமாதிபுரிவராயின் அவர்களுக்கேயச்சமாதி சித்தியாம். எ- று. [அஅ]

சமாதியடைந்தோர்நன்மையுணர்த்துகின்றார்

அட்டமாசித்தியென்றவணிமாதியவர்க்கேயாகு *
மிட்டமாஞ்சந்தோபேதமியற்றவும்வல்லரொன்னின் *
முட்டறவேதமாதிமொழியவும்வல்லர்நல்ல *
துட்டியாற்சமாதிதன்னிற்றூங்கியதூயோர்தாமே *

எ- து. நல்லசந்தோஷமாகியசமாதியைப்பொருந்திய மகாத்மாக்களாரேரிட்

டமாயிருக்கிற உத்தைமுதலிய சந்தசுவிருபத்தாறு பேதங்களையுஞ் சொல்லவல்ல ராவர்கள், அஃதன்றிவிசாரிக்குமிடத்து வேதாகம புராணங்க ளனைத்தையு முடிவு போகஓதவும் வல்லராவர்கள், அவர்களுக்கேஅணிமாமுதலியவட்டமாசித்தியும்வந் தடைகூடும். எ- று.

புத்திகாரியமாதலாற்றுட்டியெனச்சிறப்பித்தார் (அக)

முன்னர்த்தொகுத்துப் போந்த அட்டமாசித்தியினது விலக்கணமீ தென்றுணர்த்துகின்றார்

வேறு

அணுவினுநுண்ணுருவுகொள லணிமாவாழளற்றி னதிவேகத்தியங்கி யுந்தோய்வற்றவுடலகிமாத், திணியபெருவலாயெனமெய்ச் சிறப்புறுகைம கிமாச்சிந்தித்தபலமெவையுஞ்செறிந்துறுகைபிராத்தி, பிணைவிழியாராயிர வரொடும்புணர்ச்சிபெறுகைபிராகாமியீசிதைமாவலியுமடி பேணன், மணம லர்போலெவராலும்வாஞ்சிக்கப்படுகைவசிவசிதைவலியாராற்றடுப்பரியவா ழ்வே

எ- து. அணிமாவென்னுஞ்சித்தியாவதுபரமாவணுவைப்பற்ற அதிசூக்குமவடி வையெடுப்பது, லகிமாவாவதுமகத்தாகிய வேகத்துடனே சேற்றுக்குள்ளேயழுந் தியிருந்தும்பிள்ளைபூச்சியைப்போற் சேறுபடாமலெழுந்திருப்பது, மகிமாவாவது கடினமானபெரியமலைபோலவடிவையெடுத்தல், பிராத்தியாவதுதான்யாதொருரூ பங்களைக்கொள்ளவேணுமென்றுமனதிலேநினைத்தாலந்தந்தரூபங்களுமாயந்தந்த ப்போகத்தைப்பொசித்திருத்தல், பிராகாமியமாவது, மாயனேககாலத்திலெப்ப டிபதினாறாயிரங்கோபாலத்திரிகளைக் கூடியவர்க்கவராயிருந்தாரதுபோல ஆயிரந் திரிகளையேககாலத்திலே கூடியிருந்தனுபவித்தல், ஈசத்துவமாவது, சகலதேவர் களையுந்தன்னுக்கினை யாண்டப்பித்துக்கொள்ளுமது, வசித்துவமாவது, தன்னை யாவராலுமணததையுடையபுட்பமானதெப்படி வாஞ்சிக்கப்படுவது அப்படிப் போற்சகலலோகங்களையுந் தன்வசமாக்குவது, வசிதையாவதுஇவனுடையபெல த்தைமிகுந்தபெலவான்களாலுந்தடுக்கப்படாமலிருத்தல். எ - று (கூ௨)

சமாதியையடைந்தவர்சிறப்பும்பெறும்பயனுமுண ர்த்துகின்றார்.

வேறு

அடைந்திடுஞ்சமாதியாளர்க்கமரருஞ்சிறப்புசெய்வார் *
திடம்படுசித்தத்தாலேயவற்றினைத்தீண்டாதார்க்கு *
நடம்பயிலுதன்வேண்டும்வரத்தினைநல்கியென்று *
முடன்பிரியாதபேறுமுதவுவன்கருணையுற்றே *

எ - து சமாதியையடைந்தவர்களுக்குத்தேவர்களுஞ்சிறப்பைச் செய்வார்கள், திடமானசித்தத்தினாலந்த அட்டமாசித்தியை யபேட்சியாதபேர்களுக்கு நடனஞ்செய்யுஞ்சிவபெருமான் கருணைபொருந்தி விரும்பியவரங்களைக் கொடுத்தெக்காலமுந்தன்னிடத்தினின்று நீங்காதமுத்தியையுங்கொடுப்பன். எ - று

இதற்குத்தேவிகாலோத்தரத்தில் ✠ அட்டமாசித்திமுதலென்னுங்கவியாற் காண்க. (௧௧)

பிராணயாமமுதலியவற்றையுத்தரோத்தரவிசிட்ட
முணர்த்துகின்றார்,

அதிகமாயாமந்தன்னிலறுவரையடக்குமாற்றால் *
அதிகமேயதனிலுக்கைமனத்தினையனகன்பாதத் *
தநிகமேயதனிற்சித்தத்தவிச்சினத்தியானமம்ம *
வதிகமேயதனினுள்ளத்தரனைவைத்தறையும்வாக்கே *

எ-து காமக்குரோதாதிகளின்வழிச்செல்லாமனிறுத்துமதனைப்பற்றப் பிராணயாமமதிகம்அந்தப்பிராணயாமம்பன்னிரண்டுகொண்டதுஒருதாரணைஅந்தத்தாரணைபத்துக்கொண்டதுகாலமிடைவிடாமற்சிவத்தியானஞ்செய்வது-அதனைப்பற்றவும்பன்னிரண்டுகொண்டது சமாதியென்று இப்படிக்காலவரையறுத்து வேதாகமங்கள் சொல்லுமிதனைக்கேட்பாயாக. எ -று அம்ம - எ - து வுரையசை (௧௨)

தேவிகாலோத்தரம் - ருசும் - கவி

✠ அட்டமாசித்திமுதலனைத்துள்ளபேறுகளுங் o
கட்டமாங்கதிகடரும்பரகதிகாணக்கொடா o
மட்டுலாமாலையாய்வியர்பகமாயறிவாகிக் o
கிட்டலாகாமுத்திமற்றிவற்றாற்கிடையாதே o

சிவதருமோத்தரவுரை

செபத்தியானமுமிவற்றாற்பெறும்பலமுமொன்றுக்
கொன்றதிகமென்றுணர்த்துகின்றார்.

வாக்கினுமதிகமூலவாக்கினுமனத்தினாலு ❋
சொக்கநம்பொருளைத்தன்னுளுணர்கமதாகத்துகிட்டை ❋
கொக்கிடற்பலங்கடானுநுவன்றவிம்முறையானேன்மை ❋
யாக்குவனவற்றையெல்லாமன்பருக்கருளுமுத்தன் ❋

எ - து மூலவாக்காகியவைகரிவாக்காயுச்சரிக்குமதனைப் பற்றமந்தவொலி யாய்மந்திரத்தையுச்சரிப்பதுவிசிட்டம்-அதனிலுமானதுசெபம்விசிட்டம் அதனிலு ம்வன்னரூபங்களுடன் மூர்த்தியை மனத்தாற்றியானித்தலதிகம்,அந்தத்தியானத் தைப் பற்றவதற்குமேலாகிய சமாதியைப்பாராதேபார்க்குமது விசிட்டமுற்கூறி யசெபமுதலாயின பலன்களையடியார்க்கு அருளுமுத்தனாகியசிவன் கிரமத்தினு லெய்தித்து அதற்கதற்கேற்றபலன்களைக்கொடாநிற்பன். எ - று

எண்மூலவாக்கென்றது ✠ வைகரிவாக்கெனவறிக. (கூ௩)

இதன்மேற்சிவயோகத்தானிட்டையடைந்தார் பெ
றும்பலமுணர்த்துகின்றார்.

வேறு

சிலரோணயோகர்திடமாகமேனிசிவலோகராகமென்வே ❋
பலகாலம்வாழ்வர்படிநீதியாள்வர்பசுபாசநாசமுறவே ❋
நிலனிறுமாயவருகாலமேயநிகழ்வாயகாயமறவே ❋
மலமாசுமாயவமலேசர்பாதமலர்சூடிவாழ்வர்மகிழ்வால் ❋

எ - து சிவயோகத்தானிட்டை யடைந்தஞானயோகர் ,சிலர்சிவலோகத்திலச் சிவனுடைய சகளமானதிருமேனிபோலச் சித்திபெற்றுப்பலகாலம் வாழ்ந்துலக மெல்லாநீதிமுறைமையுடையராயச் சார்புப்பற்றிவரும் பசுபாசங்களுசத்தைப் பொருந்தச்சஞ்சரித்திருந்து சருவசங்காரகாலத்தின்மலக்குற்ற நீங்கவும்நிகழு

✠ வைகரிவாக்கானது, உதானவாயுவைக்கூடின பிராணவாயுத்தன்னோடு கூடிவந்தவுசனசூக்குமைமுதலாயுள்ளவாக்குக்களைச்செவியின் பகுதியிலேகேட் கநின்றபொருள்களையறிவியாநிற்கும், இதுதனக்கும்பிறர்க்குங்கேட்க வுச்சத் தல்.

ஞ்சரீரமாறவும் பரமசிவன்பாதமலரை நிரதிசயானந்தத்துடன்பொருந்திவாழ்வர். எ று [௧௪]

இனியிப்படிப்பட்டசிவயோகிகளைவழிபட்டவடியார்பெறும்பயனுணர்த்துகின்றார்.

அறுமாசைகோபமவைநாசமாகவறுமேறுபாவமறலு
மறவேசெய்பாவமறனாகமாயுமதுமாயமாயையகலு
மறமாயைதானுமகமாயைதீருமதுதீரமூலமலமு
மறமூலநோயுமமலேசர்பாதமடைவார்கள்யோகரடியார்

எ- து முன்சொல்லப்பட்ட ஞானயோகிகள் அடியாரானவர்கள் ஞானவான்களுக்குத்திருவுளத்துக்குவரவே பணிவிடைசெய்கையாற் பரமசிவன் அவர்களுக்குக்காமக்குரோதலோபமோகமதமாச்சரியமாகிய வறுவகைப்பொல்லாப்புமடாதபடிநீக்கிவிடும், விடவேஆகாமியங்கள்வந்தேறாது- ஆகாமியமேறாதேபோய்விடவேஅந்தஞானிகள் தருமருணைக்காலே யறுதியேசெய்த வளவற்றசஞ்சித கன்மங்களுங்கெடுங். கெட்டுப்போகவேசரீரமுமாய்ந்துபோமந்தச் சரீரமெடாமற்கன்மமுமாயாகாரியமானசரீரமுங் கெட்டுப்போம் போகவேயசுத்தமாயையுமகலும் அசுத்தமாயையகலவே சுத்தமாயைக்குள்ளீடாக அசுத்தமாயாகாரியங்களைச் செலுத்தாநிற்குஞ் சூக்குமை முதலான வாக்குகளடங்கும். அடங்கவேசுத்தமாயையடங்கும்அந்தச்சுத்தமாயையுந்தீரவே மூலமலமுமற்றுப்போம். அந்தமூலமலமாகியநோயுமற்றுவிடவே நின்மலனாகியபரமசிவன் பாதத்தை யடைவார்கள். எ- று (௧௫)

இனிச்சிவன்சிவசத்திப்பிரசங்கம்வந்ததோடே யான்மா வான்மசத்திப்பிரசங்கமுணர்த்துகின்றார்

வேறு

சிவன்றனக்கவனியந்தஞ்செகமநிதூலதேகம்
அவனுடற்றூலமாறாருருயிர்வர்க்கஞ்சூக்கம்
பவன்றனக்குயிர்க்குமப்பாற்பராபரைபரமசூக்கம்
அவன்சிவன்பரமசத்திதனையனுபவிப்பனார்ந்தே

எ- து பரமசிவனுக்குநாததத்துவமுதலாகப் பிருதிவி தத்துவமந்தமாகமுப்பத்தாறுதத்துவங்களினுண்டாகிய வளவிறந்தவண்டங்களும் புவனங்களுமளவற்ற

ஆன்மாக்களுடைய தூலதேகங்களுமிவையெல்லா மதிதூலதேகமாயிருக்கும் அந்தச்சிவனுக்குத் தூலதேகமாவதுமுப்பத்தாறுதத்துவங்களுமாயிருக்கும் அளவற்றவான்மசொரூபங்களெல்லா மந்தச்சிவனுக்குச் சூக்குமதேகமாயிருக்கும்- அந்தவான்மசொரூபங்களுக்கு மேற்பட்டிருக்கப்பட்ட மேலான பரமசத்தியானதுஆன்மாக்கள்சொரூபந்தன்னிலு நுண்ணிதாய்ப்பரமசூக்குமமாயிருக்கும்- அந்தச்சிவன்றன்னுடையபராசத்தியுடைய பேரின்பத்தை யனுபவித்துக்கொண்டிருப்பன் (கூகூ)

ச- அ.

இதுவுமது

பாரியைப்பரர்கண்பார்வைப்படாப்பதிவிரதைதன்னை *
யாரியமுணர்ந்தகாந்தனவடனைத்திளைப்பனுர்ந்தே *
பாரியைப்பரர்கண்பார்வைப்படாப்பராசத்திதன்னை *
யாரியனனுதிமுத்தனவடனைத்திளைப்பனுர்ந்தே *

எ - து ஆன்மசத்தியாகிய அந்தந்தவான்மாவுக்கே வுரித்தாய்ப் பிறரிடத்துச்செல்லாது பதிவிரதையாகவேயிருக்கப்பட்ட சத்திதன்னை, வடமொழியாகிய வாகமங்களை நன்றுயாராய்ந்து ஞானியான புருஷனுனவன் மலத்திரையங்களுநீங்கிச்சாயுச்சியத்தைப்பெற்றபோது பொருந்திக்களங்கமற்ற வின்பத்தையனுபவிப்பான்திப்பன், இனிபனுதிமுத்தனுகவிருக்கப்பட்ட பரமசிவனுந்தன்னைவிட்டு நீங்காதிருக்கப்பட்ட பராசத்திபேரின்பத்தைப் பொருந்தியனுபவியாநிற்பன் எ - று [கஎ]

ஆன்மாவானவன்மலநீங்கினுற்றற்சொரூபந்தானே
யின்பமா மெனத் தன்னைத்தானி ச்சித்தாலின்பமு
ண்டாகாதுஆன்மசத்தியின்பமே யாமென்றுவமை
முகத்தாலருளிச்செய்கிறுர்

மண்டலத்தவருமற்றையவர்களும்வாஞ்சைசெய்தே *
பொண்டொடியாரையின்பமுறுவரோயவர்தோளொன்றிக் *
கண்டிலந்தம்மைத்தாமேகாமுறல்களிப்பார்தங்கள் *
எண்டனக்கெட்டானிச்சித்திறைவியைத்திளைக்குமென்றும் *

எ - து தெசத்திலுள்ளவர்களுமற்றத்தேவர்கள் முதலோருமாசைப்பட்டுப் பெண்ணைப்புணர்ந்தே யின்பமுறுவர்கள்,அப்படியின்றித் தன்னைத் தானிச்சித்தின்

பம்பொருந்தினவர்களாகக்காணும், அதுபொல ஆன்மாக்களானவர்களறிவுகளுக்கெட்டாத பரமசிவன் தனதுபராசத்தியின்பத்தையனுபவிப்பன், ஆதலாலான்மாக்களுடைய சத்திமலத்தை நீங்கினசாயுச்சியத்தியேயான்மாவானவன் தன்சத்தியின்பத்தையனுபவிப்பன் எ று (௧௮)

சிவனுஞ்சத்தியுமான்மாக்களுக்கு மாதா பிதாவெ
ன்பதனையுணர்த்துகின்றார்

அணுக்களையவர்க்குமைந்தரன்னையுமத்தன்றானு *
மணுக்களுக்கார்வங்கூர்ந்தேயணுக்கடன்சத்தியோடே *
யணுக்களைப்புணர்ப்பர்சத்திப்பருவமுமறிந்துதாமே *
யணுக்கடஞ்சத்திதன்னைத்தெளிப்பரஞ்சனமுமற்றே *

எ - து ஆன்மாக்களே யச்சிவபெருமானார்க்குமைந்தர்கள், அவர்கட்குமாதாவும்பிதாவுமாகிய சிவபெருமானாரும் அவ்வான்மாக்களிடத்துவிருப்பமிகுந்தவ்வான்மாக்களது சத்தியுடனே அவ்வான்மாக்களைச் சத்தியினது பருவங்களையுமறிந்துதாமேபுணருதலைச்செய்வர், அதனால் அவ்வான்மாக்கள் தங்கள் சத்தியைமலநீங்கியனுபவிப்பர்கள் எ று [௧௧]

இச்சிறப்பினையுடைய சிவதெரிசனப்பட்டவர்கள்
முறைமையையுணர்த்துகின்றார்

அநாதியேயமலன்றன்னையகன்மனைக்காண்பரன்ப *
ரநாதியபசுபாசத்தையறுத்தவனருளினாலே *
யநாதியேயமலன்கன்மமாயனுபவிப்பரென்ப *
ரநாதியபசுபாசத்தையறுத்திலாரறிவிலாரே *

எ - து அன்பரானஆன்மாக்கள் சிவனதருளினாலனாதியான பசுபாசங்களைப்போக்கியனாதியேநின்மலனானசிவனைத் தனதுள்ளத்தே தெரிசிப்பர், அறிவில்லாதஆன்மாக்கள்அநாதியாய்வரப்படாநின்ற பசுபாசத்தை யவனதருளாற்போக்கிக்கொள்ளமாட்டாமலவனிடத்துக்கலந்திருந்தும் அவனேசெய்விக்கிறானென்னாமறிவையிழந்துயான்செய்தேன் பிறர்செய்தாரென்னுந் தற்போதத்தால்வருங்கன்மத்தையனுபவித்தற் பொருட்டு இறந்துபிறந்து திரிவார்களென்றுசொல்லுவர்பெரியோர். எ- று (௧)

தூலசரீரமுதலாகவொன்றுக்கொன்று மறியாதென்பதனையுமாண
வநோய்போனவிடத்து ஆன்மாச்சிவதெரிசனப் படுமென்பதனையு
முணர்த்துகின்றார்

நோக்குமோ தூலவாக்கைநுண்டனுவதனைத் தூல
நோக்குநுண்டனுவுந்தன்னைநோக்குமோமீதுமாக்கை
நோக்குமாருயிருந்தன்னைநோக்குமோமீதுமெல்லா
நோக்குநின்மலனைநோக்குநோக்கறத்தனையுநோய்போய் (௩௧)

எ- து- வெளி- ஓகாரம்- எதிர்மறை

முற்கூறியசிவதெரிசனப்படுமதனைத்திட்டாந்தமிட்டுணர்த்துகின்றார்

ஆக்கையினாவியென்னவமலனாருயிரின்வாழ்வ
னேக்கிலர்மூலநோயால்நோலறிவடங்கிநோய்யார்
நோக்குவரமலன்மூலநோய்வலியடக்கப்பாகத்
தோக்கொளியுணர்வைச்சேர்ந்தாரொனலுபசாரத்தொன்றும்

எ- து சரீரத்திலான்மாவியாபித்திருக்கு மாறுபோல வந்தவான்மாவினிடத்தி லுஞ்சிவன் வியாபித்துநிற்பன், இங்ஙனம் வியாபித்திருக்குஞ் சிவனை யாணவமல மேலிட்டாவிச்சாஞானக்கிரியைகளாற்றடைபட்டுக் கிஞ்சிக்கினரானவர்கள்தெரி சிக்கமாட்டார்கள், பக்குவான்மாக்களுக்குப் பரமேசுரன் ஆணவமல சத்தியைக் கெடுத்துத்தானிரண்டறநிற்கு மதனைத்தெரிசிப்பிப்பன், இப்படிசிவதெரிசனப்பட் டபிரகாசத்தையுடைய வறிவைப்பொருந்தினார்களென்பது முன்னில்லாததையிப் பொதுசென்று கூடினார்களென்றதன்று கண்ணிற்காசம்போனவாறே கண்ணுக்கு மிகுந்தபிரகாசமுண்டானாற்போல, இவனுஞ் சிவனதுபிரகாசத்தைப் பொருந்தினா னென்பது. உபசாரம்- எ- று (௩௨)

அதற்கோர்திட்டாந்தமுணர்த்துகின்றார்.

இருட்டெலையிருந்தான்றுஞ்சாவினைவிழியொளியவ்வெல்லைப்
பொருட்டனைப்புணர்ந்துங்காணாதொளியுறிற்புதைந்துநின்ற
விருட்டறவுடலைக்காணுமேனையயாவுங்காணும்
பொருட்டனிற்புணர்ச்சிகண்டபொழுதெனப்புகல்வரோயோ

எ - து யாதாமொருவனிருட்டறையில் விழித்திருக்கிறவனுடைய கண்ணி ற்பிரகாசமான தவ்விடத்திலிருக்கும் பதார்த்தங்களுடனே சம்பந்தித்திருக்கைவி னுமறியான், பின்புதீபம்வந்து அந்தகாரத்தைப்போக்கவப்பொழுது தன்னுடைய சரீரத்தையுங்காணும்ஆண்டுள்ள பதார்த்தங்களையுங் காணுமதுபோல வான்மாவி னுடையசத்தியைத்தடைபடுத்தின மலமானதுசிவசத்தியினாலே நீங்கவதுநீங்கின

விடத்து ஆன்மதெரிசனமுண்டாம் அதற்குமேலருட்டெரிசனமுஞ் சிவதெரிசன முமுண்டாயதனுடனேகூடியிருப்பர். எ - று [௸௩]

ஆன்மாச்சிவனைக்கூடினனென்பதனையேகதேசியாமென்றுசங்கித் துஅதனைமறுக்கிறார்

கூடுதலேகதேசியெனுமிருபொருட்கேகூடு
மோடிவான்றேடிக்கூடுமவரொவருயிருளுனம்
வாடலுந்தன்னுண்மெய்யைநோக்கறநோக்குவானி
னீடொளிபடலநீங்கக்கண்டனினிகழுமன்றே

எ- து. ஆன்மாச்சிவனைக்கூடினனென்னி லேகதேசியுமாய்க் கடபடாதிகளைப் போலப்பிரிந்துஇரண்டுபொருளாய்விடும், அஃதெங்ஙனமென்னில் வியாபியாயிருக்கிறவாகாசத்தை விரைவிற்றேடிக்கூடுகிறேமென்கிறவனெவன்றான் சொல்லுவனுற்றுக்கூடுங்கூடுமென்றுசாத்திரஞ்சொல்லுகிறதெப்படியென்னிலான்மசத்தியைத்தடைபண்ணுமாணவமலம் அருளாற்போகவேயப்பொழுதுதற்சொரூபமும் விளங்கியதற்குமேலாகியபதிசொரூபத்தைப்பாராமற் பார்த்திருப்பதென்போலவென்னிலாகாசத்தில்விளங்காநின்றவாதித்தியகிரணமானதுமேகத்தினாலேதடைபட்டபோதுகாணாமலதுநீங்கினபோது அந்தப்பிரகாசமிவனுடைய கண்ணுக்குத்தோன்றுமாறுபோல. எ- று.

(௩௪)

பேதாபேதமென்பதனைமறுத்துஆன்மாச்சிவனு
டையவயிக்கத்தையுணர்த்துகின்றார்.

பேதமேலேகதேசிமுத்திபிற்பிரானுமேக
வாதமுமயக்கஞ்செம்புமலினநாசகனுமொன்றே
வாதலாலிரண்டுமல்லாவபேதமேயமலனாவி
வேதகருயிருங்கண்ணும்வேறெனாொன்றுமென்றார்

எ-து ஆன்மாவுஞ்சிவனும்பேதமென்றுநீசொல்லுவையாகில்,ஏகதேசியாய்விடுங்காணப்படியன்று, முத்திதிசையிலான்மாவுஞ் சிவனுமொன்றெ ன்னிலேகவாதமுமாய்மயக்கத்தையுங்கொடுத்துவிடுங்கா ணிப்படியானாற் குற்றம்யாதெனிற் - செம்புந்தன்னுடையகாளித்தத்தைப்போக்கு மிரதகுளிகையுமொன்றல்லவேயாகையினான்முற்கூறியவிரண்டுமின்றியான்மாவுஞ் சிவனுமபேதமாயேயிருக்குங்காண், வேதாகமங்களையுள்ளபடியறிந்த ஞாதாக்களான்மப்பிரகாசமுங் கண்ணினுடைய

பிரகாசமும் பொருந்தினவிடத்தவ் விரண்டையும்பிறித்து வேறென்றுமொ
ன்றுஞ்சொல்லார்கள். எ - று உம்மைபிறந்தது தழ்இய வெச்சம்

இங்ஙனங்கூறியமுத்தான்மாக்களிடத்துண்டாகிய
வாணவமலமவர்களைவாதைபண்ணுமனுசமுமடை
யாமனிற்குமென்றுணர்த்துகின்றார்

கடல்விடங்கொல்லுங்கண்டார்தம்மையுங்காலகாலன்
மிடறுறுங்கொல்லவல்லமிடலிலையெற்றேயற்றே
யடிபிணைசரணமென்றேயமலனையடைந்தார்தங்க
ணடல்வலியடங்கன்மூலமலத்தினுக்கழிவுமின்றே

எ - து தேவர்களமிர்தமதனம்பண்ணினவிடத்துண்டாகிய வாலகால
த்தையாதாமொருவர்கண்டார்களவர்களையுங்கொல்லு, மித்தன்மையையு ணை
விடங் காலனுக்குங்காலனாகியசிவனதுகண்டத்தில்வந்து பொருந்தியிருக்கவ
லாவாதியாதெப்படிதன்வலிகெட்டுநின்றது அப்படிப்பரமசிவனுடைய ஏப
தையடைந்தமுத்தான்மாக்களை மலசத்திவாதைபண்ணுமற்றுனுங் கெடாப
கும். எ - று உம்மை - உண்டானையுங்கொல்லுமென்னுமெச்சம் -
ங்களுக்குட்பிரதானமாதலால் மூலமலமெனச்சிறபபித்தார்.

அனாதியானவாணவமலசத்தி முத்தியிற்கெடுமென்றுசொல்லிலா
ன்மசத்திசிவசத்தியுங்கெடாதோவென்னக்கெடாதென்றுணர்த்து
கின்றார்

அடங்குமேலனாதிமூலமலவலியதனைப்போல
வடங்கிடுமனாதிமுத்தன்வலியணுவலியுமென்னி
லடங்கிடாதனாதிமுத்தன்சத்தியாற்றடுக்கும்பாச
மடங்குநுண்ணுக்கைநீங்கவணுவறிவதீத்தாசால்

எ- து. அனாதியாயிருக்கப்பட்டமூலமலமாகியவாணவமலத்தின்சத்தியா
சாயுச்சியத்தைப்பெற்ற வான்மாக்களுக்கு ஆணவசத்தி யடங்குமென்றதுஆன
மலமொன்றுயிருக்கையிலேயுமவர்களை மறைக்கிறதுதனித்தனிசத்தியாகமறை
க்குமாகையா லந்தந்தச்சத்திமாத்திர மறையாமலந்தந்தச்சத்தி கெட்டுப்போ
மலமிருக்குமென்று சொன்னதைப்பற்றி யனாதியாகமறைத்திருக்குஞ்சத்திம
யாதுதன்வீரியங்குன்றியடங்குகையால் அதுபோலவனாதிமுத்தனாயிருக்கப்பட
பரமசிவன்சத்தியு மனாதியாகவிருக்கப் பட்டவான்மாவினுடைய சத்தியும்வீரிய

கெட்டடங்குமென்றுநீசொல்லிலறுதியேமலத்திரையத்தையுநீங்கி விளங்கப்படா நின்றசிவனுடையசத்தியடங்காது ஆணவமலசத்தியாகியபாசத்தைமேலிடவொட்டாமலான்மாவினறிவுபிரகாசிப்பிக்கு நுண்ணிதாகிய சூக்குமதேகநீங்கினவதீதாவத்தையிலாணவமலத்தாலேயான்மாவினுடையவறிவற்றடங்கும். எ. று.

இதன்கருத்து ஆன்மாமோக்ஷத்தைப் பெற்றவிடத்து ஆணவசத்திகெடாமலடங்காநிற்குமென்றுஞ் சகலத்திற் றத்துவங்களாகிய சூக்குமதேகங்கூடிய விடத்து ஆன்மசத்திக்குஞ்சிலவிளக்கமுண்டாயுந் தத்துவங்களாகிய சூக்கும தேகநீங்கினவதீதாவத்தையில்மலசத்திமறைப்பால்- ஆன்மசத்தியடங்கியிருக்குமென்றும் பாசசத்திகளுக்குக்கேடில்லையென்றுஞ்சொன்னதாம். [௱எ]

மேலான்மாசிவனுடைய வயிக்கமுணர்த்துகின்றார்

ஏகமன்றிறைவனுவியிரண்டுமென்றபேதமென்றே
யாகமவேதமெல்லாமயிக்கியபதத்தினாலே
யூகமுள்ளவர்தம்முள்ளத்துணர்த்திடும்பிரத்தியாயத்
தாகமுமற்றொன்றென்பரயிக்கியபதார்த்தமுனர்

எ-து ஆன்மாவுஞ் சிவனுமொன்றல்ல விரண்டு மல்ல வென்றே வேதாகமங்களெல்லாமவர்களிருக்கிற வயிக்கியத்தினாலே யபேதமென்று சொல்லும்இப்படிவிவேகித்துப்பிரத்தியமென்னுஞ் சத்தத்தினாலேயிதற்குஅயிக்கியபதமென்றுஅவர்களறிவினாலேயறிவிக்கப்பண்ணும் இப்படியந்தச்சத்தத்தினுடைய பொருளையறியாமலற்பவறிவையுடையோர் அயிக்கியமென்ற பதத்தின் அருத்தத்தையொன்றென்றுசொல்லுவர்கள். எ- று.

பிரத்தியமென்பது. அறிவு (௱அ)

முற்கூறியவயிக்கியத்துக்குதாரணமுணர்த்துகின்றார்

தருநிழலொன்றேவன்றேதனித்திருபொருளோவன்றே
பரமனுமுயிருமிந்தப்படியெனவபேதம்பாராரார்
ஒருபுடையேகதேசமெனவுபமானமோராரார்
அரிவைசொல்லமிர்தமென்றுனாவினாலறிவதோசொல்

எ-து மரமுநிழலுமொன்றென்றுசொல்லப்பெறு, வன்றியிரண்டென்றுஞ்சொ

[illegible]. வாதலானிவையிரண்டு மொன்றுக்கொன்று இப்படி பிறிக்கப்படாதி
[illegible] மெனப்பரமசிவனுமான்மாவுமிப்படிபிறிக்கப்படாமலிருக்கிற வயிக்
[illegible] யாதொருவிடத்திற்றிட்டார்தஞ் சொல்லுகிறதெ
[illegible] தமொழிந்துமுற்றுமன்று, அஃதெங்ஙனம்மெ ன்னிலிவள்வ
[illegible] லதனைநாவினாற்பருகியதனுட்சுவையையின்
[illegible] (ரகூ)
[illegible] எ - று

இப்படியான்மாவுஞ்சிவனுமிருக்கிறவயிக்கத்தை
[illegible]யாமல்மாயாவாதியொன்றென்றுசொல்லுமத
[illegible]மறுத்துணர்த்துகின்றார்.

வேறு.

அத்துவிதமென்றசொலு முன்முறையினாய்க *
[illegible]மென்றசொலுமம்முறையினாய்க *
[illegible]யற்றொருவனென்றுமொழிவேதத் *
[illegible]யாரமலனாவிமலமென்பர் *

[illegible] - அ அத்துவிதமென்றசொற்பொருளைமுன்னையாசாரியர்கள் சொன்ன
[illegible]மையில்விசாரிக்க, அத்துவயமென்றசொற்பொருளையுமந்தட்பிரகாரத்திலே
[illegible]க, வறுதிமலமுத்தனுமாய்த்தனக் கொப்பாருமில்லாதவனென்றுவே
[illegible]ய்க்கவுமந்தவுண்மைப்பொருளையறியாமனின்மலனாகியசிவனையுஞ் சமல
[illegible]வான்மாவையும்வித்தையாகிய மலத்தையுமொன்றென்றுகூறுமதுகூடாது
[illegible] - அ பண்ணையுமோசையும்போலப்பழமதுவு, மெண்ணுஞ்சுவையும்போலெங்
[illegible]ம், அத்துவென்னுந்திருவாக்கினானுந்தெளிக. (ரய்)

அதற்குதாரணபூருவமாகஆறுசெய்யுளாலுணர்த்துகின்றார்

பார்த்திபனுமேவல்வினைபற்றினாரும்வாழ்வுந் *
சீர்த்தரசனேவலிடர்சேருநருமொன்றோ *

சிவஞானபோதம் - உம் - சூத்திரத்திரத்துள் - நேரிசைவெண்பா

பண்ணையுமோசையும்போலப்பழமதுவு
மெண்ணுஞ்சுவையும்போலெங்குமா - மண்ணாரு
[illegible]தமாதலுமறைகளொன்றென்று
[illegible]தமென்றறையுமாங்கு

வார்த்தவுடலோவுசிவ னுருபிரனைத்து
மூர்த்தமவன்மூர்த்தியெனவோர்கவறுமோகம்

எ- து இராசாவு மிராசாவுக்கேவற்றொழில்செய்யும் பரிசாரகரும் அவனதுச துரங்கபெலமு முலகத்துள்ளவான்மாக்களுக் கிடர்வந்தகாலத்து த்திர்த்துமவர்க ள்செய்தகுற்றத்தையறிந்து தெண்டித்தும் போக்கப்படுவதால் இராசாவும் அவ னேவற்றொழில்செய்யும் அந்தப்பிராணிகளுமொன்றல்லவே, ஃதன்றிச் சத்ததா துக்களாலேயெடுக்கப்பட்டசரீரமுமான்மாவல்லவே ஆயின்அதெப்படியென்னிற் சருவான்மாக்களுமவனுக்குவடிவாகவுமந்தச்சிவனந்தவடிவுக்குமூர்த்திமானாகவு மிருக்குமுறைமையினை விசாரித்தறிவையாகி லுன்னிடத்துண்டாகிய அஞ்ஞானம் போம். எ- று- ஓகாரம்-எதிர்மறை

(௩௰௧)

ஊடலிருவர்க்கொழியவுண்டுகொலொருத்தர்க்
கேடணையுமேவலெழுவாயுமியலுலு
மூடருணரார்மலைவு முன்னொடுபின்னென்னே
தேடுவர்சிவன்றனையுமாதரவுசெய்தே

எ- து இருவர்க்கேசண்டையொழிந்து ஒருவர்க்கஃதில்லையே யந்த * வேட ணையுமொருவன் போ.வா.வென்றேவுதல்முதலியவும் இந்தமுறைமைகளைப் பிறித் துமுன்னொடுபின்பொருள்கோள்மலைவினறிச்சொல்லுஞ்சாத்திரத்தி னுண்மைபுமு ணராதறிவற்றவர்கள்சிவனு மான்மாவுமொன்றாயிற் சிவனையாதரவுடனே கூடவே ணுமென்றுவிசாரிப்பரஃதென். எ- று. ஓகாரம். வினா.

[௩௰௨]

பொத்ரைபுடலூனுமறவேபருள்புரிந்து
தத்துவமசிப்பொருடருங்குரவனொன்
றத்தவுதையத்தவலமாசினையறுத்தே
சித்திபெறுமோபிரமமென்கொலிதுசெப்பாய்

எ- து பொந்துபோன்றான் பொருந்திய வுடலைவிடுவித்துத் தத்துவமசியென் னுமகாவாக்கியப்பொருளை யுபதேசித்தனுக்கிரகஞ் செய்யுமாசாரியனெவனென்று தேடியதனாற்றற்பதமாகியசிவனையுந்தொம்பதமாகியவான்மாவையும் ஆசிபதத்தா லயிக்கம்பண்ணப்பட்டு இருந்தவுபதேச காலத்தாற் பொல்லாதஅஞ்ஞானத்தைப்

---

எ-து. சிவலிங்கமானது அக்கினிபினாலே திருமேனியிற் பூநவவன்னம்விட்டு வேறுவன்னமாகக் காண்கினுஞ் சிதறிப்போகினு மிப்படிவந்து விட்டதே யென்று மனதிற்றுயரமுற்று ஆசாரியரைவணங்கி யிக்குற்றம்போக்கியருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்து பவசியாயகோரத்தை நூறுயிரமுருச்செபித்து அவ்வாசாரியனால்வேறொருலிங்கத்தை யெழுந்தருளப் பண்ணிக் கொண்டு பூசைசெய்க, கள்வர்முதலாயினார் சிவலிங்கங்கொண்டு போகிலது வருமோவென்று நாற்பதுநாளு பவசியாயிருந்து பின்பு முற்கூறியபடிபரிகாரஞ்செய்து எழுந்தருளப் பண்ணிக் கொள்க அக்கினியந்தச்சிவலிங்கத்தைத்தீண்டிற் பழுதிலவாயிருக்குமாகிலுபவசியாய்முப்பதினாயிரமுருச்செபிக்கிலக்குற்றம்போம் அப்படிச்செய்யாது பத்திரினாலுடல்விடுவோமென்கைபொல்லாது. எ-று மற்றுமென்றதனால்-வானரம்-காகம் - பருந்து - எலி - முதலாயினவற்றாலபாயம்வரினுமிம்முறைசெய்க (௩௯)

ஊறுபடிற்றிருமெனிபரார்த்தத்துமொழிக்கவுரித்தாகுமற்றொன்று சயம்பெழுவாயொழியேற், கூறிடுகவீரயுகம்பதமேனிசுறுகிற்கடந்திடினிற்றாளிபடிற்கூறுகவோரயுதம், நூறுமிருநூறுமுறநுவல்கநிழல்கடந்தான்பீடத்திற்சாய்ந்திடினுமவ்வளவேநுவல்க, வாறியிடவபராதமுருண்டிடினாயிரமீராயிரம்பின்னும்முருண்டாலப்பாலோரயுதம் *

எ-து மானிடர்தாபித்தபரார்த்தலிங்கத்தக்கினிமுதலியவற்றாலூறுபடின் ஒழிக்க, மற்றையான்மார்த்தலிங்கத்தினுஞ்சுவயம்பு முதலியஇலிங்கத்தினுமூறுபடினொழியற்க,சிவலிங்கத்திற்கால்படினுங்கடக்கினுமிருபதினாயிரமுருச்செபிக்க, காலிற்றாள்திருமெனியிற்படிற்பதினாயிரமுருச்செபிக்க, இலிங்கத்தின்சாயைகடக்கினுமெழுந்தருளியிருக்கிறபீடத்திற்சாயினுமகோரத்தைமுந்நூறுருச்செபிக்க, பீடத்திலொருகாலுருண்டாலகோரமாயிரமுருச்செபிக்க, இரண்டுதரமிலிங்கமுருண்டதாயிலிரண்டாயிரமுருச்செபிக்க, இரண்டுதரத்துக்குமேற்பட்டுருண்டுகீழேவீழிற்பதினாயிரமுருச்செபிக்க. எ-று அவ்விலிங்கத்திலேயரையங்குலத்துக்குமேற்படப்பழுதாயின் அவ்விலிங்கத்தையொழிக்க, பீடத்திலேமூன்றங்குலத்துக்குமேற்பழுதாயினந்தப்பீடத்தையொழிக்க, அந்தலிங்கப்பிரமாணத்தில் வேறொருலிங்கத்தில் முன்புபோலமானிடமாகத்திருமேனியைச்செ

[illegible]ப்பிரதிட்டையையவ்வழியேசெய்க, சுயம்பு[illegible]
[illegible]ப்பழுதாயினுமக்கினிவாரையிருற்பழுதாயினு[illegible]
[illegible]லேசந்திக்கவைத்துத் திடமுறுதற்பொருட்டுச் [illegible]
[illegible]ட்டியதனையேபூசைசெய்க, பீடம்பின்னமாயின்[illegible]
[illegible]டுத்துப்போட்டுப் பெண் சிலையிருலேமுன்புபோலே [illegible]
[illegible]டைசெய்க [illegible]

ஆதார நிராதாரத்திலுல் வருங்குற்றத்துக்குப் பரிகாரமுண்[illegible]
இன்றார்

அயுதமியம்பாதாரத்தொடுவிழினேசாலுக் [illegible]
மறைக, வயுதமிரண்ட றைந்திடுகவாய்த்திவலையாலுமை[illegible]
மனுநிடினேகோழை, நியுதமுறநிகழ்த்துகவாய் [illegible]
யப்புனலிற்படிந்திடினுநியுதம், விதிவினைதானிலைப்புறுமாயத்தின் [illegible]
ந்துவிண்டிடினேசிவலிங்கம்பீடம்பின்டிடினும் [illegible]

எ-து பெட்டகக்கோயிலுடனே சேமப்பிழைவரிற்சாலுக் [illegible]
செபிகக, ஆதாரமின்றிஇலிங்கமாத்திரஞ்சேமப்பிழையாயிற் [illegible]
முருச்செபிக்க, வாய்த்திவலைசிவலிங்கத்திற்றெரிந்த [illegible]
டின்முப்பதினுயிரமுஞ்செபிக்க, பெரியமரக்களிற்றைகளிற் [illegible]
பித்துமுடித்தவாறேயாசாரியனுலே வேறொருலிங்கத்தையெழுந்தருள் [illegible]
கொள்க. நின்மாலியபாத்திரத்திலேவிழினூருயிர முருச் செபிக்க, [illegible]
மாணத்தினின்றுஞ்சேமப்பிழையாய்ச் சிவலிங்கம் பீடமிலைகளிற் [illegible]
மாலுலதற்குப்பரிகார மில்லை. எ- று. [illegible]

ஆசாரியர்முதலாயினுர்நிழலைக்கடக்கினுகைவேத்தியமாதியிற் [illegible]
ணம்வரினுமதற்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

தேசிகன்றனிழல்கடந்தார்செபிக்கசதத்தினையாந் [illegible]
ககடக்கினுஞ்செப்பியவா, ருசகலவகோரத்தையந்தணர் [illegible]
விளக்கினிழல்கடந்திடினூறறைக, வீசனதுநிவேதனத் [illegible]
கிலிழித்திடுகநிவேதிக்கிலியம்பிடுகவொருநா, ருசகலவி [illegible]
பிழிவுவிருநாழியையுழக்கெக்காலத்துமாக. [illegible]

எ- து. ஆசாரியருடையநிழலைக்கடக்கில்முந்நூறுருச்செபிக்க, சாதாகர்புத்திரர்சமையிமுதலியதிருவேடத்தார்நிழலைக்கடக்கினு மப்படியே பார்ப்பார் பசுத்திருவிளக்குஇவைகளினிழலைக்கடக்கினூறுருவகோரத்தைச்செபிக்க, இட்டலிங்கத்துக்குவைத்தநைவேத்தியாதிகளிற் புழு மயிர் முதலானசெந்துக்கள்விழுந்தாலதனைநைவேத்தியம்பண்ணுதொழிக, அஃதன்றிக்கிடக்கின்றததறியாமல் நைவேத்தியம்பண்ணினானாகினூறுருச்செபிக்க, இட்டலிங்கத்துக்கு உத்தமம் இருதூணி மத்திமம்இருநாழி அதமம்ஐயுழக்குஅமுதுபடி ஆதலால்அவ்வதம மொருகாலுநைவேத்தியத்துக்குஆகாது. எ- று.

உத்தமத்திலுத்தமம். இருதூணி. மத்திமந்தூணி அதமங் குறுணி. இருநாழிஐயுழக்குஅமுதுபடிவைக்கிற்பைசாசபோசனமானதா லொருகாலுநைவேத்தியத்துக்காகாதென்றுரைப்பாருமுளர்.

(௪௨)

இட்டலிங்கத்தைப்பார்ப்பார்முதலாயினார்தீண்டிற் பரிகாரமுணர்த்துகின்றார்

தீக்கையிலா வந்தண ராதியரிட்ட லிங்கந்தீண்டியிடிற் சிறப்புறவேபூசையினைச்செய்தே, நோக்கிமுறையுறநூறு நுவல்க விருநூறு முந்நூறுநானூறுவாமசமையத்தார், மூர்க்கரெனும் வேடர்முதலோர் தீண்டினபுதமொழிந்திடுகநாய்காகந்தீண்டின்மூவபுத, நாய்க்கடுவான்றீண்டியிடி னவின்றிடுகநியுதநம்பனுக்குப்பூசையினைச்செய்துவிதிநயந்தே. *

எ- து. தீக்கையில்லாதபார்ப்பார்முதல்நாலுவன்னத்தார்இலிங்கத்தைத்தீண்டிற்பஞ்சகெவ்வியமுதலியவற்றால் விசேடபூசைபண்ணிப்பார்ப்பார்முதல்நால்வர்க்குநூறுநூறுகவேற்றிச்செபஞ்செய்க, சைவபேதமாகிய மூலதந்திராவதசாத்திரத்தின்வழியனுட்டிக்கும் வாமசமையத்தாருமூர்க்கராகிய வேடர்முதலாயினவிழிகுலத்தாருஞ்சிவலிங்கத்தைத்தீண்டிற் பதினாயிரமுருச்செபிக்க, நாய்முதலானமிருகமுங்காகமுதலானபறவையுந் தீண்டில் முப்பதினாயிரமுருச்செபிக்க, நாய்க்கடுவானிலிங்கத்தைத்தீண்டினூறாயிரமுருச்செபிக்க, இங்ஙனந்தீண்டலாகாதென்றபேர்கள்சிவலிங்கத்தைத்தீண்டில் விசேடபூசையைச்செய்க. எ- று.

உளாயிற்கோடலென்பதனாற்சுவசந்தலளிதத்தின் வழியனுட்டிக்குந்தெக்கணசைவர்தீண்டிற் பதினாயிரமுருவும் வாமசமையி தெக்கணசமையி யிவர்களுடன்பேசினூறுருவுஞ் செபிக்க, நாய்க்கடுவானென்பதுசண்டாளன்பிராமணியுடனேகூடிப்பிறந்தவன். (௪௩)

செபமாலைமுதலியவற்றிற்குப்பரிகாரமுணர்த்துகிறார்

திருவுருவுக்குரைத்தபரிகாரத்திற்பாதி செபமாலைசிவஞான மெழுவாய்க்குஞ்செய்க, கருதிடுககண்டைக்கும்பாதத்திற் பாதிகைதவறிபபிடேககலசமதுகடுகித், திருமுடியைத்தீண்டியிடினீராயுதஞ்செவிக்கத்திண்ணியவர்க்கியம்விழிற்சிதையினுருண்டிடினு,மிருசதமாயிரமைஞ்ஞூறியம்புகநாய்க்கடுவான்றெரிசிக்கிலைந்தயுதமியல்விதிசெய்திறைக்கே *

எ - து சிவவிங்கத்துக்குக்கூறிய பரிகாரத்திற் பாதிசெபமாலை சிவாகமமுதலிய விவைகளிற்கால்படினும் விழினும்பரிகாரஞ்செய்க சிவலிங்கத்துக்குச்சொன்னதிலெட்டிலொன்றுமணிமுதலிய வுபகரணங்களிற் கால்படிற் பரிகாரஞ்செய்க அபிடேககலசங்கைநழுவித்திருமுடியிற்படிலிருபதினாயிரமுருச்செபிக்க சாமானியமாகப்படிற்பதினாயிரமுருசெபிக்க அருக்கியசெலந்தாபித்திருக்கையிலதுவீழிலிருநூறுருச்செபிக்க அஃதுடையினாயிரமுருசெபிக்கஅப்பாத்திரமுருண்டதாகிலைஞ்ஞூறுருச்செபிக்க நாய்க்கடுவான் இலிங்கத்தைத்தெரிசிக்கிலைம்பதினாயிரமுருச்செபிக்க ஆகமத்திற்சொன்னபடிசிவலிங்கத்துக்குப்பூசைசெய்தென்றவாறு

எழுவாயென்றதனால்வேதமிருதிபுராணமாதிகளெனவறிக (௬௪

சிவலிங்கமுதலியவிற்பார்க்குப்பரிகாரமில்லையென விரண்டுசெய்யுளாலுணர்த்துகிறார்

சிவலிங்கம்விற்பார்கள்சிவஞானந்தனையுந்திருவுருவமதுதனையுந்தீராப்பாதகரோ, யவர்தமக்குப்பரிகார மறையாதாகமமுமாரணத் தினுண்பொருளையாருயிர்க்குத்துணையைச், சிவனையுணற்பொருட்டாலேசெய் வாரேற் பூசைசிறப்புடையவைதிகரோசைவரோதெளிந்த,வெவரோனும்பதிதரவொனவெண்ணியிணங்கேலிற்புகுந்தாற்றீண்டியபாண்டத்தைவிடலினிதே *

எ- து சிவலிங்கம்வெதாகமங்கள்சந்திரசேகரர் முதலானவிக்கிரகங்களைவிலைகுறித்துவிற்றவர்கள், எப்போதுமொழியாதபாதகத்தை யுடையவர்கள் அவர்களுக்குப்பரிகாரமாகமத்திற்கூறிற்றிலர் வேதாந்தத்தெளிவாய்நிறைந்தவுயிர்க்குத்துணையாகியசிவனைப்பத்தியினாற்பூசிப்பதன்றிவிலைபொருந்திப்பூசிக்குமவர்கள்சிறப்புடையவைதிகராயினுஞ்சைவராயினுமற்றைத்தெளிந்தவெவரோனுமவர்களைப் பதிதரொனவிசாரித்துஅவர்களுடனொருக்காலுங்கூடாதொழிக அவர்கள் பிறரொருவர்விட்டில் வந்துபாண்டத்தைத்தீண்டிலதனைக்கழித்துப்போடுக எ - று

ஆதிசைவராகியசிவப்பிராமணர்முதலானவர்கள்திரவியமுதலியகூலிவாங்கிப்பூசிக்கிலவர்களுமப்படியோவெனில் அவர்களுக்கதுவே விகிதமானகன் மமாதலாற்குற்றமில்லையென்றுஆகமமோதுமெனவறிக (சரு)

பொருணசையாற்பூசையினைப்புரிவார்கண் மாலைப்புரந்தரனைத் திசைமுகனைப்புரந்தரன்றன்சேனைப், பெருமானைவிநாயகனைப்பேரறங்காப்பாளைப்பேருலகத்தாயனைப்பேசுமெழுவரையும், இருமையினும்பயனிழந் தாரவர்தம்மையிணங்கேலிகலாதேசாக் கியரோடேனையர்தம் மோடும், விரவிடினுந்திருநீறுமெய்ப்பூசியிடுகவிளம்பிடுகசிவனாமம்வெறுப்பொழிகவெவர்க்கும் *

எ - து இங்ஙனங்கூறியதெவதைகளெல்லாரையுங்கூலிவாங்கிப்பூசிக்குமவர்கள் இம்மைமறுமையிரண்டினையுமிழந்தவர்களென்றுவிசாரித்தவர் களுடனொருகாலுங்கூடாதொழிக சாக்கியர்புத்தர்களிவர்களுடன்வாதஞ்செய்யாதவர்களைத்தீண்டினுமாகாதிர்த்தசெலத்தினாலேதானத்தைப்பண்ணிவிபூதித்தானஞ்செய்துஇருபதினாயிரமுருவகோரத்தைச்செபிக்க மற்றையாவரிடத்தும் வெறுப்பின்றியொழுகுக எ - று ஏனையரொன்றதனாற்சாருவாகன்முதலியனெனவறிக இருபதினாயிரமென்றதுசொல்லெச்சம் (சஉ)

சிவதிரவியமுதலியதபகரிக்கிற்பரிகார முணர்த்துகின்றார்

பரமசிவனாலையத்திற்பதார்திரணமற்றும் பற்றாதே பற்றியிடினழுங்கியுளம்பதைத்து, வெருவி யபராதத்தைப் பொறுத்தருளென்றிறைஞ்சி விண்ணப்பஞ்செய்தறியா தெடுத்தவனாற் குணி தங், கருதி யெடுத்தவனைந்துகுணிதமுறக்கொடுத்துக்கடிதினியற்றிடுக சாந்திராயணத்தைக்கசிந்தே, பருமறையோர்பொருள்குரவனரும்பொருள்கொண்டானு மம்முறையிற்கொடுத்திடுகவவலவினையறுமே. *

எ- து. திருக்கோயிலுக்குஞ் சிவனுக்கு முபையோக மல்லாத பதார்திரணமுதலானதாயினு மவைகளைத் தீண்டாதொழிக. அந்தத்திரணாதிகளை யபுத்திபூருவமாக வெடுத்தாலுகிலிப்படிவந்ததேயென்று மனதிலே துக்கித்து ச்சுவாமியையிக்குற்றம்பொறுக்கவேண்டுமென்றுவேண்டிக்கொண்டு எடுத்ததற்குநான்மடங்குகூட்டிக்கொடுக்கிலக்குற்றம்போம். புத்திபூருவமாக வெடுத்தாலுகில் ஐம்மடங்குகூட்டிக்கொடுத்துச்சாந்திராயண விரதத்தை யந்நேரமேயனுட்டிக்கிலக்குற்றம்போம் பி

ராமனார் ஆசாரியர் திரவியத்தையபகரித்தவனும்அம்முறையேசெய்யிலைக்குற்றம் போமென்றவாறு. (௬௭]

இதுவுமது

கூடியெடுத்தனுபவித்தான் பாதமுறக்கொடுக்கக் கூடினனைக்கூடினனு ம்பாதத்திற்பாதி, யோடியிடவூனவினைவுரைத்திடுகநியுத முருபிதனையடுத்த வனுபுரைக்கவதன்பாதங், கூடினனைக்கூடினனும் பாதத்திற்பாதிகூடிடுகவை ந்தனர்தம்பொருளினைக் கொண்டானும், பாடிய விம்முறை செபத்தைப்ப ணிற்றிருமந்தப்பாவவினையல்லதழற்குழிதன்னிற்படுத்தும். ※

எ- து. சிவதிரவியத்தையொருவனுடனேகூடியெடுத்தனுபவித்தவன் ஆதிலைத் தொன்று கூட்டிக்கொடுக்க அதனைக் கூடியெடுத்தவனுடனே கூடினவனு மெட்டி லொன்றுகூட்டிக்கொடுக்க. அதனைபுத்திபூருவமாகயெடுத்தவன் அதற்கஞ்சுருணி தக்கொடுத்துவிரதமனுட்டித்தக்குற்றம்போம்படி யகோரமந்திரத்தை நூறுயிரமு ருச்செபிக்க. எடுத்தவனுடனே சேர்ந்தானுமதி லுலத்தொன்றுசெபஞ்செய்க. அத னையெடுத்தவனுடனடுத்தவனுடன்கூடினவனு மதிற்பாதிசெபஞ்செய்க. பிராமணர் திரவியத்தையெடுத்தவனும்எடுத்தவனுடன்கூடினவனுங்கூடினவனுடன் கூடினவ னுமுற்கூறியசெபஞ்செய்க. இவ்வாறுபரிகாரஞ் செய்யாதொழியினஃதொளரவ முதலானநரகங்களின்வீழ்த்தும். எ- று. உருபியெனினு மகோர மெனினுபரி மூக்கா- அந்தணர்தம்பொருள்கொண்டானுமென்றவும்மையால் ஆசார்முதலாயி னார்திரவியத்தையெடுத்தவனுமெடுத்தவனுடன் கூடினானுங்கூடினவனுடன் கூடினா னுமம்முறைசெய்க. (௬௮

ஆசாரியர்நைமித்தியமாகியசிவலிங்கப் பிரதிட்டையுந்தீக்கையும்ப ண்ணிலதின்வருங்குற்றமும். மூவகையாசிரியரைக்கொடியவார்த் தைசொல்லல் முதலிய குற்றமும் போம்படி பரிகார முணர்த்து கின்றார்

பார்த்திவருமற்றையருமுயத்தேவபதிட்டைபண்ணினனேலாசாரியரு ருசியுதம்பகர்க, தீர்த்துணலுஞ்சிவாகமத்தினுண்மைதெளியாதேதீக்கைபு ரிதேசிகனுமஞ்சிலக்கஞ்செபிக்க, வார்த்தையினைக்கடினமுறவசனித்தாலு ளின்மந்திரிக்க வோரிலக்கம் பாதியதன் பாதங், கூர்த்தவருட் சோதகனைப் போதகனைமுத்திகொடுப்பானைப்பதம்பணிந்துருறைபொறுத்தாளென்றே-

எ- து. இராசாமுதலானவர்கள்சத்தியடையு நிமித்தமாகவாசாரியன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணில் அக்குற்றம்போம்படிக்குபவசியாயிரண்டுநூறுயிரமுருச்செபிக்க. சிவாகமத்தினுட்கூறியமுறைமையையறியாமற்றீக்கைசெய்யுமாசாரியனுமுபவசியாயைந்துநூறுயிர முருச்செபிக்க. சோதகர். போதகர். முத்திகொடுப்போர்- என்னுமூவகையாசிரியரைப்பார்த்துக்கொடியவார்த்தையைச்சொன்னாலிலக்குற்றம்போகையின்பொருட்டுஅவர்களைவணங்கி நூறுயிரம் ஐம்பதினாயிரம் இருபத்தையாயிரமடைவிற் செபிக்கிலக்குற்றம்போமென்றவாறு- தீர்த்துணலுமென்பதனையிருபாலுங்கூட்டுக. மூவகையாசிரியருக்குக் கூறிய தொகை. எதிர்நிரனிறை- சைவாகமத்தையிதுவென்றுதெரிசிப்பிக்கையாற்சோதகனெனப்பெயராயிற்று. மாணுக்கர்க்காகமமாதிகளைப்போதிக்கையாற் போதகனெனப்பெயராயிற்று நிருவாணதீக்கையை மாணுக்கர்க்குப்பண்ணி மோக்ஷத்தையடைவிப்பிக்கையான் முத்திகொடுப்போனெனப்பெயராயிற்று. (சக)

இதுவுமது

தாக்கிடினேதன்னதுகையவனுடலந்தன்னிற் சாற்றிடுகவாறிலக்கமாயுதத்தாற்றடியி, னேற்றியிருகுணிதமுறையியம்பிடுகபூசையியற்றிடுகசிறப்புறவேயீசனுக்கஞ்சென்னுங், கூற்றுடைய சாந்திராயண விரதமுதலுங்கொள்கவிரதத்தினையுமுடிவினடிகுறுகிப், போற்றியுள பொருளெல்லாங்கொடுத்தவன்செய்தீக்கைபொருந்திடுகவருந்தவனைப்பிழைக்கினுமிப்புரிவே. ✻

எ- து. மூவகையாசாரியரிலொருவனை யாதொருவர்தமதுகையாலடிக்கிலறுநூறுயிரமுருவகோரத்தைச்செபிக்க. ஆயுதத்தாலிரத்தம்புறப்படவெட்டிற்பன்னிரண்டுநூறுயிரமுருச்செபித்துச்சிவனுக்குமகாபிடேகமுநைவேத்தியமுஞ்செய்து செலசாந்திராயணமுதல் ஐவகைச் சாந்திராயணத்தையு மனுட்டித்துமுடிந்தவாறேஆசாரியரைப்பாதத்திற்பணிந்து தமக்குள்ளபொருளெல்லாமவருக்குக்கொடுத்துப்பஞ்சகமலமென்னு மண்டலத்தை வேதிகையினிட்டு அதுமுன்னு கத்திக்கையைப்பெறுக - அரியதவசினையுடையசாதகர் முதலாயினாரை யடிக்கினும்வெட்டினுமிம்முறைசெய்யிலக்குற்றம்போமென்றவாறு.

பஞ்சகமலமண்டலமாவது. யாகசாலைமண்டபத்துக்குநடுவேதிகையைப்பதினாலுக்குப்பதினாலுபதம்பண்ணி நடுநாலுபதத்தில்.வெண்டாமரையையிட்டு நடுவிற்கச்

நிகையைச்சூழக்கேசரம், பீதவன்னமாகவிட்டு [illegible]
லேவீதியாகவிட்டுப்பூர்வதிக்குமுதலுன்குதிக்கிறு[illegible]
கத்துக்கேற்றவன்னமாகநடுப்பதுமம்போலசான்[illegible]
ரண்டாம்வீதியிலொருபதம் பொன்னிறமாகவிட்டு [illegible]
டுபதத்துவாரம்- அந்தந்தத்திக்குப்பதிகளுடைய [illegible]
தமிரண்டுசோபத்தாலுங்கோணங்களில்வச்சிரம்போலக்கொண்டு [illegible]
சிவனைப்பூசிக்கிற்பஞ்சகமலமண்டலமெனப்பெறும். எ- அ. (கூ௨)

ஆசாரியர்க்கியற்றியகுற்றத்திற்குப் பரிகாரமூலசயினைவகுத்தனை
ர்த்துகின்றார்

பலமிரண்டாயிரமுறவே பாறதிநெய்யபரமும் பண்ணிடுகதிரு[illegible]
னபிடேகம்பரிவாற், பலமிரண்டாயிரமுறவேபேலமுதம்பண்டம் [illegible]
கீரவிடேகம்பண்ணிடுசபதமும், பலமிரண்டாயிரமுறவே [illegible]
பரமனுக்குநிவேதனமும் பண்ணிடுகபாங்காற், பலகுலவேலிளக்கு [illegible]
டாயிரமானெய்யாற்பார்த்திடுகதேசிகனுக்கபராதம் பணிஞர். ✱

எ- து. வெளி. தேசிகனுக்கபராதம் பணிஞர்என்பது [illegible]
ன்பதுபயனிலை. (கூ௩)

முற்கூறியமுறைமைக்குப்பொதுவிதிநியமமுணர்த்துகின்றார்

அங்கியினுதுதியுமிரண்டாயிரமேயாக்க யானெய்யானியுத [illegible]
மறையும்போது, மங்கியினுயிரமுறவே வாக்குகவானெய்யானையுதத்துக்க [illegible]
பாலுந்தசத்தொன்றேயாக்க, வெங்குமிதுபொதுவெனவே யெண்ணிவியற்
றிடினேயியம்பியமந்திரபலன்ரு னெய்தியிதி மென்று, மங்கியினு [illegible]
லாராரியனுலங்கிக்காகுதியைக்கொடுப்பிக்கிலவலயினையாறுமே. ✱

எ- து. யாதாமொருவர் நூறுயிரமுருச்செபிக்கும்போது [illegible]
ண்டாயிரமுருஓமஞ்செய்க- பதியினுயிரமுருச்செபஞ்செய்யுமிடத்தாயிரமுருஓம
ஞ்செய்க- பதினுயிரத்துக்குமேலதிகசெபஞ்செய்யிலதற்குப்பத்துக்கொண்டதுதி
கமாகவேற்றியோமஞ்செய்க- முற்கூறியவெல்லாச்செபத்துக்கும் பொதுவிதியெ
ன்றறிந்துசெய்யினிவன்செபித்த செபபலத்தைக் கொடுக்கும்- ஓமஞ்செய்தற்கதி
காரியல்லாவிடத்தாஆசாரியராலேஓமம்பண்ணிவிக்கி [illegible]
மென்றவாறு- அப்பாலுமென்றவும்மை யெதிரதுதழுவியவெச்சவும்மை- [illegible]

முடித்தலென்னுந்தந்திரவுத்தியால் இருபதுருச்செபத்துக்குஒரு கலசந்தாபித்தபி டேகஞ்செய்க

(இ௨)

பரிகாரஞ்செய்தற்கு நியமவிதியுணர்த்துகின்றார்

உண்மைமொழியுரைத்திடுகை யொண்டொடியார் கலவி யொழிந்திடு கைநிசிதனிலூண்பூதலத்திலுறங்கல், எண்ணையினைத்தீண்டாமைகௌவிய த்தைத்தினமுமிறைவனணிமுடிக்காட்டி யருந்தவிவையெல்லாம், பண்ணு தலேபஞ்சவருடத்தளவும்விரதம்பரிகாரந்தேசிகனைப்பழித்தவினைப்பகைக் கும், புண்ணியர்தமடியிணையும் புரிந்துபணிந்தவர்தம் பொருவரியவருள் பெறலும்புன்மைவினைபோமே.

*

எ- து. வெளி. கௌவியத்தையருந்தும்போதுஇடையிடையேகையைக்கழுவித் தத்துவத்திரையத்திலுலேயதனைகொள்க.

(இ௩)

பிரமவதைக்குப்பரிகாரமில்லையாயினுமொருவாற்றாற் பரிகாரமு ணர்த்துகின்றார்

அறிவிலனாயந்தணனையதந்செய்தானவலனாயிரமானிரைகடுவேமண் டலத்தையாக்கி, யறைகவதனடுவிருந்தே யீசானநியுக மாக்கிடுகநிதியாளன் மகவினையையாங்கே, பொறையுறவேசாந்திராயணம்பின்புபுரிகை பொதுவ லதுபுலனைந்தும்வென்றுதிருநீற்றின், அறையின்மக வுருத்திரத்தையறைந் துநினைந்தானையையறுநாண்மரணமுடிவறிந்தகொலையறுமே.

*

எ- து. அபுத்திபூருவமாகப்பிராமணனைக்கொன்றகுற்றம் போம்படிக்கு, ஆயிர ம்பசுநிற்கிறகோட்டத்தினடுவே தேனுமண்டலத்தை யெட்டுமுழத்திற்சதுரசிரமா கவிட்டுஅதனையொன்பதுகோட்டமாகப் பிறித்து ஒவ்வொரு கோட்டத்தையொவ் வொருதளமாகவு நடுக்கர்நிகையாகவுமிட்டு அவைகளிற் சுரபி முதலானவைகளை ஞானரத்னவலியிற்சொன்னபடி பூசித்து அந்தமண்டலத்தின் முன்னாக விருந்து ஈ சானமந்திரத்தை நூறாயிரமுருச்செபித்து சிதியுடையவனாகிலவ்விடத்திற்றானேயா கத்தைச்செய்துசாந்திராயணவிரதத்தை யனுட்டிக்க, இங்ஙனங்கூறியன, பொது விதி, அல்லாதபோதுபஞ்சேந்திரியங்களையடக்கித் திருநீற்றறையிலிருந்து சிவபெ ருமானைத்தியானித்துவேதத்திற்சொல்லியசதருத்திரமெனனுமந்திரத்தைச்செபித் துமுப்பதுநாளிருக்கிலக்குற்றம்போம், இப்படிமரணாந்தமளவு மிருப்பானாகிற்புத் திபூருவமாகச்செய்தகுற்றம்போமென்றவாறு, தேனுமண்டலமென்பதனை மண்ட

லமென்றதுதலைக்குறை. (ருச)

மதுபானிக்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

பண்ணினனேலறிவிலனாய்ம துபானம்பார்ப்பான்பரமேசனாலையத் திற்றம்புருடம்பகர்க, வெண்ணியுறவிலக்கமகமியற்றிடுகநிதியன்பராகமெனுங் கிருச்சரத்தையியற்றியிடல்பொதுவே, வெண்ணையழல்வெதுப்பிவாய் வாக்கலுமாமன்றிவெதுப்பியகோசலம்வெந்தவெண்கலமுமாகும்,புண்ணியவெண்ணீற்றறையினுருத்திரத்தைப்புகன்றுபொருந்தலுமாமுன்புகன்றபடியிரண்டும்போமே.

*

எ - து பிராமணனானவன் அறியாமல்மதுபானம் பண்ணினானாகிற் சிவாலையத்தில்மண்டலமுன்புபோலிட்டுஅதிலேவியோமவியாபிமகாசிவர்முதலாயினார் களைப்பூசித்து அந்தமண்டலசமீபத்திலிருந்து தற்புருட மந்திரத்தை நூறாயிரமுருச்செபிக்க,திரவியவானாகிலயாகத்தைச்செய்து முற்கூறியபராகமென்னுங்கிருச்சரத்தைச்செய்க, இதுபொதுவிதி அல்லதுபசுவின் வெண்ணையைநன்றாக வுருக்கிக்கொதிக்கக்கொதிக்க வாயில்வாக்குக அல்லது கோசலத்தைநன்றாக்காய்ச் சிவாயில்வாக்குக அல்லதுபஞ்சலோகங்களையொழுக வுருக்கிவாயில்வாக்குக அல்லது முன்புபோலத்திருநீற்றறையிலிருந்து மகாருத்திரத்தைத் செபிக்கில் அபுத்திபூருவமும்புத்திபூருவமுமடைவேபோமென்றவாறு (ருரு

சொன்னந்திருடனார்க்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

கனகமொருகழஞ்சளவுகருத்தழிந்து கொண்டகள்வனுடல் சுடுகளரியெல்லையினைக்கலந்தே, பனுகவகோரத்தைநியுதத்தை நிதியாளன்பனுகமகம்பொதுப்பிரசாபத்தியமேயல்லா, லெனைமுசலத்திரும்பாலேயெற்றுகமன்னவனேயென்றழிகவல்லதுவெண்ணீற்றறையையெய்தி, முனமுனைத்தமுறைமுயலின்மோசனமேயாகுமோகவினைமுன்னுணர்வின்முற்றியதிவினையும்.

எ - து அறியாமலொருகழஞ்சுபொன்திருடினகள்ளனானவன், ஆயிரம் பேரிற்குறையாமற் சுட்டசுடுகாட்டிற்சுடுகாடென்னுமண்டலத்தைமுன்புபோலெட்டிதழுநடுக்கர்நிகையுமாகவிட்டு, அதில்அகோரப்பியோநமவென்று அகோரகலைமந்திரத்தாற்பூசித்து அந்தமண்டலசமீபத்திலிருந்து அகோரமந்திரத்தை நூறாயிரமுருச்செபிக்க; திரவியவானாகில்யாகத்தையாண்டுச்செய்க, இதுஇரண்டு

ம்பொதுவிதி - அல்லது - பிரசாபத்தியவிரதமனுட்டிக்க - அஃதன்றியவன்அரசனிடத்திற்போய்இராசாவேநான்பொன்றிருடினகள்ளன் அக்குற்றம்போம்படிக்கு இருப்புலக்கையாலடியுமென்றுசொல்லியவனுலடிக்கப்பட்டுமரிக்க- அல்லதுமுன்புபோலநீற்றறையைப்பொருந்திமுன்சொன்னமுறைசெய்யிற் புத்திபூருவம் அபுத்திபூருவமிரண்டினுல்வருங்குற்றமும்போம் எ - று ஏகாரம் - தேற்றம் [௫௬]

குருமனைவியைப்புணர்ந்தவனுக்குப் பரிகாரமுணர்த்துகின்றார்

அற்றறிவுகுருமனையையொருநாளுற்றணைந்தா னழலோம்புஞ்சாலைதனில்வாமத்தையறைக, வுற்றிடவேயோரிலக்கமகமியற்றிநியன்றத்தகிருச்சரமியற்றவொக்குமிருவருக்கு, மற்றலதுகுய்யத்தைப் பீசத்தைக்கருக்கான்மாற்றியுணன்மறந்துதிசைதெற்கியங்கிமரிக்க, முற்பகர்ந்த முறையுறவேநீற்றறையின்முயல்கமுயங்கிலவிந்திரண்டாநாணரகனைத்துமூழ்கும். *

எ- து. மோகவசத்தாலறிவற்றுக்குருமனைவியையொருநாட் கூடினுனுகிலக்கினிகோத்திரஞ்செய்கிற யாகசாலையிற் கிழக்கே காருகபத்தியஞ் சதுரசிரமாகவு மேற்கேயாகவனீயம் வட்டமாகவுந் தெற்கே தெக்கணாக்கினி யர்த்த சந்திரனைப் போலவுமிட்டுஅதில்அக்கினியையுண்டாக்கியதிற் றற்புருடாயவிர்மகேயென்னுமந்திரமுதலாகவடைவேபூசித்து அந்தமண்டலசமீபத்திலிருந்து வாமதேவ மந்திரத்தைநூறுயிரமுருச்செபிக்க, திரவியவானுகில் யாகத்தையாண்டுச்செய்க, புத்திபூருவமபுத்திபூருவமாகச்செய்தவர்கள் தத்தகிருச்சரமனுட்டிக்க இதுபொதுவிதி அல்லாதபோது குய்யத்தையும் பீசத்தையுங் கருக்காலரிந்து போட்டுத் தென்றிசையைநோக்கியுபவசியாய்ப்போகிமரிக்கிலக்குற்றம்போம்புத்திபூருவமாகவிரண்டாநாளும்அவளைக்கூடினுனுகி லிருபத்தெட்டுக்கோடிநரகத்திலும்அழுந்துவன். எ- று (௫௭)

கொலை களவு கள் காமஞ் செய்தநால்வருடன்கூடினவஞ்சாம்பா
விக்குங்கோவதைக்கும்பரிகார முணர்த்துகின்றார்.

கூடியவனிவர்தம்முளொருவனுடன்சரதங் கூறிடுகநியுதமுற க்குலவனாயினுச்சி, மாடுடையன்புரிந்திடுகமகவினையையாங்கேவருந்திடுக மற்றையதிதபனத்தைமதித்துத், தேடரியதேனுவினைத்தெளியாதுசெகுத்தான்செப்புகவோரிலக்கமுறவகோரத்தைத்தெளிந்தா, ணடியிருகுணிதமுற ஈவின்றிடுகவந்தநாயகனைமனத்திருத்தியூணெழிந்துமைந்தே. *

எ- து. பிரமவதைமுதலான பாதகங்கள்செய்தநால்வருள் ஒருவனுடனொருவன்கூடலவனுஞ்சாம்பாதகத்தையுடையவன், அக்குற்றம்போம்படி சத்திநியோசாதமந்திரநூறுயிரமுருச்செபித்துப்பருவதாக்கிரத்தின் மண்டலமிட்டுஅதி னைடுவமமேருமுதற்பாரிசபருவதமீருகவைந்தினுஞ்சதாசிவமுதலிய கலாமந்திரங்களையடைவேபூசித்துஅந்தப்பருவதத்தினுச்சியிற்றனவானுகில் யாகத்தைச் செய்துஅதிதபனமென்னுங்கிருச்சரத்தின்முறைமையைவிசாரித்துவருத்தமுறவனுட்டிக்கில்அக்குற்றம்போம், தேடிதற்கரிதாகிய பசுவை யபுத்தி பூருவமாகவதைத்தானுகில் அகோரத்தைநூறுயிரமுருச்செபிக்க, புத்திபூருவமாகச்செய்தவன்இப்படிவந்துவிட்டதென்றுபவசியாபகோரமூர்த்தியை மனதிற்றியானித்து அம்மந்திரத்தைஇருநூறுயிரமுருச்செபிக்கிலக்குற்றம்போம். எ- று. (ருஅ)

மகாபாதகத்துக்குப்பரிகார முணர்த்து கின்றார்.

கங்கைநதிப்புனலாடிக்கடப்பாடுமீந்து காசிவிசுவேசனடிக்கமலவிலை பணிந்து, தங்கிறைருநாளுணல்காமாதிகளுந்தவிர்ந்து தாமறந்துபுரிந்தமகாபாவமொன்றுதவிருந், திங்களுறினறிந்துபுரிமாபாவமொன்று திருங்கேதாரஞ்சேசயிலங்காளத்தி, சங்கைதசரதன்மகனைத்தணந்ததலமாருர்சபைமருதுகுடமூக்கையாறெழுவாய்த்தலத்தும். ❊

எ- து. கெங்கையிலேமுழுகித்தமக்கியன்றமாத்திரந் தானங்கொடுத்து க்காசியென்னுந்திருப்பதிவீட்டிலெழுந்தருளியிராநின்ற விசுவநாதனுடைய தாமரைமலர்போன்றசீபாதங்களைவணங்கித்தான்காமக்குரோதலோபமோக மதமாச்சரியமுதலானகுற்றங்களைவிட்டொருநாளுடவசியாயிருக்கில் அபுத்திபூருவமாகச்செய்தமகாபாதகங்களிலொன்றுபோம், இவ்வாறொருமாதயளவு செய்யிற் புத்திபூருவமாகச்செய்தமகாபாதகங்களிலொன்றுபோம், அக்காசியன்றிக்கேதாரமுதற்றிருவையாறீருகச்சொன்ன புண்ணியதலங்களினு மிவ்வாறுசெய்யி லக்குற்றம்போம் எ- று. எழுவாயென்றதனுல் திருவாலவாய் சுவேதாரணியந் திருநெல்வேலிமுதலாகியமற்றுமுண்டானபுண்ணியதலங்களினுமெனவறிக, சங்கைதசரதன்மகனைத் தணந்ததென்றது, தசரதராயிந்திரன் புத்திரனில்லாதகுற்றத்தினுற்சங்கிக்கச்சங்கோத்தரம்பண்ணித்திருவாரூரில்வந்து தியாகராசரைப்பூசித்துப் புத்திரனுண்டாகையாற்சங்கைதசரதன்மகனைத் தணந்ததல மாருனெச்சிறப்பித்தார், திருவிராமேச்சரமென்றுஞ்சொல்லலாம். (ருகூ)

சிவஞானிகளைப்பூசிக்கினு மக்குற்றம்போமென்றுணர்த்துகின்றார்

அனாதிமலமுத்தனவன்சிவனுயிர்கட்குயிராயகலாதேவினைப்பலன்களை ருத்திமலமறுப்பான், மனுதியினுக்கெட்டாதா னெனமதித்துத் தம்முண்ம னோலையவாழ்வுறவவன்றாள் கண்டவர்தாள் வணங்கி, யெனாதியிவனெவெ ண்ணியொருபகற்பூசனை யியற்றினர்களொருதிங்களுறவியற்றினர்கள், முனோதியவாறொழிந்தார் தாமுற்றியமாபாவ முட்டாம லியற்றினர்கள்விட் டார்திமுழுதும்.

எ- து. வெளி. மனுதியினுக்கெட்டாதானென்பது. சாத்துவிதமுதலானமனதி னாலறியப்படாதவன், மனோலையவாழ்வுஎன்றது, சுவலீனமானமனதையதிதத்தில யிப்பித்துஆண்டுள்ளவின்பத்தையனுபவித்தல். (சுஎ)

உருத்திராக்கந்தரிக்கினும்பாவம்போமென்றுணர்த்துகின்றார்

அரித்திடவேயவலவினையனுமதித்தார்கண்டி யாமலகபலத்தினளவாக வுமேயன்பாற், றரித்திடுகசிகைதன்னிற்கன்னத்திற்களத்திற் றடவனாமா ர்பிடைப்புயத் துத்தாங்குகபுணாலி, னுருத்திரசாதனமாயின்கண்டத்தினுறி னுமொன்றியிடுஞ்சிவபுரியை யதுதானுமென்றே, விரித்தவுரை மெய்யென வேயுணர்ந்தாரெல்லாரும்விருப்புறவேதரித்திடுககண்டியினைவிரைந்தே.

எ- து. வெளி. அரித்தல். போக்குதல். கண்டிஉருத்திராக்கம். ✠ கண்டியிற்ப ட்டகழுத்துடையீர் கரிகாட்டிலிட்ட பண்டியிற்பட்டபரிகலத்தீர். என்பதனாலறிக ஆமலகம். நெல்லி. (சுக)

மேலுமோருபாயமுணர்த்துகின்றார்

பூசிடுகநீற்றினையுந் தீவினையைப்போக்கப் புரிந்தார்கடிருநீறு பூசின னாப்பணிந்து, பேசிடுகமதுரவுரையவரோவற்றன்னைப் பெற்றிடுக முற்றிடுக

திருநாவுக்கரசுசுவாமிகள்அருளிச்செய்ததிருவீழிமிழலை. திருவிருத்தம்.

✠ கண்டியிற்பட்டகழுத்துடையீர்கரிகாட்டிலிட்ட
பண்டியிற்பட்டபரிகலத்தீர்பதிவீழிகொண்டீ
ருண்டியிற்பட்டினிநோயிலுறக்கத்திலும்மைமையவர்
கொண்டியிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (சு)

டனைப்பொருப்பட்டே, கூசினர்களவர்தம்மைக்கும்பிடவுமேவற் குறித்தியத்தி டத்தானுங்கொடுவரகக்குழியாழ், நீசரொன நினைந்திடுக நின்மலனைத்தமனவினைப்பானைநினைப்பார்கள்வினைப்பாவநீங்கும். ❋

உ - ரு. வெளி. ❋ செடிகொணையினடையார்திறம்பார்செறுதீவினை - கடிகமழ்கொன்றைமுக்கண்டகலும்புகல்தான்வரு - நெடியமாலோடயனேத்தநின்றார்திருவாஞ்சியத்-தடியர்பாதமடைந்தாரடியாரடியார்கட்கே-என்னுமகாவாக்கியத்தானுணர்க. [கூஉ]

சிவபத்தர்கள்பெருமையுணர்த்துகின்றார்.

மண்ணுளுமன்னவன்றன்மகன்குணந்தீங்கிரண்டும்வையகத்தார்பாராதேவணங்கிடுவரஞ்சி, யெண்ணுளுமிறையமலன்றிருவேடந்திருநீறிட்டார்கள்குணங்குணக்கேடெனுமிரண்டுமெண்ணார், விண்ணுளத்தீவினையைவிட்டிடவிழைந்தார்விரும்பியவரடிபணிவார்விமலனுரைவிலங்க, வொண்ணுதேயெனக்கருதியொருப்பட்டேயமலனெப்பரியபுரிவாழ்வுமறையருக்குண்டோ. ❋

உ - து வெளி ❋ எவரேனுந்தாமாகவிலாடத்திட்டதிருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி, யுவராதேயவரவரைக்கண்டபோதேயுகந்தடிமைத்திறநினைந்தங்குவர்துகோக்கி, யவர்தேவரிவர்தேவரொன்றுசொல்லியிரண்டாட்டாதொழிந்திசன்றிறமேபெணிக், கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளேகன்றுப்பூர்நடுதறிகைக்கானலாமே - என்னுமகாவாக்கியத்தானுணர்க (கூங.)

முற்கூறியபார்ப்பாருட்பதிதனையும்அக்குலத்தழிந்துதிரியுமாதனையும் பூதிசாதனமணிந்துஒழுக்கந்தவறினதவசிகளையும்வதைத்தல்கூடாதென்பதும் இவர்கள்ஏற்றக்குறைவுசெய்யின்விசாரித்துநிறுத்துமது ஆசிரியர்க்குக்கடனென்பதுமுணர்த்துகின்றார்.

❋ திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்அருளிச்செய்த திருவாஞ்சியம். பண். இந்தளம். பா. (க)

❋ திருநாவுக்கரசுசுவாமிகள்அருளிச்செய்த திருக்கன்றுப்பூர் - திருத்தாண்டகம் (பா) ங

அந்தணர்தங்குலத்துமுதிர்ந்தழிவுபுரிவாளையதஞ்செய்யேற்பரிகாரமவள்வகைக்குமறியேம், வெந்தவெண்ணீறணிந்தமலன்வேடம்ணிந்தாரும்விப்பிரரும்வேண்டியதுசெய்துவினைவிடினுஞ், சிந்தையிலொய்யவொன்வேதேறியவர்தம்மைத்தெளியற்கதெளிந்துமவர்தமைச்செகுத்தாராயிலொந்தழிவர்நினையத்திற்றேசிகனுக்கவனாநோவிக்கைநிலைநிறுத்தல்கடன்விதித்தநூலான்.

*

எ - து வெளி - அந்தணர்தங்குலத்துதித்துமென்றவும்மை - சிறப்பு - அதஞ்செய்யேல் - என்றது - கொல்லேல் - இதுவடமொழி - தெளியற்க - என்றது - சாதியிற்கூட்டாமற்றள்ளிவிடுதல் - செகுத்தல் என்றது - கோறல் - நோவிக்கை எ-து அடித்துக் கோவிக்கை - விதித்தநூல் - என்றது - வேதாகமத்திலின்னதற்கின்னபடிசெய்கவென்னுநீதிசாத்திரமெனவறிக. (சுச)

தன்னிமித்தமாகப் பிறனொருவன் பிராணவதை பண்ணவவனைத்தடாதிருக்கிற்குற்றமுணர்த்துகின்றார்

என்றனைநீபுன்மைமொழியிசைப்பாயேயென்றுமெனதுதனந்தாராதேயேகுவையேயென்று, நின்றனக்கோவுரித்திந்நிலமெனக்குமென்றுநின்முன்னேயென்னுயிரைநீக்குவனேயென்றுந், தன்றனையேதான்வதைக்கிற்றடுத்துமுறைபுரியாச்சலத்தெதிரியவன்றன்னைத்தன்னதுகையாலே, கொன்றவனேயாதலினாற்றடுத்திடுககொலையைக்கொடுத்திடுகககணக்குளதுகொலைக்கஞ்சுங்குணத்தார்.

*

எ - து வெளி - புன்மொழியென்றது-பொல்லாதவார்த்தை, ஏகுதலென்றது போகுதுதல் நீக்குதலென்றது விடுதல், சலமென்றது - கோபம் - உம்மையெண்ணும்மை. (சுரு)

கோபமுதலியவற்றாற்பிராணவதைபண்ணினார்பெறும்பலமீதென்றுணர்த்துகின்றார்.

கோபத்தானகத்திற்கொடுநோயான்மற்றுங் குற்றத்தாற்றான்றன்னைக் கொலைபுரிகைகுணமோ, பாவத்தான்மிக்காரோதமைத்தாமேவதைக்கும்பதர்மனிதரர்தணர்க்கும்பாங்கல்லக்கும்பீ, பாகத்திற்பட்டமுங்கிச்சீக்குறி

க்கும்படிவர்பகர்வருடமறுபதினாயிரமுறவேபாங்கே, சாகத்தாந்துணிந்
தமிசைசங்கரனாலையத்திற்றவறுமினேயவரமலன்புரியதனைச்சார்வார். *

எ - து வெளி - கொடுநோய் - மகாவியாதி - குணமோயென்னுமோகாரம் - சதிமறை - கும்பீபாகஞ் - சீக்குழியென்பன - நரகம் - பாங்கு - உரிமை. (௬௬)

குற்றஞ்சாராக்கொலையிஃதென்றுசிறப்புவிதியுணர்த்துகின்றார்.

படைபிடித்துத்தங்கைபிற்பற்றாரைச்சமரிற்பாழ்படுக்கப்போர்புரியும் பார்ப்பாரைப்பற்றா, ருடலிறுத்தாலேலவர்க்குப்பிரமகத்திப்பாவமொன்று வதன்றெனவுணர்கவுள்ளத்தேகள்ள, மிடலுறவேவநள்ளிருளின்வேற்றாய லர்மனையின்வேண்டியதுகொண்டியங்கும்வேலைதனில்வேந்தன், படையவரைப்பற்றித்தேயப்பொழுதுநாசம் பண்ணிடினும் பிரமவதைபற்றாபார்த் திபர்பால். *

எ - து வெளி. படை ஆயுதம் பற்றார் சத்துருக்கள் இறுத்தல் துணித்தல் படையெடுத்துப் போர்செய்த பார்ப்பாரைப் பிடித்து வதைக்கினுங் குற்றமில்லை யென்க (௬௭)

சூத்திரர் முதலிய மூவரையும் வதைக்கிற்பரிகார முணர்த்துகின்றார்

ஓரயுதஞ்சூத்திரனையொடுக்கினனுச்சரிக்கவுருபிதனையொண்டொடிக் குங்குழவிக்குமொக்கு, மீரயுதம்வசியனைக்கொன்றிறுத்தவனுச்சரிக்க வேந்திழைக்குங்குழவிக்குமிக்கணக்கேயியம்ப, வோரயுதமீரயுதம்பார் த்திபனையொடுக்கிலுச்சரிக்கவொண்டொடிக்குங்குழவிக்குமொக்கு, மீரயு தஞ்சூத்திரனையெணியிறுத்தானியம்பயேனையர்க்குமிசைசக்கவிரு குணித மெணியிறுத்தான். *

எ - து சூத்திரனையும்க்குலத்துமாதரையுமவர்கள்பிள்ளைகளையுங்கொன்றவ ன்அகோரமந்திரத்தைப்பதினாயிரமுருசெபிக்க, மேல்வனையவிருகுலத்தவர்க்கு மிம்மந்திரத்தாற்பதினாயிரம்பதினாயிரமுருவேற்றியேற்றிச்செபிக்க, சூத்திரர்முத லானமூவரையும்புத்திபூருவமாகக்கொன்றவன் இருபதினாயிரநாற்பதினாயிரம றுபதினாயிரமம்மந்திரத்தாற்செபிக்க, எ - று [௬௮]

அண்டசமுதலியவற்றைவதைக்கிற்பரிகாரமுணர்த்துகின்றார்

வதைத்தவனேமயிலென்னங்குக்குடமும்பாம்புமற்றுமுளவண்டசமு மற்கடமுமறப்பான், மதித்தறைகவகோரமிரண்டாயிரமாற்சாலமறப்பாரா லேவதைத்தானோராயிரமாஞ்சாதம், வதைத்தவனேயசமேதிமற்றையமா ன்மனையுமந்திரிக்கவகோரமொருநூறுநானூறு, வதைத்தவனேவராகத் தைவன்மிருகமற்றுமதித்தறைக்வொருநூறுமறந்தவினைமாயும். *

எ - து மயில்முதலானபறவைகளையபுத்திபூருவமாகக்கொன்றால் அகோ ரமிரண்டாயிரமுருச்செபிக்க, புத்திபூருவமாகில்நாலாயிரமுருச்செபிக்க, பூசை யையபுத்திபூருவமாகவதைக்கில்ஆயிரமுருவும்புத்திபூருவமாகில்இரண்டாயிரமு ருவுஞ் சத்தியோசாதத்தைச்செபிக்க, ஆடு - மான் - மரை - யெருமை - முத லானவற்றைஅபுத்திபூருவமாகவதைக்கில்நூறுருவும்புத்திபூருவமாகவதைக்கில் நானூறுருவுமகோரமந்திரத்தைச்செபிக்க, வனத்திலேசஞ்சரிக்கிறதுட்டமிருக மான - பன்றி - சிங்கங் - கரடி - முதலானவைகளையபுத்திபூருவமாகக்கொன்றா லுகில்நூறுருவும்புத்திபூருவமாகில் இருநூறுருவுமகோரத்தைச்செபிக்கிலக்குற் றம்நீங்கும் எ - று மற்றையவென்பதனால்அதற்கினமானவைகளுமென வறிக. [௬௧]

இதுவுமது

வதைத்தவனேநாய்நரியுஞ்சாதத்தைமறப்பின்மந்திரிக்கவாயிரமீராயி ரமேமதித்தான், வதைத்த வனேமூடிகத்தைவாலமூடிகமுமந்திரிக்கசாத த்தையொருநூறுமறந்தான், வதைத்தவனேயென்பில்லாவடிவையறிவின் றிமந்திரிக்கவைம்பஃதுமற்றையவனூறும், வதைத்தனனேற்பலகிருமி யொருநாளின்மறப்பான்மந்திரிக்கமூன்றயுதமதிக்கிலிருகுணிதம். *

எ - து அபுத்திபூருவத்தினாலே - நாய் - நரி - யிவைகளைவதைக்கிலாயிர மு ருவும்புத்திபூருவமாகிலிரண்டாயிரமுருவுஞ்சத்தியோசாதத்தைச்செபிக்க, பெ ருச்சாளி - யெலி - யிவைகளையபுத்திபூருவமாகக்கொன்றவனூறுருவும்புத்திபூ ருவமாகிலிருநூறுருவுஞ்சத்தியோசாதத்தைச்செபஞ்செய்க, வெதுப்பிற்றோன்றி யவென்பில்லாதகிருமிமுதலியவற்றைவதைக்கில் அபுத்திபூருவத்துக்கைம்பதுருவு ம்புத்திபூருவத்துக்குநூறுருவுஞ்சத்தியோசாதத்தைச்செபிக்க, ஒருகாற்பலகிரு மிகளைக்கொன்றால் அபுத்திபூருவத்துக்குமுப்பதினாயிரமும்புத்திபூருவத்துக்கு அ றுபதினாயிரமுஞ்செபிக்க. எ - று (எ௰)

நாய்முதலியவைகடிக்கிற்பரிகாரமுணர்த்துகின்றார்

உடலுறுபடக்கடிக் கிளுய்நரிமம் கடமுமுரகமுந் தேள்விட முமினு மொழியுமடுநீருண், மிடறுறநின்றயுதமுறவிளம்ப வகோரத்தைவிக் கிரகநி னைந்துசுழல்விழிமூன்றுமுடையார், சண்டமுடியிற்றலைமாலைக்கரியவுருக்கரா னந்தாடிமுகந்தடமார்பிற் சற்பவிருச்சிகப்பூண், படைசூலமழுத் தண்டுவெர் ன்வலப்பாலிடப்பாற்பற்றியுளர்கட்டங்கந்தலைபலகைபாசம். *

எ - து நர்ய்முதலானவைசரீரத்துறுபடக்கடிக்கினும்வ்விடம் பொருந்தினு ந்தடாகங்களிற் கழுத்தளவுதண்ணீருணின்று சுழலா நின்றமூன்று விழியினையுஞ் சடாமகுடத்திற்றலைமாலையினையுங் கரியநிறத்தினையுந்திக்குணத்தினையுந்தாடி யினு முகத்தினும்பெரியமார்பினும்பாம்பு த்தேளர்பரணத்தினையுஞ் சூலமழுதண்டிவா ளைப்பற்றியவலப்பாற்கரத்தினையு; மாத்திரைக்கோல் தலை பலகை பாசத்தைப்பற் றியவிடப்பாற்கரத் தினையுமுடையவகோர தேவநாயனுைத் தியானம் பண்ணி அகோரம்பதினுயிரமுருச்செபிக்கிலக்குற்றங்கணீங்கும் எ று (௬௧)

பொன்முதலியவற்றைதான்வாங்கிற்பரிகாரமு
ணர்த்துகின்றார்

தாங்கினனேற்றனத் தையரிதாலத் தைக்கழுஞ்சுதரத்தாதாவ கோரத் தைச்சாற்றிடுகவபுதந், தூங்கிருளினடமாடியாலையத்திற்பாவந்தொலைத்த நுளென்பாவமெனச்சொல்லுகமுன்னூறு, தாங்கினனேற்றயிலத் தைத்தநி யானெய்தனையுந்தரித்திடிற்காற்பாசத்தைக்கம்பளத்தைமற்றுந், தாங்கினனேற்றத் துபரிதனையெருதுதன்னைத்தானியத்தைத்தரணியையுஞ் சாற்றுக வோரயுதம். *

எ - து பொன்முதலியவற்றையும் அரிதாரமுதலியதாதுக்களையு மொருகழு ஞ்சுதானம்வாங்கின், அவர்கள்சிவாலயத்திருந்து அகோரமந்திரத்தைப்பதினுயி ரமுருச்செபிக்க, பால் தயிரானெய் யெண்ணெ பருத்தி கம்பளம் இவைகளைத் தா னம்வாங்கின்வர்களுஞ் சிவன்சன்னிதியிலேயிந்தக்குற்றத்தைப்போக்கி யருளவே ணுமென்றுவேண்டிக்கொண்டுஅகோரத்தைமுந்நூறுருச்செபிக்க; குதிரை யானை யெருது யிவைகளையும் நெல் பூமி யிவைகளையுந்தானம்வாங்கிற் சிவாலயத்திருந் தகோரத்தைப்பதினுயிரமுருச்செபிக்க எ று மற்றுமென்பதனுற் பட்டு முதலான புடைவை ரத்னக்கம்பளம்வெண்பட்டு முஞ்சிப்புல் இவைகளை வாங்கி யம்முறைசெபிக்க.

(௬௨)

பத்தரான்வர் ஆசிரியர் முதலாயினார்க்குமடங்கட்டு
வித்து அதற்குவேண்டு முபகரணத்துடனே தான
மாகச்கொடுக்கில்தனைவாங்கின்குற்றம் போம்படி
பரிகாரமுணர்த்துகின்றார்.

சிறப்புறவேதிருமடத்தைச்செய்துதலைவணங்கித்தேவவினியானுமுய
ச்செறிந்திருக்கவென்றே, யறத்தினையா தர்த்தான் கையதுபரித்தா லுகில
றைந்திடுகநியுதமுறவாலையத்தினமர்ந்தே, பெறற்கரியாயான்றரவேபெற்றி
தனையென்றன்பிழைதீரவருந்துகவுள்ளளவு மெனப்பேசுங், குறிப் பினன்
கைக்கொண்டுமரணுந்தமுணல்கொடுமைகொள்கசிலநாளினுக்கேயவன் வி
னைக்குக்குறைந்தே.

*

எ-து. சிவபத்தர்கள்திருமடஞ்செய்து அதற்குவேண்டுமுபகரணத்துடன் ஆசி
ரியர்முதலாயினாரை அடியேனுய்யும்வண்ணந்தேவரீர்நீங்காது இத்திருமடத்திலெ
ழுந்தருளியிருக்கவேண்டுமென்றுவணங்கிக்கொடுக்க அதைவாங்கினவர்கள்சிவா
லயத்திலிருந்துஅகோரம் நூறுயிரஞ் செபிக்கக்கடவர் யாவர்க்கும்பெறுதற்குஅரி
யோய்அடியேன்கொடுப்பதனைப்பெற்றுளனதுகுற்றநீங்கவுள்ளகாலவளையும்புசித்
திருக்கவேண்டுமென்றுஇரந்துகூறுவானது குறிப்பினையுணர்ந்துஅவனிடத்திற்பெ
ற்றதனைத்தாமுள்ளளவும்அருந்துதல்கொடிது ஆதலான், அவன்வினைகெடுமாறுள்
ளமிரங்கிச்சிலநாள்அருந்தக்கடவர். எ- று. (எக)

அத்னைவாங்கிச் சிவனுக்கு நிவேதியாதிருக்கிற் பரிகார முதலியன
வுணர்த்துகின்றார்

தரப்பிறர்கைத்தாங்கியதுசங்கற்குநாளுஞ் சமைத்துநிவேதனஞ்செ
ய்யக்தவறியநாளூற்றெட், டுரைக்கசிவகுரவனுக்குமுட்டுகநாடோறுமொரு
தேசத்தயனட்டிலுன்னியவன்பாதஞ், சிரத்தையுறமலர்தூவித்திசையதனை
நோக்கித் தெண்டெனவே பணிந்தெழுக சிவனேசருடனே, விருப்புடனே
நாடோறுமிசைந்திடுகதீக்கைவேறற்றார்சாதியினுமொருபந்திமிசைவே. *

எ- து. தாதர்க்கள்தரவாங்கினதை நாடோறுஞ் சிவனுக்கும் ஞானுசாரியனுக்
குநைவேத்தியஞ்செய்க, செய்யாதொழியின் அக்குற்றம் போம்படி யகோரத்தை
நூற்றெட்டுருச்செபிக்க, ஆசாரியர்சமீபத்தில்லாவிடத்து அவர்பாதந் தன்றலை யிற்
பொருந்தவாதரவுடனேதியானம்பண்ணி மலராலருச்சித்து அத்திசையைநோக்கி

தெண்டாசாரமாய்வணக்கஞ்செய்க, இங்ஙனஞ் செய்தபின்பு சாதகர்முதலாயினருடன்கூடயிருந்துபொசிக்கக்கடவர், தனக்கொத்ததீட்சையுஞ் சாதியுமுடையவரல்லிலவர்களைக்கூடவைத்துநாடோறும்பொசித்தலேசிறப்பு. எ- று. (எச)

பந்திபோசனத்தால்வருங் குற்றமும் பாண்டத்தால்வருங்குற்றமும்போம்படிக்குப்பரிகாரமுணர்த்துகின்றார்

அற்றழியவாகாரதொடங்களென்று மருவினையு மெனக்குவிளைந்தழிந்தொழியவென்றும், பெற்றசிரத்தையினாலேயாக்கடனைப் பேணிப் பெற்றவற்றினைந்தினையும்பேதமிலிதன்னை, நெற்றிவிழிநின்மலனை நேயத்தாலாட்டுநிசியருந்திலாகாரதோடங்களீங்கு, மற்றழியுமரும்பாவநல்வினையுமாகுமவனது நற்புரிதன்னையடைந்துறலுமாமே. *

எ- து. பந்திபாண்ட மன்னுகாரமுதலியவற்றால் வருங்குற்றம் போகவேண்டுமென்றும், நான்செய்தமகத்தாயிருக்கிறபாவம் விளைந்தழியவேண்டுமென்றும்ஒருவன்ஆதரவினாலேபசுக்களைஇன்றுகடபோற்றியதனிடத்துண்டாகியபால்முதலியவற்றால்பிரமகூர்ச்சத்தைத் தாபித்துஅபேதனாகியும், நெற்றிக்கண்ணையுடையநின்மலனாகியுமிருக்கிறசிவனுக்கபிடேகஞ்செய்து உபவசியாயிருந்துஅதனைப்பருகில் அக்குற்றம்போய் மகத்தானபாவங்களும்போம், அதனாலேசித்திபுத்திபிறந்துசற்கன்மத்தையனுட்டித்ததற்குரித்தாய தபோபலத்தினாலே யவனது மகாசிவலோகத்தையடைந்துமிருக்கலாம். எ- று.

அடைந்துறலுமாமென்றவும்மை. சிறப்பு. ஏகாரம். ஈற்றசை. (எரு)

பிரமகூர்ச்சத்துக்குரியபசுக்களின்முறைமையுங்கோமயங்கொள்ளுமுறைமையுமுணர்த்துகின்றார்.

பிணிமூப்புச்சாகன்றுபிறந்திளையகன்றுபெறுங்கன்றுகருக்கன்றுபெறுக்கன்றாண்மலமென், றெணியவிருநான்கொழிந்தவெவையுமிலியனவேயிவற்றுதித்தமயமாதியாட்டிடுகவிறைக்கே, மணிலணவாமுன்மயத்தைத்தாமிரத்திற்கொள்கவானிடையேகமலத்தின்வகிர்ந்துநடுமயத்திற், பிணியிலர்கைப்பெருவிரலிற்பாதியெனுமளவுபெற்றிடுகமற்றையவுங்கொள்ளுமுறைபேசுவமே. *

---

* பிரமகூர்ச்சரம், பஞ்சகௌவியம்.

எ - து வியாதிப்பசு - கிழப்பசு - கன்றுசெத்தபசு - கன்றுபோட்டுபெத்த நாட்சூதகமுடையபசு - கிடாரிக்கன்றுகியபசு - சினைப்பசு - மலட்டுப்பசு - மரத்தைத்தின்னும்பசு - என்றுகருதுமெண்வகைப்பசுக்களையு கீக்கியமற்றப்பசுக்களெல்லாமினிமையையுடையனவாம், இவற்றின்கட்டோன்றியகோமயமுதலியவற்றால்சிவனுக்கபிடேகஞ்செய்க, இவையிற்புகைநிறத்தையுடையபசுகோமயமிடும்போது பூமியில்விழுமுன்னிடையேதாமரையிலையிலேந்தினகோமயத்தினை வேநோயில்லாதார்கைப்பெருவிரலிற்பாதிமாத்திரம்வகிர்ந்தெடுத்துக்கொள்க மற்றைக்கோசலமுதலாயினவுங்கொள்ளுமுறைமையைமேற்சொல்வாம். எ - து மயம் - எ - து - தலைக்குறை, (எசு)

கோசலமுதலியவைகொள்ளும்பசுவினிறமுமவற்றின்பலமு
முணர்த்துகின்றார்.

பலமொன்றுநீர்கொள்கநிலநிறப்பசுவிற்பால்கொள்கபலமைந்திற்செம்மைநிறப்பசுவின், பலமூன்றினுறத்ததியைப்பானிறத்திற்கொள்கபலமிரண்டினெய்கொள்ககபிலைநிறப்பசுவி, னலநிவைகளரியனவேற்கபிலைதனிற்கொள்கவைந்தினையுமதுதானுமரியதுவேயாகிற்,பலநிறத்தும்பாலெழுவாயைந்தினையுங்கொள்கபசிதணியவூட்டியபின்பால்கொள்கபாங்கே. *

எ - து வெளி - கபிலைநிறம் - கருமைசேர்ந்தபொன்னிறம் - ஒருபலமாவன - இரண்டுகுன்றிகொண்டது - ஒருவுழுந்து - உழுந்துபத்துக்கொண்டது - ஒருகழஞ்சு - கழஞ்சு - எட்டுக்கொண்டது - ஒருபலமென்றறிக. (எஎ)

பஞ்சகெவ்வியந்தாபித்தற்குக்கோட்டங்கொள்ளுமுறைமை
யுணர்த்துகின்றார்.

கோட்டந்தண்டுலத்தொன்பான்கொள்கதருப்பையி னற்கொள்ளலுமாமுகமைந்திற்குறித்தநிறமுறவே, தீட்டிடுகநடுப்பூர்வந்தெற்குவடக்கொழிவுஞ்சிறப்புறவேயீசத்திற்பொதுமைநிறஞ்செய்க, கூட்டிடுகவிவைகம்மிற்கனகபாத்திரங்கள்கொள்ளலுமாம்வெள்ளியி னற்பலாசினுங்கொண்டிடுக, வீட்டுடையதாமிரத்தினியற்றலுமாமுறையேயிவற்றினுக்குப்பெயர்களையுமியம்பியிடுவாமே. *

எ-து. சிவன்சன்னிதியில்இருமுழமாதல், ஒருமுழமாதல், சதுரசிரமாகமெழு

பெதின்பேரில்லெல்லாதலரிசியாதல் பரப்பிப்பதுமமாக வொன்பது கோட்டம்பி றப்பித்து, அதில்அஞ்சாதல்மூன்றுதல்தெற்பையை வடக்குங்கிழக்குநுனியாகக்கி ழக்குமுதலாகப்போட்டந்தக்கோட்டத்தினடுவில் வெள்ளையுங்கிழக்குமுதல்வடக் கிருகவடைவேபொன்மை. கருமை. வெண்மை. செம்மையாகவிந்தவன்னமிட்டுஈ சானகோட்டத்திற்பஞ்சவன்னத்தையுங் கூட்டிவிட்டந்தக் கோட்டங் களையடை வேபூசித்துப்பொன்முதலியவற்றாலுண்டாக்கியபாத்திரங்களை யியன்றதொன்றை வைக்கக்கடவர், அந்தக்கோட்டங்களின்பெயரைமேற்சொல்வாம். எ- று. ஈவகோட்டம்பிறப்பித்த லேப்படியெனில். அஞ்சுக்கஞ்சு சூத்திரம்போடிற்கோட் டம்பதினொரும். அதினடுவினாலுபதத்தையுமழித்தொன்றாக்குக, திக்குகளில்நடுப்ப தமிரண்டையுமொன்றாக்குக, ஆகப்பதம். ஒன்பதாம் (எஅ)

கோட்டபூசைபண்ணுமுறையுணர்த்துகின்றார்

புரிகசிவதத்துவகோட்டாயநமவென்றேபூசைநடுக்கோட்டத்திற் பூரு வகோட்டத்திற், புரிகசதாசிவதத்துவகோட்டாயவென்று பூவானும் பூசனை பைத்தென்புடைக்கோட்டத்திற், புரிகவித்தியா தத்துவகோட்டாய நமவெ ன்றுபூவானும்வடபாற்கோட்டத்தினிடம்பூசை, புரிகபொதுப்புருட தத்து வகோட்டாயகாலதத்துவகோட்டாயவெனமேல்பாற்பூவாலும். *

எ- து. வெளி. (எக.)

மேற்கூறியமுறைமையேபாத்திர பூசையும் பான்முதலியதிரவியமிடுமு றைமையுமுணர்த்துகின்றார்

உரைத்தமுறைநினையுறவேபாத்திரப்பேருணர்க வொளிருஞ்சுப்பிரதி ட்டைசுசாந்தையேயென்றுந், தெரித்தறைகதேசோவற்பாத்திரமேயென்று ஞ்சிறப்புடையவிரற்றினசபாத்திரமேயென்றும், பரிக்குமிய னல்லமிர்தபா த்திரமேயென்றும்படித்தறிந்துபஞ்சகநற்பாத்திரத்தின்பெயரால், அருச்ச னையைநமோந்தமுறவலரானுமாக்கவடைவுறவேபாறதிநெய்நீர்மயமாக்குக வே. *

எ - து வெளி (அய)

மேற்பான்முதலியதிரவியங்களை யீசானமுதலான மந்திரத்தால்அ பிமந்திரிக்குமுறைமையுணர்த்துகின்றார்

உச்சரிக்கவீசானமந்திரத்தையொருகா லுத்தமத்த பால்வலக்கைதொ ட்டொருமைபுறவே, யுச்சரிக்கபுளிப்பொழிந்ததுதியிருகாற்புருடமொள்ளி யவத்திரத்துவடித்தொளிவுடையநெய்யின், உச்சரிக்கவகோரத்தை முக்கா ணன்குறவேயொழுகுசலம்வாமத்தையுச்சரிக் கமயத்தின், உச்சரிக்கசத்தி யோசாதத்தையைங்காலுடல்வெறுத்தான்கோமயமுன்புரிந்திடுகவுணர்ந்தே

எ- து. உத்தமமாகியவலக்கையிற்றற்சணிமுதலுலுவிரலாலும் ஈசானமந்திரங் கொண்டொருகாற் பாலைத்தொட்டபிமந்திரிக்க, ஏனையவுமிவ்வாறேயேற்றியேற்றி யபிமந்திரிக்க,இதுசிருட்டிக்கிரமம் இதுகிரகத்தனுக்கென்றறிக. முத்திகாமனுளவ ன்சத்தியோசாதமுதலானமந்திரததைக்கோமயமுதலானதிரவியத்திலேந்துமுதலா கவொவ்வொன்றுகுறைத்தபிமந்திரிக்க. எ- று. (அக)

மேற்சுத்தோதகந்தாபிக்கு முறையும் அவைகளையொன்றுகக்கூட்டு முறையுமுணர்த்துகின்றார்

அரிச்சிக்கவீசானத்தவ்வியத்தகோட்டமதன்மீதுசத்திதத்துவபாத்திர த்தையலரால், அரிச்சித்தோர்பலத்தளவு சுத்தசலம்பூரித் தறுகுகுசைசந்த னமுமதனுடனேகலந்து, தெரித்தறிந்தசிவகாயத்திரியையறுவாரஞ்செவித் திடுகமூலத்தைச் சிறப்புறவேசெப்பிப், புரித்திடுக மயநீரி னீர்நெய்யி னெய் யைப்பூரிக்கததிதன்னிற்றதிபாலிற்புகவே. *

எ- து. ஈசானதிக்கில்அவ்வியத்தகோட்டத்தைப்பூசித்து அதிலேபாத்திரத்தை வைத்துஅந்தப்பாத்திரத்திலேசத்திதத்துவத்தைப்பூசித்து அதிலேயொருபலஞ்சுத் தசலத்தைப்பூரித்துஒட்டைநீளத்திலேகூர்ச்சத்தைப்பண்ணி யதினுடனேயறுகுஞ் சந்தனமுமதிலிட்டுசிவகாயத்திரியைநாடோறுஞ்செபித்து அதனுண்மையை யறிந் தவர்கள்,அக்காயத்திரியையாறுபிரகாரமந்திரிக்க, பின்புமூலமந்திரத்தைநன்றாக வுச்சரித்துக் கொண்டு கோமயங். கோசலத்தினும். கோசலம். நெய்யிலும். நெய் தயிரிலும். தயிர். பாலினும்.ஒன்றாகக்கூட்டுக, எ- று. அல்லது எல்லாத்திரவியத் தையும்பாலிலேகூட்டலுமாம். (அஉ)

சுத்தோதகங்கூட்டிப்பூசிக்கு முறைமையுணர்த்துகின்றார்.

உச்சரித்தே சிவகாயத்திரிதன்னை யொருகா லுதகத்தைப் பாலுடனே யொடுக்கிடுகவனைத்தும், உச்சரிக்கபிரமாங்கஞ் சிவகாயத்திரியு மொருதாம் நெட்டுறமூலமந்திரமுமுரைக்க, வெச்சமறவெண்டிசைக்கும்பந்தனத்தைமி யற்றி யியற்றிடுக வவகுண்டந்தேனுவின் முத்திரையும், உச்சரித்தேசத்திம லுவுறத்திடுகமகத்தென்றுரைத்தபெருமுத்திரையுமூலத்தையுரைத்தே. *

எ- து. சிவகாயத்திரியையொருகாலுச்சரித்துச்சுத்தோதகத்தைப்பாலுடனே கூட்டுக், அஃதுச்சரிக்கவருகமல்லாதார். இருதயமந்திரத்தையுச்சரித்துக்கூட்டுக எல்லாக்கூட்டியிருக்கிற நடுவிற்பாத்திரத்தைத்தொட்டுச் சங்கிதையையுஞ்சிவகாயத்திரியையுமொருகாலபிமந்திரித்துப் பணிமாறப்பண்ணி யபிடேகஞ்செய்க, பரிகாரகிமித்தமாகின்மூலமந்திரத்தை நூற்றெட்டுருபஞ்சகெவ்வியத்திலே யபிமந்திரித்தத்திக்குபந்தனஞ்சோடிகாமுத்திரையினாலும் அவகுண்டனம்பரிகாரமுத்திரையினாலும். தேனுமுத்திரை. வவுஷடந்தமானசத்திமந்திரத்தாலும். பரமீகரணம்மூலத்தாலுங்கொடுக்க. எ- று. பரமீகரணமெனினும். மகாமுத்திரையெனினுமிமுக்க.

(அகூ)

பஞ்சகௌவியத்தைவிதிவழிதாபித்துச்சிவனுக்கபிடேகஞ்செய்யிற்
பிறரறியாமற்றான்செய்தபாவம்போமென்பதுணர்த்துகின்றார்

ஆட்டிடுகபச்சிமதிக்கானனனுக்கமலற்கதுதன்னையான்புரிந்த வவலவினைக்குய்யம், ஓட்டிடுகவென்றதனையுண்டுபகலிரவுமுறங்காதே பூருவதிக்கானனனுயுற்றே, நாட்டமவன்றிருமேனிநாடியிடநாவாலோங்காரமுன்மூலமந்திரத்தைநவின்று, வீட்டிடுகபிறரறியாதேபுரிந்தவவலவினைதன்னைமற்றை வினைபோக்குவதுவியப்போ.

*

எ- து. பச்சிமதிக்குமுகமாயிருக்கிறவாலயத்துச் சிவபெருமானுக்கு அப்பஞ்சகௌவியத்தையபிடேகம் பண்ணி யான்பிறரறியாமற் செய்ததிவினையை யோட்டவேண்டுமென்றுபகற்பொழுதுண்டிரவு உறக்கமுமில்லாமலந்தச்சிவனதுசன்னிதியிற்கிழக்குமுகமாக விருந்து, கண்ணுற்றெரிசித்து, நாவாற் பிரணவமுன்பானபஞ்சாக்கரத்தைச்செபித்து, அத்திவினையையொழித்திடுக, அஃதுவியப்போ வியப்பல்ல. எ- று. வலம். நல்லது. அஃதல்லாததவலம். வினைக்குய்யம். என்றது. பிறரறியாமற்றானேசெய்தபாவமெனவறிக.

(அச)

அதுதாபித்தபிடேகித்தற்குக்காலவிசேடமு மெளிதிற்றாபிக்குமோர்வகையுமுணர்த்து கின்றார்

ஆட்டிடுகவபரபக்கத்தட்டமியினிசியிலானைந்து மமலேசனணிமுமலி
லன்பா, லூட்டிடுகதேசிகன்றான் றனக்கடிமையொட்டி யோட்டுதற்குத்திவி
னையையொருப்பட்டான் றனக்குக், காட்டியவிம்முறைநவமி பதினான்குக
றுங்கருத்துறவேசெய்தருத்திற் கரிசவலங்கழியு, மீட்டியிவை யைந்தினையு
மிரதயத்தாற்செபித்தேயிறைவனணிமுடிக்காட்டியருத்தலுமாமெனிதே.

எ- து. அபரபக்கத்தட்டமிநவமிசதுர்த்தசியிந்தமூன்றுதிதிகளிலாசாரியனு
வன்பிரமகூர்ச்சத்தைத்தாபித்து சிவனுக்கபிடேகஞ்செய்து தனக்கடிமையாகவ
ன்பட்டுத்தீவினையையோட்டுதற்குத்துணிந்துபவசியாயிருக்கிறமாணுக்கனுக்குரு
த்திவிக்கிலவன்பிறரறியாமற் செய்தகுற்றத்திலொன்றுபோமல்லாதொருபாத்தி
மாகிற்சுப்பிரதிட்டாயநமோவென்றுபாத்திரத்தையுமருச்சித்துச்சிரசிலுலையைந்
துபாத்திரத்தையுமாவாகனம்பண்ணி யதிலேயைந்தையுங்கூட்டி யிருதயமந்திரத்
தாலருச்சித்து அபிடேகஞ்செய்து அதனைமுன்புபோல விராத்திரியுமுபவசியாயத
னைப்பொசிப்பிக்கிலக்குற்றத்திலொன்றுபோம். எ- று. (அ௫)

பஞ்சகௌவியமுண்டாதற்பொருட்டுக்கபிலைபூசையுணர்த்துகின்றார்

ஆருயிரினருவினையையறுத்தறத்தையாக்க வமலவரனருள்புரியப்பாற்
கடலினுதித்துப், பாரிட னைப்பாற்றியிடும்பயோதரியேதாயேபற்றுகபுல்லெ
ன்றுவடமொழிப்பொருளைப்பகர்க, யாரியத்தை வல்லாரா ரியம்பகர்ந்துபுல்
லையருத்திடுகவருக்கியத்தைத் தெளித்திடுகவலருங், கூரருளாற்சுட்டிடுகசும்
பிடுகபாலுங்கொண்டுமுறையமலன் முடிக்காட்டுகபோங்குற்றம்.

எ - து நின்மலனாகியசிவன்றனது கிருபையினாலேயான்மாக்கள் செய்த
பாவத்தைப்போக்கிமோக்ஷமடைதற்பொருட்டுத்தேவர்களுமசுரர்களுங்கூடியமு
தங்கடைகிறகாலத்திற் பாற்கடலிற்றோன்றியான்மாக்கடுக்கத்தைப்போக்கான்
றபயோதரத்தையுடையமாதாவே நான்தருகிறபுல்லைநீகைக்கொள்வாயாகவென்
றுவடமொழிப்பொருளைச்சொல்லுக, அம்மொழிக் குரியாரவ் வடமொழி மந்திர
த்தைச்சொல்லியப்புல்லையருத்திடுக, நந்தைமுத்லியபசுக்களின்பெயராலருக்கி
யங்கொடுத்து மந்திரத்தாலருச்சித்துவலமாகவந்துவணக்கஞ்செய்து முற்கூறிய
முறையேபான்முதலாயினகொண்டுபிரமகூர்ச்சந்தாபித்துஅதனைச்சிவனுக்கபிடே
கஞ்செய்யிலவன்செய்தபாவமெல்லாம்போம் எ - று (அ௪)

மனவாக்குகளால்வரும்பாவம்போம்படிபரிகாரமுணர்
த்துகின்றார்.

சங்கரனைச்சதாசிவனைத்தரித்திதையமலரிற் றண்புனலுளாய்ந்தி ருந் துவாயுவினைத்தடுத்து, மங்கமனோதோடமெனச்சிவகாயத்திரியையமானதத் தாலட்டசதமுச்சரிக்கமாயும், பொங்கியபொல்லாங்கொன்றுவாக்கினை நுப் ள்ளையைபோமென்றுவாக்கடக்கப்பொறியழலையோம்பி, மங்கை யொருபங்க னடிமலர்சூட்டியென்றன்வாக்கியன்றதோடத்தைமாற்றிடுவாயெனவே *

எ - து இதயகமலத்தின்கட்சதாசிவமூர்த்தியைதியானஞ்செய்துவாயு வைமடித்துக்குளிர்ச்சியினையுடைய செலத்தின்கண்அகமருடணமாகமூழ்கியிருந் தசிவகாயத்திரியைநூற்றெட்டுருமானதமாக மூன்றுநாட்செபிக்கில்மனத்தாலன் ன்டமனைவாடன்னையனையுமாதரவுகூரஎன்றுமுன்னுரைத்துபாவவியலிற்கூறிய நா ல்வகைக்குற்றத்திலொன்றுபோகும்,மூன்றுநாளுணலொழிந்துமவுனியாய்ச்சிவாக் கைபோமத்தைப்பண்ணிச்செபமுமுற்கூறியமுறையேசெய்து சுவாமிநான்வாக்கி னாற்செய்தகுற்றத்திலொன்றுபோக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளில் அழு கைபுக்கோளும்பொய்யுமயலபவாதந்தானுமென்றுமுன்னுரைத்துபாவவியலிற் கூ றியநால்வகைக்குற்றத்திலொன்றுபோகும் எ - று (௨௧)

காயத்தினுல்வரும்பாவமுந்தும்மல்முதலியவற்றுல்வருங்குற்றமு ம்போம்படிபரிகாரமுணர்த்துகின்றார்.

கழிந்துவிடுங்காயத்திற்கரிசொன்றுவிளையக்கட்டுமைக்கைதான்மு ன்றுவிட்டுனைலுங்கடுக, வொழிந்தறலைச்சந்திதொறுமுண்டு மடவார்தோ ளொன்றுதேசிவனடியையொருப்பட்டேநினைக்கி, விழிந்த விருமற்றும்ம ல்பொருமலிவையெழினேயெழுமூன்றோங்காரமுறவியற்றுகவாயாமம், மொ ழிந்தவர்சூத்திரர்தம்மைச்சூத்திரரோமொழித்தேயுச்சரிக்கலைவந்தெழுந்து மைம்முகனையுணியே.

*

எ - து மூன்றுநாளுபவசியாய்ச் சந்தியாகாலங்கடோறுமூழ்கி நியமஞ்செ ய்த சலத்தைப்பொசித்துமவுனியாய்மாதர்கலவியைப் பொருந்தாமற்சிவனைத் தியானஞ்செய்துமுற்கூறியமந்திரத்தையுறுதியாகச்செபஞ்செய்யின் ஆறுவதுபாவ வியலில், அழுகையுங்கோளுமென்றகவியுள்மற்றையமனையாடோனைந்துமுவுத வாதியானகாயத்தினுல்வருங்குற்றநாலிலொன்றுபோம், பொல்லாதெனறுசொ ன்னவிருமல்முதலாயினதுண்டாயினக்குற்றம்போம்படி யிருபத்தொருபிரகாரம் பிரணவத்தையுச்சரித்துப்பிராணுயாமஞ்செய்க, சூத்திரரானவர்கள்சதாசிவமூ ர்த்தியைத்தியானஞ்செய்து பிரணவநீக்கிப்பஞ்சாக்கரத்தையுச்சரித்துப் பிராணு

யாமஞ்செய்க. எ - று (அஅ)

மேற்றொகுத்துப்போந்தசதாசிவநாயனார்க்குத்தி
யானமிரண்டிவிருத்தத்தாலுணர்த்துகின்றார்.

உச்சிமுகமீசானமொளிதெளியபளிங்கேபுத்தரபூருவதிசையைநோக்கியுறுமுகந்தே, நிச்சயித்தமுகத்தின்கீழ்ப்பூர்வதிசைநோக்கிநிகழுமுகந்தற்புருடங்கோங்கலர்போனிறமே, யச்சுறுத்துமகோரமுகமறக்கரிதுகராளமவிழ்தாடிவலத்தோளிற்றென்னோக்கியமருஞ், செச்சைநிறத்தெரிவைமுகமிடத்தோண்மேல்வாமஞ்சிறுபுறத்தின்முகஞ்சத்தியோசாதந்திகழ்பால். ❊

எ - து ஈசானமுகஞ் சிறுபிள்ளைமுகம்போன்றுசுத்தப்படிகமயமாயனவரதமுமீசானதிகையைப்பார்த்துமேனோக்கினதாயிருக்கும்இங்ஙனங்கூறியமுகத்தின்கீழ் கோங்கம்பூநிறம்போன்றதற்புருடம்யௌவன்னத்தையுடையவர் கண்முகம்போன்றுகிழக்குமுகமாய்விளங்காநிற்குங் கண்டவர்களுக்குப்பயங்கரமுமாய்க் கீழ்நாலாநின்றதாடியையும்புறப்பட்டவெயிற்றினையு முடைத்தாய்க்கறுத்துவிருத்தர்முகம்போன்றவகோரமுகம்வலதுதோளின்மேல்தெற்குமுகமாகவிருக்கும்,வெட்சிப்பூநிறம்பெற்றுமாதர்வதனம்போல அவர்களாபரணத்தையுமுடைத்தாய்வாமதேவமுகமிடத்தொளின்மேல்விளங்காநிற்கும், பிடரியில்மேற்றிசையைப்பார்க்கவிருக்கிறசத்தியோசாதமுகம் இராசாக்கள்முகம்போன் றுபால்நிறம்பெற்றிருக்கும். எ - று சிறுபுறம் - பிடரி (அகூ)

திருவுருவந்தெளிபளிங்குசடாமகுடத் திதழிசிறுபிறையு மூவைந்து
திருநயனம்வலப்பாற், கரதலத்திற்சத்தி யபையஞ்சூலநீண்ட கட்டங்கந்தம
ருகமுமற்றையிடக்கரத்தின், வரதமுமாதுளங்கபலம் போகிசெபமாலைமண
மலிநீலோற்பலமுமுடையர்வயதீரெட், டுருவிரட்டியுறுப்பிரண்டுபதம்பது
மாதனந்தானுறவிருப்பர்சதாசிவர்தத்துவதவிசினுகந்தே.

எ- து. படிகம்போன்றதிருமேனியையுஞ்சடாமகுடத்திற்கொன்றைமாலையிளம்பிறையையும்பதினைந்துதிருநயனமும்வலப்புறத்துத்திருக்கரத்தில்வேல். அபையஞ். சூலம். மாத்திரைக்கோல். தமருகமிவைகளையுமிடப்புறத்துத்திருக்கரத்தில்வரதம். மாதுளம்பழம். பாம்பு. செபமாலை. நீலோற்பலம். இவைகளையுந்தரித்துப்பதினாறுவயதையுமுப்பத்திரண்டுறுப்பையுமிரண்டுசீபாதத்தையுமுடைய சதாசிவதே

லாபனுர்சதாசிவ தத்துவத்திற் புத்திகாரியமாக த்தன்மஞ்ஞானமுதலிய சிங்கக் கால்களையு மாயிரந்தளத்தையு முடைய பத்மமேயாதனமாக வெழுந்தருளி யிரு ப்பர். எ- று. (கய)

லபாங்கத்திற்சதாசிவத்தியானமுணர்த்திமேற்போகாங்கபூசைசெ
ய்தற்குப்பிரமாங்கங்கள்மூர்த்தியாதலையைந்துசெய்யுளாற்பிறித்து
ணர்த்து கின்றார்

திருவுருவந்தெளிபளிங்குதிரிநயனம்பிறையுஞ் செறிசடையர்வலக்கர த்திற்றிரிசூலம்வரதங், கருதுகமற்றைய கரத்திற் செபமாலை யபையங் காரு ணிகர்க்கிசானர்க்கவர்தமக்குக்கனிட்டர், திருவுருவங்கோங்கினலர் திரிநய னங்கரமுன்செப்பியதே திருநாமந்தற்புருடதேவர், வரியரவு மிளம்பிறையு ஞ்சடைமுடியின்வைத்தார்மலரடியைமறவாதார்வல்வினையைமாய்ப்பார். *

எ- து. திருமேனிபடிகம்போன்றுமூன்றுதிருநயனத்தையுமுடையராய்த்திருச் சடாபாரத்தில் ஞானசந்திரனையும்வலப்புறத்திற்சூலம். வரதம். இடப்புறத்திற்செ பமாலை. அபயம். இவைகளைத்தரித்துக்கிருபையையுடையராயீசானதேவரிருப்ப ர், அவர்க்குதாழ்ந்திருக்கிறதற்புருடதேவர்கோங்கம் பூப்போன்ற நிறத்தையுமூன் றுதிருநயனத்தையும் வலப்புறத்தில் சூலம். வரதம். இடப்புறத்திற். செபமாலை. ய பையம். திருச்சடாபாரத்திலிளம்பிறையையுந் தரித்திருப்பர். இந்தமூர்த்திகளைத்தி யானஞ்செய்தவர்களேவலிதானவினைகளைப்போக்கினவர். எ- று. (கக)

கரியவுருவெரியசடைகபாலநிரைமாலை கராளமுகங்கவிழ்தாடிகண்மூ ன்றுவட்டங், கரதலங்களொருநான்குங் கட்டுரைத்தபடியே காட்டின மூன் னிருநான்குகரமுமுளரென்றே, வெருவியிடமருவலரைவெருட்டியவுக்கிர த்துவிக்கிரகாகோரமெனவிளம்புபெயருடையா, ரிருபதமுமொரு பொழு துமறவாதேயேத்தியெண்ணுமவரிடர்வினையையிடிப்பார்களென்றும் *

எ - து வெளி - எரியசடையென்றது அக்கினிச்சுவாலை போன்ற குஞ்சியை யுடையசடை கபாலநிரைமாலையென்றது பிரமவிட்டுணுக்கள்கபாலத்தை யொழு க்காக்கிக்கோத்துமுழங்காலளவாகத்தரிக் குமாலை மூன் உடலூறுபடவெண்ணும் எ ஆம் திருவிருத்தத்திலெட்டுப் புயமாகத்தியானங்கூறினதை உரைத்துமென்ற லென்னுந்தந்திரவுத்தியால் இத்திருவிருத்தத்திற்கூறினார்

தேமொழியாளுமையென்னத்திருமுகமுந்தோடுந்திலதநுதற்சிறப்பு மிருளளகவிதச்செறிவும், வாமமெனுந்தேவர்க்குவாய்த்தனவேசெம்மை வடிவுமவர்கரதலங்கண்ணுதிதனில்வகுப்பே, சேமவுருத்திகழ்சங்கஞ்செ டாமுடியிற்பிறையுந்திரிநயனங்கரதலங்கள்செப்பியமுற்படியே, நாமமது சத்தியோசாதமெனநவின்றநாதற்குநயந்தவரைநினைக்கவினைநாசம். *

எ - து வெளி - மாதர்முகம்போலவாமதேவமிருத்தலாற்றேமொழியாளு மையென்னச்சிறப்பித்தார், சேமம் - இன்பம் - இவ்வின்பந்தானே திருமேனி யென்க.

[௯௫]

திருவுருவமிரதயர்க்குத்தவளமெனத்தெளிகசேடித்தவுறுப்பனைத் துஞ்செப்பியமுற்படியே, திருவுருவங்கனகமெனச்சிரத்தினுக்குத்தெளிக சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே, திருவுருவஞ்சிந்தூரமென த்தெவிகசிகைக்குச்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பியமுற்படியே, திரு வுருவம்வண்டினிறங்கராளமுகங்கவசஞ்சேடித்தவுறுப்பனைத்துஞ்செப்பிய முற்படியே. *

எ - து வெளி (௯௪)

ஒவ்வொன்றேதிருமுகமுநேத்திரங்கட்குணரிலுடலொளியுமிரவிமதி யுதாசனனையொக்கு,மிவ்விரண்டேகரதலமும்வரமபையமவையுமிவ்விரண் டேவிழியுமெனவெண்ணிடுகவெழிலார், செவ்வரத்தந்திருவுருவங்கரதலமீ ளாந்துந்திருநயனமொருமூன்றுஞ்சினத்திடித்தகுரலு, மிவ்வகையெல் லாமுடையரத்திரனென்றியம்புமிவரடியைபிரதயத்தினிருத்தினிடரிலையே *

எ- து. நேத்திரமூன்றுக்கு மொவ்வொருதிருமுகத்தை யுடையராய் முச்சுடர் போன்றநிறத்தையுமிவ்விரண்டுதிருநயனத்தையும்வரதமபையமாகியவிவ்விரண்டு கரங்களையு முடையராய் நேத்திரதேவர்கள் விளங்கா நிற்பர்கள், பிரகாசத்தையு டையசெவ்வரத்தம்பூப்போன்றநிறத்தையு மூன்றுதிருநயனத்தையுங்கோபத்தினு லேயிடிபோன்றதிருவாக்கினையும்வலப்புறத்திற்கமண்டலம். வேல். சூலம். மழு.பி ரமதண்டம். இடப்புறத்தில். வாள். கேடகம். நாராசம். வில். செபமாலை. யிவை களைப்பத்துக்கரங்களிலுந்தரித்திருப்பரென்றுதிவ்வியாகமங்களில் அத்திரமூர்த்தி த்தியானஞ்சொல்லுமிவ்வத்திரமூர்த்தியை யிருதயத்திற்றியானிக்கிலிடர்களில்லை. எ- று. ஏகாரம். தேற்றம். சிலவாகமங்களில்வலப்புறத்திற்சூலஞ்செபமாலையென

வுமிடப்புறத்திற்கபாலமுங்கமண்டலமுமெனவும்பேதமாகக்கூறும். (௧௫)

அகளமாகியசிவன்றானே ஆன்மாக்கள் போகமோக்ஷமடைகையின்
பொருட்டுச்சகளீகரித்ததென றுணர்த்துகின்றார்

வாக்குளாயாலறிவரியன்வாக்குணர்ந்தமனத்து மநிப்பரியனினையினி
யனாதிமலமுத்த, னேக்கிமலநோயாளர் போகவிதநுகர்ந்து நோயற்றுத்த
ன்மயத்தைநோக்காதேநோக்க, நீக்கமிலாப்பஞ்சவித நிறத்துருவி னிகழ்ந்
தானிலனீறுமவனுருவே நீங்கினனோநிலத்து, மாக்கையிலா னாக்கை யினை
யாதரித்தானணுக்கட்கழுக்கறுக்கவல்லதறிவாரவனையாரே. ✻

எ- து. வைகரிமுதலியவாக்கினாலுமவ்வாக்கினாலுண்டாகிய வாகமப்பிரமாண
ங்களினாலுமறிதற்கரியவனாய்ச் சாத்திரத்தினாலறிந்த மனத்தாலு மளவிடுதற்கரிய
வனாய்த்தனக்கொருவருமொப்பில்லாதவனுமாயனாதியே மலத்தினின்றும் விடப்ப
ட்டவனுமாயிருக்கிறசிவன் ஆணவமாகியவியாதிகளையுடைய வான்மாக்களுடோறு
ந்தன்னைத்தியானஞ்செய்து அபரபோகம்பரபோகமாகியபோகபேதங்களைப்பொ
சித்துக்கண்ணுக்குப்படலம்போனவாறேபதார்த்தங்கள்விளங்குமாறுபோலவான
வாதியின்வாதையில்லாததற்சொரூபத்தைப்பாராமற்பார்த்திருக்கவே ஆன்மசொ
ரூபம்விளங்கித்தற்சொரூபம்விளங்கப்பஞ்சவன்னசொரூபமாகிய அஞ்சுதிருமுகத்
தினையுடையசதாசிவமூர்த்தியையதிட்டித்துக்கொண் டதிலேவியாபித்திருந்தான்
என்வேயேனையவிடத்தும்வியாபிக்கவில்லையோவென்னில்நாதமுதற்பிருதிவியீறான
தத்துவங்களெல்லாமவனுக்குத்திருமேனியேயிங்ஙனங்கூறிய நாதமுதற்பிருதிவியீ
றானதத்துவங்களோடும்விடப்பட்டுநீங்காதிருக்கையினாலேதனக்கென்னவொருவ
டிவில்லாதவச்சிவன்றிருமேனிக்கொண்டதுயாதுகாரணத்தாலென்னிற்றன்னைத்தி
யானஞ்செய்யுமான்மாக்களுடையசெனனமரணமாகிய குற்றத்தைப்போக்குகை
யின்பொருட்டன்றித் தனக்கொரு பிரயோசன நிமித்தமன்று. அவன் றிருமேனிக்
கொண்டுவேதாகமங்களையருளிச்செய்யாதபோது அவனுடையமகிமையையார்தா
னறிவார்கள். எ- று. (௧௬)

முத்தியினையடையக்கருதுமவர்க்கோருபாயமுணர்த்துகின்றார்

சேர்ந்திடுகசதாசிவநற்றிருவெல்லைவட்டந்தீவினையுந்தீர்ந்துசதாசிவபு
ரியைச்செறிவார், சார்ந்திடுகவப்புரியுட்டமையுணர்ந்தார்தாளைத் தாமறிவ
ரொம்பிணியுமருந்துமெனத்தம்மு, ளோர்ந்தவர்தமேவலினுக்கொருப்படுக

விருப்பாலுவிர்க்குயிராய் நின்றசிவனுள்ளொருமையுணர்ந்தே, தீர்ந்திட வேபசுபாசமூலமலமதுவுந்தேசிகனையதிட்டித்துத்திருவருளாப்புரிவன். ❋

எ - து காசிமுதலியதிருப்பதிவீட்டிலியன்றதொன்றையடைந்துஅந்தத்தலத்தில்நித்தியகன்மமுடிந்துச்சிவாலயச் சேவைபண்ணி யந்தத்தலத்திலிருக்கிலவர்களன்மவாதையின்றிச்சதாசிவபதத்திலுண்டாகியபோகத்தைப்பொசித்திருப்பர்கள், அந்தத்திருப்பண்டவீட்டில்வாசமாயெழுந்தருளியிருந்து தம்மையுணர்ந்தஞாதாக்களைச்சென்றடைந்துமாதாவானவள்குழந்தைக்குவியாதியின்னதென்றறிந்துமருந்துகொடுக்குமாறுபோல இவர்நமக்குப்பக்குவத்துக்கீடாகஅனுக்கிரகஞ்செய்வரெனத்தன்மனத்திற்கருதிவிருப்பத்துடனேநாடோறுமவருடையஏவலைச்செய்துவரினப்பொழுதுசருவான்மாக்களிடத்திலும்வியாபியாயிருக்கிற சிவனிந்தமாணுக்கன் கபடமன்றியொருமைப்பாட்டாற் செய்யும்வழிபாட்டினையறிந்துஞானுசாரியனையதிட்டித்துஆன்மாக்களுக்குஆணவமுதலியமலங்களைநீக்கிச்சிவானந்தானுபூதியைஅனுபவிக்கும்பொருட்டு அனுக்கிரகம்பண்ணுவன் எ - று

தீவினையுமென்றவும்மையால் - ஆணவாதியுமெனவறிக. (௧௭)

அவரனுக்கிரகம்பெறுமுறைமையுணர்த்துகின்றார்.

எழுதுகொடியிடைமடவாரினைவிழிவேலெறியுமிளவுருவுந்தளருருவும்வேறுவன்றென்றே, யழுததனைப்பரிப்பதனுக்கருவருத் தேயழுங்கியனுதிமலமுத்தனமுக்கறுப்பானென்றடைந்தா, ரொழுகுமவங்வவாய் தலுனுடலினுதியாரொண்குரவனுபதேசத்துற்றதுலலோக, முழுதுலகுமொடுங்கிடுநாண்மூலமலந்தனிலுமுத்தருமாயனுதிமலமுத்தனடிப்பிரியார். ❋

எ - து வல்லிசாத கக்கொடிபோன்றெழுதப்பட்டிருக்கிறவிடையினையுடையமடவார்களது இரண்டுவிழியாகிய ஆயுதங்களினுலேவாதைப்பட்டிருக்கிற இளமையுமுதிர்மையும்வேறல்லஅவ்விரண்டினுலுஞ்சுகமில்லையெனக்கருதியிப்படிதளர்கைவளர்கையாகியபரிணுமத்தினையுடையசரீரத்தைச்சுமக்குதற்குச்சிறைச்சாலையிலிருக்கிறவனருவருக்குமாறுபோலவதனையருவருத்துஅழுதுசியென்றுதுக்கித்துஇந்தக்குடும்பததைப்போக்குவாராரொன்றுதேடி யான்மாக்களுடைய வாணவாதிதோடத்தையனுதியேமலமில்லாதசிவனேபோக்குவனெனக்கருதியடைந்தவர்கள்நவத்துவாரத்தினையுடையசரீரத்தைப்பொருந்தார்கள் ஞானுசாரியருபதேசித்தமுறைமையிலேநின்றுசமாதியைப்புரிந்திருந்துஒப்பில்லாதநாதத்துவத்திலிந்திராதி

மனத்தினைப்பொருந்தியாண்டுள்ளபோகங்களைப்பொசித்துத்துலைந்தவாறேமகாச
க்கரகாலத்திலுந்திமலமுத்தனாயிருக்கிற சிவனதுபாதகமலத்திற்சேர்ந்துநீளா
நிற்பர்கள். எ - று (௧௮)

நின்மலஞானமுள்ளார்சிறப்பினையும்நில்லாதார்தன்மையினை
யுமுணர்த்துகின்றார்.

வாழ்க்கையினைமகிழ்ந்தாலும்வாழ்க்கையவமதித்துவனத்துவனைதனி
த்தனிகாய்மூலமிவைமாந்தி, யாக்கையினையொறுத்தாலுமாக்கையினையா
க்கியெரித்தழிக்குமமலனுளனவன்பெயரேதானே, நீக்கமறவுயிர்க்குயிரா
யிற்றவனைனைவேநினைந்தொருமனமயுறநின்றார்மலமனைத்துநீங்க, நோக்க
மவேநோக்குவர்கருளத்தொளித்துநின்றநுண்ணியனையவரல்லாருடனேறு
தலைவார் (௧௯)

எ - று தருமமுதலியமணத்தினால்விவாகஞ்செய்துமகிழ்ச்சியுடனில்வாழ்க்
கையினிருக்கிறுமிந்தயில்வாழ்க்கைகையைச்சீயென்றுகருதிக்காடுமலையிலுண்டா
கிவரைக்-கனிகிழங்கு-முதலியவற்றைப்பொசித்துவானப்பிரத்தனாயிருந்தாக்கையி
னைவாடுத்திஞ்சகலவான்மாக்களுக்கும்பிரகிருதிசம்பந்தமாகியதேகத்தையுண்
டாக்கிச்சிருட்டிதிதிசங்காரமாகியதொழில்களைப்பண்ணுவானொருகத்தாவுளனெ
ன்றுமந்தக்கத்தாவின்றிருநாமமேதாகிலுமுருக்கமாகக்கேட்டுச்சருவான்மாக்களி
டத்துமந்தத்தன்மைவிட்டு நீங்காமல்வியாபித்துநிற்குமுறைமையினையறிந்து அந்
நாமமைப்பாட்டுடன்எப்போதுங்கருதிநின்றவர்கள், ஆணவமுதலியமலங்களி
ன்கண்டேவனுவுக்கணுவாய்நிற்கிறசிவனைநோக்காதேநோக்குவர்கள். இத்தன்
மையாரானவான்மாக்கள்பூட்டையும் நீரும்போலப்பிறந்து பிறந்துந்திரிவார்கள்
எ - று எனவேகிரகத்தினிற்பிரமசாரியும் - வானப்பிரத்தனிற்சன்னியாசியுமடங்
கிற்று (௧௧)

நிலைகட்குச்செய்யும்பரிகாரங்களுள் மேலானபரிகாரமீதென்று
ணர்த்துகின்றார்.

பரிகாரந்தீவினைக்குப்பலவிதமேபவற்றுட் பரமானபரிகாரம் பரமசிவ
ஞானமே, மிரவியொளியிருளறுக்கையெற்றற்றேபாவ மெனைத்தனைத்து மஃத
றுக்கையிருண்மலத்தின்வலியு, மொருவுமதன்முன்பாவவிதமொழிகையிய
ம்போவுயிர்க்குயிராயிரண்டறவேயொருவாதேநிற்கும், பரமசிவன்பத்தினி
லைப்பாராதேபார்க்கத்தன்பதிக்கும்பார்ப்பிக்கு மதுபரமஞானம்.

எ- து. ஆன்மாக்கள்செய்தபாவம்போம்படிக்குப் பரிகாரம்பலவிதமாயிருக்கு ம், அவற்றுள்மேலான பரிகாரஞ்சிவஞானமே யஃதெத்தன்மைத்தெனிற். பூதவிரு ளையாதித்தப்பிரகாசமெப்படிபோக்குமப்படியேபாவவிதங்க ளெத்தனையுண்டத்த னையுமிக்கன்மமட்டன்றுஅக்கினியைச்சேர்ந்தவித்தானதுயெப்படிதான்கெடாமற் றன்சத்திகெட்ட தோவதுபோல வக்கன்மத்துக்கு க்காரணமாகிய வாணவாதியுந் தான்கெடாமற்றன்சத்திகெட்டுநிற்குமாதலாலச்சிவஞானத்தின்முன்னேபாவங்க ள்போமென்பததிசயமன்றியாதலாற் சருவான்மாக்களிடத்திலுமெப்போதும்வி ட்டுநீங்காமனிற்குஞ்சிவசத்தியினது சீபாதகமலங்களை யூனதிட்டியினாற்பாராமல் ஞானதிட்டியினாற்பார்க்கில். அந்தச்சத்தியேதாரகமாய்த் தனக்குப் பதியாயிருக்கி றசிவனையனவரதமுமனுசந்தானம்பண்ணிவைக்கும் அதுவேபரமமானசிவஞானம் எ- று. பரிகாரம்பலவிதமாவன. கெங்கைமுதலாயினதீர்த்தத்தின்முழுகல். மந்தி ரஞ்செபித்தல். ஓமஞ்செய்யல். கிருச்சிரசாந்திராயணமுதலியவிரதமனுட்டித்தல் காசிமுதலிய திருப்படைவீட்டைச் சேவித்தல். தலங்களிற் சிவலிங்கப்பிரதிட்டை செய்தல். முதலியனவாம். (௩)

இப்பரிகாரஞ்செய்தற்குப் பக்குவரிவரென்பதும் அபக்குவர்க்குண ர்த்தின்வருங்குற்றமு முணர்த்துகின்றார்.

பரிகாரவியலிதனைப்பாவவினைக்கஞ்சிப் பழிக்குமழிந்திவையிரண்டும் பாற்றியிடப்பணிந்து, குருபாதமலர்தலையிற் கொண்டழுவான் குறிப்பைக் குறித்தறிந்தாண்டாறிரண்டுட் குரவனுளங்குழைந்தே, பரிவுறவேயவன்ற னக்கேபகர்ந்திடுகவஞ்சாப்பாதகர்க்குப்பகரற்கபகர்ந்தானேயாகி, லெரிவா யநிரையத்திலிருவரும் வீழ்வாரேயெவராவர் துணையமலனுரையிலங்கித்தார் க்கே. *

எ - து இந்தப்பரிகாரவியலையுள்ளபடியாராய்ந்து பாவவினைக்கும்இம்மைமயி லின்னபாவத்தைச்செய்தானென்னும்பழிக்கும்பயந்தழிந்துஅவ்விருவகையும்போ கும்படியாசாரியனது சீபாதகமலத்தைத்தனதுதலையிற்சூடிக்கொண்டழுதுத ண்டுபோலநமஸ்காரஞ்செய்யு மாறுக்கனுட்கருத்தையவ்வாசாரியன்விசாரித்துப்ப ன்னிரண்டுவருஷம்பரிச்சித்துஅறிந்து தீக்கைசெய்தவனுக்கு அக்குற்றம்போம்ப டிக்குக்கிருபைசெனித்துப்பரிகாரஞ்சொல்லுக, பாவத்துக்குப்பயப்படாதமாறு க்கற்குப்பரிகாரம்பகராதொழிக, அபக்குவர்களுக்குப்பரிகாரங் கூறிலக்கினிச்ச வாலைபோலவெரியாநிற்கிறநரகத்திலேயவ்விருவரும்வீழ்ந்துகிடப்பர்கள், பரமே

[illegible]ருள்ச்செய்தவேதாகமங்களின்வழியே நடவாதுநிற்கத்தவான்மாக்களுக்கு [illegible]மாவார் ஒருவருந்துணையாகார்கள். எ - று ஏகாரந்தேற்றம் (ரா௧)

முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்.

வேறு.

என்றுபரிகாரவிதமாசறவிசைத்தான்
[illegible]ன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான்
[illegible]வன்றுபுலனைந்தினையும்வெய்யவினைகைய
[illegible]ன்றமுனியன்றுணரநிற்குணனினைந்தே

எ - து வெளி. [ரா௨]

சிவத்துதி.

வேறு.

அன்னியம்பசுபாசமெனப்பனையனுதியேமலமற்றவனப்பனே
[illegible]ன்னிபாசங்கலந்தகணவனேகருதுமெய்யடியார்தங்கணவனே
[illegible]ன்னமேபுரமூன்றையுமட்டனேமுத்தர்கண்டுமுகந்துணுமட்டனே
[illegible]ன்னன்றேவியுநின்கண்சிறப்பரேசெறிகிலார்கள்பிறந்துஞ்சிறப்பரே

எ - து பசுவுக்கும்பாசத்துக்குமிலக்கணமுமிருக்கப்படாநின்றசுவாமியே [illegible]ருதிகாலத்திலேபாணவமுதலியகுற்றமில்லாதஅழகனே, பார்வதியார்தவசுப [illegible]ணவந்தரளிற்றிருமேனியிலொருபாகங்கொடுத்துச்சேர்ந்தகண்போன்றவனே, [illegible]மெய்யடியார்விரும்பப்பட்டநாயகனே, பூருவத்திலேமும்புராதிகளையுமொருகண [illegible]த்திலேசங்கரித்தவனே, முத்தான்மாக்கள்தெரிசித்துச்சிவானந்தானுபூதியையனு [illegible]பவிக்கப்பட்டஅமிர்தசொரூபனே, பாண்டிமாதேவியுமும்முடையதிருக்கணோக்கி [illegible]னவலோகனத்தினாலே முத்திபெற்றனளே, தேவரீர்சீபாதகமலத் தையடையா [illegible]தவர்கள்பிறந்துமல்வகுணமில்லாதவர்கள் எ - று (ரா௩)

இதுவுமது.

[illegible]டலைவாழ்வெனைநீக்கியநம்பனே நயந்துபார்த்தற்களித்தசொன்னம்ப [illegible]னே, [illegible]டலைநிறணிசுந்தரவேடனேசுரத்துநாய்புடைசூழச்செல்வேடனே, க

டலினஞ்சினையுண்டகளத்தனே கரிசர்நெஞ்சினொளித்தகளத்தனே, புடவி
ம்பூணெனப்பாம்புமுடையனேயுழுவையின்னுரித்தோலுமுடையனே. *

எ- து. துன்பவாழ்வினின்று நீக்கியநம்பனே, அருச்சுனற்குக் கிருபைசெய்த பாசுபதங்கொடுத்தபெரியசுவாமியே, ஆதிப்பிரமாவின்மயானத்திருந்தைத்தரித்தவெற்றிப்பாட்டைமிக்க அழகை யுடையவனே, அருச்சுனனிமித்தமாக வேதக்கணையாகிப்புடைசூழப்பாலைநிலத்தில் நடந்தவேட ரூபனே, கடலின்கனைமுந்தாஞ்சினையுண்டகண்டத்தையுடையவனே, பாவிகளிதையத்திற்பிரகாசியாமலொளித்தகள்ளத்தையுடையவனே, திருமேனியின்கட் பாம்பாபரணத்தை யுடையவனே, புலித்தோலையுடையாகவுடையவனே. எ- று. (கச)

குமரன்றுதி.

வேறு

முருகனேயெனக்
கருமுனைசறும்
பருகுபாலினும்
பெருகுமின்பமே *
*
*
*

எ- து. வெளி. (ஙகூ

அகத்தியர் துதி.

பொதியமாமலைக்
கதிபனேயெனக்
கதியுமாமுடற்
பொதியுமாயுமே *
*
*
*

எ- து. வெளி. (ஙஎ)

பதினோராவதுபரிகாரவியலுரை
முற்றும்.

பன்னிரண்டாவதுகோபுரவியல்

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனிற் பஞ்சகௌவியம் பாவத்தைக்கெடுத்துப்புண்ணியத்தைத் தருமெனமுற்கூறினார்அக்கௌவியத்தைத்தருநந்தைமுதலிய வாக்கணிற்குமிடத்தின் றன்மைமுதலியவற்றைக்கூறுகையாற்கோபுரவியலென்னும் பெயர்த்து; இத்தலைச்செய்யுளென்னுதலிற்றோவெனிற் கந்தனை விஞ்தை லுணர்த்திற்று.

அக்குவதுமழிப்பதுவுமறத்தினையுமறத்தினையு *
மாக்கடருமைந்தெனவேயறைந்தனை முன்னறு முகவ *
வாக்களவைநிலவுமெலையருள்விரியவெனக்கறிய *
வாக்கமுறவனைத்துயிர்க்கு மவற்றாலுமலலறவே *

எ- து. வாராய்சண்முகதன்மத்தையுண்டாக்குவதும் பாவத்தைப்போக்குவதும்பசுக்களிடத்துண்டாகிநின்ற பஞ்சகௌவியமேயென்றுபரிகாரவியலில் முன்பு கூறினை, அப்பசுக்கணிற்குமெல்லையை யெனக்கு விளங்க வருள்செய்வாயாக, சருவான்மாக்களுமிப்பசுக்களின் சொரூபத்தையுள்ளபடி யறிந்ததனைப்பூசித்துஅதனிடத்துண்டான கௌவியத்தைப் பரமேசுரனுக்க பிடேகம்பண்ணியதனாலேயவர்களவர்கள்செய்தபாவங்களைப்போக்குகையின்பொருட்டு. எ- று. (க)

விஞ்தற்குத்தர முணர்த்து கின்றார்

என்றிசைத்தமுனிவரனுக்கெழிலுடையகுமரதரன் *
நன்றறைவமெனநவின்றுநாதனடித்தேசுடனே *
பொன்றிவிழித்துலகனைத்துமுனைத்தவற்றுட்சிவபூசித்து *
னின்றிழிந்துநிலத்துறையுமெனுங்கதையுநிகழ்த்திடுவாம் *

எ- து. என்றுவிண்ணப்பஞ்செய்தவிசிட்டமானஅகத்தியனுக்குஅப்படியேயுனக்குநன்றாகச்சொல்வாமென்று குமாரசுவாமிதிருவுளஞ்செய்துபரமமானநிட்டையைப்புரிந்துவிழித்துப்பிருதிவியண்டத்திலுண்டானஅளவு கீழ்ப்பிரமாணங்களைச் சொல்லிஅந்தவண்டத்தினுளிருக்கிறசிவலோகத்திற்பரமேசுரன் சன்னிதிமுன்னிருக்கும்விரஇடவத்தினதுஇனமான நந்தைமுதலியவைந்துகோமாதாக்களும் பூமியின்கணிழிந்துவந்துநிற்குஞ்சொரூபத்தையுமுனக்குச்சொல்வாம். எ- று. குமரதரன்வடமொழி. (உ)

அண்டப்பகுதியையறியப்புகில்அணுமுதலியபிரமாணமறியாவிடத்
தறியப்படாவாதலால்அவ்வணுமுதலியவற்றைமூன்றுசெய்யுளாலு
ணர்த்துகின்றார்

இன்னுழையுங்கதிரணுவெட்டெட்டிணங்கிற்கசாக்கிரகம் ❊
சொன்னவிதனிருநான்குமிலீகையெனத்துணிந்திடுக ❊
இன்னவிலீகையிரயவிருநான்கேயூகையென ❊
வுன்னிடுகயூகையினெட்டியவையெனவுன்னுகவே

எ- து. கிரகத்திற்சாரவாசலாத்தகிரணத்தாலுண்டாகிய-துகள்-அணுஅது பதினாறுகொண்டதுசிறுபிள்ளைகள் மயிர்நுனியாகிய கசாக்கிரகம் அதுஎட்டுக்கொண்டது- இலீகை- அது-எட்டுக்கொண்டது- யூகை- அது எட்டுக்கொண்டது-யவை எ- று. இலீகை-ஈர்- யூகை- பேன்-யவை- நெல்- அணு- எட்டுக் கொண்டது-திரிசரேணுவென்க. (௩)

இன்னயவையிருநான்குமங்குலமென்றெண்ணிடுக ❊
சொன்னவிதமறுநான்குமுழமெனவேதுணிந்திடுக ❊
பன்னுமுழமொருநாங்குந்தனுவெனவேபார்த்திடுக ❊
மன்னுதனுவிரண்டினையோர்தண்டெனவேமதிக்கவரோ ❊

எ - து இந்தநெல் குறுக்காக - எட்டுக்கொண்டது உத்தமமானமாஞ்குலம், அது-இருபத் துநான்குகொண்டது-முழம், அது-நான்குகொண்டது - வில் - அது-இரண்டுகொண்டது-தண்டம் எ - று ஏழுநெற்கொண்டதுமத்திமாங்குலம்-ஆறுநெற்கொண்டது அதமாங்குலம்-இஃதன்றிநெல்லினீளத்தான் மூவிதமுழமென்க-முழமெனினும் அத்தமெனினுமொக்கும்-அரோ-அசை. [௪]

தெண்டமிரண்டாயிரத்தைக்குரோசமெனத்தெளிந்திடுக ❊
கொண்டவிருகுரோசத்தைக்கேவியூதியெனக்கொள்க ❊
மண்டியநாற்குரோசந்தையோசனையாமதிக்கமணி
னண்டமொன்றிற்சதகோடியோசனைவித்தாரமுமே ❊

எ - து தண்டம்இரண்டாயிரங்கொண்டது-குரோசம்-அது-இரண்டுகொண்டது-கெவியூதி-அக்குரோசம்-நான்குகொண்டது-யோசனை-அந்தயோசனை நூறுகோடிகொண்டது-பிருதிவித்தத்துவத்திலுண்டாகியவோரண்டத்தளவின் விரிவு எ - று வித்தாரமுமென்றவும்மையாலுயரமுநூறுகோடியெனவறிக, குரோசம்-

கூப்பிடுதூரம்-கெவியூதி-அரைக்காதம்.] (ஙு)

பூமிமுதலுதமீறுகவண்டங்கள்போகப்போகஅளவேற்றமென்பத னைமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

மண்டலக்காயிரகோடியண்டமுளவாரிக்கு
மெண்டொகைபிற்பேதமிலைவிரிவுயர்ச்சியேறியுறு
மண்டனிலுந்தசகுணிதம்வாரிக்குவாரியினு
மொண்டழற்குமுரைத்தமுறைபிரகிருதிமுடிவுமுறும்

எ - து பிருதிவிதத்துவத்துக்கு ஆயிரகோடியண்டமுணடு - அப்பிருதிவிதத் துவத்தைப்பற்ற அப்புதத்துவம்பதின்மடங்குவிரிவுமுயர்ச் சியுமேற்றமுண்டு-அந்த அப்புதத்துவத்தைப்பற்றத்தேயுமுதல்பிரகிருதியீறுகஅண்டங்கள்பதின்மடங்குவிரி வுமுயர்ச்சியுமேறியுறும், எ - று (சு)

குணிதசதமிராகத்திற்கூடுமுனையதுதனினுங்
குணிதசதம்வித்தைக்குக்கூடுமுனையராகத்துங்
குணிதசதநியதிக்குக்கூடுமுனைவித்தையினுங்
குணிதசதங்காலத்துநியதியினுங்கூடிடுமே

எ - து முற்கூறியபிரகிருதியைப்பற்றஇராகம்நூறுமடங்குயரமும்விரிவு மேற்றமுள-அந்தஅராகத்தைப்பற்ற வித்தியாதத்துவநூறுமடங்குவிரிவுமுயர்ச்சியு மேற்றமுள, அந்தவித்தையைப்பற்றநியதிதத்துவ நூறுமடங்குவிரிவுமுயர்ச்சியுமே ற்றமுள,அந்தநியதிதத்துவத்தைப்பற்றக்காலதத்துவ நூறுமடங்குவிரிவுமுயர்ச்சியு ம்ஏற்றமுள எ று. (எ)

குணிதநியுதாயுதமேகலைக்குமுனிற்கூடியிடுங்
குணிதமொருகோடியெனமாயைக்குங்கூடியிடுங்
குணிதமுறுஞ்சுத்தவித்தைகோடியுடனேரையுதங்
குணிதவிதமிம்முறையினுதாந்தங்கூடிடுமே

எ - து முற்கூறியகாலத்தைப்பற்றக்கலைதத்துவ நூற்றொருபதினாயிரம்விரி வுமுயர்ச்சியுங்கூடுங்கலையைப்பற்றமாயைகோடிமடங்குகூடும், மாயையைப்பற் றச்சுத்தவித்தைகோடியேபதினாயிரமடங்குகூடும், சுத்தவித்தையைப்பற்ற இலக்ஷ மதிகம் ஈசுரம் ஈசுரத்தைப்பற்றச்சாதாக்கியம் இலக்ஷமதிகம் அதனைப்பற்றவிந்து லக்ஷமதிகம்இப்படியேயொன்றுக்கொன்று போகப்போக,மேலசிதத்துவமிப்படிய

ாவுபட்டதன்று எ - று மேற்பட்ட துவியாபகம் கீழ்ப்பட்ட துவியாப்பியமென
றிக. (அ)

பிருதிவியண்டத்தின் வகையுணர்த்துகின்றார்.

மண்டனக்காயிரகோடியண்டமெனமதித்தவற்றோ
ண்டமுறுமளவினையுமதனுலகமனைத்தினையுங்
ண்டிடுகமுனிவரனேகழறிடுவங்கற்பார்க்கும்
ண்டைவினைப்பாவமறப்பரலோகபதமுறவே

எ - து வாராய்முனிவரனேபிருதிவியிலொருதட்டில்தேங்காய் விளாங்க
ிபரட்பினுற்போலஆயிரகோடியண்டமுண்டென்றுபுத்திபண்ணிய வற்றுளோ
ண்டத்துக்குண்டானஉயரவகலங்களின்பிரமாணங்களையுமதிலுண்டாயிருக்கிறபு
னங்களையும்யாஞ்சொல்வாமறிவாயாக, இதனுற்பிரையோசனம்யாதெனிலிந்த
ண்டபேதங்களைச்சொல்லுமாகமத்தையதிகரித்தவர்க்குப்பூருவத்திலார்ச்சித்தக
மாதிகள் கூயம்பிறந்துசிவசாயுச்சியத்தையடைகையின்பொருட்டு எ று (க)

மேலதனைத்தொகுத்திரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வேறு

தனைக்குக்கீழ்க்கோடிதானுறுமைம்பது
ாக்குமேற்கோடிதானுறுமைம்பது
ாக்குண்மேருத்தடவரைத்திக்கெலா
ரைத்தவைம்பதுறுங்கடாகத்தொடும்

எ - து கீழண்டவோடுதுடங்கிப்பூலோகம்வரையைம்பதுகோடியோசனை
பூலோகத்துக்குமேலண்டகடாகவோடுவரையைம்பதுகோடியோசனையும் பூ
ாகத்தின்மத்தியிலிருக்குமகமேருவினடுவினின்றுங் கிழக்கு- மேற்கு - தெற்கு -
க்கு - இந்தநான்குதிசைகளின் அண்டவோட்டின்கனமீறுகவைம்பதைம்பது
ாடியோசனைதூரமும்பொருந்தும் எ -று (ஙு)

பொன்மயத்தகடாகப்புறத்திசை
னிற்சாரும்புவனஞ்சதமவை

தன்னினூற்றுவர்தங்குவரீசன்மே
லுன்னிலாறுபுரமிரண்டோர்கவே

எ - து பொற்சொரூபமாய்ப்பதினாயிரஞ்சூரியப்பிரகாசமாய்க்✠குக்குடாண்டம்போன்றிருக்கிறவண்டகடாகப்புறம்பேயிந்திரதிக்குமுதலியபத்துத்திக்கினுமிருக்கிறநூறுபுவனத்திலும் உருத்திரர்கணூற்றுவரிருப்பர்கள், அவர்கள்புவனத்துக்குமேற்காலாக்கினியுருத்திரர் முதலியர்புவனமாறு-அவைக்குமேற்புரமிரண்டுண்டவையுணர்வாயாக எ - று அவையாவையெனின் - இந்திரதிக்கில் - கபாலீசன் - அசன் - புத்தன் - வச்சிரதேகன் - பிரமத்தனன் - விபூதி - அவ்வியன் - சாத்தா-பினாகி - திரிசோதியன் - என்றவுருத்திரர்கள்- ய - அக்கினிதிக்கில் - உருத்திரன் - உதாசனன் - பிங்கலன் - காதகன் - அயன் - சுவலன் - தகனன் - வெப்புரு - பிரமாந்தகன் - க்ஷயாந்தகன் - என்றவுருத்திரர்கள் - ய - இயமதிக்கில் - யாமியன் - மிருத்தியு - அரன் - தாதா - விதாதா - கத்திரு - காலன் - தன்மன் - சங்யோத்தா - வியோக்கிருதன் - என்றவுருத்திரர்கள் - ய - நிருதிதிக்கில்- நிருதி மாரணன்-அரந்தா-குரூரதிருட்டி-பயாந்தகன்-ஊர்த்துவகாயன் - விரூபாக்ஷன்-துமிரு-லோகிதன்-தெங்கிட்டிருணன்-என்றவுருத்திரர்கள் - ய - வருணதிக்கில்-பெலன்-அதிபெலன்-பாசஅத்தன்-மகாபெலன்-சுவேதா-செயபத்திரன்-தீர்க்கவாகு-செலாந்தகன்-வடவாமுகன்-தீமான்-என்றவுருத்திரர்கள் - ய - வாயுதிக்கில் - சீக்கிரன்-லகு-வாயுவேகன்-தீக்ஷணன்-சூக்குமன்-க்ஷயாந்தகன் - பஞ்சாந்தகன்-பஞ்சசிகன்-கபத்தி-மேகவாகனன்-என்றவுருத்திரர்கள் - ய - குபேரதிக்கில்-நிதிசன்-ரூபவான்-தன்னியன்-சௌமியன்-சௌமியதேகன்-பிரமத்தனன் - சுப்பிரகடன்-பிரகாசன்-இலக்குமிவரன்-சோமேசன்-என்றவுருத்திரர்கள் - ய - ஈசானதிக்கில்-வியாத்தியாதீபன்-ஞானபுகன்-சருவன்-வேதபாரகன்- மாத்திருவிருத்தன்-பிங்கலாக்ஷன்-பூதபாலன்-பெலீப்பிரியன்-சருவவித்தியாதிபன்-தாதா-என்றவுருத்திரர்கள் - ய - அண்டகடாகவோட்டுக்குக்கீழேவிட்டுணுதிக்கில் - அனந்தன் - பாலகன்-வீரன்-பாதாளாதிபதி-விபு-இடபத்துவசன்-உக்கிரன்-சுப்பிரன்-உலோகிதன்-சருவன்-என்றவுருத்திரர்கள் - ய - அண்டகடாகத்தின்மேலே-பிரமதிக்கில்-சம்பு-விபு-கெணுத்தியக்ஷன்-திரியக்ஷன்-திரீதேசகவாதகன்-சன்வாகன்-விவாகன்நபன்-லீபசு-விலக்ஷணன்-என்றவுருத்திரர்கள் - ய- ஆகியவிந்தநூற்றுவரும்-இந்திராதியரானவுலோகபாலகர்பெலத்தையுமடக்கியவர்களவர்களாற்பூசிக்கப்பட்டுக்கொண்டிருப்பர்கள், இவர்கள்புவனம் - ா - காலாக்கினி-கூர்மாண்டர்-ஆடகேசுர

✠ குக்குடாண்டம் - கோழிமுடடை.

ர்-பிரமா-விட்டுணு-உருத்திரன்-இவர்கள்புவனம் -சு - அண்டகடாகத்துக்கு மே
லேசூக்குமப்பிருதிவியில்-பத்திராகாளி -வீரபத்திரர்கள்-இவர்கள்புவனம் - உ - ஆக
ப்பிருதிவிதத்துவத்திற்புவன நூற்றெட்டென்க. (ய௪).

கீழ்அண்டகடாகத்தினளவுங்காலாக்கினியுருத்திரர்மனை
முதலியதன்மையுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

அண்டகடாகக்கனமுண்டொருகோடியதனடியுட் *
கண்டிடுககாலாங்கியுருத்திரர்க்குக்கனகமனை *
யுண்டதற்குன்னதங்கோடியோசனையீரைங்கோடி *
மண்டியமெய்த்தழற்கொழுந்தைங்கோடியுறும்வளர்புகையும் *

எ - து - கீழண்டகடாகத்தினுடையகனமொருகோடியோசனை, அந்தவண்டகடா
கத்தினுள்காலாக்கினியுருத்திரர்க்குகனகமயமானவாலையங்கோடியோசனை, அவ
ருடைய திருமேனியிலக்கினிச்சுவாலை பத்துக்கோடியோசனை, அந்தச்சுவாலையிற்பு
கையைந்துகோடியோசனையுண்டு. எ - று (ய௨).

யோசனையாயிரமனையுளரியனையினுயரந்தான் *
யோசனையீராயிரமென்றதன்விரிவைவுணர்ந்திடுக *
தேசுடையகாலாங்கியுருத்திரர்தந்திருமேனி *
யோசனையுமொண்டழலாலயுதமெனவுன்னுகவே *

எ - து காலாக்கினியுருத்திரருடையவாலையத்தினிருக்குஞ்சிங்காதனத்தினு
யரமாயிரம்யோசனை, அந்தச்சிங்காதனத் தின்வித்தாரமிரண்டாயிரம்யோசனை
யெனவறிக, பிரகாசத்தையுடையவந்தக்காலாக்கினியுருத்திரராயனார்திருமேனியி
னுயரம்பதினாயிரம்யோசனையக்கினிசொரூபமாயிருக்குமென்றறிவாயாக. எ-று ()

தரித்துடையர்வலக்கரத்திற்றயங்கொளிவாட்சரத்தினையும் *
பரித்துடையரிடக்கரத்திற்பலகைபினைத்தனுவினையு *
முருத்திரர்களொருபதின்மருறைவரவருமையவர்போ *
லுருத்திரர்களொவ்வொருவர்க்கொருகோடிபரிச்சிதமே *

எ - து அந்தக்காலாக்கினியுருத்திரதேவராயனார்வலக்கையின்மிகவும்பிரகா

சத்தையுடையவாளும் அம்பும் இடக்கையில்கட்கமும் வில்லுந்தரித்திருப்பர், இந்தக்காலாக்கினியுருத்திரதேவநாயனாரைச்சூழ்ந்தவரைப்போலுருத்திரர்கள் பதின்மரிருப்பர்கள், அவரைச்சேவித்திருக்கிற பதின்மரையுமொவ்வொருவரையொவ்வொருகோடியுருத்திரர்கள்பரிவாரமாகச்சூழச்சேவித்திருப்பர்கள் எ - று

ஆகக்கடாகங்கூடக் காலாக்கினியுருத்திரர் புவனம் பதினேழுகோடியுண்டென்க. (யச)

அப்புவனத்தின்மேல்நரகங்களினளவைமூன்று
செய்யுளாலுணர்த்துகிறார்

இனையபுரிமிசைநிரையமெழுநான்குகோடியுறு *
நினையினவையெழுநான்குநிலைமடமேயெனநிலவுந் *
துனியுறுவரவைதன்னிற்றுரிசரவற்றினுக்களவு *
முனிலிருநூறுயிரமுமுப்பஃதுகோடியுமே *

எ - து இந்தக்காலாக்கினியுருத்திரபுவனத்துக்குமேலேயிருபத்தெட்டுக்கோடிநரகமிருக்கும், இந்நரகபுவனத்தைவிசாரித்தறியுமிடத்துஒன்றின்மேலொன்றுகவிருபத்தெட்டுத்தளமாகக்கட்டினமனைபோன்றிருக்கும்,அதில்அதிபாதகமுதலியபாவபேதங்களைப்புரிந்தவர்கள்கிடந்துவாதையுறுவர்கள்,அந்நரகங்களினளவுவிசாரிக்குமிடத்துமுப்பதுகோடியேயிரண்டுநூறுயிரம்யோசனையுயரமெனவறிக எ-() (யகூ)

இடையிடையிற்படிகளைக்கும்படிகுழிக்குமிடைவெளிக்கும் *
படிமுயரமவற்றடங்கும்படிகளைகட்களவதிக *
மிடையிடையிற்குழியாழமிலக்கமிடைவெளிதானும் *
புடைவிரிவுமண்டகடாகத்துடனேபொருந்திடுமே *

எ - து முற்கூறியமுப்பதுகோடியேயிரண்டுநூறுயிரம்யோசனையுயரத்துள் நடுவேநடுவேயிருக்கிறவிருப்புமயத்தாலுண்டாகியபுடங்களும்நரகக்குழிகளினாழங்களுமவையவைகளின்மேலேயிருக்கிறவிடைவெளிகளினுயரமுமடங்கும், அவைகளின்னிடையிலிருக்கிற புடங்களுக்களவதிகமாயிருக்கும், இடையிடையினரகக்குழிகளினாழம்நூறுயிரம்யோசனையாம், அந்தந்தநரகக்குழிகளுககுமேலேயிருக்கிறவொவ்வொருஇடைவெளியுயரமும் நூறுயிரம்யோசனையாம், அந்தந்தநரகங்களின்புடைவிரிவுகளைவிசாரிக்குமிடத்து நாலுதிக்குமண்டகடாகத்துடன்பொருந்தும். எ - று (யகூ)

புடமிருப்புமயமிருபத்தொன்பதுளபுடமொவ்வொன் *
றடைவுமொருகோடியுநூற்றைம்பதினாயிரந்தானு *
மிடமுறுமெண்ணாயிரமுமறுநூறுமிருபஃதா *
மடியகன்றபுடத்துயர்ச்சியதிகமிருபஃதாமே *

எ - து முற்கூறியபுடங்களிருபத்தொன்பதிருப்புமயமாயிருக்கும், ஒவ்வொருபுடத்தினுயரங்கோடியேநூற்றைம்பத்தெண்ணாயிரத்தறுநூற்றிருபதுயோசனையெனவறிக, அப்புடங்களினுயரத்தைப்பற்றவெல்லாவற்றிற்குமடியிற்பொருந்தியபுடத்துயரமிருபதினாயிரம்யோசனையதிகமுளதெனவறிக. எ - று (௰எ)

அந்தநரகத்தின்மேலிடைவெளியுங்கூர்மாண்டர்புவனமும்
அவர்தன்மையுமூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

நிரையமிசைநிராலம்ப முப்பதினாயிரநிலவு *
முரைசெய்தநிராலம்பத்துச்சிமிசையோரிலக்கம் *
வரையவொருகோடியுறுமண்ணவற்றுவட்டிற்பாகங் *
கரியவிரும்பிடைப்பாகமேல்பாகங்கனகமயம் *

எ - து இங்ஙனங்கூறியவெல்லாநரகத்துக்குமேல் வெளிமுப்பதினாயிரமுயரம், அந்தவெளிக்குமேல் நூறாயிரங்குறையக் கோடியோசனையுயரங்கூர்மாண்டர்புவனம், கீழ்பாகம்மண்ணாகியுநடுப்பாகமிரும்பாகியுமேற் பாகங்கனகமாகியும் பொருந்தும் எ - று (௰அ)

மேலயபாற்கனகபுரிவீற்றிருப்பர்கூர்மாண்டர் *
காலவழலிரவியுருக்காளமுகமழுவுங்கை *
கோலமுறுவட்டவிழிகொண்டுடையரவர்தம்மைப் *
போலுமுருத்திரர்பலரும்புடையடைவர்போற்றிசைத்தே *

எ - து மேலாயிருக்கிறகனகபூமியிலேநரகத்துக்கதிபராதியகூர்மாண்டதேவநாயனார்பிரளையகாலாக்கினியும்பிரளையகாலாதித்தியனும்போன்றதிருவுருவுங்கறுப்பாகியமுகமுமழுத்தங்கியகையும்அழகுபொருந்தி வட்டமாய்க்குழிந்திருக்கிறதிருநயனமுமுடையராய்எழுந்தருளியிருப்பர், அவரைச்சூழ்ந்தவரைபபோன்றிருக்கிறவுருத்திரர்அநேகரவரைத்தோத்திரஞ்செய்துசேவித்திருப்பர். எ - று மழுவுமென்றவும்மையால்வலக்கைகளில்மழுவன்றி யம்பையுமிடக்கைகளில்வில்லையும்பலகையையும்பயங்கரமாய்த்தோன்றியவீரப்பல்லினையுமுடையரென்க (௰௧)

பிணைவிழியார் துணைமுலையார்பிடிநடையார் துடியிடையார்
பணையனதோளிணையிளையார்பலாபரவப்பதமொழியாற்
றிணமுறுமாகணமுறையிற்செறியவமர்கூர்மாண்டர்
எணமுடையார்கணமடையாரிடர்நிரையத் நிறையவரே

எ - து பிணைவிழிமுதலியவுறுப்புக்களையுடையராகியகன்னியர்கள்பலர் தத்தையுடையவுரைகளாற்றோத்திரஞ்செய்யத்திண்ணமுற்ற பெரியகணங்கள் தாந் தாம்நிற்குமுறைமையிலேசெறிந்துநின்றுசேவிக்க, அந்தக்கூர்மாண்டதேவர்எண் ணமுடையராகிக்கணப்பொழுதுந்துயரத்தையடையாராகியந்நரகங்களுக் கதி பதியாயிருப்பர் எ - று (உ0)

அந்தக்கூர்மாண்டபுவனத்துக்குமேலுள்ளவிடைவெளியும்
பாதாளங்களின்றன்மையுமாறுசெய்யுளாலுணர்த்துகின்றார்

உரைத்தபுரிமிசைவெளிதானென்பதினாறாயிரமாந்
தெரித்ததன்மேலாபாதபாதாளநீர்க்கத்தைத்
தரித்திடுகபத்திலக்கமெனவடிவந்தமனியமே
பரித்தவிரிவயுதமிடைவெளிதானுமதன்படித்தே

எ - து இங்ஙனஞ்சொல்லிய கூர்மாண்டபுவனத்துக்கு மேலிடை வெளி யொன்பதுநூறாயிரம்யோசனையுயரம், இந்தவிடைவெளியின்மேற்பொன்மயமா யிருக்கிறஆபாதபாதாளத்தினுண்ணதத்தைப்பத்துநூறாயிரம்யோசனை யெனவறி கஇதற்குமேலிடைவெளியின்பரப்புப்பதினாயிரம்யோசனை யதனுயரமும்பதினாயிர ம்யோசனை எ - று (உ௧)

பொருந்துமதுமுப்பாகம்பூருவத்திற்றாரித்தியோ
யிருந்திடுவர்நாகேசரிடைப்பாலிற்பச்சிமத்தில்
வரந்திகழும்வாளரக்கர்மற்றையபாதலந்தோறும்
பரந்திடுமிப்படிபாகம்வெளியுயரம்பரப்பெல்லாம்

எ- து. அந்தப்பாதாளம் மூன்றுகண்டமாயிருக்கும் அதில்கீழ்ப்பாகத்தில் சங்குசுருதியென்னும்பெயரையுடைய அசுரனிருப்பன், நடுப்பாகத்தில் குளிகனென் னும்பெயரையுடையநாகராசாவிருப்பன், மேற்பாகத்தில்விசிட்டமானபிரமாத் தையுடையவிகடனென்னு மிராக்கதனிருப்பன், இப்படியே மற்றைப்பாதாளங்க

டோறும்மூன்றுபாகமுமதிலிருக்கிறவதிபதிகளுமப்பாதாளங்களின் விரிவுயரமும். எ- று. இனிபத்மதலபாதாளமுதலிய ஆறுபாதாளங்கடோறு மொவ்வொன்றில்மூன்றுகண்டத்திலிருப்பர்கள்யாவரெனில். பிரகலாதரன். சுபாலகன். கற்கந்துகன் பரராக்கன். பிருதற்கெர்ப்பன். பெலி. எனத்தயித்தியர்க ளறுவர். வாசுகி. கம்பலன். கார்க்கோடகன். காளாங்கன். துர்த்தெரிசனன். தச்சகன். எனநாகராசாக்க ளறுவர். உலோகிதாக்ஷன். யமன். விகடனன். கராளன். நிருகாதன். பிங்கலன். எனஇராக்கதரறுவர், இந்தஅதிபதிகள்பதினெண்மருமம்முறையேயிருப்பர்களெனவறிக, இஃதன்றியொருகண்டத்துக்குமும்மூன்றுபெயராக மூன்றுகண்டத்துக்குமொன்பதின்மருண்டென்க, ஏனையவுமிவ்வாறுகாண்க. (உஉ)

அதன்மீதுபதுமவொளிபத்மதலமெனவறிக *
வதன்மீதிந்திரநீலநிதலதலமெனவறிக *
வதன்மேற்புச்சியராகச்சுதலதலமெனவறிக *
வதன்மீதுவெள்ளிமயமாதலமென்றறிகவரோ *

எ- து. அந்தப்பாதாளத்துக்குமேல்பத்மதலபாதாளம்பத்மாக்கிரம்போன்றிருக்கும், அதற்குமேல்நிதலதலமென்னும்பாதாளம் இந்திரநீலநிறம்போன்றிருக்கும், அதற்குமேல்சுதலதலமென்னும்பாதாளம்புட்பராக நிறம்போன்றிருக்கும்,அதற்குமேல்மாதலபாதாளம்வெள்ளிமயமாயிருக்குமெனவறிவாயாக. எ- று. (உங)

அதன்மீதுரசாதலத்தைமுத்தொளியென்றறிந்திடுக *
வதன்மீதுபாதாளநவமணிபோலெனவறிக *
வதன்முடிவுட்கன்னியர்களெண்ணூறுயிரவருள *
ரதன்மேலேபத்திலக்கநிராலம்பமாயிடுமே *

எ- து. அதற்குமேல்ரசாதலபாதாளம்முத்தினதுபிரகாசம்போன்றிருக்கும், அதற்குமேல்பாதாளம்நவரத்னப்பிரபைபோன்றிருக்கும், அந்தப்பாதாளத்தின்முடிவிலெண்ணூறுயிர நாககன்னியர்க ளிருப்பர்கள், அபபாதாளத்தின் மேலிருக்குமிடைவெளிபத்திலக்கம்யோசனையுண்டு. எ- று. (உச)

மயிலனையார்சாயலினுன்மானனையார்விழியதனுற் *
குயிலனையார்மொழியதனுற்கொடியனையாரிடையதனுற் *
சயிலனையார்முலையதனுற்றளவனையாரிளநகையால் *
வெயிலனையாருடலொளியாற்பாதாளவிலாசினிமார் *

எ - து வெளி - சயிலம் எ - து - அம்கெட்டுசயிலென்றுயிற்று - நளவு முல்லையருப்பு. (உரு)

சுரிகுழலாரரிகுழலார்சுவைமொழியார்நவைமொழியார் *
வரிவளையாருருவளையார்மதர்விழியாரிதர்விழியார் *
உருவுடையார்குருவுடையாரொளிநகையார்கெளிநகையார் *
அருகிடையார்பருகிடையாராடகர்தாளலர்மருவே *

எ - து சுருண்டகுழலினையுடையார், அரிந்தகுழலோசைபோன்றவினிமையானமொழிகளையுடையார், குற்றங்களையொருகாலுஞ்சொல்லாதவர்; வரியாகியவளையினையுடையார், உருவமொருகாலும்வளையாதவர், மதர்த்தவிழியினையுடையார், இதரபதார்த்தத்தைப்பாராதார், அழகானவுருவத்தையுடையார், மிகுந்தபாரத்துக்குடையாதவர், ஒளியாகியநகையினையுடையார், ஊழியத்திற்றெள்ளிதாகியகையையுடையார், சுருங்கியவிடையினையுடையார், ஆடகேசுரர்பாதமலர்த்தேனைப்பருகுதற்கிடையாதவர், மேற்கூறியநாககன்னியர்களாகியபாதாளவிலாசினிமார். எ - று (உசு

ஆடகேசுரபுவனமுணர்த்துகின்றார்.

அதன்மேலேநவலக்கமாடகநாயகர்புரிதான் *
புதுமைநிகழ்மனைபொன்னால்யோசனையாயிரம்புகலிற் *
கதமுடையதயித்தியர்கள்கட்டரவர்வெட்டரக்கர் *
விதிமுறையிற்பதம்பணியவீற்றிருப்பாராடகரே *

எ - து அந்தப்பாதாளங்களுக்குமேலேயாடகேசுவரர்புவனமொன்பதுதாறாயிரம்யோசனை, அதிலாடகேசுரர்க்குப்புதுமையேகொடுக்குஞ்சொன்னமயமாயிருக்கிறவீடுஆயிரம்யோசனையுயரமாயிருக்கும், அதில்கோபத்தையுடைய அசுரர்களாலும்விடத்தையுடையநாகர்களாலும்வெட்டிமையையுடையவரக்கர்களாலுமத்திமைதாரமென்னுஞ்சுரபேதங்களாற்றோத்திரஞ்செய்துவிதிப்படிநமஸ்காரம்பண்ணவீற்றிருப்பராடகேசுரர் எ று (உஎ)

அதன்மேற்பூமியினளவுமுன்தொகுத்ததைப்பூமிவரைமுடித்து முணர்த்துகின்றார்.

அப்புரியின்மிசைத்தாகவவனிகனமொருகோடி *
யொப்பரியகடாகனமொருகோடிமுதலாக *

விப்புவனியீருகவேழேழொன்றெனுங்கோடி
தப்பறவேயோசனையின்றொகைமுறையிற்றரிக்கவரோ

எ - து அந்தஆடகேசுரர்புவனத்துக்குமேற்பூமியினுடையகனங்கோடியோசனை, முற்சுறியஅண்டகடாகமுதலிந்தப்பூமியிருகத்தவறின்றித்தொகையிலுலடைவிலைம்பதுகோடியோசனையாம் எ று

அவையாவன. அண்டகடாக வோட்டின் கனம். ஒருகோடி. அதற்குமேற்காலாக்கினியுருத்திரர்கனகமனையொருகோடி, அவருடையதிருமேனிச்சுவாலைபத்துக்கோடி, அச்சுவாலையின்புகை யைந்துகோடி, ஆகப்பதினேழுகோடி, அதற்குமேல் நரகமுப்பதுகோடியேயிரண்டுநூறுயிரம், அதற்குமே லிடைவெளியாகிய நிராலம்பமுப்பதினாயிரம், அதற்குமேற்கூர்மாண்டர்புவனந்தொண்ணூற்றொன்பதுநூறுயிரம், அதற்குமேலிடைவெளியொன்பதுநூறுயிரம், ஆகமுப்பத்தொரு கோடியேபத்துலக்ஷத்துமுப்பதினாயிரம், அதற்குமேல் ஆபாதபாதாளம். பத்து லக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேற் பத்மவொளிபாதாளம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம்,அதற்குமேலிந்திரநீலநிதலதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேற் புட்பராகசுதலதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேல்வெள்ளிமயமகாதலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம், அதற்குமேல். முத்தினொளி போன்றரசர்தலம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளிபதினாயிரம், அதற்குமேல்நவமணிபோன்றபாதாளம். பத்துலக்ஷம், அதற்குமேலிடைவெளி பதினாயிரம், அதற்குமேல்நிராலம்பம். பத்துலக்ஷம், அதற்குமேல். ஆடகேசுரர்புரியொன்பது லக்ஷம், ஆகவெண்பத்தொன்பதுலக்ஷத்தெழுபதினாயிரம், அதற்குமேல்பூமியின்கனம்ஒருகோடி ஆகவண்டகடாகமுதலிந்தப்பூமிவரையைம்பதுகோடியென்க. (உஅ)

பாதாளவதிபதியும்பெலத்துவாரவளவுமுணர்த்துகின்றார்

பாதாளப்பெலவழிக்கும்பாதாளமேழினுக்கு
மாதாரமதிபதியுமாடகநாயகர்தாமே
பாதாளப்பெலவகலம்யோசனையாயிரம்பகரிற்
பாதாளமுதனிறையவிறுதியினும்படர்ந்திடுமே

எ- து. ஆடகேசுரநாயனார்பாதாளத்துக்கும்பெலத்துவாரத்துக்குமாதாரமாய

திபதியுமாயெழுந்தருளியிருப்பர், அந்தப்பெலத்துவாரத்தின் வட்டமாகியமுகலத்தைச்சொல்லில்ஆயிரம்யோசனையாம், அந்தப்பெலத்துவாரம் பாதாளமுதல்நிலையமீறுகவுஞ்செல்லும். எ- று. பொன்மயமாயிருக்கிற பாதாளத்துக்கதிபதியாகையால்ஆடகேசுரனெனப்பெயர்கூறினார் (உ௧)

இனியிப்பூமியினளவு மேருவின் றன்மையும்ஞ்துசெய்யுளாலுணர்த்துகின்றார்.

அறைந்தாஞ்சொன்முறையுறவேபிரமாண்டத்ததோபாகத்
சிறந்தபெருவளையுடனுஞ் சேடித்தவுறுப்புடனு
மறைந்திடுவாமறிந்திடுகவவனிதலத்தகலமுமெண்
ணிறைந்தசததகோடிநடுமேருவுறநிலவிடுமே.

எ து வாராய்முனிவரனேயிப்படிமேலேயிருக்கிறபூமிமுடிவாகப்பிரமாண்டத்தின்கீழ்பாகத்தினுடையசொரூபத்தையொழுங்குறச்சொன்னோம், இனியுனக்குச்சிறப்பையுடைத்தாயபூலோகத்தினடுவேயிருக்குமகாமேருவையுமட்டுலபருபதங்களையுநவகண்டமுதலியவற்றையுஞ்சொல்வோமறிவாயாக, அந்தப்பூலோகமெவ்வளவகலமென்னினூறுகோடியோசனையாயிருக்கும், மக்கட்குகாயிருவாறுற்போலவிந்தப்பூமிக்குநடுவேமகமேருநிற்கும் ஏ று ஆறுகோடியிற்குறைவில்லாமையாலெண்ணிறைந்ததெனச்சிறப்பித்தார் (௩௪)

பாதலத்தின்மிசைத்தாதிப்படுகடலைப்புடையுடுத்த
பூதலத்தினடுநிலவும்பொன்னசலம்யோசனைதான்
பாதலத்திற்பதினாறாயிரமுறவேபடிந்தழுந்தி
மீதலத்துமவைகுறைந்தநியுதமுறவிளங்கிடுமே

எ து பொன்மயமானஅம்மகமேருவானதுமுற்கூறியபாதாளத்துக்குமேலாகியேழுசமுத்திரகங்ளாலுஞ்சூழப்பட்டபூமியினடுவேபொருந்திப்பூமிக்குக்கீழ்ப்பதினாறாயிரம்யொசனையளவுபுதைந்துபூமிக்குமேல்,எண்பத்தினாலாயிரம்யோசனையுயரம்விளங்காநிற்கும். எ று கீழ்முதல்மேல்வரைதூறாயிரம்யோசனையுயரமென்றறிக. (௩௫)

அடியகலம்பதினாறாயிரமாகுமவற்றிரட்டி
முடியகலம்பதுமமலர்ப்பொகுட்டினைப்போன்றுமுற்றியுயர்ந்

டுடைபரந்தமேகலையுமிடைமூன்றுபொருந்தியிடும்
முடிவிடத்துமேகலையிற்பலசிகரமுளைத்துளவே

எ-து அம்மகமேருவினடிவிரிவுபதினாறாயிரம்யோசனை, யதனுனிவிரிவுமுப்பத்தீராயிரம்யோசனை, அஃதெவ்வாற்றானெனிற்றாமரைக்காய்போலடிசிறுத்துநுனிவிரிந்துமுடிவுபெறும், அதன்புடையிலொன்றுக்கொன்றுவிரிவுஅதிகமாய் மூன்றுமேகலைபொருந்தும், அவற்றுள்நுனிமேகலையில்பலகொடுமுடிமுளைத்துண்டாயினவெறு அவைவருமாறு-மேருவினடியில்அந்தராளம் இருபத்தையாயிரம்யோசனையுயரம், அதற்குமேல்முதன்மேகலையினுயரமூவாயிரம்யோசனை, அதன்புடைவிரிவுபதினாயிரம்யோசனை, அதன்மேலிரண்டாம் அந்தராளமிருபத்தையாயிரம்யோசனையுயரம், அதன்மேலிரண்டாமேகலைமூவாயிரம்யோசனையுயரம், அதன்புடைவிரிவுபதினாலாயிரம், அதற்குமேல்மூன்றும்அந்தராளமிருபத்தையாயிரம்யோசனையுயரம், அதற்குமேல்மூன்றுமேகலையுயரம்மூவாயிரம்யோசனை, அதன்புடைவிரிவுபதினெண்ணாயிரம்யோசனை, ஆகமேகலைமூன்றுக்குமந்தராளமூன்றுக்குமுயரமெண்பத்தினாலாயிரம்யோசனையுயரமெனவறிக, பலகொடுமுடிகளாவன கிழக்குமுதல்அமராபதிமுதலியவெட்டுக்கொடுமுடிகளுமவ்வெட்டுக்கொடுமுடிகளினிடையிடையில்தேவகன்னிகைகள்முதலாயினார்வசிக்கக்காமவதிமுதலியவெட்டுமுடிகளிருபத்திரண்டும்விளங்காநிற்குமென்க விரிக்கில் ஆயிரங்கொடுமுடியுண்டென்க. (௩௨)

இந்திரனைமுதலாயவெண்டிசைப்பாலருமவற்றிற்
றந்தமக்குத்தக்கதிசைக்கொடுமுடியிற்றங்கிடுவ
ரந்தவனையெட்டினுக்குநடுவாகவணியுறவே
முந்திமுளைத்தெழுசிகரமூன்றுளவேமூவர்க்கும்

எ-து இந்திரன்முதலிய வெட்டுத்திக்குப் பாலர்களுந் தத்தமக்கேற்ற திசைக்கொடுமுடிகளிலிருப்பர்கள், அந்தக்கொடுமுடியெட்டுக்குநடுவிலழகுபெறத்திருவிளையாட்டுநிமித்தமாகப்பிரமவிட்டுணுஉருத்திரர்கள்மூவர்க்குமாதியிற்றோன்றியமூன்றுகொடுமுடிகளுள. எ-று.

இதன்வகை கிழக்குமுதலாகஅமராபதியிலிந்திரனுந்,தேசோவதியிலக்கினியும்,சம்யமனியில்யமனும், கிருட்டிணங்காரவதியில். நிருதியும், சுத்தவதியில் வருணனும், கெந்தவதியில்வாயுவும், மகோதயபுரியில்சோமனும், எசோவதியிலீசானனுமிருப்பர்களென்க. எண்டிசைப்பாலருமென்றவும்மையால்அமராவதிக்குத்தெற்குக்காம

உதிரிதேவகன்னிகைகளும், அதற்குத்தெற்குசொன்னபுரியில்சித்த வதிகளும், அ
தற்குத்தெற்குஅம்சுமதியில் ஆதித்தர் பன்னிருவர்களும், அதற்குமேற்கு. சுமாவதி
யில்சாத்தியசாதிகளு, முற்கூறியவக்கினிதிக்குக்குமேற்கு ரோவதியென்னும்புரியில்
விசுவகன்னியர்களு முற்கூறிய சம்யமனிக்கு மேற்குமாதிருநந்தாபுரியிற் சத்தமா
தாக்களும், அதற்குமேற்குரோகிதையென்னும்புரியி லுருத்திரர்களும், அதற்குமே
ற்குதுணவதியென்னும்புரியில்யமதன்மராசனுக்குப்பரிவாரமான சூலத்தைத்தரித்
தசத்திகளும், அதற்குமேற்கு பிங்கலபுரியில். மகாதேவன். சிவோத்தமன். உருத்தி
ரன். சங்கரன். நீலலோகிதன். ஈசானன். விசையன். பீமன். தேவதேவன் பவோற்
பவன். கபாலீசன். ஆகியஏகாதசவுருத்திரர்களு.முற்கூறியநிருதிக்குவடக்குக்கிருட்
டுணவதியில்பசாசுகளும், அதற்குவடக்குகைமையென்னும்புரியில்மித்திரதேவர்க
ளும், அதற்குவடக்குசித்தவதியில்வித்தியாதரர்களும், அதற்குவடக்குசித்தபுரியில்
கின்னரரும், வாயுவுக்குக்கிழககுகாந்தாரியென்னும்புரியில் சித்திர ரதனென்னுங்
கந்தருவனும், அதற்குக்கிழக்குசித்திலையென்னும்புரியில் தும்புருநாரதரும், அத
ற்குக்கிழக்குபிரமதையென்னும்புரியில் குய்யகசாதிகளும்' சோமனுக்குக் கிழக்கு
சித்திரவதியென்னும்புரியில் குபேரனும், அதற்குக்கிழக்கு குமுதையென்னும்புரியில்
தன்மதேவர்களும், அதற்குக்கிழக்குசித்திபுவா வென்னும் புரியில். மாயனும், ஈசா
னனுக்குத்தெற்குபற்மபுரியில்பிரமாவும், அதற்குத்தெற்கு காமசுகாவதியில் அசுவ
னிதேவர்களும், அதற்குத்தெற்குமகாமேகபுரியில் விநாயகனு மிருப்பர்களென்க,
இப்புரிகளிருபத்திரண்டு முற்கூறியஅமராவதிமுதலியபுரிகள். எட்டும். கூடிமுப்ப
தாமின, சிற்மேகலையிரண்டினுள்ளுஞ்சித்திர கெந்தருவதேவர்க ளிருபபர்களென
வறிக.

(௩.௩)

தடவரையினடுவுச்சிதனின்முளைத்தசிகரத்தின்
வடிவுடையமனோவத்தான்மலரயன்வாள்புரியதற்குக்
குடதிசையிற்கொடுமுடியில்வைகுண்டங்கோவிந்தன்
இடம்வடபாற்குணதிசையிலெசோவதிசங்கரர்தடமே

எ- ௮. அந்தமகமேருவி னடுவே பதினாயிரம்யோசனை விரிவையு முயரத்தையுமு
டைத்தாய்ச்சருவரத்னங்களாலும் விளங்குவதாயெல்லாப்போகங்களுடனுங்கூடி
யமரோவதியென்னுங்கொடுமுடியில் பிரமாவெழுந்தருளி யிருப்பர், அந்தமரோவ
தியென்னும்புரிக்குமேற்குப்பதினாலாயிரம்யோசனை விரிவையு முயரத்தையுமுடை
த்தாய்ச்சருவரத்னங்களாலும் விளங்குவதா யெல்லாப்போகங்க ளுடனும்வைகு
ண்டமென்னுங்கொடுமுடியில் மகாவிட்டுணு விருப்பர், அந்தமரோவதிக் கீசானதி

சையிலிருபதினாயிரம்யோசனைவிரிவையுமுயரத்தையுமுடைத்தாய்வெள்ளிமயமாய் எசோவதியென்னும்பெயர்பெற்றிருக்குங் கொடுமுடியில் ஸ்ரீ கண்டபரமேசுரரொழுந்தருளியிருப்பர், எ - று. எசோவதியெனினுஞ் சோதிகிரியெனினுமொக்கும். அச்சிகரத்தைச்சூழ நந்திமுதலிய அட்டகணங்களுஞ்சூழ்ந்திருப்பர்களென்க.

(கூச)

மேருவைச்சுற்றியதிசைநான்கினுமுள்ள மலைமுதலியவற்றைநான்
குசெய்யுளாலுணர்த்துகின்றார்

இத்தகையதடவரையினடிவாரத்தெல்லைதனி
லத்திரிதான்பூருவத்தின்மந்தரமொன்றழுந்தியுறு
மத்திரிதானுயர்கந்தமாதனந்தென்றிசையமரு
மத்திரிதான்பச்சிமத்தின்விபுலமுறுமழகுறவே

எ- று. இங்ஙனங் கூறியமகமேருவுடைய அடிவாரம் நான்குதிக்கிலும்அம்மகமேருவுக்குறுதிநிமித்தமாக விட்கம்பசயிலம்நாலுள. அவையாவன. கீழ்திசையிலைம்பதினாயிரம்யோசனையுயரமானமந்தரபருபதஞ் சுவேதநிறமாய்ப்பூமிக்குளெண்ணாயிரம்யோசனையும்மேலேநாற்பத்தீராயிரம்யோசனையுயரமுமுடைத்தாயிருக்கும், அந்தவளவுடன்தென்றிசையிற்கனகமயமான கந்தமாதனகிரிநிற்கும், அவ்வளவுடன்பொருந்திநீலநிறம்போன்றுமேற்றிசையில்விபுலகிரிநிற்கும். எ- று. (கூரு)

உத்தரத்திற்பாருசுவவத்திரியொன்றுற்றழுந்தும்
வைத்தவனாமுறையுறவேமரமொருநான்கமருமவை
யுத்தமத்ததகதம்பமுதலுயர்நாவலொளிர்போதி
மொய்த்துறுபத்திரமொளிருமுதுமரமென்மொழிப்பொருளே

எ - று முற்கூறியவளவுடன்வடதிசையில்மாதளைவித்துநிறம்போன்றுபாருசுவவத்திரியென்னுங்கிரிநிற்கும், அந்தகிரிநாலிலொவ்வொருகிரியின் அடியகலமெண்ணாயிரம்யோசனையுமேலகலமபதினாயிரம்யோசனையுயரமுமாயிருக்கும், அம்மலையுச்சிகளின்நாலுதருக்கணிற்கும்,அவையாவனகிழக்குமுதலுத்தமமாகியவுயர்ச்சியையுடைய-கடம்பு - நாவல் - அரசு - நெருங்கிப்பிரகாசத்தையுடைத்தாய்த்தளிர்த்தஆலமரம் எ - று அவைகளினுயரமொவ்வொன்றுக்கு ஆயிரம்யோசனை-அவைகளின்சாகைகளைஞ்ஞூறுயோசனையுயரம் - பூக்கள் - குடம்போலவு-பழம் - யானைபோலவும் பழுத்துநிராநிற்குமென்க.

(கூசு)

குணதிசையிலருணமெனுங்குளநிலவுந்தடவரைக்கீழ்
மணமரியுமானதமுந்தென்றிசையின்வாய்த்துளது
தணமருவுஞ்சிதோதம்பச்சிமத்திற்றங்கியுறு
முணவிளியமாமடுவும்வடதிசையினுற்றிடுமே

எ - து கிழக்குமந்தரமென்னுமலையடிவாரத்திலருணமென்னுங்குளம்பொருந்தும் - அதிற்கடப்பம்பழச்சாற்றினின்றும் - ஆறுகள்புறப்பட்டுக்கீழ்திசையிற்பாயும், தென்றிசைக்கந்தமாதனமென்னுமலையடிவாரத்திற் கந்தமலிந்துவிளங்காநின்றமானதசரசென்னுங்குளம்பொருந்தும் - அதில்நாவற்பழச்சாறுவிழுந்துதெற்கேபோருவைச்சூழப்பாயும், மேற்றிசைவிபுலமென்னுமலையடிவாரத்திற்குளிர்ச்சியைப்பொருந்தாநின்ற சீதோதமென்னுங்குளம்பொருந்தும் - அதில் - அரசமரம் பொருந்திநின்றுபால்முதலியபஞ்சதாரையாகப்பொருந்திமேற்றிசையிற்பாயும், வடதிசையிற்பாருசுவமென்னுமலையடிவாரத்திற்பொசித்தற்கினிதாகியமகாமடுவென்னுங்குளம்பொருந்தும் - அதில் - ஆலமரத்தின்சாகையினின்றுமுண்டானபால் - தயிர் - நெய் - தேன் - முதலியபொருந்திவடதிசையிற்பாயும், எ று(௩௭)

சயித்திரக்காப்பூருவத்தினடிவாரந்தனிற்றழைக்கும்
விசித்திரநந்தனவனமுன்றென்றிசையின்விளங்கியிடும்
வசித்திநல்வைப்பிரசவனங்குடபான்மன்னியிடு
முதித்தநிருதாக்கியமும்வடதிசையிலொடுங்கிடுமே

எ-து கிழக்குமலையடிவாரத்திற்சயித்திரக்காவென்னும்பெயரையுடையநந்தனவனம்விளங்காநிற்கும், தெற்குமலையடிவாரத்தில்விசித்திரையென்னு நந்தனவனம்விளங்காநிற்கும், மேற்குமலையடிவாரத்தில் வசிக்கத்தகுந்தநல்லவைப்பிரசையென்னும்நந்தனவனம்பொருந்தியிடும், வடக்குமலையடிவாரத்தில் திருதாக்கியமென்னுநந்தனவனமுண்டாகாநிற்கும். எ - று

இந்தப்பூந்தோப்புகளினங்வேநான்குஓடைகளுள-அவையாவனகிழக்குசயித்திரக்காநடுவிலனேகந்தாமரைப்பூவுடனுங்கூடியதாகமென்னுமோடையுந்தெற்கில் விசித்திரக்காநடுவின் அனேகங்குமுதோற்பலங்களுடன்கூடியமான தசரசுவென்னுமோடையுமேற்குவைப்பிரசநடுவில்செந்தாமரைகளுடன்கூடிய விமலோதகமென்னுமோடையும்-வடக்குத்திருதாக்கியநடுவிலனேக நீலோற்பலங்களுடன்கூடிய மனோரதமென்னுமோடையும்என்கஇவைவந்ததுகொண்டுவாராததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாற்கூறியவெனவறிக. (௩௮)

முற்கூறியநாவல்மரத்தின், தன்மையையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

நறவனையகனியுநிருநன்னுவலெங்நாளு ❋
ரூறுதியுறவுயிர்க்கெல்லாந்தென்றிரியிலோங்குதலாற் ❋
பெறுகவகண்டரும்பெரியநாவலந்தீவெனும்பெயரை ❋
மறுவறுமக்கனித்தீநீர்வளையதனைவலம்வருமே ❋

எ - து தெற்குமலையில்நிற்கும் நாவல்அனவரதமுந்தேன்போன்ற வினிமையையுடையபழத்தைச்சொரிந்து தன்சாற்றைப்பருகினவான்மாக்களுக் கெல்லாம் பெலமுண்டாக்கிநிற்கையால்நவகண்டங்களு நாவலந்தீவெனப்பெயர்பெறும், குற்றமற்றவினிமையுடைய அக்கனியின்சாறுகனகமயமாய்மேருவை வலமாகவந்து அந்தநாவல்மூலத்திற்றிரும்பவந்தடையாநிற்கும். எ - று

நன்னுவலெனச்சிறப்பித்தமையால் அதிலொவ்வொருபழத்துக்குப்பதினைங்கலச்சாறுண்டாயிருக்குமெனவறிக, அந்தச்சாறுநாற்றிசையும்வளையப்பெருகுகையால் நாவலந்தீவெனப்பெயர்பெற்றதென்க-மறுவறுமென்பதனாலச்சாறு கனகமயமென்பதனையறிவிப்பது. (௩௧)

மேருவினைவலமாகிமேவியிடுமெந்நீரை ❋
யாருமவர்களைகநிறமாவரயுதாயுளுறச் ❋
சாரவொருமுன்றுடனுந்தங்கியவாயிரந்தழைக்க ❋
ஒருமுயிர்மற்றையவுமுண்டதனையொளியுறுமே ❋

எ - து மகமேருவைவலமாகவருகிற நாவற்பழச்சாற்றை யருந்தினவர்களெல்லோரும்பொன்னிறமாய்ப் பதின்மூவாயிரம்வயதுடனேபொருந்தியிருப்பர்கள், அவர்கண்மட்டோ அன்று அதனைப்பானம்பண்ணின்-ஊர்வன-பறப்பன-நடப்பன-தத்துவன-தவழ்வன-கொடிசெடிமுதலியவுங்கனகமயமாயிருக்கும் எ-று ()

அட்டகுலபருப்பதத்தின், தன்மைகளையிரண்டுசெய்யுளாலுணர்த்துகிறார்.

நடவரையின்றென்றிசையிற்றங்கியிடுமொருசயிலங் ❋
ருடகடலைக்கூடவொருதலைகூடக்குணகடலை ❋
யிடமுடையவிதன்றென்பாலித்தகைத்தோர்வரையிசையுந் ❋
திடமுறமுன்முறைதிகழுமிமையகிரியதன்றென்பால் ❋

எ - து மகம்மேருவுக்கடுத்ததெற்குப்பதுமராகநிறம்போன்ற நிடதபருப்பத்திழக்குமேற்குஞ்சமுத்திரத்தையுறநூறுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அதற்குத்தெற்காகப்பொன்மயமான ஏமகூடபருப்பதமேற்குங்கிழக்குஞ்சமுத்திரத்தையுறத்தொண்ணூறுயிரம் யோசனைநீளமாயிருக்கும், அதற்குத்தெற்காகக்கடினமாய்ப் பனிநிறம்போன்றஇமையபருப்பதம்-எண்பதினாயிரம் யோசனைநீளமாயிருக்கும் எ - று (சக)

வடபாகத்தொருகிரிமுன்வகுத்தபடிவதியுமதன் *
வடபாலுமொருகிரிமுன்வகுத்தபடிவதியுமதன் *
வடபாலுமொருகிரிமுன்வகுத்தபடிவதியுமினிக் *
குடபாலிற்குணபாலிலொவ்வொன்றுகுறுக்குறுமே *

எ - து மேருவுக்குவடக்குரத்னநிறம்போன்ற நீலகிரிகிழக்குமேற்குச்சமுத்திரத்தையுறநூறுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அந்தநீலகிரிக்குவடக்காகச்சந்திரப்பிரகாசம்போன்ற சுவேதகிரிகிழக்குமேற்குச்சமுத்திரத்தையுறத்தொண்ணூறுயிரம்யோசனைநீளமாயிருக்கும், அந்தச்சுவேதகிரிக்குவடக்காகச்சந்திரகாந்தநிறம்போன்றசிருங்கிகிரியெண்பதினாயிரம்யோசனைநீளமாயிருக்கும், இனிமகமேருவுக்குமேற்காகவடக்கில் நீலகிரியையுந்தெற்கில் நிடதகிரியையுமுறத்தெற்குவடக்காகநீலநிறமான கெந்தமாதனகிரிமுப்பத்தினாலாயிரம்யோசனைநீளமாயிருக்கும், மேருவுக்குக்கிழக்காகநீலகிரியையு நிடதகிரியையுமுறத்தெற்குவடக்காகப்பொன்னிறமானமாலியவானெனுங்கிரிமுப்பத்தினாலாயிரம்யோசனைநீளமாயிருக்கும். எ-து இவைகளினுயரமும்விரிவும்பின்னர்க்கூறுகினறார். (சஉ)

நவகண்டத்துள்பாரதகண்டத்தின்றன்னமையையாறுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

அட்டகுலபருப்பதங்களமரவிடைநவகண்டம் *
பட்டபடிபார்க்கவிமகிரித்தென்பாற்பாரதத்தை *
யொட்டிமுதலுரைத்திடுவாமதனையொழிந்தனவெல்லாங் *
கட்டமறுமமருலகத்தினையெனவேகருதுகவே *

எ து இங்ஙனங்கூறிய அட்டகுலப்பருப்பதங்களினுடையவிடையிடையுள்ளதேசங்களைநவகண்டமென்றுஅறிந்திடுக, இமயகிரிக்குத்தெற்காய்த்தென்சமுத்திரத்துக்குவடக்காய்நடுவாயிருக்கிறபாரதகண்டத்தைமுதலாகத்தொடுத்

துச்சொல்வாம், அந்தப்பாரதகண்டமொன்றையுமொழிந்தவெட்டுக்கண்டங்களுந் துக்கமின்றிச்சுகத்தையுடைத்தாயிருக்கும், அஃதெங்ஙனமென்னிற்றேவலோகத் துக்குச்சமமானபோகங்ளுடன்பொருந்துமெனக்கருதுக எ - று (சாங)

பாரதமுகவதீவபாகமுறுமவற்றுள்ளுஞ்
சீரியதுகுமரியெனுந்தீவதனிற்சிறந்திருப்ப
யாரியராமந்தணருமல்லாருமருமறையின்
காரியமுமுறுமதனிலின்னுமுளகழறிடுவாம்

எ- து. அப்பாரதகண்டம் இந்திரதீவமுதலான வொன்பதுதீவாகப்பிரியும், அவ்வொன்பதுதீவுள்ளுங்குமரித்தீவேசிறப்புடைத்து, அக்குமரித்தீவிற் பூச்சியராயிருக்கிறபிராமணரும்அவரல்லாதமற்றவர்களுஞ்சிறந்திருப்பர்கள், அஃதன்றியத்தீவில்வேதங்களின்காரியமானயாகாதிகளும்பொருந்தும்,அஃதன்றியின்னுமுள்ளவற்றைச்சொல்லிடுவாம். எ- று.

அந்தணருமென்றவும்மையாலொருவர்க்கொருவர்தாழ்ச்சியான அரையரும். வைசியருஞ்- சூத்திரருமென்க. அல்லாதாரென்பது. அநுலோமர். பிரதிலோமர். விராத்தியர். அந்தாரானரென்க. அவர்யாரெனின். சூ. பார்ப்பாரா சர்வணிகர்வேளாளர்காற்குலத்துவருஉந்தங்குலடையிடையினுமுயர்ந்தவாணினுமிழிந்தபெண்ணினும் வியந்தகூட்டத்தவரனுலோமர், இழிந்தவாணினு முயர்ந்தபெண்ணினும் பெயர்ந்தகூட்டத்தவர்பிரதிலோமர், அநுலோமர்குலத்தாணினு மவ்வழி பிரதிலோமகுலப் பெண்ணினுமுயர்ந்தகூட்டத்தாரேயந்தராளர், பிரதிலோமகுலத்தாணினும்பின்னிலையநுலோமகுலப் பெண்ணினும் வியந்தகூட்டத்தவரே விராத்தியராகும், ஒருமொழி யொழிதன்னினங்கொளற்குரித்தே. என்பதனால். இருக்குமுதலிய நான்கு வேதமும். மந்திரமுதலிய ஆறங்கமும். மனுமுதலிய பதினெட்டுத்தருமசாத்திரமும். காமிகமுதலியவிருபத்தெட்டுஆகமங்களும். பிரமமுதலிய பதினெண்புராணமும். மகாபாரதமிதிகாசமுதலியவு நியாயவைசேடிகமுதலியசாத்திரங்களும் வழங்குமென்க.

(சஉ)

கங்கைமுதனதிபலவுங்காசிமுதற்பதிபலவும்
பொங்குமயோத்திரம்பொதியமுதன்மலையும்பொருந்தியிடு
மங்கதற்குயோசனையோராயிரமுண்டெனவுரிக
வெங்கொடியமிலேச்சரிடமெட்டினுமெண்ணாயிரமே

எ - து கங்கைமுதலிய அறுபத்துநான்குகோடி தீர்த்தமும் - காசிமுதலிய ஆயிரங்கோடி புண்ணியஸ்தலங்களும்விசிட்டமானமலையுருவதும்பொதியமலையுருவதமுதலியசத்தகுலபருவதங்களும்பொருந்தும் - அந்தக்கமரித்தீவினுடைய விஸ்தாரம்ஆயிரம்யோசனையுண்டெனவறிக, மற்றவிந்திரதீவுமுதலியவெட்டுத்தீவுகளும்ஒவ்வொருதீவுக்காயிரம்யோசனையாகவெண்ணாயிரம்யோசனைபொருந்தும், அவைகளிற்கொடுமைகளையுடையமிலேச்சரிருப்பர் எ - று

இங்ஙனங்கூறியஅறுபத்துநான்குகோடிதீர்த்தங்களுள் ஐந்து தீர்த்தஞ்சிறப்புடையன, ஆயிரங்கோடிபுண்ணியஸ்தலங்களுள் அறுபத்தெட்டுஸ்தலஞ்சிறப்புடையன. (அ௬)

இந்திரமேசேருகமேதாமிரமேயெழிற்கெபத்தி
சந்துமலிநாகமதேசவுமியமேகாந்திருவ
மந்தமலிவாருணமேயெனவெட்டுமதித்திடுக
விந்தவளவெனைநிலத்துங்கிரிவிரிவீராயிரமே

எ - து இந்திரத்தீவு - சேருகத்தீவு - தாமிரத்தீவு - அழகையுடையகெபத்தித்தீவு - நாகத்தீவு - சவுமியத்தீவு - காந்திருவத்தீவு - வருணத்தீவுஆகவெட்டுத்தீவையுமறிக, ஆகவிந்தப்பாரதகண்டத்தளவுஒன்பதினாயிரமும் - ஒழிந்த- இமயகண்டமுதலியவெட்டுக்கு ம்ஒவ்வொன்றுக்கு ஒன்பதினாயிரம்யோசனைகிரியெனவறிக, இமவான்முதற்சிருங்கிரி யீறாகக்கிரியாறுக்குமொவ்வொன்றுக்குயரமுமகலமுமிரண்டாயிரம்யோசனையும்கெந்தமாதனம்-மாலியவான்விந்தவிரண்டுகிரிக்குமுயரமுமகலமுமாயிரம்யோசனையுமுள எ-று இமவான்முதலியகிரிகளினுயர்வகலத்தையாண்டுக்கூறாதீண்டுக்கூறியதென்னெனின்தலைதடுமாற்றமென்னுந்தந்திரவுத்தியாற்கூறியதெனவறிக. (அ௩)

உன்னதத்தென்மயேந்திரமேயுயர்மலையஞ்சையகிரி
வின்னவிலுஞ்சுத்திகமேயிருக்குமுயர்விந்தியமே
பன்னுபுகழ்மிகுபாரியாத்திரமேயெனப்பகர்ந்த
வின்னகிரியேழுமுதற்குமரிதலத்திசைந்தனவே

எ - து தெற்குமுதல்வடக்கீறாகமிகவுமுயரத்தைப்பொருந்தியமயேந்திரகிரி, மிகவுமுயரத்தைப்பொருந்தியபொதியமாமலை, சையமால்வரை-சுத்திகாசலம், இருக்ககிரி-யுயர்ந்தவிந்தியபருப்பதம்-மிகுந்தபுகழுடையதென்றுசொல்லப்பட்டபாரியாத்திரபருப்பதம், இந்தவேழுங்குமரித்தீவிற்பொருந்தும் எ - று [அ௪

அங்கமெதிர்நிரணிறையாற்சமாக்கியமுமணிமலையுஞ்
சங்கமுந்தண்குமுதமுநல்வாரமெனுந்தலந்தானுந்
துங்கமலிபொதித்தென்பாற்றுடர்ந்தவடிவாரத்தி
னங்கனகவிலங்கையுமேழ்வனைச்சாரலடித்தேசம்

எ - து வடக்கேதொடுத்துஎதிர்நிரணிறையாகப்பாரியாத்திரமலையடிவாரத்தில்-அங்கமென்னுந்தேசமும், விந்தியகிரியடிவாரத்திற்சமாக்கியமென்னுந்தேசமும், இருக்கபருபதத்தின்அடிவாரத்தில்-அணிமலையென்னுந்தேசமும், சுத்திகாசலத்தடிவாரத்திற்சங்கமென்னுந்தேசமுஞ், சையமலையடிவாரத்திற்தண்மைபொருந்தியகுமுதமென்னுந்தேசமும், மலையபருவதத்தடிவாரத்தில்நன்மையினையுடையவராகமென்னுந்தேசமும், மிகவுமுயர்ந்திருக்கிறபொதியமலைக்குத்தெற்காகியமயேந்திரகிரியினடிவாரத்தழகியகனகமயமாகியஇலங்கையென்னுந்தேசமும் பொருந்தும். எ - று கனகமயமானவிலங்கையென்னுந்தேசம் ரத்னபூமியுடன்கூடியைஞ்ஞூறுயோசனைசமுத்திரத்துக்குட்புகுந்திருக்குமெனவறிக-அந்தவிலங்கையொழிந்ததேசமாறும்உபத்தியெனப்பெறும் [சஅ]

கயிலையின்சிறப்பிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

இமையகிரிவடகுணபாலிமையவர்கடொழுதேத்த
வுமையுடனேபசுபதிதானுறைவனெருகிரிமிசையிற்
றமையுணர்ந்ததபோதனருந்தங்குவரச்சயிலத்திற்
கமையுடையாரதன்பெயரைக்கயிலையெனக்கழறுவரோ

எ - து மேற்கூறியவிமயகிரிக்கீ சானத்திற்றேவர்கள்வணங்கியேத்தும்படி பார்வதியுடன்பசுபதியாகிய சிவபெருமானெழுந்தருளியிருப்பன் ஒப்பற்றமலையினிடத்து-அதிற்றம்மையறிந்ததபோதனர்கள்தங்கியிருப்பர், அம்மலையின்பெயரைப்பொறுமையையுடையபெரியோர்கள்கயிலைமலையென்றுசொல்லுவர் எ-று (சக)

ஆகமங்களனைத்தினையுமருமறைகளொருநான்கு
மோகமறமுனிவர்க்குமொழிந்தருளவொழிந்தனவு
மாகருமோமாலபனுமலர்தூவித்தலைவணங்க
வேகனிறையதன்மிசையுமிருக்கவிரும்பினனினிதே

எ - து இமயத்துக்குவடகிழக்காகக்கிம்புருடகண்டத்தில் வெள்ளிமயமாய் நானுவிதமானசிகரங்களுடனிருக்குமக்கயிலையின்கண்ணுந்தேவர்களும்-பிரமாவும் விட்டுணுவும்-மலராலருச்சித்துத்தலையால்வணங்கவேகனாகியசிவபெருமான் இனிதாகவெழுந்தருளவிரும்பினன், அஃதியாதுக்கெனிற்சனகர்முதலியமுனிவர்களுக்

குக்காமிகாதியானவிருபத்தெட்டுத்திவ்வியாகமங்களையும்-இருக்குமுதலிய நான்கு வேதங்களையு மற்றவைகளையு முணர்த்தியாணவாதிமலங்களைப்போக்கிச்சிவசாயுச்சியத்தையடைவிக்கையின்பொருட்டு எ - று (ருய)

நவகண்டங்களின்பெயர்களுமவைகளிருக்குமிடங்களு
மூன்றுசெய்யுளாலுணர்த்துகின்றார்

இமகிரிக்குந்தென்கடற்குமிடைப்பாகம்பாரதமே ❋
யிமகிரிமற்றேமகிரியிடைப்பாகங்கிம்புருட ❋
மமைநிலவுநிசதகிரித்தென்பாகமரிவருட ❋
மிமையவருமிருந்தபெருவரைச்சாரலிளாவிரதம் ❋

எ - து தென்சமுத்திரத்துக்குமிமையகிரிக்கும்நடுபாரதகண்டம், இமகிரிக்குவடக்குஏமகிரிக்குத்தெற்குக்கிம்புருடகண்டம், ஏமகிரிக்குவடக்குநிடதகிரிக்குத்தெற்குப்பொறுமையைப்பொருந்தப் படாநின்றஅரிவருடகண்டம், மகாமேருவைச்சூழ்ந்ததேவர்களிருக்குமிடம்இளாவிரதகண்டமெனப்பெயர்பெறும் எ - று

இமையவருமென்றவும்மையாற்சித்தர்-கந்தருவர்-இராக்கதர்-வேதாளகணங்கண்முதலியரெனவறிக. (ருக)

நீலகிரிவடதேசமிரமியமேயெனநினைக ❋
பாலனையகிரிவடபாலிரணியமேயெனப்பார்க்க ❋
சீலமுளார்சிருங்ககிரிவடபாலைத்தென்பாலை ❋
யோலமிடுமுததிக்குங்குருவெனவேயுன்னுகவே ❋

எ- து. மேருவுக்குவடக்காயிருக்கிறநீலகிரிக்குஞ்சுவேதகிரிக்கும்நடு இரமியகண்டம், சுவேதகிரிக்குவடக்குச்சிருங்ககிரிக்குத்தெற்குஇரணியகண்டம், சிருங்ககிரிக்குவடக்குஆரபாரத்தையுடையவடசமுத்திரத்துக்குத்தெற்கு நற்குணமேசுபாவமாகவுடையவர்களிருக்குங்குருகண்டமென்வறிக. எ- று. (ருஉ)

குடகடற்குக்கீழ்க்கேதுமாலமெனக்குறித்திடுக ❋
மிடலுடையவியன்கந்தமாதனத்தின்மேற்கதுதா ❋
னிடமுடையமாலியவானெனுங்கிரிக்குக்கீழ்பாற்கீழ்க் ❋
கடலினுக்குமேல்பாகம்பத்திரமாக்கருதுகவே ❋

எ- து. மேற்சமுத்திரத்துக்குக் கிழக்குப்பெலத்தையுடைய கெந்தமாதனகிரிக்

குமேற்குகேதுமாலகண்டம், விரிவையுடையமாலியவான்கிரிக்குக்கிழக்குக்கீழ்ச்சமுத்திரத்துக்குமேற்குப்பத்திராசுவகண்டமெனப்பெயர்பெறும். எ- று. (ருங)

பாரதகண்டமொழிந்தவெட்டுக்கண்டத்திருப்பார்க் குணவுமுதலி
யவற்றையெட்டுச்செய்யுளா லுணர்த்துகின்றார்

உண்டிடுவர்கருங்குவளையுருவமதியனையரரி *
கண்டமதிற்கலந்திருப்பர்காலமுமோரயுதமுள *
கண்டகியின்கனியுணவுகருங்குவளைநிறமாயு *
வுண்டயுதமுயர்கேதுமாலத்தினுறைவார்க்கே *

எ- து. அந்தப்பத்திராசுவகண்டத்திருப்பவர்கள் நெய்தற்பூவைப்பொசித்துச்சந்திரப்பிரகாசம்போன்றநிறத்தைப்பெற்றுப்பதினாயிரம்வயதையுடையராயிருப்பர்கள். கேதுமாலகண்டத்திலிருக்கிறவர்கள்வருக்கைப்பலாப்பழத்தைப்பொசித்து நீலநிறத்தையுடையராய்ப்பதினாயிரம்வயதுபொருந்தியிருப்பர்கள். எ- று.

அரிகண்டமெனினும்பத்திராசுவகண்டமெனினுமொக்கும். (ருச)

ஆயுங்காற்குருகண்டத்தமர்வார்கடமக்கெல்லா *
மாயுவுமூவாயிரமுமயுதமும்வேண்டியகனியுண் *
டேயுமுடற்பச்சைநிறஞ்சிறுவருளரிருவரவ *
ராயுதரத்தொருபொழுதினுணைனப்பெண்ணைனவமர்வார் *

எ- து. குருகண்டத்திலிருக்கிறவர்கள் சொரூபத்தை விசாரிக்கிற்பதின்மூவாயிரம்வயதுடன்பொருந்தியெய்பொழுதுமெவ்வன்னராய்ப்பொற்கொன்றைநிறத்தையுடையராய்த்தமதுகருத்துக்குவேண்டினமரத்தின்பழத்தைப்பொசித்திருப்பர்கள், அவர்களுக்கொருபொழுதுக்குள்ளேகருப்பந்தரித்துஆண்பெண்ணைனவிரண்டுபிள்ளைகள்பிறந்திருப்பார்கள். எ- று. (ருரு)

அத்தகையகுருகண்டவடபாகமதுதன்னிற் *
சித்தரொடுமுனிவரருஞ்சாரணருஞ்செறிந்திருப்பர் *
நுய்ப்பதுவுமூலபலஞ்சோமனெனத்துளங்கொளியா *
ருத்தமத்தசந்திரதீவெனும்பெயருமுளததற்கே *

எ - து முற்கூறிய குருகண்டத்தில்வடக்குச்சமுத்திரத்துக்குள்ளே யெண்ணாயிரம்யோசனையுள்ளதீவிற்சித்தர்களுமுனிவர்களுந்திகம்பரர்களுநெருக்கியி

ருப்பார்கள், அவர்கள்பொசிக்கிறதுகிழங்குங்கனியும் அவர்கள்சந்திரனைப்போலு ம்விளங்காநின்றபிரகாசத்தையுடையார், அந்தத்தீவுஉத்தமமானசந்திரதீவெனப் பெயர்பெறும் எ - று (ருசு)

ஆயுவயுதத்துடன்மூவாயிரமுமவர்க்குண்டு *
வாயுதிசைதனிற்பத்திராகரமேவாய்த்தபெயர் *
தேயமுமுண்டதிற்றிகழ்வார்சித்தருநன்முனிகணமு *
மாயுமியற்சாரணருங்கனிமூலமருந்துவரோ *

எ - து அந்தச்சந்திரதீவிலிருப்பார்க்குப்பதின்மூவாயிரம்வயதுண்டுமுற்கூறிய குருகண்டத்தின்வாயுதிக்கில்வடக்குச்சமுத்திரத்துக்குள்ளேநாலாயிரம்யோசனை க்கப்புறத்திற் பதினாயிரம்யோசனைவிரிவையுடையபத்திராகரதேசமெனவொரு தீ வுண்டு-அதிற்சித்தர்களு மிருடிகளு-மியலையாராயப்படாநின்ற திகம்பரர்களுந் தி வ்வியமானமரத்தின்கனிகளையுங்கிழங்குகளையும்பொசித்துக்கொண்டிருப்பார்கள். எ - று (ருஎ)

செங்கமலநிறமுடையர்திகழ்மூவாயிரவயுதந் *
தங்கிடுவரிரணியத்திற்றங்குநர்நல்லிகுசபல *
நுங்கிடுவர்மதியனையநிறமுடையர்நுவலுங்கா *
லங்கயுதமைஞ்ஞூறீராயிரமுமவர்நிலையே *

எ - து முற்கூறியபத்திராகரத்தீவிலிருக்கிறவர்கள்செந்தாமரைபோன்றநிற த்தையுமுடையராய்ப்பதின்மூவாயிரம்வயதையும்பொருந்தியிருப்பர்கள், இரணிய கண்டத்திலிருக்கிறவர்கள்நல்லஎலுமிச்சம்பழத்தைப்பொசித்திருப்பர்கள், அவர்க ளுடையநிறத்தைச்சொல்லுமிடத்துச்சந்திரப்பிரகாசம்போன்றிருப்பர்கள், அவர் களுக்குப்பன்னீராயிரத்தைஞ்ஞூறுவயதுண்டு எ - று (ருஅ)

உற்றிடுவார்க்கிரமியத்திலொளிகரியகுவளைநிறந் *
துற்றுவதாலின்கனியேதொடர்வருடமவர்க்கயுத *
மற்றுமிரண்டாயிரமுண்டரிவருடமருவினர்க்குப் *
பற்றியமெய்யொளிவெள்ளிபானமுந்தீங்கரும்பாமே *

எ - து இரமியகண்டத்திலிருக்கிறவர்களுக்கு நெய்தற்பூப்போன்றநிறம் அ வர்களுக்குப்பொசிப்புஆலம்பழம்-அவர்களுக்குவயதுபன்னீராயிரம், அரிவருடக ண்டத்தில்வசிக்குமவர்களுக்கும் பன்னீராயிரம்வயது-அவர்கள்தேகத்திற்பிரகாச

ம் வெள்ளிநிறம்போன்றிருக்கும்-அவர்கள்பொசிப்பு இனிய கருப்பஞ்சாறும்.
எ-று (ருக)

பொன்னுருவர்கிம்புருடர்புசிப்பிறலிப் புன்கனியே *
மன்னுமயுதாயுவுளர்மனக்கவலைதனையில்லார் *
கின்னமிலர்நரைதிரையுங்கிளருடலிற் பிணியினையு *
மின்னமுறைமற்றையவேழ்கண்டத்துமெண்ணுகவே *

எ-து. கிம்புருடகண்டத்திலிருக்கிறவர்கள் பொன்னிறமாயிருப்பர்கள், அவர்கள்பொசிப்பு. இத்திக்கனி அவர்களுக்கு நிலைபெற்ற வயதுபதினாயிரம், அவர்கள்மனக்கவலையுமின்றியத்தியாத்மிகமுதலிய துக்கத்திரையங்களும் நரைதிரையுமின்றி மிகவுஞ்சந்தோஷத்துடனேகூடியிருப்பர்கள், அந்தக் கிம்புருடகண்டத்துக் குற்றபடிமற்றையேழுகண்டத்திலிருப்பார்களுக்கும்பொருந்துமெனக்கருதுகள- று(சுய

ஈங்குரைத்தவிருநான்கு கண்டத்துளெல்லோர்க்கு *
மோங்கியிடுங்கிருதயுகம்போலொழிந்தயுகமெல்லா *
நீங்கரியநன்மையினைநிறுத்தியிடுநிறையறிவு *
தாங்கிடுவரவருடலினுரமாதிதன்னையுமே *

எ-து. வெளி. (சுக)

பாரதகண்டத்திலிருக்கிறவர்கள் தன்மையை யிரண்டுசெய்யுளாலு
ணர்த்துகின்றார்

அறிவுவலியாயுளுருவாகாரமவையெல்லாஞ் *
செறியுமுகத்தினுக்கிசையப்பாரதத்துட்டிகழ்வார்கட் *
குறுமுணவுபுலத்துழலாலுழுவதுமின்றியுமுண்டு *
பெறுபலமுந்தைவிகமாதியமூன்றிற்பிறழாவே *

எ-து. பாரதகண்டத்திலிருக்கிறவர்களுக்குஅறிவும்பெலமுஞ்சரீரமுங்கிருதயுகம்போலாதுமற்றையவுகங்கட்குத்தக்கபடிபேதமாகப்பொருந்தும், அவர்கட்குவயலுழவுமுதலியதொழிகளினாலுண்டாகியதேபொசிப்பு. அஃதன்றியுழுதுவிளையாமற்றானேயுண்டாகியகுளச்செந்நெல்புல்லரிசி காட்டிலுள்ளகாய்கனிமுதலியபொசிப்புகளுமுண்டுஅவர்கள்அத்தியாத்மிகம். ஆதிதைவிகம். ஆதிபௌதிகம். எனக்கூறியதுக்கத்திரையங்களையுமொழியாமலனுபவிப்பார்கள். எ-று.

துக்கத்தினையமாவன தேவர்களால்வருந்துன்பம். ஆதிதைவிகம். பிருதிவிமுதலிய பூதங்களால்வருந் துன்பம்ஆதிபௌதிகம், இராசா. மிருகம். பசு. பக்ஷி. முதலியவற்றால்வருந்துன்பம். அத்தியாத்மிகம். என்னை. வெண்பா. கருவிற்றுயர்செனிக்குங் காலைத்துயர்மெய், திரைநரைமூப்பிற்றிளைத்துச்செத்து, நரகத்தின், ஆழுந் துயர்பு வியையாளின்பமாதியெலாம், ஊழுதவுதைவிகமென்றோர் (க)

பனியாலிடியாற்படர்வாடையினுந், துனிதென்றலினுஞ்சுகமுந் - தனையனைய. நீரி னுமின்பின்னலுநெருப்பினுந்துயரின், போரிற்பவுதிக மாகும். (உ)

தன்னுற்பிறராற்றனக்குவருந்தீங்குநல, மின்னுவிலங்கரவந்தேளொறும்பு, சென் முதனீ - ரட்டையலவன்முதலைமீனரவமாதியினுங், கட்டமுமிங்காத்மிகமேகாண் ரு (சுஉ)

மற்றையநற்றலமெவற்றும்வாழ்வார்கள்பாரதத்தைப் ❊
பற்றிவினைநலம்பயின்றார்முற்பலத்திலெனப்பார்க்க ❊
முற்றியுறவினைபலவுமுளைத்ததலமிதுவதனுன் ❊
முற்றவினையனைவருமிவ்விடமதனுண்முயல்வாரே ❊

எ - து பாரதகண்டங்கன்மபூமியாகையான் முற்செனனங்களிலார் ச்சித்த கன்மபலத்தையாண்டனுபவித்துஅந்தந்தக்கன்மபலத்தாலேகிம்புருடமுதலியவெட்டுக்கண்டங்களிலுண்டாகிய போகபேதங்களையாண்டாண்டு பொசித்திருப்பர்களெனவுரைக்க, ஒருகருமஞ்செய்தவன் அந்தத்தலத்திலேயிருந்து அந்தந்தப்பலத்தைப்பொசியாமல்வேறோர்தலத்திலேயப்பலம்பொசிக்குமாறுபோலவிந்தப்பாரதகண்டத்திலேகன்மபரிபாகமானவாறேமற்றக்கண்டங்களையடைந்திருந்துபோகங்களைப்பொசித்துத் தொலைந்தவாறேபின்பிந்தப் பாரதகண்டத்தைவந்தடைந்துஎல்லாருஞ்சத்கன்மங்களையேபண்ணுவர்கள் எ - று (சுங)

நவகண்டத்தின்யோசனையளவையுணர்த்துகின்றார்

தென்றிசைப்பாரதமாதிசிறந்தபெருவரைவடபாற் ❊
குன்றமொருமூன்றினுக்குமப்பாலைக்குருவந்தத் ❊
தொன்றியிடும்யோசனையுமொருநூறுயிரமுண்டு ❊
நின்றகுணக்கொடுகுடக்குமிவ்வளவேநிகழ்த்துங்கால் ❊

எ - து தெற்குப்பாரதகண்டமுதல்மேருவுக்குவடக்காயிருக்கிற நீலகிரிமுதலிய மூன்றுகிரிக்குமப்பாலாயிருக்கிற குருகண்டமீறுகப்பொருந்தப்பட்டயோசனைநூறுயிரம்எனவறிக,மற்றைக்கிழக்குமேற்குநூறுயிரம்யோசனைவிரிவுண்டு எ-று

அவைவருமாறு - பாரதகண்டம் - ஒன்பதினாயிரம்-கிம்புருடகண்டம்-ஒன்பதினாயிரம்-அரிவருடகண்டம் - ஒன்பதினாயிரம் -இளாவிரதகண்டம்-பதினெண்ணாயிரம்-மகமேரு-பதினாறாயிரம்-இரமியகண்டம்-ஒன்பதினாயிரம்-இரணியகண்டம்-ஒன்பதினாயிரம்-குருகண்டம்-ஒன்பதினாயிரம்-சிருங்ககிரிமுதலிமவானீறாகமலையாறுக்கும்-பன்னீராயிரம்-ஆகத்தெற்குவடக்குத்தொகையானே நூறாயிரம்யோசனை யெனவறிக, பத்திராசுவகண்டம்-முப்பத்தீராயிரம்-மாலியவான்கிரி-ஆயிரம்-இளாவிரதகண்டம்-பதினெண்ணாயிரம்-மகாமேரு-பதினாறாயிரம்-மேற்குக்கெந்தமாதனகிரி-ஆயிரம் கேதுமாலகண்டம்முப்பத்தீராயிரம்-ஆகக்கிழக்குமேற்கும்நூறாயிரம்யோசனையுண்டென்க (சுச)

நவகண்டத்தின்பெயர்க்காரணமுணர்த்துகின்றார்

மனுகுலத்துள்வருமங்கிநேத்திரனுமன்னவன்றன் *
றனையர்பரதனைமுதலோர்சவுரியரொன்பதின்மருளர் *
இனையவர்களாண்டமையாலெய்தியபேரெனவிவற்றை *
நினைகபரதனுக்குரிமைபாரதமேநிகழ்த்துங்கால் *

எ - து இந்தநாவலந்தீவில்மனுகுலத்தில்வரப்படாநின்றராசா அக்கினிநேத்திரன்-அவனுக்குப்பரதன்-கிம்புருடன்- அரி-இளாவிரதன்-பத்திராசுவன்-கேதுமாலி-இரமியன்-இரணியன்-குரு-எனவீரப்பாட்டையுடையபுத்திரரொன்பதின்மருளர், இந்தக்கண்டங்களை யொவ்வொருத்தராக வொன்பதின்மரும்பிறித்தாண்டமையாலவர்களவர்கள்பெயராலேயந்தக்கண்டங்களின்பெயராயிற்று, அதில்பரதனென்னு மரசனிக்கண்டத்தையுரிமையாகவாண்டமையால் பாரதகண்டமெனப்பெயராயிற்று எ - று

ஏகாரந்-தேற்றம்-அஃதென்போலென்னிற்பாண்டியன்-சோழன்-ஆண்டதேசத்தைப்பாண்டிமண்டலஞ் சோழமண்டலமென்றாற்போலென்க, சுவாயம்புவென்னுமனுவின்புதல்வன்பிறியாவிரதன்அந்தப்பிறியாவிரதன்புத்திரர்கள்-பதினமருளர், அந்தப்பதின்மருள்-மேதா-அக்கினி-வாகு-என்னும்மூவரும் வயிராக்கியத்தாலே சன்னியாசமாயிருந்தார்கள், மற்றஅக்கினிநேத்திரன்முதலிய வெழுவருஞ் சம்புத்தீவுமுதலிய வேழுதீவையுமொவ்வொருத்தராகப் பிறித்தாண்டார்களெனவறிக. (சுரு)

ஏழுதீவினளவுமேழுகடலினளவுநான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்.

(ரு)

எண்ணுகயோசனையிலக்கமென்றினையநாவலன்தீ ❋
வெண்ணிடுகவிதன்புடை சூழுவரிவிரிவிப்படியென் ❋
றெண்ணிடுகவிதற்கப்பாற்சாகமிரண்டிலக்கமெனக் ❋
கண்ணிடுகவதற்கப்பாற்பாற்கடலுமக்கணக்கால் ❋

எ - து இந்தநாவலம் பெருந்தீவை நூறுயிரம்யோசனைநீளமென்று கருதுக இந்நாவலம்பெருந்தீவைச் சூழ்ந்தவுப்புக்கடல் நூறுயிரம்யோசனையென்று கருதுக, இந்தவுப்புச்சமுத்திரத்துக்கப்பாற்சாகத்தீவுஇரண்டுநூறுயிரம் யோசனை, அந்தச்சாகத்தீவு க்கப்பாற்பாற்கடலிரண்டு நூறுயிரம்யோசனைதூரம் எ - று

முற்காலத்திற்பருப்பதங்களெல்லாஞ்சிறகுடனேகூடப்பறந்துஒருதேசத்திற் போயிருக்கிறபொழுதுஅதிலிருக்கிறபிராணிகளுக்குமிகவும்பீடைவருகையால்தேவர்களெல்லாருந்துக்கித்து இந்திரனுக்குமுறையிடஅப்பொழுதிந்திரன் அப்பருப்பதங்களினுடையசிறகைச்சேதித்தபோதுபயப்பட்டுலவணசமுத்திரத்திற்பன்னிரண்டுகிரிகள்பறந்துவந்துகிழக்குமுதலியதிக்குகளில்விழுந்தன - அவையாவன - கிழக்குச்சமுத்திரத்தில்இடபகிரி-துந்துபிகிரி-தூமிரகிரி-மூன்றும்-தெற்குச்சமுத்திரத்திற்-சக்கரகிரி-மைநாககிரி வலாககிரி-யெனமூன்றும்-மேலைச்சமுத்திரத்திற் சோககிரி-வராககிரி-நந்தனகிரி-எனமூன்றும்,வடக்குச்சமுத்திரத்தில்-கங்ககிரி-சந்திரகிரி-துரோணகிரி-எனமூன்றுமாகப்பன்னிரண்டுமெனவறிக, அவற்றிற்சக்கரகிரிக்குமைநாககிரிக்கும்நடுவேகுதிரைமுகம்போன்றவடவாமுகாக்கினியெப்போதுஞ்சொலித்துக்கொண்டுநிற்குமெனவறிக,இரண்டாவதாகியசாகத்தீவுக்குஇராசாமேதாதிதி-அந்தஇராசவுக்குப்புத்திரர்களெழுவருளர்-அவர்கள்யாவரெனிற் சாந்தன்-அபையன்-சிரமுகன்-அனந்தன்-சிவன்-க்ஷேமன் துருவனென எழுவரையும்அபிடேகம்பண்ணியவர்களவர்கள்பெயராலத்தீவையேழாகப்பிறித்துக்கொடுத்தான்-அந்தச்சாகத்தீவிற்கொடுமதகம்-சந்திரசம்சயகம்-நாரதம்-மந்தரஞ்-சோமகம்-இடபம்-வைப்பிராசம்-என்றமலைகளேழுமுளஅம்மலைகளினின்றும்அகிருதைமுதலியநதிகளேழும்-புறப்பட்டுப்பாற்கடலிற்போய்விழும், அந்தத்தீவிலிருக்கிறபேயர்க்குப்பொசிப்புப்பால்-அவர்கள்நிறஞ்சந்திரப்பிரபைபோன்றிருப்பர்கள்,அந்தத்தீவில்சாகமென்னுமரம்நிற்கையாற்சாகத்தீவெனப்பெயர்பெற்றதென்க,அந்தப்பாற்கடலில்வடக்கேசுவேததீவில்-நடுவேவைகுண்டம், அதில்அநேகங்கோபுராமும்பிரகாரமுமுளஅவ்விடத்திற்கமலையாருடன்கூடித்திருமாலாதிசேடன் மேல்சயனஞ்செய்வரெனவறிக. (சுசு)

எண்ணிடுகவதற்கப்பாற்குசைத்தலநான்கிலக்கமென்
வெண்ணிடுகவதற்கப்பாற்றதியுதநிமுனையிலக்கத்
தெண்ணிடுகவதற்கப்பாற்கிரவுஞ்சமெட்டிலக்க
மெண்ணிடுகவதற்க்ப்பானெய்க்கடலுமெட்டெனவே

எ - து முற்கூறியபாற்கடலுக்கப்பாற்குசைத்தீவுநான்குநூறுயிரம்யோசனை, அந்தக்குசைத்தீவுக்கப்பாற்றயிரக்கடல்நான்குநூறுயிரம்யோசனை, அந்தத்தயிர்க்கடலுக்கப்பாற்கிரவுஞ்சத்தீவுஎட்டுநூறுயிரம்யோசனை, அந்தக்கிரவுஞ்சத்தீவுக்கப்பால்-நெய்க்கடலுமெட்டுநூறுயிரம்யோசனைவிரிவுண்டு. எ - று

அந்தக்குசைத்தீவிற்பொன்மயமான குசைநிற்கையா லப்பெயர்பெற்றது, அந்தக்குசைத்தீவுக்குஇராசா- வசு- அந்தவசுவென்னுமிராசாவுக்குப்புத்திரர்களெழுவர் அவர்யாவரொன்னில்சுவேதன். லோகிதன். சீமுதன். அரிதன். விபுத்தியுதன். மானசன். சுப்பிரதன். என்கஅவ்வெழுவர்களும் பிரித்தாண்டமையால் அவரவர்பெயராலத்தீவு. ஏழுபிரிவாயிற்று, அவ்வேழுதீவுக்குமேழுகிரியுள. அவையாவன குமுதகிரி, ஊதகிரி. வராககிரி. துரோணகிரி. கங்ககிரி. மயிடகிரி. குமுதவான்கிரி. என்க, அந்தக்கிரிகளினின்றுஞ்சுவேததோயநதிமுதலிய வேழுநதிகளும்புறப்பட்டுத்தயிர்க்கடலிற்போய்வீழும், அதிலிருப்பார்க்குப் பொசிப்புத்தயிர். அஃதன்றிபலக்களமிர்தமிலைவயிற்றையும்பொசித்திருப்பார்கள், இனியக்கிரவுஞ்சத்தீவுக்கு இராசா சோதிமான். அந்தஇராசாவுக்கு ஏழுபுத்திரர்களுளர், அவர்கள்யாவரொன்னில். உற்பிதன். வேணு. மண்டலன். இந்தகாரன். திருதிமான். சுப்பிரபாகன். கபிலன். என்கஅவ்வேழுபுதல்வர்களும்பிறித்தாண்டமையால் அவரவர் பெயராலத்தீவுஏழுபிரிவாயிற்று, அவ்வேழுதீவுக்கு மேழுகிரியுள. அவையாவன. வித்துருமகிரி. ஏமநாமகிரி. திருதிகிரி. புட்பதெந்தகிரி. குசலகிரி. லோகிதகிரி. மந்தரகிரி. யென்க, அந்தவேழுகிரிகளினின்றும்மகிபாபாவென்னுநதிகள்முதலியவேழும்புறப்பட்டுநெய்க்கடலிற்போய்வீழும், அந்தத்தீவிலிருக்கிறவர்கள் நெய்மயமாயிருக்கிற அமிர்தபலசாரங்களைப்பொசித்திருப்பர்கள், அவர்களுக்கு நிறமுற்கூறியதே. அக்கிரவுஞ்சத்தீவில். ஏமநாமகிரியில்கிரவுஞ்சனென்னுமசுரன்சிறிதுநாளாண்டுகொண்டிருந்து குமாரசுவாமியுடன் போர்செய்து மரிக்கையா லதுகிரவுஞ்சமெனப்பெயர்பெற்றதென்க

எண்ணிடுகவதற்கப்பாற்சான்மலியெண்ணிரண்டிலக்க
மெண்ணிடுகவதற்கப்பாலிக்கிரதமுற்படியே

யெண்ணிடுகவதற்கப்பாற்கோமேதமெண்ணான்கென் ❋
றெண்ணிடுகவதற்கப்பான்மதுக்கடலுமுனையெண்ணால் ❋

எ- து. முற்கூறியநெய்க்கடலுக்கு அப்பாற் சான்மலித்தீவு பதினாறுநூறுயிரம் யோசனை, அந்தச்சான்மலித்தீவுக்கப்பாற் கருப்பஞ்சாற்றுக்கடல்பதினாறுநூறுயிரம்யோசனை, அந்தக்கருப்பஞ்சாற்றுக் கடலுக்கப்பாற் கோமேதத்தீவுமுப்பத்திரண்டுநூறுயிரம்யோசனை, அந்தக்கோமேதத்தீவுக்கப்பாற் சுரைக்கடல்முப்பத்திரண்டுநூறுயிரம்யோசனைவிரிவு. எ- று.

அந்தச்சான்மலித்தீவுக்குஇராசா-கந்தமான்-அந்தஇராசாவுக்குப்புத்திரர்களெழுவர்-அவர்யாவரொன்னில்நமோதுற்கன்-தனுசுமான்-பாவகன்-அந்தகாரகன்-முனி-துந்துமி-குசலன்-என்க,அவ்வெழுவர்களும்பிறித்தாண்டமையாலவரவர்பெயராலத்தீவேழுபிறிவாயிற்று, அவற்றிற்கிரிகளேழாவன-கிரவுஞ்சகிரி-வாமனகிரி-அந்தகாரகிரி-திவாகிருதகிரி-தீவிபிந்துகிரி-புண்டரீககிரி-துந்துபிகிரியென்க, அவைகளினின்றும்-புண்டரீகமுதலியநதிகளேழும்புறப்பட்டுக்கருப்பஞ்சாற்றுக்கடலிற்போய்வீழும், அதிலிருக்கிறவர்களுக்குப்பொசிப்புகருப்பஞ்சாறு, அந்தத்தீவிலாயிரம்யோசனையுயரத்தையுமுடைத்தாய்க்கனகமயமானஆதித்தப்பிரபைபோன்றிருக்கிறஇலவமரநிற்கையாற்சான் மலித்தீவெனப்பெயர்பெற்றதென்க, இனிகோமேதத்தீவுக்கு இராசாஅவ்வியவாகனன் அந்தவிராசாவுக்குப்புத்திரர்களெழுவர் அவர்யாவரொன்னில்-செலதன்-குமாரன்-சரித்தகன்-குமுதன்-கந்தனன்-மகாமத்திரன்-சுகுமாரன்-என்க-அவ்வெழுவர்களும்பிறித்தாண்டமையாலவரவர்பெயராலத்தீவேழுபிறிவாயிற்று, அவற்றிற்கிரிகளேழாவன கேசரகிரி சேடககிரி-சுரதவதகிரி-அம்பிகிரி-கெயோபகிரி-மேககிரி-சிங்ககிரியென்க, அவைகளினின்றுங்கெபத்திமான்முதலியவேழுநதிகள்புறப்பட்டுமதுக்கடலிற்போய்வீழும், அந்ததீவிலிருக்கிறவர்களுக்குப்பொசிப்புச்சுவாதுபலங்கள், கோமெதத்தீவெனப்பெயர்பெற்றதுயாதெனில், மனுகுலத்திற்கோபதியென்னும்பெயரையுடையவிராசாகோசலனென்னும்பெயரையுடையயாகநிமித்தமாகத்தேவேந்திரனுடையயாகத்துக்கதிபதியாயிருக்கிறபிருகுமகாவிருடியைவரிக்கையால்கௌதமர்இந்திரனுடையயாகத்துக்குவந்திருக்கிறவிவரைவரிக்கலாமோவென்றுஅந்தவிராசாவைக்கோபாக்கினியாற்சபிக்க-அந்தவிராசாவுமந்தயாகநிமித்தமாகவந்திருக்கிறபசுக்களும்நாசத்தையடைந்து அந்தப்பசுக்களுடையநிணமிந்ததீவைமறைக்கையாலதற்குக்கோமேதத்தீவேனப்பெயராயிற்று. (சுஅ)

எண்ணுகயோசனையெட்டெட்டிலக்கமெனவதற்கப்பா ❋
லண்ணியபுட்கரணிதலத்தகலத்தையதற்கப்பா ❋

எண்ணியசுத்தோதகத்தினகலமுமுன்னறைந்தபடி
திண்ணியமால்வரையுமினியிவற்றினுக்குத்தெரிப்பாமே

எ- து. முற்கூறியசுரைக்கடலுக்கப்பாற் புட்கரணி தலத்தகலத்தை யறுபத்து நான்குநூறாயிரம்யோசனையெனக்கருதுக, அந்தப்புட்கரணித்தீவுக்கப்பால். நல்ல தண்ணீர்க்கடலினகல மறுபத்துநான்குநூறாயிரம்யோசனை, சாகமுதலியதீவிற்க டினமாய்ப்பருத்திருக்கிறமலைகளைத்தொகுத்துச்சொல்வாம். எ- று.

அந்தப்புட்கரணித்தீவுக்குஇராசா. அசன். அந்த விராசாவுக்குப் புத்திரர்களிருவர் அவர்யாவரொன்னில். தாக்கியன். மத்தியனென்க, அவ்விருவரும் பிரித்தாண்டமை யாலவரவர்பெயராலத்தீவிரண்டுபிறிவாயிற்று, அவற்றிற் கிரிகளிரண்டாவன. மந் தரகிரி. உத்தரகிரியென்க, அந்தக்கிரிகளிரண்டுமன்பதுயோசனையுயரமு மிருபத்த ஞ்சுயோசனைவிரிவுமாயிருக்குமென்க. (௯௧)

சாகத்தீவுமுதலியதீவின்மலைகளினதளவையுணர்த்துகின்றார்

சாற்றியிடுஞ்சாகமுதலைந்தினுக்குந்தடவரையு
மூற்றமிகுமெவ்வேழுண்டொருகிரிசக்கரம்போல
மாற்றறவேபுட்கரணிதலத்தைவலமாய்வதியுந்
தேற்றுததிமுடிவிடத்துந்திகழுமொருவரையதுபோல்

எ- து. சாகத்தீவுமுதலியவைந்துதீவினு மொவ்வொன்றுக்கெவ்வேழாகமுப்பத் தைந்துமலைகளுண்டு, அஃதன்றி. புட்கரணிதீவிலிருக்குமொப்பற்றமானதகிரி. யந் தத்திவைச்சக்கரம்போலயிடைவிடாமல்வலமாகச்சூழ்ந்திருக்கும்,அஃதன்றிச்சுத் தோதகசமுத்திரத்தைச்சூழவிடைவிடாமல்சக்கரவாளகிரிவிளங்கும். எ- று.

ஐந்தினுக்குமென்றவும்மையாற்புட்கரணித்தீவில்மலைகளிண்டிருக்கின்றன, ஆகத் தீவு. ஆறுக்குக் குலபருப்பதங்கள் முப்பத்தேழெனவறிக, தடவரையு மென்றவும் மையாற்சாகமுதலியவைந்துதீவினுள்ளு முப்பத்தைந்துநதிகளுமுண்டென்க, புட் கரணித்தீவிலிருக்கு மானதகிரியிற் கிழக்குமுதலிய நான்குதிக்கினுமுலகபாலர்கள் நால்வர்க்குநான்குபுரியுள, அவையாவன. இந்திரனுக்கு விசுவோகசானுவென்னும் புரியும் இயமனுக்குச்சங்யமனியென்னும்புரியும், வருணனுக்குச் சுத்தவதி யென்னு ம்புரியும், சோமனுக்கு விபாவதியென்னும் புரியுமென்க, தேவபூசை நிமித்தமாகச் சொன்னமயமானதாமரைப்பூ அத்தீவின்கணுண்டாயிருக்கையா லந்தத்தீவுபுட்கர ணித்தீவெனப்பெயர்பெற்றது, மலைகளையும் நதிகளையுமீண்டுக்கூறியிருக்க.ஆண்டுக் கூறியதென்னையெனின். ஈண்டாசிரியர் தொகுத்தமையா லாண்டுஒப்பின் முடித்த

லென்னுந்தந்திரவுத்தியாற்கூறியதெனவறிக. (எய)

சாகமுதலியதீவிலிருப்பர்கள்தன்மையையுணர்த்துகிறார்

சாகமுதலிருமூன்றிற்றங்குநர்கடமக்கெல்லாஞ் ❊
சோகமிலைபெந்நாளுந்துய்த்திருப்பர்சுகமவர்தம் ❊
மாகமதினையுமிலைத்திணையுமயுதாயுவுளர் ❊
மோகமிலர்கலியுகத்துங்கிம்புருடர்முறைபெறுவார் ❊

எ-து சாகதீவுமுதலாறுதீவிலுமிருக்கிறவர்கள், சம்புத்தீவினுட்குமரிகண்டத்திலிருக்கிறவர்களைப்போலவெப்பொழுதுஞ்சுகதுக்கமுறாமல் சுகவாசியாய்நாளைதினைமூப்பின்றிநித்தியயௌவநராய்ப்பதினாயிரம்வயதுடையராயிருப்பர்கள் அஃதெனறிக்கலியுகத்துமோகமில்லாதவராய்க்கிம்புருடகண்டத்திலிருக்கிறவர்களுக்கொத்திருப்பர் எ-று (எக)

பூலோகத்தைத்தொகுத்துணர்த்துகிறார்

எழுதீவுமெழுகடலுமீழமயமெனுநிலனுந் ❊
தழல்போலுமொளியிப்பாற்றமமப்பாற்றகுமலையுங் ❊
குழுவாயபேரிருளுமதற்கப்பாற்குளைகடலு ❊
மழகாயவண்டகடாகாந்தமும்பூதலமாமே ❊

எ- துசம்புத்தீவுமுதலியவேழுதீவும்-லவணசமுத்திரமுதவிய வேழுகடலும்-பொன்மயமானபூமியும் அக்கினியைப்போலுமொளிமுற்பாகத்திலும்இருள்பிற்பாகத்திலுமுடையலோகோலோக்கியமென்னும்பெயர்பெற்றசக்கரவாளகிரியுமந்தகாரபூமியுமாரபாரத்தையுடையபெரும் புறக்கடலுமண்டகடாகமுடிவுமாகியவிவையெல்லாம்பூலோகமெனப்பெறும் எ-று (எஉ)

சக்கரவாளகிரியின்றன்மையையுணர்த்துகின்றார்

இசைத்தவிதத்திருளொருபாலொளியொருபாலேய்ந்தகிரி ❊
வசிப்பர்முதற்பாகத்தின்வடிவியக்கரிராக்கதிரும் ❊
பசுத்தவிராக்கதர்தாம்பைசாசர்திசைப்பாலகரு ❊
மிசைப்பயிலும்விண்ணவர்பொன்னிலத்துவிளையாடுவரே ❊

எ-து இங்ஙனஞ்சொல்லப்படாநின்றவொளியொருபாலும் இருளொருபா

லுமிருக்கிறசக்கரவாளகிரியில் வடிவையுடையவியக்கரும்சந்திரனும் பசுமைநிறத்தையுடையவிராக்கதரும்பசாசுகளும்அட்டதிக்குப்பாலர்களும் மேலேயிருக்கப்படாநின்றதேவர்களும்வாசஞ்செய்வர்-அதுவன்றிமுற்புறமாசியகனகமயமான பூமியினிழிந்துசஞ்சரித்துவிளையாடிப்பின்புதங்கடங்களெல்லையையடைந்திருப்பர்கள் எ - று (எஙு)

சக்கரவாளகிரிக்கப்புறத்திருட்பூமியிலிருப்பாரையுணர்த்துகிறார்

விதித்தவுணாமரணமலால்விபரீதமுறவிதிக்கு *
வதைத்தவர்கடமைத்தாமேமையலுறவதிவார்கள் *
புதைத்தவிருளுலகத்துட்பொருளல்லாப்புல்லியரே *
கதத்துமருந்துயரத்துந்தம்முடலைக்களைவாரே *

எ - து சிவாகமத்திற்சொல்லியபடி மிகுந்தசிவகாரியங்குருகாரியஞ்சங்கமகாரியமாகத்தான்றன்னுடையதேகவெறுப்பாற்றான்புராணாதிகளிற்சொல்லியபிருகுப்பிரபாதமாதல்-கெங்கைமுதலியதீர்த்தத்திலாதல்தேகம்விடுதலன்றிச்சாத்திரத்துக்குவிரோதமாகத்தம்முடையவுடலைத்தாமேவிட்டவர்களிருட்பூமியாகியவுலகத்தின்மயக்கத்தைப்பொருந்திக்கிடப்பர்கள், ஆதலாலிப்படிப்பட்டமரணமாகாதென்றறியாமற்கோபத்தினாலும்வியாதிமுதலியபீடைகளினாலும்வலியவுயிரைவிட்டவர்கள்-ஒருபொருளிலுஞ்சேராதகீழ்மக்களாவர்கள் எ - று (எசு)

அண்டகடாகமுதல்மகமேருநடுவரையிலும்ஐம்பதுகோடி-யோசனைதூரம்
என்பதைமூன்றுசெய்யுளாலுணர்த்துகிறார்

அழகாயகடாகத்துக்களவுகனமொருகோடி *
யெழுநூறுயிரத்துடனேயிருபதுநூறுயிரத்தைத் *
தழுவியுறுமொருகோடிசமுத்திரநாயகத்தளவு *
குழுவிருளுமேழைஞ்சுகோடியினுங்கூறிடுவாம் *

எ - து அழகியஅண்டகடாகவோட்டுக்கனமொருகோடியோசனை பெரும்புறக்கடலினகலங்கோடியேயிருபத்தேழுநூறுயிரம்யோசனை, முற்கூறியவந்தகாரபூமினகலமுப்பத்தைந்துகோடியோசனை, அஃதன்றியின்னுமதனுடையவளவையைச்சொல்வாம் எ - று (எரு)

இருபதுநூறுயிரத்திலொன்றானமிவற்றுடனே *
வருவதுதானாற்பதினாயிரமெனவேமதித்திடுக *

விருளொருபாலொளியொருபாலிசைந்தபெருவரைக்கயுத *
மொருபஃதுகோடியுறுங்கனகமயவொளிநிலனே *

எ-து முற்கூறியஅந்தகாரப்பூமியினளவுமுப்பத்தைந்துகோடியுடன்பத்தொன்பதுநூறுயிரத்துநாற்பதினாயிரம்யோசனையுண்டெனவறிக, ஒருபாற்பிரகாசமாயும்ஒருபாலிருளாயுமிருக்கிறபெருமையையுடைய சக்கரவாளகிரிபதினாயிரம்யோசனைவிரிவையுடைத்தாயிருக்கும், முற்கூறியகனகபூமிபத்துக்கோடியோசனைவிரிவுண்டு எ-று

அந்தச்சக்கரவாளகிரி நூறுயிரம்யோசனையுயரத்தையுடைத்தாயொருபாற்சூரியன்சஞ்சரிக்கையாலும்-ஒருபாற்சஞ்சரியாமையாலு மொருபாலொளியும்-ஒருபால்இருளுமாயிற்று, மண்ணினுமண்டத்துக்குநடுவேசூரியன்சஞ்சரிக்கையாலவனுக்குமார்த்தாண்டனென்னும்பெயராயிற்று, அந்தக்கிரியிலட்டதிக்குப்பாலகரிருந்துதந்தந்திக்கைக்காத்துக்கொண்டிருபபர்கள் (எசு)

எழுநூறுயிரத்துடனேயிருபதுநூறுயிரத்தைத் *
தழுவியுறுமொருகோடிசத்தசமுத்திரவிரிவு *
மெழுநிலமுமைம்பதினாயிரங்குறையவிவ்வளவே *
குழுமியுறும்பஞ்சாசத்கோடிபெருங்குன்றிறுவாய் *

எ-து முற்கூறியசத்தசமுத்திரங்களின்விரிவு கோடியேயிருபத்தேழுநூறுயிரம்யோசனை, ஜம்புத்தீவில்மகமேருமுதலாகத்தெற்கேழுதீவுங்கோடியேயிருபத்தாறுநூறுயிரத்துஐம்பதினாயிரம்யோசனை யுண்டெனவறிக, மகமேருமுதலாகக்கடாகமீறுகத்தொகுத்தறியுமிடத்தைம்பதுகோடியோசனைவிரிவைப் பொருந்தும் எ-று

அதன்வகை-சத்தசமுத்திரமுஞ் சத்ததீவுமாக-இரண்டுகோடியேயைம்பத்துமூன்றுநூறுயிரத்தைம்பதினாயிரம்-அதற்குப்புறம்பே கனகமயமானபூமி பத்துக்கோடி-யதற்குப்புறம்பே சக்கரவாளகிரிபதினாயிரம்-அதற்குப்புறம்பே யிருளுலகமுப்பத்தைந்துகோடியே பத்தொன்பதுநூறுயிரத்துநாற்பதினாயிரம்-அதற்குப்புறம்பேபெரும்புறக்கடல்கோடியேயிருபத்தேழுநூறுயிரம்-அதற்குப்புறம்பேயண்டகடாகங்கோடி-ஆகமகமேருநடுநின்றுந் தெற்குப்பாதியைம்பதுகோடியோசனைவிரிவுஞ்சரி, மற்றைத்திக்கினுங்காண்க (எஎ

அளவுக்கோர்புறனடையுணர்த்துகிறார்

தாைத்தலத்துக்கீழ்த்தலங்கள்பேதமுறச்சாற்றியிடுந்
தாைத்தலத்துமேற்றலமுந்தவறுாையாசாத்திாமுந்
தாைத்தலத்தும்பேதமுறச்சாற்றியிடுஞ்சாற்றிடினும்
விருத்தமிலைச்சிருட்டிதொறும்பேதமுறவிளைதலினால்

எ - து இந்தப்பூமிக்குக்கீழானநரகபுவனங்களையாகமங்களிற்பேதமாகக்கூறும், பூமிக்குமேற்றலங்களையும்பேதித்துக்கூறும், ஆனாலொருபடித்தன்றிப்பலவாகப்பேதித்துச்சாத்திரஞ்சொல்லுமோவென்னிற்சிவன்சருவஞ்ஞனுகையாற்சாத்திரங்கள்பொய்சொல்லாது பூலோகத்தினிடத்தும் பேதமாகக்கூறும், ஈசரனெவ்வொருசிருட்டிகாலங்களிலாகமங்களைப்பேதித்துக்கூறினாலுங்கடைத்தொகையளவொத்திருக்குமாகையாலந்தநூலுக்குமிந்தநூலுக்கும்விரோதமில்லையாதலால்மாறுகொளக்கூறுங்குற்றமில்லை எ - று

பேதம்யாதெனில், கீழ்முதலடுக்கில்-நரகம்பதின்மூன்று-இரண்டாமடுக்கு ஒன்றுக்குப்பத்து-மூன்றுமடுக்குஒன்றுக்கு-ஒன்பது-ஆக-அடுக்குமூன்றுக்கும்நரகம் முப்பத்திரண்டு-அதில்பொளரவம்-கும்பீபாகம்-அவீசி-இந்த மூன்றுநரகமும்-இராசாதிராசநரகம்-இதிலொன்றைச்சூழ்ந்தவுபநரகம்ஒன்றுக்கொன்றெவ்வேழாகநரகமிருபத்தொன்று-நீக்கிநரகமிருபத்தொன்பதுமொவ்வொன்றைமும்மூன்றுகச்சூழ்ந்தவுபநரகம்எண்பத்தேழு ஆகநரகம்நூற்றுநாற்பதென்றுஆகமங்களிற், பேதித்துக்கூறியவற்றையுணர்க.

(எஅ)

அண்டங்களளவில்லையென்பதனையுவமைமுகத்தாலுணர்த்துகிறார்

எண்ணரியவாருயிர்களண்டமுமிப்படிதானே
யெண்ணரியவெனுமமலனியலெனின்மற்றோரியலி
னெண்ணியவனளவிடுதலென்னையெனில்வினைவிதத்தாற்
பண்ணிடுவனண்டவிதஞ்சிருட்டிதொறும்பலபடியால்

எ- து. எப்படியான்மாக்களளவிறந்தகோடியுண்டுஅப்படியேயிந்தவண்டவிதமுமளவிறந்தகோடியென்வறிக, மலமில்லாதசிவனருளிச்செய்ததிவ்வியாகமங்களுமளவிறந்ததாகையாலளவிடுதற்கரிதுஆனால் அவனருளிச்செய்ததிவ்வியாகமங்களிற் காமிகம். பரார்த்தம். யோகசம்இவைகள் நூறுயிரஞ்சுலோகமென்றுஅளவிட்டுக்கூ

றுதலென்னையோவென்னிற்கேட்கிறவர்களுடைய புத்திதாரதன்மியத்துக்கீடாகப் பெருகவுஞ்சிறுகவுங்கூறினான், அவர்களுக்குப்புத்திபெருத்துஞ் சிறுத்து மிருப்பானேனென்னில் ஆன்மாக்கள்செய்த கன்மானுகுணமாக அவர்களவர்கள் புத்தியையேற்றக்குறைச்சலாகப்பிரகாசிப்பிப்பன், அதுபோலச் சிருட்டிதொறும் பலபல விதமாகவண்டங்களையருளிச்செய்வன். எ- று. [எக)

இந்நூல். இவ்வாகமத்துட்சேர்ந்ததென்பதனை யுணர்த்துகின்றார்

ஏகனருள்சிவதருமோத்தரமெனுநூலெண்ணுங்கா ா
லாகமத்துட்சருவோத்தத்துபபேதமதனாலே ❋
யாகமத்துட்படியிதனுளருகிவருமெனவறிக ❋
வாகமத்தின்படிமற்றையியலுள்ளுமடைந்துறுமே ❋

எ-து. தனக்கொப்பொருவருமில்லாதசிவனருளிச்செய்த சிவதருமோத்தரம், மூலாகமமோஉபாகமமோவென்னின்மூலாகமத்தி லிருபத்தைந்தா மாகமமாகியசருவோத்தமென்னுமாகமத்தில். ஈசானம். சிவதன்மம். சிவதரு மோத்தரம். திவ்வியப்புரோக்தம். குபேராக்கியம். எனப்பிறிந்தயேதமைந்துள், இந்தச்சிவதருமோத்தரமும்உபாகமமாகையாலே மற்றாகமத்திற்கூறியபொருள்களு மிதனுளருகிவருமெனவறிக, ஆதலாலிதுமிகைபடக்கூறலென்னுங் குற்றமன்று, அஃதன்றிச் சிவஞானயோகவியலினும்பரிகாரவியலினுங்கலந்தும்வரும். எ- று. (அம)

இனிப்புவலோகமுதல்மேல்அண்டகடாகம்வரை யுள்ளவுலகங்களும்அவற்றினளவுமுதலியனவும்பத்துச்செய்யுளாலுணர்த்துகின்றார்

தனைத்தலமுமுனிவரனேதகைபெறவேதொகையாக்கி ❋
யுரைத்தனமேற்புவலோகமுதலாயவுலகினையுந் ❋
தரித்திடுகதொகைசெய்தேசாற்றிடுவாந்தவறறவே ❋
விரித்தவுரைவிளம்புமவர்வினைவிளையவிட்டிடவே ❋

எ- து. வாராய்முனிவரனேபூலோகத்தின்சொரூபத்தை முறையாகத்தொகுத்துச்சொன்னோம், மேற்புவலோகமுதலியவுலகங்களை யைம்பதுகோடி யளவிற்குறையாமற்றொகுத்துச்சொல்வாமதனையறிவாயாக, இங்ஙனந்தொகுத்துக்கூறுமதனைக் குற்றமின்றியாதொருவர்விரித்து வியாக்கியானஞ்செய்வார வர்கள்வினைசடுதிக்குவிட்டுப்போம்படிக்குச்சொல்வாம். எ- று. [அக]

வேறு

தரைக்குமேற்புவலோகமதுதனி
லருக்கன்சோமனெனுமிவராதிய
ரிருப்பர்தத்தம்பலத்தினையெய்தியே
பரித்தநீளம்பதினைந்திலக்கமே

எ- து. இந்தப்பூமிக்குமேற் புவலோகம், அப்புவலோகத்தி லாதித்தியன். சந்திரன். ஆதியர் தத்தம் பதங்களிற் சஞ்சரித்திருப்பர்கள், இவரைத்தரிக்க ப்பட்டபுவலோகம்பதினைந்து நூறுயிரம்யோசனையுயரமுண்டு. எ- று.

சஞ்சரித்தலெத்தன்மையெனில். ஆதித்தன்பதத்துக்குக்கீழாகப்பத்துவாயுவும். ஏழு மேகங்களுங்கூடிச்சஞ்சரிக்கும்வகையாவன. விதன்னுவான். பிரசேதகன். அக்கினிப்பிரசேதகன்- செசனி - அவுத்தன் - வச்சிராங்கதன் - வயுத்தியுதன் - இளைவதன்- சங்வர்த்தன். விசங்வர்த்தன். எனவாயுக்கள் பத்து, இவைகளுக்கு வியாபாரமாவன. விதன்னுவானென்னும் வாயுபூமிக்குமேலே பதினாயிரம்யோசனையளவாகச்சஞ்சரித்துஓஷதிகளுக்குப்பெலங்களையுமுண்டாக்கிக்கழுகுமுதலியபறவைகளுக்குப்பறப்பதற்காதாரமாயிருக்கும், பிரசேதனென்னும்வாயுஅதற்குமேலாகப்பதினாயிரம்யோசனையளவாகச்சஞ்சரித்துவிருக்ஷங்களையும்பயிர்களையுமந்தந்தக்காலங்களுக்கிடாகவாதையினையும்பண்ணிமுறிக்கும், அக்கினிப்பிரசேதனென்னும்வாயுப்பதினாயிரம்யோசனையளவாகவியாபித்துமுற்கூறியமரங்களையும்பயிர்களையுமுலர்த்திவிட்டையுஞ்சுட்டுச் சமுத்திரச்செலத்தினாலேயதனைச் சமிப்பிக்கும், இந்தமூன்றுவாயுமேகங்களைப்பொருந்தாமற்றானேசஞ்சரிக்கும், இனிச்செசனி யென்னும்வாயுசத்துகனென்னுமேகத்துடனேபொருந்தி. மீன். ஆமை. தவளை. முதலியவெல்லாம் துயருறப்பொல்லாமழையைப் பொழியும், அவுத்தனென்னும் வாயு. ரோதகனென்னுமேகத்துடனேபொருந்திப்பதினாயிரம்யோசனையளவாக வியாபித்துவிடமாகிய மழைதனைப்பொழிந்துஅதனாலான்மாக்களை நாசம்பண்ணும், வச்சிராங்கதனென்னும்வாயு. உபலகனென்னுமேகத்தைப் பொருந்தி யிரத்தம்ஆலாங்கட்டி. கல்லுக்களையும்பொழியும், வயித்தியுதனென்னும் வாயு. வயித்தியுதனென்னும் மேகத்தைப் பொருந்திப்பதினாயிரம்யோசனையளவாக மேலேசஞ்சரித்து இடிமின்முதலியவற்றையுண்டாக்கும், இளைவதனென்னும்வாயு. புட்டிவதனென்னுமேகத்தைப்பொருந்திப்பதினாயிரம்யோசனையளவுசஞ்சரித்துஆன்மாக்களுக்குபயோகமாகியநல்லம

ணத்தாலென்னிற்சிவசத்தியதிட்டித்தலையாமற்பண்ணுகையாலெனவறிக, ஆகப்பூமிக்குமேலேசிறப்பினையுடைய புவலோகம்பதினைந்துநூறுயிரம்யோசனையுயரமென்றறிவாயாக எ - று (அரு)

அதற்குமேலமரேசனரும்புரி *
யதற்குநீளமசீதியுமைந்துமா *
மதற்குமேன்மகலோகமதுதனில் *
வதிப்பர்மாதவராதிமரீசியும் *

எ - து அந்தப்புவலோகத்துக்குமேற்சுவர்க்கலோகம் எண்பத்தஞ்சுநூறுயிரம்யோசனையுயரத்தைப்பொருந்தும், அதற்கு-அரசன்இந்திரன்-அவனைத்தேவர்களுமிருடிகளுந்தேவஸ்திரிகளுஞ்சேவித்திருப்பர்கள், அதிலக்கினிட்டோமமுதலியயாகங்களைப்புரிந்தவர்களுந்தீர்த்தயாத்திரை பண்ணினவர்களுந்தானமாவிரதமுதலியவற்றைப்பண்ணினவர்களுமந்தலோகத்தையடைந்திருந்துஅதிலுண்டானபோகங்கள்பொசித்துத்தொலைந்தவாறேபூலோகத்தின்கண்வந்துநல்லமானுடராய்ப்பிறப்பர்கள்-அந்தச்சுவர்க்கத்துக்குமேல்மகலோகம், அதிலிருப்பார்-மரீசி-மார்க்கண்டர்-சித்தர்கள்முதலாயினோர் எ - று (அசு)

உயரந்தானிருகோடியுறுமதற் *
குயருமெல்லைசெனதலமுன்னத *
முயருநாலிருகோடியென்றுன்னுக *
வுயருமாபிதிர்தேவருறைவரே *

எ - து முற்கூறியமகலோகம் இரண்டுகோடியோசனையுயரம் பொருந்தும் அந்தமகலோகத்துக்குமேல்செனலோகம்எட்டுக்கோடியோசனையுயரம்பொருந்துமென்றறிவாயாக, அதில்-கவ்வியவாகனர்-அனலர்-சோமர்-யமர்-அரியமனர்-அக்கினிவாக்கர்-பெரக்கிஷ்-ஆசியபர்-சோமபா-என்றுசொல்லப்பட்டபிதிர்தேவர்பதின்மரும்-சங்கரிஷணர் வாசுதேவர் பிரத்தியுமினர் நிருத்தர் இவர்நால்வரும் அத்தசியசாரமும்மதனமுதலாயினோருமிருப்பர்கள் எ - று (அஎ)

அதற்குமேற்றவலோகமருந்தவ *
ரதற்குள்வாழ்வர்சனகனையாதிய *

அதற்குநீளமுமாறிருகோடியா *
மதற்குமேலயன்றேசமென்றுய்கவே *

எ - து அந்தச்சனலோகத்துக்குமேற்றவலோகம் பன்னிரண்டுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும், அதிலிருப்பார்கள் - சனகர்-சனந்தர்-சனாதர்-சனற்குமாரர்-சங்கு-திரிசங்கு-இரிபு-இந்தவிருடிகளெழுவரும் அரிதாகியதவசுகளைப்பண்ணியதைவந்தடைந்திருப்பர்கள், அந்தத்தவலோகத்துக்குமேற்சத்தியலோகமென்றறிவாயாக. எ- று

(அஅ)

அதற்குநீளமுமாறுடன்பத்துறு *
மதற்குமேலரிதேசமென்றுய்கவே *
யதற்குநீளநாற்கோடியென்றுய்கவே *
யதற்குமேற்சிவலோகமோராறுறும் *

எ - து அந்தச்சத்தியலோகம் பதினாறுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும், அதினடுவேபிரமாவிருப்பர்-கிழக்கேயிந்திரநீலநிறம்போன்றவடிவையுடையஇருக்குவேதமிருக்கும்-வடக்கேபடிகநிறத்தையுடைய எசுர்வேதமிருக்கும்-மேற்கேபதுமராகநிறம்போன்றசாமவேதமிருக்குந் - தெற்கேமைநிறம்போன்றஅதர்வணவேதமிருக்கும் - மற்றுமுள்ளவிதிகாசபுராணமீமாங்கிசைமுதலியசாத்திரங்களுஞ்சாவித்திரியும்அங்கேயிருப்பர்கள், அந்தப்பிரமலோகத்துக்குமேல் அரியினுடையலோகமென்றறிக, அதுநாலுகோடியோசனையெனவறிக, அதில்மாயனிருந்துப்பிராணிகளைப்பரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பன், அதிலவனைவழிபட்டபத்தர்கள் அடைந்திருப்பர்கள், அந்தலோகத்துக்குமேற்சிவலோகம்ஆறுகோடியோசனையுயரத்தைப்பொருந்தும், அந்தச்சிவலோகத்தின்வளத்தைவிரித்துக்கூறுதற்கரிது-அதிற்பார்வதியாருடன்விட்டுணு-பிரமா-முதலியதேவர்கள் சேவிக்க-உருத்திரமூர்த்தியெழுந்தருளியிருப்பர். எ - று

(அக)

அதற்குமேலுறுமண்டகடாகமொய்ம் *
பதற்கனந்தனைக்கோடியென்றுய்கவே *
மதிக்கவைம்பதுகோடியும்வாய்த்தமை *
கதித்தவண்டமெலைக்கடாகத்தொடும் *

எ - து அந்தச்சிவலோகத்தின்மேல்நெருங்கியஅண்டகடாகத்தினுயரங்கோ

டியோசனையெனவறிக, ஆகப்பூமிக்குமேலுயர்ந்தவண்டகடாகம்வரையம்பது கோடியோசனையுயரமெனமதிப்பாயாக எ - று அதன்வகைபுவலோகம்பதினை நதுநூறுயிரம்,சுவலோகம்-எண்பத்தைந்நூறுயிரம்மகலோகம்-இரண்டுகோடி,செ னலோகம்-எட்டுக்கோடி, தவலோகம்-பன்னிரண்டுகோடி, சத்தியலோகம்பதினு றுகோடி, விட்டுணுலோகம் - நாலுகோடி, உருத்திரலோகம்-ஆறுகோடி, அண்ட கடாகங்கோடி ஆகவைம்பதுகோடியென்க. (கூய)

கோபுரமிருக்குந்தலத்தையுணர்த்துகிறார்.

வேறு.

உரைத்தவிதவுலகத்துளொப்பிலிருப்புரத்தினையு *
மெரித்தவிறையெரியாகியிருவருறுமிகலினையும் *
மரித்தருள்செயமலனெலைநந்தைமுதலைந்தினையுந் *
தரித்திணையைத்தரியாததலமுடிவிற்றயங்கியதே *

எ - து இத்தன்மையாகச்சொல்லியசிவலோகத்தின்கண் ஒப்பிலாதவலுந்தி ரிபுரத்தையெரித்தவிறைவனும் அழலுருவாகியயனுமரியுந்தம்மிற்பொருந்துமாணை வமாகியமாறுபாட்டைக்கெடுத்துஅவர்க்கருள்செய்யுநின்மலனுமானசிவபெருமா னுடையதிருக்கோயிலின்முடிவிடத்தில்நந்தைமுதலியவைந்துபசுக்களையுந்தாங்கி யொப்பற்றகோபுரமானதுவிளங்காநின்றது எ - று கோபுரம்பசுப்புரை (கூக)

சிவலோகத்தின்றன்மையைப்பதினெட்டுச்செய்யுளாலுணர்த் துகின்றார்.

ஒப்பரியன்புரிவளமுமுரைவிரியினடங்காது *
செப்பரியவதன்வளத்திற்சிறிதுரைப்பஞ்சிந்தைசெய்க *
வெப்பொருளுந்தானேயாயாவையினுந்தோயாத *
வப்பொருளையழுக்கொழியவகத்துணர்ந்தவருந்தவனே *

எ - து எல்லாப்பொருள்களுந்தானேயாகியவற்றிற்சொராதவச்சிவத்தைமு ம்மலவழுக்குநீங்கவுள்ளத்தினுணர்ந்தவருந்தவனே, யொப்புச்சொல்லுதற்கருமை யானவவனதுசிவலோகத்தின்வளங்களும்விரித்துச்சொல்லினும்அடங்காது, ஆயி

னுஞ்சொல்லுதற்கரியவச்சிவலோகத்துவளங்களுட்சிறிதுசொல்லு வோஞ்சிந்தை செய்வாயாக. எ - று உம்மைவிகாரத்தாற்றொக்கது. (கஉ

வேறு.

இரவியைநிகர்பலவிரதமுமொருபாலெழின்மடவரலியரியலிசையொ ருபாற், பரதமுமுறைமுறைபயிலுநரொருபாற்படகமுமுதலியபறையொலி யொருபான், மருமலர்விரவியமரநிழையொருபான்மறைபயில்விரதியர்வளவ னமொருபாற், புரைவளைவிரவியபுரிசைகள்பலபாற்பொருவிலிவளைவிலிம ருவியபுரமே. *

எ - று ஒப்பில்லாதவன்மேருவைவில்லாகவுடையவனெழுந்தருளியசிவலோ கத்திற்சூரியப்பிரகாசம்போன்றபலதேர்களொருபாலிலும், அழகியவரம்பையர்க ள்பாடுமியலிசைகளொருபாலிலும், பரதவிதிப்படி நடனஞ்செய்யுமரம்பையர்க ளொருபாலிலுந், தம்பட்டமுதலானவாச்சியத்தொலியொருபரலிலும் மணமருவி யமலர்களையுடையமரத்தினெழுங்கொருபாலிலும், வேதங்களையோதும்விரதியர் நிறைந்தவளத்தையுடையவனங்களொருபாலிலு, மலையையொத்துவிளங்கியமதி ல்கள். பலபாலிலும் விளங்கின. எ - று (கங)

நிலையொருபதுசதநெடுமடமொருபானெடியனகொடிமணிநிகழொலி யொருபால், விலையிலநவமணிவிரிதிணையொருபால்விழைவினர்விழைவன விளைநிதியொருபா, லலைமலிபுனனதியணியுறலொருபாலளிமுரல்குவளைக ளலர்சுனையொருபாற், பொலன்முடியமரர்கள்பொதுளியதொருபாற்புலியு ரியரையினன்மருவியபுரமே. *

எ - று புலித்தோலுடுத்தவரையினனெழுந்தருளிய சிவலோகத்திலுள்ளத மானவாயிரக்கான்மண்டபமொருபாலிலும், நீண்டகொடியின்கட்கட்டும்விளங்கி யமணியோசையொருபாலிலும், விலையில்லாதநவமணிகுயிற்றியதிண்ணைகளொரு பாலிலும், விருப்பினையுடையவர்கள்விரும்புவனவாகிய நவமணிகணிறைந்தசங்க நிதிபதுமநிதிகளொருபாலிலும், அலைமலிந்தபுனலையுடையநதியணிகளொருபாலி லும், வண்டுகண்முழங்கு நீலோற்பலம்விரிந்ததடாகங்களொருபாலிலும், பொன் முடிசூடியதேவர்கள்கூடுமிடங்களொருபாலிலும்-விளங்கின. எ - று (கச)

புதுவிரைமலர்கொடுபுனைமனையொருபாற்பொறிமணியவைகொடுபுனைமனையொருபான், மதியெனவிதிவழிவனைமனையொருபான்மரகதவொளியினவனைமனையொருபாற், கதிரவனொளிநிகர்கடிமனையொருபாற்கனகநன்மயமுறுகனமனையொருபாற், சதிவழிநடமிடுதகைமையனிமையோர்தலைமையனிலவியதனைநிகர்தலமே. *

எ - து தாளவொத்தின்படிநடனஞ்செய்யும்பெருமையையுடையவனாய்த் தேவர்கடேவனாகிய சிவபெருமானெழுந்தருளியதனக்குத்தானேயொப்பாகியசிவலோகத்தின்கண்மணந்தங்கியநாண்மலராலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொருபாலினும், தீப்பொறிபோன்றமாணிக்கங்களாலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொருபாலினும், சிற்பநூல்விதிப்படிசெய்தசந்திரனைப்போன்றமாளிகைகளொருபாலினும் ஒளியையுடையமரகதப்பச்சையாலலங்கரிக்கப்பட்டமாளிகைகளொருபாலினும், சூரியப்பிரகரசம்போன்றகாவலையுடையமாளிகைகளொருபாலினும்,மாற்றுயர்ந்தபொன்மயமானபெரியமாளிகைகளொருபாலினும், விளங்கின எ- று ()

வேறு

ஒருபாலரிபோலுடலார்சிலரோ *
யொருபாலவரேபுலிபோலுடையா *
ரொருபாலுடையார்கரிபோலுடலே *
யொருபாற்பரிபோலவரேயுடையார் *

எ- து. அச்சிவலோகத்தின் .கணொருபாற் சிங்கம் போன்ற வுருவத் தினையுடையசிலரேயொருபாற்புலியைப்போலவும் ஒருபால்யானையைப்போல வுருவத்தினையுடையவவரேயொருபாலிற்குதிரையைப்போலவும்விளங்கினர். எ- று (கூசு)

ஒருபாலுடலானெனவேயுடையா *
ரொருபாலுழைபோலவரேயுடையா *
ரொருபான்மயில்போலுடையார்சிலரோ *
யொருபாலவரேகுயில்போலுடையார் *

எ- து அச்சிவலோகத்தின்கணொருபா லாவைப்போல வுருவத்தையுடையவவரேயொருபான்மானைப்போலவுருவத்தையுடையராயு மொருபால்மயில்போலுருவத்தையுடையசிலரோ யொருபாற் குயில்போ லுருவத்தை யுடையராயும் விளங்கினர். எ- று. (கஎ)

சிலரேயொருவாண்முகமேசெறிவார்
சிலரேபலமாமுகமேசெறிவார்
சிலரேயொருதாளுடனேசெறிவார்
சிலரேபலதாளுடனேசெறிவார்

எ- து. அச்சிவலோகத்திற்சிலர்களொளிபொருந்தியவொருமுகங்களையேபொருந்துவர்கள். சிலர்கள்பலமுகங்களையே பொருந்துவர்கள். சிலர்கள் ஒருகாலுடனேபொருந்துவர்கள். சிலர்கள்பலகாலுடனே பொருந்து வர்கள். எ- று. ஏகாரங்கள் - இசை நிறை.

(கஅ)

சிலரேசெவியும்பெரிதேசெறிவார்
சிலர்பாலஃதுமிலதேசிறிதுஞ்
சிலரேபலவாமுருவஞ்செறிவார்
சிலர்தாமியல்பாமுருவஞ்செறிவார்

எ- து. சிலர்கள்பெரியகாதுகளையும் பொருந்துவர்கள். சிலரிடத்துச்சிறிதாயினுமக்காதுமிலதாயிற்று சிலர்கள்பலநிறம்பெறு முருவங்களைப் பொருந்துவர்கள் சிலர்களியல்பான வுருவங்களைப்பொருந்துவர்கள். எ- று. செவியுமென்னுமும்மைமற்றவங்கங்களுமென்க.

(கக)

விதமேபலவேவிளையாடலினு
விதமேயிதமேயிவர்பாலிவையு
மதிமேதையரேயழியாதவரே
பதமேபணிவார்பரமேசனையே

எ- து. பேரறிவினரா யொருகாலத்துங் கெடாதவராய்ப் பரமேசனது பதத்தைப்பணிபவராதலிற்பலவிதமான விவ்வுருவங்களியாவும் அப்பரமேசனதுதிருவிளையாட்டினால்நன்மைகட்கெல்லாமேலானநன்மைகளாகவே யச்சிவலோகத்துள்ளாரிடத்துப்பொருந்தும். எ- று.

(ா)

திணமேயுடையார்சிவனேவியதே
யெணமேயுடையாரிடரேதுமிலார்
கணமேயிவரேகரிசேதுமிலார்
நணமேன்மையரேநலரேநலரே

எ- து. பத்திவயிராக்கியத்தினுறுதியையுடையார் சிவபெருமானருளியபணிவிடையினிடத்தேகருத்தினையுடையார் மலநோய்சற்றுமில்லாதவர். ஒருகுற்றமுமில்லாதவர். யாவருஞ்சேரவிரும்பு மேன்மையினையுடையார். மிகுந்தநலத்தினையுடையார்இவரேகணங்களாவாரச்சிவலோகத்தின்கண். எ- று. (ாக)

படிசேர்பலமேனியரேபடருஞ் ❋
சடைமாமுடியார்தகுநீறுடையார் ❋
புடையேபுயமுமொருநாலுடையா ❋
ரடியாரவரேகணநாயகரே ❋

எ- து. நற்குணமமைந்தபலதிருவுருவங்களையுடையர். படர்ந்தபெரியசடைமுடியினையுடையர். தகுதியான திருநீற்றையுடையர். பக்கத்திற் சதுர்ப்புயங்களையுடையர். அடிமைத்தன்மையையுடையரவரேயச்சிவலோகத்திற்கணநாதராய்விளங்கினர். எ- று. (ாஉ)

உடையார்விழியுமொருமூன்றினையு ❋
முடையார்புலியினுரியும்மரையி ❋
னுடையார்மழுவுமொளிர்வேலினையு ❋
மடியாரவரேகணநாயகரே ❋

எ- து. மூன்றுகண்களையுமுடையர். அரையிற்புலித்தோலினையுமுடையர். மழுவினையுமொளிர்கின்றவேலினையுமுடையரவரே யடியாராகியுங் கணநாதராகியுமச்சிவலோகத்துவிளங்கினர். எ- று. (ாங)

வேறு

ஆதியுமந்தமுமிலனவனமரரு ❋
மோதியும்வேதமுமுணர்வரும்பெருமையன் ❋
போதகன்வேதகன்பொருவிலனிருமலன் ❋
பாதபங்கயமுனுமவர்பலம்பகர்வமே ❋

எ- து. முதலுமீறு மில்லாதவன் றேவருமெவ்வகைநூலும் வேதமுமறிதற்கருமையானபெருமையினையுடையன் தன்னடியருக்குத் தோன்றாத துணையாயிருந்துள்ளத்துணர்த்தும் போதகன் அவ்வடியர்களை மலத்தினின்றும் வேறுபடுத்துவோன்ஒப்பில்லாதவன்மலரகிதன் அவனதுபாததாமரையைச் சிந்திக்கும்பெரியவரது

பலத்தினைச்சொல்லுவாங்கேட்பாயாக. எ- று. (ாச)

உருவினாலுவமையுமொருவினார்மருவினார்.
திருவினாருருவினார்தெரிவைமார்செறியவே
முரவமேமுதலவாமழலையுமுரலவே
யிரவியாயிரமுநேரிரதமேசரதமே

எ- து. சிவபெருமானதுபாதத்தைச்சிந்திக்குஞ்சிவகணங்கள் தங்களுருவத்தினாலொப்பற்றவராகித்திருமகளைப்போலு மழகினையுடையராகியதெய்வப்பெண்கள்தங்களிடத்துநெருங்கிப்பணிவிடைகள்செய்யவும் முரவமுதலிய வாச்சியங்கள் முழங்கவும் ஆயிரஞ்சூரியவுதையப்பிரகாசம்போன்றதேரினிடத்துமெய்மையாகவேமருவிவாழ்ந்தனர். எ- று. மழலை- ஆகுபெயர். (ாரு)

கொத்துலாங்குழலினார்குழலினோர்மொழியினார்
முத்துலாமுறுவலார்முகையுநேர்முலையினார்
சித்தமுங்கவரவேசிலரவர்செயலுகந்
தெத்தினாற்குறைவெமக்கெனவுமங்கிசைவரே

எ- து. பூங்கொத்துலவுங் கூந்தலினை யுடையார். குழல்போலு மொழியினையுடையார். முத்தைப்போலொளிவிடு நகையினை யுடையார். அரும்புபோன்றமுலையினையுடையா ராகியசிலவரம்பையர்களது சித்தத்தையுங் கவர்தலினா லச்செயலைவிரும்பியெமக்கொன்றினாலுங் குறைவில்லை யென்று அவர்கள்சொல்லவும் அச்சிவலோகத்துள்ளார் அங்ஙனம்பொருந்துவர். எ- று. (ாசூ)

ஓதுவார்வேதமுஞ்சிலருணாக்குறுபய
னீதெனாவேதெனாவேகமாய்மோகமுங்
காதுவார்காதுவார்குழையினன்கழலுனும்
போதமேபூதியாய்வேறுனார்போகமே

எ - து காதின்கணொள்ளியகுண்டலத்தையுடையசிவபெருமானதுபாதங்களைக்கருதுமறிவேயனுபூதியாய்மற்றைப்போகங்களையுன்னாதவர்தனித்திருந்துமோகங்களைக்கெடுப்பார்வேதத்தினும்பொருந்தும்பயன்யாதெனக்கேட்குஞ்சிலர்வினாவிற்குப்பொருந்தும்பயனீதென்றும்விடைகூறுவார் எ -று (ாஎ)

முத்தனேமுதல்வனேமுடையுடற்பொறையறுத்
தத்தனேசிவபுரத்தடியரைச்செறியெனத்
துத்தியஞ்சொன்னமெய்த்தொண்டருந்துரிசறச்
சித்தமுஞ்சிவமுறச்செறிவரங்கரிதெனே

எ-து அடியார்க்குமுத்தியைக்கொடுப்பவனேயெப்பொருளுக்குமுதலாயுள்ளவனேபுலாலுற்றத்தையுடையவுடற்பாரத்தைக்கெடுத்தஅத்தனே சிவலோகத்தின்கணடியார்களைவிருத்துவாயென்றுதுதிசெய்யுமெய்யடியார்களும் மலக்குற்றநீங்கவுஞ்சித்தமுஞ்சிவத்தைப்பொருந்தவுமந்தச்சிவலோகத்தில்வாழவர்கள் அவர்வர்க்ளுக்கங்குஅரியதுயாது. எ - று (ாஅ)

பொன்னிறமுடையரும்புயனிறமுடையரு
மின்னிறமுடையரும்விரைமலர்க்கமலமு
மென்னிறமுடையருமெரிநிறமுடையரும்
பன்னிறமுடையரும்பவளமேனியருமே

எ-து பொன்போன்றநிறத்தையுடையரும்-மேகம்போன்றநிறத்தையுடையரும் மின்போன்றநிறத்தையுடையரும்மணம்விரிந்தவெண்டாமரைசெந்தாமரைபோன்றநிறத்தையுடையரும்சூரியன்போன்றநிறத்தையுடையரும்-அக்கினிபோன்றநிறத்தையுடையரும்பலநிறத்தை யுடையரும்-பவளம்போன்ற நிறத்தையுடையரும்-அச்சிவலோகத்தில்வாழ்வார்கள் எ - று என்னிறம்இருள்நிறமென்றுரைப்பினும்அமையும் (ாக)

அச்சிவலோகத்திற்சிவபெருமானெழுந்தருளுந்திருக்கோயிலி
ன்றன்மையையாறுசெய்யுளாலுணர்த்துகின்றார்.

வேறு.

இத்தகையவிதமுறவேயெழிலுடையசிவபுரிநள்ளெல்லைவட்டம்
வித்தகற்குவிண்டையேறும்வேதியற்குமந்திரந்தான்வியந்ததுங்கஞ்
சுத்தவொளிப்படிகமயஞ்சுடர்மணியாற்றமனியத்தாற்றோரணாதி
யெத்தகையவுறுப்பினையுமியற்றியிடவிசைந்தவெழிலியம்பலாமே

எ - து இத்தன்மையானகுணங்கள்பொருந்து மழகையுடைய சிவலோகத்துவட்டமாகிய நடுவெல்லையின்ஞானமேதிருமெனியாகவுடையானுக்குஇடபமேறும்வேதியனுக்கு, யாவராலும்வியக்கப்பட்டவுயரமும் பரிசுத்தவொளியினையுடைய

யளிங்குமயமும்பெற வொள்ளியநவமணிகளாலும்பொன்னினாலுந் தோரணமாதி
யானவெல்லாவங்கங்களையுஞ்செய்திடல்தானேயமைந்ததிருக்கோயில்விளங்கிற்ற
தனழகுசொல்லுமளவன்று. எ - று (ரயி)

சுத்தவொளிப்படிகமயந்துளங்குமிளம்பிறைவிளங்கச்சூடிச்சூடு *
மத்தமலர்ச்சடைமுடியர்வரமுடையர்திரிநயனம்வாய்த்துளார்தங் *
கைத்தலங்களொருநான்கிற்கனன்மழுவுந்திரிசிகையுங்கதையும்வாளும் *
வைத்துடையகணநாதர்வரதனுக்குக்குணதிசைச்சன்னிதியின்வாய்த்தார் *

எ-து அச்சிவலோகத்தெழுந்தருளும்வரதனுக்குக் கீழ்த்திசைச்சன்னிதியின் கட்பரிசுத்தமானவொளியினையுடையபளிங்குமயமாய்விளங்குமிளம்பிறையை யொளிவிடச்சூடியுமத்தமலரையணிந்தசடைமுடியர், வரங்கொடுக்குந்தகைமை யர் மூன்றுகண்களைப்பெற்றவர் திருக்கரநான்கினுங்கனல்போன்ற மழுவையுஞ்சூ லத்தையுந்தண்டத்தையும்வாளினையுந்தரித்தவராகியகணநாதர்கள்வாழ்ந்துபணி செய்தனர் எ - று (ரயக)

பரமசிவமயமுணர்ந்தபாசுபதர்சைவர்காபாலர்பான்மை *
விரதியர்மெய்த்தவரொன்னுமவர்தாமுமேலுரைத்தமேனிமேவி *
விரவுவரத்திசைதன்னில்வியன்கமலத்தயன்றென்பால்விரவமெய்மமைச் *
சரசுவதிமுனிவரர்க்குத்தலைமையவங்கிரரிவருஞ்சார்வரங்கே *

எ - து மேலானசிவபெருமான் றன்மையையுணர்ந்த பாசுபதருஞ்சைவருங் காபாலரும் முறைமையினையுடையமாவிரதியரும்மெய்ம்மையானதவத்தினையுடை யருமானவவர்களுமுன்சொன்ன சொரூபத்தைப்பெற்று அந்தக்கீழ்த்திசைவாயிற் சன்னிதியிலிருந்துபணிசெய்வர், தென்றிசைவாயிற்சன்னிதியிற்பெரியதாமரையில் வாழும் பிரமாவிருந்துபணிசெய்யவவனுடனுண்மைச் சரசுவதியுமுனிவரர்க்குட்ட லைமையானவங்கிராவுமத்திசையிலிருந்துபணிசெய்வர் எ - று (ரயஉ)

செப்பியவத்தென்றிசையிற்கபிலாதிசித்தருமோசெறிவர்யோக *
தற்பரநற்சனகசனந்தரொழுவாயெழுவருமெய்த்தவருஞ்சார்வார் *
மெய்ப்பொருளுக்கொப்பாகிவேந்தருமாய்மாயைக்குவினையைவென்று *
பொய்ப்பொருளைமதியாதபூதேசராதியர்மேல்புடையிற்சார்வார் *

எ - து சொல்லியவத்தென்றிசையிற்கபிலராதியானசித்தர்களுங்கூடிப்பணி செயவரஃதென்றிநன்மையானதற்பரயோகத்தையுடைய சனகர்சனந்தரராதியான

சத்தவிருடிகளுமுண்மையானதவத்தினரும்பணிசெய்வர். சாரூபத்தைப்பெறலால் மெய்ம்மைப்பொருளுக்கொப்பாகி மாயாவிளைதங்கட்கரசாகியிருவினையொப்புவ ந்துபொய்யாகியவுலகத்தைமதியாத பூதங்கட்கதிபரானவர்மேற்றிசைவாயிற்சன் னிதியிற்சார்ந்துபணிசெய்வர் எ - று (ாயகூ)

அத்திசையிற்பிராமிதனையாதியரேழணங்கினருமவர்களோடே *
பத்திரையைப்பார்ப்பதியையெழுவாயவெண்மருமோபடைக்கவல்ல *
சத்திதரிக்குஞ்சண்டப்பிரசண்டவயிரவர்கடாமேலோரு *
முத்தரத்திற்றிருமாலுமுருத்திரரும்பருதியருமுள்ளாரன்றே *

எ - து அந்தமேற்றிசையிற்பிராமியாதியான சத்தமாதாக்களுமவர்களுடன் பத்திரைபார்ப்பதியாதியானவட்டகன்னியர்களு மெப்பொருளும்படைக்கவல்லச த்தியையுடைய சண்டப்பிரசண்டவயிரவராகிய மேலோரும்பணிசெய்வர். வடதி சைவாயிற்சன்னிதியிற் றிருமாலும், பதினொருகோடி யுருத்திரரும், பன்னிரண்டு கோடியாதித்தரும்பணிசெய்வர் எ - று (ாயசு)

அத்திசையிலெண்வசுக்களரமகளிர்காந்திருவரியக்கரல்லாச் *
சித்தரியல்வித்தைதரர்சிறப்புடை யகுய்யரழற்சேடரொன்று *
மித்தொகைபரேயிசைவாரின்னுமுளரிணையிலியையிறைவன்றன்னை *
வித்தகனையுளத்திருத்திவிட்டாருந்தொட்டதுயர்வேட்கையெல்லாம் *

எ - து அவ்வடதிசையிலட்டவசுக்களுந்தெய்வமகளிருங்கந்திருவர்களுமிய க்கர்களுமவர்களல்லாத சித்தர்களுநல்லொழுக்கம்பெற்றவித்தியாதரர்களுஞ்சிறப் பினையுடையகுய்யகருமழல்போன்றசேடருமாகிய வித்தொகுதியரும்பொருந்திப்ப ணிசெய்வர். அவரன்றியொப்பில்லாதவனை யெப்பொருட்குமிறைவனை ஞானமூர்த் தியையுள்ளத்தின் கண்வைத்துத்தொன்றுதொட்டு வந்தசஞ்சிதமுதலியதுன்பங்க ளாசைகளெல்லாம்விட்டபெரியவருமவ்விடத்துளர் எ - று (ாயரு)

சிவலோகத்திற் சிவபெருமானெழுந்தருளி யிருக்குந்
தன்மையை ஐந்துசெய்யுளா லுணர்த்துகிறார்

இத்தகையோர்தொழுதேத்தவாயிரக்கான்மண்ட பத்துளிணையிலீசன் *
முத்தனொருமுதலாகிமூவுலகாய்த்தழைத்தெழுந்துமூவாமூர்த்தி *

யத்தனரனணிகிளருமரிபரித்தவாதனத்தினலரின்மீதே *
வித்தகவேதகியுடனும்வீற்றிருப்பன்வினைப்பயனைவிளைக்கவேதான் *

எ - து இப்பண்பினையுடையோர் வணங்கித்துதிக்கும்படி யாயிரக்கான்ம ண்டபத்து நடுவிலழகினையுடைய சிங்கங்கடாங்குமாசனத்தாயிரமிதழ் யுடைய தாமரைமலரின்மேன், முத்தனுகியுமொப்பற்றமுதன்மையாய் மூன்றுலகமாய்த்த ழைத்தெழுந்துகெடாத மூர்த்தியத்தனுகியும் ரனுகியும் விளங்கிய வொப்பற்றபர மேசன்டியரைப்பக்குவப்படுத்துந்தன்மையையுடைய வேதகியாகிய்பெருமாட்டி யுடனுமெழுந்தருளியிருப்பன் எவ்வுயிருமிருவினைப்பயனையனுபவிக்க எ - று ()

கண்டனுக்குக்காட்டாயகதிருதையமொருகோடிகலந்ததென்ன *
வெண்டனுக்குக்காட்டாயவெழிலுருவமிசைந்திலங்கவிரைக்குநீரும் *
விண்டனுக்குவிளக்காயவெண்மதியும்விரவுசடைமுடிதன்மீதே *
பண்டனுக்குப்பாடல்பயில்பறவையுறுமிதழிமுதற்பரிக்கபாங்கால் *

எ - து கட்பொறிக்குவிடையமாகியவுருவமனைத்தினையுங்காட்டுங்கதிரவன் ஒருங்கொருகோடிகலந்துதையமானுற் போலமேலுமேலுஞ் சொல்லுமெண்களுக் கெடுத்துக்காட்டாகிய வழகினையுடையதிருவுருவம் பொருத்தமாய் விளங்கவும்ம ணமாகியகங்கையுமாகாய விளக்காகியவெள்ளைமதியுங் கலந்த சடைமுடிதன்மே ற்பண்களுக்கொத்தவிசைப்பாட்டைப் பாடாநின்றவண்டுகள்பொருந்துங்கொன் றைமுதலிய மலர்களைப்பாங்குடன்றரிக்கவும் எ - று (ாயஎ)

சுடர்மூன்றுங்கண்மூன்றுய்த்துடர்ந்திலங்கக்குழைதோடுதுலங்கக்காதி,
விடர்மூன்றுமிழித்தருளுமிளமுறுவன்முகமலரினிலங்கவெய்திற் *
கடலுமிழும்விடமிடற்றிற்கலந்திலங்கமறிமழுவுங்கையில்வைத்த *
வடியடைவாரிடரகல்வமைத்தகரம்வரதகரமமரவாங்கே *

எ - து பருதிமதிதீயாகியமுச்சுடருமுக்கண்ணுயமைந்து விளங்கவு ந்திரு க்காதிற்குண்டலமுந்தோடும்விளங்கவுஞ்சஞ்சிதம் பிரார்த்தமாகாமியமாகிய மூவ கைத்துயரத்தையுங்கெடுத்தருளுமிளமையான புன்சிரிப்புத் திருமுகத் தாமரையி ன்விளங்கவுங்கொடிதாய்க்கடலினின்றெழுமாலாலவிடந்திருக்கண்டத்திற் சேர்ந் துவிளங்கவுந்திருக்கரத்தின்மானு மழுவுமடியார்களுடைய பிறவிப்பிணி நீங்கவ மைத்தவபையமும் வரதமும் பொருந்தவும் எ - று (ாயஅ)

குங்குமத்தின்சந்தனத்தின்குழம்பேயோதிருநீற்றின்கோலமல்கத் *
துங்கவரையிரண்டனையதோளகலத்தலர்குவளைத்தொடையலேயோ *
பங்கயத்திற்பயில்வானும்பாற்கடலிற்றுயில்வானும்பழுத்தநாளின் *
மங்கியிடவவரங்கமாலைகளுங்கண்டிகையும்மலியவாய்த்தே *

எ - து குங்குமத்தாலுஞ்சந்தனத்தாலுஞ்சமைத்தகுழம்புதானோ வென்னும்படி திருநீற்றுக்காப்பினழகு பெருகவுமுயரியவிரண்டுமலையொத்ததோட்பரப்பிலணிந்தகுவளைப்பூமாலையோவென்னும்படி தாமரையிலிருக்கும்பிரமனும் பாற்கடலிற்பள்ளியமர்ந்த விட்டுணுவுந்தன்னுனியமித்துமுடித்தநாளிறுதியி லழிந்து விட அவர்முழுவெலும்பாகிய வங்சமாலைகளுங் கண்டிகைமாலைகளு மிகுந்து பெருகவும் எ - று (ரயகூ)

திருவரையிற்புலியதளுஞ்சிறந்திலங்கவுடைவாளுஞ்செறிந்தகச்சும் *
பரிபுரமுமிருவினையும்பறித்தருளென்றிருபதமும்பற்றியொற்றப் *
பொருகழலுந்திருவடியிற்பொலிந்திலங்கப்புடைதொழுவார்புலன்கடன்னைப், *
பருகியவருளத்தரியபரமபலமளித்தொளித்துப்பாசமெல்லாம் *

எ - து திருவரையினிடத்துப்புலித்தோலுமுடைவாளுநெருங்கிய வீரக்கச்சுஞ்சிறந்துவிளங்கவு நின்பால்வணங்குவாரைம்புலன்களைத்தன்வசப்படுத்தியவருளளத்தரியனவென்றெண்ணு மேலானபலத்தைக்கொடுத்தெல்லாப்பாசங்களையுங் கெடுத்திருவினையுநீக்கியருளென்றிரப்பனபோற்பரிபுரமும்பரல்கள்பொருகின்றவீரக்கழலும்இரண்டுபாதங்களினும் பற்றியொற்றவும் பொலிந்துவிளங்கவும் எ-று()

நந்தைமுதலிய பசுக்களின் றோற்றமுதலியவற்றை
யெட்டுசெய்யுளாலுணர்த்துகிறார்

வீற்றிருக்கும்விமலனதுசன்னிதியில்வெள்விடையும்விளங்குமந்த *
வேற்றினயனந்தைமுதலிசைந்துறையுமுயிர்க்கிரக்கமெய்தியீசன் *
றோற்றுவிக்கப்பூதலத்திற்றோன்றியெழிற்பாற்கடலிற்றுயரந்தன்னை *
மாற்றிநிலன்வாழ்வார்க்கும்வரங்கொடுக்கும்பரமனருள்வழியினாலே *

எ - து எழுந்தருளிவீற்றிருக்கும்விமலனாகிய சிவபெருமானது சன்னிதியில்வெள்ளியவிடையேறும்விளங்கியிருக்கும்,அவ்விடையேற்றின்பக்கத்தில் நந்தை

முதலிய பசுக்கள்விரும்பியிருக்கும், அவைகளைச்சிவபெருமான் சிற்றுயிர்க்கிரங்கி ப்பூமியிற்பிறக்கும்படிசெய்த லாலழகினையுடையபாற்கடலிற்பிறந்திவ் வுலகத்தில் வாழ்வார்க்குப் பரமன ருளினபடி துன்பங்களைக் கெடுத்துவரங் களைக்கொடுக் கும் எ - று (ாஉக)

நந்தைசுபத்திரைசுரபிநற்சுசிலைசுமனையெனநவின்றநாம *
மைந்தினுக்குமறிகநிறங்காபிலமேகரியவுருவணிகொள்வெண்மை *
சுந்தரத்ததூமிரமேதாமிரமேயெனத்துணிந்துநாமஞ்சொல்லி *
வந்தனைசெய்தவற்றுதித்தவிருமூன்றுமாட்டிடுகவரதற்கென்றும் *

எ - து மேற்கூறிய பசுக்களைந்துக்கு நந்தையென்றுஞ் சுபத்திரையென்று ஞ் சுரபியென்று நல்லசுசீலையென்றுஞ் சுமனையென்றுநாமத்தை யறிவாயாகஅவ ற்றுள் நந்தை கபிலநிறம் சுபத்திரை கருமைநிறம் சுரபி அழகியவெண்மை நிறம் சுசீலை சுந்தரமானதூமிரநிறம் சுமனை தாமிரநிறம் என்றுநிச்சயித்து அதனதுமு ங்களைச்சொல்லிப்பூசைசெய்தவற்றிலுண்டான பால்-தயிர்-நெய்-கோமயம்-கோ சலம் கோரோசனையாகியவாறு பொருளையும் வரதனாகிய சிவபெருமானுக்கென் றுமபிடேகஞ்செய்க எ - று [ாஉஉ]

வேதாவுங்கரியவனுமாவினதுகோட்டடியின் விளங்கிவாழ்வர் *
கோதாவிமுதற்றீர்த்தங்கோட்டினுதிச்சராசரமுங்கூடிநிற்கு *
மீதானசிரத்தமலன்விமலையதனடுநெற்றிவிசாகனுசி *
மீதானந்தனிலதனுண்ணுசிதனினுகேசர்விளங்குவாரே *

எ - து பிரமனுந்திருமாலுமப் பசுக்களினதுகொம்பினதடியின் விளங்கிவா ழ்வர் கோதாவிரிமுதலிய தீர்த்தங்களுஞ்சரவசரவுயிர்களுங்கொம்புநுனியிற்கூடி நிற்கும், மேலானசிரசிற்சிவபெருமானு நெற்றிநடுவிற் சத்தியுமூக்குநுனியிற் சண் முகனு மூக்குக்குளிந்திரன் முதலிய தேவர்களும்விளங்கிவாழ்வர் எ - று (ாஉங)

ஆசகலவிருகன்னநாப்பணச்சுவினிதேவரமர்ந்துவாழ்வர் *
தேசுதுடையபருதிமதிநயனத்திற்றந்தத்திற்செறியும்வாயு *
வோசையுறுநாவதனில்வருணனுணாமகளோங்கூங்காரநெஞ்சி *
னேசமுறயமனியக்கர்கெண்டதலத்தெந்நாளுநிலவுவாரே *

எ - து குற்றநீங்கும்படி யிரண்டுகன்னநடுவிலச் சுவினிதேவர்கள் விரும்பி வாழ்வார்கள் இரண்டுகண்களிடத்தொளியினையுடைய பருதியுமதியுந் தந்தத்தில்

வாயவும்பொருந்தும் ஒலிபொருந்துநாவில் வருணனு முன்னதமாகிய வுங்காரத்தையுடைய நெஞ்சிற்கலைமகளுமணிகளினி—த்திய மனுமியக் கருமெக்காலமுமன்புடன்வாழ்வர் எ - று [ாஉச]

ஒட்டத்திலுதையாத்தமனசந்தியிவையுறையுமுறைவன்கண்டத்
திட்டுடையவிந்திரனேயிமிலிருப்பரருக்கரொனவியம்புந்தேவர்
வாட்டமிலாச்சாத்தியரேவாழ்வார்களுரமதனிலனிலவாயு
நீட்டியதாளொருநான்கின்மருத்தென்பர்முழந்தாளினிலவுவாரே

எ - து உதட்டிலுதையாத்தமனத்துக்குரிய சந்திதேவதைதங்கும், கழுத்திற்பெருமையுடையவிந்திரனிருப்பன் முரிப்பிலருக்கதேவரிருப்பர் மார்பிற்சேர்வில்லாத சாத்தியர்வாழ்வர் நீட்டாநின்றநான்குகாலிலனிலனுகியவாயுவு, முழந்தாளின்மருத்துவரும், வாழ்வர் எ - று [ாஉரு]

குரத்தினுதிப்பன்னகரேகுடிகொள்வர்காந்திருவர்குரத்தினுப்ப
ணிருப்பரரமகளிர்கணமிவரெல்லாமேற்குரத்தின்முதுகினெல்லை
யுருத்திரரேசந்துதொறுமுறைவார்கள்வசுதேவர்பிதிர்க்களோங்கிப்
பருத்தவரைப்பலகைதன்னிற்பகத்துறைவரொழுமாதர்பரிவுகூர்ந்தே

எ - து காற்குளம்புநுனியில்நாகர்கள் குடியாகவாழ்வர் அக்குளம்பு நடுவிற்கந்திருவர்தங்குவர் அக்குளம்பின்மேலிடத்திலரம்பையரும், முதுகிடத்திலுருத்திரருஞ் சந்துகடோறுமட்டவசுக்களுந்தங்குவர் உயர்ந்துபருத் தவரைப்பரப்பிற் பிதிர்தேவதைகளும், யோனியிற்சத்தமாதரக்களுமின்பமிகுந்துவாழ்வர் எ - று [ாஉசு]

திருமகளேயபானத்தினுகேசரடிவாலிற்சிறந்துவாழ்வ
ரிரவியொளிவாலின்மயிரிலங்கியிடுஞ்சுரநதிதானேயுநீரின்
வரமுடையயமுனைமயமதுதன்னின்மாதவர்களுரோமம்வாழ்வ
ருரமுடையபூதேவியுதரத்திற்பயோதரத்தினுததியெல்லாம்

எ - து குதமாகியவபானத்திற்றிருமகளுமடிவாலினுகாதிபருஞ் சிறந்துவாழ்வர் ஒளியுடையவாலுரோமத்திலாதித்தன்விளங்கியிருப்பன் கோசலத் திலாகாயகங்கைபொருந்துங்கோமயத்திற்பெருமையுடையயமுனைநதிபொருந்தும் உரோமங்களில்மாதவர்கள் வாழ்வர் வயிற்றிலாற்றலுடைய பூமிதேவியுங் கொங்கை யிலெல்லாக்கடலும்பொருந்தும் எ - று [ாஉஎ]

சடரத்தினிதையத்திற்றழைத்தமுகமதுதன்னிற் றங்குமங்கி *
கடனுடனேகாருகபத்தியமேழுவாயொருமூன்றுங்கடினவென்பி *
னுடலுறுசுக்கிலந்தனினுமுறையுமகவினையனைத்துமுறுப்புத்தோறுந் *
திடமுறுகற்புடைமடவார்செறிந்திருப்பாரிம்முறையைச்சிந்தைசெய்தே *

எ- து. வயிற்றினுமிதையத்தினுஞ்செழுமையாகியமுகத்தினுமுறைமையானே காருகபத்தியமாகவனீயந்தெக்கணக்கினீயமாகிய மூன்றுஅக்கினியும்பொருந்துங் கடினமான வெலும்பினிடத்து முடலுட்பொருந்திய சுக்கிலத்தினிடத்தும் யாகத் தொழின்முழுமையும்பொருந்துமெல்லாவங்கங்கடோறுங்கலங்காநிலைக்கற்புடை மடவார்பொருந்தியிருப்பர். ஆதலா லிம்முறைமையைத் தியானஞ்செய்து. எ- று (ாஉஅ)

பசுக்களையோம்புதலோம்பாமையால் வருநன்மைதீமைகளையேழு
செய்யுளா லுணர்த்துகின்றார்

வேறு

ஆக்கடனையியக்கிடினு மார்வங்கூர்ந்தே யங்கையினிற்பலாசந்தண்டா
லேமெல்ல, வோக்கியுடற்கொறுப்பறவே யொற்றியொற்றிக்கெச்சநெறிகெ
ச்சநெறியென்றேயோதும், வாக்கியரோசிவபுரியின்வரத்தையுற்றுமலரிரதத்
தமலனெனமகிழ்ந்துவாழ்வர், தீக்குழியைச்செறிவார்கள் கருணையின்றிச்
சினத்ததட்டியடித்தொறுக்குஞ்சிறியார்தாமே. *

எ- து. அப்பசுக்களைமேய்க்கினுமாசைமிகுந்தழகிய கையிலிருக்கும்புனமுருக் கங்கோலால்வருத்தநீங்கமெல்ல வொற்றியொற்றிப் பொருந்தாமலெறிந்துகெச்ச நெறிகெச்சநெறியென்றுசொல்லுமேன்மைச்சொல்லையுடையவரோ சிவலோகத்தி ற்சிறப்பினைப்பொருந்திமலரானிறைந்தவிமானத்துநின்மலனைப்போலமகிழ்ச்சியுற் றுவாழ்வார்கள். அஃதன்றியிரக்கமில்லாமற்கோபித்துவன்சொல்லாலதட்டியடித் துவருத்துமறிவில்லாதசிறியார்தீக்குழியாகியநரகத்திற்றங்குவர்கள். எ- று. ()

வேறு

அரனுதியொருமூவரமரோசன்மருமானு *
மொருவாமலுறைவார்களுமையாதிமடவாரு *
மரிதாயமறையோர்களுடலாவினுடலார்வ *
மொருவாதுவழிபாடுபுரிவார்களுயர்வாரே *

எ- து. அரன்- அரி- அயன்- ஆகியமூவருமிந்திரனு மவன்வழிதோன்றுமற்றை த்தேவருமுமாதேவியாதியானபெண்களும் அருமையானவந்தணர்களும் அப்பசு வினுடலின்கணீங்காமல்வாசஞ்செய்வார்கள். ஆதலாலப்பசுவினுடலிலாசையானீ க்காதுபூசைசெய்வோர்கள்உயர்வாயிருப்பர்கள். எ- று. (ாகூய)

பரியாதுபகையாளர்பணியாதுபழியாள
சேரிவாயநினைவீழுமெளியார்களரியார்கள்
பரிவார்கள்பணிவார்கள்பதமீதுபரமான
வரிதாயசிவலோகமெளிதாகவடைவாரே

எ- து. அப்பசுக்களை யோம்பாமலுந் தொழாமலு மிருக்கிற பழியாளராகியப கையாளர்கள் தீவாய்நரகத்தில்விழுதற்கெளியராகியு மந்நரகத்தினின்றுங் கரை யேறுதற்கரியராகியும்பொருந்துவர். அவற்றையோம்புவார்களும்பாதங்களிற்றொ ழுவார்களுமேலானவருமையாகிய சிவலோகத்தை யெளிதாகப்பொருந்துவர்கள் எ- று. (ாகூக)

வேறு

வலஞ்செய்தாக்களைவாழ்த்திவணங்கியே
கலஞ்செய்தார்புல்லுநாவிற்கொடுத்துடல்
விலங்கைவிட்டும்விமலன்புரத்துளே
விலங்கிச்சுற்றத்தொடுமிருப்பார்களே

எ- து. அப்பசுக்கட்குப்புற்களைநாவிற்கொடுத்துவலஞ்செய்துவாழ்த்திவணங் கிப்பூசைசெய்தோர்யாக்கைகட்குவிலங்காகியவிருவினைகளை நீங்கியு மச்சிவபெரு மானுலகத்திற்சுற்றத்தாரோடும் விளங்கியிருப்பர்கள். எ- று. [ாகூஉ]

பருகினார்கபிலைத்திகழ்பாலினை
பெரிவரேபெரிவாய்நினையத்தெழிற்
பரமனுக்கபிடேகமும்பண்ணினர்
சிரவுவார்கள்விமலன்புரத்துளே

எ து. அப்பசுக்களினது விளங்கியபாலினைப் பொசித்தோர் தீவாய்நரகத்தெரி வார்கள். அப்பாலையழகாகியசிவபெருமானுக்கபிடேகமுஞ் செய்தோர்களந்தவிரு மலனுலகத்தினுட்சேர்வார்கள். எ- று. [ாகூங]

தீண்டப்பாவங்கடேய்ந்தறுநல்வினை
யீண்டும்புற்றனையீயவிரங்கியே
வேண்டுநற்பொருள்வேறிலையானலாற்
காண்டகைப்பொருடானுங்கருதிலே

எ- து. அப்பசுக்களைக்கையாற்றீண்டினவுட னெல்லாப்பாவங்களுங்குறைந்து கெடும், மனதிரங்கிப்புல்லைக்கொடுத்தவுடனல்வினையாலாகிய புண்ணியங்களெல்லாம்பொருந்தும், ஆதலாலெண்ணுங்காலத்தியாவரும்விரும்பும்நன்மையானபொருளுணுந்தாகுதிங்கயையுடையபொருளுமப்பசுக்களல்லதுவேறில்லை. எ- று. ()

இங்குமின்சுவையீயுமிறைஞ்சுவார்க்
கங்குமின்பமடைகைக்குக்காரணம்
பொங்குதண்புனலுண்டுபுற்றின்றுநன்
மங்கலந்தருங்கோவெனும்வான்பொருள்

எ- து. பொலிவாகியகுளிர்ச்சியினையுடைய நீரைப்பருகிப் புல்லைத்தின்றுயாவருக்குநல்லமங்களங்களைக்கொடுக்கும் பசுக்களென்றுசொல்லும் பெருமையினையுடையபொருளானதுதொழுது பூசிப்பார்க்கிவ்வுலகின் கண்ணுமினிமையான்சுவையையுடையபால்முதலியவற்றைக்கொடுக்கும். அவையன்றியச்சிவலோகத்துநிரதிசயானந்தம்பெறுகைக்குங்காரணமாம். எ- று. (ரரகரு)

பசுக்கள்வசிக்குங்கொட்டில்கட்டி யலங்கரிக்குந்தன்மையையொ
ன்பதுசெய்யுளாலுணர்த்துகின்றார்

இட்டிகாதியிற்சாலையியற்றுக
விட்டுவாய்தலும்பூருவமேவவே
குட்டிகைப்புறநான்கிலுங்கோலுக
விட்டதேவர்க்கிசைந்தவிடங்களே

எ- து. கீழ்த்திசைக்கண்வாயில்பொருந்தவிட்டுச்செங்கல்முதலியவற்றாலான் கொட்டிலாகிய கோபுரத்தைச்செய்க. அக்கொட்டிலினது சிறியசுவர்ப்புறத்துநான்குதிசையினும்பொருத்தமானதேவர்கட்கிசைந்தவிடங்களைவளைக. எ- று.(ரரகரு

கொற்றவைக்குறுகோட்டமும்பூருவஞ்
சொற்றவைந்திற்குந்தொக்கிடந்தக்கண

மொற்றைக்கொம்பனுக்குன்னதமேற்றிசை ❋
மற்றைச்சோமற்குநந்திக்குமற்றிடம் ❋

எ- து. கோபுரமாகியவான்கொட்டிற்குக் கீழ்த்திசையிற்றுற்கைக்குப்பொருந்தியகோயிலுந்தென்றிசையின் முன்சொல்லியவைந்திற்குந் தொகுத்தவிடமுமேற்றிசையிற்கணபதிக்குன்னதமானகோயிலும்வடதிசையிற் சந்திரனுக்குநந்திக்குங் கோயிலுஞ்செய்க. எ- று. முன்சொல்லியவைந்தாவன- பால்- தயிர்- நெய்- கோமயம்- கோசலம்-என்க (ாகூஎ)

பூர்வவாய்தற்புறத்திருபாகத்து ❋
மார்வங்கூரவிருவரையாக்குக ❋
வாரபாலகர்நந்திமாகாளனை ❋
யேருறச்செய்கமீதுவெள்ளேற்றையே ❋

எ- து. கிழைவாயதலிற்கடுத்தவிருபக்கத்திலுநந்திமாகாளரென்றுசொல்லுந்தவாரபாலரிருவரையுமனவிருப்பமிகும்படி பிரதிட்டைசெய்க. திருமதிலின்மேல் வெள்ளியவிடவங்களையழகுறச்செய்க. எ- று. (ாகூஅ)

உத்தமத்தநதியின்மண்ணோடைமண் ❋
வித்தகத்தநல்வில்லத்தடியின்மண் ❋
பொத்தைப்புற்றின்மண்போதியின்கீழ்மணென் ❋
றித்தகைத்தநற்கெவ்வியத்தேய்க்கவே ❋

எ-து உத்தமமானநதிமிருத்திகை-யோடைமிருத்திகை-வித்தகத்தன்மையையுடையநல்லவில்லத்தடிமிருத்திகை-மலையையொத்தபுற்றுமிருத்திகை-யரசடிமிருத்திகையென்றுசொல்லுமித்தகுதியையுடையனவற்றைநல்லகௌவியத்தாலிசைவிக்க. எ- று. (ாகூகூ)

குயிற்றிமுன்சொன்னகோலமனைத்தையும் ❋
பயிற்றியங்கவர்க்கெய்தநற்பால்களின் ❋
முயற்சியோடயனுதியர்மூவர்க்கு ❋
மயற்சிதீரவுள்ளற்சனையாக்கவே ❋

எ- து. முன்சொன்ன மிருத்திகையாலுங் கௌவியத்தாலு மெல்லாவழகும் பொருந்தவவ்வான்கொட்டிலைச்செய்துவிதிப்படி அயனரியரனுகியமூவருக்கும்

அவரவர்க்குரியபடிநல்லவிடங்களிற்றாபித்துச் சோர்வுபொருந்தாதருச்சனைபண்ணுக .எ- று.

(ாசஎ)

கற்றினங்களுந்தங்கிடங்கட்டுக
மற்றிடங்குழக்கன்றுகள்வைகவு
முற்றநோய்களொடுங்குமிடங்களு
முற்றுமாசெய்கமுற்றுமுயற்சியால்

எ - து ஆகமத்திற்சொல்லிமுடிந்தவுழப்பான் முதிர்ந்தகன்றுக் கூட்டங்கடங்குமிடங்களுங்கட்டுக இளங்கன்றுகடங்கும் வேறிடங்களுமவ்வாக்கள் முதலியவற்றைப்பொருந்தியு நோய்கணீங்குமிடங்களுங்குறைவின்றிச் செய்க எ - று

(ாசக)

செய்கவேறிடஞ்சீர்மையதாகவே
வெய்யநோய்கள்விரவிடிலாக்களைப்
பையவங்கணுறுகணைப்பாற்றுக
மையறீரமருந்துமருத்தியே

எ - து அப்பசுக்களைக்கொடுமையான வியாதிகள் பொருந்திடிலழகாகவேறிடத்தைச்செய்ததிற்கட்டுக அப்பசுக்களின் மயக்கநோய்கடீர மருந்துகளைக் கொடுத்துவிரைவன்றியவ்விடத்துப் பொருந்துநோய்களைத்தீர்க்க எ - று (ாசஉ)

கண்ணிவாய்தலுநாற்றிசைகாணவே
பண்ணிக்கோமயம்பாற்றுகநீற்றினுற்
றிண்ணிதாகவுஞ்சோதனைசெய்தபி
னண்ணிடாமன்மசகமுநாடொறும்

எ- து. நோய்தீரச்செய்தவான்கொட்டிற்கு நாற்றிசையிலும்வாயில்கள்விதிப்படிகருதிச்செய்து சுண்ணநிற்றுலழகுற நீவுதல் செய்ததன்பின்பு தினந்தோறுங்கொதுகுகளும்பொருந்தாமற்கோமயங்களைநீக்குக. எ-று. மசகமுமென்றவும்மையாற்புழுவுமீயுமென்க.

(ாசகூ)

தூபந்தன்னைத்துதைக்கதுலங்கவே
தீபந்தானுஞ்சிறக்கச்செறிக்கநற்

பூவினாற்றொடையெங்கணும்பூட்டுக
கோவினைப்புகச்செய்ககுறிப்பொடே

எ- து. அக்கொட்டிலில் அகிற்றூபங்களைவிளங்க நிறைத்தல்செய்கதீபங்களையும்விளங்கநிறைத்தல்செய்க. மங்கலமலராற்கட்டிய மாலைகளை யெவ்விடத்துமணக்குக. பின்புயெண்ணத்துடனப்பசுக்களையுட்புகச்செய்க. எ- று. (ரா சு ச)

பசுவைக்கொட்டிலிற் புகுவிக்குந் தன்மையையுணர்த்துகின்றார்

சொல்லிமெல்லச்சுவத்தியெனுஞ்சொலை
மெல்லமெல்லச்செலுத்துகமேவிட
வல்லிதாம்வளைப்பாயலும்வாய்க்கவே
நல்லபுல்லுங்கொடுக்கநயத்தொடே

எ- து. சுவத்தியென்றுசொல்லும்வாக்கியத்தைமெல்லச்சொல்லிக்கொட்டிலிற்பையப்பையப்போகும்படிசெய்க. வலுமையான வள்ளைக்கொடியாற்செய்தபாயலுந்தகுதியாகச்செய்க. அன்புடனல்லவறுகம்புல்லையு மிசைவிக்க. எ- று.

சுவத்தி எ - து மங்கலமொழி—வடபதம் (ரா சு ரு)

பசுவைப்பூசிக்குமுறையை யுணர்த்துகின்றார்

ஆட்டிமஞ்சனமட்டமிதோறும்பூச்
சூட்டியோதனமாதியுந்தோயமு
மூட்டியாக்களையோகையுறுத்துக
காட்டித்தூபமுந்தீபமுங்காதலால்

எ- து. ஆதரவாலட்டமிதோறுந் திருமஞ்சனங்கொண்டபிடேகித்துப்பூவாலருச்சித்துத்தூபமுந்தீபமுங்கோட்டியன்னமுதலியநைவேதனமுந்தண்ணீருமூட்டியப்பசுக்களையுவகைபொருந்தச்செய்க. எ- று. (ரா சு சு)

பசுக்கள்வசிக்குங்கொட்டில்கட்டினவர்பெறும்பயனை நான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்

சாலையானினந்தங்கச்சமைத்தவர்
காலகாலன்புரத்தைக்கலப்பர்தா

மேலவேண்டியயாவையுமின்புறும் *
வேலைவெங்கதிரோற்கும்விதித்ததே *

எ- து. பசுவினினங்கள்வசிக்கக் கொட்டிலைச்செய்தவர்கள் வெவ்வியசூரியனுக்குவிதித்தகாலம்வரையுமின்பம்பொருந்து மெல்லாப்போகங்களும்விரும்பியபடி பொசிக்கக்காலனுக்குக்காலனாசிவபெருமானுலகிற்சேர்வர்கள். எ- று. (ாசஎ)

முடியநாளுமுகுந்தன்புரத்தினை *
யடைவர்மற்றையராளும்புரிகளும் *
வடவரைக்கண்மருவிக்குருவெனும் *
படியைப்பற்றிப்பின்பாரதம்பற்றுவார் *

எ- து. முன்வரையறுத்தநாளுமுடிவாகப்பின்புதிருமால்பிரமனிந்திரன்முதலியருலகத்தப்போகங்களைப்பொசித்துப்பின்பு மேருவரையைச் சேர்ந்துகுருகண்டத்தில்வந்தப்பயன்களைநுகர்ந்துபின்புபாரதகண்டத்திற்பிறப்பர்கள். எ- று.(ாசஅ)

பண்டைவாதனைப்பாங்குறவோங்கிய *
மண்டபத்தைவகுப்பாவரமுற *
மண்டுகாதலினானினம்வைகவே *
யண்டர்நாயகற்கற்சனையாக்கவே *

எ- து. பழையவாசனையினுரிமைபொருந்த நிறைந்தவாதரவாலப்பாரதகண்டத்திற்கோவினங்கடங்கவுந்தேவதேவனாகிய சிவபெருமானுக்கருச்சனைநடக்கவுமுன்னதமானமண்டபங்களைமேன்மைபொருந்தச்செய்வர். எ- று. (ாசக)

ஆட்டிப்பான்முதலைந்துமரன்முடிக் *
கூட்டிப்பாயதமன்டர்க்குமோகையி *
னோட்டிமுன்னையவூனமுலகினுட் *
டேட்டறச்சிவமாகத்தெருள்வரோ *

எ- து. சிவபெருமானது திருமுடிக்குப்பசுவின்பான்முதலியவற்றையபிடேகித்துஉவகையினாலடியார்களுக்குப் பாய சத்துடனமுதூட்டிப் பழையசஞ்சிதமுதலியகுற்றங்களையோட்டியுலகினுள்ள வாஞ்சையறச் சிவசாயுச்சியம்பெற்றுவிளங்குவர். எ- று. (ாருய)

பசுவைக்காக்கும்படிசெய்தஅரசனுறும்பலத்தையுணர்த்துகின்றார்

அக்கடன்னெய ருமறைநூன்முறை
காக்கக்காக்கிலனாயக்காசினி
காக்குங்காவலன்காய்ந்துகாப்பித்திடி
னேக்கிபேசிவலோகத்துறைவனே

எ- து. அப்பசுக்களையரியவேதநூல்விதிப்படி யுலகிலுள்ளார்காக்கக் கடவர்அப்படிக்காவாதவர்களையவ்வுலகத்தைக்காத்தாளுமரசன் கோபித்துக் காக்கும்படி செய்திச்சிவலோகத்துயர்ந்துவாழ்வன். எ- று. (ாருஙு)

அரசன்றண்டியானுகிற்பசுவைக்காவாதாருறும்பலத்தையுணர்த்து கின்றார்

காக்கிலாரையுங்காக்குமவரையு
நோக்குநாடொறுநோக்கிலனாகிலுங்
காக்கிலாரைக்கடிகிலனாகிலுந்
தீக்குக்காட்டமெனக்கனல்சேர்வரே

எ- து. பசுவைக்காவாதவரையுங் காப்பவரையுமரசன்நாடோறும்பார்ப்பன் அப்படிப்பாராதவனுயிருந்தாலும். அப்பசுவைக்காவாதாரைத்தண்டியாதவனுயிருந்தாலுமக்கினிக்குவிறகுபொருத்தமானதுபோலத் தீக்குழிநரகத்திற்குப்பொருத்தமாய்ச்சேர்வர். எ- று. (ாருஉ)

பசுவைக்கால மறிந்துகாக்குந் திற மிரண்டுசெய்யுளா லுணர்த்து கின்றார்

தழைத்தசோலைத்தடத்தினடத்துக
பழுத்தவேனிற்பருவத்திலாக்களை
மழைக்குமாமலைச்சாரல்வனத்திடை
பொழிக்கவச்சமுறுத்துமுழுவையே

எ- து. அப்பசுக்களைமுதுவேனிற்காலத்திற் குளிர்ச்சியையுடையபெரியமலைப்பக்கமாகியகாட்டினிடத்துத்தழைத்திருக்குஞ்சோலைப்பரப்பில்மேய்த்தல்செய்க அதுவன்றியவற்றைக்கொல்லவரும்புலியைக்கெடுத்தல்செய்க. எ- று.
முதுவேனில் - ஆனி - ஆடி -

(ாருங)

இமத்தில்வெய்யில்வெளியிலியக்குக
வமைக்கமற்றும்பருவத்தலலறத்
தமக்குநல்லனதாமறிவார்கடாஞ்
சமைக்கநல்லனசாருந்தகையெலாம்

எ - து தங்கட்குநல்வினைகளிவையென்றறிய மறிவுடையோர்கள் அப்பசுக்களைமுன்பனிபின்பனியாகியகாலத்திற் சூரியகிரணம்பரந்தவெளிப்பரப்பில்மேய்த்தல் செய்க மற்றைக்கார் காலமுதலியகாலங்களினுந் துன்ப நீங்கத்தகுந்த விடங்களில் மேய்த்தல்செய்க அதுவன்றிநன்மைகள் பொருந்துந் தகுதியான தொழில்களையெல்லாஞ்செய்க எ று (ாகுச)

பசுவைக்காப்பர்ர் காவாதர்ருறும்பலத்தையிரண்
டுசெய்யுளாலுணர்த்துகிறார்

ஆக்கடன்னையலலறவன்புடன்
காக்குங்காவலர்செய்தகடுவினை
போக்கித்தேசன்புரத்திலருந்துவர்
வாக்கினாலுனாயாதமகிழ்ச்சியே

எ - து அப்பசுக்களைத்துன்பநீங்கும்படியாதரவுடன் காத்தளிக் குமரசர்களாங்கள்செய்ததீவினைகளைக்கெடுத்துச்சிவமெருமானுலகத்துவாக்காற்சொல்லொணாதவானந்தத்தையனுபவிப்பர்கள் எ - று (ாகுரு)

ஆக்களல்லலறவளியார்களும்
பூக்களாற்புரியார்களும்பூசனை
காக்கிலாருங்கசிந்துகடும்பிணி
தீக்குக்காட்டமெனக்கனல்சேர்வரே

எ - து அப்பசுக்களைத்துன்பநீங்கும்படி காவாதவர்களுமலராலருச்சனைசெய்யாதவர்களுங்கடுமையானநோய்வந்திடிலுள்ளமுருகித்தீராதவர்களுமக்கினிக்குவிறகுரிமையானதுபோலத்தீக்குழிநரகத்துக்குரிமையாவர்கள் எ - று (ாகுசு)

ஆவுரிஞ்சுதறிநட்டவர்கோதானஞ்செய்தவருறும்ப
லத்தைமூன்றுசெய்யுளாலுணர்த்துகிறார்

ஆவுரிஞ்சுகன்னுட்டியவன்பினர்
கோவினைப்பரமற்குக்கொடுத்தவர்
தேவர்தேவன்புரத்திற்றிளைப்பர்க
ணாவினாலுரையாதநலத்தையே

எ - து பசுக்கடினவுக்குரிஞ்சுங்கற்றூண்களைமந்தைமுதலியவிடங்களிலொத ரவாய்நாட்டினவர்களும்பசுக்களைச்சிவபெருமானுக்குத்தானங்கொடுத்தவர்களுந்தேவதேவனாகியவச் சிவபெருமானுலகில் வாக்காற்சொல்லொணாதநிரதிசயானந்தத்தையனுபவிப்பர்கள் எ - று (ாருஎ)

கொடுத்துச்சங்கரற்கன்பொடுகோதன
மெடுத்துமுய்யக்கொள்ளென்றுமுனைத்தினர்
விடுத்துமுன்செய்ததீயவினைவிதம்
விடைக்குப்பாகன்புரத்தினைமேவியே

எ - து சிவபெருமானுக்கன்புடன்பசுக்களைக்கொடுத்தியானுய்யும் வண்ணமங்கீகரித்துமொப்புக்கொள்வாயென்றுசன்னிதிமுன்பு நின்றுதுதித் தவர்கள், முற்காலத்திற்செய்ததீவினையின்றிறங்களை நீக்கிவிடையிலெழுந்தருளுமப் பெருமானதுலகத்திற்றங்கி எ - று (ாருஅ)

ஒப்பில்போகமருந்தியுறைவர்கள்
கற்பமும்பதினாயிரங்காணவே
யிப்பலத்தினையெய்துவரானினைத்
தப்பில்போதகன்பாலளித்தாருமே

எ - து பதினாயிரம்பிரமகற்ப மொப்பில்லாதபோகங்களை யனுபவித்துறைவார்கள் குற்றமில்லாதவாசானிடத்தப்பசுக்களைக்கொடுத்தவர்களு மிந்தப்பலன்களைப்பொருந்துவார்கள் எ - று (ாருக)

சிவபெருமானுக்கானேறுதானஞ்செய் தவருறும்
பலத்தையிரண்டுசெய்யுளாலுணர்த்துகிறார்

ஊனமற்றவுறுப்புறுமொள்ளிய
வானலேற்றையரனதுசன்னிதித்
தானஞ்செய்கசமைத்தவணியுடன்
காளைமாடிபுரத்துறுங்காதலார்

எ - து மாலயன்மாண்டமயானத்திலாடிய சிவபெருமானுலகத்தில்வாழுங் காதலையுடையாரவன் சன்னிதியிற் குற்றமில்லாதவலையவங்களை யுடையநல்ல வொளி பெற்றவானேற்றைத்தானஞ்செய்க எ-று (ாசுய)

உற்றபெற்றத்துரோமத்திலொன்றற்கு *
மற்றைத்தேவர்வருடமோராயிரம் *
பெற்றவந்தப்புரத்திற்பெறுவர்கண் *
முற்றவேறறுவாரறுமோகமே *

எ- து. தானஞ்செய்து பொருந்திய வானேற்றினு ரோமங்களுளொன்றுக்குத் தான்பெற்றவச்சிவலோகத்திலாயிரந்தேவவருடமாகப்போகங்களைப்பெற்றுவாழ்வர்கள். அப்போகங்கள்பொசித்துமுடியவேமோகங்கள் அற்றொப்பில்லாதவராவர்கள். எ- று. [ாசுக]

சிவபெருமானதுபசுநிரைகளில்ஆனேறும்பசுவுந்தானஞ்செய்துவி
ட்டவருறும்பலத்தையுணர்த்துகின்றார்

இத்தகைத்தபலத்தினையெய்துவர் *
வித்தகத்தவிடையுமோர்தேனுவு *
நித்தனுக்கணிநாயினிறுத்தினு *
ருததரப்பிரசைப்பலத்தோடுமே *

எ- து. சிவபெருமானதுபசுநிரைகளினல்லஆனேறுமொப்பற்றபசுவுந்தானஞ் செய்துநிறுத்தினவர்கண்மேலுமேலும் புத்திரபவுத்திரபலன்களுடன் இத்தன்மையனவென்றுமுற்கூறியபலன்களைப்பெறுவர்கள். எ- று. (ாசுஉ)

ஆனேறுமுதலியவற்றுக்கு வருத்தஞ்செய்தவரை யரசன்தண்டஞ்
செய்தல்செய்யாமையால்வருவனவற்றைமூன்றுசெய்யுளாலுணர்
த்துகின்றார்

இடபமூருனரெய்துவர்வெய்யதீக் *
கடிகமன்னவன்காய்ந்தவரத்தினு *
னடைவன்மேலையமருலகந்தனைத் *
தடைசெய்யாமன்னன்றீக்குழிச்சார்வனே *

எ- து. வாகனமாகவேறி யிடபங்களைச்செலுத்துகிறவர்கள், வெவ்வியதீரரக

த்தைச்சேர்வர்கள். ஆதலாலவற்றிலேறிச்செலுத்தாதுமன்னவனொறுத்தல்செய்க அத்தன்மையினொறுத்தசிறப்பினையுடைய வம்மன்னவன்மேலாகியதே வவுலகத்தி லாச்சேர்வன். அவ்விடவமுருதலைத்தடைபடுத்தாதமன்னவன்றீக்குழிநரகத்தைச் சேர்வன். எ- று. (ாசுாகூ)

பாவகாரிகள்வந்தைப்பசுவினைச் *
சேவுபர்த்தசிவனிடபத்தினைக் *
காவுவிக்கிற்கனத்தையக்காசினிக் *
காவலானவரையுங்காய்கவே *

எ - து பாவவான்மாவானவர்கள் மலட்டுப்பசுவையாயினும் விடைக்கொடி யையுடையசிவபெருமானதிடபங்களையாயினும்பாரமான பண்டங்களைச்சுமக்கும் படிசெய்விக்கிலப்பாவிகளையும் அவ்வுலகத்தரசன்றண்டனைசெய்க எ-று (ாசுசா)

காய்ந்தமன்னன்கடியவினையினைத். *
தீர்ந்துசேர்வன்சிவபுரந்திண்ணமே *
யோர்ந்தொறுப்பவர்தம்மையொறுமனன் *
கூர்ந்தநிரையக்குழிகூடுவன் *

எ - து அப்பாவிகளைத்தண்டஞ்செய்தஅரசன்கடுமையானதீவினைகளைநீங்கி பரிசுத்தனாகவே சிவலோகத்தைச்சேர்வன் அப்பசுக்களைவருத்துவோர்களை வருத்த ஞ்செய்யாதஅரசன் மிகுந்ததீக்குழிநரகத்தில்விழுவன் எ - று (ாசுரு)

ஆனேற்றிற்பாரங்களையேற்றிற்பரிகாரமுணர்த்துகிறார்

பரிப்பித்தாரிடபத்திடைப்பாரத்தை *
பரிக்கப்பாவமுமாறுடனேந்துற *
வரத்தவெள்ளிடையீசர்க்குதவுக *
விரித்தவானினங்காக்கவோர்வற்சரம் *

எ- து. அந்தஇடபத்தின் மேற்பாரங்களைச்சுமத்தினார் அப்பாவங்கெடச்சிவபெ ருமானுக்குவலியினையும்வெண்மையினையுமுடைய பதினொருஇடபங்களைத்தானஞ் செய்க. அதுவுமன்றிநியமித்தபசுநிரையையுமொருவருடமேய்த்தல்செய்க. எ- று (ாசுகா)

ஆலயப்பணிக்கானேறுதவினோர்பலத்தையுணர்த்துகின்றார்

ஈடுபெற்றவெருத்தினையீபவர் *
பாடுபெற்றசகடைபரிக்கவு *
மாடுங்கூத்தனமலன்பணிக்கவ *
ணுடுபெற்றுநலத்தைநவில்வரோ *

எ- து சிற்சபையினிருத்தஞ்செய்யுநிருமலனதாலயப்பணிவிடைக்குரியபெருமைதங்கியபண்டி-களைச்சுமந்திழுக்கும்படிக்குமாற்றலையுடையவிடபங்களைத்தானஞ்செய்தவரவனுலகுணிரதிசயானந்தத்தைப் பெற்றவனுமங்களைத் துதித்திருப்பர் எ- று. [ாகூஎ]

இளைத்தபசுவைவளர்த்தவன் பலத்தையுணர்த்துகின்றார்

இளைத்தவாவினைக்கண்டுளிரங்கியே *
தளர்ச்சிதீர்க்கத்தருகெனவாங்கியே *
வளர்த்தவன்சிவலோகமருவியே *
புளத்துளோகையுறையவுறைவனே *

எ- து. உடம்பிளைத்தபசுக்களைப்பார்த்து மனமிரக்கமுற்றிவற்றின்மெலிவைத் தீர்க்கத்தாவென்றுகேட்டுவாங்கி யவற்றைவளர்த்தவன்சிவலோகத்தைச்சேர்ந்துள்ளத்துளுவகைபொருந்தவிருப்பன். எ- று. (ாகூஅ)

பசுவிற்பால்கறக்குமுறையையிரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

சேர்வராதிசிவபுரங்கன்றினை *
யாரமரதமிரண்டுமருத்தியே *
நீரின்வாய்நுரைநீக்கிக்கறந்திறைக் *
கீரநெஞ்சமோடாட்டினரொண்ணியே *

எ- து. கன்றுகட்கிரண்டுமாதம்வயிறுநிறையப்பால்குடிக்கும்படிசெய்துபின் புஅவற்றின்வாய்நுரைகளைநீராற்கழுவிப் பசுவின்பாலைக்கறந்துசிவபெருமானுக்குக்கருதியன்பானநெஞ்சத்துடனபிடேகித்தோர்சிவலோகத்திற்சேர்வர்கள். எ-று [ாகூக]

ஆரக்கன்றுமருந்திமுலையினைத்
தீரம்வேலைதெரிந்துகறந்தவர்
சேருமெல்லைமுன்சொன்னசிவபுரந்
தீருமெல்லையுமண்ணிதுதிண்ணமே

எ- து. கன்றுகளுந் தாய்முலைப்பாலைவயிறுநிறையக்குடித்துநீங்குங்காலந்தெ ரிந்தப்பாலைக்கறந்தவர்களுறுதியாகச்சேருமிடனியாதெனின்முற்கூறியசிவலோக மே சேர்க்குமிடமுமியாதெனினிம்மண்ணுலகே. எ- று [௩௭௫]

கன்றுக்குவயிறுநிறையவூட்டாதுபால்கறந்தவருறுந்தீங்கையிரண் டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

உற்றவாசையிற்கன்றுக்கொறுப்புறப்
பற்றியான்முலைப்பால்கொளும்பாதகர்
முற்றித்தீபுதரத்தினுமூளவே
பற்றுமின்றிநரகிற்படிவரே

எ- து. உள்ளத்திற்பொருந்திய வாசையினாற்கன்றுக்குப்பால்குறைவாகப்பசு வைப்பிடித்தப்பாலைக்கறந்துகொள்ளும்பாதகரானவர். வயிற்றினின்றும்பசியாகி யதீமிகுந்துமூளப்பற்றொன்றுமில்லையாகிநரகத்தின்முழுகுவர். எ- று. (௩௭௬)

தொலைந்தபின்னுந்தொடுத்தவுடலெலாங்
கலந்துநின்றுகடிம்பசிகாயவே
புலர்ந்துமானிடயோனியிலுற்பவித்
திலங்கடோறுமிரப்பரிளைப்பரே

எ- து. நரகத்தின்முழுகுதறொலைந்த பிற்காலத்து மப்பாவத்தாற் றொடுத்துவ ராநின்றசரீரங்களெல்லாங்கடுமையான பசிப்பிணிசேர்ந்துநின்றுவருத்தமுதலுல் வாடப்பின்புமானிடயோனியிற்பிறந்து வீடுகடோறு மிரப்பரிரந்தும்பிச்சைகிடை யாததினாலுடல்மெலிவர். எ- று (௩௭௭)

தூன்கொட்டிலிற்புகுஞ்சண்டாளர்தன்மையுணர்த்துகின்றார்

புலையரானினச்சாலையுட்புக்கிடி
லலைபில்காலமெரிநிரையக்குழி

தொலைவிலாத் துயர்தொக்குச்சுழல்வர்க
ளிலையவர்க்குப்பரிகாரமெண்ணிலே

எ- து. சண்டாளரானவர்கள் ஆனினங்களைக்கட்டுங்கொட்டிலுட்புகுந்தாலை வில்லாதகாலந்தொலைவில்லாததுன்பங்களுடன்கூடித்திக்குழிநரகத்திற்கலக்குவர்கள் கருதுங்காலவர்களுக்குப்பரிகாரங்களுமில்லை. எ- று. [ாஎஉ]

பகைவர்கவரும்பசுக்களைக்காப்பார்தன்மையுணர்த்துகின்றார்

ஆக்களைக்கவரின்னடையார்சென்று
காக்ககாக்கவரிதெனிற்றம்முயிர்
போக்கியும்புகழாக்கியபுண்ணியர்
தேக்குநீர்ச்சடையான்புரஞ்சேர்வரோ

எ- து. பகைவர்கள்வந்து பசுக்களைத்திருடவரின் விரைந்துகாத்தலைச்செய்க அஃதரிதாயிற்றங்களுயிரைக்கொடுத்தாகிலுங் கீர்த்தியையுண்டுபண்ணின புண்ணியர்கணிறைந்தகங்கையணிந்தசடாமகுடத்தையுடைய சிவபெருமானுலகிற்சேர்வர்கள். எ- று. (ாஎச)

புண்ணியபேதங்களின்வகையும்பலமும்பதினேழுசெய்யுளாலுணர்த்துகின்றார்

வேறு

இருவிதந்தருமநீதியெனவறிந்திடுகயார்க்கு
மொருவிதம்புலன்களைந்துமொடுக்கியுளரனையுன்னல்
பரிவுடன்பசுக்கடன்னைப்பசுபதிக்கன்பர்தம்மை
யுரிமையிற்புரிகபூசையெனுமிஃதொழிந்தவொன்றே

எ- து. யாவர்களுக்குந்தருமத்தின்முறைமையிரண்டுவிதமென்றறிதல்செய்க அவற்றுளைம்புலன்களையு முள்ளத்தொடுக்கிச் சிவபெருமானைத் தியானஞ்செய்தலொருவிதம், அன்புடனாக்களையும் பசுபதியினதடியார்களையும் விதிப்படிபூசைசெய்கவென்றுசொல்லுமிஃதுமற்றொருவிதம்- எ- று- (ாஎரு)

ஆதலாற்பசுக்கடன்னையரனடிக்கன்பர்தம்மைக்
காதலாற்புரிகபூசைகடுவினைகளையவெண்ணின்

தூவகடையவேண்டின்மிடியருமுடலினுலு
மேதெனுமியன்றதொன்றையியற்றுதல்கடனேயென்றும்

எ - து இவ்விதமாகுதலாற் கடுமையானதீவினைகளை நீக்கக்கருதினுலுமேலு லகைச்சேரவிரும்பினுலும் பசுக்களுக்குஞ் சிவனடியார்களுக்குமாதரவாற் பூசை செய்க. தரித்திரர்களுந்தங்களியாக்கையினுலும் யாதாயினும்பொருந்திய தொரு பொருளை யெக்காலமுஞ்செய்தல்கடன் எ - று (ரரஎசு)

புலையரேயேனுமீசன்பொலன்கழலடியிற்புந்தி
நிலையரேலவர்க்குப்பூசைநிகழ்த்துதனெறியேயென்றுந்
தலையரேயேனுமீசன்றுமனைத்தாளினேச
மிலரேனிலியற்றும்பூசைப்பலந்தருவாரேயாரே

எ - து சண்டாளராயினுஞ் சிவபெருமானதுபொன்னுற்செய்தவீரக்கழலை யணிந்ததிருவடியிற்புத்தியைநிறுத்துந்தன்மையராலுலவர்க்குப்பூசைசெய்தலொ ழுக்கேயென்றறிக. எக்காலமுமுதன் மையானசாதியர்களாயினும் அச்சிவபெரு மானது தாமரைபோன்ற பாதத்திலன்பிலராயிலவர்க்குச் செய்யும் பூசைப்பலத் தையாவர்தருவாரொருவருமின்று எ - று (ரரஎஎ)

திருப்பதிவணங்கவென்றுசென்றுறுஞ்சிவனேசர்க்கு
மருத்தியாற்கங்கையாதியாடிடநாடினுர்க்கு
மருத்துகவன்னபானமவரவர்க்குபயோகங்கள்
பொருத்துகவூனைப்போக்கிச்சிவபுரம்புகுவார்தாமே

எ - து ஊனுடலைநீக்கிச்சிவலோகத்திற்சேருமெண்ணமுடையார் திருப்பதி யாகிய சிவாலயங்களைவணங் கவேண்டுமென்றுசென்று பொருந்துஞ்சிவனடியா ர்களுக்குக்கங்கையாதி தீர்த்தங்களிலாசையுடன்முழுகச்செல்லுநர்க்கும் அமுது முதலியவுணவுகளைப்பொசிப்பித்தல் செய்க மற்றும்வேண்டும் பொருளும் பொரு ளுஞ்செய்க எ - று (ரரஎஅ)

வேறு

பிரமசாரியைப்பேரறமோம்பிடுங்
கிரகசாரியையூட்டியகேண்மையர்

விரவியேசிவலோகம்விரும்பிய
பரமபோகமனைத்தும்பயில்வரோ.

எ - து பிரமசரியவிரதமனுட்டிப்போனையும்பெரியதருமங் களைக்காத்தல் செய்யுமில்வாழ்வோனையும் அன்னமுலியவற்றையுண்கும்படிசெய் தவுரிமையையு டையவர்சிவலோகத்தைச்சேர்ந்துதாம்விரும்பியமேலானபோகங்களையெல்லாம் பொருந்துவர்கள் எ - று [ாஎக]

வனத்தின்வைகியமாதவரங்கையிற்
புனத்திற்காய்கனியாதிபுரிவொடுந்
தினக்கொடுத்தவர்சேர்ந்துசிவபுர
மனத்தில்வேண்டும்விமானத்தில்வாழ்வரோ

எ - து காட்டிற்றங்கியமாதவராகியவானப்பிரத்தரதழகியகையிற் காட்டி லுண்டான காய்கனியாதிகளை யன்பாய்பொசிக்கக் கொடுத்தவர்கள் சிவலோகத் தைச்சேர்ந்துமனத்தில் விரும்பும் விமானங்களில்வாழ்வர்கள் எ -று (ாஅய)

பரிந்துபாசுபதனையும்பண்புற
வருந்துவித்தவர்தாமுமரன்புரி
பொருந்திவாழ்வர்புரிவுடன்பிச்சையை
யருந்தமாவிரதர்க்களித்தாருமே

எ - து பாசுபதவேடத்தனையும் பண்பாகவிரும்பித் திருவமுதுண்ணும்படி செய்தவர்களும்மாவிரதவேடத்தருக்குவிரும்பித்திருவமுதுண்ணக்கொடுத்தவர்க ளுஞ்சிவலோகத்தைச்சேர்ந்துவாழ்வர்கள் எ - று பாசுபதம்—மாவிரதம் என்பன—அகச்சமையமாறினுளமைந்தன (ாஅக)

திகழும்வெண்பிறைச்செஞ்சடைத்தேவர்க்குக்
கமழக்கல்லவடமிடுவார்களை
மகிழவூட்டிடவல்லவர்தாமுமண்
புகழவேசிவலோகம்புகுவரோ

எ - து ஒளிவிடும்வெண்மதியையணிந்தசிவந்தசடையினையுடைய சிவபெரு மானுக்குவாசனையுண்டாகக்கல்லவடமிடுவோர்களையுள்ளமகிழும் வண்ணந்திருவ

முதுசெய்விக்கவல்லவர்களும் மண்ணுலகோர் புகழச்சிவலோகத்தைச்சேர்வர் எ று

[ாஅஉ]

அனகரானவருந்தவர்கைபுறக்
கனகபாத்திரங்காதலோடுந்தவ
ரனகலோகத்தமர்வர்கள்கற்பமுஞ்
சொனகனுங்கொருகோடிசெறியவே

எ - து பாவச்செய்கையற்ற வரியதவத்தர்கையிற் பொருந்தப்பொற்பாத்திரத்தையன்புடனேகொடுத்தவர்கள் பிதாவுடன்ஒருகோடிபொருந்துங் கற்பகாலம்வரையுஞ்சிவலோகத்திலிருப்பார்கள் எ - று

(ாஅங)

இத்தகைத்தபலத்தினையெய்துவர்
பத்தரங்கைப்பரிக்கப்பலாசுறு
பத்திரத்திற்புடகம்பரிவுற
வைத்தவுத்தமர்தாமுமகிழவே

எ - து சிவபத்தர்களதழகியகையிற்றுங் கப்பலாசவிலையிறுற் பாத்திரஞ்சமைத்தன்புடன்கொடுத்தவுத்தமர்கள்மேற் சொல்லுந்தகுதியான பலத்தினைமகிழ்ச்சியுறும்படிபெறுவர்கள் எ று

[ாஅச]

நாத்தழும்புறாதனைநாடொறு
மேத்துவார்கரத்தேந்திடத்தாமிர
பாத்திரங்கொடுத்தார்முனைப்பாவமுந்
தீர்த்துச்செஞ்சடையான்புரிசேர்வரே

எ - து நாள்தோறுநாவின்கட்டழும்பு பொருந்துவண்ணஞ்சிவபெருமானைத்துதிக்குமடியார்கையிலேந்தச்செப்புப்பாத்திரங்களைக்கொடுத்தவர்கள் முற்பிறப்பிலீட்டியபாவங்கணீங்கிச்சிவந்தசடையையுடைய வச்சிவபெருமானுலகிற்சேர்வர்கள் எ - று

[ாஅரு]

தெத்தியோதனம்பாத்திரஞ்சேர்த்தியே
யுத்தமத்தவர்கையினுதவினர்
சித்தகன்புரிவாழ்வர்விபுதர்க்கு
வைத்தகோடிவருடபுமவாய்க்கவே

எ - து தயிரன்னத்தைப்பாத்திரத்தில்வைத்துமுதன்மையான சிவனடியா ர்கையிற்கொடுத்தவர்கள் தேவர்க்குநியமித்தகோடிவருடம் பொருந்துங்காலம்வ ரையும் அச்சிவமெருமானுலகில்வாழ்வர்கள் எ - று (ாஅசு)

முற்றக்காலமுறையுறப்பாரதம் ❊
பற்றிப்பார்த்திவராய்ப்பசுபாசமு ❊
மற்றுச்சங்கரனேடமர்வாரவர் ❊
பெற்றபேறதுபேசப்படுவதே ❊

எ - து கோடிதேவவருடமுறைமையாகமுடியப்பாரதகண்டத்திலரசனுய் ப்பிறந்தாண்டுள்ளபோகம் பொசித்துப்பசுபாசமுங்கழன்றுசிவபெருமானுடன்கூ டிவாழ்வர்கள் அவர்கள்பெற்றபேறுபேசுந்தரமன்று எ - று [ாஅஎ]

இத்தகைத்தபலத்தினையெய்துவர் ❊
முத்தனைப்பசுபாசமுருக்கியைச் ❊
சித்தம்வைத்தவரங்கைச்செறித்தவர் ❊
சுத்ததோயகரகந்துலங்கவே ❊

எ - து முத்தனுயினுனைப்பசுவினது பாசங்களைக்கெடுக் கப்பட்டவனைச்சி ததத்திற்றியானித்தவடியார்களதழகியகையிற்றூயதானநீர்க்கமண்டலம்விளங்கக் கொடுத்தவர்களித்தன்மையானமுற்கூறியபலத்தைப்பெறுவர்கள் எ - று [ாஅஅ]

ஊட்டினுர்களுதவியதேதெனுங் ❊
காட்டுளாடிகழறங்கருத்தினு ❊
ணுடிணுைத்தமைநலியும்வினை ❊
யோட்டியேசிவலோகத்துறைவரே ❊

எ - து சுடலைக்கணுடுஞ்சிவபெருமானதுபாதங்களைத் தங்கள்கருத் தினுணி றுத்தினுர்க்குத்தம்பாலமைந்தபொருள்யாதொன்றுயினும்பொசிபபித்தார்கள் தங் களைவருத்துந்தீவினைகளையோட்டிச்சிவலோகத்துள்வாழ்வர்கள் எ - று [ாஅக]

மாதவர்க்குறவற்கலையீந்தவர் ❊
சீதவாரிதவாடையுஞ்சேர்த்தினர் ❊
கோதிலாவசினுதியுங்கோல்வளை ❊
மாதோர்பாகன்புரத்தினுள்வாழ்ந்தபின் ❊

எ - து மாதவத்தினர்க்குப்பொருந்தமரவுரிகொடுத்தவர்கள் குளிர்ச்சியினை யுடையமேகம் போன்றவெண்மையானவாடைகளையு மான்றோல்முதலியவைகளை யுத்தொகித்தவர்கள், திரண்டவளையிலையணிந் தவுமாதேவிபாகனான சிவபெருமா னுலகில்வாழ்வர்கள் மேற்கூறியபடிவாழ்ந்தபின்பு எ - று (௩௧௦)

நண்ணிப்பாரதநான்மறையாறங்க ❊
மெண்ணிப்பாசவிருளறத்தேசிகன் ❊
கண்ணினாற்கருதற்கரிதாகிய ❊
வுண்மைதன்னொடிரண்டறவொன்றுவார் ❊

எ - து பாரதகண்டத்திலுற்பவித்து நான்குவேதமும் ஆறுசாத் திரமுங்கற் றொழுகியாசிரியன தருட்கண்ணாலிருவினைப்பாசமயக்கங்கெட நினைத்தற்கருமை யானவுண்மைச்சிவத்துடனிரண்டறப்பொருந்துவர்கள் எ - று [௩௧௧]

மகாசிவலோக முதலியனவிருக்குந் தானமுமவற்
றையடைகுநர்தன்மைமுதலியனவும் பதினொருசெ
ய்யுளாலுணர்த்துகின்றார்

ஆக்களெல்லையறைந்தனுபாடணத் ❊
தாக்களைந்துமமலன்றிருமுடிக் ❊
காக்குமன்பர்க்கும்பூசையறைந்தினி ❊
மிக்குணச்சிவலோகம்விளம்புவாம் ❊

எ - து ஆக்களுறையுமெல்லையைச் சொல்லிப்பின்பு இனிமையானவசனத் தாலர்ச்சனைக்களிடத்துண்டாகியகௌவியங்களைந் தையும்நிருமலனது திருமுடிக்கு அபிடேகிக்கும் அடியார்களுக்குஞ்செய்யும்பூசையை ச்சொல்லியினிமேலானதன் மையையுடையமகாசிவலோகத்தைச்சொல்லுவாம் எ -று (௩௧௨)

ஐந்துபூதத்துமற்றகங்காரத்தும்
புத்திதன்னிலுமண்டம்பொருந்திடும்
முந்திச்சொன்னமுறையுறுமூலத்தும்
பந்தித்தெட்டுமுறையுறும்பாங்கினால்

எ - து பிருதிவிமுதலியபஞ்ச பூதத்திலுமதற்குமேலாகிய வகங்காரதத்து த்திலும் புத்திதத்துவத்திலும் அண்டமொன்றுக் கொன்றுவிரி வுயர்ச்சிபொருந்

தும், அஃதன்றிமுன்சொன்னமுறையிற்பிரகிருதித்துவத்திலும்அண்டங்கள்பொருந்தும், ஆகவிந்தப்பகுப்பிற் சேர்ந்து எட்டுவிதமான வண்டங்களும்பொருந்தும் எ- று. அவையாவனபூமியிற் காலாக்கினிமுதலானபுவனம்நூற்றெட்டு. அப்புவிஃஅமரேசன்முதலியகுய்யாட்டகரும். தேயுவில். அரிச்சந்திரன்முதலிய குய்யாட்டகரும். வாயுவில்தேயைமுதலியகுய்யாட்டகரும். ஆகாசத்தில் வத்திரபாதாதிமுதலியபவித்திராட்டகரும். அகங்காரதத்துவத்திற் சகலண்டாதி முதலியதானுவாட்டகரும். புத்தியிற்பைசாசியான அட்டகரும். பிரகிருதியில் அகிருதாதியானபுவனட்டகரும். ஆகத்தத்துவமெட்டிலும் புவனாதிபர்களும் நூற்றறுபத்துநால்வரிருப்பர்களிப்படியங்கங்கேயநேககோடியண்டங்களுண்டெனவறிக. (ாகூங)

பேசுமூலப்பிரகிருதிக்குளே
மூசுமண்டகடாகமுகட்டினுள் *
ஈசன்றேவியிளையனரியயன் *
வாசதேசமோராைந்தும்வகுப்பமே *

எ - து அசுத்தமாயைகாரணமாகிய மூலப்பிரகிருதித் துவத்தில்நெருங்கியிருக்கப்படாநின்றஅண்டகடாக முகட்டையடுத்து அதனுள் பிரமன்முதவியவைவர்வசிக்கும்புரத்தைமேற்சொல்வாம் -எ று [ாகச]

காடவண்டகடாகமுகட்டினுட்
கூடும்வேதற்குக்கோயிலதற்குமேற் *
கூடுமாலுக்குங்கோயிலதற்குமேற் *
கூடும்வென்றிக்குமரற்குக்கோயிலே *

எ- து அந்தப்பிரகிருதித்துவத்திற்றிடமாயவண்டகடாகத்தைத்தீண்டியிருக்கிறஅகிருதைமுதலியபுவனட்டகத்துக்குமேற்பதுமராகநிறம்போன்றபிரமலோகமிருக்கும், அதற்குமேல்மாயனுக்கிந்திரநீலநிறம்போன்று மகத்தாகியபோக ங்களினாலலங்கரிக்கப்பட்டிருக்கிறவிட்டுணுலோகமிருக்கும், அதற்குமேல்வெற்றிப்பாட்டையுடையகுமாரசுவாமிக்குமுத்தின்பிரபைபோன்று விசிட்டமான போகங்களுடனுங்கூடியிருக்கிறகௌமாரபுரியிருக்கும் எ.று (ாகரு)

அகற்குமேலுமையாள்புரமற்புத
மகற்குமேற்சிவலோகமென்றாய்கவே
மகற்குறும்வளம்வாக்கினடங்கிடா
மகற்குப்புக்கவர்மீள்பவரல்லரே

ப - து. அர்த்தக்கௌமாரபுரிக்குமேலுமாதேவியினுடையபுரிநாலுவிதமான ஆக்கினைத்தடன்பொருந்தும்அதற்குமேற்கோடியாதித்தியப்பிரகாசம் போன்றுஅளவிடப்படாதவளத்தையுமுடைத்தாயுவமையில்லாததாய்அரியவிரணியகெற்பன் அட்டவசுக்கள்உருத்திராகள்ஆதித்தியர்முதலாயினுர்களாலேசேவிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றபரமேசுரனெழுந்தருளியிருக்கு மகாசிவலோகம்பொருந்தும்,அந்தச் சிவலோகத்தின்வளத்தையளவிட்டுரைக்கப்படாதுஅந்தப்பிர கிருதிச்சிவலோகத்தினுலேயடைந்தவர்கள்மீளார்கள் எ று

சிவதத்துவஞானநிட்டையையனுட்டித்திருந்தவர்கள் உமாதேவியுலகத்திலே பதினுயிரக்கற்பமாண்டங் குள்ளபோகம்பொசித்துத் தொலைந்தவாறே பிருதிவிச்சிவலோகம் வந்து பின்புகிரமத்தில் வந்து பூமியையடைந்து சிவயோகியாயந்தச்சரீரமொழிந்தவாறேமேலைச்சிவலோ கத்திலுண்டான போகம் பொசித்திருப்பர்களெனவறிக

(ாகூ)

விதித்துவாட்கையைமெய்யுணர்ந்தையமுங்
கொடுக்குமிற்றுறுங்கொண்டுண்டுகோவண
முடுத்துப்பாரிலுறவுபகையிவை
கெடுத்தகேள்வியரவ்விடங்கிட்டுவார்

ப- து. இல்லறவாழ்க்கையைநீங்கி மெய்ப்பொருளையுணர்ந்தில்லங்கடோறுங் கொடுக்கும்பிக்சையையுமேற்றுண்டு கோவணத்தையுடுத்துப் பூமிக்கணுள்ளபொருள்களிலுறவையும் பகையையுங்கெடுத்த கேள்வியினையுடையரேஅச்சிவலோகத்தைப்பொருந்திவாழ்வர்கள். எ- று. தேற்றேகாரம்விகாரத்தாற்றொக்கது. (ாகூஎ)

முற்றக்காலமுமுன்னுடல்பின்னிடப்
பெற்றமேற்பதம்பெற்றதுமற்றிட
வெற்றிப்பாசவிருள்வலியிடறத்
தற்றுவார்கள்சொரூபசுகோதையம்

எ- து. அந்தப்பிரகிருதிச்சிவலோகத்திலிருந்துமுந்தினபிரளையமளவாகவான்டுள்ளபோகங்களைத்திளைத்துஅந்தப்பிரகிருதிசம்பந்தமானசரீரத்தைவிட்டுமேற்பதமானசுத்ததத்துவபுவனங்களை யடைந்திருந்து ஆண்டுள்ள போகம்பொசித்துத் தொலைந்தவாறேமகாசங்கார காலத்திலேவயிந்தவபாசமாகிய தேகத்தையும்விட்டுவெற்றிப்பாடுடையவாணவாதிகளின் சத்திகெடப்பரமேசுரன்றிருக்கண்சாத்தியருளமுத்திபதமாகிய சிவனுடையசீபாதத்தை யடைந்திருந்துதங்களிடத்துண்டாகியசிவானந்தானுபூதியிற்றிளைப்பர்கள். எ- று.

சித்தியார்சுபக்ஷம்எட்டாஞ்சூத்திரம். கவி. உரு

தானம்யாகந்தீர்த்தமாச்சிரமந்தவங்கள்சாந்திவிரதங்கன்ம யோகங்கள்சரித்தோரீனமிலாச்சுவர்க்கம்பெற்றிமைப்பளவின் மீள்வரீசன்யோகக்கிரியாசரிதையினின்முயன்றோ, ரூனமிலாமுத்திபதம்பெற் றுலகமெல்லா மொடுங்கும்போதரன்முனிலாதொளியினுற்பவித்து, ஞானநெறியடைந்திடுவர்சிவனையங்குநாதனேமுன்னிற்கினனுகுவர் நற்றாளே. எனவறிக

திருச்சிரபுரம் - பண் - நட்டராகம் - சம்பந்தர்

கோலமாகரியுரித்தவாரவொடுமேனக் கொம்பிளவாமை
சாலப்பூண்டுதண்மதியதுசூடியசங்கரனார்தம்மைப்
போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினைநில்லாவே

என்னும்மகாவாக்கியத்தானுங்காண்க- (ாகஅ)

ஈசனேவவிசைத்தவியற்பொருட் *
டேசுணர்ந்தவருஞ்செறிவாரங்க *
வாசகத்தைமுன்சொன்னவடிவுற *
வாசைமுற்றுமறுத்தவளவிலே *

எ- து- எல்லாவாசைகளையுங்கெடுத்தகாலத்துரித்தாகுமிவையென்றுசிவபெருமானருளிச்செய்யஅதனால்யான்சொல்லியஅவ்வாகமப்பொருட்டெளிவையறிந்தவரும்அவ்வாகமவாக்கியத்தின்முன்சொல்லியசாரூபம்பொருந்தஅச்சிவலோகத்தில்வாழ்வார்கள். எ- று. ஐகாரம்- சாரியை. (ாகக)

சிறந்ததேசத்துச்சித்திரைமாதமுன் *
பிறந்தவாரத்துட்பெற்றுச்சிரத்தையு *

நிறைந்தநெய்யினைநின்மலர்க்காட்டிமுன் *
கறந்தபான்முதன்மற்றுங்களிப்பொடே *

எ - து- மூர்த்திவிசேடமுதலியமுச்சிறப்பும்பெற்றதலங்களிற்சித்திரைமாதம் ஆதிவாரத்தன்றன்பையுமுள்ளத்தமைத்துக்களிப்புடனின்மலனைசிவபெருமானுக்குமுன்கறந்தபால்வாசனைநிறைந்தநெய்முதலியகௌவியங்களையுமற்றுந்திரவியங்களையும்அபிடேகித்து. - எ-று (உா)

செய்துமற்றவினைகளுஞ்செய்தபின் *
துய்யபாயதமாதியசொன்றியு *
மும்யவாயிரம்பத்தரையூட்டியுண் *
மையறிர்ந்தபதின்மரும்வாய்க்கவே *

எ - து- மற்றவுபசாரக்கிரியைகளையுஞ்செய்ததற்குப்பின்புள்ளத்தின்மயக்கமீங்கினவாயிரத்துப்பத்தடியார்களுக்குமாட்சிமைபொருந்தப்பரிசுத்தமான பாயசமுதலியவன்னங்களையும்படைத்தருத்தி எ - று- (உாக)

அற்றைவாரத்தரனுக்கோரரயிரம் *
பெற்றம்பாதிகருவுட்பிறங்கவே *
வெற்றிவெள்விடைபத்தொடும்விட்டவர் *
பற்றுவாரச்சிவபுரம்பாங்கொடே *

எ - து - அந்தவாதிவாரத்தன்றுவெற்றியினையுடையவெண்மையானவானேறு பத்துடனாயிரம்பசுக்களைப்பாதிக்கருப்பம்வயிற்றுள்விளங்கும்படிசிவபெருமானுக்குத்தானங்கொடுத்தவர்கள்உரிமையாகச்சிவலோகத்தைப்பெறுவார்கள் எ - று(

ஆக்களின்மகிமையுணர்த்துகிறார்

ஆக்கண்முத்தியடைவிக்குங்காரண *
மாக்களாதலினாற்றுணையாயின *
வாக்களாக்கைபினையுமறுத்திடு *
மாக்களைபிருணோய்க்குமவுடதம் *

எ - து - பசுக்களைமுத்தியைச்சேரும்படிசெய்யுங்காரணமாகும்பசுக்களைபி

றந்திறக்குமு ட.லினையைக்கெடுத்தல்செ ய்யும்பசுக்களேமயக்கத்தால்வருமிருவி னைநோய்ககுமருந்தாகுமாதலினப்பசுக்களேசிற்றுயிர்க்குநற்றுணையாயின. எ-று()

இதற்குப்பினிதனைச்சொன்னேமென்றுணர்த்துகிறார்

பத்தர்காருகபத்தியர்தாங்களு *
முத்தியெய்தும்வழியுமொழிந்தனஞ் *
சித்தந்தனனைச்சிறந்தபொருடனில் *
வைத்தசித்தர்பலத்தைவகுத்தபின் *

எ - து - பத்தியையுடையவடியார்களுங்காருகபத்தியமாகியவேதாக்கினியை யுடை யவந்தணருஞ்சித்தத்தைச்சிறப்பானபரம்பொருளிடத்துவைத்தசித்தர்களு ம்பொருந்தும்பலத்தைவகுத்துச்சொல்லியபின்புமுத்தியைச்சேரும்வழியுஞ்சொ ன்னேம் எ - று- (உாச)

ஞானிகள்ஒழுக்கந்தவறினுமிழுக்குறுரொன்றுணர்த்துகிறார்

மெய்யுணர்ந்தசிவாகமவேதகர் *
கையிழந்திடிற்போகக்கருத்தினு *
லையமின்றியவருமடைவரங் *
குய்வர்மேலையுலகமொடுங்குநாள் *

எ-து. சிவாகமங்களைக் கற்றுண்மையறிந்த ஞானிக ளொருகாற் போகத்திலிச் சைவைத்தகருத்தினு லொழுக்கந்தவறிடிற் சந்தேகமில்லாம லந்த ஞானிகளுமப் போகத்தையனுபவிப்பர்கள். அதுதொலையுநாண்மேலைச்சிவலோகத்தைப்பொருந் தியுய்வர்கள். எ-று (உாரு)

ஒருபகற்பொழுதுமெய்ப்பொருளைத்தியானஞ்செய்தோர்பலத்தை
யிரண்டுசெய்யுளா லுணர்த்துகின்றார்

உன்னினுருமொருபகலுண்மையை *
யன்னையாளும்புரத்தையடைந்ததன் *
மன்னுபோகவிதத்தைமருவியே *
துன்னுகற்பவபுதந்தொலையவே *

எ- து. ஒருநாட்பகற்பொழுது மெய்ப்பொருளைத் தியானஞ்செய்தலரு முலக மாதாவாண்டருளுஞ்சத்தியுலகத்தைச்சேர்ந்த தனதுபோகப்பகுப்பையெல்லாம் பதினாயிரம் பிரமகற்பம் வரையும் பொசித்துத் தொலைந்து போகப் பின்பு. எ- று. [உ.ாக.]

குமரன்வாழ்திருக்கோயிறுடங்கியே
யமர்வர்பொன்னசலாந்தத்தமர்ந்தபி
னிமையத்தென்றிசைப்பாரதமெய்துவர்
தமையுணர்ந்தமலன்பதஞ்சாரவே

எ- து. குமரக்கடவுள்வாழுந்திருக்கோயிலாகியகந்தவுலகமுதல்மேருவரையந்தமுண்டானபோகங்களையங்கங்கமர்ந்துபொசித்தபின்புதம்மையறிந்துநின்மலனுனதலைவனதுபதங்களைச்சார்ந்து பொருந்தவிமயகிரிக்குத் தென்றிசையிலுள்ள பாரதகண்டத்திற்பிறப்பர். எ- று. [உ.ாஎ]

இந்நூலைப்படித்தவரும் அவருடன்கூடினவரும்பெறும்பலத்தையி
ரண்டுசெய்யுளாலுணர்த்துகின்றார்

கருமயோகத்தைக்கற்பனைநீங்கிய
பரமயோகத்தைப்பாவவிதத்தினைத்
தருமபேதத்தைப்பேற்றினைச்சாற்றுமித்
தருமவுத்தரங்கற்றவர்தாமுமே

எ- து. கருமயோகங்களையுங் கற்பனையில்லாதபரமயோகங்களையும்பாவத்திறங்களையும் புண்ணியத்திறங்களையும் அவற்றின் பலன்களையுங் கூறுமிச்சிவதருமோத்தரநூலைப் படித்தவர்களும். எ- று. (உ.ாஅ)

விட்டு முன்னையதீயவினையினை
யட்டமூர்த்தியமநமந்தப்புரத்
திட்டபோகவிதத்தொடிருப்பர்க
ளொட்டினருமவருடனுண்மையே

எ- து. அவர்களுடன்கூடினவர்களும் மெய்யாகமுற்பிறப்புகடோறுமீட்டிவருதீவினைகளைக்கெடுத்தெட்டுருவாகி யெழுந்தருளுஞ் சிவபெருமானதருளிய வுலகத்தமைத்தபோகப்பகுப்புடன்வாழ்ந்திருப்பர்கள். எ- று (உ.ாக)

இந்நூல்விதியையனுட்டித்தோர்முதலியர்பலத்தையிரண்டுசெய்யு
ளாலுணர்த்துகின்றார்

இந்தநூன்முறைநீதியியற்றின *
ரந்தநீதிதனையறிவித்தவர் *
சிந்தைகூர்தரச்செய்வித்ததெள்ளிய *
ரிந்தமூவகையாருமங்கெய்தியே *

எ- து. இச்சிவதருமோத்தரநூலிற்கூறியபடி நீதிகளைச்செய்யுஞ் சன்மார்க்கரு மந்நீதிகளையுலகிலுள்ளோருக்கறிவித்தபுலவரும்அதிற்புத்திமிகுந்துபுகும்படிசெய்வித்ததெள்ளியவுணர்வினையுடையவாசிரியருமாகியமுப்பகுப்பினரும்அச்சிவலோகத்திற்சேர்ந்து. எ- று. [உ௩௪]

அருந்தியங்குளபோகமனைத்தையும் *
பிரிந்திடாதுறப்பேணியசுற்றமும் *
பரிந்தபாசங்கள்பாற்றித்திளைப்பர்க *
ளொருங்குநாளுலகின்புதஞ்சத்தியுள் *

எ- து. விரும்பியசுற்றத்தார்களுந் தன்னைப்பிரியாமற்பொருந்தவச்சிவலோகத்திலுள்ளவெல்லாப்போகங்களையும் பொசித்துச் சுமந்தபாசங்களைக்கெடுத்தெல்லாவுலகமுமொருங்குசேருநாட்சிவசத்தியிலுண்டானபரைதெரிசனமாகியவின்பத்தையனுபவிப்பர். எ- று. (உ௩௫)

இந்நூலைச்சிவதீர்த்தக்கரையிற் படிப்பித்தோர் பலத்தையுணர்த்து
கின்றார்

அருத்தமீந்துமமலன்றிருவேலைத் *
திருக்குளத்துமொய்த்தீர்த்தத்தினொடொறுந் *
தெரித்தவிந்தச்சிவதருமோத்தரம் *
விரிப்பிப்பார்களுமுற்பலமேவுவார் *

எ- து. பொன்களைக்கொடுத்துநிருமலனதுசிவாலயத்திருவெல்லைக்குளிருக்குந்திருக்குளத்தழகார்ந்த கரையிற்றினந்தோறும்யாந்தெரிவித்தவிச்சிவதருமோத்தரநூலைவிரித்தருத்தஞ்சொல்லும்படிசெய்விப்பவர்களுமுற்கூறியபலத்தைப்பொ

ருக்குவர்கள். எ. று. அருத்தமீந்துமென்றவும்மை - நிலமுதலியவற்றைக் கொடுத்தமென்க. (உ ா ய உ)

இந்நூல்வாசித்துமுடிக்குந்தன்மையை நான்குசெய்யுளாலுணர்த்துகின்றார்

அந்தந்தன்னிலவனிதலத்துக்கு *
நந்தநன்மைகணுடிநவிற்றுக *
பந்தபாசம்பறிக்கும்பரமனைச் *
சிந்தைசெய்கதுதிவிதஞ்செப்பியே *

எ- து. இந்நூல்முடிவுபெறுநாளிற்பூமியிலுள்ளார்க்குமங்கலங்கண்மேன்மேலும்பெருகத் தெரிந்துசெய்க. அதுவன்றித் தொன்றுதொட்டடர்ந்த பாசங்களைக் கெடுக்குஞ்சிவபெருமானைப்பலவிதமானதுதிகளைக் கூறித்தியானஞ்செய்க. எ- று. [உ ா ய ங]

பேசுநூலியன்முற்றுதல்பெற்றபின் *
கோசந்தன்னையுமுன்சொன்னகொள்கையிற் *
பூசைசாலப்புரிகபரிவுடன் *
வாசமாமலராதிமலியவே *

எ- து. யாவரும்புகழுமிச்சிவதருமோத்தரநூலினியல்கண்முடிவுபெற்றபின்பந்தலையுமுன்சிவஞானதானவியலிற்கூறியவிதிப்படி மணம்நிறைந்தமலர்மாலையாதிகள்பெருகும்படி பூசையைச் சிறப்புமிகச்செய்க. எ- று. [உ ா ய ச]

தேசனுக்குமெய்த்தேசிகற்குமியல் *
வாசகற்குமறையறைவார்கட்கு *
மீசனேசர்க்குங்கால்கணிலார்கட்கும் *
பூசைமுன்சொன்முறையிற்புரிகவே *

எ- து. ஞானவொளியாகியசிவபெருமானுக்கு முண்மையையுபதேசஞ்செய்யுமாசிரியனுக்குமிந்நூலிற்பொருளைச் சொல்லும் வாக்கினையுடையோனுக்கும்வேதமுணர்ந்தவந்தணர்க்குஞ்சிவனடியார்கட்குங் கால்கண்முதலியவுறுப்பில்லார்கட்குமிந்நூல் முடிவுறுங் கான்முன் சொன்ன விதிப்படி பூசையைச் செய்க. எ- று. [உ ா ய ரு]

இந்தவாறுபுரியிலிடரிலை *
நந்துநன்மைகளுடொறுநாடெலா *
மந்தராழ்வருயர்வர்மதியுளா *
ரந்தமேலுலகாள்கையுமாகுமே *

எ- து. இத்தன்மையாகப்பூசைசெய்யிற் றுன்பங்களில்லை யெல்லாநாட்டின்கண்ணுந்தினந்தோறுமங்களங்கள்பெருகுங் கூரியபுத்தியில்லார் குறைவர்கூரியபுத்தியுள்ளாருயர்வர்அதுவன்றிஅந்தமேலுலகையாளுந்தன்மையும்பொருந்தும். எ று [உாயகூ]

ஆகமநூன்முதலியவற்றைப்பூசிப்பார் பூசியாதார்பலத்தையிரண்டுசெய்யுளாலுணர்த்து கின்றார்

புத்தகத்தினைப்பூசைபுரிகிலார் *
சித்தங்கூர்தரத்தேசிகன்றன்னையு *
மத்தகைப்பலநீங்குவதன்றியுங் *
கொத்தைபோனிரையக்குழிகூடுவார் *

எ- து. சித்தத்துஅன்புமிகுதியாகச் சிவாகம நூலினையு மாசாரியனையும்பூசைசெய்யாதவர்கண் மேற்கூறிய தகுதியான பலங்களைநீங்குவர்கள். அஃதன்றியும்பழுதானபாவிகளைப்போல நரகக்குழியினிடத்தும்வீழ்வர்கள். எ- று. உம்மைவிகாரத்தாற்றொக்கது. [உாயஎ]

ஆதலாற்புத்தகாதியருச்சனை *
காதலாற்செய்ககாமுறுவார்பலம் *
வேதனுநரகக்குழிவேண்டிலா *
ரேதெனுந்தமசத்திக்கிசையவே *

எ- து. இத்தன்மையானதான்மேலானபலன்களைவிரும்புவார்களுந்துன்பமிகுநரகக்குழியைவிரும்பாதவர்களுந் தங்கள்சத்திக்குப் பொருந்தும் வகையெவ்விதமாயினுமாகமநூலாதிகட்கருச்சனையையாசையுடன்செய்க. எ- று. [உாயஅ]

ஆகமநூலையெழுதுந்தன்மையுணர்த்துகிறார்

வேறு

அக்கரமொன்றினுக்கொன் றுடகப்பணம்வையாரியன்மு *
னக்கரமொன்றினுக்குமிடியாளன்செம்பாங்காசொன் *
றக்கரமொன்றினுக்கவிழொன்றருத்துவிக்கவாசையிலா *
னிக்கணக்குத்தமம்பதத்துக்கிடைகடை பாட்டினுக்கியற்றின் *

எ-து இந்தஆகமநூலையெழுதவேண்டிற் பொருளுடையோனிதையெழுதும்வல்ல மையுடையநல்லோர்பாலோரொழுத்துக்கொரு பொற்காசாகவும் வறிஞராணோ ரொழுத்துக்கொருசெம்புக்காசாகவும்விருப்பற்றமெய்ஞ்ஞானியோரொழுத்துக்கோ ரவிழாகவுங்கொடுத்தும்பொசிப்பித்துமெழுதுக விக்கணக்காற்செய்தலுத்தமம்அ ஃதன்றியிந்நூலிலொருபதத்துக்கிவ்விதங்கொடுத்தெழுதல் மத்திமம்அஃதன்றியிந் நூற்கவியொன்றுக்கிவ்விதங்கொடுத்தெழுதலதமமாகும் எ று [உ ாஅக]

ஆசிரியன்ஆகமநூலையறிவிக்குந் தன்மையுமாணாக்கன் கேட்குந்தன்மையுமுணர்த்துகின்றார்

ஆரியனும்பலன்கருதாதறிவிக்கவாராயுங் *
கூரியனுமிதற்கிதுகைம்மாறென்றுகுறியற்க *
மாரியினுக்குண்டோகைம்மாறிந்தவையகத்து *
ளாரியனுக்கடிமையலாலாடகங்கைம்மாறுமோ *

எ து - ஆசாரியனுமொருபலத்தைப்பெறவேண்டுமென்றுநினையாது சீடனுக் குஆகமநூலையுபதேசஞ்செய்க அவ்வுபதேசத்தை யாராய்ந்துகேட்குங் கூரியபுத்தி யையுடையானுமிவ்வுபதேசத்துக்கிப்பொருளேகைம்மாறென்றுகுறித்தலையொழிக மேகத்துக்குக்கைம்மாறிப்பூமிக்குளுண்டோவதுபோலவாசாரியனுக்கடிமையாதல ன்றிப்பொன்னுதவுதல்கைம்மாறுகுமோவாகாது எ று (உ ாஉ ய)

இந்நூலியலின்பகுப்புணர்த்துகின்றார்

வேறு

பரமதருமமுபதேசம்பஞ்சமகநற்பலகரணந் *
தருமங்கரிசுதற்பலங்கள்சரதமறுமைசேடவிதம் *
பரமயோகம்பரிகாரம்பசுக்கணிலவும்பதமுமென *
விருமூன்றிருமூன்றியலாகித்தருமோத்தரநூலிலங்கிடுமே *

எ து பரமதருமாதியியல்சிவஞானதானவியல்.ஐவகையாகவியல்-பல விசிட்ட கா ரணவியல்.சிவதருமவியல்.பாவவியல்.சுவர்க்கநாகவியல்.சென்னமரண வியல்.சுவர்க்கநரகசேடவியல்.சிவஞானயோகவியல்.பரிகாரவியல்.கோபுரவியல்.என்று சொல்லும்பன்னிரண்டியலுடன்பொருந்தியிச்சிவதருமோத்தரமென்னுமாகமம்விளங்காநிற்கும் எ று [உாஉக]

முடிந்ததுமுடித்தலென்னுந்தந்திரவுத்தியாலுணர்த்துகின்றார்

வேறு

என்றுசுரபிக்குமுறுமெல்லையுமிசைத்தான் *
குன்றுவர்மடக்கொடிதனக்கருள்கொடுத்தான் *
வென்றுபுலனைந்தினையும்வெய்யவினைநைய *
நின்றமுனியன்றுணரநிற்குணனினைந்தெ *

எ து வெளி (உாஉஉ)

சிவத்துதிநான்குசெய்யுளாலுணர்த்துகிறார்

வேறு

மேலையாரிடர்போக்கியவில்லனேவிரும்புவாருளமேவியவில்லனே *
காலனுருயிர்போக்கியகாலனேகளைந்துகாப்புலகாக்கியகாலனே *
யாலநீழலறஞ்சொனவாதியேயன்றயன்சிரமொன்றற வாதியே *
சூலிநீலியொடாடியசோதியேதுடர்ந்தவெங்கள்பிறப்பறச்சோதியே *

எ - து அந்தரத்தின்மேலுலவுந்திரிபுராதிகளைக்கெடுத்தமேருவாகிய வில்லையுடையவனேதன்னைவிரும்புமடியார்களுள்ளத்தையெப்பொழுதுந்தங்கியதிருக்கோயிலாகவுடையவனே காலனதுயிரைக்கெடுத்தபாதத்தையுடையவனே உலகத்தைக்

காத்துச்சங்கரித்துமறத்துமுண்டுபண்ணுகின்றவனாகிய [illegible],
லானிழற்கீழிருந்துசனகராதியர்க்கறத்தையுபதேசித்தவனாகிய [illegible]
ன்சிரமைந்தினுளொன்றறும்படியவருத்தஞ்செய்தவனாகிய [illegible]
நீலநிறத்தையுடையவளாகியுமிருக்கிறவளாகிய [illegible]
டர்ச்சியாகவந்தவெங்கள்பிறப்பறும்படிசோதிப்பாயாக. எ று

சங்கைதீர்த்திடவானவர்தம்மைமயிலைகையிலையவருக்கிய [illegible]
யங்கியாகியளத்தற்கரியனேயறுக்கவொண்ணாதுமெய்ப்பொருளானவனே [illegible]
பங்கயத்தயன்பாம்பணைப்பள்ளியான்பாதுகாவலனாகிய [illegible]
னெங்கள்பாசமிருக்கும்விருப்பமெயாங்கவர்பேரன்பாலெங்களுக்கு [illegible]

எ-து தேவர்கடங்களைப்பொருந்தமச்சத்தைத்தீர்த்திடவுமாகிய [illegible]
முண்டதுஅந்தவிடமே.அழகுருவாகியயாதுமாகியமயிலையொத்தவளாகிய [illegible]
மாக்கள்செய்யுங்கன்மங்களுக்குச்சான்றாகிய [illegible]
மனும்பாம்பணையிற்பள்ளி கொள்ளுமாறும்பலவிடங்களிலுமெழுந்தருளி [illegible]
ச்சிராப்பள்ளியென்னுந்திருப்பதியிலிருக்கிறவனாகிய [illegible]
களைக்கெடுக்கும்விருப்பமுணக்குடைமையிலிருக்கிறவனாகிய [illegible]
ம்விளங்கவிருப்போம் எ று

எனக்குண்மாசையிரித்தவியலனேயியலுமெய்ப்பொருளானவனே [illegible]
மனத்தினுலுமறிக்கவரியனேமயக்கமன்பர்க்கரிக்குமரியனே [illegible]
தனக்குத்தானினையானதமியனேசரிதனையுதத்துவமுமிலனே [illegible]
பனைக்கையானையுரித்தபலத்தனேபாதுகாவலனாகிய [illegible]

எ-து எனக்குள்ளிருந்தகுற்றத்தையோட்டினவனாகிய [illegible]
முபமேயமுமானபொருள்விரிவையுடையவனாகிய [illegible]
யானவனே,அன்பர்களதுமயக்கமாகியவானவலிருளைக்கெடுக்குஞ்சூரியனாகிய [illegible]
னக்குத்தானே யொப்பானவொருவனினையொத்தவனாகிய [illegible]
களைப்போக்கிவறுமைப்பயத்தினையனே பனைபோன்ற [illegible]
பையுரித்தவலியையுடையவனே,திருப்பாதுகாவலனாகிய [illegible]
ந்திருவம்பலத்தையுடையவனே எ று - [illegible]
யென்றுபாடமாயின் அடியார்களுக்கு [illegible]
னவழகியசாயுச்சியபலத்தையுடையவனென்று [illegible]

மாலைமாற்று

வேறு

காலமேகோலமே
சீலமேபாலமே *
மேலபாமேலசீ *
மேலகோமேலகா *
*

எ - து முக்காலமென்னும்பொருளே, அழகென்னும் பொருளே, முக்குணமென்னும்பொருளே, மழுவைக்கரத்திலேந்தும்பொருளே, அன்பான வுள்ளத்தின் மேல்வாழும்பொருளே, உபநிடதமாகியபாவின்மேல்விளங்கும்பொருளே, யெல்லாச்சிறப்புகளின்மேலுஞ்சிறப்பான பொருளே இடபத்தின் மேலெழுந்தருளும் பொருளே, என்னைக்காத்தல்செய் வாயாக எ - று (உாஉசு)

குமரன்றுதியுணர்த்துகிறார்

வேறு

இருவினையாலேயிருநிதியூர்பேரினமேயோ
மருவலர்மாநோய்மரணமேனுவேவருபேதம் *
பரிபுரபாதாபனுவலவேதாபரனேயோ *
சரவணசாதாவறுமுகநாதாதணிநீயே *
*

எ - து சிலம்பணிந்தபாதங்களையுடையவனே, ஆகமவேதங்களை யுடையவனே, பரனே, சரவணப்பொய்கையிற் பிறந்தவனே, ஆறுமுகத்தை யுடைய நாதனே, இருவினைகளாற்பொருந்திப்பெருஞ்செல்வங்களென்றும் ஊனென்றும் பெயரென்றும் இனங்களென்றும் பகைவனென்றும் பெரியநோயென்றும் மரணமென்றும் வருகின்ற பேதங்களை நீயேகெடுப்பாயாக எ - று

ஏகாரங்கள் - இசைநிறை (உாஉஎ)

அகஸ்த்தியர்துதியுணர்த்துகின்றார்

விதிதிகழ்வேதாகமவுணர்வாயேவினைதீரக் *
கதமுகமாமோகமுமுகமாயாகருவேயோ *
மதகரிபேழ்வாய்வலிமுகமாமாமரைவாழும் *
பொதிமலைமீதேபுரிமுனிதாளேபுகழ்வாமே *

எ - து மதத்தையுடையயானையும் பிளந்தவாயையுடைய குரங்குங் காட்டுப்பசுவுமரைமிருகமும் வாழாநின்றபொதியமலையிலெழுந்தருளியிருந்து தவஞ்செய்யும் அகத்தியமுனிவனதுபாதத்தை யிருவினைதீரவுங் கோபமொழியவும் பெரியமோகமுமாயாகருவுங்கெடவும் விதிவிலக்குள்விளங்கும்வேதாகமத்தினறிவுடனே துதித்தல்செய்வாம் எ - று

ஏகாரவோகாரங்கள் இசைநிறை (உாஉஅ)

பன்னிரண்டாவதுகோபுரவியல் முற்றும்.

நம்பர்	இயலின்பெயர்	கவியின்-எண்ணம்
க வது	பரமதருமாதியியல்	ரு உ
உ வது	சிவஞானதானவியல்	அங
ங வது	ஐவகையாகவியல்	ங ச
ச வது	பலவிசிட்டகாரணவியல்	சூக
ரு வது	சிவதருமவியல்	ங ரு
சூ வது	பாவவியல்	ாஎ
எ வது	சுவர்க்கநரகவியல்	உாஉச
அ வது	சென்னமரணவியல்	ாக
கூ வது	சுவர்க்கநரகசேடவியல்	சசூ
௰ வது	சிவஞானயோகவியல்	ாஉஅ
௰க வது	பரிகாரவியல்	ாசூ
௰உ வது	கோபுரவியல்	உாஉஅ
ஆக	இயல் ௰உக்கு	கவி சூஉாஅ

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௩	௪	கபபாலானை	கப்பாலானை
௪	உஅ	செய்ய	செய்ய
எ	உஎ	வரனெ	வரனே
௯	உஎ	பாதங்	பாதஞ்
௰௧	௰எ	பதங்ளாலே	பதங்களாலே
௰உ	௰௫	கொண்டாரோன்	கொண்டாரோ
உக	உ	யியமபும்	யியம்பும்
"	௯	மேற	மேற்
உ௩	உஎ	முடிநதது	முடிந்தது
உ௪	எ	களையுஞ	களையுஞ்
"	உஅ	காயந்து	காய்ந்து
௩௧	௰அ	அப்படிபபட்ட	அப்படிப்பட்ட
௩௩	உ	எகாரம்	ஏகாரம்
"	உ௯	தெசிகனை	தேசிகனை
௩௪	௰௯	வாயக்க	வாய்க்க
௩௫	உஅ	எனபன	என்பன
௩அ	௪	னெனபாவி	னெனப்பாவி
௪௰	எ	நாடோரும்	நாடோறும்
"	௰எ	மண்டத்திற்	மண்டபத்திற்
௪௩	௩	சிவஞாத்தை	சிவஞானத்தை
"	உக	செவித்த	சேவித்த
௪௪	உ௫	சேமஞ	சேமஞ்
"	உஎ	மகிழவுற	மகிழ்வுற
௪எ	உஉ	எற்க	ஏற்க
௪அ	உ	ஒரு	ஒரு
,,	௪	தோறு	தோறுங்
௫௯	௰உ	சேருக்கு	சேரு
"	௩0	பிறழ்தல	பிறழ்தல்
௫அ	௩	சிரமமுஞ	சிரமமுஞ்
"	உஎ	தெரிதற்	தெரித்தற்
௯௪	௰௧	விரும்யி	விரும்பி
எக	உக	டுசல	செல

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
எஉ	௰உ	தின	தான்
"	௰அ	கின்றார்	கின்றார்
எரு	உ	ஞுலகில	ஞுலகில்
"	அ	தன்னை	தம்மை
எசு	உகூ	யாளும்	யாரும்
அய	கூ	லனறி	லன்றி
அரு	௰௩	லேன்றும்	லென்றும்
"	௰சு	மாயின்மு	மாயின்முன்
அஎ	உ	டுருயரு	கொருமு
கஉ	சு	சேரும்	சேர்வர்
"	"	அப்பிடி	அப்படி
கஅ	கூ	மீதில்	மீதில்
"	௰சு	பெதங்களை	பெதங்களை
கக	எ	பெரொன	பெரியொன
௩எ	௩	ஒருவ	ஒருவ
௩௰உ	சு	கெட்டு	கெட்டுச்
"	௰சு	மென்னிற	மென்னிற்
௩௰ரு	கூ	எ.து	எ - து
௩௰எ	உஉ	ஞுளஞுந	ஞுள்ளுந்
௩௰கூ	உ	சொல்லும்	சொல்லலும்
"	உக	கரர	கர
௩உஉ	௩	தன்ஞற்	தம்மைற்
"	௰சு	நெசிழ்ந்து	நெகிழ்ந்து
"	௩க	பொருளை	பொருளை
௩உசு	௰	கோப்பர்	கொடையர்
௩உசூ	அ	ஜவரு	ஞவரு
௩உஅ	எ	மாயப்	மாய்ப்
"	௰க	மேன்ற	மென்ற
௩௩சூ	கக	பேட்பாற்	பெட்பாற்
௩௩கூ	ரு	மூர்க்க	மூர்க்க
௩சஉ	உ	மூதலிய	முதலிய
௩சூக	உசு	ஓற்கம்	ஓர்கம்
௩சூஉ	எ	யன்னமாதி	யன்னமாதி
௩எ௩	௰	லேளா	வெளி
௩எசு	௰	செர்ரி	சொரி
௩எஎ	௰உ	காமுஞ்	காமுஞ்
௩அய	உகூ	யவர்கள்	யவர்களை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
[illegible]	[illegible]	[illegible]	எ - று
[illegible]	[illegible]	[illegible]	எ - று
[illegible]	[illegible]	[illegible]	யொன்
[illegible]	[illegible]	[illegible]	தூதரா
[illegible]	[illegible]	[illegible]	நின்றரி
[illegible]	[illegible]	[illegible]	குணை
[illegible]	[illegible]	[illegible]	வவ்வுயிர்க்கு
[illegible]	[illegible]	[illegible]	யாக்கையை
[illegible]	[illegible]	[illegible]	அச்சிறப்
[illegible]	[illegible]	[illegible]	ரெருக்கும்
[illegible]	[illegible]	[illegible]	றரித்து
[illegible]	[illegible]	[illegible]	வேதுக்கி
[illegible]	[illegible]	[illegible]	பலவிசை
[illegible]	[illegible]	[illegible]	போகம்
[illegible]	[illegible]	[illegible]	குட்ட
"	[illegible]	[illegible]	சிபுடஞ்சி
[illegible]	[illegible]	[illegible]	கொடியை
[illegible]	[illegible]	[illegible]	ராஜேர்
[illegible]	[illegible]	[illegible]	முபயாத
[illegible]	[illegible]	[illegible]	வுடையன்
[illegible]	[illegible]	[illegible]	ஆகையாலுஞ்
"	"	[illegible]	செய்தலாலு
[illegible]	[illegible]	[illegible]	வாகைகையினை
[illegible]	[illegible]	[illegible]	மாக்கள்
[illegible]	[illegible]	[illegible]	சுடர்
[illegible]	[illegible]	[illegible]	கண்அனன்னி
[illegible]	[illegible]	[illegible]	காமிய
[illegible]	[illegible]	[illegible]	யிங்கு
[illegible]	[illegible]	[illegible]	தருவ
[illegible]	[illegible]	[illegible]	சிவதருமோ
[illegible]	[illegible]	[illegible]	துறுதலி
[illegible]	[illegible]	[illegible]	யாம்த்தை
[illegible]	[illegible]	[illegible]	ப்பற்றி
"	[illegible]	[illegible]	வுச்சரித்தல்
[illegible]	[illegible]	[illegible]	தழீஇய
[illegible]	[illegible]	[illegible]	காற்
[illegible]	[illegible]	[illegible]	னிணையை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௩௮௪	௰௭	எந்திழை	ஏந்திழை
௩௮௫	௧௨	நர்ட்	நாட்
௩௮௫	௨௮	ரன்னமூ	ரன்னமு
௩௮௬	௨	லபபாண்ட	லப்பாண்ட
"	"	கழுவி	கழுவி
"	௨௰	விலவத்தின்	வில்வத்தின்
"	௨௧	பொன்மாதி	போனமாதி
"	௨௧	ஒப்பில்	ஒப்பில்
௩௮௭	௰௭	சிருபதி	கிருபதி
௩௮௭	௩	பசுத்திரு	பசுதிரு
௩௮௭	௩	மெழுவா	மெழுவா
"	௨௮	களைப்ப	களைப்
௩௮௭	௰௧	தெவதை	தேவதை
௩௮௧	௰௨	யதனைக	யதனைக்
"	௨௮	மெனனு	மென்னு
௩௮௧	௰௭	அக்கினை	அக்கினி
௩௮௧	௪	வாழவுற	வாழ்வுற
௩௮௧	௫	தீவினை	தீவினை
௩௮௧	௨௨	போகுதுதல்	போகுதல்
௩௮௮	௧	தொடங்க	தோடங்க
"	௨௧	கூர்ச்சரம்	கூர்ச்சம்
௩௮௮	௮	நேரயில்லா	நோயில்லா
௩௮௮	௭	பிட்டந்	யிட்டந்
"	௧	லேப்படி	லெப்படி
௩௮௮	௰௧	வருக்யத்தை	வருக்கியத்தை
௪௮௪	௨	கட்கமும்	கடகமும்
௪௮௫	௨௪	ராதிய	ராகிய
௪௮௧	௨௫	அபபாதா	அப்பாதா
௪௮௰	௰௧	மிசைத்தாதி	மிசைத்தாகி
௪௮௧	௨௪	வாள்புரி	வாழ்புரி
௪௨௧	௰௧	மன்பது	மைம்பது
௪௩௦	௮	சாகதீவு	சாகத்தீவு
௪௩௧	௨௧	பூமினகல	பூமியினகல
௪௩௨	௨௧	புறக்க்டல்	புறக்கடல்
௪௫௨	௨௭	ஒளியுடை	ஒளியுடை
௪௫௩	௩	மேழுவா	மெழுவா
௪௫௫	௧	ணுந்தாகுதிங்க	ங்காணுந்தகுதி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
“	௰௬	யான்	யான
௪௫௭	உ௩	நிற்ரு	நீற்ரு
௪௭௩	உ௫	கரிக்கப்ட்டி	கரிக்கப்பட்டி
௪௭௪	௧	உருத்திராகள்	உருத்திரர்கள்
“	உஉ	நீங்கி	நீக்கி
௪அ௪	உ௧	செய்யுந்	செய்யுந்

நிலைமண்டிலவாசிரியத்தில்

உ	உ௭	மீயுர்	மீயுயர்
“	உ௧	யன்ன்	யன்ன
௩	௰௫	னேய்து	னெய்து
௬	அ	தாமனும்	தானனும்

பிழைதிருத்தம்முற்றும்